பல்கலைக்கழகத் தலைவர் பிறந்த நாளையொட்டி (30 ஜூன் 2022)

எட்டுத்தொகையில் வாழ்வியல் கூறுகள்

முனைவர் இரா கவிதா

8 தொகைநூல்கள்

எட்டுத்தொகை நூல்கள்

அகப்பொருள் நூல்கள்

1 | நற்றிணை 400
2 | குறுந்தொகை 400
3 | அகம் 400
4 | ஐங்குறுநூறு (5*100)
5 | கலித்தொகை (150)

புறப்பொருள் நூல்கள்

6 | பத்திற்றுப்பத்து (10*10)
7 | புறம் 400

அகப்புறப் பொருள்நூல்

8 | பரிபாடல்

ஆய்வேட்டின் நூல்வடிவு

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

தமிழ்த்துறை வெளியீடு எண் : 7

எட்டுத்தொகையில்
வாழ்வியல் கூறுகள்

(ஆய்வேட்டின் நூல்வடிவு)

எட்டுத்தொகையில்
வாழ்வியல் கூறுகள்

முனைவர் இரா கவிதா

சென்னைப் பல்கலைக்கழக
முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் நூல்வடிவு

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.

எட்டுத்தொகையில்
வாழ்வியல் கூறுகள்

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

வெளியீடு:
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயில், சென்னை – 600 095

ஜூன் 2022

Funded by:
Na Subbu Reddiar 100 Educational Trust
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai—600 040

ISBN 978-93-95054 0-3-4

Printed at:
DJ Printers, Chennai – 600 095

எட்டுத்தொகையில் வாழ்வியல் கூறுகள்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காக

அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

திருமதி **இரா.கவிதா** எம்.ஏ.,எம். எட்., எம்.ஃபில்.

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழ்த்துறை

இரா.வே.அரசு கலைக்கல்லூரி

செங்கல்பட்டு- 603 001

நெறியாளர்

முனைவர் **ஆ.அரிகிருஷ்ணன்** எம்.ஏ., எம்.பில்.,பிஎச்.டி .

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

இரா.வே.அரசு கலைக்கல்லூரி

செங்கல்பட்டு- 603 001

தமிழ்த்துறை

இரா.வே.அரசு கலைக்கல்லூரி

செங்கல்பட்டு- 603 001.

ஏப்ரல் 2019

இயல்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	01
ஒன்று	சங்க இலக்கிய கூறுகள், வகைமைகள்	07
இரண்டு	சங்கப்புலவர்களின் வாழ்வியல் கூறுகள்	81
மூன்று	அகத்திணை வாழ்வியல் கூறுகள்	135
நான்கு	புறத்திணை வாழ்வியல் கூறுகள்	217
ஐந்து	எட்டுத்தொகையில் பல்துறை வாழ்வியல் கூறுகள்	276
	ஆய்வு முடிவுரை	371
	துணை நூற்பட்டியல்	376

முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் மக்கள் வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றன. அவை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கை முறை வாணிபம்,பண்பாடு,பழக்கவழக்கம் போன்றவற்றை எடுத்துகாட்டி நிற்கின்றன. வாழ்க்கையின் வழிகாட்டிகளாகத் திகழ்கின்ற இலக்கியங்களில் நுழையுங்கால் நம் உணர்வுக்கு விருந்தும் உள்ளத்திற்கு அமைதியும் தருகின்றன.

இலக்கியத்தினை வாழ்க்கையின் உரைகல் என்று குறிப்பிடுவர். மொழியின் வாயிலாக வாழ்க்கையை உணத்துவதே இலக்கியம். அம்முறையில் தனக்கென ஒரு விழுமிய வரலாறும், வாழ்க்கை நெறியும், படைத்த தமிழினம் பழமையும் சிறப்பும் கொண்டு விளங்குகிறது. இவ்விலக்கியம் ஒரு வரையறைக்குட்டபட்ட கற்பனை, சிறந்த உணச்சி, ஆகியனவற்றைக் கொண்டுள்ளது. இதன் விழுமிய கருத்துக்கள், மனங்கொள்ளத்தக்க வடிவம் (Poetry Form), அளவான ஓசை இவை சங்க இலக்கியச் செழுமைக்கான காரணங்கள். இதனால் அன்று தொட்டு இன்று வரை இந்நூலுக்கு முன்னோடி வேறெதுவுமில்லை.

இவ்வாறு பொருண்மையிலும் வெளிப்பாட்டு (Content and way of Expresion) முறைமையிலும் செவ்வியல் தகுதி சான்றாக சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. அதில், எட்டுத்தொகை நூல்களுள் காணலாகும் வாழ்வியற் கூறுகள், அவை வெளிப்படும் முறை, அவைகளுக்கான சமூகக் காரணிகள் ஆகியன விளக்கமாக ஆய்வேட்டில் பகுத்தாரயப்படுகின்றது.

ஆய்வுப் பொருண்மை

எட்டுத்தொகையில் வாழ்வியல் கூறுகள் என்னும் பொருண்மையில் ஆய்வுத் தலைப்பு அமைந்துள்ளது. எட்டுத்தொகையில் மானிட வாழ்வில் கூறுகளை ஆராய்வதும், உலகப்பொதுமைக்கான வாழ்வியல் அறக் கூறுகள் (Universal Ehical Code) இடம் பெறும் முறைமையும், தமிழின வாழ்வியற் கூறுகள் (Regional Habitation) ஒருங்கமையும் தொகுபுள்ளிகளிகளைச் சுட்டிக் காட்டலுமாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வின் நோக்கம்

சங்கப்பாடல்கள் அகம், புறம் என இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.அவற்றில் அகம் என்பது உள்ளம், மனம் எனப் பொருள்படுகிறது. அகப் பாடல்கள் உள்மன

வாழ்க்கையோடு தொடர்புடையது. இவற்றில் மனம் ஒத்த தலைவனும் தலைவியும் இணைந்து வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி ஆராய்வது முக்கிய நோக்கமாகும். மேலும், வாழ்வில் நடைபெறும் போர்,வெற்றி, கொடை, நட்பு, பண்பாடு, பழக்கவழக்கம் பற்றி ஆராய்ந்து அவற்றின்வழி அக்கால மக்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள முயல்வது மற்றொரு நோக்கமாக அமைகிறது. அகப்பாடற்களின் வழியும்,புறப்பாடல்களின் வழியும் வெளிப்படும் பண்டையத் தமிழரின் வாழ்வியல் கூறுகளைத் தொகுத்தல் இவ்வாய்வின் முதன்மையான நோக்கமாக அமைகிறது.

ஆய்வுச்சிக்கல்

சங்க காலத் தமிழரின் வாழ்வில் தவிர்க்க இயலாத பகுதிகளாக இடம்பெற்றிருந்த வாழ்முறைமைகள் அனைத்தும் எட்டுத்தொகை நூல்களின் வழியாக இனங்காணப்பட்டு உரிய தலைப்புகளின் கீழ்பகுக்கப்பட்டு நிரல்படுத்தப்பட்டுள்ளன. இதன்வழி தமிழரின் வாழ்வியல் குறித்த இலக்கியச் சான்றாதாரங்கள் வழியிலான முழுத்தகவல்கள் களஞ்சியமாக இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

ஆய்வு மூலங்களும் ஆய்வு எல்லையும்

சங்க இலக்கிய நூல்களில் எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை அகநானூறு, புறநானூறு போன்ற நூல்கள் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. இலக்கணம், ஆராய்ச்சி கட்டுரைகள், இதழ்கள், ஆய்வேடுகள், இக்கால இலக்கியம்,ஆய்வுத் தொடர்பான பிறநூல்கள் போன்றவற்றைத் துணைமை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

கருதுகோள்

ஒவ்வொரு செயலிலும் காலத்திற்கேற்ற வளர்ச்சியால் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இதனால் பழையன கழிதலும், புதியன புகுதலும் நிகழ்ந்தாலும் மனிதனின் வாழ்வில் சில மரபுகள் பழக்கவழக்கங்கள் மறைந்து விடுவதில்லை. இவ்வகையில் சங்ககாலம் தொட்டு மக்களின் வாழ்வில் சில நம்பிக்கைகள்,மரபுகள், பழக்க வழக்கங்கள், தொழில்கள் போன்றவற்றால் மாற்றங்கள் ஏற்படவில்லை என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு அணுகுமுறை

எட்டுத்தொகையில் வாழ்வியல் கூறுகள் என்னும் இவ்வாய்வேடு மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு, பகுப்பு மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு,பகுப்புமுறைத் திறனாய்வு(Analytical

Method), விளக்க முறைத் திறனாய்வு (Discriptive Method) ஆகிய ஆய்வு அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளபட்டுள்ளது.

முன்னாய்வுக் களங்கள்

சங்க இலக்கிய வாழ்வியலை முன்வைத்து பல்வகைத்தான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றில் குறிக்கத்தக்கவையாக, மு.சண்முகம் பிள்ளையின் **சங்கத் தமிழர் வாழ்வியல்**, ஆவுடையப்பனின் **சங்கச் செவ்வி**, ந.சஞ்சீவியின் **சங்கத்தமிழ் அட்டவணை,** தி. முத்துக்கண்ணப்பரின் **சங்க இலக்கியத்தில் நெய்தல்** ஆகியன அமைந்துள்ளன. ஆய்வேடுகளில், மு.வரதராசனாரின் சங்க இ**லக்கியத்தில் இயற்கை** பழந்தமிழர் இயற்கையோடு கொண்டமைந்த உறவை ஆராய்ந்துள்ளது. க.கைலாசபதியின் **வீரயுகப்பாடல்கள்** கிரேக்க வீரயுகப்பாடலோடும், வீரயுகக் காலத்தோடும் சங்கத் தமிழரின் வாழ்வியலை ஆராய்ந்துள்ளது. மேற்சுட்டிய அனைத்து ஆய்வுகளும் சங்க இலக்கிய முழுமையையோ அல்லது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருண்மை சார்ந்தோ மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, இவ்வாய்வேட்டில், எட்டுத்தொகை என்ற வரையறுக்கப்பட்ட எட்டு நூல்கள் வழியிலான வாழ்வியற் கூறுகள் பகுத்தாராயப்பட்டுள்ளன.

ஆய்வு நடை

ஆய்வு முழுவதும் எளிய தமிழ்மொழி நடையே பின்பற்றப்பட்டுள்ளது. சில இடங்களில் இலக்கிய நடையும் கையாளப்பட்டுள்ளது. ஆங்கிலக் கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் கையாளப்பட்டுள்ள இடங்களில், இணையான ஆங்கிலச்சொற்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

1. சங்க இலக்கியக் கூறுகள்,வகைமைகள்
2. சங்கப் புலவர்களின் வாழ்வியல் கூறுகள்
3. அகத்திணை வாழ்வியல் கூறுகள்
4. புறத்திணை வாழ்வியல் கூறுகள்
5. எட்டுத்தொகையில் பல்துறை வாழ்வியல் கூறுகள்

முதலாவதாக அமையும் **முன்னுரையில்** ஆய்வுப்பொருள் ,ஆய்வின் நோக்கம், ஆய்வுச்சிக்கல், ஆய்வுமூலங்கள், கருதுகோள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுநடை, ஆய்வுப்பகுப்பு, போன்ற செய்திகள் இடம் பெறுகின்றுள்ளன.

அறிமுக இயலில் சங்கஇலக்கியத்தை அறிமுகப்படுத்தும் விதமாகத் தமிழ் மொழியின் தொன்மை, இலக்கியவளம், உயர்சிந்தனை, தாய்மைத்தன்மை, பொதுமைப்பண்பு ஆகியன ஆராயப்பட்டுள்ளன. மேலும் இயற்கைப் பாடல்களின் சிறப்பு, காதலும் போரும், காதலும் வீரமும், எட்டுத்தொகை நூல்களின் சிறப்பு, பாடல் இயற்றிய புலவர்கள் வரலாறு, நூல்களில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் செய்திகள் போன்றவை ஆராயப்பட்டுள்ளன.

சங்க இலக்கியக் கூறுகள்,வகைமைகள் என்னும் முதலாம் இயலில், எட்டுத்தொகை நூல்கள் பகுக்கப்பட்டுள்ள முறை, அதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கம், கிடைக்கப்பெற்ற, கிடைக்கப்பெறாத பாடல்கள் அவைகுறித்த ஆராய்ச்சி அறிஞர்கள் தரும் விளக்கம், எட்டுத்தொகை நூல்களின் அடிவரையறை, தொகுப்பித்தோர் தொகுத்தோர் வரலாறு ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

சங்கப்புலவர்களின் வாழ்வியல் கூறுகள் என்னும் இரண்டாவது இயலில் சங்கப் புவலர்களின் வாழ்க்கை முறைகள், அகம் மற்றும் புறம் ஒப்பீடு இரவலரும் புலவரும் சிறந்து விளங்கிய பாங்கு, தமிழர் பண்பாடு ஆகியவை இவ்வியலில் விளக்கப்படுகிறன.மேலும், ஆண், பெண் புலவர்களின் பங்களிப்பும் அன்னார் தம் வாழ்வியற் களங்ளும் விவாதிக்கப்பட்டுள்ளன.

அகத்திணை வாழ்வியல் கூறுகள் என்னும் மூன்றாவது இயலில் வாழ்வியலில் இயல்பூக்கம், அகத்திணை மாந்தர்கள்,அவர்களின் சிறப்பு, கையறுநிலை, உயிர் இரக்கப் பண்பு, அகம், அகத்தின் தூய்மை, மனிதத் தத்துவத்தின் மானம், அறம் போன்றவை ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன. அகம் என்ற பிரிப்பு முறையின் முதன்மை ஆகியனவும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

புறத்திணை வாழ்வியல் கூறுகள் என்னும் நான்காவது இயலில் புறம் என்பதற்கான இலக்கண வரையறை, புறத்திணையில் வாழ்வியல் இயல்பூக்கங்களான போர், போர் முறைகள், வீரம் என்பதற்கான வரையறை, கையறுநிலை, அரசியல், நிர்வாகம், தூது, ஒற்றாடல் முறைமை, புகழ், புலவர்பாடலை நாடும் அரசனின் இயல்பு ஆகியவை இவ்வியலில் விவரிக்கப்பட்டுள்ளன.

எட்டுத் தொகையில் பல்துறை வாழ்வியல் கூறுகள் என்னும் ஐந்தாவது இயலில் ஐவகை நிலங்களின் தன்மை, திணை, அவற்றுன் பாகுபாடு அகத்திணை மற்றும் புறத்திணையில் வாழும் மக்களின் உணவு முறைகள், ஆடைகள், விலங்கு, தெய்வம், உரிப்பொருள், தலைவன், தலைவி, நற்றாய் அவர்களின் சிறப்பு ஆகியவை பல்துறை வாழ்வியல் கூறுகளாகப் பகுக்கப்பட்டு பாடப்பட்டுள்ள இலக்கிய செய்நேர்த்தி ஆகியன உரிய தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளன.

முடிவுரையில் ஐந்து இயல்களிலிருந்தும் பெற்ற முடிபுகள் அனைத்தும் நிரல்படத் தொகுத்து தரப்பட்டுள்ளன. இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், மேலாய்வுக்களங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பின்னிணைப்பு ஒன்றில், எட்டுத்தொகை நூல்களைப் பாடியோர், பாடல் எண்ணிக்கை, தொகுத்தோர், மறைந்த பாடல்கள் எண்ணிக்கை ஆகியவைக் குறித்த அட்டவணை தரப்பட்டுள்ளது. பின்னிணைப்பு இரண்டில், சங்ககால மக்களின் வாழ்வியல் முறையோடு தொடர்புள்ள சங்ககாலக் கல்வெட்டுக்கள், அகழ்வாய்வுப் படங்கள் தரப்பட்டுள்ளன.

இயல் ஒன்று

சங்க இலக்கியக் கூறுகள், வகைமைகள்

சங்க இலக்கியக் கூறுகள், வகைமைகள்

முன்னுரை

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கேற்பப் பழம்பெருமை வாய்ந்த தமிழ்மொழி **செம்மொழி** என்று அங்கீகாரம் பெற்றிருப்பது அதன் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் மணிமகுடமாய் விளங்குகிறது. உயர்தனிச் செம்மொழியாக உயர்வினைப் பெற்றுள்ள தமிழின் பொருள் **அழகு இனிமை** என்பதாகும். அதனால்தான் இம்மொழியைத் தேன்தமிழ், தீந்தமிழ் என்று அடைமொழியிட்டு அழைத்த தமிழ்மொழியின் சிறப்புகளை எளிதில் கூறி முடித்துவிட முடியாது. தமிழரின் தலை இலக்கியமாய், தன்னிகரற்ற இலக்கியமாய் தரணியில் தமிழின் புகழ்பாடும் ஒப்பற்றப் படைப்பாய்த் தமிழ்மொழி விளங்குகிறது. இம்மொழி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைப் பெற்றுள்ள சிறப்புமிக்க மொழி என்றால் அது மிகையன்று.

(அ) இயல்தமிழ் படிப்பவர்எண்ணங்களை வளர்க்கிறது.

(ஆ) இசைத்தமிழ் உள்ளத்தை உருக்கி மகிழ்விக்கிறது.

(இ) நாடகத்தமிழ் நடித்துக் காட்டி மக்களை நல்வழிப்படுத்துகிறது.

இத்தகைய சிறப்புகளையுடையத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நமது நாட்டிற்குச் செந்தமிழ்நாடு என்று பெயர் வைத்தவர் மகாகவி பாரதியார். இதில் நாட்டிற்கு அடைமொழியாக நமது மொழியும் அதேபோன்று மொழிக்கு அடைமொழியாகச் செம்மையும் என்று அமைந்திருப்பது இதன் சிறப்பாகும்.

தமிழ்மொழி உலகமொழிகளில் மிகவும் முதன்மையானது. உலக மொழிகளுக்கெல்லாம் பழமையான மொழி தமிழ் மொழி என்பது இன்றைய அளவில் ஆராயப்பட்டு பன்மொழி அறிஞர்களின் பட்டறிவின் மூலம் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவாகும். தாய் என்றாலும் மகவு விளித்தால் தாய்க்குப் பெருமை மகிழ்ச்சி. அதுபோன்று தமிழருக்குத் தமிழ்மொழியின் தொன்மை தெரிந்திருப்பினும் தமிழ்மொழியின் மேன்மை உலகெல்லாம் உணர்ந்து உரைக்கப்பட வேண்டும். இது தமிழ் உள்ளங்களின் நெடுங்கால அவா. அவ்அவாவின் வெளிப்பாடாக இன்றைக்குத் தமிழ்மொழி செம்மொழி என்று

அனைத்துலகும் அறியும் வண்ணம் நிகழ்வுகள் நடந்து வருவது தமிழரின் நீண்ட காலக் கனவாகும்.

தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் தமிழ்ச்சங்கங்கள் இருந்தன. சங்கம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. இது பிற்காலத்தில் தோன்றிய வழக்கச்சொல் என்பது சங்கம் என்னும் சொல் சமண, பௌத்த சமயத்தாரால் கையாளப்பட்டது என்பது பின்னால் இறையனார் அகப்பொருள் உரையில் நக்கீரர் **சங்கம்** என்ற சொல்லைப் பலமுறை பயன்படுத்தியுள்ளார். சங்கம் என்னும் சொல் அவை, அவையம், புணர், கூட்டு எனப் பல பொருளில் வழங்கப்படுகிறது. தொல்காப்பியர் சங்கம் என்பதை அவையம் என்று பொருள் சுட்டுகிறார் அதாவது **நிலத்தரு திருவிற் பாண்டியன் அவையத்து** [1] என்று தொல்காப்பியப் பாயிரம் குறிப்பிடுகிறது.

சங்ககாலத்தில் புலவர்களும், பாணர்களும், பாடினியர்களும், ஒரு ஊரைவிட்டு மற்றொறு ஊருக்குச் சென்று தமிழ் மன்னர்களின் அவைகளில் அவர்களின் புகழினைப் பாடிப் பரிசில் வாங்கிச் சிறப்பித்ததோடு மட்டுமல்லாமல் அவையங்களையும் ஏற்படுத்தித் தமிழைப் போற்றினர். அத்தமிழைப் புலவர்கள் பலர் கூடி ஆராய்ந்துள்ளனர். அவற்றிற்கு மாங்குடி மருதன் என்ற புலவன் தலைவனாக இருந்தான் என்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறயலாம்.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவனாக

உலகமொடு நிலைஇய பலரைப் புகழ் சிறப்பின்

புலவர் பாடாது வரைக என்நிலவரை [2]

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த அருமை பாண்டியர்க்கே உரியதாகும். சங்ககாலத்தில் பாண்டியன் அவையில் புலவர்கள் பலர் சென்று கூடி ஆராய்ந்தும் பின் புதுமைச் சொற்கள் பலவற்றை உருவாக்கியும் மகிழ்ந்தனர் என்று பல்வேறு சான்றுகள் கூறுகின்றன.

பொதுமொழி பிறக்கின்ற முழுதாளுச் செல்வதுக்கு

மதிமொழி இடன்மாலை வினைவற்போல் வல்லவர்

செதுமொழி சீத்த செவி செறுவாக

முதுமொழி கூட்டுண்ணும் புரிசைஆழ் புனல்ஊர [3]

இப்பாடல், புலவர்கள் உருவாக்கிய புதுமொழிகளை அரசனும், புலவர்களும் கேட்டு மகிழ்ந்தனர் என்று சுட்டுகின்றது. இளவேனில் காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் மதுரையில் புலவர்கள் கூட்டங்கள் நிகழ்ந்துள்ளன என்று கலித்தொகை சுட்டுகின்றது.

நீலன் நாவில் திரிதருஉம் நீலமாடக் கூடலாகி

புலன் நாவில் பிறந்தசொல் புதிது உண்ணும் பொழுதன்றோ

பலநாடு நெஞ்சினோம் பிறந்த நாம் விடுத்தக்கால்

அறிகிழாய் நமக்கு அவர் வருவதும் என்ற உரைத்ததை [4]

பாண்டியன் புலவர்களை அழைத்து மகிழ்ந்ததை மதுரைக்காஞ்சி காட்டுகிறது.

தொல்லாணை நல்லாசிரியர்

புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்

நிலந்தரு திருவின் நெடியோன்போல [5]

என்கிறது. இதனால் மதுரை எப்பொழுதும் தமிழரால் மலர்ந்தது மக்களுக்கு மகிழ்வைத் தந்து கொண்டிருந்தது என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது.

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்

மகிழ் நனை மறுகின் மதுரை [6]

என்கிறது. சங்கம் இருந்தமைக்குப் பிற்கால இலக்கியங்கள் மிகுதியான சான்றுகள் தருகின்றன. அதாவது சங்கம் நிறுவிப் புலவர்கள் அனைவரும் கூட்டமாக ஒன்றுகூடி நூல்கள் இயற்றினர் என்று பெரியபுராணம் கூறுகிறது. கம்பர் சங்க முத்திரை பெற்றப் பின்னரே தம் காவியத்தை அரங்கேற்றினார் என்று கதை வழங்கப்படுகிறது. வைணவத்தின் இருகூறுகளாக விளங்கும் வடகலை தென்கலைக் குருபரம்பரைச் (குருபரம்பரை பிரபாவா என்னும் இந்நூல் வைணவப் பெரியோர்களின் வாழ்வை விளக்குகிறது. வடமொழியில் எழுதப்பட்டுள்ளது) செய்திகள் திருவாய்மொழி சங்கப்பலகை ஏறியதெனக் கூறுகின்றன. பழையதும் பிந்தியதுமான இரண்டு திருவிளையாடற்புராண நூல்களுள் சங்கப் பலகை தந்த படலம், எனச் சங்கத் தோற்றத்தை முப்பத்தெட்டுப் பாக்களில் கூறுகின்றது என்று அடைக்கலசாமி தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பிற்காலத்தில் எழுந்த தேவாரம் ஆழ்வார் பாடல்கள் திருக்கோவையார் சின்னமனூர்ச் செப்பேடுகள் போன்றவற்றில் சங்கம் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. திருமங்கையாழ்வார் சங்கமுகத்தமிழ், சங்கமலித்தமிழ் என்று தமிழைக் குறிப்பிடுகிறார். திருநாவுக்கரசர், சிவன் தருமிக்கு அருளியதைக் கூறும்போது

நன்பாட்டுப் புலவனாய்ந் சங்கமேறி [7]

என்கிறார்.

சங்கத் தமிழ் மாலை முப்பதும் [8]

என ஆண்டாளும்

தலைச் சங்கப் புலவனார் தம்முன் [9]

எனச் சேக்கிழாரும்

சங்கத் தமிழ் மூன்றும் தா [10]

என ஔவையாரும்

தமிழ்சங்கம் சேர்கிற் டிரேல் [11]

எனக் கம்பரும் சங்கம் என்ற சொல்லைப் பல்வேறு இடங்களில் பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது.

கி.பி.2-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சின்னமனூர்ச் செப்பேடும் தமிழ்நாட்டில் சங்கம் இருந்தமையைச் சுட்டுகின்றது.

மகாபாரதம் தமிழ்ப்படுத்தும்

மதுராபுரிச் சங்கம் வைத்தும் [12]

என்கிறது. எனவே மதுரையில் அமைந்த சங்கம் மகாபாரதத்தைத் தமிழ்ப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு சங்கம் இருந்தது என்பதைப் பல்வேறு சான்றுகள் உணர்த்துகின்றன.

சங்க இலக்கியம்

தமிழ்நாட்டில் சங்கம் அமைத்துத் தமிழ்வளர்த்த பெருமை தமிழ்ச்சான்றோருக்கு உரியதாகும். இவர்கள் வளர்த்த இலக்கியங்களே சங்க இலக்கியம். பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக்காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்வது சங்க இலக்கியங்கள்.

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், குறிப்பிடப்படுகின்றன. சங்க இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயமாகத் திகழ்கிறது. ஆயினும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியமான சங்க இலக்கியம் பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை முறையை அகம் புறம் என்று இருவகையாகப் பாகுபாடு செய்துள்ளது. அகம், என்பது காதல் அக வாழ்வையும் புறம் என்பது வீர வாழ்வையும் குறிக்கின்றன. தமிழர்கள் இவ்விரண்டையும் இரண்டு கண்களாகப் போற்றினர். சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்கள் , பொருள், அடிவரையறை யாப்பு, வண்ணம், திணை, துறை ஆகியவற்றின் அடிப்படைகளில் தொகுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடல்களில் காதலும், வீரமும் பாடுபொருளாக அமைந்துள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவை ஒவ்வொன்றிலும் உள்ள பாடல்கள் பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பலரால் பல்வேறு சூழ்நிலைகளில் பாடப்பட்டவை.

சங்க காலம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகில் எந்தமொழி செம்மையான இலக்கிய இலக்கணங்களைப் பெற்றுள்ளதோ அம்மொழி நீண்டதொரு வரலாற்றைப் பெற்றிருக்கும். இந்நிலையில் உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ் திகழ்கின்றது. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்க்கூறும் நல்லுலகத்து தமிழ் வழக்கில் இருந்தாலும் சிறப்பாக வளர்க்கப் பெற்றது பாண்டிய மண்ணில்தான் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

பொருப்பிலே பிறந்து தென்னன்

புகழிலே கிடந்து சங்கத்து

இருப்பிலே இருந்து வைகலை

ஏட்டிலே தவழ்ந்த பேதை

நெருப்பிலே நின்று கற்றோர்

நினைவிலே நடந்தோர் ஏன

மருப்பிலே பயின்ற பாவை

மருங்கிலே வளருகின்றாள் [13]

என்று வில்லிபாரதச் சிறப்புப் பாயிரம் இக்கருத்தை உறுதி செய்கிறது. மேலும் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த வரலாறு பழம்பெருமையாகப் பேசப்படுகிறது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமே சங்ககாலமெனப் பல்வேறு அறிஞர்கள் கருதுகின்றனர். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகத் தனக்கென நாட்டு வரலாறும் மொழி வரலாறும் கொண்ட தமிழகம் தன்மொழியை வளர்ப்பதில் தனிக்கவனம் செலுத்தியது.

தமிழகத்தின் வடஎல்லை வேங்கடமாகவும் தெற்கெல்லை குமரி முனையாகவும் கிழக்கு மேற்கு எல்லைகள் கடல்களாகவும் விளங்கின. இவ்வெல்லைக்குள் சேர, சோழ,பாண்டியநாடு, கொங்குநாடு ஆகிய பலநாடுகள் இருந்தன. சேர சோழபாண்டிய நாடுகளை முடிமன்னர்களும் பிற நாடுகளைக் குறுநில மன்னர்களும் ஆண்டனர். இவர்கள் புலவர்களை ஆதரித்து அவர்களின் வறுமையைப் போக்கினர். புலவர்களும் தங்கள் புலமையை மன்னரிடம் காட்டிப் பரிசுகள் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தனர். எழுநூறு ஆண்டுகள் கொண்ட காலத்தை (கி.மு.250 – கி.பி.250) சங்ககாலம் என்று கூறுவர். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களையே சங்க இலக்கியங்கள் என்பர்.

இக்காலம் தமிழ்நாட்டில் மாற்றார் நுழையாத காலம். எனவே இக்காலத்தில் இலக்கியங்கள் வேற்றுமொழிக் கலப்பின்றிச் சொந்த மண்ணின் பண்பாட்டு மணத்தோடு காணப்படுகின்றன. இயற்கைச் சூழலில் இலக்கியங்கள் தோன்றின சங்க இலக்கியங்கள் தோன்றிப் பெருமையடையக் காரணமாக இருந்தவை முச்சங்கங்கள். முச்சங்கங்கள் பற்றியச் செய்திகளைக் அட்டவணையின் (பின்னிணைப்பு – 1) மூலம் அறிந்து கொள்ளலாம்.

இவ்அட்டவணையின் மூலம் முச்சங்கங்கள் பற்றிய வரலாறு அவை நடைபெற்ற இடம் காலம் சங்கங்களில் கலந்து கொண்ட புலவர்கள் அச்சங்கத்தின் போது இயற்றிய நூல்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

இலட்சியம்

அகம் அல்லது புறம் ஏதாவதொன்றை இலக்காகக் கொண்டு பாடுவதையே இலட்சியம் என்கிறோம். இலக்கு + இயம் என்பது இலக்கினை இயம்புவதால் இலக்கியமாக , இலட்சியம், இருத்தல் வேண்டும் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இங்கு இலட்சியம், குறிக்கோள் என இரண்டுவிதமாக எடுத்தியம்பப்படுகிறது. ஓவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு இலட்சியம் இருக்கும். வாழ்வில் மனிதன் முன்னேற்றம் அடைவதற்கு குறிக்கோள் அல்லது இலட்சியத்துடன் செயல்பட வேண்டும். அப்போதுதான் எந்த இலட்சியத்தையும் நிறைவேற்ற முடியும். இலட்சியம் என்பது வாழ்க்கைக்கு அடிப்படையான ஒன்றாகும். அதுபோல் இலக்கியங்களும் சிறப்பான இடத்தைப் பிடிப்பதற்குத் தன்னிகரற்ற தனித்தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய தன்மையைச் சங்க இலக்கியத்தில் காணலாம்.

இலக்கியவளம்

சங்க இலக்கியம் அகம், புறம் என்ற இரண்டு தலைமைக் கூறுகளை உடையது தமிழைச் செம்மொழியாக்கும் தகுதிகளுள் ஒன்றாக இலக்கிய வளம் பேசப்படுகிறது.

இலக்கியம் மனிதனை மனிதனாக்கும் இயல்புடையது.எழுத்தும் மொழியும் என்று தொடங்கியதோ அன்று தொட்டே இலக்கியவளம் மனித வாழ்வோடு ஒன்றிவிட்டது என்பர்.

பலாப்பழத்தைச் சிறுசுளை பெரும்பழம் எனவும் [14]

முயலை நெடுஞ்செவிக் குறுமுயல் [15]

எனவும்

இலை அடர்ந்து நிழல் படரும் பொழிலை வெயில் நுழைவு

அறியாக்குயில்நுழை பொதும்பர் எனவும். [16]

குறிக்கப்படுகின்றது.

முச்சங்க வரலாறு

முச்சங்கம் இருந்தமைக்கான வரலாற்றை அனைத்து இலக்கிய வரலாற்றாய் வாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். இப்பாடல்கள் இலக்கியவளம் பெற்றுத் திகழ்வதை அறிய முடிகின்றது. மேலும் தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று இலக்கிய நூலுமாகும். இந்நூலில் இலக்கியச் சாயலையும், இலக்கியம் தோன்றுவதற்கான அடிச்சுவட்டையும் காணலாம். இலக்கணம் தத்துவத்தோடும் தருக்கத்தோடும் இணைந்து வளராமல் இலக்கியத்தோடு ஒன்றி வளர்ந்த காலத்தில் தொல்காப்பியம் தோன்றியது. ஆதலால் இலக்கியச் சாயல் தொல்காப்பியத்தில் ஒளிவிடுகின்றது என்பதை

தந்தையாறு ஓட்ப, மக்கள் என்பதனால்
அந்தமில் சிறப்பின் மகநெருங்கினும் [17]

காதல் எங்கையது காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணும் [18]

என்ற வரிகள் சிறந்த இலக்கியப் போக்கு உடையநூல் தொல்காப்பியம் என்பதற்குச் சான்றாகத் திகழ்கிறது.

தொன்மை

தொன்மை என்னும் சொல்லிற்குப் பழமை என்று பொருள் கூறுவது தமிழ்மொழி இலக்கிய வளமும் இலக்கண வளமும் மிக்கது, தனித்தியங்கவல்லது. காலந்தோறும் நிகழ்ந்து கொண்டிருக்கும் புதிய சமூகப் பொருளில், அரசியல், பண்பாடு மாறுதல்களுக்கு

ஈடுகொடுக்க வல்லது. உலகின் தொன்மையான நாகரீகங்களில் ஒன்று தமிழர் நாகரிகம் மிகப்பழமை வாய்ந்த இனம் தமிழினம். அவற்றைக்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு

முன் தோன்றிய மூத்தகுடி.[19]

என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுவதால் தமிழனத்தின் தொன்மை புலப்படுகிறது. இல்வுலகில் தமிழனைப் போல் முன்பு உயர்ந்தவன் இல்லை. முதன்முதலில் நாகரீக விளக்கேற்றி நானிலம் முழுவதும் அறிவொளி பரப்பியவன் தமிழன். **எங்கு முதல் மனிதன் தோன்றினானோ அங்குதான் ஞாலமொழியும் தோன்றியிருக்க முடியும். குமரி முதல் இமயம் வரை அவன் பேசிய மொழியே முதன்மொழி அதுவே நம் தாய்மொழியாம் தமிழ்** என்று பாவணர் மனிதனின் தோற்றம் குறித்துக் கூறுகிறார்.

இன்று உலகில் வழங்கும் மொழிகளின் எண்ணிக்கை குறித்து வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. உலக மொழிகள் 4000 என்றும் 3500 என்றும் 1500 என்றும் வேறுபட்ட எண்ணிக்கையில் கூறுகின்றனர். எது எவ்வாறோ உலகில் பல மொழிகள் தோன்றி வழங்கி மறைந்தன. இவற்றுள்ளும் ஒரு சில மொழிகள் மட்டுமே அழியாமல் நிலைபெற்றுள்ளன என்பது உண்மை, இவற்றிலும் கூடச் சில பேச்சு வழக்கு இழந்து இலக்கிய மொழியாக மட்டுமே உள்ளது. இந்நிலையில் உலகமொழிகளில் இன்று பழமையாகக் கருதப்பெறும் மொழிகள் இலத்தீன் , கிரீக், சமஸ்கிருதம், தமிழ் முதலான மொழிகளாகும். இவற்றுள் தமிழ் மட்டுமே உயிர்ப்புள்ள வழக்கிலுள்ள மொழியாகத் திகழ்கிறது என்பதைப் பிரிட்டானியக் கலைக்களஞ்சியம் எடுத்துரைக்கின்றது.

மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியர் தமக்கு முன் வாழ்ந்த தமிழறிஞர்களை,

என்மனார் புலவர் [20]

யாப்பறி புலவர் [21]

நூல்நவில் புலவர் [22]

நுணங்கு மொழிப்புலவர் [23]

தொன் மொழிப்புலவர் [24]

என்று குறிப்பிடுவார். தொன்மையான காலத்தில் வாழ்ந்த தொல்காப்பியரே தமிழைத் தொன்மொழி எனக் கூறுவதை நோக்கும் போது தமிழின் பழமை கற்பனைக் கெட்டாத நெடுந்தொலைவானது என்பது புலனாகிறது.

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்

விண்ணோடும் உடுக்களோடும்

பெருங்கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் [25]

என்று பாரதிதாசன் பாடுகின்றார் என்றால் தமிழ் மிகத் தொன்மையானது எனலாம். இதில் சிலப்பதிகாரம் காலத்தாலும், கதையாலும் பழமையானது. வடமொழியில் தோன்றிய மகாபாரதக் கதை ஜெயம் என்னும் கதையினை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டதாகக் கூறுவர். அதே போன்று சிலப்பதிகாரக் கதையும் பழங்காலத்தில் வழங்கி வந்தமையைச் சில சான்றுகளால் அறியலாம். சிலப்பதிகாரத் தலைமைப் பாத்திரமாகிய கண்ணகி குறித்த செய்தி நற்றிணையில் இடம்பெற்றுள்ளது. அவை

எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்

கருகார் கழனியின் இதனைத் தாங்கண்

ஏதிலாளன் கவலை கவுற்ற

ஒரு முலை மறுத்த திருமாவுண்ணி [26]

இப்பாடலில் இடம்பெற்றுள்ள திருமாவுண்ணி கண்ணகியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பொதிகை மலையானது அகத்தியர் வாழ்ந்து தமிழை வளர்த்த இடம் என்பர். அந்தப் பொதிகை மலையைப்பெற்ற பாண்டிய மன்னன் என்று குறிப்பிடுவதால் தமிழனின் ஆட்சியானது மிகத் தொன்மையானது என்றே உணரமுடிகிறது.

பொதுமைப் பண்பு

பொதுவாக இலக்கணங்கள் அல்லது இலக்கியங்கள் உலக நிலையில் பொதுப்பண்புகள் பெற்றுக் காணப்படும். ஆயினும் அவை சில நிலைகளில் ஒவ்வொரு மொழியின் இலக்கணங்கள் அல்லது இலக்கியங்கள் வேறுபட்டுத் தனித்துவம் பெற்று விளங்கும். எடுத்துக்காட்டாக அகத்திணைப் பாடல்களில் இடம் பெறும் தலைவன்,தலைவியர் பெயர் கூறக்கூடாது என்பது தொல்காப்பியரின் இலக்கியக் கட்டளை. இது,

மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்

சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர் [27]

எனச் சுட்டி காட்டுகிறார். இது இலக்கியத்தின் பொதுத்தன்மையைச் சுட்டிக்காட்டுவதோடு இலக்கியங்களில் வேறுபாடு காட்டாத பொதுமை உணர்வாகிய பண்பாட்டுச் சிறப்பையும் அருமையையும் காட்டுகிறது. இதற்கு மாறாகப் புறவொழுக்கங்கள் மனிதர்களின் வாழ்வை மேம்படுத்துவதாலும் அவர்களுக்குச் சமூகத்தில் உயர்வான மதிப்பீட்டைத் தருவதாலும், புற இலக்கிய மாந்தர்களின் இயற்பெயர்களை வெளிப்படச் சுட்டிக் கூறலாம் என்றும் கூறுகிறார்.

புறத்திணை மருங்கின் பொருந்தினல்லது

அகத்திணை மருங்கின் அளவு தலிலவே [28]

இக்காலத்தில் நடப்புச் செய்திகளையோ புனைவுகளையோ கதையாகக் கூறும்போது கற்பனைப் பெயர்களால் படைத்து மொழிவதும் அக்காலத்து அகமாந்தர் குறிப்பிட்டுப் பெயர் சுட்டப்படாததும் இலக்கியம் ஒருவர்க்கன்று எல்லோருக்கும் பொதுவானது என்று உலகப் பொதுமைப் பண்பைத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

உலக இலக்கியங்களில் இந்தப் பொதுமைப் பண்பு உத்தி, பாடுபொருள் இலக்கிய வகைமை அதன் அமைப்பு தோன்றிய காலம் ஆகியவற்றைக் கொண்டு வேறுபடுகிறது. சங்க இலக்கியங்களில் தலைவியின் பெயர், காலம் ஆகியவை சுட்டப் பெறவில்லை. எனவே உலகின் எல்லா மனிதருக்கும் பொருந்தும் பொதுமைப் பண்பு கொண்டதாகத் திகழ்கின்றது. அவற்றை

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் [29]

ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறைவு , முறை, பொறை போன்றவை உலக மக்கள் அனைவரும் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பொதுவான முறைகளாகும். இவை அனைத்திற்கும் விளக்கம் தருகின்றது கலித்தொகை

கண்டவர் இல்என உலகத்துள்ள உணராதார்

தங்காது தகைவு இன்றித் தாம் செய்யும் வினைகளுள்

நெஞ்சு அறிந்த கொடியவை மறையினும் [30]

இப்பாடல் உலக மக்களின் இயல்புகளை நன்கு சுட்டுகின்றது. காலம் கடந்து , இடம் கடந்து, எல்லைகளைக் கடந்து நிற்கும் உண்மையான உணர்வினை மிக நுட்பமாகக் கூறுவன அகப்பாடல்கள். இப்பாடல்களில் காணப்படும் காதல் சங்க காலத்திற்கு மட்டும் உரியதன்று. எக்காலத்திற்கும் மனித குழுவிற்கும் உரியதாகும் என்பதை குறுந்தொகை சுட்டுகின்றது .

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் மாரளவின்றே சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே [31]

எனும் பாடல் மூலம் அறியலாம். அனைத்து இலக்கியப் படைப்புகளும் மனிதனின் வாழ்வியலை மையமாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகக் கொண்டமைகின்றன. சங்கத்தமிழ் இலக்கியங்களின் தனித்தன்மைகளில் ஒன்று, தனிமனித வாழ்வியல் பிரச்சனைகளைக்கூட சமுதாயக் கண்ணோட்டத்தில் அலசி ஆராய்வதாகும். இதனால் இலக்கிய நிகழ்வுகளின் சாயல் தத்தமது வாழ்வில் பிரதிபலிப்பதாகக் கருதும் ஒவ்வொரு தமிழனும் அவ்விலக்கியப் படைப்புத் தன்னைச் சார்ந்ததாகவே எண்ணி மகிழ்கிறான். இதனால் ஒரு குறிப்பிட்ட சாரர் அல்லது பகுதியினர் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் அனைத்துத் தரப்பினரும் தங்களைச் சார்ந்த இலக்கிய படைப்பாக அமைவதன் மூலம் அனைவரும் ஏற்கும் பொதுமைப் பண்பு உடைய படைப்புகளாக உலகுமுன் காட்சியளிக்கின்றன.

பொதுமைப்பண்பு என்பது உலகில் வாழும் உயரினங்கள் அனைவருக்கும் பொதுவானவையாகும். உலக மக்களுக்குப் பொதுவானது, அன்பு அன்பினை மையமாகக் கொண்ட மானிட உறவு மாந்தர் ஒழுக்கம், காதலும் வீரமும், களவும் கற்பும் போன்றவை அகப்பாடலுக்கு மட்டுமல்ல. அகவுணர்வு கொண்ட மக்களனைவருக்கும் பொதுவானதாகும் என்பதை,

அன்பின் ஐந்திணை களவெனப் படுவது

கற்பெனப்படுவது களவின் வழித்தே [32]

என்னும் பாடலடியில் ஐந்திணையும் கற்பும் அனைவருக்கும் பொதுவான ஒன்றாகும் என்று எடுத்துக்காட்டுகின்றன.

தற்சார்பின்மை

தற்சார்பின்மை என்பது கவிஞன் தான் பாடவந்த பொருள்மீது தற்சார்ப்பின்றி நடுநிலையில் நின்று பாடுவது. கலித்தொகையில் வரும் அதிகமான பாடல்கள் தற்சார்பின்றியே காணப்படுகின்றன. சான்றாகத் தலைவனுக்கும் தலைவிக்குமிடையே நடைபெறும் உரையாடல் ஒன்றில் தலைவியின் பெற்றோர் தலைவனுடன் பேசக்கூடாது என்றும் தலைவனின் பெற்றோர் **அவளை விடாது ஓம்புக** என்றும் கூறியுள்ளதாக இருவரும் உரையாடுகின்றனர். இருவரும் இவ்வாறு சொல்லளவில் கூறியிருப்பினும் உள்ளத்தளவில் ஒருவரையொருவர் விரும்பினர் என்று புலவர் இலக்கியத்தில் தற்சார்பின்றிப் படைத்துள்ளார். தலைவனின் மனவுணர்வு ,தலைவியின் மனவுணர்வு இருவரது குடும்பசூழல் ஆகியவற்றைத் தனித்தனியே அவரவரின் தற்சார்பின்மைக் கேற்ப விளக்கியுள்ளார்.

தாய்த்தன்மை

தாய் என்பவள் மறு உற்பத்திச் சக்தியாக எப்படி விளங்குகிறாளோ அதேபோல் இலக்கியங்களும் தன்னிலிருந்து இன்னொன்றைத் தோற்றுவிக்கவும், தோன்றவும் காரணியாக இருக்கவேண்டும். அத்தகைய இலக்கியமே காலத்தால் அழியாது, இன்றளவும் மக்களால் பயிலப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், சங்க இலக்கியம் தாய்மைத்தன்மை உடையதாகத் திகழ்கின்றது.

பழந்தமிழகத்தில் ஆணும் பெண்ணும் ஒரு பண்பாட்டு ஒழுக்கரீதியில் வளர்க்கப்பட்டனர். திருமணம் ஆகாத பெண்களுக்கு அவர்தம் பெற்றோர்களால் அணியப்பெற்ற சிலம்பு கன்னிச்சிலம்பு என அழைக்கப்படுகிறது. இக்கன்னிச் சிலம்பினைத் திருமணம் நிகழும் முன்னர் கழிப்பது பண்டைய மரபாகும். அதனைச் சிலம்புக்கழி என வழங்குர். இதனை ஒரு விழாவாகவே பெற்றோர் கொண்டாடியுள்ளதைச் **சிலம்பு கழிஇய செல்வம்** என்று நற்றிணை குறிப்பிடுகின்றது. இச்சடங்கின்போது மணமகள் உண்ணா நோன்பு இருத்தல் மரபாகும். தலைவி தலைவனோடு உடன்போக்குச் சென்ற நிலையில் தலைவனின் தாய் தலைவிக்குச் சிலம்புகழி நோன்பு இயற்றினாள் என்பதை

நும்மனைச் சிலம்பு கழிஇ அயரினும்

எம்மன வதுவை நல்மணம்கழிக எனச்

சொல்லின் எவனோ [33]

இப்பாடல் தலைவியின் தாய் சிலம்புகழி நோன்பு நிகழ்ச்சியைக் கண்டு வந்தவர்களிடம் புலம்புகின்றாள் எனச் சுட்டுகின்றது.

சிறப்பும் சீரும் இன்றிச் சிறூர்

ஏதில் வறுமனைச் சிலம்பு கழிஇய

மேயினள் சொல்லென நோவல் யானே [34]

என்ற பாடல் சிலம்புகழி நோன்பினைச் சிறப்பிக்கின்றது. தலைவிக்குத் தலைவனின் வீட்டில் சிலம்புகழி நோன்பு நிகழ்ச்சி நடந்தபோதிலும் தலைவியின் தாய் தன் வீட்டில் வதுவை நிகழ்த்த விரும்புவதன் மூலம் அத்தாயின் தாய்மைப் பண்பும் பண்பாடும் புலனாகின்றது.

நிலைபேறுடைய எந்தவொரு இலக்கியமும் தன்னிலிருந்து பல இலக்கியங்கள் உருவாக இடமளிக்கக்கூடியதாகத் திகழும். அந்த வகையில் சிலப்பதிகாரக் கதை மாந்தர்களாகிய கண்ணகி, கோவலன், மாதவி ஆகிய மூவரில் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தமகள் மணிமேகலை குறித்த காப்பியத்திற்குச் சிலப்பதிகாரம் அடிப்படையாக அமைகின்றது. கதைத் தொடர்பால் இவை இரண்டும் இரட்டைக் காப்பிங்கள் என்று அழைக்கப்பெறுவதால் இவை தாய்மைத் தன்மை உடையதாகத் திகழ்கின்றது எனலாம்.

தாய்மைத்தன்மை என்பது சங்க இலக்கியத்திற்கு உரிய முதன்மைப்பண்பாகும். இலக்கிய இலக்கணத் தொடர் பாரம்பரியம் மிக்கதாக எடுத்துரைக்கின்றது. முதல் நூலுக்கான விளக்கம் தொல்காப்பியம் தருகிறது.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முன்னவன் கண்டது முதல்நூல் ஆகும் [35]

இப் பாடலில் முனைவன் ,படைப்பாளன் என இரு சொற்கள் இறைவனைச் சுட்டுவதாகக் கொள்ளப்பட்டால் இறையனார் ஆக்கிய அகப்பொருள் நூல் அசலாக நிற்கும். மேலும் பொருளிலக்கணம் பற்றிய வேறு நூல் எதுவும் கிடைக்காத நிலையில் இயற்றப்பெற்றமையால் இதன் தாய்மைத்தன்மை வெளிப்படுத்தப்படுவதாகக் கொள்ளமுடியும்.

உயர் சிந்தனை

பொருள் உணர்வாகிறது > உயர்வு எண்ணமாகிறது > எண்ணம் சிந்தனையாகிறது > சிந்தனை செயலாகிறது > செயல் விளைவுகளாகின்றன > விளைவுகளே வாழ்வியலாகிறது. இதில் எப்பொருள் எவ்விளைவாகிறது என்பதை வைத்துத்தான் வாழ்வியலின் பயன்பாட்டு

மதிப்பீடு பயன்கொள்ளப்பெறுகிறது. இவற்றுள் உயர் வாழ்வியலைத் தரத்தக்கது உயர்சிந்தனையே ஆகும். உயர் சிந்தனையல்லாதன வாழ்வியலைத் தரலாம். அவை நல்வாழ்வியல், தீய வாழ்வியல் என்னும் இருத்திறத்துள் அமையும் நல்வாழ்வியவில் உயர் வாழ்வியலை நோக்கி உந்தும் ஆனால் தீய வாழ்வியல் நல்வாழ்வியலைப் பெறத் திணறும். எனவே காலம் இடம் சுழல்களால் மாறுபடாத மிகுந்த நல்விளைவுகளை உடைய சிந்தனைகளையே உயர்சிந்தனை எனலாம். உயர் சிந்தனை என்பது ஒரு வினைத்தொகைச் சொற்றொடர். அது முக்காலமும் பொருந்தும் என்பதால் எக்காலமும் பொருந்தும் எனப் திட்பமாகும். உயரியசிந்தனை என்பது உயர்த்தும் சிந்தனையாகும்.

மனிதனை நல்வழிப்படுத்துகின்ற அனைத்துக் கருத்துக்களும் உயர் சிந்தனைகளாக வைத்துப் போற்றப்படுகின்றன. ஆழமான கல்வி, ஞானம், பண்பாடு, விரிந்து பரந்த மனப்பான்மை , ஈகை, செங்கோல், ஆட்சிமுறை, இல்வாழ்க்கைமுறை, புலால் உண்ணாமை, விருந்தோம்பல், அன்புக்காட்டல், பொறமையை ஒழித்தல், நட்புக்கொள்ளுதல், உண்மை, மனஉறுதி போன்ற அறக்கருத்துக்கள் நிரம்பிய உயர் சிந்தனைகள் சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்றன.

உலக உயிர்கள் அனைத்தையும் தழைத்தோங்கி வளர்க்கச்செய்வது அன்பாகும். அவ்வன்பினால் மட்டுமே நாம் எதனையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க இயலும் அத்தகைய அன்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தவர் வள்ளுவப்பெருந்தகை. அன்புடைமை என்னும் ஓர் அதிகாரத்தை அமைத்துள்ளார். அன்புடையவர்கள் பொருளால் மட்டுமின்றி அவர்களுடைய உடம்பாலும் மற்றவர்களுக்கு பயன் உடையவர்களாக இருப்பர். அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த உடம்பாகும். அன்பு மட்டும் இல்லையென்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின் மேல் தோலைப் போர்த்தியது போன்றதாகும் என்பதை,

அன்பின் வழியாது உயிர்நிலை அஃது இல்லாதார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு [36]

என்ற குறள்வழி வள்ளுவர் உயர்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார். உலக மானுடத்தின் உயர் சிந்தனை ஆவணங்களில் தலைமைத் தகைமை சான்றது சங்க இலக்கியம். உலக அறிஞர் பெருமக்களெல்லாம் ஒத்த கருத்தொடு சங்க இலக்கியம் சிறந்த இலக்கியம் என மதிப்பிடுவதற்குக் காரணம் இதனுள் மிகுந்திருக்கும் நிலைத்த உயர் சிந்தனையேயாகும். செம்மாந்த செம்மொழித் தமிழில் பல உயர்ந்த சிந்தனைகள் அறக்

கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அவை எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி இரக்கம் கொள்ளுதல் பசிப்பிணி போக்குதல், தமக்கென வாழாமல் பிறருக்காக வாழுதல் வேண்டும் என்கிறது சங்க இலக்கியம்

உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
பிறருக்கென முயலுநர் உண்மையானே [37]
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா [38]

நீரின்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் [39]

உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஒரொக்கும்மே
அதனால் செல்வத்தின் பயனே ஈதல் [40]

இவ்வாறு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பல அரிய கருத்துக்களையும் உயர்ந்த சிந்தனைகளையும் சங்க இலக்கியங்கள் கொண்டுள்ளன. அந்த உயர்ந்த சிந்தனைகள் அனைத்தும் மனித வாழ்வில் பின்பற்றப்படுமேயானால் உலக வாழ்க்கை செழித்தோங்கி மலர்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

சங்க இலக்கியத்தில் இயற்கைப் பாடல்கள் ஓர் மதிப்பீடு

கவிதை என்பது இயற்கையின்
படிதான் என்று பிளாட்டோ கூறினார்.
அவருடைய கருத்தை
மறுத்தார்... அரிஸ்டாடில்

கவிதை என்பது இயற்கையின்

மறுபடி அன்று இயற்கையின்

பொருண்மையை ஊடுருவி

உணர்ந்து கொடுப்பதே கவிதை

என்று விளக்கினார் அரிஸ்டாட்டில்

பழந்தமிழ்க் கவிஞர்கள் காட்டும்

இயற்கைக் காட்சிகளைக் காண்போர்

இக்கருத்தினை உணர்வர்.[41]

பழந்தமிழும் பழங் கிரேக்க இலக்கியங்கள் போல இயற்கையின் இயைந்தது இழை யோடின எனலாம்.

பழந்தமிழர் இலக்கியங்கள் பல கால வெள்ளத்தால் நம் கைக்குக் கிட்டாது மறைந்தன போலப் பண்டைய கிரேக்க இலத்தீன் இலக்கியங்களும் அழிந்தன

ஆனால் கிரேக்க இலத்தீன் இலக்கியங்களில் நாடகங்கள், காப்பியங்கள் தத்துவ வரலாற்றுச் சட்டஞ் சார்ந்த நூல்கள் பல எஞ்சி உள . உணர்ச்சிப் பாடல்களாகிய அகப்புறப் பொருளைச் சார்ந்த வீர நிலைக்காலப்பாடல்கள் பழந்தமிழ்ப் எஞ்சியவையாய்க் காணப் படுகின்றன .தமிழில் காணப்படும் இவைகள் அழிந்து போன இலக்கியங்களில் நூறில் ஒரு பங்கே ஆகும் என்றாலும் தமிழ்ச்சங்க இலக்கியம் காட்டும் ஒளி தெளிவானது. உலக இலக்கியப் படைப்புகளின் முழுமையை அறியும் தமிழ்இலக்கியம் பெரிதும் உதவுகிறது

இயற்கைப்பின்னணி

உலக இலக்கியக் கவிதைகளில் இயற்கையின் எழில் நலத்தைக்காட்டுதல் எங்கும் காணலாம் .எனினும், கவிஞர்கள் காட்டும் கற்பனை இயற்கை என்னும் நோக்கைப் பொறுத்தமட்டில் நாட்டிற்கு ஏற்பவும் காலத்திற்கு ஏற்பவும் கவிதையின் பொருளுக்கு ஏற்பவும் மாறுபடுவதைக் காணுகின்றோம் .

இயற்கையை எழிலுருவாகத் தீட்டும் சங்கக் கவிதைகள் பல உலக இயற்கைக் கவிதைகளுடன் ஒப்ப வைத்து காணும் பேறு உடையன . அது மட்டுமன்றித்

தனித்தன்மை வாய்ந்தன. சில பல கூறுகளில் பழந்தமிழ் இயற்கைக் கவிதைகள் பிற உலகமொழி இலக்கிய இயற்கைக் கவிதைகளினும் நனி பல சிறப்பு உடையன.

காளிதாசருடைய இயற்கைப் பாடல்களையும் சங்கப்பாக்களின் இயற்கைச் சொல்லோவியங்களையும் ஒப்ப வைத்துக் காணுங்கால், சங்கக் கவிதைகளின் இயற்கைப் போக்கு மாறுபட்டிருக்கக் காணுகின்றோம். இதற்குக் காரணம் தமிழ் வழங்கும் நிலத்திற்கும் வடமொழி பயின்ற நிலவியல் சூழலுக்கும் உள்ள வேறுபாடாகும். வடமொழி இயற்கைக் கவிதைகளில் ஐந்திணைப்பாகுபாடு காண இயலாது. பழந்தமிழ்க் கவிதைகளில் திணை வருணனை தவிர்க்க முடியாதது.

இயற்கை பாடல்களில் ஆங்கிலமும் தமிழும்

இயற்கையியல், விருந்தியல் ஆகிய இரண்டும் சங்க இலக்கியத்தின் பண்புகளாக உள்ளன. வோர்ட்ஸ்வொர்த்தை போல வானோங்கு மலை,பொங்கி வீழ்அருவி, நிறைந்தொளிரும் நீர்நிலை, நெளிந்தோடும் ஆறு ஆகியவற்றை எழில் ததும்பும் ஓவியங்களாகத் தீட்டிக்காட்டும் கவிஞர்கள் சங்ககாலத்தில் உண்டு. ஆனால், அவர்கள் வோர்ட்ஸ்வொர்த்தைப் போல **இது காண் இயற்கை** என்று எடுத்துக் கூறி விளம்பரப் படுத்துவது இல்லை. சர் வால்டர் ஸ்காட்டின் நுண்ணிய நோக்கம் படர எத்துணையோ இயற்கைக் காட்சிகள் மிக நுட்பமான விவரங்களோடு அவர்களின் இலக்கியங்களிலே சொல்லோவியங்களாக ஒளிர்கின்றன.

இயற்கைக் காட்சிகளை வருணித்துக் கூறுவதில் ஸ்காட்டைப் போன்ற புலவர்களும் சங்க இலக்கியத்தில் உண்டு. அவர்களுடைய நுண்ணிய காட்சியறிவு இன்றைய பயிர்நூல் வல்லுநரின் ஆராய்ச்சிக்கும் உதவக்கூடியது. தமிழகத்துப் பயிர் பச்சைகளைப் பற்றிய விவரங்களை அறிய விரும்பும் பயிர்நூல் வல்லார் சங்க இலக்கியப் பாடல்களை முழு நம்பிக்கையோடு பயிலலாம்.

காதலும் போரும்

சங்ககாலத்துத் தலைவனும் தலைவியும் இயற்கையின் கூட்டுதலால் ஒருவரை ஒருவர் கண்டு கணவனும் மனைவியுமாக இணைந்து இல்லறம் பேணினர். பெற்றோர் முனைந்து முடிக்கும் திருமணமும் உறுதியாக இருந்திருக்க வேண்டும். எத்தகைய திருமணமாக இருந்தாலும் மகளிர் வீரமிக்க ஆடவரை மணக்கவே விரும்பினர் என அறிய முடிகின்றது.

கொல்லேறு சாட இருந்தார்க்கு எம் பல்லிருங்

கூந்தல் அணை கொடுப்பேம்யாம் [42]

தோழி தலைவியிடம் என் மகளைக் கொல்லும் இயல்புடைய காளையை அடக்கு பவருக்குக் கொடுப்போம் என்று நம் உறவினரிடம் கூறினர் என்பதில் வீரம் செறிந்த ஆடவரை மணக்கவே அக்கால மகளிர் பெரிதும் விரும்பினர் என்பது தெள்ளிதின் புலப்படும்.

கலித்தொகையின் ஒரு பகுதியாகிய முல்லைக் கலிப்பாடல்கள் அனைத்தும் மகளிர் வீரர்களையே மணக்க முன் வந்தனர் என்பதை விவரிக்கின்றன.

முல்லை நிலத்தில் ஏறுதழுவுதல் ஒரு சிறந்த வீர விளையாட்டு. தலைவி வளர்க்கும் ஏற்றினைத் தலைவன் தழுவிய பிறகே அவளைத் திருமணம் செய்து கொள்ள முடியும். ஏறுகளை ஒரு குறிப்பிட்ட பரந்த வெளியில் அவிழ்த்துவிடுவர். அவ்விடத்திற்குத் தொழு என்று பெயர். அவிழ்த்து விடப்பட்ட ஏறுகள் பாய்ந்து வரும். அவற்றில் தான் விரும்பிய தையலின் காளையினை அடக்கித் தன் வீரத்துக்குப் பரிசாகத் தலைவியைப் பெற்று மணந்து மகிழ்வான். என்றும் இதனைத் தெளிவுபடுத்துவதாக அமைகின்றது.

நீயே அமறிகாணின் அமர கடந்து அவர்
படை விலக்கி எதிர் நிற்றலின்
வாஅள் வாய்த்த வடு ஆழ்யாக்கையொடு
கேள்விக்கு இனியைகட்கு இன்னாயே
அவரே நிற்காணின் புறம் கொடுத்தலின்
ஊறு அறியா மெய்யாக் கையொடு
கண்ணுக்கு இனியர் செவிக்கு இன்னாரே [43]

என்னும் புறப்பாடல் வீரமற்றவரின் பெயரைக் கேட்க செவிக்கு கசப்பாக இருக்கும் என்ற செய்தியைத் தருவதைக் காணமுடிகின்றது.

என்னை புற்கையுண்டும் பெருந்தேளன்னே
யாமே புறஞ்சிறை இருந்தும் பொன் அன்னம்மே
போர் எதிர்ந்து என்னை போறிக்களம் புகினே
கல்லென் பேர் ஊர்விழவுடை ஆங்கண்

ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்கு

உமணர் வெரூஉம் துறையன் னன்னே [45]

என்னும் புறப்பாடலும்,

என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்

என்னைக்கு நாடு இஃது அன்மையானும்

ஆடு ஆடு என்ப ஒருசாரோரே

ஆடு அன்று என்ப ஒருசாரோரே

நல்ல பல்லோர் இருநன்மொழியே

அம்சிலம்புஒலிப்ப ஓடி எம்இல்

முழா அரைப் போந்தை பொருந்தி நின்று

யான் கண்டனன் அவன் ஆடு ஆகுதலே [45]

என்னும் புறப்பாடலும் மகளிர் வீரமிக்க ஆடவரையே பெரிதும் விரும்பினர் என்பதைக் காட்டுகின்றன.

காதலும் வீரமும்

வீரர்களைப் பெண்கள் பழங்காலத்தில் பெரிதும் விரும்பினர் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் கோப்பெருநற்கிள்ளி மீது காதல் கொண்டு பின்வரும் பாடல்களால் அறியலாம்.

என்னை புற்கை உண்டும் பெருந்தோளன்னே

யாமே புறஞ்சிறை இருந்தும் பொன் அன்னம்மே

போர் எதிர்ந்து என்னை போர்க்களம் புகினே

கல்லென் பேர் ஊர் விழவுடை ஆங்கண்

ஏமுற்றுக் கழிந்த மன்னர்க்கு

உமணர் வெரூஉம் துறையன் னன்னே

அடிபனை தொடுகழல் மைஅணல் காளைக்கு என்

தொடிகழித் திடுதல்யான் யாய் அஞ்சுவலே

அடு தோள் முயங்கல் அவை நாணுவலே

என்போல் பெருவதுப் புறுக என்றும்

ஒரு பாற் படாஅதாகி

இரு பாற் பட்ட இம்மையல் ஊரே [46]

மேற்கண்ட பாடல்களால் பெண்கள் வீரத்தை விரும்பினர் என்பதும் வீரர்களைப் போற்ற அவர்பால் விருப்புற்றனர் என்பதும் தெளிவாகிறது.

படைக்கள வீரர்கள் குழுமிப்பேரரங்கில் விழா எடுத்த செய்தி அகநானூற்றுப் பாடலால் நன்கு விளங்கும்.

.....கறுத்தோர்
வெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழற் பொலிந்த வன்கண் மறவர்
புறந்தொடை விழாவின் தலைநாள் [47]

பொழுதுபோக்கிற்காக நீர் நிலைகளில் மகளிரும் மைந்தரும் நீராடி மகிழ்ந்த செய்தி அகப்பாடல்களில் நிரம்ப வருகின்றன

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே [48]

என்பதற்கிணங்க வீரநிலைக் காலப் பழந்தமிழர் புகழே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டனர். எனவே, வீரநிலைக்கால இலக்கியமாக விளங்கும் சங்க இலக்கியத்தில் புகழ், உரை, இசை, பெரும்பெயர் கீர்த்தி முதலிய சொற்கள் பயின்று வருவதைக் காணலாம்.

பெருமிதத்தில் புகழ்மை – இசைமை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வீரத் தலைவர்களாய் வாழ்ந்த மன்னர்கள் தம் புகழை நிலை நிறுத்துவதில் முழுநாட்டமும் கொண்டனர். **மன்** என்றாலே நிலைபெறுதல் என்றுதான் பொருள். கல்லிலே மெய்க்கீர்த்திகள் எழுதி வடித்த வட்டெழுத்துப் புகழை விடச்

சொல்லிலே வடித்த புகழ் – செஞ்சொல்கவிப்புகழ் காலங்கடந்து நிற்கும் சேய்மைப்புகழ் என்பதை அறிந்தனர். எனவே , புகழ் எனின் உயிருங் கொடுக்கும் பெருந்தகைமையைக் காணுகின்றோம்.

புகழுக்குச் சிறப்பு நல்கும் வீரநிலைக் காலப்பாடல் தொடர் மொழிகளைக் காணுங்கால் அதிற்குரிய சிறப்பிடம் தெளிவாம்.

(1) **உரைசால் புகழ்** (புறம் 10 : 1 1: 30 1--5)

(2) **சேண் விளங்க புகழ்** (புறம் 127: 9)

(3) **வயங்கு புகழ்** (புறம் 127:9)

(4) **பல் புகழ்** (புறம்144:12)

(5) **வான் புகழ்** (புறம்168:5)

(6) **விறற் புகழ்** (புறம்168:22)

(7) **விண்பொரு புகழ்** (புறம் 63: 3)

(8) **கேடில் விழுப்புகழ்** (அகம்11:6)

(9) **பலர் புகழ்** (பதிற்று 11 :20அகம் 263 புறம் 72 :15)

(10) **மறம் வீங்கு பல்புகழ்** (பதிற்று .12: 8)

(11) **ஓங்கு புகழ்** (பதிற்று. 20:14 90 : 40)

(12) **பெரும் புகழ்** (பதிற்று. 23:16)

(13) **வீயா விழுப்புகழ்** (அகம்135:11 புறம் 16:30)

(14) **வான் புகழ்** (பதிற்று.31: 32)

(15) **நின் புகழ்** (பதிற்று. 37:2)

(16) **மாயாப் பல்புகழ்** (பதிற்று 90 : 1)

(17) **விளங்கிய புகழ்** (பதிற்று. 90 : 10)

மேலும், வீரநிலைக் காலத்தமிழர் வாழ்க்கையில் சிற்சிலவற்றைப் பெரிதும் விரும்பி, அவை தொடர்பால் மகிழ்வுற்றனர் என்பதை இத்தொடரில் அறியலாம். இவ்வாறு இயற்கைப்பாடல்கள் சங்கஇலக்கியத்தோடு மிகவும் தொடர்புடையது.

எட்டுத்தொகை நூல்கள் வரலாறு

சங்க இலக்கியத்தில் பாடல்கள் மூன்று அடிமுதல் எழுநூற்று எண்பத்தியிரண்டு அடிகள் கொண்டு அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 2387 ஆகும். அவற்றுள் அகப்பாடல்கள் 1877 புறப்பாடல்கள் 510. இவ்விலக்கியத்தைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 473. ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள் 10 ஆகும். இவர்களுள் பெண்பால் புலவர்கள் 30 இந்த எண்ணிக்கை குறித்து வேறுபாடுகளும் உள்ளன. சங்க இலக்கியத்தில் அதிகமான பாடல்களைப் பாடியவர் கபிலர் ஆவார் சங்க இலக்கியப் பாடல்கள் பாடிய அரசப் புலவர்கள் 25 பேர் ஆவார்கள். சங்க இலக்கிய நூல் பாடல்களின் எண்ணிக்கை பாடிய புலவர் கிடைக்காத பாடல்கள் போன்றவற்றைக் பின்னிணைப்பில் அட்டவணையின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

சங்கப்பாடல்களில் பெரும்பாலானவை அகவல்யாப்பால் ஆனவை. கலித்தொகை கலிப்பாவால் ஆனது. மதுரைக்காஞ்சியில் வஞ்சி அடிகள் இடையிடையே வருகின்றன. வெண்பா சங்ககாலத்தில் புழக்கத்தில் இல்லை. சங்கப் பாடல்களில் தனிச்சிறப்புச் சொல்களைக் கையாளும் நிலையைக் கூறலாம். பிற்காலச் சந்தநயமும் ஓசையும் சங்கப் பாடல்களில் இல்லை; எனினும் பரிபாடல் இசையுடன் பாடப்பட்டுள்ளது.

சங்கப் பாடல்களில் வரும் சொற்கள் அனைத்தும் தமிழ்ச்சொற்கள் அதில் வடமொழிச் சொற்கள் அரிதாகக் காணப்பட்டன. சொல்லும், பொருளும் ஒன்றையொன்று தழுவிச் சென்று பொருள்முடியும். இடத்தோடு சொல்லும்முடிவது சங்கஇலக்கியங்களில் தலையாய சிறப்பியல்புகளாகும்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களில் பல்வேறு பாடல் தொகுதிகளையும் யாப்பு நலத்தையும் புலவர்களின் நிலையையும் அகம், புறம் பற்றிய விளக்கத்தையும் பல்வேறு வருணனைகளையும் உவமைகளையும் கூறும் காலக் கண்ணாடியாக உள்ளன என்பதை அறிய முடிகிறது.

கடலாலும் கரையானாலும் தமிழ் நாகரிகத்தாலும் தமிழரின் பேணாப் பேதமையாலும் எண்ணற்ற தமிழ்நூல்கள் அழிந்துவிட்டன. எஞ்சிய பாடல்களைத் தேடித் தொகுத்துக் காக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்த போதுதான் தொகை நூல்கள்

உருவாயின, சிதறிக்கிடந்த சங்கத் தனிப்பாக்கள் எல்லாம் எட்டுத்தொகைகளாகத் தொகுக்கப்பட்டன. அவை

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோ அகம்புறம் என்று

இத்திறத்த எட்டுத்தொகை [49]

என்று பழம்பாடல் ஒன்று எடுத்துக்காட்டுகிறது. இவற்றுள் நற்றிணை குநற்தொகை, ஐங்குறுறூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் போன்றவை எட்டுத்தொகை நூல்களாகும். இத்தொகை நூல்களுள் நற்றிணை,குறுந்தொகை, ஐங்குநுறூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் அகப்பொருள் பற்றியன புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் பற்றிய நூல்களாகும். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு பலவகையாலும் பெரிதும் ஒப்புமையுடையன. குறுந்தொகைப் பாடல்களின் சிற்றெல்லை நான்கு அடியாகவும், பேரெல்லை எட்டு அடியாகவும் நீண்ட அடிகள் அடங்கிய நானூறு பாடல்கள் கொண்ட அகநானூற்றை நெடுந்தொகை என்று கூறுவது போல் அகவற்பாவின் அமைப்பில் சுருங்கிய அடிவரையறையைக் கொண்ட பாடல் தொகுதி, **குறுந்தொகை** எனப் பெயர் பெறுவதாயிற்று. எட்டுத்தொகை நூல்களின் பெயர்களைத் தொகுத்து உரைக்கும்படியான வெண்பா இந்நூலை **நல்ல குறுந்தொகை** என்று பாராட்டிக் கூறியிருப்பதைக் கொண்டு இதன் சிறப்பை உணரலாம்.

நற்றிணை

எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை நல்ல அகத்திணைப் பாடலைக் கொண்டது. நற்றிணை என்பது நல்ல திணை எனப்படுகிறது. திணை என்பது நல்ல திணை. திணை என்பது சொல்லாகு பெயராய் அகத்திணை நூலைக் குறிக்கிறது.**திணை** என்ற சொல்லுக்குக் கொண்ட கொள்கையில் திண்மையாக நிற்பது என்று பொருள் கூறி நற்றிணை என்பது **நல்** என்னும் பெயரும் சேர்ந்து முதற்பொருள், கருப்பொருள் உரிப்பொருள் ஆகிய மூன்றும் அளவாக அமைந்து இன்பத்தை நல்குவதால் நற்றிணை என்று பெயரிடப்பட்டது. எட்டுத்தொகை நூல்களுக்கெல்லாம் இது முதலாவதாக அமைந்திருப்பதும் மற்ற நூல்களுக்குரிய அடைமொழி நூலின் பெயரில் இருந்து தனியாக விளங்க இந்நூலின் அடைமொழி மட்டும் நூலின் பெயரோடு பிரிக்க முடியா வண்ணம் அமைந்திருப்பது இந்நூலின் சிறப்பு. ஐந்திணை ஒழுக்கங்களைப் பற்றிப் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி

ஆதலால் நற்றிணை நானூறு எனப் பெயர் பெற்றது. ஐவகை நிலங்களில் வாழ்ந்த தமிழ்மக்களின் சிறந்த ஒழுக்கங்கள் பலவற்றை இந்நூலில் காணலாம். நற்றிணை பல வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக பகைவன் செய்த கொடுமை உள்ளத்தைத் துன்புறுத்தத் தன் ஒரு முலையை அறுத்துக் கொண்டாள் திருமாவுண்ணி என்பதை,

ஏதிலாளன் கவலை கவற்ற

ஒருமலை அறுத்த திருமா வுண்ணி [50]

இது கண்ணகியின் வரலாற்றை குறிப்பது போலக் காணப்படினும் நற்றிணைப் பாடல்கள் சிலப்பதிகார காலத்திற்கு முற்பட்டவை. ஆதலால் இது சிலப்பதிகார காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் இருந்தது என்பதையே இப்பாடல் குறிக்கின்றது. இதனை வைத்தே சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையை எரிப்பதற்குத் தன் முலையை அறுத்து எரிந்திருக்கலாம் என்பர். இவ்வாறு பல வரலாற்று செய்திகள் இடம் பெற்றுள்ளன.

நற்றிணை நானூறு பாடல்களை கொண்டது. இந்நூலிற்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப்பாடியிருக்கிறார் உலகத்தைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என்ற நம்பிக்கை பழங்காலத்தமிழர்க்கு உறுதியாக இருந்தது என்பதை நற்றிணையின் மூலம் உணரலாம். காட்டின் வழியாக பொருள்தேடச் செல்லும் தலைவனை நினைத்து உருகும் தலைவிக்குப் பாலையின் கொடிய தன்மை நினைவுக்கு வருகிறது. பாலையைப் படைத்த கடவுளே பாலை நிலத்தில் சென்று துன்புறவேண்டும் என்று தலைவி கூறுகிறாள்.

ஐதெகு அம்ம இவ்வுலகு படைத்தோனே [51]

என்கிறாள். இயற்கையில் தெய்வம் குடி கொண்டிருந்ததாகக் கருதினர். தெய்வம் உறைந்த பனைமரம் ஒன்று நற்றிணையில் பேசப்படுகிறது.

தொன்று உரை கடவுள் சேறிந்த பராரை

மன்றம் பெண்ணை வாங்குமடல் குடம்பை [52]

பருத்த அடியை உடைய ஊரின் நடுவில் உள்ள பனைமரம் என்பதைக் குறிப்பதற்கு **பராரை மன்றப் பெண்ணை** என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர். நற்றிணை உட்பட எல்லா அகம் பற்றிய பாடல்களிலும் மனிதனுடைய வாழ்வு இயற்கையைப் பின்னணியாகக் கொண்டே தீட்டப்படுகிறது. மனித வாழ்விற்கு அப்பாற்பட்டதாகவும், ஒட்டாததாகவும் இயற்கை

இல்லை என்பதை அகம் பற்றிய நூல்கள் வலியுறுத்துகின்றன. இதனை அறிஞர் தனிநாயக அடிகள் வலியுறுத்தியுள்ளார். நறுந்தமிழ் மணம் கமழும் நற்றிணைப் பாக்களைக் கற்பனை வளமும் கருத்துச் செறிவும் கனியப் பாடியவர்கள் 192 பேர் ஆவர். இப்புலவர்களின் வாழ்க்கை வரலாறு தெளிவாகத் தெரிந்துகொள்ள இயலாதவாறு உள்ளன. இவருள் சிலரின் இயற்பெயர் கூட அறியப்படவில்லை. பழந்தமிழ்ப் புலவர் பேரும் வேண்டாப் பெரியராய்த் தம்மினும் தம் எண்ணங்களே மன்பதைக்கு வேண்டப்படுவன என்னும் வியத்தகு எண்ணத்தவராய் விளங்கினர். இதனால் தம் பாக்கட்குத் தம் பெயர் சூட்டாமல் மறைந்தனர், எனினும் சங்கத்துச் சான்றோர் தேனூறும் தீந்தமிழ்ப் பாக்களை நானூறு நானூறாகத் தொகுத்த புலவர் பெருமக்கள் ஆசிரியர் அறியப்படாத அருங்கவிதைக்கு அவற்றின் அழகிய சொற்றொடர்களை அவர் தம் பெயராக அமைத்தனர்.

நானூறு பாடல்களைக் கொண்ட நற்றிணையில் ஆசிரியர் தெரியாத பாடல்கள் 51. இந்நூலில் 98 வது பாடல்கள் உக்கிரப்பெருவழுதி என்பவரால் பாடப்பட்டது.97,301 ஆகிய இரண்டு பாடல்கள் மாறன்வழுதி என்பவரால் பாடப்பட்டவை. இந்த நானூறு பாடல்களையும் தொகுத்தவன் பாண்டிய மன்னன் பன்னாடு தந்த மாறன் வழுதி என்பது அவன் பெயர், பாடல்கள் எல்லாம் ஆசிரியப்பாவால் இயன்றவை. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் , இதற்கு உரை வகுத்துள்ளார். 234வது பாடல் மட்டும் கிடைக்கவில்லை. இப்பாடல்கள் திணை அடிப்படையில் பிரிக்கபட்டுள்ளன.அவை,

திணை	பாடல்கள்
1.குறிஞ்சித் திணை	130
2.பாலைத் திணை	107
3.நெய்தல் திணை	101
4.மருதத் திணை	33
5.முல்லைத் திணை	28

இந்நூலில் குறிஞ்சிப்பாடல்களும் பாலைப்பாடல்களும் மிகுதியாக உள்ளன. அதனால் பரத்தையர் காரணமாகத் தலைவனுக்கும், தலைவிக்கும் ஏற்படும் ஊடல் குறித்த பாடல்கள் குறைவாகக் காணப்படுகின்றன. இந்நூல் பண்டைத்தமிழரின் வாழ்வியல் நெறிகளையும், பண்பாட்டினையும் எடுத்துக் காட்டுவதில் முந்தி நிற்கிறது. நற்றிணைப் பாடல்களில் அகச்சுவை நிரம்பிய பாடல்கள் மற்றும் மக்கள் அறவாழ்வு, மன்னர்கொடை, ஆட்சித்திறம், ஒருமைப்பாடு பழந்தமிழ், பழக்கவழக்கங்கள், வாழ்வியல் நெறிகளை உவமைத்திறம்

உள்ளுறை, உவமம் இறைச்சிப் பொருள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. ஐவகை நிலங் களிலே வாழ்ந்த தமிழ்மக்களின் சிறந்த ஒழுக்கங்கள் பலவற்றை இந்நூலில் காணலாம். தமிழ்ப்புலவர்களின் சிறந்த இயற்கையான கற்பனைகளையும் கவியின்பத்தையும் உயர்ந்த வாழ்க்கை அனுபவமும் விழுமிய உணர்ச்சியும் வளமான கற்பனையும் எளிமையின் ஓசை இன்பமும் நல்ல அறிவுரையும் அமைந்த பாட்டுக்கள் பல இந்நூலிலே உள்ளன.

நற்றிணையின் பாடல்கள் வாழ்வியல் நிகழ்ச்சிகள் பலவற்றை ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்திப் பாடப்பட்டுள்ளனர். முதல் பாடல் காதலின் சிறப்பை உணர்த்துகிறது. காதலின் காரணமாக தலைவி தலைவன் பிரிவைத் தாங்காமல் தோழியிடம் தலைவர் சொன்ன சொல்லைத் தவறாதவர் என்றும் நிலைத்த அன்பை உடையவர், எக்காலத்திலும் பிரிந்து போகமாட்டார். தாமரை மலரில் தாதுஊதி உயர்ந்த சந்தன மரத்தில் கட்டிய இனிய தேன்கூடுபோல் தலைவனின் அன்பு உயர்ந்தது என்கிறாள். நீர் எவ்வாறு உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததோ அதுபோல தலைவி உயிருடன் இயங்குவதற்கு தலைவனது அருள் தோய்ந்து காதல் நெஞ்சம் இன்றியமையாதது என்பதை

நீர் இன்று அமையா நம் நயந்தருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சி [53]

என்கிறது. காதலினால் இயற்கையை உயிருள்ள உறவாகக் கருதுகின்றாள் காதலி. தலைவன் தன் காதலியை அவள் வீட்டுக்கருகிலுள்ள புன்னை மரத்தடியில் சந்தித்தாள். அவள் இது நாங்கள் விளையாடுகிற பொழுது மறந்து போட்டுவிட்ட புன்னை விதையிலிருந்தது வளரந்தது. பிறகு நாங்கள் அதனைப் பாலும், தேனும் ஊற்றி வளர்த்தோம், அப்போதெல்லாம் எங்கள் தாய் உங்களை விட உங்கள் தங்கையான புன்னை மிக நல்லவள் எனப் பாராட்டுவாள். எனவே ,என் உடன் பிறப்பான இப்புன்னை நிழலில் உங்களுடன் அளவளாவ எனக்குக் நாணமாக இருக்கிறது. வேறு இடத்திற்குச் சென்று பேசிக் கொண்டிருப்போம் என்கிறாள். இயற்கையில் வளர்ந்த புன்னையைத் தங்கையாக நினைக்கும் உணர்வு நிலையை நற்றிணைப் பாடல்களில் காணமுடிகிறது.

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே [54]

என்று தலைவியின் நாணத்தைக் குறிப்பிடுகிறது. திருக்குறள் கருத்துக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட இந்நூல் சார்ந்திருப்பவது துன்பத்தைத் துடைப்பதையே அக்காலச் சான்றோர் பெரும் செல்வமாகக் கருதினது என்பதை,

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே [55]

என்ற பாடல் மூலம் அறியலாம் இந்நூல் எழுந்த காலமும், தொகுத்தகாலமும் ஒன்று என்பர். இந்நூலில் சில பாடல்கள் மாறன் வழுதி என்பவனால் பாடப்பட்டவை. உக்கிரப் பெருவழுதியும், மாறன்வழுதியும் ஒன்றா என்பது ஆராயத்தக்கது. மேலும் உக்கிரப்பெருவழுதி கடைச்சங்கக் காலத்திலிருந்தவன் . இதனால் இந்நூல் தோன்றிய காலமும் கடைச்சங்கக்காலம் எனப்படுகிறது.

குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவது இடம்பெறுவது குறுந்தொகை குறைந்த அடிகளுடைய பாடல்களைக் கொண்டதால் குறுந்தொகை என்று கூறுவர். இதை நல்ல குறுந்தொகை எனவும் அழைப்பர். சங்க இலக்கியத்தில் குறுந்தொகையும் கலித்தொகையும் தொகை என்ற பெயரால் அமைந்துள்ளன. **புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுட்களில் புனைந்து காட்டும் ஆற்றலினும் அகத்தே தோன்றும் கருத்துக்களை உணர்ச்சியின் மெய்ப்பாடு புலப்பட உரைக்கும் ஆற்றலில் சிறந்தது குறுந்தொகை.**[56] என்று உ.வே.சாமிநாதய்யர் குறிப்பிடுகிறார். இறையனார் களவியல் உரையாசிரியர் குறுந்தொகை நானூறு என்று குறிப்பிடுகிறார். **அடியளவில் குறுகிய இப்பாடல்களில் முதல் கருவை விட உரிப்பொருளுக்குச் சிறப்பிடம் நல்கப்படுமாற்றைக் காணலாம்**[57] என்பார் வ.சுப.மாணிக்கம். இந்நூல் முழுவதும் அகத்திணைச் செய்திகள் நிறைந்துள்ளன. அடியளவால் குறுகிய பாடல்களாயினும் அரிய செய்திகள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. அளவான கற்பனையையும் ஆழமான உணர்வு வெளிப்பாட்டினையும் கொண்டுள்ளது. அன்பு வாழ்க்கையின் அழியாத காட்சிகள் பலவற்றை எடுத்துக்காட்டும் எழிலோவியமாகக் குறுந்தொகை காட்சியளிக்கிறது. சிறந்த உவமைகள் இந்நூலில் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்நூலில் அதிகமாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் காதலனைப் பிரிந்த தலைவிக்குப் பசலைநோய் வருகிறது. ஆனால் காதலனைக் கண்டும்

பேசியும், தொட்டும், உறவாடும்போது பசலைநோய் பறந்து விடுகிறது. இதைக் குளத்தில் உள்ள பாசிக்குத் தலைவி ஒப்பிடுகிறாள் என்பதை

ஊருண்கேணி உண்துறைத் தொக்க
பாசி அற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவிழி விடுவுழி பரத்தலானே [58]

என்று குளத்துத் தண்ணீரைக் குவித்த கரங்களால் அள்ளும்போது பாசி விலகுகிறது ; கரங்களை வெளியே எடுக்கும்போது பாசி மறுபடியும் கூடிவிடுகிறது. இவ்வாறு பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமைகளைக் கையாண்டுள்ளன; கட்டிய மனைவிக்கு அஞ்சிக் கைகட்டி வாழுகின்ற ஆடவனுக்கு கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை என்று உவமை கூறப்பட்டுள்ளது. பறவை, விலங்குகளின் வாழ்க்கைப் பின்னணியாக வைத்து ஆண்கள், பெண்கள் உள்ளத்தெழும் அக உணர்ச்சியைச் சித்தரித்துக் காட்டுவதில் இந்நூல் ஈடு இணையற்றது. தலைவன் தலைவியுமாக வாழும் அன்பு வாழ்க்கையின் இனிய காட்சிகள் புதுக்கவிதை போன்றும் சிறுகதை நறுக்குத்தொடுத்தாற்போல் கூறப்படுவது இப்பாடல்களின் சிறப்பைக் குறிக்கிறது. மேலும் புராணச் செய்திகள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக,

கொங்கு தேர்வாழ்க்கை அம்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கொழிஇய நட்பின் மயில இயக்கீ
செறி எயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே [59]

இப் பாடலைப் பற்றி வழங்கும் கதை ஒன்றுண்டு. பாண்டிய மன்னன் ஒருநாள் தன் மனைவியுடன் சோலையில் வீற்றிருந்தான். அப்பொழுது அவன் மனைவியின் கூந்தலிலிருந்து நறுமணம் வந்தது. அது அவன் உள்ளத்தைக் கவரந்தது.அந்த மணத்திற்கு எந்த மலரின் மணமும் ஈடாகாது என்று எண்ணினான். தன் காதல் மிகுதியால் அந்த நறுமணம் அவள் கூந்தலின் இயற்கை மணம் என்று நினைத்தான்.

தன் கருத்தை அமைத்து பாடுவோருக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதென்று முடிவு செய்தான். தன் முடிவை அனைவருக்கும் அறிவித்தான். ஆயிரம் பொன்னடங்கிய முடிப்பைச் சங்க மண்டபத்தில் கட்டித் தொங்கவிட்டான். தருமி என்பவன் மதுரைக் கோவிலின் அர்ச்சகன் தனக்கு அப்பொன்முடிப்பு கிடைக்கவேண்டுமென்று சொக்கநாதரை வேண்டிக் கொண்டான்.

மறுநாள் அவன் பூசைக்குப் போன போது சொக்கநாதர் பீடத்திற்கு அடியிலே இப்பாடல் ஒரு ஓலையில் எழுதப்பட்டிருந்தது. தருமி இப்பாடலை எடுத்துக் கொண்டு வந்து சங்கத்தார் முன்னிலையிலே படித்தான். இப்பாடலின் கருத்தை தன் கருத்தென்று பாண்டியன் ஒப்புக்கொண்டான். புலவர்களும் பாடலைப் பாராட்டினர். தருமிக்குப் பொற்கிழி பரிசளிக்கப்பட்டது. தருமி பொற்கிழியை எடுக்கச் சொல்லும்போது நக்கீரர் தடுத்தார். பாட்டிலே சொற்குற்றம் இல்லை ஆனால் பொருள் குற்றம் உண்டு. கூந்தலுக்குச் செயற்கை மணந்தான் உண்டு .இயற்கை மணம் இல்லை என்று கூறினார். தருமியால் இதற்குத் தக்க விடையறுக்க முடியவில்லை. தடுமாறினான். பின்னர் சொக்கநாதரே புலவர் போல் வந்து நக்கீரருடன் வாதிட்டார் ஏற்புடைய மகளிரின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்றார் அதை மறுத்தார் நக்கீரர், அப்பொழுது சொக்கநாதர் தன் நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று வாதிட்டார் நக்கீரர். உடனே சிவபொருமான் சினம் கொண்டு பொற்றாமரையிலே விழச்செய்தார். அதன் பிறகு நக்கீரர் சொக்கநாதரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். புராணம் தோன்றுவதற்கு முன்பே சங்க இலக்கியப் பாடல்கள் தோன்றியதால் திருவிளையாடற்புராணத்தில் இக்கதை தோன்றுவதற்கு குறுந்தொகைப்பாடல் அடிப்படையாய் இருந்திருக்கலாம்.

இந் நூலில் கடவுள்வாழ்த்து உட்பட 402 பாக்கள் உள்ளன. கடவுள் நீக்கி 401 பாக்கள் உள்ளன. இப்பாடல்களில் 307,391 ஆகிய இருபாடல்கள் குறுந்தொகையின் அடி எல்லையை மீறி ஒன்பது அடிகள் அமையப் பெற்றுள்ளன. 307 ஆம் பாடல் எல்லா ஏடுகளிலும் ஒன்பது அடி கொண்டதாக அமைந்துள்ளது. இப்பாடலை நீக்கினால் குறுந்தொகை 400 என்பது பொருத்தமாகும் என்பர் தெ.ஞானசுந்தரம். இந்நூலின் முதல் 300 பாடல்களுக்குப் பேராசிரியரும், பின் 20 பாடல்களுக்கு நக்கினார்க்கினியரும் உரை எழுதியுள்ளனர்.ஆனால் உரைகள் கிடைக்கவில்லை. தற்போது நூல் முழுமைக்கும் உ.வே.சாமிநாத ஐயர் எழுதியுள்ள உரை கிடைத்திருக்கிறது. இந்நூலைத் தொகுப்பித்தவர் யாரென்று தெரியவில்லை; தொகுத்தவர் பூரிக்கோ என்பவர். இவரைப்பற்றி வரலாறு ஒன்றும் அறியப்படவில்லை; **கோ** என்பதனால் இவர்ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம். இந்நூல் அகப்பொருளைப் பற்றி குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், என்னும் ஐந்திணை ஒழுக்கம் பற்றிய பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

திணை	**பாடல்கள்**
1.குறிஞ்சித்திணை	77
2.பாலைத்திணை	41

3.நெய்தல் திணை	30
4.மருதத் திணை	29
5.முல்லைத் திணை	22

இப்பாடல்களோடு மற்றப்பாடல்கள் எந்த வரிசை முறையுமின்றி எல்லா துறைப்பாடல்களும் கலந்து காணப்படுகின்றன.

குறுந்தொகைக்குப் பாரதம்பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்தாக முருகப் பெருமானை முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளார். அன்பால் நினைப்பவர்க்கு வேண்டிய அருள்புரியும் ஆறுமுகக் கடவுள் ஐவகை நிலத்தில் வாழும் மக்களுக்கு அருள்புரிவதை

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எந்த செஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகமே [63]

என்று முருகப் பெருமானுடைய திருவடி, நிறம், ஒளி, ஆடை, வேல், சேவற்கொடி என்னும் இவை ஆறும் வாழ்வின் பொருளோடு பொருந்துவதாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூல் நானிலத்து ஐந்திணை ஒழுக்கமும் கூறப்படுதலின் அகப்பொருளைத் தன்னுள் கொண்டுள்ளது. **தாமரை புரையும் காமர் சேவடி** என்றமையால் நெய்தல் நிலத்துக் கருப்பொருளாகிய பவழமும் **குன்றி ஏய்க்கும் உடுக்கை** என்றமையால் முல்லை நிலத்துக் கருப்பொருளாகிய குன்றி மணிக்கொடியும் **குன்றின் நெஞ்சுபக உறிந்த** என்றமையால் குறிஞ்சி நிலத்துக்குரிய மலையும் கூறப்பட்டுள்ளன. இவற்றால் மக்களுக்கு அன்பின் ஐந்திணை ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது. நெடுவேலைக்கொண்ட முருகக் கடவுள் காத்த வருதலால் இவ்வுலக நிகழ்ச்சிகள் இடையின்றி நடைபெற்று வருகிறது . இந்நூல் களவும், கற்புமாகிய இருவகை ஒழுகலாறுகளை விளக்கும் அகநூலாகையால் அவிவிருவகை ஒழுக்கத்தையும் உலகிற்குக் காட்டிய முருகப்பெருமானை ஆசிரியர் நூலின் முதலில் வைத்துப் போற்றியுள்ளார் .

சங்க இலக்கிய குறுந்தொகைப் பாடல்களை மொத்தம் 205 புலவர்கள் பாடியுள்ளனர். சங்க காலத்து வாழ்ந்தபுலவர்கள் ஓர் இனத்தவரோ, ஓரிடத்தவரோ, ஒரு காலத்தவரோ இல்லை. எனினும் அவர்கள் தம்முள் எத்தகைய வேறுபாடும் கருதாது தமிழ் மொழியை நன்கு பேணி வளர்த்தனர். சங்ககாலப்புலவர்கள் அகம் பாடினாலும் புறம்பாடினாலும் செடி, கொடி, மரம், பறவை, விலங்கு முதலியவற்றின் இயக்கங்களை மனித இயற்கையாக உள்ளுறுத்திப் பாடுவர். ஏதோ தாமரையும் புன்னையையும் பாட்டாகப் பாடுகின்றனர் என்று கொண்டு நுனிப்புல்லால் உருவான செய்யுள் என எண்ணிவிடக்கூடாது. வெள்ளியில் நாணயம் போல் இயற்கைப் புனைவில் மனிதப் பினைவு உயிரோடிக் கிடக்கின்றது என்கிறார் வ.சுப.மாணிக்கம். சங்கப்புலவர்கள் சிறப்பான மொழி நடையோடும் உள்ளுரை உவமையோடும் அழகுபடக்கூறி அகத்தையும், புறத்தையும் பாடியுள்ளனர். அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கல்வியில் மட்டுமல்லாமல் வீரத்திலும் சிறந்தவர்களைப் போல் உணர்வோடு பாடல்களை இயற்றியுள்ளனர்.

புலவர்கள்

ஆண்பாற் புலவர்கள் — பெண்பாற்புலவர்கள்

உவமையால் பெயர்பெற்ற புலவர்கள்	பாடலால் பெயர்பெற்ற புலவர்கள்
1. செம்புலப்பெயல்நீரார்	அஞ்சியத்தை மகள் நாகையார்
2. மீனெறி தூண்டிலார்	கழார்க்கீரன் எயிற்றியார்
3. விட்டகுதிரையார்	குமுழிஞாழலார் நப்பசலையார்
4. ஓரேருழவன்	வெறிபாடிய காமக்கண்ணியார்
5. கூவன் மைந்தனார்	ஒக்கூர் மாசத்தியார்
6. காலெறி கடிக்கையார்	நக்கண்ணையார்
7. கவைமகனார்	போந்தை பசலையார்
8. வில்லக விரலனார்	பேய் மகள் இளவெயினியார்
9. கங்குல் வெள்ளத்தார்	பொதும்பில் புல்லாளங் கண்ணியார்
10. அணிலாடுமுன்றிலார்	அள்ளூர் நன்முல்லையார்
	முடத்தாமக்கண்ணியார்

எந்த நாட்டினராகவும்,எந்தமொழி பேசுபவர்களாகவும் இருந்தாலும் அவர்களுக்கு இப்பாடல் பொருந்துமாறு அமைந்துள்ளது.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடைய நெஞ்சம் தாம்கலந்தனவே [61]

என்கிறது.காதல் என்பது இப்பிறவி மட்டுமல்லாது மறுபிறப்பிலும் தொடரும் என்பதையும் மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையும் வலியுறுத்துகிறது குறுந்தொகைப்பாடல்.

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆகி யார் என் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சு நேர்பவளே [62]

இப்பிறவி மட்டுமல்லாமல் மறுபிறப்பிலும் காதலர் இருவரும் கணவன் மனைவியாக வாழ விரும்புவதைக் காட்டுகிறது.புதுக்குடித்தனம் போன தம்பதியனரின் தனிக்குடித்தன வாழ்க்கையின் அழகையும், அருமையையும் சுவைபடக் காட்டுகிறது. குறுந்தொகைப்பாடல்,

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே [63]

திருமணமான புதிதில் தலைவி தலைவனுக்குத் தானே உணவு சமைத்துப் பரிமாறுகிறாள். அனுபவக் குறைவாலும்,விரைவாகச் செய்ய வேண்டும் என்பதாலும் சேலையில் கையைத் துடைத்துக் கொண்டு கண்களில் புகைபடிய அவள் சமைக்கும் அழகே அவளுக்கு சமையலில் பழக்கமில்லை என்பதைக்காட்டுகிறது. இருந்தும்

மனைவி முயன்று தன் அன்பை முழுவதும் கொட்டிச் செய்த மோர்க்குழம்பைத் தலைவன் புன்னகை பூக்க இனிது இனிது என்று உண்கின்றான்.இதனால் இருவரின் இல்லற வாழ்வின் இனிமையையும், அன்பையும் உணரமுடிகிறது.இல்லறவாழ்வில் இணைந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் அது உயிராக அமைகிறது.

வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்[64]

என்ற பாடல் ஆண்களுக்கு அவர்கள் மேற்கொண்ட கருமமே உயிராக அமைகிறது. ஆனால் இல்லத்திலிருக்கும் பெண்களுக்கு அவர்கள் கணவரே உயிராக அமைகின்றனர். இவ்வாறு வினையே உயிராகக்கருதி வாழும் தலைவன் முன்னோர் வைத்துச் சென்ற செல்வத்தை எண்ணமாட்டான். தன் உழைப்பில் வாழ நினைப்பான். முன்னோர் விட்டுச் சென்ற சொத்தில் வாழ்வதை இழிவாகக் கருதினர்.இதனை,

உள்ளது சிதைப்போர் உளர் எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு என [68]

என்கிறது.இவ்வாறு குறுந்தொகைப் பாடல்கள் தமிழரது சிறந்த வாழ்வியல் பண்பைப் பெருமைப்படுத்துகிறது. இத்தொகைநூல் எழுந்த காலம் தொல்காப்பிய உரைகாரராகிய பேராசிரியர் குறுந்தொகைக்கு உரை வகுத்துள்ளமையால் அவர் காலமாகிய 14-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்றும் இளம்புரணாரும் குறுந்தொகைப் பாடல்களை மேற்கோளாக எடுத்தாளுதலின் அவர் காலமாகிய 12-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்றும் அறியப்பட்டுள்ளது.

ஐங்குறுநூறு

மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற திணைகளையும் திணைக்கு நூறு பாடல்களாக ஐந்நூறு பாடல்களைக் கொண்டது. ஐங்குறுநூறு இந்நூல் அமைந்த பாடல்கள் ஒவ்வொன்றும் குறைந்த அடிகளையுடைய பாக்களால் ஆனதால் இந்நூல் ஐங்குறுநூறு என்று பெயர் பெற்றது. இந்நூல் முழுவதும் அகவற்பாக்களால் ஆனது. சங்ககாலச் சூழ்நிலையில் பொங்கியெழுந்த நூல் ஐங்குறுநூறு. இஃது எட்டுத்தொகையுள் ஒன்று அகன் ஐந்திணையைக் கூறுவது, உரை ஆசிரியர்களால் நன்கு மதிக்கப்பட்டு மேற்கோளாக எடுத்தாளப்பட்டது.ஒரே பொருளை வேறுவேறு முறைகளில் சுவைகுறையா வண்ணம் எப்படி எப்படிச் சொல்ல முடியும் என்பதற்கு ஐங்குறுநூற்றுப் பாடல்கள் எடுத்துக்காட்டு இலக்கியமாக விளங்குகின்றன என்று இரா.தண்டாயுதம் குறிப்பிடுகிறார்.

இன்னின்னார் இன்னின்ன பொருள்களில் பாட வேண்டும் என்ற நெறிமுறை சார்ந்த அமைப்பில் பாடல்கள் இயற்றும் பாங்கினை ஐங்குறுநூற்றில் காணமுடிகிறது. இத்தகு அமைப்பு முறை சங்கம் என்றதொரு அமைப்பு இருந்தததை வலியுறுத்துகிறது. மிகச் சுருக்கமாக இக்கால ஹைக்கூ கவிதைகள் போல சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லக் கூடிய திறம் பெற்ற பாடல்களாக இவை அமைந்துள்ளன.

அவரோ வாரார் தான் வந்தன்றே
குயிற்பெடை இன்குரல் அகவ
அயிர்க்கேழ் நுண் அறல் நுடங்கும் பொழுதே [66]

தலைவி உணர்த்த விரும்புவது இதுதான். இளவேனிற்காலத்தில் வருவேன் என்று சொல்லித் தலைவன் பிரிந்து சென்றான்; இளவேனிற்காலமும் வந்தது. ஆனால் தலைவன் இன்னும் வரவில்லை. இளவேனில் வந்ததைத் தெரிவிக்கும் அடையாளங்களாகக் குயிலின் குரலும் தென்றல் ஆற்றுநீரை அலைத்தால் வரிவரியாக ஏற்படுகின்ற வண்டல்மண் ஒழுங்கும் வந்துவிட்டன. ஆனால் தலைவன் வரும் சுவடு தெரியவில்லை; இவ்வாறு பத்துப்பாடல்களிலும் சொல்லாது சென்று இளவேனில் வந்துவிட்டதையும் சொல்லிச்சென்ற தலைவன் வராததையும் எண்ணித் தலைவி வருந்திப்பாடுவதற்கான அமைப்பினைக் காணமுடியும். இதே போக்கில் அமைந்த பாடல்கள்

அவரோ வாரார் தான்வந் தன்றே
சுரும்ப களித்து ஆலும் இருஞ்சினைக்
கருங்கால் நுண்வங்கமமும் பொழுதே [67]

அவரோ வாரார் தான் வந்தன்றே
திணிநிலைக் கோங்கம் பயந்த
அணிமிகு கொமதை உடையும் பொழுதே [68]

இந்த அமைப்பிலேயே ஒவ்வொரு பத்து பாடல்களும் அமைந்துள்ளன. சங்கஇலக்கியத்தில் பத்துப்பாடல்களாக அமைந்த அகநூல் ஐங்குநுறூறு; ஒவ்வொரு திணைப்பாடல்களும் பத்துப் பத்துப்பாடல்களாகப் பகுத்து பாடப்பெற்றுள்ளன. இந்நூலில் உள்ள பாடல்கள் மூன்று அடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்டு ஐந்நூறு பாடல்களாக அமைந்துள்ளன. இவற்றில் 129, 130 இரு பாடல்களின் மூலம் கிடைக்கவில்லை இந்நூலில் திணைவாரியாகப்

பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவை அடியளவால் குறைந்தாலும் சொற்சுவையும், பொருட்சுவையும் பெருகிக்காணப்படும் பாடல்களைக் கொண்டது. இந்நூலில் கருத்தாழம் மிக்க உவமை, உள்ளுறை, இறைச்சி என்னும் புலப்பாட்டு உத்திகளை மிகத்திறமையாகப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு பத்துப்பாடல்களுக்கும் ஒரு பெயர் உள்ளது. இப்பெயர் பொருளமைப்பினாலோ அல்லது பாட்டில் சிறப்பாக அமைந்த ஏதேனும் ஒரு சொல்லினாலோ இப்பெயர் வழங்கப்படும் தோழி வற்புறுத்த பத்து **மஞ்ஞைப் பத்து** என்பன போன்று வரும். எடுத்துக்காட்டாக,

மருதத்திணையிலுள்ள நூறுப்பாடல்கள்

1. வேட்கைப்பத்து
2. வேழப்பத்து
3. கள்வன் பத்து
4. தோழிக்கு உரைத்த பத்து
5. புலவிப்பத்து
6. தோழிக்கூற்றுப்பத்து
7. கிழத்திக் கூற்றுப்பத்து
8. புலையாட்டுப் பத்து
9. புலவி விராய பத்து
10. எருமை பத்து

நெய்தல் திணையிலுள்ள நூறு பாடல்கள்

1. தாய்க்கு உரைத்தபத்து
2. தோழிக்கு உரைத்தபத்து
3. கிழவற்கு உரைத்தபத்து
4. பாணர்க்கு உரைத்தபத்து
5. ஞாழற்பத்து
6. வெள்ளாங் குருகுப்பத்து
7. சிறுவெண்காக்கைப்பத்து
8. தொண்டிப் பத்து
9. நெய்தற்பத்து
10. வளைப்பத்து

குறிஞ்சித்திணையிலுள்ள நூறு பாடல்கள்

1. அன்னாய் வாழிப்பத்து
2. அன்னாய்பத்து
3. அம்ம வாழப்பத்து
4. தெய்யோப்பத்து
5. வெஷீப்பத்து
6. குன்றக்குரவன்பத்து
7. கேழற்பத்து
8. குரக்குப்பத்து
9. கிள்ளைப்பத்து
10. மஞ்ஞைப்பத்து

பாலைத் திணையிலுள்ள நூறுபாடல்கள்

1. செலவு அழுங்குவித்தபத்து
2. செலவுப்பத்து
3. இடைச்சுரப்பத்து
4. இளவேனிற்பத்து
5. தலைவி இரங்குபத்து
6. வரவுரைத்தபத்து
7. முன்னிலைப்பத்து
8. முகப் போக்கியவழித் தாய் இரங்குபத்து
9. உடன் போக்கின் கண் இடைச்சுரத்து உரைத்தபத்து
10. மறுதரவுப்பத்து

முல்லைத் திணையிலுள்ள நூறு பாடல்கள்

1. செவிலிகூற்றுப்பத்து
2. கிழவன்பருவம்பாராட்டும்பத்து
3. விரவுப்பத்து
4. புறவணிப்பத்து
5. பாசறைப்பத்து
6. பருவங்கண்டு கிழத்தி உரைத்தபத்து
7. தோழி வற்புறுத்தபத்து

8. பாணன்பத்து

9. தேர்வியங் கொண்டபத்து

10. வரவுச்சிறப்புஉரைத்தபத்து

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் பாலை எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே எனும் இலக்கணவிதியிணை ஒதுக்கி மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என முறைப்படுத்தி ஒவ்வொரு தலைப்புக்கும் பத்துப்பாடல்களாக அதேபோல் திணைக்கு நூறு பாடல்களாக ஐந்திணைகளைக் கொண்டு அமைந்துள்ளது.

ஐந்து திணைகளுக்குரிய ஐநூறு பாடல்களுடன் இந்நூலில் கடவுள்வாழ்த்து சேர்த்து 501 பாடல்கள் உள்ளன. இதனைபாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். நூலின் பிற பாடல்களின் அளவினைக் குறிப்பாகச் சுட்டும் வகையில் மூன்றுஅடிகளால் அமைந்த இப்பாடலில் சிவபெருமான் வணக்கம் பாடப்பட்டுள்ளது.அவை,

நீலமேனி வாழிலை பாகத்து

ஒருவன் இருதாள் நிழற்கீழ்

மூவகை உலகும் முகிழ்ந்தன முறையே [69]

என்பதாகும். ஈழநாட்டுச் சான்றோர் ஒருவர் இந்நூலிற்குச் சுருக்கமானதோர் உரை வகுத்துள்ளார். அப்புலமைச் சான்றோர் இவ்வாழ்த்தினை ஏற்புடையக் கடவுள்வாழ்த்து என்று குறித்துள்ளார். மனமொத்த ஆணும், பெண்ணும் ஓரயிரும் ஈருடலுமாய் வாழ்வது பற்றியது. அகத்திணை இலக்கியமாதலின் சிவபெருமானைப் பற்றிய வாழ்த்தினை அமைத்தார் பெருந்தேவனார். இதனைக் கல்லாடத்திலே வரும் ஒரு விழுமிய பகுதியால் விளக்கியுள்ளார்.

..... தழைத்தெழு

தாளியும் கொன்றையும் தழைத்தலின் முல்லையும்

பரந்தளும் தரக்கும் பயிறலின் குஷ்ஞ்சியும்

முடைத்தலை எரிபொரி யுடைமையின் பாலையும்

மாமையும் சலமும் மேவலின் மருதமும்

கடுவும் சங்கமும் ஒளிர்தலின் நெய்தலும்

ஆகத் தனது பேரருள் மேனியில்

திணையைந் தமைந்த இணையிலி நாயகன் [70]

என்று நீலநிறமான திருமேனியையும் தூய அணிகலன்களையும் உடைய சிவபெருமான் பார்வதி தேவிக்கு இடப்பாகத்தில் இடங்கொடுத்தது ஆணும், பெண்ணும் சமமாக இவ்வுலகில் வாழ்வதைக் குறிக்கிறது. மேலும் சிவபெருமானின் பாதங்களின் கீழ் மூவகை உலகங்களான விண்ணும், மண்ணும் பாதாளமும் அடங்கும்படி தன்கரங்களினால் உலகை தோற்றுவித்து காத்துவரும் இறைவனின் பாதங்களை இடையறாது பணிந்து வாழ்வது மக்களின் கடன் என்பது இதனால் வலியுறுத்தப்படுகிறது. சங்கப்புலவர்கள் பயன்படுத்திய சொற்களில் இயற்கை எழிலையும் உயிரினங்களின் வாழ்வியலுடன் உணர்வுகளையும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்ட வல்லவர்கள் என்பதற்கு ஐங்குறுநூற்றுப் பாடல்கள் எடுத்துக்காட்டு இலக்கியமாக விளங்குகிறது. அழகும், அறிவும் நிறைந்த இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார் என்ற புலவர்.தொகுப்பித்தோன் யாணைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேரஅரசன் இவ்விருவரும் சிறந்த நண்பர்கள். இம்மன்னனுடைய தூண்டுதலே இந்நூல் உருவாகக் காரணமாயிற்று என்பர். கூடலூர்க்கிழார் புலத்துறை முற்றியவராக இருந்தும் ஐங்குறுநூறு நூற்றின் பாடல்களை இயற்றும் பணியைச் செம்மையாகசெய்ய வேண்டும் என்பதற்காக ஐந்து திணைகளுக்கும் ஐந்து புலவர்கள் வீதம் ஒவ்வொரு திணையையும் சிறப்பாக பாட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஐந்து புலவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் சென்ற தம்கருத்தினைக் கூறி அவர்களாலேயே தனித்தனி நூறுநூறு பாடலாகப் பாடவைத்து அவற்றை ஒருங்கே தொகுத்து ஐங்குறுநூறு எனப் பெயரிட்டு மன்னருக்கு வழங்கி மகிழ்வித்தார். ஐந்திணையை ஐந்துபுலவர்கள் பாடினர் என்பதை,

மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்

கருதும் குறிஞ்சி கபிலன்

கருதிய

பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே

நூலையோ தைங்குநுறூறு [71]

திணை	**பாடியவர்கள்**	**பாடல்கள்**
மருதம்	ஓரம்போகியார்	100
நெய்தல்	அம்மூவனார்	100
குறிஞ்சி	கபிலர்	100
பாலை	ஓதலாந்தையார்	100
முல்லை	பேயனார்	100

எனத்திணைக்கு நூறுப்பாடல்களாக ஐந்து புலவர்களால் ஐந்நூறுபாடல்கள் பாடப்பட்டன. அவற்றில், ஓரம்போகியார் மருதத்திணையைப் பத்துப்பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் பத்துப்பாடல் வீதம் பாடியுள்ளார். இவர்தம் பாடலில் ஆதன் அவினி என்னும் சேரமானையும் சோழன் கடுமான்கிள்ளியையும் பாண்டியனையும் **விரா அன்மத்தி** என்னும் குறுநிலத் தலைவர்களையும் குறிப்பிட்டுள்ளார். இவரது பாடல்களால் காவிரியாற்றையும், வையையாற்றையும் குறிப்பிடுவார். இவர் முதன் முதலாக இந்திரவிழாவைப் பற்றிப் பேசுகின்றார். தைத்திங்களில் நிகழும் நோன்பு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அரசர்களின் செயல்கள் பற்றி அகத்திணைகளில் பேசுவது அக்கால மரபு. எனினும் அகத்திணைகளில் ஒரு மன்னனை வாழ்த்தும் மரபு இவரிடம் மட்டுமே காணப்படுகிறது. **விளைகவயலே வருக இரவலர்**, **பால்பலஊறுக**, **பகடுபல சிறக்க** என்பன உலக நன்மைகள் குறித்து வேண்டுவது இவரிடம் மட்டுமே காணப்படும் புதுமையான பொதுநலன் சிந்தனையாகும்.

அம்மூவனார் நெய்தல்திணையைப் பத்துப்பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் பத்துப்பாடல்கள் வீதம் பாடியுள்ளார். இவர் மேலைக் கடற்கரையைச் சேர்ந்த சேரநாட்டில், தோன்றியவர். சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டி நகரமும் அந்நாட்டு அகநகரமாகிய மாந்தையும் பாண்டிநாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய கொற்கையும் நடுநாட்டுத் திருக்கோவிலூரும் பெண்ணையாறும் இவரால்

இடப்பட்டிருக்கின்றன. இதனால் இவர் சேர பாண்டியராகிய இருமுடி வேந்தராலும், மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளல் பெருமானாலும் ஆதரிக்கப்பெற்றார்.இவர் காலத்தில் வணிகத்தில் நெல்லும் உப்பும் ஒரே விலைக்கு விற்கப்பட்ட வரலாற்றை இவர் பாடிய (அகம் 140, 329) இருபாடலல் அறிய முடிகிறது. பெண்ணுக்கு பரிசும் கொடுத்தல் பற்றியும் ஐங்.147 அகம் 250 இவரது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

கபிலர் குறிஞ்சித்திணையைப் பத்துப்பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் பத்துப்பாடல்கள் வீதம் பாடியுள்ளார். **சாங்கிய நெறியை** நிறுவிய கபிலரின் நினைவாக இப்புலவர்க்குக் கபிலர் என்னும் பெயர் வந்தது. என்றும் அது வடமொழிப்பெயர் என்றும் சங்ககாலச் சிறப்புப்பெயர்களால் அறிய முடிகிறது.

கபிலர், பாரியின் உயிர்த்தோழர். பாரி வாழ்ந்த காலத்தில் பறம்பு மலையிலும், பின்னர்ச் சேரவேந்தன் செல்வக்கடுங்கோ வாழியாதனின் மலைநாட்டிலும் வாழ்ந்தவர். மலையமானது முள்ளூர் மலையும், கொல்லிமலையும் அவர் பழகிய மலைப்பகுதிகள் கபிலரின் வாழ்க்கைச் சூழல்தான் குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடிக் **குறிஞ்சிக்கபிலர்** எனப் பெயர் பெறக் காரணமாயிருந்தது.இப்புலவர் நல்லிசைப்புலவர் பலராலும் மதிக்கப்பட்டவர். இவருடைய சான்றாண்மை கீர்த்தி,கல்வி, தூய்மை முதலியவற்றைப் பலபுலவர்கள் பாராட்டியுள்ளனர். இவ்வாறு புலவர் பலரும் போற்றும் நிலையில் வாழ்ந்தமையின் இவர் புரவருள் சிறந்த புலவராய் விளங்கினார். இவர் அகுதை, இருங்கோள் ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், நள்ளி பாண்டியன், மலையமான், திருமுடிக்காரி, விச்சிக்கோ, வேள்பாரி, வையாவிக் கோப் பெரும்பேகன், மலையன் எண்ணும் புரவலர்களைப் பாடியுள்ளார். இவர் பாடல்களில் அயிரைமலை, கொல்லிமலை, பறம்புமலை, முள்ளூர்மலை முதலிய மலைகளும் பறம்புநாடு, கொடுமணம் முள்ளூர்பந்தர் முதலிய இடங்களும் குறிப்பிடப் படுகின்றன.

ஓதலாந்தையார் பாலைத்திணையைப் பத்துப்பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் பத்துப்பாடல்கள் வீதம் பாடியுள்ளார்.**ஓதல்** என்பது இவர் பிறந்த ஊரின் பெயர் ஆதன் தந்தை என்னும் தொடர் ஆந்தை என மருவிற்று என்பர். ஓதல் ஆந்தையார் என்பதற்கு ஓதுவதையே தொழிலாகக் கொண்ட ஆந்தையார் என்பது பொருள்.ஓதல் என்னும் ஊர் மேற்கு கடற்கரையில் குட்டநாட்டில் உள்ளதென்றும் அது காலத்தில் **ஓதலூர்** என்றும் வழங்கப்படுகிறது. இவர் பாலை நிலத்து மக்களின் பண்பாடுகளை நன்றாக அறிந்து பாலையைப் பற்றிப் பாடுவதிலே வல்லவராகத் திகழ்ந்துள்ளார். இவர் பாடல்களில் உடன்போக்கில் உள்ளத்துயர் உண்டு

என்பதைத் தெளிவுப்படுத்துகிறார். இக்களவுப்பாலையையும், கற்புபாலையையும் அறமும்திறமும் பொருந்தப்பாடிய ஓதலாந்தையார் சிறந்த பாலைப்புலவர் ஆவார். இவர் தம் பாடலைக் கற்ற மக்களுக்கு அகத்திணையின் இலக்கிய வளத்தில் ஐயந்தோன்றாது மரபுநிலை திரியாமல் அகத்துறைகளைப் படைக்கலாம். பாடலாம் என்ற புத்தாற்றல் தோன்றும் முல்லை பேயனார். முல்லைத் திணையைப் பத்துப் பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் பத்துப்பாடல்கள் வீதம் பாடியுள்ளார். இவர் பெயர் பேயன், பேயார், பேயனார் என்று வழங்கினான். பேயன் என்பது சிவபெருமானுக்குரிய பெயர்களில் ஒன்று. பேய்கள் வாழும் சுடுகாட்டில் இருப்பவன். பேய்களைப் படைகளாகக் கொண்டவன். ஆகையால் பேயன் என்று சிவனை அழைப்பர். இத்தகைய சிவபெருமான் பெயரையே இப்புலவரும் பெற்றிருந்தார் என்று கருதலாம். முல்லை நிலமக்களின் பழக்கவழக்கங்களுடன் பழகி முல்லைத்திணைப் பாடியதால் முல்லைக்குச் சிறப்புப் பெற்றவர். இவருடைய பாடல்கள் மிகவும் இனிமையாகவும் ஆழம் உடையனவாகவும் உள்ளன.

இவ்வாறு ஐந்துபுலவர்கள் பாடிய ஐந்திணைப்பாடல்களும் ஐங்குறுநூறு எனப்பட்டது. ஐங்குறுநூற்றிலுள்ள புலவர்கள் பத்துப்பத்தாகப் பாடியமுறையைப் பின்பற்றித் திருவள்ளுவரும் திருக்குறளில் பத்து பத்தாகமுறை வைத்துப் பாடியுள்ளார். பின்வந்த நாயன்மார்களும் பிறரும் இந்நூலைப் பின்பற்றி பதிகம் பாடத்தொடங்கினர்.

இப்பாடல்களில் உவமை, உள்ளுறை இறைச்சி என்னும் புலப்பாட்டு உத்திகளை மிகத் திறமையாக புலவர்கள் கையாண்டுள்ளனர். அவற்றில் உள்ளுறை சிறப்புப் பெற்று விளங்குகிறது என்பதை

பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்

கழனி ஊரன் மார்பு

பழனம் ஆகற்க என வேட்டேமே [72]

இவ்வாறு பூத்த கரும்பில் காய்த்த நெல்லில் கழனியூரன் என்ற வருணனையிலும் கண்ணுக்கு அழகாக நாவிற்கு சுவையாக இருக்கும் கரும்புபோலப் புலனுக்கு விருந்தாகப் பொழுதிற்குத் துணையாக மட்டும் அமைவாள் பரத்தை ஆனால் இல்வாழும் மனைவியோ உண்ணும் உணவாக உயிர்க்குத் துணையாகப் பயன்படும் கழனி நெல்போல் விளங்குவாள். பூப்பதோடு நின்றுவிடுவது கரும்பு. பூப்பதோடு நில்லாது காய்த்து வாழ்வு தரும் வளமுடையது. நெல் அதுபோல நிகழ்கால

நேயத்திற்கும் வருங்கால வாழ்விற்கும் மனைவியே ஏற்றவாழ்க்கைதுணையாள் என்ற ஒப்பற்ற கருத்தையும் உள்ளுறையாக உணர்த்துகின்றது. மேலும்

நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க

விளைக வயலே வருக இரவலர்

பால் பல ஓரக பகடுபல சிறக்க

பகைவர் புல் ஆர்க. பார்ப்பார் ஓதுக

பசி இல்லாகுக பிணி சேண் நீங்குக.

வேந்து பகை தணிக.யாண்டு பல தந்துக [73]

இவ்வாறு அன்றைத் தமிழரின் வாழ்வியலுக்கும் உலகியலுக்கும் இயைந்த பல நல்ல கருத்துக்களை உணர்த்துகிறது. இத்தொகைநூல் சேரநாட்டில் தொகுக்கப் பட்டிருக்க வேண்டும். பதிற்றுப்பத்து முழுமையும் சேரமன்னர்களைப் பற்றியதாலின் இவையிரண்டும் பத்துக்களாக இருப்பதனால் சேரமன்னர் தொகை நூல்களில் புதுமைபுகுத்த முயன்றனர்போலும் என்று எண்ணத் தோன்றுகிறது. காலம் இந்நூல் எழுந்தகாலம் எனப்படுகிறது.

பதிற்றுப்பத்து

பழந்தமிழரின் தொன்மை இலக்கியமான எட்டுத்தொகை நூல்களில் ஒன்று பதிற்றுப்பத்து அவை ஒத்தப்பதிற்றுப்பத்தும் என்னும் அடைச்சிறப்பினைப் பெற்றுள்ளது. மூவேந்தர்களில் முதன்மையானவர்கள் சேரவேந்தர்கள். அவ்வேந்தர்களைப் பற்றிப் பத்துபுலவர்கள் பாடிய பத்துப்பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்து. பத்துப்பாடல்களைப் கொண்ட ஒரு நூலைப் **பதிகம்** என்றும் ஒரு பாடல்கள் கொண்ட ஒரு நூலைச் **சதகம்** என்றும் பிற்காலத்தார் கூறினர். இந்நூல் சேரமன்னர்களின் வரலாற்றுச் செய்தியைக் காலவரிசைப்படி விரித்துப்பாடுகிறது. சங்க இலக்கியங்களுள் ஒரு குடியின் வரிசையாகச் சொல்லும் ஒரேநூல் என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. இதன் வாயிலாகச் சேரர் குடியின் வரலாற்றை அறிந்து கொள்ள முடிகிறது. இதனைப் பாடிய புலவர்கள் பிற எட்டுத்தொகைப் பாடல்களில் சில பாடல்களையும் பாடியுள்ளதால் சங்ககால மன்னர் வரலாற்றையும் தமிழக வரலாற்றையும் அறியமுடிகிறது. இந்நூலில் சங்ககாலச் சேரமன்னர்களின் செங்கோன்மை ,கொடைத்திறம், படைப்பெருமை, வீரமிகுதி முதலியவற்றை அறியமுடிகிறது. இந்நூல் சங்ககாலச் சேரமக்களின்

வாழ்க்கை முறை இசைக்கலைஞர்களாகிய கூத்தர், பாணர், பொருநர், விறலி பற்றிய செய்திகளைக் கூறுவதில் சிறப்புப்பெற்றுள்ளது.

இந்நூல் முதற்பத்தும் இறுதிபத்தும் கிடைக்கவில்லை. அதனால் எண்பது பாடல்களை கொண்டுள்ளது. பதிற்றுப்பத்து புறப்பாடல்களால் ஆனதொரு தொகுப்பாகும் இந்நூலில் ஒவ்வொரு பத்துப்பாட்டின் தொடக்கத்திலும் பதிகம் என்னும் தலைப்பில் சில அடிகள் செய்யுளாகவும் சில பகுதிகள் உரைநடையாகவும் காணப்படுகின்றன. இந்நூலிலுள்ள பாடல்கள் ஐந்தடி முதல் ஐம்பத்தேழு அடிகள் வரை உள்ளன. ஒவ்வொரு பாட்டின் இறுதியும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பனவற்றைக் காட்டும் குறிப்புகள் உள்ளன. அப்பாட்டில் அமைந்த சிறந்ததொரு தொடரே பாட்டின் தலைப்பாக அமைந்துள்ளது.

முரசுகெழு நெடுநகர் அரசுதுயில் ஈயாது

மாதிரம் பனிக்கும் மறம் வீங்கு பல்புகழ்

கேட்டதற்கு இனிது நின் செல்வம் கேட்டோறும் [74]

மன்னனின் வீரம் அவனுக்குச் சிறப்பளிக்கும் என்பதை உணர்த்தும் **மறம் வீங்குபல்புகழ்** என்ற தொடர்பாட்டின் தலைப்பாக அமைந்துள்ளது. இவ்வாறு எல்லாப் பத்துபாடல்களுக்கும் சிறந்த தொடர்பாட்டின் தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஆசிரியர்.அதன் பாட்டுடைத் தலைவர். அவர் இயற்றிய அறிய பாடல்கள். ஆசிரியருக்கு அவர் அளித்த பரிசில் முதலிய செய்திகளைக் குறிப்பிடும் பதிகம் உள்ளது. இவை சாசனங்களில் காணப்படும் மெய்க்கீர்த்திகளைப் போன்று அமைந்துள்ளன.

பகுத்தூன் தொகுத்த ஆண்மை

பிறர்க்கென வாழ்திநீ ஆதல் மாறே [75]

என்பதால் பலருக்கும் பகுத்தளிப்பதற்கே செல்வத்தைத் தொகுத்து வைக்கவேண்டும் என்பன போன்ற வாழ்வியல் அறங்கள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. இந்நூலில் பாடியவரும் பாடப்பட்டோரும் புலவர் பெற்ற பரிசில்கள் பின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பதிற்றுப்பத்தின் சிறப்பு ஒவ்வொரு பாடலுக்கும் திணை, துறை ஆகிய குறிப்புகளோடு வண்ணம் தூக்கு எழுத்துக்களின் வடிவத்தையும் **தூக்கு** என்பது அடிப்பாடலைப் பாடுவதற்குரிய இசையைப் பற்றிய குறிப்பாகும்.

வண்ணம் : ஒழுகுவண்ணம், செஞ்சீர் வண்ணம்
தூக்கு : செந்தூக்கு, வஞ்சித்தூக்கு.

இந்நூலில் மற்றொரு சிறப்பு அரசரோடு அவர் தம் தேவியரும் இப்பாடல்களில் இணைத்துப் போற்றப்பட்டுள்ளார். அரசரோடு அவர்தம் தேவியரும் இணைந்து காட்சிதரும் அழகைப் பதிற்றுப்பத்து படம் பிடித்துக்காட்டுகிறது. அரசர்தம் புகழுக்கு அவர்தம் தேவியரே காரணமாகின்றனர் என்று பாடும் அளவிற்கு இப்பாடல்களில் பெண்மை போற்றப்பட்டுள்ளது.

காமர் கடவுளும் ஆளும் கற்பில்
சேணாறு நுறுநுதல் சேயிழை கணவ
பெண்மை சான்று பெருமடம் நிலைஇக்
கற்பிறை கொண்ட கமழுஞ்சுடநுதற்
புரையோற் கணவ [76]

இதனை நோக்குமிடத்து சேரர் அரசமைப்பில் தாய்வழி உரிமை போற்றப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு **சேரர்தாயமுறை** என்ற ஆய்வு நூலை நாவலர் சோமசுந்தர பாரதியார் எழுதியுள்ளார். சேரனைப்பற்றி அவன் நாட்டுவளம், வீரம், மக்கள் வாழ்க்கை,கொடைத்திறமைப் பற்றிக் குறிப்பாகத் தனித்தன்மையோடு கூறும் இந்நூலில் அறிவுரைக்கும் ஆங்காங்கே உயிரோட்டமாக உள்ளன. பல்யானை செல்கெழுகுட்டுவனைப் பார்த்துப் பாலைக்கௌதமனார்.

சினனே காமம் கழிகண்ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிகு உடைமை
தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழிநடை யாரும் [77]

என்ற அறிவுரை இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் மக்களுக்குப் பயன்படும். மேலும் போர் வீரர்களுக்கு ஏற்படும் பெரும்புண்ணை ஊசியும் நூலும் கொண்டு

தைத்து மருந்திட்டு ஆறவைத்தனர். இம்முறை இன்றைக்கும் பயன்படும் வகையில் உள்ளது. இதேபோன்று வாழ்க்கையில் பயன்படும் கருத்துக்கள் என்றைக்கும் மக்களுக்கு பயன்படும்வகையில் பதிற்றுப்பத்தின் பாடல்கள் அமைந்துள்ளன.

பரிபாடல்

பழம்பெருமை மிக்க எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாக அமைந்தது. பரிபாடல், **ஓங்கு பரிபாடல்**, என்று புகழப்பட்ட சிறப்பை உடையது. பரிபாடல் என்னும் நூலைப் பரிபாட்டு என்றும் அழைப்பர். அகமும், புறமும் கலந்து பரிந்து செல்லும் ஓசையுடைய பாக்களால் அமைந்த ஒருவகைச் செய்யுள் பரிபாடலாகும். இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப்பாக்களுக்கும் பலவகை அடிகளுக்கும் பரிந்து இடம்கொடுக்கும் பாட்டு என்று பொருள்படும் எண்வகை வனப்புகளுள் பரிபாடலை **இழை** எனும் வனப்புக்குள் அடக்குவர். பரிபாடல் புரிதல் தன்மையுடையது. என்ற பொருள் கேற்பப் பற்று வைத்தல், காதல் கொள்ளுதல் சார்பாகப்பேசுதல், இரங்குதல், வருந்துதல், வெளிப்படுதல், வருந்திக்காத்தல், பகுத்தறிதல், அழித்தல், நீங்குதல் எனப்பல பொருள் கூறப்படுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கனுள் இன்பம் ஒன்றையே பொருளாகக் கொண்டு பாடப்பட்டது. இந்நூல் பழந்தமிழரின் பண்பாட்டுக் கருவுலமாகத் திகழ்கிறது. இதன் உரைச்சிறப்புப் பாயிரம்.

சங்க மென்னும் தூங்கமலி கடலுள்

அரிதின் எழுந்த பரிபாட் டமுதம் [78]

என்று சிறப்பிக்கிறது. இந்நூல் அக்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியமாகவும் பிற்காலத்துத் தோன்றிய பல்வேறு பக்தி இலக்கியங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கின்றது. சங்ககால மக்கள் வழிபட்ட கடவுளர்களையும், கடவுள்நெறிகளையும் பற்றி அறிய உதவும் பெட்டகமாகத் திகழ்வதுடன் தலைவன் தலைவியின் அக உணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டும் அரிய கலைப் படைப்பாக விளங்குகிறது. பரிபாடலில் வடமொழிப்புராணக் கதைகள், வடபுலத்து வழிபாட்டு மரபுகள் போன்றவற்றை மிகுதியாகக் காணமுடிகிறது. ஓங்கு பரிபாடல் என்று உணர்ந்தோரால்

உயர்வாகக் கூறப்படும் இந்நூல் பழந்தமிழகத்தின் அழகுக் காட்சிகளைக் கண்குளிரக்காட்டிச் செல்கிறது.

இந்நூல் மொத்தம் எழுபது பாடல்களைக் கொண்டுள்ளது. இருபத்தைந்து அடிச் சிறுமையும் நானூறு அடிப்பெருமையும் கொண்டுள்ளது. இவற்றின் இடையிடையே அகச்சுவை விரிவாகக் காணப்படுகிறது இதனை

பரிபாட்டெல்லை

நாலீர் ஐம்பது உயர்வு அடியாக

ஐ ஐந்து ஆகும் இழிபு அடிக்கு எல்லை [80]

என்று தொல்காப்பிய நூற்பா காட்டுகிறது திருமாலுக்கு எட்டுப்பாடல்களும்ÿ முருகப்பெருமானுக்கு முப்பத்தொரு பாடல்களும் கொற்றவைக்கு ஒருபாட்டும் வையைக்கு இருபத்தாறு பாடல்களும் மதுரைக்கு நான்கு பாடல்களும் ஆக மொத்தம் எழுபது பாடல்களும் பரிபாடலில் இருந்தன என்று பழம்பாடல் ஒன்று கூறுகிறது

திருமாற் இருநான்கு செவ்வேட்டு முப்பத்

தொருபாட்டுக் காடுகாட்டு ஒன்று

மருவினிய

வையை இருபத்தாறு மாமதுரை நான்கென்ப

செய்ய பரிபாடல் திறம் [80]

என்கிறது ஆனால் தற்போது இருபத்திரண்டு பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. திருமாலைப் பற்றி ஆறு பாடல்களும் செவ்வேள் பற்றி எட்டுப்பாடல்களும் வையை பற்றி எட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. இந்நூல் யாப்பு அடிப்படையில் அமைந்துள்ளது. இச்செய்யுள் வகை பெரும்பாலும் காலம்பெற்று வருவதால் இதனை இசைப்பாட்டு என்றும் கூறுவர். இந்நூல் மதுரை, வையை திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை போன்றவற்றின் பெருமைகளையும் இயற்கை எழிலையும் சிறப்பாக வர்ணிக்கின்றது. இந்நூலுக்குப் பரிமேலழகர் உரை எழுதியுள்ளார். இந்நூலின் பாடலாசிரியர் பெயர், பாடலுக்குப் பண் வகுத்தவர் பெயர், பாடலின் பண் ஆகியவை பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளன.

இப்பாடல்களை இயற்றிய புலவர்கள் பதின்மூவர். இதன் பாக்களுக்கு நல்லச்சுதனார், நாகனார் போன்ற பத்து ஆசிரியர்கள் உரைவகுத்துள்ளனர். இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் யாரென்று தெரியவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களான பேராசிரியரும், நச்சினார்க்கியரும், தொல்காப்பிய உரையில் தொகை என்ற சொல்லைக் கையாண்டுள்ளதால் பேராசிரியர் காலமாகிய கி.பி.12-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இத்தொகைநூல் தோன்றியிருக்கலாம் என்கின்றனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் இப்பாடல்களில் வரும் சேதிகள் முதலியவற்றைக் கணக்கில் கொண்டு இந்நூல் சுமார் எட்டாம் நூற்றாண்டு வாக்கில் அமைந்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

வாழ்வியல் மரபுகளோடு வையை ஆற்றின் சிறப்பையும், சமயத்தையும் இணைத்துக் கூறுவது இந்நூலின் சிறப்பு, வையையின் கரைகள் வளமுற்றிருந்தன. அவைகளைக் கண்டவர்கள் அவைகள் வள்ளல் தன்மையிலே சிறந்த பாண்டிய மன்னனுடைய கொடையைப் போல இருக்கின்றன என்கின்றனர். மேகங்கள் படிகின்ற மலையிலே தோன்றிய மிளகு, சந்தனம், வெண்ணெய்க்காகக் கடையும் தயிரைப் போன்ற நுரை இன்னும் பல பண்டங்கள் வைகை வெள்ளம் தன் இருகரைகளிலும் குவித்துக் கொண்டு ஓடுகின்றது என்பதை

கரையே

கைவண் தோன்றல் ஈகை போனம் என

மைபடு சிலம்பிற் கறியொடும் சாந்தொடும்

நெய்குடை தயிரின் நுரையொடும், பிறவொடும்

எவ்வயினானும் மீது மீது அழியும் [81]

என்கிறது. மேலும் அகப்பொருளோடு பக்திப்பொருளைத் தொடர்புபடுத்திப் பாடுவது பரிபாடலின் மற்றுமொரு சிறப்பு, சான்றாக 14-ஆம் பாடலில் பருவம் கண்டறிந்த தலைமகள் முருகவேளைப் பரவுவாளாய் இப்பருவத்தே தலைமகன் வருமென்பது படத்தோழி வற்புறுத்தியது என்ற துறைக்குறிப்பைக் காட்டலாம். அகப்பொருளை உணராதவர்கள் தமிழை உணராதவர்கள் இறைவனை உணராதவர்கள் என்று தமிழை அகமரபோடும் சமய மரபோடும் இணைத்துக் காணும் திறம் பரிபாடலில் போற்றுதற்குரியது.

நான்மறை விரித்து நல்லிசை விளிக்கும்

வாய்மொழிப் புலவீர்! கேண்மின் சிறந்தது!

காதற்காலம் காமத்துச் சிறந்தது!

விருப்போர் ஒத்து மெய்யுறுபுணர்ச்சி

புலத்தலில் சிறந்தது கற்பே;

இத்தள்ளாப் பொருள் இயல்பின் தண்தமிழ் ஆய்வந்திலார்

கொள்ளார் இக் குன்று பயன் [82]

இவ்வாறு வாழ்வியலோடு சமயத்தையும், புராணத்தையும் இணைத்து மக்களின் வாழ்க்கைக்கு என்றென்றும் பயன்படும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

கலித்தொகை

கலித்தொகை எட்டுத் தொகை நூல்களில் ஆறாவதாக அமைந்துள்ளது. கலித்தொகை என்னும் சொல்லுக்குக் கலிப்பாடல்களின் தொகுதி என்று பொருள், கலி என்னும் சொல் களிப்பு, களிப்பின்செருக்கு, பெருக்கு, ஆரவாரம் என எழுச்சி நிலைகளை உணர்த்துகிறது. கலிப்பாவிற்கு உரிய ஓசை துள்ளலோசை, துள்ளல் என்பதை ஆரவாரம் அல்லது எழுச்சி என்று பொருள் கொள்ளுவர். இந்நூல் **கற்றிந்தார் ஏத்தும் கலி** என்றும் கல்வியாளர் **கண்ட கலி** என்றும் போற்றப்படும் சிறப்புடையது. எட்டுத்தொகையில் யாப்பு வகையில் பெயரமைந்தவை பரிபாடலும் கலித்தொகையும் ஆகும். கலியாப்பு, பிறயாப்பு முறைகளின்றும் வேறுபட்டது. அகப் பாடல்களைப் பாடுவதற்குக் கலிப்பாவே சிறந்தது என்பது தொல்காப்பியரின் கருத்து. கலிப்பா என்பது உரையாடாமல் கலந்த நாடகப்பாடல் போல அமைவது. ஒருவர் வினாத்தொடுக்க மற்றவர் பதிலளிக்க வினாவும் விடையுமாக அமைவது இப்பாடல்களின் இயல்பு.

இப்பாடல்களில் ஒன்றற்கு மேற்பட்ட மாந்தர்கள் இடம் பெறுவதாலும் கூற்று முறையில் அமைந்திருப்பதாலும், இவற்றை நாடகப்பண்புகளை மிகுதியாகக் கொண்ட பாடல்கள் என்பர்.கிரேக்க இலக்கியத்தில் காணப்படும் குழுப்பாடல்களைப் போன்ற அமைப்புடையான கலித்தொகைப்பாடல்கள், கலித்தொகை வாழ்க்கை உண்மைகள் பலவற்றை எடுத்துச் சொல்வதில் பிற அகப்பாடல்களை மிஞ்சி நிற்கிறது.

ஆற்றல் என்பது ஒன்று அலந்தவர்க்கு – உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அறிவெனப்படுவது போதையர் சொல்நோன்றல்

செறிவெனப்படுவது கூறியது மறாஅமை

நிறையெனப்படுவது மறைபிறர் அறியாமை

முறையெனப் படுவது கண்ணாடாது ஊர்வெளவல்

பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் [83]

இவ்வாறு நறுக்குத் தெறித்தாற்போன்ற சொல் விளக்கங்களும் பண்பு விளக்கங்களும் கலித் தொகையில் இடம் பெற்றுள்ளன.

எட்டுத்தொகை நூல்களுள் பாடல்களால் சிதைவும் குறைவுமின்றி நிறைவுடன் இன்றளவும் கிடைப்பன கலித்தொகையும், அகநானூறும் ஆகும். அவற்றுள் கலித்தொகை கடவுள் வாழ்த்தினைச் சேர்த்து நூற்றைம்பது பாடல்களைக் கொண்டது. இத்தொகைநூல் தமிழ் இலக்கிய மரபில் வந்த கடைசி காலப்பாடல்களைக் கொண்டது. இந்நூல் பதினொறு அடிகள் முதல் எண்பது அடிகள் வரை உள்ளன.

திணை	**பாடல்கள்**	**பாடியவர்கள்**
கடவுள் வாழ்த்து	1	ஆசிரியர் நல்லந்துவனார்
பாலை	35	பாலைபாடியபெருங்கடுங்கோ
குறிஞ்சி	29	கபிலர்
மருதம்	35	மருதன் இளநாகனார்
முல்லை	17	சோழன் நல்லுருத்திரன்
நெய்தல்	33	நல்லந்துவனார்
மொத்தம்	150	

இவ்வாறு ஐந்திணைகள் பற்றிய நூற்றைம்பது பாடல்களைக் கொண்டு பாடல்களின் எண்ணிக்கை தெளிவாகக் கூறப்பட்டுள்ளமையால் கலித்தொகை சிதைவின்றிக் கிடைத்துள்ளது. இந்நூல் அன்பின் ஐந்திணையுடன் ஒத்த அன்பில்லாத மக்களின் உறவு பற்றிய கைக்கிளை, பெருந்திணை பற்றிக் கூறுகிறது.

காமஞ்சாலா இளமையோள்வயின்
ஏமம்மசாலா இடும்பை எய்தி
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே [84]

என்கிறது.தொல்காப்பியர் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் கூறுகின்ற உரிப் பொருண்மைகள் கலித்தொகைப்பாடல்களில் காணப்படுகின்றன. கலித்தொகைப் பாடல்களில் பாலைத்திணை முதலில் வைத்து பாடப்பெறுவது சிறப்புடையது. மற்றத்தொகை நூல்களில் பிரிவை உணர்த்தும் பாலை முதலில் இடம் பெறவில்லை, பாலைத்திணை நான்கு நிலத்திற்கும் பொதுவாக அமைந்துள்ளதால் முன்னர்க் குறிப்பின் சிறப்பினை உடைய குறிஞ்சி முதலிய பிற திணைகள் பின்னர்க் கூறப் பட்டுள்ளன.

போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமளி ஊடல் அணி மருதம் நோக்கொன்று
இல்லிருத்தலின் முல்லை கிரங்கிய போக்கோர் நெய்தல்
புல்லுங் கலிமுறைக் கோப்பு [85]

என்னும் வெண்பாவினால் பிரிவை உணர்த்தும் பாலை முதலிலும் புணர்தலை உணர்த்தும் குறிஞ்சி இரண்டாவதாகவும், ஊடலினை உணர்த்தும் மருதம் மூன்றாவதாகவும், இல்லறத்திணை பாடலின் இறுதியில் துறைக்குறிப்புப் பகுதி உள்ளது, இது தொல்காப்பிய அகத்துறைகளுக்கு விளக்கம் தரும் பகுதிகளாகவும் விரிவாகவும் உள்ளது.

தமர் வரைவு மறுத்துழித் தோழி தாயர்க்கு
அறத்தொடு நிற்ப அவனட நற்றாய்க்கு

அறத்தொடுநிற்ப அவன் தன்னையர்

முதலியோர்க்கு அறத்தொடு நிற்ப

அவரும் ஒருவாற்றான் நிற்ப

தோழி தலைவனுக்குக் கூறத் தானும்

அவளும் வரைவு கடிதின் முடிதற்

பொருட்டு வரையுறை தெய்வத்திற்குக்

குரவையிட அவன் வரைய வருகின்றமை

தலைவர்க்கு உரைத்தது [86]

என்ற நீண்ட துறை விளக்கப்பகுதி கலித்தொகை 39-ஆம் பாடலுக்கு எழுதப்பெற்றது. இவ்வாறே பிற கலித்தொகைப் பாடல்களும் விரிவானதுறை விளக்கங்களைப் பெற்றுள்ளன. பிற அகப்பாடல்களில் **அறத்தொடு நிற்றல்** என்று மட்டுமே குறிப்பிடப் படும் இத்துறை அதன் ஆழமும், அகலமும் புலப்படுமாறு கலித்தொகையில் விளக்கம் பெற்றுள்ளன.

கலித்தொகைப் பாடல்கள் வாழ்க்கை உண்மைகள் பலவற்றை எடுத்துக் காட்டுகிறது. இந்நூல் அக்காலத்தில் ஐந்துவகை நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறைகளைப் பழக்க வழக்கங்களை, எண்ணங்களை, எழுச்சிகளை, நம்பிக்கைகளைப் பண்டைத்தமிழர் தம் தொன்மைத்திறத்தைக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகிறது. சரியான வழியில் சேர்க்கப்படாத செல்வம் நிலைத்து நிற்காமல் இம்மைக்கும் மறுமைக்கும் பகையாகும் என்பதை.

செம்மையின் இகந்து ஓரி இப்பொருள் செய்வார்க்கு அப்பொருள்

இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ [87]

என்ற அடிகள் உணர்த்துகின்றன. உலர்ந்து போன மரங்களையுடைய பாலை வனத்தைப்போன்று குடிமக்கள் துன்புற அறமற்றவழியில் அவர்களின் பொருட்களைக் கொள்ளையடித்தும் கொலைக்கஞ்சாமல் கொடுங்கோலாட்சி புரியும் மன்னது நாடு பாழாகும் என்பதை,

அலவுற்றுக் குடி கூவ இன்றிப்பொருள் வெட்கிக்

கோலை அஞ்சா வினைவரால் கோல் கொடியின் நிழல்

உலகு போல உலறிய உயர்மா வெஞ்சும் [88]

என்கிறது. மேலும் அகச்செய்திகளான தலைவனுக்குத் தலைவியும், தலைவிக்குத் தலைவனும் எவ்வளவு இன்றியமையாதவர்கள் என்பதையும் தலைவன் தலைவி உறவு எப்படிப்பட்டது என்பதையும் சிறப்பாகக் கலித்தொகைப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. மலையில் சந்தனம் பிறக்கிறது; அதனால் சந்தனத்திற்கு என்ன பயன்? சந்தனம் யாரோ ஒருவருடைய மார்பில் அல்லவா கமழ்கிறது. முத்துகடலில் பிறக்கிறது; அதனால் கடலுக்கு என்ன பயன்? அது யாரோ ஒருவருடைய கழுத்தில் அல்லவா தவழ்கிறது! யாழில் இசை பிறக்கிறது, அதனால் யாழ்க்கு என்ன பயன்? அது இசைப்புலவர்க்கு அல்லவா இன்பத்தைத்தருகிறது. அது போலவே உன்னிடத்தில் பிறந்தவள் தான் உன் மகள். ஆனால் அவள் உனக்கு எந்த வகையில் பயனுடையவள் ஆவாள். அவள் தலைவனுடன் இணையப் போவதுதான் இயற்கை. எனவே வருந்தாதே என்று தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியைத் தேடிச் செல்லும் தாய்க்கு வழியிடைச் செல்வோர் அறிவுரை கூறினார்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை

மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என் செய்யும்?

நினையுங்கால் நும்மகன் நுமக்குமாங்கு அனையளே

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை

நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?

தேருங்கால் நும்மகள் நமக்குமாங்கு அணையளே!

ஏழ்புணர் இன்னிசை முதல்பவர்க்கு அல்லதை

யாழுளே பிறப்பினும் யாழ்க்கனவதாம் என் செய்யும்

சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே! [89]

என்கிறது. இவ்வாறு உயர்ந்த அறிவுரைகளையும், பெண்ணின் முன்பாதி, பின்பாதி வாழ்வியலையும் அற்புதமாகக் கூறுகிறது இந்நூல், கலித்தொகையில் அரியக் கருத்துக்களின் நுழைவு பல பாடல்களில் காணப்படுகின்றன. ஆரியக்கதைகள்

தமிழ்க்கடவுள்களைப் பற்றிக் கூறப்பட்டன. சமயங்களுக்கு இடையிலான சமரச உணர்வு உச்சநிலையை அடைந்தது. ஆரியப்பழக்கவழக்கங்களும் தமிழ்ப்பழக்க வழக்கங்களோடு கலந்தன. மதுரைநாடு ஒருவகை அரசியல் அமைதியின்மைக்கு ஆளாகியிருந்தது. களப்பிரர்களும் பாண்டியர்களும் ஆட்சி உரிமை காணப்போராடிக் கொண்டிருந்தனர். அதனால் புலவர்களைப் பேணும் புரவலர்களாம் அரசர்களின் பெயர் கூறிப் பாராட்டும் பழைய பாடல்கள்போல் அல்லாமல் கலித்தொகை பாண்டிய அரசர்களைப் பெயர் சுட்டாமல் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் கலித் தொகையின் பாடல்கள் அனைத்தும் கி.பி.ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என அறியப்படுகிறது.

அகநானூறு

காதல் உலகத்தில் நிகழும் மிக நுட்பமான காட்சிகளைச் சொல்லோவியமாகக் காட்டும் பாடல்களைக் கொண்ட தொகைநூல் அகநானூறு. ஒத்த அன்பால் ஒருவனும், ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப்பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாத தாய்யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுருவதோர் பொருளாகலின் அதனை அகம் என்கிறார் நச்சினார்க்கினியர். அகம் காதல் வாழ்வில் ஏற்படும் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், இவற்றை விவரித்துக் கூறுகிறது. **அகம்** என்ற சொல்லுக்கு மனம், வீடு, உள்ளிடம், காமஇன்பம், ஆகாயம், உலகம், எண்ணம், அகப்பொருள், மருதம், ஆன்மா எனப்பல பொருள்கள் உள்ளன. அகம் என்பது அகப்பொருளை குறிப்பதோடு வீட்டு வாழ்க்கையைப் பற்றியும் பேசுகிறது. அகத்திணையை முழுமையான அளவில் விளக்கும் பாடல்களைக் கொண்டமையால் அகம் எனவும் அகப்பாட்டு எனவும் கூறுவர். அகம்பற்றிக் கூறும் நானூறு பாடல்களைக் கொண்டதால் அகநானூறு என்று பெயர் பெற்றது. நீண்ட அடிகளையுடைய பாடல்களைக் கொண்டதால் இந்நூல் நெடுந்தொகை என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூலின் பெரும்பான்மையான பாடல்களில் அகப்பொருளின் மூலக்கூறுகளாகிய முதல், கரு, உரிப்பொருள் பற்றிய செய்திகள் அழகுறக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் அகப்பொருளின் நயத்தை உணர்த்துவதோடு பண்டைத்தமிழக வரலாற்றுச் செய்திகளையும் அறிய உதவுகிறது.

பல்புகழ் நிறைந்த வேல்போர் வேந்தர்

சீர்மிகு பாடலிக் குழிஇக்

நீர் முதல் கரந்த நீதியங் கொல்லோ [90]

இந்நூல் நானூறு நீண்ட அகவற்பாக்களான இயற்றப்பட்ட தொகைநூல், இவை பதின்மூன்று அடிச்சிற்றெல்லையும் முப்பத்தொரு அடிப்பேரெல்லையும் கொண்டுள்ளது. அகத்துறை அமைந்த நானூறு பாடல்களும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன அவை,

களிற்றியானநிரை (1 -120)
மணிமிடைப்பவளம் (121-300)
நித்திலக்கோவை (301-400)

எனத் தொகுக்கப்பட்டுள்ளது. அவற்றால் களிற்றியானை நிரை கம்பீரமாக அசைந்து செல்லும் ஆண்யானைகளைப் போல் சொல்வளத்தைப் பெற்றுள்ளது. மணிமிடைப்பவளம் மாணிக்கம் போன்ற சொற்களும், பவளம் போன்ற மொழிகளும் கலந்த பாடல்களைக் குறிக்கிறது. நித்திலக்கோவை முத்துப்போன்ற ஒரே வகையான சொற்களால் அமைந்த பாடல்களைக் கொண்டுள்ளது. இக்கூற்றுக்களை ஆராயும்போது இந்நூலின் அமைப்பு அணிகலனைக் குறித்து வந்த பெயரே எனத்தெரிகிறது. ஐந்திணை கூறும் இந்நூல்களின் பாடல்களைத் தொகுத்து உருத்திரசன்மனார் ஓர் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றித் தொகுத்துள்ளார். அவை

திணை	**எண்**	**பாடல்கள்**
பாலை	1,3,5.7,9	200
குறிஞ்சி	2,8,12,18	80
முல்லை	4,14,2,32	40
மருதம்	6,16,26,36	40
நெய்தல்	10,20,30	40

இம்முறையினால் அகநானூற்றுப் பாடல்களில் எண்களைக்கொண்டு பாடல்களின் திணையை அறியமுடிகிறது.

இந்நூலில் உள்ள 400 பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 145 அதனைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர். இவர் இறையனார் அகப் பொருளுக்கு நக்கீரனார் செய்த உரையே சிறந்த உரையென்று தீர்ப்புக் கூறியவர். இவர் முருகனுடைய அவதாரம். ஊமை ஐந்து வயதிலேயே நுண்ணறிவுப் படைத்த அருந்தமிழ்ப் புலவராய் விளங்கினார். ஊமையாயினும் காது கேட்கும் இறையனார் அகப்பொருளுக்குப் பல புலவர்கள் உரையெழுதியிருந்தனர்.

அவர்கள் உரை ஒவ்வொன்றையும் படித்துக்காட்டும் போது நக்கீரர் உரைக்குத்தான் தலையசைத்துப் புன்முறுவல் காட்டினாராம். இவ்வாறு இவரைப்பற்றிய வரலாறு ஒன்று வழங்குகின்றது. உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன் இந்நூலைத் தொகுக்கும்படி செய்தவன் இவன் கடைச்சங்கத்தைக் காப்பாற்றி வந்தவன். இவனும் சிறந்த தமிழ்ப்புலவன். அகநானூற்றின் இருபத்தாறாவது பாடல் இவன் பெயரில் உள்ளது. புலவர்கள் ஒருவர்பால் மற்றொருவர் கொண்ட மதிப்பினை இந்நூலில் காணமுடிகிறது இந்நூலில் ஊட்டியார், நோய்பாடியார் என்ற சொற்றொடரால் பெயர் பெற்ற புலவர்கள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

ஊட்டி யன்ன ஒண்தளிச் செயலை

ஓங்கு சினைத் தொடுத்த ஊசல் [91]

என்ற சொற்றொடரால் சிறப்புப்பெயர் பெற்றிருக்கிறார்.

இந்நூல் ஐவகை நிலங்களின் இயற்கை வனப்பை வர்ணிப்பதுடன் அப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலைமைகளை வர்ணிக்கிறது. பண்டைத்தமிழர் தம் வாழ்க்கைமுறைகளையும், பண்பாட்டினையும் விளக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. சான்றாகப் பண்டைக்காலத்தில் திருமணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை 86 ஆம் பாடலில் சுவைபடக் கூறுகிறது. முழவும், முரசும் முழங்கத் திருமணத்தின் முதல் நிகழ்ச்சியாக இறைச்சி கலந்த வெண்சோற்றை விருந்தாக வழங்குவர். மணப்பந்தலின் கீழ் வெண்மணல் பரப்பி விளக்கேற்றுவர். மணமகளை நீராட்ட முது பெண்டிர்கள் நீர்க்குடங்களைக் கொண்டுவருவர். மக்களைப் பெற்ற வாழ்வரசியார் நால்வர் அதில் மலரும், நெல்லும் தூவி மணமகளைக் கற்பு நெறிவழுவாது கடமை ஆற்றிக் கணவன் விரும்பும் மனைக்கிழத்தி ஆகுக என்று வாழ்த்தி மணநீராட்டுவர். மண நீராடிய

தலைவிக்குத் தம்தூய ஆடைகளையும், அணிகளையும் அணிவிப்பர், திங்கள் உரோகிணியைக் கூடிய நல்லோரையில் மணமேடையை அலங்கரிப்பர். பின்னர் இறைவழிபாடு நடத்துவர். வாகையிலையோடு அறுகின் கிழங்கும் சேர்த்துக் கட்டப் பெற்ற வெண்நூலைத் தலைவிக்குக் காப்பாகச் சுட்டுவர் என்பதை,

உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப, நிரைகால்
மடம்கெண் மழைஇய நோக்கின்
ஒடுங்குரர் ஓதிமாஅ யோளே [92]

என்ற பாடல் உணர்த்துகிறது. மேலும் இந்நூல் வாழ்வின் பல நிகழ்ச்சிகளை இன்றளவும் நடைபெறுபவையாகக் கூறப்பட்டுள்ளது. இக்காலத்தைப் போன்றே மக்களின் மத்தியில் நடைபெறும் வாக்கெடுப்பைப் போன்று பண்டைக்காலத்திலும் வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது. இதனைக் குடவோலைமுறை என்ற குறிப்பிடுகின்றனர்

கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்டுமார்
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின் [93]

என்ற பாடல் குறிப்பிடுகிறது. மேலும் இந்நூலில் வாணிபத்தொடர்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும் [94]

மிளகு பெறுவதற்காக யவனர்கள் நம் நாட்டோடு தொடர்புகொண்டிருந்தது. இந்நூலில் இடம் பெற்றுள்ளது. வரலாற்றுச் செய்திகளோடு புராணச்செய்திகளும் இடம்பெற்று இந்நூலைச் சிறப்பிக்கிறது.

வென்வேல் கவுரியர் தொன்முது கோடி
முழங்கு இரும்பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்க அவிழ்த்த
பல்வீழ் ஆலம் [95]

இப்பாடல் இராமன் இலங்கைக்கும் போகும்போது தனுஷ்கோடியில் ஒரு ஆலமரத்தின் கீழ் தங்கினான். வானர வீரர்களுடன் அமர்ந்து இலங்கையைப் பற்றியச் செய்திகளை ஆலோசித்துக் கொண்டிருந்தான். அப்போது அவ்வாலமரத்தின் மேலிருந்து பறவைகள் கூச்சலிட்டன. அந்தக் கூச்சலை அடக்கியபின் ஆலோசனை புரிந்தான். இராமாயணக்கதை தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்தது அகப்பாடல்கள்.

முதியப் பேணிய உதியஞ்சேரல்

பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை [96]

தம் முன்னோரின் வீரத்தையும், கொடையையும் பேணிப்பாதுகாத்த உதியஞ்சேரலாதன் பாரத யுத்தத்திலே இருபக்கத்துப் படைகளுக்கும் நிறைய சோறு போட்டதை இப்பாடல் குறக்கிறது. இந்நூலில் பண்டைய மக்களின் பழக்க, வழக்கங்கள், நம்பிக்கைகள், தொழில், உணவு, உடை, திருமணமுறை, பறவை, விலங்குகள், செடிகொடிகள் போன்ற செய்திகளும் மற்றும் வரலாற்றுக் குறிப்புகளும் காணப்படுகின்றன. இந்நூலில் மற்றொரு சிறப்பு ஒரே பாடலில் இருவேறு வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் காலம் கடைச்சங்ககாலம் என்பர். கிரேக்க மன்னன் மாவீரன் அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்தான். அப்போது மகதநாட்டை நந்தர் ஆண்டனர்.

அவர்களின் தலைநகரம் பாடலிபுத்திரம் படை யெடுப்பைக் கண்டு அஞ்சிய நந்தர் தம் பொன்னையும், மணியையும் பாதுகாக்க முற்பட்டனர். வலிய பெட்டி ஒன்றைச் செய்து அதில் ஆபரணங்களை வைத்துப் பூட்டி பாடலி புத்திரத்தின் அருகே ஓடும் கங்கையாற்றின் நீர்ப்போக்கை இரண்டாகப் பிரித்து ஆற்றின் அடியில் அறையொன்று அமைத்து அதில் அப்பேழையை வைத்து நீர்ப்புகாதவாறு மூடினர். பின் ஆற்றுநீர் முன்போலவே செல்லுமாறு விடுத்தனர். இச்செய்தியை அகநானூற்றுப் பாடல் கூறுகிறது. பொருள்தேடச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்ப வில்லை. பிரிவாற்றாமையினால் வருந்தும் தலைவி மேற்குறித்த செல் வத்தையே தலைவன் நாடிச் சென்றுள்ளானோ என ஐயமுடன் தோழியிடம் வினவுகின்றாள்.

பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்

சீர்மிகு பாடலில் குழிஇக் கங்கை

நீர் முதல் கரந்த நிதியங் கொல்லோ [97]

என்கிறாள். மேலும் மௌரியர் காலத்தை ஓட்டிச் சங்கஇலக்கியம் தோன்றின என்பதற்கு உமட்டுக்கிழார் மகனார் பரங்கொற்றனாரின் பாலைப்பாடல் சான்றாக அமைந்துள்ளது.

விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்

பொன்புனை திகரி திரிதாக்குறைந்த

அறை இறந்து அகன்றனர் ஆயினும் எனையாது உம் நீடலர் [98]

என்னும் பாடலில் மௌரியர் பாறைகளை உடைத்துத் தேர்செல்ல வழியினை உருவாக்கினர் என்னும் குறிப்பு உள்ளது. இப்பாடல்களின் வழி அகநானூற்றுப் பாடல்கள் இக்காலக் கட்டத்திலேயே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

புறநானூறு

புறநானூறு புறப்பொருள் பற்றிப் பேசும் நானூறு பாடல்களைக் கொண்டமைந்துள்ளது. பண்டைத்தமிழர் தம் புறஒழுக்கம் பற்றிக் கூறும் பாடல்கள் அடங்கிய தொகுப்பாதலின் இந்நூலுக்குப் புறநானூறு என்று பெயர். **புறம்** என்ற சொல்லுக்கு, வெளியிடம், அன்னியம், வீரம், பின்புறம், இடம் எனப் பலபொருள் சுட்டப்படுகிறது. இந்நூலுக்குப் புறம், புறப்பாட்டு, புறம்பு என்ற பெயர்கள் உள்ளன. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு இலக்கிய வகைகளை அகம், புறம் என்பது நாட்டு வாழ்க்கையையும் குறிக்கும். புறம் என்பது கண்ணால் பார்க்கவும், வாயினால் பேசவும் வெளிப்படையாக நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறது. மேலை நாட்டிலிருந்து கிறித்தவ சமயத்தைப் பரப்பவந்த ஜி.யு.போப் அவர்களின் நெஞ்சைக் கவர்ந்த இலக்கியங்களுள் ஒன்று புறம், இந்நூலின் சிறப்பினை உணர்ந்த அவர் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்கள் பலவற்றைத் தன்னுள் கொண்டுள்ளது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

உண்பது நாழி உடுப்பவை இரண்டு

செல்வத்தின் பயன் ஈதல்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

இப்பாடல்கள் உலக மக்களுக்குப் பொதுநிலையில் பல வாழ்க்கை உண்மைகளை எடுத்துரைக்கிறது.

இந்நூல் நானூறு வெண்பாக்களைக் கொண்டு நான்கு அடிச்சிறுமையும் 40 அடிப்பேரெல்லையும் கொண்டு புறப்பொருள் கருத்துக்களைத் தழுவி அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்தைச் சேர்த்து மொத்தம் 398 பாடல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் மூன்று அழிந்துவிட்டது. 42 பாடல்களுக்குப் பல வரிகள் அழிந்தன. இடையிடையே சில சொற்கள் சிதையாமல் கிடைக்கும் மொத்தப் பாடல்கள் 358 மட்டுமே. முழுமையாக கிடைத்துள்ள பாட்டுக்கள் 352, சில பகுதிகள் இல்லாத பாட்டுக்கள்45. முற்றும் கிடைக்காத பாட்டுக்கள் 2, கடவுள் வாழ்த்து 1 இதன் திணை துறைகள் பிற்காலத்தன. அவற்றில் 11 திணைகளுக்கு உரிய பாடல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

வ.எண்.	**திணை**	**பாடல்கள்**
01	வெட்சி	5
02	கரந்தை	12
03	வஞ்சி	12
04	காஞ்சி	31
05	நொச்சி	6
06	தும்பை	27
07	வாகை	77
08	பாடாண்	143
09	பொதுவியல்	70
10	கைக்கிளை	3
11	பெருந்திணை	5

இவற்றில் 244, 282, 289, 323, 355, 361 ஆகிய 6 பாடல்களுக்குத் திணைப்பெயர்கள் அறிய முடியவில்லை. சில பாடல்களுக்கு இரு திணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலின் பல பாடல்கள் வேந்தர்களைப் பற்றியும் குறுநில மன்னர்களைப் பற்றியும் பாடப்பட்டுள்ளன. அவற்றில் 138 பாடல்கள் 43 வேந்தர்களைப் பற்றியும் 141 பாடல்களில் 48 பாடல்கள் குறுநில மன்னர்களைப் பற்றியும் 119 பாடல்களுக்குப் பாடப்பட்டவர்களின் பெயர் தெரியவில்லை. இவற்றில் 138 பாடல்கள் மூவேந்தர் பற்றிப் பாடப்பட்டுள்ளன.

வ.எண்	வேந்தர்கள்	பாடல்கள்
01	சேரர்	27
02	சோழர்	74
03	பாண்டியர்	37

மேலும் 141 பாடல்களில் 48 குறுநிலமன்னர்கள் பற்றிப் பாடியுள்ளார்.

வ.எண்	குறுநில மன்னர்கள்	பாடல்கள்
1	அதியமான் நெடுமானஞ்சி	23
02	வேள்பாரி	17
03	ஆய் அண்டிரன்	14
04	பேகன்	7
05	குமணன்	7
06	காரி	6
07	நாஞ்சில் வள்ளுவன்	5
08	பிட்டங் கொற்றன்	5
09	எழினி	4

இவற்றைத் தவிர 29 குறுநிலமன்னர்கள் ஒவ்வொரு பாடலிலும் 6 குறுநில மன்னர்கள் இரண்டிரண்டு பாடல்களிலும் 4 குறுநிலமன்னர்கள் மூம்மூன்று பாடல்களிலும் பாடப் பட்டுள்ளனர். இவர்களின் பாடப்பட்டவர் பெயர் தெரியவில்லை. பாடப் பட்டவர்களின் பெயர் தெரியாமல் அமைந்துள்ள பாடல்கள் தாபதநிலை முதல் மறக் காஞ்சி ஈறாக மூன்று துறைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நூலை 157 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களில் 15 பெண்பாற்புலவர்கள் 14 ஆண்பாற் புலவர்கள். இவர்களில் 76 புலவர்கள் இந்நூலின் இறுதியில் பாடினோர். பாடப்பட்டோர், பாடப்பட்ட சூழல் போன்ற பல குறிப்புகள் காணப்படுகின்றன. புரவலனை விட புலவனே போற்றப்பட்ட உண்மையினை அவனை அவர் பாடியது என்று அரசனை

அவன் என்றும் புலவரை அவர் என்றும் குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது. மேலும் புலவர்களில் கபிலர், பரணர் போன்றோர் இயற்பெயரோடு விளங்கினாலும் எஞ்சிய புலவர்கள் ஊராலும், உறுப்பாலும், தொழிலாலும், மரபாலும் பெயர் பெற்றுள்ளனர். அகப்பாடல்களைப் போல் இரும்பிடத்தலையார்,கொடித் தலைவிழுத் தண்டினார் போன்றோர் தாம் பாடிய பாடல்களினால் பெயர் பெற்றனர்.

இரும் பிடாத்தலை இருந்து

கருங்கை உள்வாள் பெரும்பெயர்வழுதி [99]

என்கிறது. அரசர்க்கு நீதி பல புகட்டி உலகில் நீதிகாத்தப்புலவர்களில் இவரும் ஒருவர். இவர் பாண்டிய மன்னன் ஒருவனிடம் வாக்குத்தவறாத நாணயம் உடையவான அவன் வாழ வேண்டும் என்பதை,

நிலம் பெயரினும் நின்சொல் பெயரல் [100]

என்று அறிவுரை கூறுகிறார். போரின் போது அறமுறை பிறழாமல் போர்முறைகளைக் கைக்கொள்ளுமாறு புலவர்கள் துணிவுடன் எடுத்துக்கூறிய நிகழ்ச்சிகள் பலவற்றை இந்நூல் காட்டுகிறது. அவற்றல் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கும் அவன் பகைவன் மலையமானுக்கும் போர் மூண்டது. போரில் மலையமான் மாண்டான். ஆயினும் கிள்ளி வளவனின் சினம் தணியவில்லை. போரில் உயிர் பிழைத்த மலையமானின் சிறுபிள்ளைகள் இருவரை யானையின் காலால் மிதிக்க உத்தரவிட்டான். யானை வந்தது சிறுவர்கள் அழுவதை மறந்து தமக்கு எதிரே நிற்கும் யானையைப் பார்த்துச் சிரித்தனர். இந்நிகழ்ச்சி புலவர்கள் கோவூர்கிழார் உள்ளத்தை உருக்கியது. இதன் வாயிலாக அவர் கிள்ளிவளவனுக்கு அறம் உணர்த்தினார். கிள்ளிவளவனின் முன்னோர் பெருமைகளை அறிவுறுத்தி அதன் வாயிலாக இந்தப் பிள்ளைகளை விடுவிக்க எண்ணினார்.

கிள்ளிவளவனே உன் முன்னோனாகிய சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறா தன்னைத் தஞ்சம் அடைந்தது என்ற காரணத்திற்காகத் தன்னையே தராசுத்தட்டில் ஏற்றியவன் அப்படிப்பட்ட மரபில் வந்த நீ இந்தச் செயலை செய்யலாமா. இதோபார் இந்தச் சிறுவர்கள் அழுவதைக் கூட மறந்து யானையைப் பார்த்துச் சிரிக்கிறார்கள், இவர்களைக் கொல்லுவது அறமாகுமா, நீ விரும்புவதைச் செய்வாயாக என்று அவனைத் திருந்துமாறு அறிவுரை கூறினார், இம்மையில் நன்மை செய்தால் மறுமையில் பேறு கிடைக்கும் என்பதற்காகப் பயன்கருதி அறக்காரியங்களைச் செய்ய

சொல்லவில்லை. அவற்றின் சிறப்பை உணர்த்தி உரையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஆய் ஆண்டிரன் ஆகியோர் அறம்செய்யத் தூண்டினர்.இதனை

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்கு பட்டான் றவன்கைவனண்மையே [101]

என்கிறது.மேலும்,

- அரசர்களது புதல்வர்கள் ஆட்சியுரிமை வேண்டித் தம் தந்தையை எதிர்த்து நின்ற போதும்
- ஒரு குடியைச் சேர்ந்த இருவர் அரசுரிமைக்காகப் போரிட முனைந்த போதும்
- அண்ணன் அரசுரிமையைத் தம்பி பறித்துக் கொண்டபோதும் என்கிறது புறநானூறு.

இவ்வாறு பல்வேறு சூழல்களில் புலவர் பெருமக்கள் நீதியினை எடுத்துக் கூறி அறத்தை நிலைநாட்டியுள்ளார். மேலும் புலவர்கள் மன்னர்களிடம் தங்கக்கு இருந்து நட்பின் உரிமையில் அவர்களை இடித்துரைத்து நல்வழிப்படுத்தினர். புலவர்கள் தங்கள் பாடல்களில் பிற புலவரைக் குறித்துப் பாடியிருக்கின்றனர்.

வ.எண்	**பாடிய புலவர்**	**பாடப்பட்டபுலவர்**	**பாட்டு எண்**
01	ஔவையார்	பரணர்	99
02	கண்ணகனார்	பிசிராந்தையார்	218
03	கபிலர் கழாத்தலையார்	பாரிமகளிர்	202
04	கோப்பெருஞ்சோழன்	பிசிராந்தையார்	215
05	கோவூர்க்கிழார்	இளந்தத்தன்	47
06	பாண்டியன் நெடுஞ்செழியன்	மாங்குடிமருதனார்	72
07	பிசிராந்தையார்	அறிவுடைநம்பி	184

08	பெருஞ்சித்தனார்	மோசிகீரனார்	158
09	பேய்மகள்இளவெயினி சேரமான்	பாலைபாடிய பெருங்கடுங்கோ	11
10	பேரலவாயர் பூதபாண்டியன்தேவி	பெருங்கோப்பெண்டு	247
11	பொத்தியார்	பிசிராந்தையார்	127
12	பொருந்தில் இளங்கீரனார்	கபிலர்	53
13	மாறோக்கத்து நப்பசலையார்	கபிலர்	174

புலவர் பெருமக்கள் மட்டுமல்லாது அரசர்களும் அரசமாதேவியரும் வள்ளல் களும் படைத்தலைவர்களும் எவ்வாறு சமுதாயத்தின் பலதரப்பட்ட குடியினரும் பாடிய பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் கி.மு.1000க்கும் கி.பி.250க்கும் இடைப்பட்ட நீண்டகாலப் பரப்பில் பாடப்பட்ட இலக்கியமாகப் புறநானூற்றை இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார்.

உலகத்தோடு ஒட்டி வாழக்கூடிய வாழ்வியல் உண்மைகளை அக்கால மக்களின் அரசியல் சமுதாயநிலை, கல்வி, நாகரிகம், கலைவளர்ச்சி, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்கவழக்கங்கள், வாணிபம் ஆகியவற்றோடு ஒப்பிட்டு அறிய உதவும். இலக்கியம் பேழையாக இந்நூல் திகழ்கின்றது. நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்கு முதன்மையானவன் மன்னன்தான் அதனால் மக்கள்,

நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான் உயிர் என்பது அறிக்கை
வேல் மிக தானை வேந்தர்க்குக்கடனே [102]

என்கிறது. மன்னன்முறை அறிந்து வரிவசூலித்தால் அவன் நாடும் மக்களும் பயன்பெறுவர். அதிகமாக வரிவசூலித்தால் யானைப்புக்க நிலம்போல நாடும், மக்களும் கெடுவர் என்பதை,

காய் நெல் அறுத்தக் கவளம் கொளினே

மா நிறைவு இல்லதும் பன்னாட்டு ஆகும்

நூறு செறுவாயினும் தமிந்துப்புக்கு உணினே

வாய்புகு அதனினும் கால் பெரிது கெடுக்கும்

யானை புக்க நிலம்போலத்

தானும் உண்ணான் உலகமும் கெடுமே [103]

என்று விளைந்த நெல்லைச் சேதமில்லாமல் அறுத்துக் கவளம் கவளமாய் உண்டால் குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லும் பல நாட்களுக்கு உணவாகும். நூறுவயல்களில் நெல் நன்றாக விளைந்தாலும், ஒரு யானை அவ்வயலின் தனியாக இறங்கி அந்த நெல்லை உண்ணத் தொடங்கினால் அவ்வளவும் பாழாகிப் போய்விடும். அதன் வாயில் போகும் நெல்லை விட அதன் கால்களால் சேதமாகும் நெல்லே மிகுதியாக இருக்கும். இவற்றை உணர்ந்து மன்னன் குறைவாகப் பகுதிபகுதியாக வரிவாங்கினால் நாட்டு மக்கள் செழிப்படைவர். இவ்வறம் உலக மன்னருக்கும். மக்களுக்கும் உணர்த்தப்பட்ட வாழ்வியல் உண்மை. மேலும் வாழ்வில்,விதி, என்பதை நம்பினர். விதி வழியே எல்லாம் நடக்கும் என்பதை **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்ற கருத்தோடு இணைந்து மிக அருமையாக கூறுகிறார் கணியன் பூங்குன்றன்

கல் பொருது இரங்கும் மல்லர் பேர்யாற்று
நீர்வழிப் படுஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படுஉம் [107]

என்று வெள்ளத்தின் வழியே இழுத்துச் செல்லப்படும் தெப்பம் போல் உயிர்விதி வழியே இழுத்துச் செல்லப்படும் என்கிறது. இந்நூல் வாழ்வியலோடு பண்டைத் தமிழகத்தின் அரசியல் வரலாற்றையும் அறிவுறுத்தும் உரிய கருவூலமாகத் திகழ்கின்றது. மேலும் இந்நூலின் பாடல்கள் உயர்ந்த வாழ்வியல் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் [105]

பெரியோரை வியத்தலு மிலமே

சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே[106]

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே[107]

என்ற புறக்கருத்துக்களோடு வாழ்வின் நிகழ்ச்சிகள் தொடர்படுத்திப்பாடப்பட்டுள்ளன. இப்பாடல்கள் இக்கால மக்களின் வாழ்க்கைக்கும் பொருந்தும். வகையிலும் உலக மக்களுக்குப் பல அறக்கருத்துக்களை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன.

முடிவுரை

தமிழ் மொழி பழமையானது. அப்பழமையான மொழி பேசிய மக்களின் வாழ்க்கை மரபுகள், உணர்வுகள் போன்றவற்றை இலக்கியமாகப் பதிவு செய்வதற்கு ஒரு இலக்கண வரைமுறையை வகுத்துக் கொடுப்பது சங்க இலக்கியம்.இது பழமையான நூல் மட்டுமல்லாமல் பழங்காலத் தமிழக மக்களின் வாழ்வியலைக் குறிப்பிட்டுக் காட்டும் காலக்கண்ணாடி என்பதை அறிய முடிகிறது.

தமிழர்கள் இயற்கையோடியைந்த இன்பவாழ்வு வாழ்ந்தனர். அத்தகைய வாழ்க்கைக்குத் தமிழகம் துணை நின்றது. இயற்கைச் சூழலில் வாழ்வு நடத்திய பழந்தமிழரின் கற்பனைக் கனவுகளும் இயற்கையோடு இயைந்தனவாகவே விளங்கின அத்தகைய கனவுகள் பழந்தமிழரின் கலைச் செல்வமான சங்க இலக்கியத்தில் பதிவாகியிருப்பது ஆராயப்பட்டுள்ளன.

சங்கம் தோன்றிய வரலாறு முச்சங்கம் பற்றிய கருத்து வரலாற்றுப் பின்னணி புலவர்கள் மற்றும் உரையாசிரியர்கள் அறிய கருத்து ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. சங்க இலக்கிய நூலான எட்டுத்தொகை வழி அகப்பொருள் புறப்பொருள் பற்றிய செய்தி ஆராய்ந்து அதன் சிறப்புச் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. சிறந்த கருத்துக்களின் பதிவே இலக்கியம் என்பர் எமர்சன். சங்கநூல் வாழ்வைக் கூறும்போதெல்லாம் இடையிடையே அரிய கருத்துக்களைப் புகுத்திச் செல்லும் கருத்துக் கருவூலமாகத் திகழ்வது ஆராயப்பட்டுள்ளது.

இலக்கியமும் வரலாறும் பிரிக்கமுடியாத இரட்டைக் குழந்தைகள். இக்கூற்றிற்கு ஏற்ப சங்க இலக்கிய நூலான பதிற்றுப்பத்தும், புறநானூறும் முற்றும் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றன. சங்க இலக்கியம் சங்ககால வரலாறே தெரியாமல் மறைந்திருக்கும். மேலும் இந்நூல்களின் பாடல்கள் எந்தச் சூழலில் எழுதப்பட்டது. எப்பாவகையைச் சேர்ந்தது பாடிய புலவர்கள், தொகுத்தவர் தொகுப்பிக்கச் செய்தவன் ஆகியவை ஆராய்ந்து கொடுக்கப்பட்டுள்ளன.

பழமரம் நாடும் பறவை போன்ற நாடோடி வாழ்வினை மேற்கொள்ளக் கூடியவர்கள் புலவர்கள். அத்தகைய புலவர்கள் பிறர் துயர்களைய வழிகூறத் தான் பெற்ற பரிசைப் பகிர்ந்தளித்தச் செம்மையாக வாழ்ந்தனர். இவர்கள் சில உயரிய பண்புகளைப் பெற்று வாழ்ந்தனர். தாம் நேராகக் கண்டவற்றையும் உள்ளத்தால் எண்ணித் துய்த்தவற்றையும் உள்ளவாறு கூறினர்.

எட்டுத்தொகையில் எட்டு நூல்களுக்கும், நூலின் விளக்க அமைப்பு, கடவுள் வாழ்த்து புலவர்கள் வரலாறு பாடல்களின் சிறப்பு, வாழ்வியல் சிந்தனைகள் காலவரலாறு போன்றவை ஆராய்ந்து கொடுக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பாயிரம் பா.எ 7
2. ஔவை துரைசாமி (ப.ஆ) புறநானூறு பா.எ.72:13-16
3. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், கலித்தொகை பா.எ.68 : 1-8
4. மேலது 69 : 1-8
5. மதுரைக்காஞ்சி 761 -763
6. சிறுபாணாற்றுப்படை 66-77
7. அப்பர் தேவாரம்.பா.451.
8. ஆண்டாள் திருப்பாவை.பா.எ.28
9. சேக்கிழார், பெரியபுராணம், 256.
10. கம்பராமாயணம்.பா.எ.4452
11. மெய்யப்பன் (ப.ஆ) நல்வழி ப.14.
12. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (ப.ஆ.குழு) தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்.ப.38.
13. தட்சிணாமூர்த்தி.அ. தமிழர் நாகரிகமும் பண்பாடும்.ப.122.
14. பத்துப்பாட்டு பெரும்பாணாற்றுப்படை . பா.எ.78
15. பத்துப்பாட்டு பெரும்பாணாற்றுப்படை . பா.எ.115
16. பத்துப்பாட்டு பெரும்பாணாற்றுப்படை பா.எ.50 - 52.
17. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பாயிரம் பா.எ.1098.
18. மேலது,ப.எ 1042
19. த.இராமலிங்கம்(உ.ஆ) ,புறப்பொருள் வெண்பாமாலை பா.எ.253.
20. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பா.எ. 552.
21. மேலது.பா.எ.552
22. மேலது.பா.எ.1411.

23. மேலது.பா.எ.1598.

24. மேலது.பா.எ.1498.

25. நற்றிணை பா.எ.216: 6-9

26. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பா.எ. 1000

27. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பா.எ.1001

28. மேலது

29. கலி.நெய்தல் பா.எ.125: 103

30. மேலது.125-104

31. குறுந்தொகை பா.எ.3

32. செம்மொழி நிறுவனம் (பதி.) இறையனார் களவியல் பா.எ. 1:1

33. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,பா.எ.399 : 1-3

34. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,பா.எ.36 : 22-26

35. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பா.எ.1594

36. மு.வ (உ.ஆ) திருக்குறள் ப.150

37. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,புறநானூறு பா.எ.182

38. மேலது,பா.எ.192:1-3

39. மேலது,பா.எ.18-19

40. மேலது,பா.எ. 195:5-6

41. அரிஸ்டாட்டில் கவிதையியல் ப.120

42. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்.399 : 1-3கலித்தொகை

43. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ.167: 1-7

44. மேலது 9 : 5

45. மேலதுபா.எ.85

46. மேலது.பா.எ.80

47. சைவசித்தாந்தக் கழகம். ப்.ஆ.குழு பாட்டும் தொகையும்,அகநானூறு பா.எ5-8 .

48. சைவசித்தாந்தக் கழகம். ப்.ஆ.குழு பாட்டும் தொகையும்,. புறநானூறு பா.எ.321.

49. எம்மார் அடைக்கலசாமி, தமிழிலக்கிய வரலாறு.ப.34

50. சைவசித்தாந்தக் கழகம். ப்.ஆ.குழு பாட்டும் தொகையும்,நற்றிணை.பா.எ.216

51. மேலது.பா.எ.240:1

52. மேலது.பா.எ.1:6-7.

53. மேலது.பா.எ.1:6-7.

54. மேலது.பா.எ.172:6

55. மேலது.பா.எ.210

56. கி.இராசா. தமிழ் இலக்கிய வரலாறு ப.13

57. வ.சுப.மாணிக்கம்,தமிழ்க்காதல்.ப.35

58. சைவசித்தாந்தக் கழகம். ப்.ஆ.குழு பாட்டும் தொகையும், பா.எ.221

59. மேலது,பா.எ299

60. மேலது.

61. மேலது, கடவுள்வாழ்த்து.

62. மேலது,பா.எ.40

63. மேலது.பா.எ.9:3-5

64. மேலது.பா.எ.167

65. மேலது.பா.எ.135:1-2

66. மேலது.பா.எ.9:3-5

67. மேலது.பா.எ.9:4-5.

68. சைவசித்தாந்தக் கழகம். ப்.ஆ.குழு பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு பா.எ.342.

69. மேலது.பா.எ.343

70. மேலது .பா.எ.வாழ்த்து.ப.1

71. மேலது.பா.எ .343

72. மேலது.பா.எ.344

73. மேலதுபா.எ.345

74. ஐங்குறுநூறு பா.எ.6- 1

75. பதிற்றுபத்து பா.எ.12:7-9

76. மேலது.38:15-16

77. மேலது.70

78. மேலது.பா.எ.22:1-4

79. மேலது.பா.எ.22:4-8

80. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பாயிரம் பா.எ.7

81. இறையனார் அகப்பொருள் உரை.1-3

82. பரிபாடல் பா.எ.16:1-4

83. மேலது.பா.எ9:12-19.

84. மேலது.பா.எ133

85. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பாயிரம் பா.எ.996

86. கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை.ப.144.

87. கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை.ப.152.

88. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், கலித்தொகை , பா.எ.122.

89. மேலது.பா.எ.10.

90. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், கலித்தொகை .பாலைக்கலி.9.12-20.

91. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.எ.365:4-6.

92. மேலது.பா.எ.68:5-6.

93. மேலது.பா.எ.86.

94. மேலது.பா.எ.77:7-8

95. மேலது.

96. மேலது.பா.எ.78

97. மேலது.பா.எ.54

98. மேலது.பா.எ.151

99. அகம்.69:10-12

100. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்.புறம்.3: 11-12

101. மேலது.பா.எ.3 : 14

102. மேலது.பா.எ.134

103. மேலது.பா.எ.184

104. மேலது.பா.எ.192:8-10

105. மேலது.பா.எ.195 : 6-7

106. மேலது.பா.எ.192: 12-13

107. மேலது.பா.எ.186: 1-2

இயல் இரண்டு

சங்கப் புலவர்களின் வாழ்வியல் கூறுகள்

சங்கப் புலவர்களின் வாழ்வியல் கூறுகள்

முன்னுரை

ஓர் இனத்தின் பண்பினையும் பண்பாட்டினையும் வடித்தெடுத்து உருவாவதே சீரிய இலக்கியமாகும். இவ்வுண்மையினைக் கருத்துட்கொண்டு நோக்குவோமாயின், தமிழர்களின் உள்ளத்து உணர்ச்சிகளையும் வேட்கைகளையும் உருவாக்கி புலப்படுத்துவதற்கு இயற்கையினைப் பின்னணியாகக் கொண்டவை சங்ககாலப் பாடல்கள். தம் சூழ்நிலையைக் கூர்ந்து நோக்கிக் கணித்தலிலும், கண்டு கணித்ததை நெஞ்சத்தே நிறுத்திவைத்தலிலும், சங்ககாலத்துப் புலவர்கள் யாவரும் தேர்ந்தவராய்க் காணப்படுகின்றனர். மலர்களிடையே உலவியும் பறவைகளிடையே மகிழ்ந்தும் அருவியிலும் ஆற்றிலும் ஆடிக்குடைந்தும் மலையிடை கவர்ந்தும் கடலிடை நீந்தியும் இன்னோரன்ன செயல்களால் இயற்கையின் ஒவ்வொரு நுட்பத்தையும் உள்ளத்தே குறிப்பெடுத்து அமைத்துக் கொண்டே சென்றனரோ, என நினையும் அளவுக்குச் சங்க இலக்கியத்துச் சொல்லோவியங்களை அப்பண்டைக் காலத்துப் புலவர் பெருமக்கள் தீட்டியுள்ளனர். இப்போக்கில் பயிரினங்களாயினும் உயிரினங்களாயினும் அவ்வவற்றின் வளர்ச்சிமுறை, வாழ்வுமுறைப் பற்றியும், உறைவிடம், ஒதுங்கிடம் பற்றியும் நுணுகியறிந்து தெளிவுற விளக்கும் பான்மை சங்க நூல்களின் தனிச்சிறப்பெனவே கூறலாம்.

கவித்துறையிலிருந்து காணுங்கால், மனிதனுக்கு வாய்த்துள்ள பொறிகளிலே கண்ணே ஏனையவற்றினும் சிறப்பும் தலைமையும் பெறுகின்றது. கண்ணுக்கு அடுத்த நிலையில் செவியையும் மூக்கையும் குறிப்பிடலாம். மூன்றாம் நிலை சுவை தேர்ந்துணரும் நாவினுக்கு உரியது. இறுதியாக வைக்கத்தக்கதே தொட்டு உணரும் நாவினுக்கு உரியது. இறுதியாக வைக்கத்தக்கதே தொட்டுணரும் ஊற்றுணர்ச்சி, உலகத்தை நுணுகியுணர்ந்த காட்சிகளின் எழில் தேர்ந்து இயற்கையின் பெரிதும் பயன்படுவது கண்ணேயாகும். ஏனைய பொறி புலன்களிலும் மூளையொடு தொடர்புடைய வகையில் கண்ணும் காட்சியுமே சிறப்புறுவனவாகும்.

சங்ககாலப் புலவர்களின் பாடல்களை ஆராய்வது வாயிலாக அக்காலத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையினை எடுத்தியம்பிய பாங்கினையும் அதற்கு அவர்கள் தந்த மதிப்பினையும் உணரலாம். சில கண்ணாடித் துண்டுகளைப் பல் கோண ஒளி பாய்ச்சும் வகையில் நீளக் குழாயில் அமைத்து இடையே சில பாசிமணிகளைக் கிடத்தி, பல்வேறு வண்ண மணிக்கோலங்களைச் சிறார்க்குக் காட்டும் கெலிடாஸ்கோப் [Kaleidoscope] போலப் பழந்தமிழ்ச் சான்றோர் இயற்கைக் காட்சிகளை நம் அகக்கண்ணுக்கு விருந்து படைக்கும் எண்ணற்ற ஓவியக் களஞ்சியமாக ஆக்கித் தந்துள்ளனர். அவ்வோவியங்கள் காலத்தை வென்று, நம் அகக்கண் முன் எழுந்து, அம் மீள் இன்பத்தை எஞ்ஞான்றும் கொடுத்து வருகின்றன.

இரவலரும் புரவலரும்

இரவலர்க்கும் புரவலர்க்கும் உள்ள உறவு நிலை பெரிதும் பாராட்டுதற்குரியது. ஆற்றுப்படைகள் இவ்விருவருக்கும் இடையே உள்ள மனத் தொடர்பை உய்த்துணர முடிகிறது. புரவலர்கள் புகழை விரும்பினர். பரிசிலர் வாழ்வு நடத்திய புலவர், பாணர், விறலியர், பாடினி ஆகியோர் புரவலர்களை நாடித் தேடி ஓடியதில் வியப்பு என்ன? என்றாலும், பாராளும் மன்னர்களும், பாவாணர்க்கும் உள்ள நெருங்கிய உறவைக் காணும்போது இத்தகைய நிலை வீரநிலைக் காலத்திற்கே உரிய தனிச்சிறப்பு என்பதை அறியலாம். புலவர்கள் பாடுதலையே தம் தொழிலாக ஏற்றனர். எனினும், அத்தொழில் அவர்களுக்கு மட்டும் உரியதாக இல்லை. எட்டுத்தொகையில் பதினைந்திற்கும் மேற்பட்ட அரசப் புலவர்களைக் காணமுடிகிறது.

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை;
பரப்போர் புண்கண் கூர,
இறப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே [1]

புலவரானார் என்பதுவும், அவர் இறுதியாக, ஆனால் உறுதியாக கூறிய இப்பாடலால் வஞ்சின மொழியால் பாண்டியன் நெடுஞ்செழியனார் பாவலரிடம் கொண்ட பெருமதிப்பும் அவர்கட்குப் பரிசில் பல நல்க வேண்டுமென்ற ஆர்வமும் உள்ளக் கிடைக்கையாய் மிளிர்ந்ததை அறிய முடிகிறது.

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே என வாழும் புலவர்கள் பழமரத்தை நாடும் புள்ளினம் போல வாழ்ந்தனர். அரசர்களும் புலவர்கள் ஆயினர்; இந்நிலை வீரநிலைக் காலத்தில் உலகில் எங்ஙனம் உருவாகியது என்பதைப் பார்க்க முடிகிறது. எகிலிசு வீரம் தோய்ந்த பாடல்களை நரம்பிசையோடு இழைத்துக் குழைத்துப் பாடினான் என்பதை இலியாது [Iliad] காப்பியம் புலப்படுத்துகிறது. எகிலிசு பெரும்புகழ் பெற்ற பெரியவர்களைப் பற்றி பாடினார் எனத் தெரிகிறது.

சிற்றரசர் கவிஞராக விளங்கிய திறத்தைக் கிரேக்க தூதோனிய வெல்சு இலக்கியங்களில் காணமுடிகிறது. வீரந்தோய்ந்த கவிதைகள் பாடுவது வீரநிலைக்காலக் கவிதைகளில் சிறந்து விளங்குகிறது. மேலும், வெல்சு நாட்டு அரசவைக் கவிஞர்கள் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றனர். சமுதாய அமைப்புப் பின்னணியில் இரவலர்க்குப் பெருமதிப்பும் சிறப்பும் மக்களிடமும் மன்னனிடமும் இருந்தன. 'பாண்கடன்' (புறம்.201:14) என்ற மரபுத்தொடர் இதனை நன்கு விளக்குகிறது. மேலும் கடன் என்ற சொல்லின் பொருட் சிறப்புப் புலவர்கள் பால் மன்னர்கள் கொண்ட மதிப்பையும், சமுதாயத்தில் அவர்களுக்கு இருந்த பிடிப்பையும் உணர்த்துகிறது.

இரவலர்களைப் புரவலர்கள் மதித்துப் போற்றுவது கடமையாக மட்டும் கொள்ளவில்லை. பல புலவர்கள் தங்கள் தலைவர்களின் அகவாழ்விலும் அரசியல் வாழ்விலும் நேரடியான தொடர்பு கொண்டனர். கண்ணகி காரணமாகப் பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியோர் பாடிய பாடல்கள் இதற்கு ஒரு சான்றாகும். சில புலவர்கள் தம் தலைவர்களுடன் வாழ்நாளில் பெரும்பங்கு செலவிட்டனர் என்பதையும் அறிய முடிகிறது.

சங்ககால புலவர்களின் நட்பு

பாரி கபிலர் நட்பையும், ஔவையார் அதியமான் அன்பையும் புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. வாழ்விலும் சாவிலும் இவ்விரு புலவர்களும் தோன்றாத் துணையாய்த் திகழ்ந்தனர். அதியமானைப் பற்றி ஔவையார் 22 பாடல்கள் பாடியுள்ளார். மொத்த வரிகள் 250. எழினியைப் பற்றியப் பாடல்கள் 3,

அகத்தைப் பற்றியப் பாடல்கள் 3, இவைகளைச் சேர்த்தால் மொத்தம் 28 பாடல்கள், மொத்த வரிகள் 300. புறநானூற்றில் ஔவையார் பாடிய பாடல்களே தனிப்புலவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கையில் தலையாயதாய் விளங்குகின்றன. பாரியைப் பற்றிய 16 பாடல்கள் (136 வரிகள்) பாடிய கபிலர் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றார்.

கபிலர் பாரிபால் கொண்ட பற்றும் பாசமும் செறிந்த அவர் தம்பாடல்களில் கபிலர் பாரியை எத்துணை அளவு விரும்பினார் என்பதும், பாரியோடு தொடர்புடைய அத்துணைப் பொருள்களையும் தம் வாழ்வில் நீக்க முடியாத பிணைப்பாக ஏற்றுக் கொண்டார். பறம்புமலை அவர் பாடல்களின் அடிக் கருத்துக்களில் ஒன்றாகவே அமைகிறது. பறம்பு மலையில் காணப்படும் அணைகள் காவலரின் கற்பனையில் சுவைமிக்கனவாகின்றன. பாரி இறந்த பின்னர்ப் பறம்பு மலை அவை உள்ளத்தைப் பெரிதும் பிடித்து உலுக்குகிறது.

அளிதோ தானே, பரியது பறம்பே!
ஒளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே [2]

மேலும் பாரி மகளிரைக் கபிலர் தம் பொறுப்பில் திருமணம் முடிக்க எடுக்கும் முயற்சி கபிலர் பாரியோடு கொண்ட தொடர்பின் எல்லையைத் தொட்டுக் காட்டுகிறது.

நட்பில் உலகப்பொதுமை

திராய் சென்ற அரசன் அகமெனன் தன் மனைவியை ஒரு பாவலனிடம் கையடையாகக் கொடுத்துச் சென்ற நிகழ்ச்சி இங்கு அறிந்து மகிழ்தற்குரியது! ஓடிசியில் [Odyssey] காணப்படும் இந்நிகழ்ச்சி அரசன் பாவலர்களிடம் கொண்டிருந்த நம்பிக்கையும் நட்பையும் தெளிவாக்குகிறது. **கெலிதிக் பரம்பரையினை கதைகளில் பாவாணர்கள் தங்கள் புரவலர்கள் இறந்த போது தாமும் உயிர் துறந்த நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டுள்ளன. தம் தலைவர் கொல்லப்பட்ட போது கவிஞர் மெரிலின் அறிவு திரிந்து காடுகளில் அலைந்த நிகழ்ச்சியும் காணலாம்.** [3]

தமிழகத்தில் நட்பின் இலக்கணமாகத் திகழ்ந்தப் புலவர்கள் உண்டு.

பிசிராந்தையாரும், பொத்தியாரும், கோப்பெருஞ்சோழன் மீது கொண்ட நட்பு எண்ணி வியத்தற்குரியது.

கோப்பெருஞ்சோழன் இறக்கும் தறுவாயில் பிசிராந்தையார் வராார் என்ற சான்றோர்க்கு, அவர் வருவார் என்று கூறித் தம் நட்பின் தன்மையைப் பின்வருமாறு விளக்குகிறார்.

கவைக் கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகின் போதொரு பொதுளிய
வேளை வெண்யூ வெண்தயிர்க் கொளீஇ,
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை [4]

கோப்பெருஞ்சோழன் தன் நட்பினன் ஆகிய பிசிராந்தையார் எத்துணைச் சிறந்தவர் என்பதைத் தன்னைச் சுற்றி உள்ள சான்றோர்க்கு விளக்குகிறார்.

கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய,
வழுவின்று பழகிய கிழமையார் ஆயினும்,
அரிதே, தோன்றல்! அதற்பட ஒழுகல் [5]

பிசிராந்தையாருக்குத் தன் அருகில் இடம் ஒழிக்க! என்று துணிந்து கூறிய கோப்பெருஞ்சோழன் நட்பின் ஆழத்தையும், அவன் எண்ணியவாறு வந்த பிசிராந்தையாரின் அறிவையும் வியந்து பாராட்டுகிறார் பொத்தியார்.

'கெடு இல் நல் இசை கூடி நடுகல் ஆயிணன் புரவலன்' என்று தன் நண்பன் நடுகல்லைக் கண்டு கையறு நிலையில் பாடுகிறார். தன்னைத் தன் மகன் பிறந்த பின் வா என்று கூறியதால், இப்போது வந்திருப்பதாகக் கூறுகின்றார். இப்பொழுது எனக்கு இடம் தா என்று கேட்கிறார். அன்றியும் நிலைபெறு நடுகல் ஆயக்கண்ணும் இடந்தந்தானை உடம்பொடு இன் உயிர் விரும்பும் கிழமைத் தொல் நட்புடையர் இடம் கொடுத்து அளிப்ப என்று மகிழ்கிறார்.

ஆற்றுப்படைகள் பாணர்கள் பெற்ற பெருஞ்சிறப்பை பாணர்கள் அரசவையை

அடைந்த போது வரவேற்கப்பட்டு, நன்னீராட்டப் பெற்று புத்தாடையும், புத்துணர்வும் பெறுகின்றனர்.

உண்ண விருந்தும் படைத்தனர் என்பதை ஔவையார் பொகுட்டெழினியைப் பாடிய பாடல்கள் உணரலாம்.

வேர் புரை சிதாஅர்
நீக்கி நேர் கரை
நுண்நூல் கலிங்கம்
உடீஇ உண் எனத்
தேள் கடுப்பு அன்ன [6]

அதியமான் இறந்தபோது ஔவையார் கையறுநிலையாகப் பாடிய 'சிறிய கட் பெறினே எமக்கீயும் மன்னே' என்ற பிறிதொரு பாடல் புலவர்க்கும் பிரவலர்க்கும் இருந்த தொடர்பின் எல்லைக்கு எடுத்துக் காட்டாகும்.

புரவலனுக்கும் இரவலனுக்கும் இடையே உள்ள வேறுபாடு பெரிதென நாம் எண்ணுகிறோம். ஆனால் புரவலர்கள் அங்ஙனம் எண்ணவில்லை. என்பதைச் சோழநாட்டுப் பிடவூர்க்கிழார் மகன் பெருஞ்சாத்தனை மதுரை நக்கீரர் பாடிய பாடலால் அறிய முடிகிறது.

ஆங்கு நின்ற எற்கண்டு
சிறிலும் நில்லான், பெரிதுங் கூறான்
அருங்காலம் வரவே அருளினன் வேண்டி
யென உரைந்தன்றி நல்கித், தன்மனை [7]

சேரமான் தகடூர் எறித்த பெருஞ்சேரல் இரும்பொறை முரசு கட்டில் அறியாது ஏறிய மோசிக்கீரனைத் தவறு செய்யாது. அவன் துயில் எழுந்துணையும் கவரி வீசிய நிகழ்ச்சி (புறம்.50) புலவர் மாசு இல்லா மனத்துவர் என்பதுவும், மன்னன் நல் தமிழ் முழுதும் அடைந்தபோது வரவேற்றகப்பட்டு நன்னீராட்டப் பெற்று புத்தாடையும், புத்துணர்வும் பெறுகின்றனர்.

சேரமான் தகடூர் எறித்த பெருஞ்சேரல் இரும்பொறை முரசு கட்டில் அறியாது ஏறிய மோசிகீரனைத் தவறு செய்யாது. அவன் துயில் எழுந்துணையும் கவரி வீசிய நிகழ்ச்சி புலவர் மாசு இல்லா மனத்துவர் என்பதுவும், மன்னன் நல் தமிழ் முழுதும் அறிந்த காரணத்தால் புலவர்பால் மட்டற்ற மதிப்பும் மாறுதலில்லா அன்பும் பெற்றிருந்தான் என்பதை அறிகிறோம்.

இரவலருக்கும் புரவலருக்கும் உள்ள உறவு நிறையும் கலைஞனுக்கும் சுவைஞனுக்கும் உள்ள உறவு நிலையும் இரவலரின் புரவலரின் வாழ்வியல் பிணைப்பாகக் கருதலாம்.

சங்கப் புலவர்களின் வாழ்வியல்

சங்க இலக்கியக் கவிதைகளல் அகம் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 307 ஆகும். புறம் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 89 ஆகும். அகமும், புறமும் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 77 ஆகும். இவை நமக்குக் கிடைத்துள்ள பாடல்களின் அடிப்படையில் வைத்தெண்ணப்பட்டது ஆகும்.

சங்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் சமூகத்தில் உயர்வான நிலையில் வைத்துப் போற்றப்பட்டனர். அரசியலிலும், சமூக உயர்விலும் தங்கள் பங்களிப்பினைப் பெரிதும் செய்துள்ளனர். தங்களது வறுமையைப் போக்கிக் கொள்ள மன்னர்களைப் பாடிப் பரிசில் பெறுவதை மட்டுமே தொழிலாகக் கொள்ளாமல் மன்னர்களது அரசியல் செயல்பாடுகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்ட தவறவில்லை.

சங்க இலக்கிய கவிதைகளில் அகப் பாடல்களே மிகுதி எனினும், அக்கால மக்கள் அகத்தையும் புறத்தையும் ஒன்றாகவே கருதியதால் வீரம் காதலுக்குரிய அடிப்படையாக அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். புறப்பாடல்கள் சங்கத் தமிழகத்தின் அரசியல் நெறியையும், சமுதாய அமைப்பையும், ஆட்சியியல், நில இயல், உளவியல், குடியியல் என்னும் எல்லாத் துறைகளையும் தன்னுள் கொண்டியங்கும் துறையாக அமைந்துள்ளது. இத்தகு சிறப்புகளுக்கெல்லாம் உரியவர்கள் சங்கப் புலவர்கள் எனில் மிகையில்லை.

பாடாண்திணையில் சங்கபுலவர்களின் பாடல்கள்

சங்ககாலப் புலவர்கள், மன்னர்களை வாழ்த்திப் பாடிய பாடல்கள் "பாடாண்திணைப் பாடல்கள்" என்று அழைக்கப் பெறும் என்று புறத்திணை இலக்கணங்கள் எடுத்துரைக்கின்றன.

பாடாண்திணை என்பதற்கு **புகழ்மை பாடுதற்கேற்ற கூறு பாடாண் எனப்படும்**[8] நல்லறிவுடைய புலமைச் செல்வர் பலரும் உரையினாலும், பாட்டினாலும் உயர்த்திப் புகழும் வண்ணம் ஆற்றல் மிக்க போர்த்துறையிலும் அன்பின் மிக்க மனை வாழ்க்கையிலும் புகழுடன் வாழும் நன்மக்களது பண்புமைமையே பாடாண்திணை எனப்படும்[9] என்னும் கூற்றும் க.வெள்ளைவாராணனார். பாடாணாவது புகழ் முதலியவற்றை விரும்பிய ஆண்மகன் ஒருவனிடம் பரிசில் வேண்டி, ஒரு புலவன் அவன் குணம் செயல் முதலியவற்றை புகழ்ந்து பாடுவதாம்[10] என்னும் கூற்றும் ஒப்பு நோக்கத் தக்கது எனலாம்.

சங்கப் புலவர்களின் வாழ்வியல் இயல்புகள்

சங்கப் புலவர்கள் மக்கட் சமுதாயத்தின் பிரிதிநிதிகளாகவும் மன்னனுக்கும் குடிமக்களுக்கும் இடையே பாலமாகவும் திகழ்ந்துள்ளார்.

புலவர்கள் நட்பு, அன்பினால் வேந்தரைப் பாடிப் பரிசில் வேண்டுவதே தொழிலாகக் கொள்ளாமல் அவர்கள் தவறு செய்தவிடத்து அஞ்சாது கண்டித்து அறநெறிப்படுத்தும் இயல்பினராகவும் புலவர் பெருமக்கள் திகழ்ந்தனர்.

சங்ககாலப் புலவர்களுக்குச் சமூகச் சூழலில் உயரிய மரியாதையும்,மதிப்பும் இருந்துள்ளது. புலவர் கூறும் சொற்களைப் பொதுமக்களும், நாடாளும் வேந்தனும் வேதமாகக் கொண்டு செயல்பட்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை. இக்கூற்றை செய்பிக்கும் விதமாக நாடாளும் தலைவர்கள் இலக்கியம் இயற்றும் புலவர்களையே விழுமியோராகப் போற்றி வந்தனர். அரசனை 'அவன்' என்றும் புலவரை 'அவர்' என்றும் சுட்டியுள்ளதில் உள்ள நாகரிக மதிப்பு, அரசியலில் தலையீட்டு அறிவுரை கூறியும் அறவுரை நல்கியும் அரசரின் போக்கைத் திருத்தும் உரிமை புலவர்க்கு

இருந்தது. அரசர் குறுநில மன்னர் ஆகியோரின் குடும்ப வாழ்விலும் புலவர் தலையீட்டு ஆவண செய்யும் ஆர்வம் கொண்டிருந்தனர்[11] என்று மா.ரா.போ. குருசாமியும் விளக்கமளித்துள்ளார்.

புலமை பெற்ற அரச குடி புலவர்கள்

அரசர்கள் புலவர்களைப் போற்றியும் பாதுகாத்தும் வந்ததில் சங்ககாலத்தில் வாழ்ந்த மன்னர்களும் பாடல் புனையும் திறம் பெற்றப் புலவர்களாக இருந்துள்ள மையினை அறிய முடிகின்றது.

புறநானூற்றில் 13 அரசர்கள் புலவர்களாக விளங்கியுள்ளனர். இவர்கள் பாடிய பாடல்கள் அக்காலப் புலவர்களின் பாடல்களைப் போன்றே சொல்நயமும். பொருள் நயமும் பெற்றுச் சிறப்புடன் விளங்குவதைக் காணமுடிகின்றது. உலகியல் அறங்களையும், கல்வியின் மேன்மையினையும், தமிழின் சிறப்பினையும், மன்னர்களின் வீரப்பண்பினையும் விளக்கும் விதத்தில் இவை அமைந்துள்ளன. இதனை,

> **சங்க கால வேந்தர், நல்ல புலமையாளராகத் திகழ்ந்தனர். பலர் பாட்டும் இயற்றினர். வேந்தர் ஆட்சித் துறைக்கு வேண்டிய அறிவைப் பெற்றதோடு இலக்கிய இலக்கணங்களிலமு தேர்ந்த புலமை பெற்றிருந்தனர். இவர்தம் புலமைத்திறம் குறிப்பிடத்தக்கதாய் அமைந்திருந்தது. வேந்தராகப் பிறந்து, புலவராக விளங்கியோரும் அவர்தம் பாடல்களும், அப்பாடல்களால் அறியப்பெறும் செய்திகளும் சங்க இலக்கியங்களால் அறியப் பெறுகின்றன**[12]

என்று கூறியுள்ளார். ச.மெய்யப்பன். இவ்வாறு புலவர்களாகத் திகழ்ந்தவர்களில் சேர, சோழ, பாண்டிய குலத்தினரும் விளங்கியதனைக் காண முடிகின்றது.

சங்ககாலப் புலவர்களுக்கும் சமூகச்சூழலில் உயரிய மரியாதையும் மதிப்பும் இருந்துள்ளது. புலவர் கூறும் சொற்களைப் பொதுமக்களும், நாடாளும் வேந்தனும் வேதமாகக் கொண்டு செயல்பட்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை. இக்கூற்றை

மெய்ப்பிக்கும் விதமாக,

> **நாடாளும் தலைவர்கள் இலக்கியம் இயற்றும் புலவர்களையே விழுமியோராகப் போற்றிவந்தனர். அரசனை அவன் என்றும் புலவரை அவர் என்றும் சுட்டியுள்ளதில் உள்ள நாகரிக மதிப்பு, அரசியலில் தலையிட்டு அறிவுரை கூறியும் அறவுரை நல்கியும் அரசரின் போக்கைத் திருத்தும் உரிமை புலவர்க்கு இருந்தது. அரசர் குறுநில மன்னர் ஆகியோரின் குடும்ப வாழ்விலும் புலவர் தலையிட்டு ஆவன செய்யும் ஆர்வம் கொண்டிருந்தனர்.**[13]

என்று மா.ரா.போ.குருசாமி குறிப்பிட்டுள்ளார்.

சேரர் குடிப்புலவர்கள்

சேர மன்னர்களுள் பலர் புலவராகத் திகழ்ந்துள்ளனர். **முப்பது சேர வேந்தருள் பதின்மர். அதாவது, மூன்றில் ஒரு பகுதி புலவராக விளங்கியுள்ளனர். இது முப்பத்து மூன்று விழுக்காடு மட்டுமே ஆகும். சேர வேந்தருள் மிகுதியான பாடல்களைப் (68) பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆவார். குறைந்த பாடல் பாடியவர் இளங்கடுங்கோ. இவர் பாடியது ஒரு பாடல் மட்டுமே**[14] என்னும் குறிப்பினின்று சேரமன்னர்களில் பலர் புலவர்களாகத் திகழ்ந்தமை புலனாகின்றது. சேர மன்னர்களுள் இளங்குட்டுவன், கணைக்கால் இருப்பொறை, கருவூர்ச்சாத்தன், குட்டுவன், கண்ணனார், கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, சேராமணந்தை நம்பி குட்டுவன், பாலை பாடிய பெருங்கடுங்கோ, முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன் போன்றோர் புலவர்களாக இருந்துள்ளனர்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை

சேர மன்னர்களில் இரும்பொறை மரபில் வந்த கடைசி மன்னன் கணைக்கால் இரும்பொறை ஆவான். இவன் புலவர்கள் பலரை ஆதரித்தவன். பொய்கையார் என்னும் புலவர் இவனிடம் நட்புப் பூண்டிருந்தார்.

இரும்பொறை காலத்தில் சோழநாட்டில் சோழன் செங்கணான் அரசு புரிந்து வந்தான். இவ்வேந்தனுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் பகைமை உண்டாயிற்று. இதனால் இருவருக்கும் போர் மூண்டது. போரில் இரும்பொறை தோல்வியுற்றான். திருப்போர்ப்புறம் என்னுமிடத்தில் இரும்பொறையைச் செங்கணான் சிறைவைத்தான். சிறைப்பட்டிருந்த இரும்பொறை நீர் வேட்கை காரணமாகக் சிறிது நீரைக் கொண்டுவருமாறு பணித்தான். காவலர்கள் அவனை, மதியாது காலம் தாழ்த்திக் கொண்டுவந்து கொடுத்தனர். காவலர்களின் இழி சொல்லுடன் தாமதித்துக் கிடைத்த நீரிணைப் பருகி உயிர்வாழ விரும்பாத இரும்பொறை தன் உயிரைக் காட்டிலும் மானமே பெரிதென்று எண்ணி உயிர்துறந்தான். அப்போது அவன் எழுதியதாக அமைந்த புறப்பாடல்.

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளில் தப்பார்
தொடர்ப்படும் ஞமலியின் இடர்ப்படுத்தி [15]

என்பதாகும். இப்பாடல் பண்டைத் தமிழ்க்குடியின் வாழ்வியல் மறப்பண்பினை எடுத்துரைப்பதாய் அமைந்துப்பதனைக் காணலாம்.

கருவூர்ச்சாத்தன்

அரசர்களே புலவர்களாக விளங்கியவர்களுள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த கருவூர்ச்சாத்தன் என்ற மன்னனும் ஒருவனாவான். இம்மன்னது பாடல்

சேறி ரோனைச் செப்பலு மாற்றாம்
வருவி ரோவென வினவலும் வினவாம் [16]

குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

நம்பிகுட்டுவன்

குடம், குட்டம், கொங்கு, பூழி ஆகிய நாடுகள் சேரநாட்டின் உள்நாடுகள் ஆகும்.

இதில் குட்டநாட்டை ஆண்ட சேரவேந்தருள் நம்பிகுட்டுவனும் ஒருவன். இவன் பாடியதாகக் குறுந்தொகையில் இரு பாடல்களும், நற்றிணையில் மூன்று பாடல்களும் இடம்பெற்றுள்ளன. தலைவியின் மன உணர்வுகளை நுண்ணிதின் உணர்ந்து உரைக்கும் புலமையாளனாக இவ்வேந்தன் காணப்படுகின்றான் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. மேலும்,

அளி பெரிய கேண்மை நும்போல்
சால்பெதிர் கொண்ட செம்மையயோருந்
தேறா நெஞ்சங் கையறுபு வாட [17]

என்னும் பாடலில் நம்பிக்கை அடிப்படையில் உலகம் இன்னும் அழியாது இருந்துவருகின்றது. அந்நம்பிக்கையும் அற்றுப் போகுமாயின் உலகம் இயங்குவது நின்றுவிடும். நான் உன்னைவிட்டு பிரியேன் என்று கூறிய நின் உரைகளை நம்பியே நின்பால் தலைவி அன்பு கொண்டாள். இன்றோ பிரிந்து செல்வதாகக் கூறுகின்றாய். சான்றோனாகிய நீ சொன்ன சொல் பொய்த்தாய் எனின், இவ்வுலகில் யாரிடம் நம்பிக்கை வைப்பது? உலகம் எவ்வாறு இயங்கும்? என்று தோழி, தலைவனிடம் வினவுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ

சங்க இலக்கியத்தில் மிகுதியான பாடல்களைப் பாடிய புலவர்களில் இவரும் ஒருவர். இவர் புறநானூற்றில் ஒரு பாடலும் (282), கலித்தொகையில் பாலைக் கலியினையும் (25 பாடல்கள்) நற்றிணையில் பத்துப் பாடல்களும், குறுந்தொகையில் பத்துப் பாடல்களும், அகநானூற்றில் பன்னிரண்டு பாடல்களுமாக முப்பத்திரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். பாலத்திணைப் பாடல்களை அதிகமாய்ப் பாடினமையால் **பாலைபாடிய பெருங்கடுங்கோ** என்று இவர் சிறப்பிக்கப் பெற்றார்.

இவர் புறநானூற்றில் பாடிய பாடல் போரில் வீரமொரு பொழுது உயிர்துறந்த மறவன் ஒருவனைப் புகழ்ந்துரைப்பதாக அமைந்துள்ளது. அப்பாடல் இடையிடையே சிதைந்து காணப்படுகின்றது அவை

எஃகுளாங் கழிய இருநில மருங்கின்
அருங்கடன் இறுத்த பெருஞ்செ யாளனை
யாண்டுள னோவெள வினைவுதியாயின் [18]

என்னும் பாடலாகும்.

இவர்களோடு மட்டுமன்றி மருதம் பாடிய இளங்கடுங்கோ, முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன் முதலான அரசப்புலவர்களும் எட்டுத்தொகையில் அகப்பாடல் களைப் பாடியுள்ளனர். மேலும், இவர்கள் புலவர்களைப் போற்றியதோடு மட்டுமல்லாமல் புலவராகவே வாழ்ந்தும் தமிழுலகிற்குப் பெருமை சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சோழர்

சோழ வேந்தர்களில் ஐவர் மட்டுமே புலவர்களாக இருந்துள்ளனர். சேர பாண்டிய மன்னர்கள் புலவர்களாக இருந்ததைவிடக் குறைவான அளவிலேயே சோழ வேந்தர்கள் புலவர்களாக இருந்துள்ளனர்.

குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், கோப்பெருஞ்சோழன், நல்லுருத்திரன், நலங்கிள்ளி, மாவளத்தான் ஆகிய ஐந்து சோழ வேந்தர்கள் மட்டுமே சங்க இலக்கியப் புலவர்களாக இருந்துள்ளனர் என்று தெரிகின்றது. இவர்களைப் பற்றிய குறைவான செய்திகளே சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

உறையூரை ஆண்ட சோழ வேந்தருள் சிறக்க வாழ்ந்தவன் கிள்ளிவளவன் ஆவான். அவன் வீரனாகவும் வள்ளலாகவும் நன்னெஞ்சம் கொண்ட வேந்தனாகவும் விளங்கினான். புரவலரைப் புலவர் வாழ்த்துவதே மரபு. ஆனால் புரவலனை வாழ்த்தும் புலவனாகக் கிள்ளிவளவன் விளங்குகின்றான்.

காவிரிக்னகரையில் சிறுகுடி என்னும் ஊரில் பண்ணன் என்னும் வள்ளல் வாழ்ந்து வந்தான். இப்பண்ணனின் வள்ளல் தன்மையைக் கிள்ளிவளவன், ‘‘பழமரத்திலே பறவை இனம் ஒலித்தாற்போல ஊண் உண்பார் ஆரவாரம் கேட்கின்றது,

எறும்புகள் முட்டைகளைக் கொண்டு மேட்டுநிலத்தை நோக்கிச் செல்வது போல, பெரிய சுற்றத் தோடும் கூடிய பிள்ளைகள், கையில் சோறு பெற்றுக்கொண்டு போகிறார்கள். இவ்வாறு எளியவருக்கும் வறியவருக்கும் வாரி வழங்கும் பண்ணனைப் **பசிப்பிணிமருத்துவன்** என்று பாராட்டி, அவனது இல்லதைப் **பசிப்பிணி மருத்துவன் இல்லம்** என்று புகழ்ந்து, அவனைப் பாராட்டுவதோடு அமையாது, **யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய** என்று வாழ்த்துகின்றான் இதனை,

யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்க! இவன் கடும்பினது இடும்மை
யாணர்ப் பழுமரம் புலி இமிழ்ந்தன்
ஊன் ஒலி அரவம் தானும் கேட்கும் [19]

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது. இப்பாடலின் மூலம், தன் ஆட்சியின் கீழ் அமைந்த சிறுகுடி பண்ணனை வாழ்த்தும் கிள்ளியின் பண்பு போற்றத்தக்கதாய் அமைந்துள்ளதனைக் காண முடிகின்றது. தன்னைப் பல புலவர்கள் வாழ்த்தும் சிறப்பினைப் பெற்றிருந்த சோழன், ஒரு புரவலனைப் புகழ்ந்து வாழ்த்தும் சால்புடமையை தம் வாழ்வியலின் முக்கியக் கடனாக கொண்டிருந்தது புலப்படுகிறது.

கோப்பெருஞ்சோழன்

உரையூரைத் தலைவராகக் கொண்டு ஆண்ட அரசப்புலவராகிய இவர் புறநானூற்றில் மூன்று பாடல்களும் குறுந்தொகையில் நான்கு பாடல்களும் பாடியுள்ளார் . இவரது ஆட்சிச் சிறப்பினை விட, இவனது பண்பு நலத்தையே போற்றி உரைத்துள்ளனர் புலவர் பெருமக்கள். புலவர்கள் பெரிதும் விரும்பி இவனிடம் நட்புப்பூண்டனர். அந்த உணர்ச்சி ஒத்த நட்பு அழியாத காவியமாய் விளங்குகின்றது. இவன் வடக்கிருந்து பொழுது புலவர் பலர், இவனுடன் வடக்கிருந்து உயிர்துறந்தனர் புலவர்கள் தொடர்பால் இம்மன்னனும் பெரும்புலவனாக விளங்கினான் என்பதை

கேட்டல் மாத்திரை யல்லது யாவதும்
காண்டல் இல்லது யாண்டு பல கழிய

இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண்டலனே [20]

இப்பாடல் உணர்த்துகிறது. மேலும் இம்மன்னன் தன் மக்களுடைய மாறுபட்ட செய்கையினால் ஆட்சிப் பொறுப்பினைத் துறந்து, புலவர்களுடன் பழகி வாழ்வியல் உண்மைகளை உணர்ந்தான் என்று அறியமுடிகின்றது. யானை வேட்கைக்குச் செல்பவன் யானையைப் பெற்றுவிடலாம். குறும்பூழ் வேட்டைக்குச் சென்றவன் அது பெறாமலும் திரும்பலாம். எனவே, செய்த செயலின் பயனைப் பாராது உயர்ந்த குறிக்கோளுடையவராக விளங்க வேண்டும். அப்படி வாழ்ந்தால் நிலைத்த புகழைப் பெறலாம். என்று இவன் கூறம் அறிவுரை எல்லோரும் ஏற்கத்தக்க ஒன்றாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது என்பதை

கோப்பெருஞ்சோழனின் புலமை நலம் புலவர் பலரை அவனுக்கு நண்பராக்கியது. அவனது பண்புநலம் அவர்களை அவனுடன் வடக்கிருக்க வைத்தது [21]

என்று இவ்வேந்தனின் சிறப்பினை எடுத்துக் காட்டியுள்ளனர்.

மாவளத்தான்

சோழன் நலங்கிள்ளியின் தம்பியாகக் கருதப்படுவன் இம்மாவளத்தான். இவனும் தாமப்பல் கண்ணனார் என்னும் புலவரும் வட்டாடிய நிகழ்ச்சியைப் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது. இவனது சான்றாண்மையினைத் தாமப்பல் கண்ணனார் வியந்து போற்றுகின்றார். இவன் பாடிய குறுந்தொகைப் பாடல் ஒன்று இவனது உள்ளதைத் தெளிவுப்படுத்துவதாய் அமைந்துள்ளது. அவை,

தாமே செல்வ வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த [22]

என்னும் பாடலாகும்.

சோழ வேந்தர் ஐவரும் தம்புலமைத் திறத்தில் சிறந்து விளங்குகின்றனர். தன் நாட்டில் வாழும் பண்ணனை வாழ்த்திய கிள்ளிவளனும் புலவர் பலரின் மொத்த

நட்பினைப் பெற்றிருந்த கோப்பெருஞ்சோழனும், முல்லைக்கலி பாடிய நல்லுருத்திரனும் குறிப்பிடத்தக்கவர்களாவர். தலைவியின் கண்ணீர் கண்டு செலவழுங்கும் தலைவனைப் படைத்த மாவளத்தானின் சான்றாண்மை ஈண்டு கருதத்தக்கது. மானம் கருதி வஞ்சினம் உரைத்த சோழன் நலங்கிள்ளியின் செயல்திறன் மிகச் சிறப்பானது. சோழ வேந்தர் ஐவரின் கொள்கை நெறியும் உறுதியும் பண்பு மேம்பாடும் போற்றதக்கனவாய் அமைந்துள்ளதனைக் காண முடிகின்றது.

பாண்டியர்

பாண்டிய மன்னர்களில் பலர் புலவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இருபத்து நான்கு பாண்டிய வேந்தரில் பதின்மூன்று பேர் புலவர்களாக விளங்குகின்றனர். இஃது இவரின் மொத்த எண்ணிக்கையில் 54 விழுக்காடு ஆகும். புலவராக விளங்குவதில் சேர, சோழரைவிடப் பாண்டிய வேந்தரே மிகுதியாக உள்ளனர். பாண்டிய வேந்தருள் சரிபாதிக்கமேல் புலவர்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மரபினராதலால் இப்பாண்டிய வேந்தர் பலர் கவியரங்கேறினர் என்று தெரிகின்றது[23] என்று பாண்டிய மன்னர்கள் புலவராக விளங்கிய திறம் குறித்து குறிப்பிட்டுள்ளார் அரங்க இராமலிங்கம்.

பாண்டிய வேந்தர்களில் அண்டர்மகன் குறுவழுதியார், அறிவுடை நம்பி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி, கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, குறுவழுதியார், தலையானங்கனாத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், நல்வழுதி, மதிவாணன், மாலைமாறன், மாறன்வழுதி, முடத்திருமாறன் என்போர் புலவர்களாக வீற்றிருந்த மன்னர்களாவர்.

பாண்டியன் அறிவுநடை நம்பி

பாண்டியன் அறிவுடை நம்பி அகநானூற்றிலும், புறநானூற்றிலும், குறுந்தொகையிலும் பாடியதாகப் பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவன் அறிவுடை நம்பி என்று போற்றப்பட்டு அழைக்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின்

கருத்தாகும். இம்மன்னன் மக்கட்செல்வத்தைப் பற்றி புறநானூற்றில்,

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
கிட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும் [24]

என்னும் பாடல் மூலம் விளக்குகின்றார்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

இம்மன்னன் பாண்டிய வேந்தருள் குறிப்பித்தக்க இடத்தைப் பெற்றவனாக விளங்குகின்றான். **பூதப்பாண்டியன் அறிவும் ஆற்றலும் ஒழுக்கமும் நிரம்பியவன். நண்பர்களைப் போற்றும் பண்பினன், மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் ஆகியோரை நண்பராகப் பெற்றவன். தன் மனைவி கோப்பெரும்பெண்டின் பால் பேரன்பு கொண்டவன். இவனும் இவன் மனைவியும் தேர்ந்த புலமையாளர். ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதுபவன் என்பதை இவன் கூறும் வஞ்சினத்திலிந்து உணர்ந்து கொள்ளலாம்** [25]

என்று கூறுவர்.

இவன் திதியன் என்னும் மன்னனோடு கொண்டிருந்த நட்பினை,

...பொருநர் செல்சமங் கடந்த வில்கெழு
தடக்கைப் பொதியிற் செல்வன் பொலந்தேர்த்திதியன்[26]

என்னும் அகநானூற்றுப் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

இப்பாண்டிய மன்னன் சிறந்த புலமையயாளனாகவும், சிந்தனையாளனாகவும் விளங்கியுள்ளான் என்பதை இவர் இயற்றிய பாடல்களால் அறிய முடிகிறது.

உண்டா லம்ம இவ் வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும்இலரே; முனிவிலர்
துஞ்சலும் இயர்பிறர் அஞ்சுவதஞ்சிப் [27]

என்னும் புறநானூற்றுப் பாடல் இவரது புலமைத்திறனுக்குத் தக்க சான்றாய் அமைந்துள்ளது. தன் நலத்துக்கென எதையும் முயலாமல், பிறர் நன்மைக்கே முயலுகின்ற வலிய முயற்சியை உடைய சான்றோர்கள் இவ்வுலகத்தில் இடையறாமல் தோன்றி வாழ்வதனாலே இவ்வுலகம் இன்னும் அழியாமல் நிலைபெற்றுள்ளது என்னும் உயரிய கருத்தினை இப்பாடல் உணர்த்தி நிற்பதனைக் காணலாம்.

இவர்களைப் போன்றே உக்கிரப்பெருவழுதி, பாண்டியன் நெடுஞ்செழியன், நல்வழுதி, மதிவாணன், மாலைமாறன், மாறன்வழுதி, முடத்திருமாறன் ஆகியோரும் புலவர்களாக இருந்து பாடல்கள் புனைந்துள்ளனர்.

சங்கப்புலவர்கள் நிலை

புலவர்கள் மன்னனை நம்பியே தங்கள் வாழ்க்கையை நடத்தினர் என்பதனைச் சங்க இலக்கியப் பாடல்கள் நிருபித்தமையை மறுக்கவியலாது என்பதை பழுமரம் நாடிச் செல்வன பறவைகள் அவைபோலத் தமக்குப் பரிசில் வழங்குவேரை நாடிச்செல்பவர் புலவர்கள் அங்கும் தம் வல்லமைக்கு ஏற்பப் பாடிப்பெறும் பரிசிலால் மகிழ்வர். தாம் மகிழ்வதோடன்றித் தாம் பெற்ற பொருள் கொண்டு தம் சுற்றத்தாரையும் மகிழ்விப்பர். தாம் பெறும் பொருள்களைப் பேணிக்காக்கும் இயல்பும் இல்லாதவர், தம்மைப் புரப்போரால் பெறும் சிறப்புக்காக இவ்வாறு வருந்தி நாளும் அலைவதே இப்பரிசிலர்களுடைய வாழ்க்கையின் தன்மையாகும். பிறருக்குக் கொடுமை செய்தலை அறியாதவர். கல்வியில் தம்முடன் பகைத்தவரை அவர் நாண வென்று, செம்மாந்து நடந்து, அவ்விடத்தில் இனிதாக ஒழுகும் இயல்பினர். அவ்வாறு ஒழுகும் பொழுது ஓங்கிப் புகழுடன் நிலம் ஆளும் வேந்தரைப் போன்றே சீரும் சிறப்பும் உடையோராய் விளங்கியுள்ளனர் என்று அறிய முடிகின்றது. இச்செய்தியை,

சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பெரும்பாலும் புலமையினையே

தொழிலாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். கறி சோறுண்டு வருந்து தொழிலல்லது பிறிது தொழில் அறியாது [28]

இருந்துள்ளமை புலனாகின்றது. பாணர்கள் மட்டும் சில நேரங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதனால் புலவர்கள் அரசர்களை அண்டி இருந்தனர் என்பது புலனாகும். தங்களை ஆதரிக்கும் மன்னர்கள் இல்லாத காலத்தில் வறுமையில் உழன்ற நிலையினையும் பல பாடல்களில் (புறம்-68, 139, 159, 164,196, 210, 211, 266, 375, 376, 373) காணமுடிகின்றது. பழுத்தமரம் நாடிச்செல்லும் பறவைகள் போல ஊர் ஊராகச் சென்று வள்ளல்களைத் தேடும் நிலைமையில் இருந்துள்ளன. எனவே அக்காலப் புலவர்கள், புரவலர்களை நாடி வாழும் வாழ்க்கையினை மேற் கொண்டிருந்தனர் என்பது புலனாகின்றது. இப்புலவர்களின் வாழ்க்கைக்கு கொடி படர்வதற்கு ஏற்ற கொழு கொம்பாக அரசன் இருந்திருக்கிறான். அதே நேரத்தில் புராதன காலந்தொட்டு, இவர்களுக்குச் சமூகத்தில் பெருமதிப்பு இருந்துள்ளது. சடங்கு செய்யும் மாந்திரீகராகவும் நல்லது கெட்டது அறிந்தவராகவும் புலவர்கள் இருந்தனர். முதுவாய்ப்புலவன், அருஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவன், பொய்யா மொழிப் புலவன் என்னும் தொடர்கள் இவர்களது சமூக உறவுகளின் பெருமையைப் பறைசாற்றுவன வாய் உள்ளன[29] என்று கூறுவார் கோ.கேசவன்.

புலவர்களுக்கும் அரசர்களுக்கும் இருந்த உறவு

தமிழகத்தை ஆண்ட வேந்தர்கள், மன்னர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள் ஆகியோர் சான்றாண்மை நிறைந்த அறிஞர்களோடு உறவுகொண்டு வாழ்வதனைத் தம் கடமையாகவே கொண்டிருந்தனர். அறிவில் முதிர்ச்சியும், தேர்ந்த உலகியில் அறிவும் கொண்டவர்களாகப் புலவர்களும் இருந்துள்ளனர். எனவே புலவரோடு உறவு கொள்வதனைத் தம் முதற்கடமையாகக் கொண்டனர் என்பதாகும் புலனாகிறது.

பழந்தமிழில் பாராளும் மன்னர்களுக்கும் பாவாணர்களுக்கும் உள்ள உறவு, கவிஞனுக்கும் சுவையனுக்கும் உள்ள நெருக்கம் போன்றதாகவே கருத முடிகிறது. புலவர்கள் பாடுதலை அவர் தம் கடனாகக் கொண்டனர். சமுதாய அமைப்புப்

பின்னணியில் இரவலர்க்குப் பெருமதிப்பும் சிறப்பும் மக்களிடமும் மன்னனிடமும் இருந்துள்ளன. இதனைப் பாண்கடன் என்ற மரபுத் தொடரால் அறியலாம். அன்றியும் கடன் என்ற சொல்லின் பொருட்சிறப்புப் புலவர்கள் பால் மன்னர்கள் கொண்ட மதிப்பையும், சமூதாயத்தில் அவர்களுக்கு இருந்த பிடிப்பையும் உணர்த்துகிறது [30] எனக் கூறியுள்ளார் கதிர்.மகாதேவன்.

சங்க இலக்கியத்தில் அரசர்களுடைய சிறப்புக்களுள் புலவர்களுடன் அவர்கள் கொண்டிருந்த நட்பைOOயும் ஒன்றாகக் கருத முடிகின்றது. அரசர்களைப் பாடிப் பரிசில் பெறுவதைத் தொழிலாகக் கொள்ளாமல், அவர்கள் தவறுகள் செய்தவிடத்து அஞ்சாது கண்டித்து திருத்தும் இயல்பினை உடையவராகவும் புலவர் பெருமக்கள் விளங்கினர்.

அரசனது அரசியல் வாழ்வில் தடையிடவும், அரசியல் நடவடிக்கைகளில் நன்மை பயன்பனவற்றை எடுத்துக்கூறவும், தீமைதரும் செயல்களை எடுத்துரைக்கவும், தேவையான சமயங்களில் அறிவுரை கூறவும், அரசன் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டவும், மன்னரது ஆட்சியைச் செம்மைப்படுத்தவும் உரிமை பூண்டவராக விளங்கினர் புலவர் பெருமக்கள்.

வேந்தருக்கும் புலவருக்கும் இருந்த பலஉறவு நிலைகளைப் பற்றி விளக்கமாகச் சங்கப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. பழந்தமிழ் வேந்தர்களிடம் புலவர்கள் பெற்றிருந்த செல்வாக்கு புகழத்தக்கது ஆகும். தம்மை நாடி வந்த புலவர் பெருமக்களை அன்புடன் வரவேற்று, வேண்டியன நல்கிப் போற்றினர் வேந்தர். தம்மை விட்டுப் பிரியும் பொழுது ஏழடி புலவரின் பின் சென்று வழியனுப்பும் பண்பாட்டைப் பெற்றிருந்தனர். இத்தகைய பண்பு நலன்களைப் பழந்தமிழ் வேந்தர் பெற்றிருந்ததால், அவர்களைப் புலவர்கள் தாங்கள் விரும்பிய நேரத்தில் காணவும், கண்டு பேசும் உரிமை பெற்றிருந்தனர். புலவர்களின் வரவைத் தடுக்காதனவையாக அந்நாளைய வேந்தரின் வாயில்கள் விளங்கின[31] என்று புலவர்களுக்கு அரசர்கள் தந்திருந்த இடத்தினைப் பற்றி எடுத்துரைத்துள்ளார் அரங்க.இராமலிங்கம்.

அன்றைய மன்னர்கள், புலவர் தம்மைப் புகழ்ந்து பாடுவதைப் பெரும் பேறாக

எண்ணினர். அவ்வாறு பாடப் பெற்றவர்கள் விண்ணுலக இன்பத்தை அடைவர் என்ற நம்பிக்கை கொண்டவராக அந்நாளைய மன்னர்கள் விளங்கினர் என்பதனை,

வேற்றுமை இல்ல விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந்த தோரை எண்ணுங்காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே [32]

இவண் இசை உடையோர்க்கு அல்லது அவனது
உயர்நிலை யுலகத்து உறையுள் இன்மை [33]

என்னும் புறநானூற்று பாடல் மூலம் அறியலாம்.

இதுபோன்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறும்போது, என்னை எதிர்த்துச் சிறுசொல் கூறிய பகைவரை வெற்றி கொள்வேன். அவ்வாறு கொள்ளேனாயின், இவன் வீரமற்றவன்; போர் செய்யும் ஆற்றல் இல்லாதவன் என்று கூறிப் புலவர்கள் என்னைப்பாடாது நீங்குவாராக! என்று கூறுவது இங்கு கருத்தத்தக்கதாகும். இச்செய்தியை,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவர் ஆக
உலகமொரு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை [34]

என்னும் புறப்பாடல் கொண்டு அறியலாம்.

இதே கருத்தினை விளக்கும் விதத்தில் திருவள்ளுவர்

நீலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரை
போற்றாது புத்தே ளுலகு [35]

என்று குறிப்பிட்டுள்ளார்.

புலவருக்கும் வேந்தருக்கும் இடையிலான அன்புநிலை

புலவரிடம் வேந்தர்அன்பு பாராட்டியதைப் போன்றே, புலவரும் வேந்தரிடம்அன்பு கொண்டிருந்தனர். புலவரின் அன்பு அவர்தம் செயல்களில் விளங்குகிறது. வருவோர்க்கெல்லாம் இல்லையென்னாது வாரி வழங்குதல் தலைவனது காலடியில் சிறுமுள்ளும் நோவு செய்யாது ஒழிய வேண்டும் என்று புலவர் விரும்பியதை,

அன்னன் ஆகலின் எந்தை உள்அடி
முள்ளும்நோவ உறாற்கதில்லை [36]

என்னும் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூற்றாகும். அவருடைய அன்புள்ளத்தைப் புலப்படுத்துகிறது. தம்மை நாளும் புரக்கும் தலைவன் தன் நெஞ்சிலே இருப்பதை

..... என்
நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே [37]

எனப்புலவர் ஆத்திரையனார் குறிப்பிடுகின்றார். இதனால் வேந்தரிடம் தவறு கண்ட பொழுது கடிந்துரைத்தலும், நல்லன கண்டபொழுது வாழ்த்துதலும் புலவர்களது கடமையாக இருந்தது என்பதை அறியமுடிகின்றது.

புரவலர்களின் பரிசில் திறம்

அன்பு மிகுதியால் தம் வேந்தனைப் பற்றி மிகுதியாகப் புலவர்கள் பாடுவதும் உண்டு. புலவர் எவரும் இனிப்பாடிப் பரிசில் பெறமுடியாத அளவிற்குக் கபிலர் திருமுடிக்காரியைப் பாடியுள்ளார் என்பதனை,

புலனழுக் கற்ற னந்த னாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன் [38]

என்று புறநானூறு காட்டுகிறது.

அன்பு மிகுதியால் புலவரும் வேந்தரும் ஒருவரை ஒருவர் மார்பொடு மார்புறப் பொருந்தத் தழுவிக்கொள்ளும் வழக்கம் சங்க காலத்தில் இருந்திருக்கிறது. இதனை

முயங்கல் ஆற்றிசின் யானே பொலந்தேர் [39]

என்றும்

முயங்கினேன் அல்லனோ யானே மயங்கி [40]

என்னும் புறநானூற்றுப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

சங்க அகத்துறைப் பாடல்களில் புலவர்கள் அரசர்களது ஆட்சித்திறம், பண்பு நலன்கள் பற்றி புலவர்களிடம் கொண்டிருந்த பெருமதிப்பு ஆகியவற்றை பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளனர். புலவர்களைப் போற்றி, அவர்களது புலமைத் திறனுக்கு ஏற்ப, பாராட்டி பரிசில் அளித்து மகிழ்வித்துள்ள மன்னர்கள் பலரை நற்றிணையும், அகநானூறும் கலித்தொகையும் எடுத்துரைப்பதனைக் காண முடிகின்றது.

புலவர் வறியவர் என்னும் நிலையிலிருந்து ஏற்றம் பெற்றுச் சிறப்புற்றிருப்பதும் வேந்தன் தான் நாடாள்பவன் என்னும் நிலையைக் கருதாது, வருவிந்து பார்த்திருக்கும் நல்லறத்தானாக விளங்குவதும் குறிப்பித்தக்கதாக உள்ளது. மன்னன் மகளைத் தன் மகள் எனக்கூறும் அளவிற்குச் சிறப்புப்பெற்று விளங்கினர் புலவர் பெருமக்கள் இதனை,

இவர்யார் என்குவை யாயின் இவரே
ஊருடன் கிரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பின் கோமான் [41]

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

வேந்தன் புலவரை அன்புடன் வரவேற்று அவருக்கு வேண்டுவன தந்து அன்பொழுகக் கனிவுடன் அவர்களைப் பார்ப்பான் என்றும், அவனது அருள் பார்வையில் புலவரின் உள்ளம் உருகுவதோடு, எலும்புகளும் மெழுகென உருகுவதாகப் பொருநாற்றுப்படை கூறுகிறது. இதனை,

ஒன்றியான் பெட்டா அளவையினொன்றிய
கேளிர் போலக் கொள்கைகோளம் வேண்டி [42]

என்னும் பாடல் எடுத்துக் காட்டுகின்றன.

மிகப்பெரிய பரப்பளவுள்ள நிலத்தை ஆளும் வேந்தர்கள் மட்டுமல்லாமல், அவர்களுக்கு உட்பட்டு வாழும் குறுநில மன்னர்களும் புலவர்களைப் போற்றிப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்துள்ளனர் என்பதனை,

வெம்மலை அருஞ்சுரம் நீந்தி ஐய!
சேறும் என்ற சிறு சொற்கு இவட்கே
வசைஇல் வெம்போர் வானவன் மறவன் [43]

என்னும் அக நானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகின்றது. சேரமன்னனின் கீழ் ஆட்சி செய்த பிட்டன் என்னும் குறுநில மன்னன் புலவர்களை முகம் மாறாமல் நடத்துவான் என்பதையும், புலவர்களுக்கு அவர்கள் விரும்பும் பொருள்களை அளித்த அணிகலன்களையும், இன்னபிற செல்வங்களையும் தந்து அவர்களை வறுமையில்லதவர்களாக அனுப்பி வைப்பான் என்பதனையும் இப்பாடல் புலப்படுத்துவதனைக் காண முடிகிறது. அகநானூற்றின் 152வது பாடலின் தித்தன், நன்னன், நள்ளி, ஆய் ஆகிய வள்ளல்கள் பற்றியும் அவர்களது வள்ளல் தன்மை குறித்தும் பரணர்,

நுண்கோல் அகவுநர்ப புரந்த பேர்இசைச்
சினம்கெழு தானைத் தித்தன் வெளியின்
இரங்குநீர்ப் பரப்பின் காலை அம் பெருந்துறை [44]

என்று பாடிச் சிறப்பிக்கின்றார். இதில் தித்தன் என்பவன் பாணரைப் புரந்த பெரிய புகழுடையவன் என்றும், ஆய் என்னும் வள்ளலும் பரிசினை எண்ணி வந்த புலவர்களுக்கு அவர்களது தேவைக்கும் அதிகமானவற்றைக் கொடுத்து மனநிறைவோடு வழியனுப்புவான் என்றும் குறிக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.

மேற்குறித்த செய்திகளால் புலவர்களுக்கு வரையாது வழங்கும் பண்பினராய் அக்காலத்து மன்னர்கள் விளங்கினர் என்று அறியமுடிகின்றது. மன்னர்களது சிறப்பான பண்புகளில் இவ்வள்ளண்மைப் பண்பு குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்கியதனைக் காண முடிகின்றது. வேந்தரே அன்றி வீரரும் கொடைப்பண்பு மிக்கோராய் விளங்கினர் என்னும் வாழ்வியல் கூற்றினைப் பெற முடிகிறது.

புலவர்களை வேந்தர்கள் போற்றியமை

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் உரைத்த வஞ்சினம், பழந்தமிழ்ப்புலவர் பெருமக்களின் சிறப்பான வாழ்வை உணர்த்துகிறது.

ஓங்கிய சிறப்பினுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக் வென் னில வரை [45]

எனக் குறிப்பிடும் செழியனின் கூற்று கருதத்தக்கது.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி எனப் புலவரின் புலமைத் திறத்தைக் குறிப்பிடுகின்றனர். அப்புலவரால் தன் நாடும் தானும் பாராட்டுப் பெறுவதை உயர்வாக மதித்தனர். வேந்தனின் தமிழ் நெஞ்சம் கபிலரின் புலமையை,

செறுத்த செய்யும் செய்நெந் நாவின்
வெறுத்த கேள் விளங்கு புகழ்க் கபிலன் [47]

என மாந்தரஞ்சேரலிரும் பொறை மதிப்பிடுவது உணரத்தக்கதாகும்.

ஒரு நாட்டுக்குரிய வேந்தன் அந்நாட்டுக்குள் தன்னை எதிர்த்து நின்று தடுப்பார் எவரும் இன்மையால் எவரும் கேளாதே, மாறாக எல்லோரும் எதிர்வந்து போன்ற, இறுமாந்து தலைதூக்கிச் சென்று அரசவையில் புகுவது போல் குட்டுவன் கோதை அரசவையில் சென்று இருத்தல் புலவனுக்கு மிகமிக எளிது என்பதை,

உடையோர் போல விடையின்று குறுகிச்

செம்மனாளவை யண்ணாந்து புகுதல்

எம்மன வாழ்க்கையிரவலர்க் கெளிதே [47]

எனக் கோலாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகளால் மன்னரைவையில் நினைத்த மாத்திரத்தில் புகும் உரிமையினைப் புலவர்கள் பெற்றிருந்தனர் என்பது புலனாகும்.

புலவர் வேந்தர்க்கு கூறும் அறிவுரை

வேந்தரிடம் பரிசில் பெற்ற புலவர்கள் பரிசிலுடன் வறிதே மீளாது தக்க அறிவுரைகளைக் கூறிச்செல்லுதல் வாழ்வியல் மரபுக் கொண்டிருந்தனர். வேந்தனிடம் தவறு கண்டபொழுது தமக்குப் பரிசில் நல்கினானே எனத் தாழ்ந்து விடாமல், கடுமையான அறிவுறுத்தும் நெஞ்சுரத்தைக் காணமுடிகிறது. இம்மரபினையே வள்ளுவர்,

இடிப்பாரை இல்லாத எமரா மன்னன்

கெடுப்பா ரிலானுங் கெடும் [48]

எனக் குறிப்பிடுகின்றார்.

சேரமான் கருவூர் ஏறிய ஓள்வாட்கோப் பெருஞ்சேரலிரும் பொறைக்குப் புலவர் நரிவெரூஉருத் தலையார்,

அருளு மன்பு நீக்கி நீங்கா

நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்

குழவி கொள்பவரின் ஓம்புமதி

அளிதோ தானே யது பெற லருங் குரைத்தே [49]

என்று அறிவுரை கூறுகின்றார். இதில் ஆளும் வேந்தனிடத்தில் அன்பும் அருளும் நீங்காது நிறைவுற்றிருத்தல் வேண்டும். அவை அவன்மாட்டு இல்லையாயின் அவன் ஆட்சி நெடிது நாள் நிலைபெற்றிராது. அன்பையும், அருளையும் அடிப்படையகாகக் கொண்ட ஆட்சியையே மக்கள் விரும்புவர். இவற்றின் அடிப்படையில் அமையாதது

அறநெறியற்ற ஆட்சியாகும். அறனற்ற ஆட்சி அழியும். எனவே பெற்ற குழந்தையைத் தாய் பேணுவது போல நாட்டைக் காக்க வேண்டும் என்னும் கருத்தினை இப்பாடலில் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

பல்யானை செல்கெழு குட்டுவனின் வீரச் சிறப்பினை எடுத்துரைக்கும் பாலைக் கௌதமனார் அவன் ஆட்சி நல்லாட்சியாக அமைய வேண்டும் என்பதனை,

சினனே காமம் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்சொல் அன்புமிக வுடமை
தெறல்கடு மையொடு பிறவிமிவ் வுலகத் [50]

என்னும் பதிற்றுப் பத்துப் பாடல் மூலம் எடுத்துரைக்கின்றார்.

இதில், நல்லரசு பல்லோர் பழிக்கும் கொடுங்கோல் அரசாக ஆவதற்கு, அவ்வரசுடையான் கொள்ளும் சினம், காமம், கையிகந்த கண்ணோட்டம், அச்சம், பொய் அளவுக்கு மீறிய அன்புடமை, கையிகந்த தண்டம் ஆகியவை காரணம் ஆகும். எனவே தீச்செயலை நின் மனத்தாலும் நினையாது, அறவினைகளை நாள்தோறும் செய்க. நாட்டு மக்கள் ஒருவரையொருவர் துன்புறுத்தாமலும், பிறர் பொருளைத் திருட விரும்பாமலும், கடலும் கானமும் பயன்பல ஈனுமாறும் நல்லாட்சி நடத்துக. குற்றமறக் கற்றுத்துறைபோகிய அறிவுடையோர் கூறும் அறநெறி வழி ஆட்சி நடத்துக. நின் அன்பு மனைவியரோடு மகிழ்ந்து பிரிவின்றி வாழ்க. உள்ள பொருளை ஊராரோடு உண்டு மகிழ்க! என்று பல நிலைகளில் வாழ்வியல் பேறாகவும் பாலைக் கௌதமனார் அறிவுரைக்கின்றார்.

உழவுத் தொழிலுக்கு அடிப்படைத் தேவையாக அமைந்திருப்பது நீர். உழவுத் தொழிலைப் போற்ற நினைக்கும் வேந்தன் முதலில் நீர் நிலைகளைப் பெருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். குடபுலவியனார் என்னும் புலவர், பசியும், பகையும் இன்றி மக்கள் வாழும் நாடே சிறந்த நாடாகக் கொள்ளப்படும். பசியும் பிணியும் பகையுமின்றி மக்கள் வாழவேண்டுமானால் உணவுக்குறை உண்டாதல் கூடாது. உணவு நன்னிலமும் நீறைநீரும் உண்டாக உண்டு; நீர் அற்றவழி நிலம் இருந்தும்

பயன் இன்று, எனவே, நீர் நிறைந்து நிறையக் கிடைக்குமாறு நீர்நிலை பலவற்றை ஆங்காங்கே ஆக்கித் தருதல் வேந்தனுடைய தலையாய கடமை. இம்மண்ணுலகில் நிலைத்த புகழை விரும்புவோர். நீர் இன்றியமையாமையை உணர்ந்து அதற்கு வேண்டவென செய்வர் என்பதை,

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே யுலகின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடுநீரே [51]

எனப் புலவர் குடபுலவியனார், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்துவது எதிர்கால விடியலுக்கும் அரசுக்கும் பொருந்தும் எனக் கூறலாம்.

ஆண்பாற்புலவர்களின் வாழ்வியல் கூறுகள்

அம்மூவனார் இப்புலவர் பாடல்களில் பெரும்பான்மையான நெய்தல் நில வருணணைகளைக் கொண்டுள்ளன. ஐங்குறு நூறு பாடல்களுள் நெய்தல், பகுதிக்குரிய நூறு பாடல்களையும் பாடியவர் அம்மூவனார். நெய்தல் நிலத்துக்கு உரிய பயிர் பச்சைகளைப் பற்றியும் உயிரினங்களைப் பற்றியும் அம்மூவனார் தரும் குறிப்புகளை நோக்குமிடத்து, இயற்கை வருணனைகள் மட்டுமின்றிக் கடலையும் மாலைக்காலத்தையும் நோக்கிப் பேசிய கூற்றாகவும் இரண்டு பாடல்கள் உள்ளன.

நெய்தல் நில வருணனைத் துறையில் அம்மூவனாரின் பாடல் திறம் போற்றுதற்குரியது. அவருடைய வருணனைகள் கடற்கரை, கழி, கடற்கரைச் சோலை ஆகியவற்றோடு நின்றுவிடுகின்ற என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது. கீழ்க்காற்றால் எழுகின்ற அலைகள் கரைநோக்கி வந்து மணல் மேட்டைச் சிதைக்கும் செயலைப் பாடுகின்றார்.[52] கடல் நீரகத்து நண்டினால் தாக்கப்படும் மீன் பற்றிக் குறிப்பிடுகின்றார்.[53] கூரிய காலொடு விளாங்கும் அன்னமும்.[54] பெரிய கடற்கரையில் வாழ்ந்து கரிய கிளையுடைய புன்னையில் தங்கும் சிறு வெண்காக்கையும் கழிநீரில்

உணவுதேடி உண்டு தங்கும் குருகும் இவரால் சுட்டப்படுகின்றன. இவ்வாறு பண்முகமாக இவர்தம் நோக்கம் படர்கின்றதாயினும், கடல் நடுவே செல்லவில்லை. கடல் நடுவில் எழக்கூடிய புயலும் சூறாவளியும் இவர் பாடலில் காணவில்லை; நாவாய் ஏறிக்கடல் கடக்கும் காட்சியும் அத்தகைய பயணத்தில் ஏற்படக்கூடிய இடுக்கண்களும் இவர் பாடலில் இல்லை. கடற்பயணத்தில் இவர்க்கு அனுபவம் இல்லை என்பதே நாம் கொள்ளத்தக்க முடிவு. கானற் சோலையின் புன்னை[55],ஞாழல்[56] ஆகிய மரங்களையும், அவற்றின் கிளைகளையும் கழிகளிலும் இரைதேடும் குருகு[57] முதலிய பறவைகளையும், கடற்கரையிலே விரிந்து மணம் பரப்புகின்ற பல்வகை மலர்களையும் பாடுகின்ற அளவினை நோக்குமிடத்து, அலைகளையும், மீன்களையும் குறித்துப் பாடும் அளவு மிகக் குறைந்ததேயாகும். அழகு குலவும் அடைமொழிகள் வாயிலாகச் சுவை மிக்க சொல்லோவியங்களை உருவாக்கியுள்ளார்.

அம்மூவனார் நற்றிணைப் பாடலில் அம்மூவனாரின் கசிந்த உள்ளத்தோடு கனிந்த நகைச்சுவையும் காணலாம். கடற்கரைச் சோலையில் நாவற்கனி பழுத்திருக்கின்றது. நாவற் கொத்தினைக் கண்டது ஒரு வண்டு. அக்கொத்தினைத் தன் இனத்தின் திரள் என நினைந்து, அத்திரளினை நோக்கி மொய்க்க விரைந்தது. மொய்த்த தும்பியைக் கண்டது ஒரு நண்டு. நாவற்பழத்திற்கும் தும்பிக்கும் வேற்றுமை கண்டுணராத நண்டு தும்பியைப் பழமென நினைத்துப் பற்றிக் கொண்டது. அகப்பட்ட வண்டு விடுதலை கருதித் துன்ப ஒலி எழுப்பியது. யாழிசை போல் ஒலித்த அத்துன்பப் பூசலை ஆண்டு இரைதேடிக் கொண்டிருந்த நாரை ஒன்று கேட்டு, விரைந்து வந்தது. நாரையின் வருகை நண்டுக்குத் துன்பம் தருவதாயிற்று. வண்டினை விடுத்தது நண்டு;

பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழம் செத்துப்
பால்கால் அலவன் கொண்ட கோட்டு அசாந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்தி விடுக்கும் [58]

இப்பாடலில் அமைந்துள்ள காட்சி வேறுவிதமாகிய இயற்கை ஓவியமாய் மட்டும் அமையவில்லை. தோழி கூற்றாய் வருகின்ற இப்பாடலில் குறிக்க நினைக்கும் கருத்துக்கு ஏற்ற தலைவனைக் உள்ளுறையுவமமாய் காட்சியாகிறது.

ஒதலாந்தையார்

சிறியிலைக் குறுஞ்சினை வேம்பு[59] என்பன போலச்சில சொற்கள் கொண்டு அழகிய ஓவியத்தை நம் மனத்திரையில் எழுப்ப வல்லவர். இவர் பாடிய நூற்று மூன்று பாடல்களில் நூற்றிரண்டு பாடல்கள் பாலைத்திணைக்கு உரியவை.

இவருடைய பாடல் ஓவியங்களில் ஊடாடி வருகின்ற புள்ளினங்களும் விலங்கினங்களும் உள்ளத்தே இரக்க உணர்வைப் பெருக்கும் திறத்தால் சுவைபெற நிலவுகின்றன என்பதை

உலறுதலைப் பருந்தின் உளிவாய்ப்பேடை
அலறுதலை ஒமை அங்கவட்டு ஏறிப்
புலம்கொள விளக்கும் [60]

என்ற காட்சியும்,

வேனில் அரையறுத்து இலைஒலி வெரீஇப்
போகில்புகா உண்ணாது பிறிதுபுலம் படரும் [61]

என்ற காட்சியும் படிப்பவர் நெஞ்சைத் தம் எழிலால் கவர்கின்றன எனினும், அக்காட்சிகளில் வரும் பறவைகளின் துன்பத்தால் இரக்கமும் உடனெழச் செய்கின்றன. யானைகள் துதிக்கை நிலம் தோய அமைவது நல்லிலக்கணம் எனினும் வெயிலால் உலர்ந்து வெப்பத்தால் ஆடு மிகுந்திருக்கும் பாலை வழியில் யானை ஒன்று தன் கை நிலத்தில் படாமல் செல்கின்றதாம். துதிக்கை நிலத்தில் பட்டதும் சுட்டுத் துன்பம் தருதலால் அஞ்சி அஞ்சிப் போகின்றது யானை,

பொறிவரித் தடக்கை வேதல் அஞ்சிச்
சிறுகண் யானை நிலந்தொடல் செல்லா [62]

வெப்பத்தால் நீர் வேட்கையுற்றுத் தவிக்கும் மற்றொரு யானையின் ஓவியம்.

நீர்நசைக்கு ஊக்கிய உயவல் யானை
இயம்புணர் தூம்பின் உயிர்க்கும் [63]

இயற்கைக் காட்சியை விடுத்து விலகிச் செயற்கைச் சூழலில் வாழ்கின்றோம் நாம். யானையின் நீர் வேட்கைத் துன்பம் நம்உள்ளத்துக்கு எட்டாத ஒன்று. மேலும் நெடுவங்கியத்தைக் கண்டவர் அரியர். எனவே, வருந்திய யானையின் மூச்சு நெருவங்கிய ஒலிபோல இருந்தது என்று சொல்லும் இந்த ஓவியத்தைப் பலர் உணர முடியாது. எனினும் ஒதலாந்தையார் இக்காட்சியின் இரு கூறுகளையும் நேரே கண்டு உணர்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவாக விளங்குகின்றது.

ஓரம்போகியார்

ஐங்குறுநூற்றின் மருதத் திணைப்பாடல்களைப் பாடியவர் ஓரம்போகியார். இப்புலவரின் வேறுசில பாடல்களாகிய அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகிய தொகை நூல்களிலும் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றுப் பாடல், குறுந்தொகையுள் இரண்டு பாடல்கள் ஆக மூன்று பாடல்கள் தவிர ஏனைய யாவும் மருதத் திணைக்கே உரியவை.

மருத நிலத்தின் பல திறக்காட்சிகளை ஓரம்போகியாரின் பாடல்களின் அமைந்துள்ள விதம் மருதம் என்று நினைக்கும் போது, ஏனோ புலவர்கள் எல்லோரும் எருமையைப் பற்றிப் பாடாமல் விடுவதில்லை. ஓரம்போகியாரும் சில பாடல்களில் எருமை பற்றிய ஓவியங்களைத் தீட்டிக் காட்டியுள்ளார். கொம்புகளின் இடையே மிடைந்து கிடக்கும் பகன்றை மலர்க்கொடியோடு தோன்றும் எருமையை நம் அகக்கண்முன் அவர் நிறுத்துமிடத்து சொற்களால் உயிரோவியம் தீட்டுதலில் அவர்க்கு உள்ள பாட்டின் உள்ளக்கிடக்கையை உணர்கிறோம்.

குழம்பாய்க்கிடக்கும் சேற்றிலே இரவெல்லாம் புரண்டு கிடந்து பொழுது புலர்ந்ததும் புறப்படுகின்றது எருமை. அந்தச் சேற்றிலே கிடக்கும் விரால் மீன்கள் சிதையும்படி மிதித்துக்கொண்டு புறப்படுகின்றது அது. எங்கோ இருந்த பகன்றைக்

கொடி எருமையின் வீரத்தால் அதன் கொம்பில் சிக்கிப் பிணைந்து கிடக்கிறது. அந்தக் கொடியில் உள்ள மலர்கள் வெள்ளையாக உள்ளன. வெண்ணிறப்பகன்றைப் பூவைக் கொம்பிலே சூடிப்பெரும்போக்காக வருகின்ற எருமை, போர்களத்தில் புகும் வீரரைப் போல் காணப்படுகின்றது.

ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற் றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குரு உக்கொடிப் பகன்றை சூடீ மூதூர்ப
போர்ச்செறி மள்ளரின் புகுதரும் [64]

தும்பைப் பூப்போல் வெள்ளையாயிருக்கும் பகன்றை மலர்சூடி, எருமை ஊர்க்குள் நுழைந்தது என தெளிவாகப் புலவர் பாடியிருக்கலாம். ஆனால், அவ்வாறு பாடாமல், நிறம் அமைந்த பகன்றைப் பூவைப் போர் வீரர் போலச்சூடி, அவர்களைப் போல் புகுந்தது என்று பாடுவதில் ஒரு குறிப்பு உண்டு. ஆம்பல் மலரை மேய்ந்து இரவெல்லாம், சேற்றிலே திளைத்துக் கிடந்த எருமை, தன்னளவில் இன்பத்தின் எல்லையைக் கண்டுவிட்டது. மனம் செருக்கிய அந்நிலையில் வரால் மீனைச் சிதைக்கின்றோமே என்பது பற்றிக் கூட கவலைப்படாமல், கொம்பில் சிக்கிய பகன்றைக் கொடி பற்றியும் உணராமல், பெருமிதத்தோடு வருகின்றது. அதிரப்பொருவதன் அடையாளமாகத் தும்பை சூடி மனச்செருக்கும் உடற்செழிப்பும் தோற்றப் போர் முனைக்கண் செறிந்து சேரும் போர்வீரனின் நிலை ஒன்றுதான் பொருத்தமான, உவமையாகப் புலவர்க்குத் தோன்றுகின்றது. 'போர்ச்செறி மள்ளரின்' என்ற சில சொற்களாலாகிய ஒரே உவமை வாயிலாக, அவர் அணியும் தும்பைப் பூப்போல் எருமையின் கொம்பினிடைச் சிக்கிய பகன்றை மலர் இருந்தது என்பதை உய்த்துணர வைக்கின்றார். மேலும் எருமையின் மனச் செருக்கும் உடற் கொழுப்பும் விளக்கமாகத் தோன்றும் வகையில் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு, அதே நிகழ்ச்சிகளைக் போர்வீரரின் செயல்களுக்கு ஏற்பக் கொள்ளுமாறு நம் சிந்தையைத் தூண்டுகின்றார். இவ்வாறு உவமையும் பொருளும் ஒன்றுக்கொன்று துணையாய் எழில் ததும்பும் உயிரோவியமாக தீட்டியுள்ளார் ஓரம்போகியார்.

கபிலர்

சங்கத்துச் சான்றோர்களில் ஒரே பாடலால் இன்று நம்மிடையே புகழுடம் பொடு உலவுவார் ஏறுக்குறைய முந்நூறுபேர்கள் ஆவர். தொகை நூல்களுக்கு நூறு பாடல்களுக்கு மேல் வழங்கும் நிலை பெற்றோர் ஐவரே ஆவர். இந்தச் சான்றோர் ஐவருள்ளும் முதல் இடம் பெறும் உரிமை கபிலர்க்கே உரியது. பத்துப்பாட்டு எட்டுத் தொகைகளில் கபிலர் பாடியனவாக இடம் பெற்றிருப்பவை 235 பாடல்களாகும். பாடல்களின் எண்ணிக்கையால் முதன்மை பெறும் கபிலர். பாடல் எண்ணிக்கை யாலும், எண்ணத்தின் வளத்தாலும் கபிலர் சீரிய நிலை பெற்றுயர்ந்து பொலிந்தவராவர். அவர் பாடியவற்றுள் 191 அகப்பாடல்கள் குறிஞ்சித் திணைக்கே உரியன. புறப்பொருட் பாடல்களிலும் குறிஞ்சிக் காட்சிகளைப் பலபட விரித்துக் கூறுவது இப்புலவர் வழக்கமாகும்.

புரவலனாய் இருந்து புலவரையும் கலைஞரையும் போற்றியவன் வள்ளல் பாரி; அப்பாரியின் அருள் நிழலில அமைவுற்ற வாழ்க்கை பெற்றதோடு மட்டுமின்றி, புலவரைத் தம் நண்பனாகவும் பேறு பெற்றவர் இப்புவலர் பெருமான் பாரிக்கு உரியது பறம்புமலை. அப்பறம்பு வழங்கிய இயற்கைச் சூழலிலே தம் வாழ்நாளைத் தமக்கினிய நண்பன் பாரியோடு கலந்து கழித்தவர் கபிலர். ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய இரு தொகை நூல்களிலும் குறிஞ்சித்திணைக்கு உரிய எல்லாப் பாடல்களும் கபிலரால் பாடப்பட்டவை. பத்துப்பாட்டினுள் எட்டாவதாக உள்ள குறிஞ்சிப்பாட்டினைப் பாடியவரும் கபிலரே. 261 அடிகள் கொண்ட அந்நெடும்பாட்டில் மலை வழங்கும் இயற்கைக் காட்சிகள் பலவாறு விரிவாகவும் நுட்பமாகவும் வருணிக்கப்பட்டுள்ளன. அப்பாடல் விதந்தோதப் பெறும் 99 மலர்களில்[65] பெரும்பான்மையானவை குறிஞ்சிக்கே உரியன.

ஐங்குறு நூற்றில் குறிஞ்சிப் பகுதியாக வரும் நூறு பாடல்களில் குரங்குப்பத்து[66] என்பது ஒரு பகுதி. அப்பகுதியில் அமைந்துள்ள பாடல்களில் குறும்பு நிறைந்த குரங்குகளின் காட்சிகள் சுவை ததும்ப அமைந்துள்ளன. அவையாவும் இயற்கையோடு பொருந்தி இனிமைதருகின்றன. குறுந்தொகைப் பாடல்களிலும் குரங்கின் செயலைக்

காணலாம். அவற்றுள் ஒரு பாடலில் வரும் காட்சி பின்வருமாறு; பாறையில் முட்டை இட்டிருக்கிறது மயில்; அந்த முட்டையை ஒரு குட்டிக்குரங்கு உருட்டி விளையாடுகின்றது.

கான மஞ்ஞை அறை ஈன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்

பலாச் சுளையைத் தின்று கொண்டிருக்கிறது ஒரு குரங்கு; அப்போது ஒரு வேடன் தன் கணையினை வில்லில் சேர்த்துக் குரங்கினைக் குறி பார்க்கின்றான். உணவில் உள்ளம் செலுத்தியும் தன் உயிரைக் காக்கும் ஆசையை விட்டுவிடவில்லை குரங்கு; போர்களத்தில் பாய்ந்து விரையும் குதிரைபோல, அண்மையில் இருந்த மூங்கில் மீது தாவித்தப்பித்துக் கொள்கிறது.

பலவிற் சேர்ந்த பழமார் இனக்கலை
சிலைவிற் கானவன் செந்தொகை வெரீஇச்
செருவுறு குதிரையின் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்[67]

கானகத்தின் இயற்கையாக வாழும் விலங்குகளை பலவாறு பாடியது போலவே. மனிதனுடைய சமுதாய வாழ்க்கையில் கலந்துவிட்ட விலங்காகிய பசுவினையும் ஓரிடத்தே ஓவியமாகத் புனைந்துள்ளார் கபிலர். மனிதரோடு கலந்து வாழும் பசு, இரை கொள்வதற்காகக் கானகம் செல்வது உண்டு அன்றோ? அவ்வாறு கானகம் சென்று மீண்ட பசுவினை அதன் கன்றாலும் அடையாளம் காண முடியவில்லை. கன்றுக்கும் மருட்சியூட்டும் வகையில், நிறம் மாறி மீண்டு உளது தாய்ப்பசு, கானகத்தின் புல் மேய்ந்தபோது காந்தள் மலின் மகரந்தப்பொடி அதன் உடல் முழுவதும் பொன்னிற மகரந்தம் பூசப்பெற்ற தாய்ப்பசுவைக் கண்ட கன்றுக்கு அடையாளம் தெரியவில்லை.

சிலம்பின் மேய்ந்த சிறு கோட்டுச் சேதா
அலங்குநிலைக் காந்தள் தீண்டித்தாது உகக்
கன்று தாய் மருளும் [68]

காட்சிகளை விரிவாக வருணனையாகப் பாடுவதோடு சில சிறு சிறு அடை மொழிகள்

கொடுப்பதன் வாயிலாகச் சொல்லோவியங்களைச் செம்மையும் எழிலும் படைத்தனவாக ஆக்கும் திறம் கபிலரிடம் சிறப்புற அமைந்தள்ளதைக் காணலாம்.

மாமூலனார்

பாலைத்திணைப் பாடல்களைப் பாடுவதில் திளைத்தமையால், பெருங்கடுங் கோவைப் 'பாலை பாடிய' என்னும் அடைமொழியால் சிறப்பித்துக் கூறினர். அந்த அடை மொழிக்கு மாமூலனாரும் முழுத்தகுதி உடையவராவர். ஆயினும் பாலைபாடிய மாமூலனார் என்னும் மரபு இல்லை. 'கடுங்கோ' என்னும் பெயர்க்கு உரியராய் வேறு சிலரும் சங்க இலக்கியத்துள் இடம் பெறுகின்றனர். ஆதலின் பாலைபாடிய பெருங்கடுங்கோ என அடை கொடுத்துப் பிரித்துணர்த்த நேர்ந்தது. மாமூலனார் என்னும் பெயர் சங்க இலக்கியத்துள் வேறு எவரையும் குறித்தல் இல்லை. எனவே அடைமொழி எதுவும் சேர்க்கப் பெறவில்லை. எனினும், பாலைபாடிய பெருஞ்சிறப்புப் பற்றிப் பாலைபாடிய புலவர் என்று சிறப்பிக்கும் தகுதி இப்புலவர்க்கு உண்டு.

மாமூலனாரின் பாடல்களில் வரும் இயற்கைக் கோலங்களில் மென்மையும் அன்பும் காண்பது அருமை. கொடுமையின் கொடுமுடியாய் அச்சத்தின் உறைவிடமாய் குருதி கொப்புளிக்கும் கொடுவாய்ப் பல்லோடு – குலை நடுங்க வைக்கும் நிலையில் இயற்கையை ஓவியமாக்கி நம்முன் நிறுத்தியுள்ளார் மாமூலனார். சங்காலத்துப் புலவர்களிடையே இயற்கையின் கொடுமையைச் சொல்லோவியமாக்கியதில், முதன்மையும், தலைமையும் மாமூலனார்க்கே உரியன என்று சொல்லுமளவுக்கு இவருடைய இயற்கை ஓவியங்கள் அமைந்துள்ளன.

நெருப்பைப் போல் காய்கின்றது ஞாயிறு; அதன் மென்மைக் கொடுமையால் நிலமே பிளக்கிறது. பசுமையின் சாயலும் இல்லாத அளவுக்கு எங்கும் வெயில் காய்கிறது. நிழல் தேய்ந்து தேய்ந்து அடியோடு அற்றுப்போன மரங்கள் உலர்ந்து வெறுங்கொம்புகளின் 'குவியல்' போல் நிற்கின்றன. பாறைகளெல்லாம் கொதிப்பேறிக் காய்ந்து கிடக்கின்றன. ஒரு காலத்தில் நீர்நிறைந்த சுனைகளில் இப்போது நீரே இல்லை. நீர் இல்லை என்பதோடு வெப்பத்தின் கொடுமை நிற்கவில்லை. அச்சுனைகளில்

ஈரப்பசையும் அற்றுப் போயிற்றாம். இவ்வாறு வறண்டு புலர்ந்து சுனைகள் உள்ள பாறைமீது மூங்கிலிருந்து நெல்மணிகள் உதிர்கின்றன; உதிர்ந்த மூங்கில்நெல் உடனே பொரிந்துவிடுகிறது. இவ்வெப்பத்தின் நிலையை

நிலம்பக;
அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழல் தேய்ந்து உலறிய மரத்த அறைகாய்பு
அறுநீர்ப் பைஞ்சுனை ஆம் அறப் புலர்தலின்
உகுநெல் பொரியும் வெம்மைய[69]

மேற்குறித்த காட்சியோடு அப்பாடலின் இயற்கை ஓவியம் முடிவுறவில்லை. இதுவரை விண்ணிடத்தே எறிக்கும் கதிரவன் வெப்பத்தால் அஃறிணை பெற்ற துயரத்தை தெளிவாக்கியுள்ளார். இனி இரண்டே அடிகளில் உயர்திணைக்கு உரிய மக்களின் இயல்பை சுட்டுகிறார்.

பயணம் மேற்கொள்வோர் பாலை வழியையும் கடத்தல் நேரிடும். அவர்களைக் கொன்று பொருள் கவர்தலையே தொழிலாகக்கொண்டு ஆறலை கள்வர் அங்கே காத்திருப்பர். நிலம் போலவே நெஞ்சம் உலர்ந்த அவர்களின் கொடுமையைச் சங்க இலக்கியத்தில் பெரும்பான்மையாகக் காணமுடிகிறது. மாமூலரின் பாடல் அக்கொடியவர்களுக்கே கொடுமை செய்கின்றது.

பாலையின் கொடுமையை நினைந்து எவருமே அந்த வழியில் சென்றதில்லை. ஆனால் பயணம் செல்வோரை எதிர்பார்த்து ஆறலை கள்வர் காத்திருந்தனர். விளைவு என்ன? கதிரவன் வெம்மைக்குப் பழக்கமான அவர்களும் அந்த வெங்கொடுமைக்கு இரையாகி மாய்ந்தனர்.

யாவரும்
வழங்குநர் இன்மையின் வெளவுநர்மடியச்
சுரம்புல் லென்ற ஆற்ற [70]

இப்பாடலின் நிலம் பிளத்தல் கண்டோம், நிலத்தோடு தொடர்புடையன மட்டும்

வெம்மையால் வேதனையடைந்தது கண்டோம். வேறொரு பாடலில் பாறையே பிளப்பதையும் நிலம் விட்டு விண்வழி இயங்கும் பறவைகள் வாடுதலையும் காணமுடிகிறது என்பதை

காய்ந்து செலற் கனலி கல்பகத் தெறுதலின்
நீந்துகுருகு உருகும் என்றூழ் நீளிடை[71]

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

வெப்பத்தைத் தாங்கும் ஆற்றலை இயற்கையாகவே பெற்றுள்ள மூங்கிலும் வாடி வதங்கிக் கணுக்கள் வெடித்துக் கிடப்பதைப் பாடுகிறார்.

வேய்கண்ணுடைந்த வெயிலவிர் நனந்தலை
மழைகரந் தொளித்த கழைதிரங்கு அடுக்கத்து [72]

மூங்கிலின் பசுமை ஒழிந்து வதங்குவது இவராலேயே வேறொரு பாடலிலும் சுட்டப்படுகின்றது. வருணனைச் சிறப்பினும், அச்சிறப்புக்கு அழகும் ஆற்றலும் தருகின்ற கற்பனைச் சிறப்பினும் சீரியதாகிய ஒரு சிறப்பு மாமூலனாரிடம் உள்ளது. பாலையின் கொடுமையினை விளக்க அவர்க்குப் பயன்பட்டவை அஃறிணை, உயர்திணை உயிர்களும் நிலையில் இயங்கியற் பொருள்களும் ஆகும். அவற்றைக் கொண்டு அவர் உருவாக்கும் அவலம் நிறைந்த கொடுமைக் காட்சிகள் உண்பவர்களின் இதயத்தில் எல்லையற்ற இரக்கத்தை உண்டாக்குகின்றன. கொடுமையின் கொடு முடியைக் காட்டிக் கல் நெஞ்சையும் கரைத்து அன்பின் ஊற்றாக மாற்றும் பெருந்திறமை மாமூலனாரின் சிறப்பாகும். இலக்கியத்தில் இயற்கையைப் பாடிய புலவர் பலரையும் எல்லாத் திறத்தாலும் எடுத்துக் காட்டுதல் எவ்வகையிலும் இந்நூலின் அமைப்புக்கு அப்பாற்பட்டது அன்று. எனினும் விரிவு அஞ்சிக் சுருக்க நேர்ந்தது. ஆகவே போதிய விளக்கமும் தெளிவும் தரவல்லது.

பெண்பாற்புலவர்களின் வாழ்வியல் கூறுகள்

தமிழராய்ந்து தங்கள் புகழைப் பரப்பிய பெண்மணிகள் பண்டைக் காலத்தில் பலர் இருந்தனர். பெண்பாலார் சுதந்திரமில்லாதவர்கள் என்று சொன்னாலும்

அவர்களுடைய பெருமை பெரிது. தாய் என்ற சொல் அவர்களுக்கு உரியதாகவே அமைந்துள்ளது. தாய் என்னும் பதவியைக் காட்டிலும் பெரியதொன்றில்லை, ''அம்மையே யப்பா வொப்பிலா மணியே'' என்று பெரியோர் இறைவனைத் தாயாகக் கூறியிருப்பது இதனைப் புலப்படுத்துகின்றது. உலகப்பற்று நீங்கிய துறவிகளைத் தந்தை முதலிய எல்லோரும் பணிய வேண்டுமாயினும் தாயைக் கண்டால் அத்துறவிகள் பணிய வேண்டும் என்பது விதி. பட்டினத்துப் பிள்ளையார் உலகைத் துறந்தவராயிருந்தும், தம் தாயின் ஈமக்கடனைக் கழித்துவிட்டு அப்பால் வேறிடஞ்செல்ல வேண்டுமென்பதைக் கருதி, குடியிருந்த வீட்டிற் கொள்ளி வைக்க வேண்டுமென்ற காத்துக் கொண்டிருந்ததாக குறிப்பிடுவர் சான்றோர்கள்.

காக்கை பாடினியார் நச்செள்ளையார்

காக்கை பாடினியார் நச்செள்ளையார் பெயரில் செள்ளையார் என்ற சொல் தாயார் என்ற பொருளுடையதென்றும், தள்ளை யென்பதன் மரூஉவாகிய சள்ளையென்பது பின்பு செள்ளை என்று மாறிவிட்டது போலுமென்பர். இவர் மலை நாட்டரசன் பால் பரிசு பெற்றவராகையால் ''ந'' என்ற சிறப்பெழுத்துடன் நச்செள்ளையார் என்று வழங்கப்பட்டாரென்று தெரிகிறது. கணவனுடைய பிரிவினால் வருந்தியிருந்த பொழுது அதற்குப் பரிகாரமாக விருந்துவரக் காக்கை கரைந்ததைப் பாராட்டி இவர் ஒரு பாடல் பாடினமையால் காக்கை பாடினியார் என பெயர் பெற்றார் போலும், அச்செய்யுள் வருமாறு;

திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி [73]

தலைவனது பிரிவாற்றாமையால் வருந்தும் எனக்கு அவ்வருத்தம் நீங்கும்படி விருந்துவரக் கரைந்த காக்கைக்குப் பலியாக நள்ளியின் காட்டிலுள்ள பசுக்களின் நெய்யோடு கலந்த தொண்டியில் விளைந்த நெல்லின் சுடுசோற்றை ஏழுபாத்திரத்தில் ஏந்தினாலும் அது சிறிதாகும்; காக்கை செய்த உதவி அவ்வளவு பெரியது என்பது இதன் பொருளாகும்.

தலைவர் பிரிந்த காலத்தில் விருந்திடுதல் முதலியவற்றால் மகளிர் தம் துன்பத்தைப் போக்கிக் கொள்வர்.

பதிற்றுப்பத்தில் ஆறாவது பத்தை இவர் பாடி ஆடுகோட்பாட்டுச் சேரலாதனிடமிருந்து ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பரிசு பெற்றார். அணிகலனுக்காக அவன் இவருக்குப் பொன் கொடுத்தமையாலும் இவர் பெண்பாலாரென்பது தெளிவாகிறது.

பொன்முடியார்

பொன்முடியாரின் இயற்பெயர் தெரியவில்லை. இவருடைய கல்விப் பெருமையையும் கவிப்பெருமையையும் நோக்கி அவற்றின் அறிகுறியாக அக்காலத்திருந்த அரசர் ஒரு பொன்முடி அளித்தமையால் இவர் இக்காரணப் பெயரைப் பெற்றிருக்கலாமென்று தோன்றுகிறது. முரஞ்சியூர் முடிநாகராயரென்னும் பெயரில் 'முடி' என்பது காணப்படுதலின், அப்பெயர்குரிய புலவரும் சிறப்பினால் ஒருமுடி பெற்றிருத்தல் கூடுமென்று சிலர் நினைக்கின்றனர். **தொண்டர் சீர்பரவுவாரெனப் பெயர் சுமத்தி, ஞானமுடி சூட்டி** என்பதனால் சேக்கிழாரும், **ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதி பகுதியாய், வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து** என்பதனால் வில்லிபுத்தூராழ்வாரும் இங்ஙனமே ஒவ்வொரு வகைமுடி சூட்டப் பெற்றிருந்தமையும் இங்கே கருதற்பாலது. தகடூர் யாத்திரையென்னும் நூலில் இவராற் செய்யப்பட்ட பாடல்கள் சில உண்டென்று தொல்காப்பிய உரையால் தெரிகின்றது. புறநானூற்றில் இவர் பாடிய பாடல் வருமாறு;

ஈன்று புறந் தருதலென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே [74]

இதனால், தம்முடைய மகனைப் போருக்கு அனுப்பி இவர் களித்திருந்தாரென்பதும், இவர் வீரக்குடிப்பெண்டிரென்பதும் தெளிவாகின்றன.

பூதபாண்டியன் தேவியார்

பூதபாண்டியனென்பவன் இறந்ததும் அவன் தேவியாராகிய இவர் அவனுடன் தீக்குளிக்க விரும்பினார். மூப்புடைய சிலமகளிர் வந்து தடுத்தனர். அப்பொழுது இவர் அவர்கள் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமற் பாடியதாகப் புறநானூற்றில் ஒரு பாடல் உள்ளது அவை,

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பால் சான்றீரே [75]

என்பதாகும்.

கணவன் இறந்தபிறகு உடம்பை வைத்துக் கொண்டு உயிர் வாழ்வதை இகழ்ந்து தீப்பாயத் தாம் விரும்பியதை இப்பாட்டில் இவர் சொல்லியிருக்கிறார். செந்தாமரைக் குளத்தின் நீரும் தீயும் தமக்கு ஒன்றுதான் என்பது இவரது கருத்து. இவரது இயல்பைப் பாராட்டி மதுரைப் பேராலவாயரென்னும் புலவர் பெருமான் பாடிய **யானை தந்த** என்னும் புறநானூற்றுப் பாடலும் இங்கு ஒப்பு நோக்கதாகும்.

ஆதிமந்தியார்

இவர் கரிகாற் பெருவளவனுடைய மகளாவார். ஆதி மருதியார் என்பது இவரது பெயராக இருந்திக்கலாமென்றும், பிறகு எழுதுவோர் கைப்பிழையால் அப்பெயர் ஆதிமந்தியார் என்று மாறியிருக்குமென்றும் நான் நினைக்கிறேன். இவர் சேரநாட்டரசன் மகனாகிய ஆட்டனத்தியென்பானை மணர்ந்தார்; ஒருகால், கழாரென்னு மூரிலுள்ள காவிரியின் முன்னுரையில் ஒரு விழாவில் அவனுடன் இவர் நீர் விளையாடிக் கொண்டிருக்கையில் அவனை ஆறு அடித்துக் கொண்டு போய்விட்டது. அவனைக் காணாது வருந்தி,

மன்னர் குழீஇய விழவினானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை [76]

என்று பாடி அரற்றித் தேடித்திரிந்து சென்று கடலை நோக்கி, நான் பத்தினியாயின் அவனைத் தரவேண்டும் என்று இவர் பிராத்திக்கக் கடல் அவனைக் கொணர்ந்து காட்டியது. கி.பி.55 முதல் 95 வரையிற் கரிகாற் பெருவளவனென்று ஒருவனிந்தானென்று ஆய்வாளர்கள் கூறுதலால், அவன் மகனாகிய இவர் காலமும் அறியத்தக்கதே. அங்கட் செய்யுட்களை ஆய்தலில் வெள்ளிவீதியார், ஔவையாரென்ற பெண்பாலர்க்கும் பரணர்க்கும் இவர்காலத்தால் முற்பட்டவராக நினைக்க இட முண்டாகிறது.

காவற்பெண்டு

ஒரே செய்யுளால் புகழ்பெற்ற புலவரில் இவரும் ஒருவர். மறக்குடிப் பிறந்த தாயின் கூற்றாக அமைந்தது இவர் பாட்டு. நின்மகன்யாண்டளன்? என்று வினாவிய செவிலிக்கு விடையிறுக்கும் தாய், அவன் யாண்டுளன் என யானறியேன். எனக்கும் அவனுக்கும் உள்ள உறவு குகைக்கும் புலிக்குமுள்ள உறவு போன்றது. புலி சேர்ந்து போகிய கற்குறைபோல், அவனையீன்ற வயிறு இதோ உள்ளது. அவனைக் காணவேண்டுமானால் போர்க்களம் சேர் ஆண்டு அவன் வீரருள் வீரனாய்த் தோன்றுவான் என்று கூறுகின்றாள். போர் நடக்கும் வேளை அவனை வீட்டில் தேடியது குடிப்பெருமையை இகழ்வதாகும் எனக் கருதியே இங்ஙனம் கூறுகின்றாள் **தன் மகனைப் புலியாகக் கூறுவதும், அவனையீன்ற தன் வயிற்றைப் புலிக்குகையாகக் கூறுவதும்**[77] புறநானூற்றைப் பாடலால் காவற் பெண்டுவின் நாத்திறனைக் காணலாம்.

ஔவையார்

ஔவை என்ற சொற்குத் தாய் என்பது பொருள். இவர் அதியமானைப் பாடி நெல்லிக்கனி பெற்று அதன் ஆற்றலால் வெகுகாலம் வாழ்ந்திருந்தார். அதியன் காலத்தில் ஒரு நெல்லி மரம் இருந்தது. அது பல வருடங்களுக்கு ஒரே கனி தருவதாகும். அப்பழத்தை உண்பவர் வெகுகாலம் ஜீவித்திருப்பார். அதியன் தன் ஆட்சிக்கு உட்பட்ட இடத்தில் தோன்றியிருந்த அந்த நெல்லிமரத்துக்கு காவல் வைத்து அது பழுத்ததும் அதைப் பெற்றுப் புசிக்க நினைந்து அதன் அருகே சென்று இருந்த சமயத்தில்

ஔவையார் திடீரென்று அவன் முன் சென்றனர். உடனே அதியன் அதனை அவர் கையிற் கொடுத்து விட்டான். தனக்குப் பிறகு நாட்டைப் புரக்க மகன் இருப்பதால் தான் நீண்டகாலமிருப்பதிலும் ஔவையார் நெடுங்காலம் வாழ்ந்திருந்தால் உலகுய்யும்படி அவர் செய்விப்பார் என்று அவன் நினைத்துத் தன் கைப்பழத்தை அவர் கையிற் கொடுத்தனன். பழத்தின் அருமையை முதலில் அறியாத ஔவையார் அதை உண்டுவிட்டார். பிறகு அதன் ஆற்றலை அறிந்து அதியனைப் பாராட்டிப் பரமசிவனை அவனுக்கு ஒப்பிட்டு **நீலமணிமிடற் றொருவன் போல, மன்னுக பெரும நீயே** என்று பாடியுள்ளார். ஔவையார் பெயர் பற்பல காலங்களிலிருந்த வித்துவான்களின் சரித்திரங்களிற் சம்பந்தப்படுவதால், பல ஔவையார் இருந்திருக்க வேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள். கம்பர், ஒட்டக்கூத்தர் காலத்திலும் ஔவையார் இருந்ததாக ஒரு கதை வழங்கப் பெறுகின்றது. இன்னும் சேரநாட்டில் மழை தவறாமற் பெய்கிறது; தர்மம் ஓங்குகிறது என்பர், போரில் அதியமான் இறந்தபோது இவர் வருந்தி,

சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே [78]

என்று சொல்லி அவனது கொடையைப் பாராட்டியிருக்கிறார்.

சிலர் கூடி, கோடி என்று மதித்தற்குரிய செய்திகளைச் சொல்லும்படி கேட்டபோது, ஔவையார்,

மதியாதார் முற்ற மதித்தொருகாற்சென்று
மிதியாமை கோடியுறும்
உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடியுறும் [79]

என்று பாடி மன்னனின் நாலு கோடி பாடல்களை பாடும் விருப்பத்தை ஔவையார் நிறைவேற்றினார்.

திருக்கோவிலூரில் அங்கவை, சங்கவை என்னும் இரண்டு பெண்களுக்கு ஔவையார் திருமணம் செயவித்ததாகவும், அதற்காகப் பெண்ணையாறு

நெய்யாகவும் பாலாகவும் ஓடும்படி இவர் செய்ததாகவும் ஒரு கதை உண்டு. அது வில்லபுத்தூரார் பாடிய பாரதத்திலுள்ள பாயிரச் செய்யுட்களால் தெரிகிறது.

பெரிய வீரனாகிய அதியமான் ஔவையாரைத் தொண்டை மானிடம் தூதனுப்பினான். தொண்டைமான் செல்வப்பெருமையும் படைப்பெருமையும் புலப்படும்படி தனது ஆயுதசாலையை அவருக்குக் காட்டினான். ஆயுதங்கள் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தன. அப்பொழுது ஔவையார்,

இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய்யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே[80]

என்று பாடி, பகைவரை எதிர்த்துக் குத்துதலால், போரிற் சிறந்த அதியமானுடைய படைகள் நுனிமழுங்கிக் கொல்லனுலையில் திருத்த முறுதற்குக் கிடக்கின்றன. உன்னுடைய படைகள் பளபளவென்று இருக்கின்றன என்று தொண்டைமான் போர் செய்யச் சொல்லாதிருத்தலைப் புலப்படுத்தி அவனை நாணும்படி செய்தார் ஔவையார்.

வெள்ளிவீதியார்

அகப்பாடல்கள் பன்னிரண்டனைப் பாடியவர் இவர். இவருடைய பாடல்களில் இவர்தம் தனி வாழ்க்கையனுபவங்கள் இடம் பெற்றன என்று கருத இடமுண்டு.

நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்ந்திசினால் யானே[81]

என ஔவையார் பாடுவது கொண்டு வெள்ளிவீதி தன் காதலனைத் தேடியலைந்தார் என்று விளங்கும். பிரிவிடை வருந்தும் தலைவியைத் தேற்றும் தோழி

நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீரு காலிற் செல்லார்[82]

என்று கூறுகின்றாள். சொற்கள் இருமுறை வந்து உணர்ச்சியை ஆழப்படுத்துவதை தன் காதலனால் நுகரப்படாது தன் கவின் அழிவது கண்டு,

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் கா அங்கு[83]

எனக் கூறக் காணலாம்.

தன் காதலியை எண்ணி மெலிந்த தலைவனை நண்பர்கள் கழறுகின்றனர். தன்னுடைய காமம் களைவாரின்றித் தான் படும் துயரினை விளக்கும் அவள், வெய்ய பாறையில் உருகும்வெண்ணெயை அள்ளவும் முடியாது, பிறரைக் கூவி அதனைச் செய்யவும் முடியாது கண்ணில் காக்கும் கையில்லாத ஊமன் போலத்தான் இருப்பதாகக் கூறுவது மிக அரிய செய்தியாகும். வெண்ணெய் உருகுமுன் காக்க இயலவில்லை. அது பாறை முழுதும் பரவிற்று அதுபோல் தணிப்பரிய காமமும் பரந்தது

உவமை கூறி விளக்குவதில் பெண்பாலாற் புலவர்கள் அவ்வளவு பெருமை வாய்ந்தவர்கள். மேன்மை, அறிவு முதலிய குணங்கள் இயற்கையில் அமைந்தவர்கள். இயற்கை அறிவுடன் செயற்கை அறிவும் சேர்ந்துவிடின். அவர்களுடைய பெருமை அளவிடற்கரியதாகும். சங்க காலத்தில் தமிழாராய்ந்து விளங்கிய பெண்பாலார் ஐம்பதின்மருக்கு மேலிருந்திருக்கலாமென்று தெரிகிறது.

தொடர்களால் பெயர் பெற்ற புலவர்கள்

பாடிய துறை, திணையில் பெயர் பெறாது, பாடிய பாடற்கண் இடம்பெறும் அழகிய இலக்கியச் செறிவு மிக்க தொடற்களால் பெயர் பெற்றோர் பலராவார். அக்காலத்தில் பாடல்களைத் தொகுத்த சான்றோர், சிலருடைய பெயர் தெரியாத நிலையில் அவருடைய செய்யுளிற் கண்ட தொடர்களாலேயே அவர்களைக் குறித்தனர். தொகுத்தவரின் திறனாய்வுப் பண்பும் வெளிப்படும். தொடராற்பெயர் பெற்றோர் ஏறத்தாழ முப்பதின்மராவர். இவர்களில் பெரும்பான்மையோரின் செய்யுட்கள் குறுந்தொகையில் அமைந்துள்ளன.

தேய்புரிப்பழங்கயிற்றினார்

தலைவன் பொருள் தேடச் சென்றுள்ளான். வினைமுடித்தற்கு முன்பே அவருடை உள்ளம் தன்னுள்ளம் கவர்ந்த காதலியின் துன்பம் தீர்க்க விரைகின்றது. ஆனால் அவனுடைய ஆள்வினை நெஞ்சமோ செய்வினை முடியாது எவ்வம் செய்தல் எய்யாமையோடு இளிதலைத் தரும் எனக் கூறிச் சிறிது நனிவிரையல் எனக் கட்டளையிடுகின்றது. இவ்விரண்டு உணர்ச்சிகளையும் இருபெரும் யானைகளாக உருவகிக்கும் புலவர், அவனுடைய உடம்பை அவ்விரு யானைகளால் இழுக்கப்படும் தேய்ந்தபுரிகளையுடைய பழங்கயிறாக்குகின்றார்,

ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல் என் வருந்தி உடம்பே[84]

என வருந்துகின்றான் தலைவன்.

தனிமகனார்

தலைவனைப் பிரிந்துள்ள தலைவியின் கூற்றாக அமையும் இப்பாடலில் **பாழ்காத்திருந்த தனிமகன் போல** என்னும் உவமை உயர் நிலையாக அமைந்துள்ளமை பற்றி கூறுதலால் இப்புலவர் தனிமகனார் எனப்பட்டார்.

தலைவியின் கூற்று

கீழ்க்கடலிலே சென்று இறங்கி நீரை முகந்துகொண்டு மேலே ஏகி, யாண்டும் இருளடையுமாறு இரண்டு, மண்டிணஞாலம் அவ்விருளினின்று புலப்படுமாறு கம்மியார் செப்புபானையைக் கடைந்தாற்போல மின்னி எங்கும் நீரைப் பொழிந்த இடியுடைய மேகம் தன் தொழில் முடிந்தபின் தென்பாலேகினாற்போல் என்னெஞ்சம் இங்கு வைகும் தொழிலொழிந்து தலைவன் பாற் சென்றொழிந்தமையினாலே, வலிய போர் செய்யவல்ல வெஞ்சினமுடைய பகை வேந்தனது படை அலைத்தலாலே கலங்கி, ஊர் மாந்தரெல்லாம் குடிபெயர்ந்தோடிவிட்ட பெரிய பாழ் நகரத்தைக் காத்திருந்த தனிமகன் போன்று உண்ணுதலாலே என்னுடம்பு இங்குக் காக்கப்படும்

நிலையுடைத்தாயிற்று என்று தனிமகனார் தன் பெயருக்கான விளக்கத்தை தந்துள்ளார். இவ்வாறு சங்ககாலத்தில் தனது பெயர் அடைந்த நிலையைப் பற்றி கூறுகிறார் புலவர்.

கல்பொருசிறுநுரையனார்

வற்புறுத்தும் தோழிக்குத்தலைமகள் வருந்திக் கூறியதாக அமையும் நெய்தல் திணைப் பாடலை இயற்றியவர் இப்பெயரால் அழைக்கப்பட்டார். தலைவி தலைவனைப் பிரிந்து துயரத்தால் பெரிதும் கலங்குகின்றாள். அயலுள்ளார் **நீ நின் காமம் தாங்குதல் கடன்**[85] என வற்புறுத்துகின்றனர். அவர்கள் மீது தனக்குள்ள வெறுப்பினை வெளிப்படையாகத் தோழியிடம் வெளியிடுகின்றாள். காமம் தாங்குக என்று என்னிடம் கூறுவார். அறியுநர் கொல்லோ அன்ன ஆற்றலுடையவர் கொல்லோ? என வினவுகின்றாள். மேலும் தன்னிலை கூறுவாளாய் **யான்** என் காதலனைக் காணேனாயின் செறிந்த துன்பம் பெருகிய நெஞ்சமொடு பெரு வெள்ளத்தின் கண் கல்லின்மேல் மோதி மெல்ல மெல்ல இல்லாகுதல் போல யானும் இல்லையாகுவேன் என்கிறாள். நுரைகல்லின் மேல் மோதுந்தோறும் சிறிது சிறிதாகக் கரைதல் போலத் துயரமாகிய பாறையில் மோதும் உயிர் சிறிது சிறிதே தேய்ந்தொழிலையும் உடைய அரிய பொருளமைந்த **கல் பொருசிறுநுரை** என்னும் பெயர் வந்துள்ளது என்றும் போற்றத்தக்கதாகும்.

மீனெறிதூண்டிலார்

வரைவு நீட்டித்தபோது ஆற்றாத தலைவி தன் நலன் தன்னை விட்டு நீங்கிய தன்மையை அவள் கூறுவதாக அமைந்தது குறுந்தொகைப் பாடல்.

யான் இவ்விடத்திலுள்ளேன் என் நலனோ,
தினைப்புனம் காப்பாரின் கவணொலியை
அஞ்சித் தான் பற்றியிருந்த முங்கிற் கழியை விடவும்
அது மீன் எறியும் தூண்டில் போல் மேலே உயரும்
கானக நாடனோடு நீங்கியல [86]

என்கிறாள்.

யானை பற்றியிருந்த கழை யானையால் விடப்பட்ட போது மேலே, விரைவாக எடுக்கும்போது தூண்டில் நிமிர்தலோடு உவமிக்கப்பட்டுள்ளமை இன்புறத்தக்கதாகும். யானை வளைக்க வளைந்து அது கைவிடத் தூண்டில் போல மூங்கில் நிமிரும் நாடனென்றது. தன்நெஞ்சத்தில் அன்புள்ள காலத்தில் நம்பால் மருவிப் பணிந்தொழுகி அன்பற்ற காலத்தில் பணிவின்றித் தலைமை செய்து நம் நலம் கொண்ட தன் கொடுமை தோன்ற ஒழுகின்றான் தலைவன் என்னும் பொருளைத் தோற்றுவித்தது.

விட்ட குதிரையார்

தோழி தலைவியிடம் தலைவன் விருப்பப்படிக் குறியிடத்தில் அவனைப் புணரவேண்டுமென்பது படக் கூறுவதாக அமைந்தது கீழ்காணும் தலைவனுடைய குற்றத்தை வருணிக்கும் தோழி;

விட்ட குதிரை விசைப்பின் இன்ன
விசும்புதோள் பசுங்கழைக் குன்ற நாடன் [87]

என்றாள்.

வளைத்துப் பின் விடப்பட்ட மூங்கில் மேலே விரைவாகச் செல்லும், அதுபோலப் பல நாள் கட்டிக் கிடந்த குதிரை துள்ளிக்குதிப்பது போன்றது என்று உவமை கூறியுள்ள திறம் பாராட்டத்தக்கது.

வளைக்குங்கால் வளைந்த தேனும் இயல்பில் விசும்பு தோயும் உயர்வையுடைய மூங்கிலைப்போலத் தலைவன் நம் மாணலம் நயந்து நம்மிடையே பணிந்து ஒழுங்கினானெனினும் இயல்பாகத் தலைமையுடையவன் என்பது குறிப்புப் பொருளாகும்.

தொழிற்றுறைச் சான்றோர்

பல்வேறு தொழில்களில் ஈடுபட்டோர் அன்று புலமைபெற்று விளங்கியுள்ளனர். பிறர் தரும் பரிசில் ஒன்றையே நம்பி வாழ்ந்தோர் சிலரேயாவார். தச்சர், சொல்லர், வணிகர், குயவர், ஆசிரியர், வண்ணக்கர், கணியர், மருத்துவர் என்னும் பல தொழிலினர் கவிஞராய்த் திகழ்ந்துள்ளனர். அதற்கு உதாரணமாக விட்டகுதிரையார்

என்னும் பெயர் அமைந்துள்ளது.

வெண்ணிக் குயத்தியனார்

தஞ்சைப் பகுதியிலுள்ள கோயில் வெண்ணி யென்னும் ஊரைச் சார்ந்தவர் இப்புலவர். கரிகாலனும் பெருஞ்சேரலாதனும் பொருதபோது புறப்புண்ணாணி வடக்கிருந்தான் சேரமான். அது புலவரின் நெஞ்சை நெகிழ்த்தது. வென்றவன் கரிகாலனே எனினும் அவன் பெற்ற பெருமையினும் மிக்க பெருமையைத் தன்மானவுணர்வால் பெற்றான் சேரமான் என்பதனை,

சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற வென்றோய்!
நின்னினுமு நல்ல னன்றே கலிகொள் யாணர்
வெண்ணிப் பறந்தலை மீகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் ணாணி வடங்கிருந் தோனை [88]

எனக் கரிகாலன் கேட்கப் பாடினார்புலவர்.

கனியன் பூங்குன்றனார்

மெய்யுணர்வு மிக்க சான்றோர் இவர். தமிழர் தலைநிமிரும் வண்ணம் ஈராயிராமாண்டுகட்டு முன்பே உலக சகோதரத் தன்மையை வற்புறுத்தியவர் இவர். மனிதகுலம் அனைத்தும் ஒன்றெனப் பறை சாற்றுவதும் **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்னும் பொன் மொழியாகும்.

தீதும் நன்றும் பிறரின்றித் தன்னாலேயே வருவனவாம். நோதலும் தணிதலும் அத்தகையனவே, சாதல் புதுவதன்று; வாழ்தல் இனிது என வளமுற்ற காலை மகிழந்தாடலும்; துன்பமுற்ற காலத்தில் இன்னாததது என வெறுத்தலும் அறியாமை; கல்லை உருட்டி வீழும் கான் யாற்று வெள்ளித்திலகப்பட்ட புனை நீர்வழியே ஓடும் பான்மைபோல் ஆருயாரும் ஊழின் வழியே ஓடுவது; இது பெரியோர் அறிவிலேற்பட்ட தெளிவு; எனவே மாட்சியிற் பெரியாரை வியத்தாலோ சிறியோரை இகழ்தலோ கூடா என்பன இவர் அறிவுறைகளாம்.

முடிவுரை

சங்ககால புலவர்கள் இயற்கையோடு இணைந்து தம் கற்பனை திறத்தால் பல பாடல்களை இயற்றும் திறம் படைத்தவர்களாக வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

இரவலர்களும் புரவலர்களும் மன்னர்களிடம் மற்றவர்களிடம் புணர்ந்த விதம் சிறப்பாக கூறப்படுகிறது.

சங்ககால புலவர்கள் மன்னர்களுக்கு அறிவுரை வழங்கி ஆட்சி திறத்தை மேம்படுத்திய விதம் சிறந்தது.

மன்னர்கள் புலவர்களை உயர்ந்த இடத்தில் வைத்து போற்றிய தன்மை பரக்க பேசப்படுகின்றது. அரசர்களும் புலவர்களாத இருந்து தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் பரக்கப் பேசப்படுகிறது.

பெண்பாற் புலவர்கள், ஆண்பாற் புலவர்களுக்கு இணையாகச் சங்க காலத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்ற விதத்தையும் அவர்கள் பாடல்கள் இயற்றிய தன்மையும் போற்றப்படுகிறது.

பாடிய துறையால் பெயர் பெற்றோர், திணையால் பெயர் பெறாது, பாடிய பாடற்கண் இடம்பெறும் அழகிய இலக்கியச் செறிவுமிக்க தொடர்களாற் பெயர் பெற்ற காமநாடிகளைப் புரிவர். காமக் குறைவு கடமைக் குறைவாம் என்று உணர்வர். வித்தில்லாக் காமப் பழத்தை உண்பர். மெய்யின்பத்தை உயிரின்பமாகப் போற்றி ஒழுகுவர். அகத்திணை வாழ்க்கையை அன்புத்திணை வாழ்க்கையாகக் காண்பர்[3] என்கிறார். வ.சுப.மாணிக்கம். அகப் பாடல்கள் அன்பின் முதிர்ச்சியாகிய காதல் புலவர்களின் பண்புகள் விவரித்து இவ்வியலில் கூறப்படுகிறது.

சங்கப் புலவர்களின் ஒட்டு மொத்த வாழ்வியல் பின்புலத்தையும் அன்றையச் சமூகச் சூழல் இன்றும் பொருத்தமுறுவதாகக் காட்டும் திறம் எண்ணுதற்குரியதாகும்.

அடிக்குறிப்புகள்

1. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு – பா.எ.72
2. எஸ். இராமகிருஷ்ணன் இலியட் ப. 186
3. ஔவை துரைசாமி(உ.ஆ) , புறநானூறு – பா.எ.109
4. மேலது.பா.எ.125.
5. ஔவை துரைசாமி(உ.ஆ) , புறநானூறு – பா.எ.215
6. மேலது பா.எ. 216
7. மேலது பா.எ. 385
8. மேலது பா.எ. 392
9. மேலது பா.எ. 395
10. ச.சோமசுந்தர பாரதியார் , தொல்காப்பியம், பொருட்படலம் ப.14.
11. க.வெள்ளவாரணர், தொல்காப்பியம் ப.19.
12. மு. இராகவையங்கார் ,தொல்காப்பியம் பொருளதிகார ஆராயச்சி, ப. 21
13. அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர் ப.59
14. மா.ரா.போ.குருசாமி, சங்க காலம், மு.வ முன்னுரை
15. ச.மெய்யப்பன், கபிலர், ப.1
16. அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர் ப.103
17. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு – பா.எ.74
18. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை, பா.268
19. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,நற்றிணை,பா.345
20. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு – பா.எ.215
21. மேலது பா.173
22. மேலது பா.216

23. அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தின் வேந்தர் ப.113

24. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை, பா.348

25. அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர் ப.119

26. மு.இராகவய்யங்கார், செந்தமிழ் இன்பம், அகநானூறு ப.50

27. அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர் ப.119

28. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.126

29. கோ.கேசவன், புறநானூற்றில் புரலவர் மன்னவர் உறவு நிலை (கட்டுரை) ப. 97

30. கதிர் மகாதேவன் பழந்தமிழர் வீரப்பண்பாடு ப.39

31. அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர் ப.62

32. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு - பா.எ.27

33. மேலது. பா.29

34. மேலது. பா.29

35. மு.வரதராசனார் திருக்குறள் ப.234

36. ஔவை துரைசாமி(உ.ஆ) , புறநானூறு - பா.எ.171

37. மேலது. பா.126

38. மேலது. பா.126

39. மேலது. பா.204

40. மேலது. பா.201 (1-8)

41. மேலது. பா.201

42. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,பொருநராற்றுப்படை பா.160.

43. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.143 (8-6)

44. மேலது பா.152

45. மேலது பா.153

46. மேலது பா.53

47. மேலது பா.54

48. மு.வரதராசனார் திருக்குறள் ப.448

49. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு – பா.எ.5

50. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.22

51. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு – பா.எ.18

52. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.10

53. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு பா.179

54. மேலது பா.54

55. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,குறுந்தொகை பா.எ. 303

56. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு பா.169

57. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை பா.35

58. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு பா.170

59. மேலது பா.339

60. மேலது பா.321

61. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.316

62. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு பா.332

63. மேலது பா.327

64. மேலது பா.377

65. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.332

66. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை பா.எ. 385.

67. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.1

68. மேலது பா.4

69. மேலது பா.9

70. மேலது பா.9

71. மேலது பா.347

72. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை பா.எ.210.

73. ஔவை துரைசாமி(உ.ஆ) , புறநானூறு - பா.எ.91

74. மேலது பா.312

75. மேலது பா.246

76. மேலது பா.247

77. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை பா.எ.31

78. ஔவை துரைசாமி(உ.ஆ) , புறநானூறு - பா.எ.235

79. மேலது பா.95

80. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு 147.

81. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு - பா.எ.235

82. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை பா.எ.130

83. மேலது பா.27.

84. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை பா.284.

85. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை பா.எ.74.

86. ஔவை துரைசாமி (உ.ஆ) , புறநானூறு - பா.எ.235

87. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.151.

88. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.147.

இயல் மூன்று

அகத்திணை வாழ்வியல் கூறுகள்

அகத்திணை வாழ்வியல் கூறுகள்

முன்னுரை

சங்க கால மாந்தரின் மனிதம் மாண்புடையது. அவர்கள் அகத்திலும் புறத்திலும் தூய்மையைப் பேணினர். எந்த நாட்டில் அகவாழ்வு தூய்மையானதாக உள்ளதோ அந்நாடு மனிதம் என்கிற உயரிய பண்பினைக் காக்கின்ற நாடு என்று எளிதில் கூறமுடியும்.

அன்பின் உயர்திணை யொழுகலாறுகளை
நன்கறிந்து செயல்பட்டு உலக
மாந்தரினத்திற்கு ஒப்பற்ற வழி
காட்டியாய்க் காதலை உலகுக்குணர்த்தியோர்
சங்கத்தமிழ்[1]

என்பார் கருத்து எண்ணுவதற்கு உரியது. ஆணும் பெண்ணும் மனம் ஒத்து ஒருவர் மீது ஒருவர் உண்மையான அன்பு செலுத்தி இறுதிவரையில் இடையறாமல் வாழ்வதே அகவாழ்வு எனக் கருதியவர்கள் சங்ககால மாந்தர்கள். அப்படிப்பட்ட வாழ்வில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு இன்பம் மேலோங்க வாழ்வதே இயற்கைக்கு உகந்தது என்னும் கொள்ளையினர் சங்ககால மாந்தர்.

அகம்

அக உணர்வுகளுக்கு உயிர்நாடியாக விளங்கும் காதல் உணர்வில் உள்ளம் ஈடுபட்டு நிற்றலின் காதலாகிய நாட்டத்தை அகம் எனக்குறியீடு செய்தனர். அக நாட்டத்தைத் தடைப்படுத்தி நிற்பவை துன்பமாகவும், வெறுப்பாகவும் அமைகின்றன. இதனை இரு எல்லைக்குள் அடக்குவர் அறிஞர். **அரிஸ்டாட்டில் இன்பம், துன்பம் என்ற இரு எல்லைக்குள்ளும் பிளாட்டோ விருப்பு, வெறுப்பு என்ற இரண்டிற்குள்ளும் வைவஸ் நல்லது கெட்டது என்ற இரண்டிற்குள் அடக்குவர்** [2]

அகத்திணையைக் கற்ற கணவனும் மனைவியும் பிறந்த உலகை மதிப்பர். எடுத்த உடம்பை மதிப்பர். கொண்ட மணத்தை மதிப்பர். ஒருவருக்கொருவர் தம்பாடல்கள்

உலகக் காதலர் அனைவருக்கும் உரியவை. ஒரு தனிப்பட்ட இனத்திற்கோ, மொழியினருக்கோ கூறப்பெற்றவை அல்ல; உலகினருக்குக் கூறப்பெற்றவை அகப் பாடல்கள் என்பதை,

யாயும் ஞாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
.....
அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே [4]

என்று செம்மண் நிலத்தில் பெய்த நீரும் அம்மண்ணின் நிறத்தையும், சுவையையும் கலந்துவிடுகிறதோ அதுபோல் காதலினால் முன்பின் அறியாத நெஞ்சங்கள் இணைந்தன. இப்பாடல் தமிழ் உள்ளங்களுக்காக ஏற்பட்ட அக உணர்வு அல்ல. உலக மனிதர்களுக்கு ஏற்பட்ட உணர்வு. அதனால் தான் இப்பாடலை ஆங்கிலத்தில்

What he said
What could my mother be to yours?
What kin is my father to your anyway - and
How did you and meet ever
But in love
our heart have mingled
like red earen and pouring rain [5]

என்று மொழிபெயர்த்து லண்டன் நகரில் பூமிக்கு அடியில் ஓடும் சுரங்கத் தொடர் வண்டியில் எழுதி வைத்ததை இந்து நாளிதழ் வெளியிட்டுள்ளது. சங்க அகப்பாடல்கள் ஒரு புறம் நடைமுறை சார்ந்த வாழ்க்கை நெறிமுறைகளையும், மறுபுறம் அகத்திணைக்கான கவிதை மரபுகளையும் உள்ளடக்கிக் கொண்டனவாக உள்ளன.

அகம் – விளக்கம்

அகம் என்ற சொல்லுக்கு மனம், வீடு, உள்ளிடம், காம இன்பம், ஆகாயம், உலகம், எண்ணம், அகப்பொருள், மருதம், ஆன்மா போன்ற பல பொருள்கள்

உள்ளன. இங்கு அகம் என்ற சொல் அகப்பொருளைக் குறிப்பதோடு வீட்டு வாழ்க்கையைப் பற்றியும் பேசுகிறது. மன வாழ்க்கையையாகவும், மனை வாழ்க்கையாகவும் அகவாழ்வு அமைகின்றது. காதலின்ப வாழ்க்கையை அகவொழுக்கம் என்றும் அவ்வின்ப வாழ்விற்கு துணை நிற்கும் பொருளீட்டல், புகழீட்டல் போலும் செயல்களைப் புறவொழுக்கம் என்றும் சான்றோர் வகுத்துக் காட்டியுள்ளனர். எல்லா உயிர்களுக்கும் பொதுவான காமம் அகவொழுக்கம் அமைவதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது.

அகத்திணைக் கோட்பாடுகள்

அகம் என்பதற்கு அகத்திணைக் கோட்பாட்டில் அகம் என்ற சொல் மனதில் புதைந்து கிடக்கும் அப்புணர்வைக் குறிக்கிறது. மேலும் அகநூலார் உள்ளத்தில் தொடர்புடையதே அகம் என்று கூறினர். மேலும் தமிழ் என்பதற்கு அகம் என்று பொருள் கூறினர். ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தப்பாடியது என்ற குறிஞ்சிப் பாட்டில் துறை குறிப்பு குறிக்கிறது. தமிழ் நுதலியது என்ற களவியல் உரையின் குறிப்பும் ஒண்தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையே என்ற திருகோவையார் பாடலடியும், தமிழின் சிறப்பினை மட்டுமல்லாமல் அகத்திணை சிறப்பினையும் உணர்த்துகின்றன. இவ்விடங்களில் தமிழ் என்னும் சொல் அகத்திணைக்கு மறு பெயராகக் கூறப்பட்டள்ளது. மேலும் அகம் என்பதற்கு,

அகம்மலி உவகையொடு ஆர்வமொடு அளைஇ
அகம்மலி உவகையொடு அணுகல் வேண்டி
.....
வெஞ்சின வேழம் நல்கினன் [6]
ஆர்கலி யினனே சோணாட்டு அண்ணால்
.....
வரல்தோறும் அகம் மலர[7]
மெய் இயல் அரிவை! நின் நல் அகம் புலம்ப
.....
.....

பல ஆகுக! யான் செலவுறு தகவே [8]

என்று விளக்கம் தருகின்றன. மேலும் அகம் என்பதற்குப் பலர் விளக்கம் தந்துள்ளனர்.

அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான்
அதனான் ஆய் [9]

என இளம்பூரணர் கூறுகிறார். அகவாழ்க்கையின் அவையங்களை ஒருவன் தானே உணர முடியுமே தவிரச் சொற்களால் புலப்படுத்துதல் இயலாது என்கிறார் நச்சினார்க்கினியர். அகத்திற்கு,

ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப்
பிறந்த பேரின்பம்அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும்
.....இன்பமுறுவதோர் பொருளாகலின் அதனை அகம் என்றார் [10]

அக உணர்வுகளை எப்படியிருந்தது என்று அனுபவித்து உணர முடியுமே தவிரச் சொற்களால் சொல்ல முடியாது என்பதை பின்வரும் பாடல் மூலம் கூறுகிறார் ந.சுப்புரெட்டியார்.

ஐவகை ஒழுக்கங்களாகப் பேசப்பெறும் இதன் பல்வேறு
துறைகளும் எளிய மெல்லிய சார்பினவாகம் இவை நெஞ்சம் .....
உள்ளமும், உடலும் கலந்த இன்ப செய்தியாகும்[11]

இதுவே அகம் என வழங்கப்படுகின்றது என்கிறார்.

அகத்தில் ஏற்படுகின்ற உணர்வுகளும் செயல்களும் அக ஈடுபாட்டின் அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. மனித எண்ணங்களும் செயல்களும் ஏதாவது ஒரு வகையில் அக உணர்வுகளுக்கு மூலங்களாக அமைகின்றன. அகமாந்தரின் வாயிலாக வெளிப்படுத்த இயலாத மன உணர்வுகளை உள்ளுறை இறைச்சி வாயிலாக உணர்த்தும் மரபு அக இலக்கியங்களில் சிறப்பாக அமைந்துள்ளன.

அகம் தோன்றக்காரணம்

ஒவ்வொரு நூலும் அந்தந்தக் காலச் சூழ்நிலையை ஒட்டியே எழுந்தமை இலக்கிய வரலாறு காட்டும் உண்மையாகிறது. சான்றாகக் களப்பிரரின் ஆட்சிகாலத்தில் அறம் அழிந்தபோது அறநூல்கள் தோன்றின. அந்நிய மதங்களான சமண, பௌத்த மதங்களின் ஆதிக்கத்தைத் தடுக்கும் முயற்சியாகச் சைவ, வைணவ மதங்கள் தோன்றின. இவ்வகையில் அக இலக்கியங்களின் தோற்றத்திற்குச் சில காரணங்கள் உள்ளன அவை;

அரசனைப் பற்றியும் போரைப் பற்றியும் பாடினால் புலவர்கள் பரிசில் பெற வாய்ப்பு இருந்தது. ஆயினும் பரிசு பெற விரும்பாத புலவர்கள் அகம்பாடினர்.

வாழ்க்கை அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள எழுந்த எண்ணம்.

போரை விரும்பாத அமைதி வாழ்க்கையை வாழ விரும்பியப் புலவர்கள் புறப்பாடல்களைப் பாடுவதை விடுத்து அகப்பாடல்களை பாட நினைத்தமை. அடுத்தத் தலைமுறையினருக்கும் பயனளிக்கும் வகையில் அகவுணர்வுகளைப் படைக்க விரும்பியமை.

போரை, விரும்பிய மக்களின் மனதை இல்லறத்தில் செலுத்துவதற்கு மேற்கொண்ட மனமாற்ற முயற்சி.

வாழ்ந்த இன்ப வாழ்வின் மகிழ்ச்சியின் விளைவு.

போரால் பெறும் இன்பத்தினும் இல்லற இன்பம் சிறந்தது என்பதை உணர வைத்தல் ஆகியவை அகம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன.

ஆக படைப்பாளியின் எண்ணம் எதுவாயினும் வெளியிடும் இலக்கியங்கள் ஒரு கட்டுக்கோப்புக்குள் மரபினை மீறாமல் அமையவேண்டும். என்னும் கொள்கை அக இலக்கிய மரபாக விளங்குகிறது.

அகத்திணைத் தோற்றம்

மக்களின் மேன்மை பொருந்திய வாழ்க்கை முறைகளைக் காட்டும் காலக்கண்ணாடிகளாக அக இலக்கியங்கள் திகழ்கின்றன.

அகத்திணையின் தோற்றத்தை சமுதாயவியல், மானிட நிலவியல், தொல் தமிழினத்தின் உளவியல் என்றும் வகைப்படுத்தி ஆராய வேண்டும் என்கிறார் வ.சுப.மாணிக்கம். இதனை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்ற முப்பிரிவுகள் அகத்திணையுள் அடங்கும் என்கிறார் தொல்காப்பியர்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப [12]

என்று ஏழு திணைகளாகப் பகுத்துள்ளார். அவை அகத்திணை, கைக்கிளை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை பெருந்திணை என ஏழு வகைப்படும்.

இவற்றும் முல்லை குறிஞ்சி, மருதம், நெய்தல் சார்ந்த நிலப்பகுதிகளைக் காலத்தை ஒட்டிப்பாலை எனப்பட்டன. சிறுமை கருதியும் மிகை கருதியும் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நிலம் வகுக்கவில்லை எனலாம்.

அகத்திணைக்கூறுகள்

முதற்பொருள்

நிலமும், பொழுதும் என்ற இரண்டின் இயல்புகளை வைத்து முதற் பொருளைக் கூறலாம்.

கருப்பொருள்

கருப்பொருளாவது அந்தந்த நிலத்தின் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில், கருவி, செய்தி போன்றவற்றைக் குறிக்கிறது.

உரிப்பொருள்

உரிப்பொருளாவது மக்களின் உணர்வோடு பொருந்திய ஒழுக்கங்கள் அவை

புணர்தல், பிரிதல், இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்தம் என்று குறிக்கிறது. இவற்றின் புனைவே அகத்திணை இலக்கியம்.

சங்கத்தார் தாம் வடித்த புதிய காதல்

.....

அகச்சொல்லுக்கு இயல்பாக இருத்தலின்

அகத்திணை[13]

அகப்பொருளின் சிறப்பு

சங்கப்பாடல்கள் அகம், புறம் என்னும் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பெற்றிருப்பினும் புறத்தினும் அகம்சிறப்புடையது. புறத்திணைப் பொருளான வீரம் மக்களுள் சிலர்க்கே உரியது. ஆனால் அகத்திணைக்குப் பொருளான காமமோ ஆண், பெண் என்னும் பிரிவமைந்த உயர்திணை, அஃறிணை உயிர்களுக்கெல்லாம் பொதுவானது என்பதால் தனிச்சிறப்பை பெற்றுள்ளது. புலவர்களும் புறத்தை விட அகத்தையே அதிகமாக பாடியுள்ளனர்.

எட்டுத்தொகைப் பாடல்கள் அகம், புறம் வகைப்பாடு

எட்டுத் தொகையில்தொகை பாடல்கள் : 2381

அகம் பாடிய புலவர்கள் : 1862

அகப்பாடல்கள்		புறப்பாடல்கள்
அகநானூறு	400	519
நற்றிணை	400	
குறுந்தொகை	401	
ஐங்குறுநூறு	500	
கலித்தொகை	149	
பரிபாடல்	8	
பத்துப்பாட்டு	4	
மொத்தம்	1862	

அகம் பாடாது புறம் பாடியவர் தொகை 95, புறம் பாடாது அகம் பாடியவர் தொகை 30, அகமும் புறமும் பாடிய இருதிணைப் புலவர் 71, அகத்திணையில் கற்பியல் பாடாது களவியல் மட்டும் பாடியோர் 145, களவியல் பாடாது கற்பியல் பாடியவர்கள் 140, களவும், கற்பும் பாடியவர் 93 என்று சங்கப் புலவர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

அகப்பாடலின் பாகுபாடு

திணைப் பொருண்மை	பாடல்கள்	புலவர்	பெயர் தெரியாத பாடல்கள்
களவு	832	238	41
கற்பு	966	233	28
கைக்கிளை	4	2	-
பெருத்திணை	10	1	-

இக்கூறுகளின் அடிப்படையில் சங்ககால மக்களின் அக ஒழுக்கத்தை மேன்மையாகவே வாழ்க்கையில் கடைப்பிடித்தனர் என்பதைக் கூற முடிகிறது.

இவற்றை மெய்பிக்கும் நோக்கமாகவே;

அகவாழ்க்கை மக்களின் தனி வாழ்க்கை, புறவாழ்க்கை, அவர்தம் பொது வாழ்க்கை, தனிவாழ்க்கையின் உணர்வுகள் எக்காலத்தும் மாறாதவை. புறவாழ்க்கையின் உணர்வுகள் காலந்தோறும் மாறுபவை. இடத்திற்கேற்ப மாறுபவை. நிறைபேறு கொண்ட உணர்வுகளை நயமுற வெளிப்படுத்தும் அகப்பாடல்கள். பிறப்பு இறப்பு என்னும் நிலைபேற்று கொண்டது. என்னும் அரிய செய்திகளை நுட்பமாக அகப்பாடல்கள் வெளியிடுகின்றன.[14] என ஈ.கோ.பாஸ்கரதாஸ் இங்ஙனம் விளக்கியுள்ளார்.

அகத்தின் இயல்பு

மனத்தைச் சார்ந்தது அகம்; அல்லது அகம் என்பது மன உணர்ச்சியாகும். அது தூயது மட்டும் அன்று. மிகவும் நுண்ணியது. அகம் என்னும் காதல் உணர்வை தலைவியிடமிருந்து எளிதில் மற்றவர் அறிந்து கொள்ள முடியாது. பெற்றதாய், செவிலி, தோழி அறியமுடியாது. எனவே தன்னகத்தே உள்ள தூய உணர்வை, அன்பின்

அடையாளத்தை மற்றவர்க்குக் காட்டி அதன் தூய்மைத்தன்மையினைக் குலைக்க விரும்பாத உள்ளம் படைத்தவராய் சங்ககாலத்தவர் விளங்கினர் என்பது தெள்ளிதின் புலப்படுகின்றது.

காதலின் இயல்பு

ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழும் வாழ்க்கையே காதல் வாழ்வு என போற்றுகின்றனர். இஃது ஊனோடு உயிரோடு கலந்த ஓர் உயரிய பண்பு.

காமப்பருவம் உற்றவர்க்கே மணங்
கூட்டுவது தமிழ்ச் சமுதாய மரபு
மனப்பட்டார் அன்றே இன்பந் தலைப்பெய்துவர்[15]

என்றும்,

மக்கள் வாழ்க்கையில் ஒரு கால எல்லைக்குள் நிகழும் காதல் ஒழுகலாறுகளையே ஐந்திணை புனைய முற்படுகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை, குழவி முதல் முதுமை வரை எல்லாவற்றையும் அது சொல்ல முற்படுவதில்லை.[16]

என்றும் காதலின் இயல்பை இயம்புவார் அறிஞர் வ.சுப.மாணிக்கம்.

காதலியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவரின் உணர்வைக் காட்டும் பாங்கில்,

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
.....
வாரேன் வாழியே நெஞ்சே [17]

என்னும் சங்கப்பாடல் வரிகள் அமைந்துள்ளதையும் காணமுடிகின்றது.

காதலின் எல்லையை அளவிட்டு உரைத்தல் இயலாது. அது பருகுதலை ஒத்த தன்மை வாய்ந்தது. ஈருடல் என்னும் உடல் பேதமின்றி ஓருயிர்த் தன்மைப் பட்ட உயர் வாழ்வுடையது [18]

என்பர் அறிஞர் சண்முகம் பிள்ளை.

பல் படைநிவந்த வறுமை இல் சேக்கை

..... திருகி,

மெய்புகு வன்ன ..... முயக்கத்து

..... மாக்கள் [19]

என்று அகநானூறும்,

காதல் தானும் கடலினும் பெரிதே [20]

என்று நற்றிணையும் காதலின் இயல்பை எடுத்துரைக்கின்றன.

காதல் என்பது உண்மை அன்பு இதயத்தோடு கலந்துவிடும் பந்தம்; அகலாத அகற்ற இயலாத பற்று; உயிருடன் கலந்த உறவு என காதலின் இயல்பை மெய்பிக்க முடிகிறது எனலாம்.

அன்பும் காதலும்

அன்பையே காதலர் பெரிதாகப் போற்றினர். எத்தகைய சூழ்நிலையிலும் ஒருவர் மற்றவர் மீது கொண்டிருந்த அன்பில் மாற்றம் இல்லாமல் வாழந்தனர்.

காதல் வாழ்வில் இருவரும் பிரியாது கூடி வாழ்தலையே பெரும் பேறாகக் கருதினர். வறிய வாழ்க்கை வாழ்ந்தாலும் பிரியா வாழ்க்கையே பெருமை தரும் வாழ்க்கை என்று அறிவுறுத்தப் படுகின்றது என்பார் அறிஞர் மு.சண்முகம்பிள்ளை.[21]

ஒன்றன் கூறு ஆடை உடுப்பரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே

வாழ்க்கை [22]

சங்க காலக் காதலர், குறிப்பாகத் தலைவி துன்பப்பட்டது பிரிவை எண்ணி மட்டும் தான் என அறிய முடிகின்றனது,

..... யாக்கைக்கு

உயிர் இயைந் தன்ன நட்பின் உயிர்

.....

..... சாதல் அன்னபிரிவு அறியோளே [23]

என்னும் அகநானூற்றுப் பாடல் அடிகள் இதனை நன்கு உணர்த்துகிறது. இதனையே;

அன்பென்னும் பண்பை அடிப்படையாகக் கொண்டுதான்
தமிழிலுள்ள அகப்பொருள் நூல்கள் அமைந்திருக்கின்றன[24]

என்பார் நீதிபதி மு.மு.இஸ்மாயில்.

சங்க காலத்துத் தலைவனும் தலைவியும் அன்பால் இணைந்தவர்கள். வேறு எந்தக் காலணத்திற்காகவும் அவர்கள் வருந்தியதில்லை. ஒருவரையொருவர் இறுதி வரை நம்பி வாழந்தனர்.

அகத்திணைமாந்தர்

மனித உணர்வுகள் காலங்களைக் கடந்தவை. மனித உணர்வுகளுள் மகத்தானது காதலுணர்வு. காதல் வயப்படுவதும் காதலில் கட்டுண்டு கிடப்பதும். காலங்காலமாக நடைபெற்று வந்திருக்கும் காட்சிகள். சங்க அக இலக்கியங்ளில் வெளிப்படக் கூறமுடியாத மன உணர்வுகளை உள்ளுறை, இறைச்சி வாயிலாக உணர்த்தும் மரபினைக் கையாண்டனர். கேட்போர் புரிந்து கொள்ளும் வண்ணம் இவ்வுள்ளுறை இறைச்சி வாயிலாகக் குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட மன ஒட்டங்களை முன்நிறுத்துகின்றனர். அக மாந்தரின் மன உணர்வுகள் கூறுவோரின் இன்பதுன்ப மனநிலைக்கு ஏற்பவும் கேட்போரின் மனநிலைக்கு ஏற்பவும் மாறுபட்டு ஒலிக்கின்றன.

அகமாந்தர்கள் தன்மனநிலையை உணர்த்தும் போது தலைவனைச் சிந்திக்கத் தூண்டுவதோ, உணர்வு வயப்படுத்துவதோ இங்கு நோக்கமன்று. தலைவியின் நிலையைத் தெளிவாக எடுத்துரைப்பதே நோக்கம். ஆற்ற இயலாத தலைவியின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் பிரிய நினைக்கும் தலைவனை,

வாழா ளாதல் அறிந்தணை சென்மே!
புலம்பு கொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை
யானும் ஆற்றேன்[25]

என மனமறிந்து கூறுவதற்குத் தம் மனநிலையைத் தெளிவுப்படக் கூறும் நோக்கமே காரணமாகும்.

தொல்காப்பியர் தோழி, தலைவி, தலைவன், செவிலி, நற்றாய், காமக்கிழத்தி, வாயில்கள் என்று அகத்திணை மாந்தர்களின் செயல் திறத்தை குறிப்பிடுகிறார். தோழி, தலைவன் கூற்றுக்கள்; அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய மூன்றிலும் இடம் பெறுகின்றன. சங்க அக இலக்கியங்கள், திணை துறைகளுக்குத் தரும் சிறப்பினும் அகமாந்தரின் மன உணர்வுகள் சிறப்பிடம் பெறுகின்றன.

முதன்மை மாந்தர் தோழி

அக இலக்கியத்தில் இன்றியமையா இடம் பெறுபவள் தோழி. களவு கற்பு நிலைகளில் பெரும்பங்கு ஏற்பவள் தோழி. தலைவியின் குழந்தைப் பருவத்தில் உடலைப் போற்றி வளர்ப்பவர் செவிலி. இளமைப்பருவத்தில் உள்ளத்தைப் போற்றிப் காப்பவள் தோழி. தோழியரே பின்னால் செவிலியர் என்ற நிலையை அடைகின்றனர். தலைவியின் விளையாட்டுப் பருவத்திலிருந்து தோழியாக இருந்து மகப்பேறு நிலையில் செவிலியாக மாறுகின்றாள். செவிலியின் மகள்தான் தோழி என்பதை,

தோழி தானே செவிலி மகளே [26]

என்றும்;

சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே[27]

எனக் கூறுகிறார் தொல்காப்பியர்.

தலைவனும், தலைவியும் செல்வநிலையில் ஓங்கி நிற்கும்போது தோழி சொல், செயல் ஆகியவற்றை அவர்களுக்கு உணர்த்துகிறாள். அதனால்தான் தோழி துணைப்பாத்திரமாயினும் இணையிலா நிலைமையில் முதல் நிலையில் வைத்து எண்ணப்படுகிறாள் தோழி. தலைவிக்காகவே தலைவயின் காதல் வெற்றிக்காகப் படைக்கப்பட்ட பாத்திரமாகக் காணப்படுகிறாள். களவு வாழ்வு என்ற தேரினது அச்சாணியுடன் கூடிய சக்கரம் போன்றவள் தோழி. அவளின் செயல்திறன் இல்லையானால் தலைவி தலைவனின் களவொழுக்கம் சிறப்பாக அமையாது. தோழியின் கூற்றில் அவளது தனிப்பட்ட வாழக்கையோ பிற அகமாந்தர்களுடன் தொடர்பு கொள்ளாமல் அவளுக்கெனத் தோன்றும் தனிப்பட்ட மன உணர்வுகளோ சித்தரிக்கப்பட்டவில்லை. பிற அகமாந்தர்களின் மன உணர்வுகள் தோழியினால்

விளக்கமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தோழி கூற்று மொத்தப் பாடல்	- 780
தோழி தலைவனுக்கு உரைத்தவை	- 417
தோழி தலைவிக்கு உரைத்தவை	- 290
தோழி செவிலிக்கு உரைத்தவை	- 37
தோழி தன் நெஞ்சிற்கு உரைத்தவை	- 3

தோழியின் கூற்றில் தனிமைப் புலம்பலும் மனப்போராட்டங்களும் காணப்படவில்லை. தோழி அறிவில் ஓங்கி உயர்ந்த நிலையில் இருக்கிறாள். இதனை,

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலான [28]

என்ற தொல்காப்பியரின் கூற்றிற்கு ஏற்பச் சிறந்த நிலையில் விளங்குபவள் தோழி. தலைவியின் வாழ்வில் தோழியின் இடத்தை வேறு எந்தத் துணை மாந்தராலும் நிரப்ப முடியாது. இதனை உணர்ந்த தலைவி,

தோழி, நீ திறமை மிக்கவள்
இடமறிந்து காலமறிந்து
இன்சொல்லும் கடுஞ்சொல்லும்
பேசும்கலையில் வல்லவள் [29]

என்று தோழியின் செயலைப் புகழ்ந்து அவள் நெடிது வாழ வேண்டும் எனத் தலைவி வாழ்த்துகிறாள். **தோழிஇ** [30] இல்லையென்றால் தலைமக்களின் காதல் இல்லை எனக் கூறுவது சிறப்புடையதாகும்.

அறத்தொடு நிற்றலில்தான் தோழியின் பொறுப்பு சிறப்பாக விளிக்கப்படுகிறது. 99 வகையான மலர்களை அடுக்கிச்சொல்லும் சிறப்பைப் பெற்றுள்ளாள் தோழி. தலைவனிடம் புலவி நீங்காத தலைவிக்குத்தோழி,

பரத்தமை தாங்கலோ விலனென வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
அது புலந் துறைதல் வல்லி யோரே [31]

என அறிவுரை கூறுவதும் சிறப்புடையதாகும்.

தலைவனின் பரத்தமை நினைத்து வருந்தும் தலைவியைத் தேற்றுவதும், தாய்க்கு அறத்தொடு நிற்பதும் இத்தோழிக்கே உரிய செயல்கள். உடன்போக்கு நிலையில் தலைவியைப் பாலுணர்த்த நலங்கவர் பசலையை நகுவோம் என அழுகையூடே சிரிப்பதும் எனத் தோழிக்கு உரிய வாழ்வியல் கூற்றை;

இலங்குவீங்கு எவ்வளை! ஆய்நுதல் கவனப்
பொலந்தோர்க் கொண்கண் வந்தனன் இனியே [32]

என்கிறது ஐங்குறுநூறு.

அகத்திணை வாழ்வில் கூறுகள்

பொருள் நிலையாமை, இளமை நிலையாமை, வாழ்நாள் நிலையாமை இவற்றோடு முரண்படுத்திக் காட்டுதல். தோழியின் உத்தியாகும். பொருள் எக்காலத்திலும் சென்று ஈட்டுதற்குரியது. ஆனால் இளமையும் வாழ்நாளும் காலத்தால் கட்டுப்பட்டவை. நாடு கடந்து சென்று ஈட்டும் பொருளும் கற்கும் கல்வியும் தலைவியின் நலன், இளமை, காமம், இன்பம், குழந்தையின்மை ஆகியவற்றைத் தருமோ என்று முரணமைப்பில் நிலையாமைத் தத்துவத்தை வலியுறுத்துகிறாள் தோழி. நிலையாமை பொருளைச் சுட்டிய தோழி நிலைத்த சிறந்த பொருள் இன்னது என்று கூறுகிறாள். தலைவியுடன் கூடி வாழும் வாழ்க்கையே தலைவியின் தோள்பிரியாமையை பொருளினும் சிறப்புடையது என்பதை தன் சொல் வன்மையால் வாழ்வியல் கூற்றை மெய்பித்துவிடுகிறாள்.

காதலில் தோழியின் அறம்

தலைவன் பரத்தனானபோது அவன் ஒழுக்கத்தைச் சுட்டிக் கடிகின்றாள். அவன் உள்ளம் திருந்தி வரும்போது தலைவியிடம் அவனுக்காக வேண்டியும் வாயில் நேர்ந்தும் உதவுகின்றாள். தலைவன் தான் இல்லாத நாட்களில் என்ன செய்தீர் எனக் கேட்கிறான். அதற்கு தோழி வேந்தனின் பகை நீங்கவும், அறம் நனி சிறக்கவும், அரசுமுறை செய்யவும் எனத் தலைவி பொது நலத்துடன் இருந்ததைத்தான்

நாவன்மையால்,

வாழியாதன் வாழி யவினி
அறநனி கிறக்க அல்லது கெடுக
வெனவேட் டோனே யாயே [33]

எனக் கூறி போற்றுதற்குரியது.

குறை நயப்பித்தல்

தலைவன் தோழியின் துணையொடு களவை நீட்டிக்க தலைவனின் இச்செயல் குறையுறுதல் என்றும் தலைவியின் இசைவு குறைநேர்தல் என்றும், தோழியின் செயல்பாடு குறை நயப்பித்தல் ஆகிறது. தோழி உரிமையுடன் கடிந்தும் உறழ்ந்தும் குறைநயபிக்கிறாள். தலைவியின் களவுச் செயலைத் தன்பாலும் கூறுகிறாள். தோழி தலைவியிடம் குறைநயத்தலை,

குறைந்து அவட்படரினும் [34]

எனக் கூறுகிறது தொல்காப்பியம்.

களவு மேற்கொண்ட தலைவி தன் கனவை நேராகக் கூறித் தோழியின் உதவியைக் கேட்கவில்லை. மாறாக மறைக்கிறாள் தலைவியின் நிலை உணர்ந்த தோழி தலைவியிடம் நேராகக் களவைக் கேட்காமல் தான் அறிந்ததை உள்ளுறை வாயிலாக உணர்த்துகிறாள். தலைவனுடன் களவொழுக்கம் கொண்டு அதனை மீண்டும் பெற விரும்பும் ஆசை உணர்விற்கும் அச்சமான நிலையால் தன் ஆசைகளை அடக்கி நிற்கும் ஏக்க உணர்விற்கும் இடைநின்று தலைவி கொள்ளும் தவிப்பைப் தவிர்ப்பது. தோழியின் நோக்கம் இதனால் தலைவிக்கு இருக்கும் ஏக்கத்தைத் தான் உணர்ந்து கொண்டதைத் தலைவிக்கு,

காமம் செப்ப நாணின்று கொல்லோ [35]

எனக்கூறும் தோழி இங்ஙனம் தலைவியின் நிலைப்பாட்டை அறிய முயல்கிறாள்.

களவொழுக்க வாழ்வியல்

தோழி களவொழுக்கத்தை அறிவதற்கு இரண்டு முறைகளை கொண்டிருக் கிறாள். ஒன்று, தலைவனோடு தான் களவுத் தொடர்பு உடையவள் போலத் தலைவியிடம் நடித்தல். மற்றொன்று தலைவனிடம் தலைவியை அறியாதவளாகக் காட்டுதல். இக்கூற்றின் வழி களவை அறிதற்குக் தலைவியிடம் கையாளப்படும் தோழியின் உத்தியாகும்.

தோழி மேலும் தலைவனுடன் உறவு கொண்டவளாகக் காட்டுவதற்கு தலைவியின் களவைத் தானே வெளிப்படும்படி செய்வது; காமத்திற்கும், தயக்கத்திற்கும் இடைப்பட்டு ஊசலாடும் தலைவனின் மனநிலையை இரக்கம் தோன்ற எடுத்துரைத்தல்; தலைவனுக்கு வாக்குத்தந்ததை எடுத்துக்கூறி மறுத்தால் பழி தன்னைச் சேரும் எனத் தோழி வருந்துதல்; தலைவன் எதிர்கொள்ளாது போனால் அவனை இழக்க நேரும் என எச்சரித்தல். ஆகிய நிலைகளில் களவொழுக்க நெறிகளை எடுத்துக் காட்டுகிறாள் தோழி என்பதில் ஐயமில்லை. தலைவனைக் குறைகூறத் தயங்கி நிற்கும் தலைவியிடம் தலைவனின் குறையை எடுத்துரைக்கும் தோழியின் கூற்றில் அவனது மனமும் செயலும் பெரிதும் பேசப்படுகின்றன.

தலைவியின் உறுப்பு நலன் பாராட்டிய தலைவனின் பேச்சு தலைவிக்கும் கூறப்படுகிறது. தலைவி தன் இன்சொலால் எழிலால் தன் உயிரை வாங்குவதாகக் குறைகூறுகிறான் தலைவன். இதனை உணர்ந்த தோழியின் உள்ளத்தில் இருவரும் இனிது உரையாடி இன்புற்றது தெரியும் என்பதை உணர்த்தும் துடிப்புக் காணப்படுவதை,

நகையாகின்ற தோழி
தான் நம் அணங்குதல் அறியான் நம்மில்
தான் அணங் குற்றமை கூறி .....தொழுது நின்றதுவே [36]

எனக் கூறும் தோழி தலைவனுடன் இன்புற்ற தலைவி அவனது பிரிவால் வருந்தியதை தான் உணர்ந்து கொண்டதைத் தலைவிக்கு உணர்த்த விரும்புகிறாள். இதனால் இச்செறிக்கவும் ஆளாக்கப்படுகிறாள் தலைவி, இற்செறிக்கப்பட்ட தலைவியை நாடி

இரவுக்குறி வரும் தலைவனின் ஆற்றாமையை எண்ணித் தலைவிக்கு கலங்கி நிற்கிறாள். முன்னது தலைவிக்கு நேர்ந்த கட்டுப்பாட்டினால் அவள் கொள்ளும் காதல் மிகை தலைவனின் கட்டுப்பாடு மீறிய வருகையில் தலைவி கொள்ளும் துயர்மிகை. இவ்விரு மிகைப்பட்ட தலைவியின் உணர்வுகளை உணர்ந்த போது தோழி தலைவனை வரைவு கடாவுவதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவர் என்பதை,

வரைவு – திருமணம்

கடாதல் – வன்மையாகச் சொல்லுதல், தலைவன்

மனதில் தைக்குமாறு அறிவுரை கூறுதல்

என விளக்கம் தருகிறார் இராம.சண்முகம். **தலைவன் இருவகைக் குறிகளிலும் பலகாலும் வந்தொழுகும் இடத்து இக்களவு வெளிபடச் சுற்றத்தார் இற்செறிப்பாரோ என்றும் வழியாலும் பொழுதாலுந் தலைவற்கு ஏதம் வருங்கொல் என்றும்தோழி அச்சமுற்று இவ்வொழுக்கம் நும் குடிப்பிறப்பிற்கும் சிறப்பிற்கும் பொருந்தாமையின் இனி நீவிர் இவளை மணந்து கொள்வதே தகுதியென்று தலைவனை வரைவு கடாவத் தொடங்குவாள்**[37]என்று இராகவையங்கார் விளக்கம் தருகிறார். இக்கூற்றின் அடிப்படையில்;

அலர்மிகை

வெறியாட்டு

நொதுமலர்

இற்செறிப்பு

தலைவன் ஆற்றாமை

தலைவியின் ஆற்றாமை

ஆகிய காரணங்களைக் சுட்டுகிறாள்.

அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் என்பது களவைக் கற்பாக்க முயல்வது களவு, கற்பு என்னும் ஒழுக்கத்தைப் பெற்றோருக்குத் தெரிவிக்கும் நிலை அறத்தொடு நிற்றலாகும்.

தலைவியின் களவு வாழ்க்கையை அவள் தம் பெற்றோருக்கு வலியுறுத்துவதே தோழியின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது. இவ்வறத்தொடு நிற்றலை,

அறதொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலன் தோழி என்ப[38]

என்று தொல்காப்பியர் விளக்கம் தருகிறார். 'குழந்தை இறப்பினும் தாய் பிழைக்க' என்ற உலக வாக்கிற்கு ஏற்ப இதுவரை உயிரினும் சிறந்ததாகத் காத்துவந்த நாணத்தை விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றி அறத்தொடு நின்று காதலைக் கற்பிக்க முயற்சிப்பது அறத்தொடு நிற்றலின் சிறப்பாகும். ஐந்திணை களவுத்துறைகளுள் அறத்தொடு நிற்றலின் சிறப்பினை உணர்த்த ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ்மொழியின் தனியிலக்கிய மதிப்பை அறிவுறுத்த விரும்பிய குறிஞ்சிக்கபிலர் இத்துறையில் 261 அடிகள் கொண்ட குறிஞ்சிப் பாட்டைப் பாடியுள்ளார். இறையனார் களவியல் உரையும் **மாறு கோளில்லா மொழி**[39] என்று விளக்கம் தருகிறது. இக்கருத்தனை ஒட்டியப் பாங்கில் அறத்தொடு நிற்றலில் தோழியின் உளவியல் அமைகிறது.

தோழியின் உளவியல் கூறுகள்

தலைவியின் வேறுபாட்டை அறிந்து செவிலி ஐயுறும் சூழல்.

தாய் வெறியாட்டு எடுக்கும் பின்புலம், நொதுமலர் வரைவுக்குத் தமர் உடன்படும் மனப்போக்கமைவு.

தலைவன் வரைவொடு வந்தபோது, அதனைத் தமர் மறுக்கும் காலம்.

தலைவி அறத்தொடு நின்று களவை அறிவிக்காமலேயே தோழியே அறிய முயலுகின்ற சூழலும் அதற்குத் தோழி கைக்கொள்ளும் அணுகுமுறைகள்.

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கத் தலைவியின் முன் இசைவினை வேண்டுதல்.

இக்கூற்றின் அடிப்படையில் தொல்காப்பியர் அறத்தொடு நிற்கும் மரபும், வகையும் பற்றி,

அறத்தொடு நிற்கும் காலத்தன்றி

அறத்தொடு மரபிலள தோழி என்ப[40]

என்று அறத்தொடுநிலை கருக்கொள்ளும் காலமும், இடமும் சுட்டுகிறார். தலைவனது எளிமை, உயர்வு, வேட்கை, மிகுதி ஆகியவற்றைக் கூறி அறத்தொடு நிற்பது என்பதை,

எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்

கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு

உண்மை செப்பும் கிளவுயொடு தொகைஇ

இவ்வெழு வகைய என்மனார் புலவர் [41]

என்று அறத்தொடு நிற்கும் முறையை வாழ்வியல் இயல்பூக்கமாகக் கூறுகிறார்.

தலைவி

அகத்திணை மாந்தர்களை இணைப்பதில் தோழி எனில் அகத்திணை வட்டத்திற்கு அமைந்த மையப்புள்ளி தலைவியாவாள். ஐந்தணைகளின் உரிப்பொருளாகிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய ஐவகை உணர்வுகளும் தலைவியை தொல்காப்பியம் கிழவி, பெட்டை, பெடை, பெண்டிர், மகட்பால், மகடூஉ கிழத்தி எனப் பல்வேறு சொற்களால் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் தலைவனும், தலைவியும் ஒன்றுபட்ட மனத்தினை உடையவராகத் திகழ்கின்றனர். இருவரும் ஒருங்கே இணைந்து இல்லக்கடமைகளை ஆற்றுகின்றனர். தலைவனின் பிரிவு பரத்தையின் காரணமாக நிகழும் பொழுது தலைவி அடையும் மனத்துயர் மிகுதி. இதனை **அகத்தணை ஓர் பெண்ணிலக்கியம். அக மாந்தர்களுள் தலைமை தலைவிக்கே என்றும் பிற மாந்தர்கள் தலைவி வழிபட்டவர்கள் செவிலியும் அன்னையும் தலைவியின் நல்வாழ்விற்காக வாழ்பவர்கள் அகப்பாட்டிற்குத் தலைமையவள் தலைவி**[42] எனத் தலைவியின் சிறப்பைக் குறிக்கிறார் வ.சுப.மாணிக்கம் இவற்றில் பெண்களுக்கு உரிய பண்புகளாகத் தொல்காப்பியர்,

அச்சமும் நாணமும் மடனும் முந்துறத்த

நிச்சமும் பெண்பாற்குரிய என்ப[43]

என்று அச்சம், நாணம், மடம் போன்றவற்றை அணிகலனாகக் குறிப்பிடுகிறார். இவற்றை நீங்காதவளாகத் தலைவி இருந்ததை,

அனையன பல பாராட்டி பையென
வலைவர் போல சோர் பதன் ஒற்றி
புலையர் போல புன்கண் நோக்கி
தொழுதலும் தொழுதான் தொடலும்
தொட்டான் காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்

என்று இப்பாடலில் தலைவன் மெய்தொட்டுப் பழகுதல் முதலிய எட்டையும் செய்தும் நாணம் நீங்காதவளாக இருந்ததைக் கலித்தொகை குறிக்கிறது.

அகவொழுக்கத்தில் தலைவனுக்கு இன்பமும், துன்பமும் ஒரே நேரத்தில் நடைபெறும் இந்நிலையில் தலைவியின் கூற்று நிகழ்வதை,

தலைவழி தோழிக்கு அறத்தொடு நிற்றலும் உடன்போக்க கொள்ளுதலும்.
தலைவன் சிறைப்புறமாக இருக்கத் தலைவி வெளியிடும் மன உணர்வுகள்.
தலைவி கொள்ளும் பிரிவுத்துயர்.
தலைவனின் பரத்தையற் பிரிவில் தலைவி கொள்ளும் மனநிலை.

ஆகிய நிலைகளில் இல்லறக் கடமைகளை ஆற்றும் பொழுதும் தலைவனைப் பிரிந்து வருந்தும் காலத்து எழும் வேட்கை மிகுதியாலும் தலைவனைக் காணும் ஆவல் தலைவிக்கு இருந்தது.

நெடுங்கொடி நுடங்கு நறவுமலி பாக்கத்து நாட்டுனற் பட்ட மோட்டிரு வரா அற
நாட்டுனற் பட்ட மோட்டிரு வரா அற[44]

என்று தலைவன் 'கள்' குடித்துத் தன் கடமையை மறந்த நிலையில் கூடத்தலைவி மனம் நோகாது உணவு பரிமாறுவாள்.

கற்பின் செல்வி

தலைவனைச் சுமந்த தலைவியின் மனது அவனை வரைந்து

கொள்ளுவதிலேயே குறியாய் இருக்கிறது. ஒரு பெண்ணிற்குப் பலவழிகளிலிருந்து இன்பங்கள் பெருகினாலும் திருமண வாழ்க்கையை தவிர அவளுக்குப் பேரின்பம் வேறெதும் இல்லை. இந்நிலையை,

உயிரினும் சிறந்தன்று நானே நாணினும்

செயிர்தீர் காட்சி கற்புச் சிறந்த தன்றென[45]

என்று குறிப்பிடுகிறார். அகத்திணை மாந்தருள் எக்குறையும் இன்றிக் குடும்பத்தில் ஆட்சிபுரியும் வேந்து போன்றவர்கள் தலைவி. தலைவி கற்பு என்னும் உன்னத அணிகலனைப் பூண்டவள். உயர்குடியில் பிறந்ததால் உயர்ந்த பண்புகளையும் பெற்றுள்ளாள். அத்தகைய தலைவியின் காதல் வாழ்க்கையில் 'வாயில் மறுத்தல்', 'வாயில் நேர்தல்' போன்ற அகத்துறைகள் யாவும் கற்பின் செல்வியாகிய தலைவியின் உரிமையில் பிறந்தவை இதனை,

கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்

மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்[46]

என்று தலைவியின் குண நலன்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

தலைவியின் பண்புகள்

அகத்தில் அன்புடன் வாழ்வதுதான் மனிதவாழ்க்கை. அகத்தில் அன்பு இல்லாதவர் எலும்பு இல்லாத புழுவை ஒத்தவர்கள் என்ற வள்ளுவரின் கூற்றிற்கு ஏற்ப அன்பை மட்டும் முதன்மையாகக் கொண்டு வாழ்க்கையில் இன்பம், துன்பம் என எச்சூழ்நிலையிலும் தனித்தப் பண்புகளால் சிறப்புப் பெற்றவள் தலைவி. அக இலக்கியத்தில் அமையப்பெற்ற தலைவி மனிதச் சமுதாயத்திற்கு அறநூல்கள் காட்டும் நெறிமுறைகளையும் அறிந்தவளாக விளங்குகிறாள்.

தலைவன் சில நேரத்தில் செய்யும் தவறுகளையும், புறச்சூழலில் நடைபெறும் சிறுசிறு தவறுகளையும் மன்னிக்கிறாள் தலைவி. தலைவனை விட தலைவி வாழ்க்கை நிலைகளில் மிகவும் நுணுக்கமாகவும், ஆழமாகவும், அகலமாகவும் சிந்தித்து நல்லனவற்றை ஏற்றுக்கொண்டு தீமையைக் களைந்து இல்லறத்தை நடத்துபவளாக

அமைந்து இயல்பாகவே அமைகிறாள். **கற்புக்குக் காதலே அடிப்படை. கற்புள்ளவர்கள் உயிருள்ளவர்கள். கணவன் பிரிந்திருந்தாலும் அவன் நலமாக இருக்கிறான் என்பதற்குக் கற்புடைய மனைவியின் காதலும் உயிருமே அடையாளமாகும்**[47] என்பதை உணர்ந்தவள் தலைவி. தவைவன் பிரிந்து இன்னல்களைத் தலைவிக்குத் தந்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்கிறாள்.

தலைவன்

அக இலக்கியங்கள் காட்டும் தலைவன் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சும் தன்மையுடையவன். களவு கற்பு என்னும் இரண்டு நிலைகளிலும் தலைவன் முதன்மை பெறுகிறான். தலைமக்களது தன்மைகளைத் தொல்காப்பியர்,

ஒன்றே வேறே என்றிரு பால்வாயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்[48]

என்று ஊழினது காரணமாக உள்ளப் புணர்ச்சி கொள்ளும் தலைமக்கள் ஒத்த தன்மை உடையவராய் இருப்பினும் தலைவன் உயர்ந்தவனாய் இருக்கிறான். மேலும் ஆணும் பெண்ணுமாய் வேறுபட்டு நிற்கும் இருபாலிடத்தும் மேலாண்மை செலுத்தக்கூடிய அஃதாவது ஒன்றி உயர்ந்த, பாலது ஆணையே காதல் பிறக்கக் காரணமாவது. இக்காதல் உருவுநிறுத்த காமவாயிலை இலக்காகக் கொண்டது. பெண்ணைவிட ஆண் மிக்கோனாயினும் இக்காம உணர்வு தடையின்றிச் சென்று சேரும். என்பது இத்தொல்காப்பிய நூற்பாவின் பொருள். தலைவன் மறத்தோற்றம் கொண்டவனாக இருப்பினும் அடக்கமுடையவனாக உள்ளான். கொடுப்பதில் வள்ளல் தன்மை கொண்டவனாக இருப்பதை,

ஒன்று இரப்பான் போல் எளி வந்தும் சொல்லும் உலகம்
புரப்பான் போல்வது ஓர் மதுகையும் உடையன்[49]

என்கிறது கலித்தொகை. மேலும் தலைவனது உணர்வு போராட்டங்களில் ஏமாற்றம், கலக்கம், ஆற்றாமை, ஏக்கம் ஆகியவை அடிப்படையக் இருக்கின்றன. தலைவியை அடைய வேண்டும் என்ற அவனுடைய எண்ணத்திற்கு இடையூறு நேர்ந்தால் ஏமாற்றம்

ஏற்படுகின்றது. இதன் விளைவாக அவன் உள்ளத்தில் கலக்கம் ஏற்படுகின்றது. சில சூழ்நிலைகளில் இவை இரண்டும் சேர்ந்தும் தலைவன் உள்ளத்தில் உணர்வு போராட்டத்தை உருவாக்குகின்றான்.[50] அக இலக்கியத்தில் சுட்டப்பெறும் தலைவன் தொழிலை உயிரினும் மேலாகப் போற்றியவன். தம்முடைய முன்னோர் சேர்த்து வைத்த பொருளைப் பயன்படுத்தவில்லை. பிறரின் உழைப்பிலிருந்து வந்த பொருளைப் பயன்படுத்துவதை இழிவு என்று கருதினான் இதனை,

வினையே ஆடவர்க்கு உயிர் [51]

என்கிறது குறுந்தொகை. தாமே தேடிய பொருளைக்கொண்டு இல்லறம் நடத்துவதையே வாழ்க்கைக் கொள்கையாக வகுத்துக் கொண்டனர். தலைவன் எந்தச் செயலைச் செய்தாலும் திறமையாகவும், செம்மையாகவும் செய்கின்ற மனவுறுதியைப் பெற்றிருக்கின்றான். இதனால் அவன் தலைவியிடம் கொண்டிருக்கும் காதல் உண்மையாகவும், உறுதியாகவும் இருந்தது. தலைவன் தலைவியின் இன்ப வாழ்க்கையைக் குறிக்கோளாகவும், இனிய நினைவுகளை இன்ப ஊற்றாகவும் கொள்கிறான் இதனை,

இன்பம் விழைவான் வினை விழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண் [52]

எனக் கூறுகிறது.

தலைவன் உள்ளம்

உள்ளப்புணர்ச்சியை விரும்பும் தலைவன் இயற்கைப் புணர்வின் பொழுது தலைவியின் கூந்தலாகிய தலையணையில் இன்பமடைந்து நின்றவனாக அக்கூந்தலின் இயல்பினை நினைத்து இக்கூந்தலினால் பெற்ற இன்பத்தைத் தொடர்ந்து பெற இயலவில்லையே,

யானயந் துறைவோள் தேம்பாய் கூந்தல்
வளங்கெழு சோழ குறந்தைப் பெருந்துறை [53]

என்று நெஞ்சிற்குக் கூறுவதிலிருந்து என்று தலைவனால் காதலிக்கப்பட்ட தலைவியின் வண்டுகள் மொய்க்கின்ற கூந்தல் சோழ மன்னனின் உரையூரை ஒட்டிச்செல்லும் காவிரி மணலாகிய கருமணல் நீண்டு சரஞ்சரமாகப் படிந்திருப்பது போல மணம், குளர்ச்சி உள்ளதாக அமைந்திருக்கிறது என்று தலைவியின் நீண்ட கூந்தலை தன்மனதில் நினைத்து நலம் பாராட்டுகிறான். இவ்வின்பத்துடன் ஒருவனின் வாழ்க்கைக்குச் செல்வம் மிகவும் இன்றியமையாதது. அதை எவ்வழியிலும் பெற்று வாழ்க்கையை இன்பமாக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் பொதுவானது. தலைவியும் தலைவனின் வாழ்க்கைக்குச் செல்வத்தைவிட மிகவும் தேவையான வளாகக் கருதப்படுகிறாள் என்பதை,

இல்லோ லின்பங் காமுற் றா அங்
கரிது வேட் டனையா னெஞ்சே காதலி [54]

எனச் சுட்டுகிறது. மேலும் தலைவியை முதன்முதலாகப் பார்த்த அந்த நாள் தொடங்கி இன்றுவரை அவனைவிட்டுப் பிரிவு என்பதை அவன் மனதாலும் நினைக்கவில்லை. தலைவியை ஒருமுறை கூடுதல் இந்தப் பிறவிக்குரிய முழுப்பயனாக அமையும் என்கிறான். தலைவன் மேலும் அவளைக் கூடிய பிறகு அதன் காரணமாக உயிரை இழக்க நேரிட்டாலும் அதைப்பற்றித்தான் கவலையுறவில்லை என்கிறான். தலைவன் தலைவியைக் காணாது பல நாள்கள் உயிர்வாழ்வதைவிட அவளைக்கண்டு பேசி அடுத்த கணமே இறந்துவிடுதல் நன்று என்கிறான். தலைவியை மறந்து தன்னால் வாழமுடியாத நிலையைத் தன் நெஞ்சிற்கு உணர்த்துகிறான் தலைவன்.

காதல்

காதல் என்பதற்கு அன்பு, வேட்கை என்ற பொருள்களைத் தமிழ்ப்பேரகராதி தருகின்றனது. எல்லா உயிர்களிடத்தும் கொள்ளும் அன்புணர்வைக் காதல் எனக் கொண்டாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் அன்புணர்வே காதல் என்ற பெயரால் சுட்டப்படுகின்றது. மேலும் காதல் இயற்கையில் தோன்றும் உணர்வு அது தலைவனிடம் தலைவியைக் கண்டபொழுது வெளிப்படுகிறது இதனை,

உடம்பொடு உயரிடை என்னமற்று அன்ன

மடந்தையொடு எம்மிடை நட்பு[55]

என்று உடம்புக்கும் உயிருக்கும் எப்படிப்பட்ட உறவோ அப்படிப்பட்ட உறவே தலைவிக்கும் தனக்கும் உள்ள உறவு என்று தன் காதலைக் கூறுகிறான். தலைவன், தலைவியின் மீது வைத்திருக்கும் அன்பை உயிரினும் சிறந்ததென்றும் கிடைத்தற்கரிய தலைவியின் அன்பு கடல்சூழ்ந்த உலகத்தைப் பெற்று வாழ்விதைவிடப் பெரியது என்கிறான் இதனை,

கடல்சூழ் மண்டிலம் பெறினும்

விடல்சூ ழலனான் நின்னுடை நட்பே [56]

என்று தலைவயின் மீதுள்ள காதலைப் புலப்படுத்துகிறான்.

மடலேறுதல்

தலைவியைப் பெரும் பொருட்டுத் தலைவன் மேற்கொள்ளும் ஒருவகையான செயல் மடலூர்தல். தலைவனது திருமணத்திற்குக் களவுக்காலத்தில் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்த பின்னர் சான்றோர்களின் உதவியை நாடி ஊரார்க்குத் தன் காதலைத் தெரிவிக்கும் பொருட்டு உடம்பை வருத்திக் கொள்வது. தலைவனின் உடம்பெல்லாம் நீறுபூசித் தலைவியின் உருவம் பொறித்த கொடியினைத் தாங்கி எருக்கம்பூ மாலை அணிந்து பனங்கருக்கால் செய்த குதிரைக்கு மயிற்பீலி, பூளைப்பூ, ஆவாரம்பூ போன்றவற்றால் தொகுத்த மாலையைச் சூடியும், ஒலிக்கும் மணியைக் கட்டித் தலைவியைப் பெறும்பொருட்டு தலைவன் மேற்கொள்ளும் இச்செயல் மடலூர்தல் எனப்படும்.

மாவென மடலும் ஊர்ப பூவெனக்

குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப [57]

என்கிறது குறுந்தொகை. இலக்கண இலக்கிய மரபுப்படி மடலூர்தல் என்பது ஆண்களுக்கு மட்டும் உரித்தானது என்பதை,

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்

பொற்புடை நெறிமை இன்மையான [58]

என்கிறது தொல்காப்பியம். மேலும் இதனைத் திருவள்ளுவரும்,

கடல் அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்

பெண்ணின் பெருந்தக்கது இல் [59]

என்று காமம் மிகுதியாக இருந்தாலும் பெண் மடல் ஏறுவதில்லை என்று பெண்களின் சிறப்பைச் சுட்டுகிறார்.

இடைச்சுரத்து நிற்றல்

இடைச்சுரத்து நின்ற தலைவனின் உணர்வுகள் புறவாழ்வில் விரும்பிய கடமையுணர்விற்கும், அகவாழ்வில் தலைவி மேல் கொண்ட காதலுக்கும் இடையே நடைபெறும் மனப்போராட்டத்தை விளக்கி நிற்கிறது. பொருள் தேடும் வேட்கை தலைவனைப்பின்னால் இழுக்கிறது. தலைவன் கடமை உணர்வால் உந்தப்படுகிறான். தன் தனிப்பட்ட உணர்வை எண்ணும் போது காதல் உணர்வால் தடுக்கப்படுகிறான். இவ்விருவரின் மன உணர்வுகளின் போர்க்களமாக அவன் நெஞ்சு அமைதலின் தலைவனின் மனதில் கடமை உணர்வும், காதல் நினைவும் சமநிலையில் நிற்கின்றன. இதனை,

இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி

ஒருதலைப்படா எறும்புடன் [60]

என்கிறது அகம். தலைவன் பொருளின் காரணமாக முன்னுக்குச் செல்வதற்கும் தலைவியின் மேல் கொண்ட காதலால் பின்னுக்குச் செல்வதற்கு இயற்கைக் காட்சிகள் காரணமாக அமைகின்றன. இதனை **மழையின்மையால் வறண்ட நெறிகள் புலியும் களிறும் பொருது நிற்கும் வழிகள் ஆறலை கள்வரின் கொடுமைகள் எனப் பொருள் தேடும் நாட்டத்தை வீறிழக்கச் செய்யும் சுரத்தின் இன்னாக் காட்சிகள் ஆண் உயிர்கள், பெண் உயிர்களைப் பிரிவுடன் பேணிநிற்கும் இன்பச் செயல்கள் எனத் தலைவியை நினைவூட்டித் திரும்புவதில் ஆர்வத்தைத் தூண்டும் இனிய காட்சிகள் ஆகிய**

இவ்விருவகை முரண்பட்ட காட்சிகளும் இடைச்சுரத் தலைவனைப் பின்வாங்கத் தூண்டுகின்றன. இன்னாத காட்சிகள் ஊக்கத்தைக் கொடுக்கின்றன. இனிய காட்சிகள் மனக்கிளர்ச்சியை உண்டாக்க வினைத் தளர்ச்சியை உருவாக்குகின்றன[61] பொருள் வயிற் பிரிந்த தலைவனின் நோக்கம் முழுமையும் பொருளிடத்தல்லாமல் தலைவியிடம் திரும்புகிறது. பொருள் தேடச் செல்லும் வழியில் பூத்திருந்த வெட்சி மலர்கள் மணக்கின்ற போதெல்லாம் தலைவனுக்குத் தலைவியின் நினைவு வருகிறது. மேலும் இயற்கையில் இணைந்து நிற்கும் உயிர்கள் இடைச்சுரத்தலைவனுக்கு அவனது தனிமையை உணர வைக்கின்றன.

பசியட முயங்கிய பைங்கண் செந்நாய்
பொய்யா வேட்டம் போகிய கணவன் [62]

என்ற பெண்துணையுடன் பயிரும் காட்சியைக் கண்ட தலைவி தன்னை நினைத்து அழுது கொண்டிருப்பாளோ என்ற எண்ணம் தலைவனின் மனதை வருத்துகிறது. இதனை,

சுரம் பல கடந்த நம் வயின் படர்ந்துநனி
பசலை பாய்ந்த மேனியள் நெடிது நினைத்து [63]

நம்வயின் நினையும் நெஞ்சமொடு கைம்மிக [64]

என்கிறது.

தலைவியின் அன்புமிகுதி அவளது பண்பை நினைக்கச் செய்கிறது. இல்லறத்துக்குப் பொருள் முக்கியம். துறவறத்துக்கு அருள் முக்கியம் என்பதைப் போல தலைவனின் உள்ளம் இல்லறத்துப் பொருளையும், காதலுக்குத் தலைவியையும் நினைத்து இடைச்சுரத்தில் நின்று வருந்துகின்றது.

பாசறையில் இருத்தல்

வேந்தர் போர் மேற்கொண்ட பொழுது பகைப்புலத்தில் நீண்ட நாட்கள் தங்க நேரிட்டது. வேந்தனும் அவனது படைகளும் தங்கிய இடத்தைப் பாசறை, கட்டூர் என்பர். பாசறை என்பது போருக்கு முன்னும் பின்னும் களிறும் மாவும், தேரும் படைவீரரும்

தங்கியிருக்கும் பரந்த இடப்பகுதி, பாசறை பெரும்பாலும் ஊர்ப்புறத்தே இயற்கையாக அமைந்திருக்கும். அல்லது செயற்கையாக ஏற்படுத்தப்பட்டிருக்கும். இயற்கைச் சூழலில் மரம், செடி, கொடி, மலை முதலியவை சூழப்பெற்ற பரந்த இப்பகுதியைப் பாசறையாக ஏற்படுத்திக் கொள்ளுதல் பண்டைவேந்தர் மரபு. இயற்கையாக அமைந்த பாசறை பகைவர் கண்களுக்கு எளிதில் புலப்பட்டது. பார்வையிற் பாசறை (பதிற் 84:5) என்கிறது. பதிற்றுப்பத்து, பிறர் தம்மைக் காணாது தாம் பிறரைக் காணத்தக்க வகையில் போர்வீரர் இருந்து பகைவரைப்பார்க்கும் இடம் 'பார்வலெனப்படும்' என்பர் துரைசாமிப்பிள்ளை.

பார்வற் பாசறை

பார்வற் பாசறை வேந்தரின் ஊர்ப்புறத்தே இயற்கையாய் அமைந்த அரண்களையுடையது. பகைவர் கண்களுக்கு எளிதில் புலப்படாதது. உள்ளேயிருப்போருக்குப் பகைவரை காட்டும் இயல்பானது. களிறும், மாவும், தேரும் படைவீரரும் ஒருங்கே தங்கியிருக்குமளவிற்குப் பரந்த இடத்தினையுடையது.

வேந்தன் போர்வினைத் தணிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் தன் பிரிவுத்துயர் கெடத் தலைவியைக் கண்டு மகிழ வேண்டும் என்ற ஆர்வமும் பாசறையில் தங்கியிருக்கும் தலைவனின் மனம் முழுவதும் நிறைந்திருக்கிறது. தலைவியை நினைத்து தான் அடையும் நோயினைத் தலைவி அறிய வேண்டும் என்கிறான். இதனை,

யாமுறு துயரம் அவள் அறியினோ நன்றே [65]

என்கிறது ஐங்குறுநூறு.

வினை முற்றி மீளுதல்

வினை முற்றி மீளும் தலைவன் தலைவியைச் சந்திக்கப்போகும் போது தலைவியைக்கான அவனது உள்ளத்தில் தோன்றும் ஆர்வமும் வேட்கையும், பிரிவு உணர்ச்சியை அழித்து நிற்கின்றன. புணர்வு நம்பிக்கையை ஊட்டி நிற்கின்றது. தலைவனின் இம்மன நிலையில் தலைவனுக்கு இயற்கை உயிர்கள் கூட இணைந்தே காட்சியளிக்கின்றன. பெண்மான் துயிலும் இடத்தைக் காவல் செய்யும் ஆண்மானின்

செயல், ஆண் உயிர்கள் பெடையை நோக்கி இரையோடு செல்லும் காட்சி தலைவனின் உள்ளக் கருத்தைப் பிரதிபலிக்கும் இயற்கை காட்சிகள் அவனது கண்ணுக்குத் தெரிகின்றன. இடத்தாலும் உடலாலும் உணர்வாலும் தலைவியைக் கண்டு மகிழப்போகும் எதிர்காலம் நோக்கிச் செல்கின்றான்.

வினை முற்றி மீளும் தலைவனின் கூற்றை முல்லையாகவும் தலைவனின் கூற்றைப் புறத்திணைகளாகவும் வகுத்துள்ளனர். இடத்தாலும் உடலாலும் பிரிந்திருக்கும் நிகழ்கால தலைவியை நினைத்து வருந்துகிறான். மேலும் தலைவியின் மிருதுவான தோள்களைத் தழுவிக்கொண்டு படுத்துறங்கும் இன்பத்தைப் போல திருமால் உலகமாகிய வைகுண்டத்தில் சீவான்மா பரமான்மாவைத் தழுவுகின்ற ஆலிங்கனத்திலுங்கூட உண்டா என்று தலைவியை நினைத்து வியக்கிறாள்.

தாம் வீழ்வார் மென்தோள் துயலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு [66]

என்கிறது திருக்குறள். தலைவியை அணைக்க விரும்பும் தலைவனின் மன ஓட்டமும் போரினும், காதலுக்கு முதலிடம் தரும்அவனது மனநிலையையும் புலனாகின்றது.

இயற்கையையும் தலைவியின் நிலையையும் சுட்டிக் கார்காலத்தையும் மாலையையும் காட்டிக் காரும் மாலையும் தொடங்கின் தலைவியின் அழுகை தொடங்கும். அதனால் அக்காலத்திற்கு முன்பே தலைவியை அடைய நினைக்கிறான். வினை முடித்து மீண்டு வருகிற வழிகளெல்லாம் தலைவியின் நினைவாகவே தேர்மீது அமர்ந்திருக்கிறான். தலைவியைப் பிரிந்திருக்கும் நாட்கள் பயனற்றதாகக் கருதுகிறான். ஆதலால் தேர்பாகனிடம் விரைவாகச் சென்று அடையும்படி தேரைச் செலுத்துக என்றான்.

நற்றாய் – செவிலி

தலைவனுக்கும் தலைவிக்கும் இடைப்பட்ட உணர்வுப் பரிமாற்றத்திற்கும் அமைந்த இணைப்புப் பாலமாகத் தோழி அமைதல் போன்றே தாய்க்குச் செவிலி விளங்குகிறாள். செவிலி – நற்றாய் என அழைக்கப்படினும் சங்க இலக்கியத்தில்

இருவரும் அன்னை என்றே அழைக்கப்படுகின்றனர். நற்றாயின் உடல்நலம் பாலூட்டும் காலத்தில் தாய்ப்பாலைத் தவிர்க்க வேண்டிய தனிக்காரணம் குழந்தையைத் தாயிடமிருந்து பிரிக்க வேண்டிய சூழ்நிலை. இவற்றில் ஒன்றின் காரணமாய் வளர்ப்புத்தாய் முறை ஏற்பட்டது.

தலைவியால் நேர்முகமாகக் கூற இயலாத களவொழுக்கத்தைத் தோழி அறத்தோடு நின்று செவிலிக்கு உரைப்பது போன்று செவிலியும் தோழி கூற்றினை அறத்தோடு நின்று தாய்க்கு உரைக்கிறாள். தோழியிடம் தாயால் நேர்முகமாகக் கேட்க முடியாதவற்றைத் தோழி கூறும்போது கேட்டறியவும் அமைந்த ஓர் அகத்திணை மாந்தராகச் செவிலி படைக்கப்படுகிறாள்.

உடன்போகிய தலைவியை நினைந்து மனையிலிருந்து புலம்புதல் தாய்க்குரியதாகவும், மனையிலிருந்து புலம்புதல் மட்டுமின்றிப் பின்சென்று தேடுதல் செவிலிக்குரியதாகவும் இவர்தம் செயல்கள் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. இதனைத் தொல்காப்பியர்,

ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் ஊரே [66]

என்னும் நூற்பாவில் தாயார் எனப்பான்மைப்படுத்திக் கூறியவை மனைப்புறத்துச் சென்று தேடிய தாயைச் செவிலி எனப் பாகுபடுத்தக் காரணமாய் இருந்திருக்கலாம்.

செவிலியின் கூற்று நிகழ்வதற்குக் காரணமான இடங்கள்.

தலைவியின் களவு புறத்தார்க்குப் புலனாகி அலர் தூற்றப்படும் போது
தலைவியின் காமம் மெய்க்கண் வெளிப்படும்போது
தலைவியின் உறுப்புக்கள் அளவால் மிகுதிப்படத் தோன்றும் போது
தலைவன் வரவு கண்டபோது தலைவி புறத்துப்போகும் போது
வெறியாட்டின் போது
வெறியாட்டின் பின் தலைவிக்கு வருத்தம் மிகும்போது
காதல் கைமிகுந்து தலைவி கனவில் அரற்றும்போது

தலைவியின் வேறுபாடு பற்றித் தோழியை வினவும் போது
களவை அறிந்த பின்னர் தெய்வத்தை வாழ்த்தும்போது
உடன்போக்கு அறிந்தபின் அதனைக் கற்பாக்க முனையும் போது
தலைவனின் பிரிவில் தலைவி வருந்தும் போது
உடன் போக்கிற்கு மகள் துணிந்த போது
அறத்தோடு நிற்கும் போது

இவற்றுள் முதல் எட்டும் களவைக் கண்டறிய செவிலி எடுத்த முயற்சிகள் இறுதி ஐந்தும் களவை அறிந்தபின் அதனைக் கற்பாக்க முனைந்த முயற்சிகள். இப்பதி மூன்று சூழல்களிலும் செவிலியின் கூற்று நிகழ்ந்ததற்கு இலக்கியங்களில் சான்று இல்லை. தோழியின் கற்றல்தான் செவிலியின் மன ஓட்டம் எடுத்துக் கூறப்பட்டு வரைவு கடாவும் போக்குக் காணப்படுகிறது.

செவிலி

தலைவியின் களவு கற்பு வாழ்க்கையில் செவிலி வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குகிறாள். தன் மகளின் வாழ்வு மிகவும் சிறப்புடையதாக இருக்க வேண்டுமென்று எல்லாத் தாயும் விரும்புவது இயற்கை. இந்நிலை தந்தையை விடவும் மன எண்ணங்களின் அடிப்படையில் தாயின் மனநிலை மேலோங்கி நிற்கிறது. தலைவியின் மேல் செவிலி ஒவ்வொரு கட்டத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவள். செவிலி **தலைவியைப் பழியோடு இல்லா நிலையில் காத்தல். நன்னெறியில் மேவும் காதல் கூட்டத்தை ஏற்றல், அவளை நற்றாய்க்கு உரைத்துப் போற்றல், உடன் போக்கில் தேடி அலைதல், தலைவியின் வரைவிற்கு ஆவன செய்தல் போன்றவற்றைத் தலைவியின் களவு நெறியில் இவள் மேற்கொள்ளும் பொறுப்புகளாகும்**[67] என்கிறார் ந.சுப்பு ரெட்டியார். செவிலி தலைவிக்கு எல்லா நிலைகளிலும் உதவியாக இருப்பதோடு அவளின் இன்பதுன்ப நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறாள். செவிலி கூற்றாக அமைந்த ஒவ்வொரு பாடலிலும் தலைவியின் குணங்கள் வெளிக்காட்டப்படுகின்றன. மகளும் மருமகனும் தனிக்குடித்தனம் நடத்தும் சிறப்பினைக் கண்ட செவிலி அதை நற்றாயிடம் கூறி மகிழ்கிறாள்.

முளிதயிர் பிசைந்த காந்தன் மெல்விரல்
கழுவுறு கலிங்கக் கழாஅ நுடிஇக்
குகளை யுண்கண் குய்ய்புகை கழுமத் [68]

என்று தலைவி கணவனுக்கு மோர்குழம்பு வைக்கக் கட்டித்தயிரைப் பிசைந்தாள். தயிரைப் பிசைந்த விரல்களைக் கழுவ நேரமில்லாத நிலையில் உடுத்தியிருந்த புடவையிலேயே துடைத்துக் கொண்டால். பின் தயிரை தாளிக்கும்போது எழுந்த 'குய்ப்' புகையினால் கண்களில் கண்ணீர் வடிய அதைத் தயிர்க்கையுடன் துடைத்தவளாய் கண் எரிச்சலுக்குக் கலங்காத தலைவி கணவன் வந்ததும் அதை அன்புணரச்சியுடன் ஆக்கிய உணவைப் பரிமாறினாள். அவனோ தன்னுடைய மனைவியின் சமையலை மெத்தப்புகழ்ந்தான். இந்த காட்சியைக் கண்ட செவிலித்தாய், நற்றாயிடம் மகள் குடும்பம் நடத்துவதைக் கூறி மெய்சிலிர்க்கிறாள். தலைவனும் தலைவியும் இல்லறத்தை நல்லறமாக எண்ணி நடத்துகின்ற மனைக்குச் சென்று வந்தாள், செவிலித்தாய். கணவன் மனைவி நடத்தும் குடும்ப வாழ்க்கை செவிலித்தாயின் மனதைத் தொட்டது. இச்செய்தியை விரைந்து வந்து நற்றாயிடம் சொல்கிறாள் செவிலி.

பரத்தை

புலவர்கள் கற்பின் பெருமையை விண்ணுக்கு உயர்த்திப் பாடிய போதும் நடைமுறை வாழ்க்கையில் பரத்தமை என்ற அவலம் நிறைந்து இருப்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. தலைவியின் குடும்ப வாழ்விற்கு இடையூறாக வரும் பரத்தை அவளின் சினத்திற்கு ஆளாவதும் இயற்கை. **விருப்பு வெறுப்பின்றி கண்டவாறு பணத்திற்காகவோ பொருளுக்காகவோ உடலுறவு கொள்கின்ற செயல் பரத்தமை எனப்படுமென** [69] மேலும் பரத்தை என்பதற்கு **ஒருவனுக்கு முறையான மனைவியாக வாழாமல் ஒழுகுபவள், பொதுமகள், விபச்சாரி, விலைமகள் ஒழுக்கக்கேடு அயன்மை பிறன்மனைச் சேரல்**[70] **என்று அகராதியும் பரத்தை கணிகை, சூளை, பொதுப்பெண்**[71] எனச் சேந்தன்திவாகர நிகண்டும், **விலைமகள், சூளை, வேசி, பரத்தை, கணிகை**[72] என்று பிங்கல நிகண்டும் பொருள் தருகின்றன. மேலும் பரத்தையர் பெறும் இடத்தை,

பாணன், கூத்தன் விறலி பரத்தை

யானைஞ் சான்ற அறிவர் கண்டோர் [73]

என்று பரத்தையர், சமுதாயத்தில் பெற்றிருந்த இடத்தைத் தெளிவாகச் சுட்டுகிறது தொல்காப்பியம். மேலும் பரத்தை ஒழுக்கத்தை எப்போது மேற்கொள்ளலாம். மனைவியை எப்போது பிரியக்கூடாது என்பதற்கான காலத்தையும்,

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்

நீத்தகன் நுரையார் என்மனார் புலவர்

பரத்தையிற் பிரிந்த காலை யான [74]

என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்டபோது இவளை விட்டுத் தலைவன் பிரிதல் கூடாது. அது முதல் பன்னிரண்டு நாட்கள் மகப்பேறு கருதி அவளோடு உடனுறைதல் நலம் என்று கூறுகிறதேயொழிய பரத்தமை ஒழுக்கத்தைக் கடிந்து தொல்காப்பியம் கூறவில்லை. எந்தக் காலத்தில் சேர்ந்திருக்க வேண்டும் அதன்பிறகு அவளைப் பிரிவது எந்தகாலம் என்பதைத் தான் தொல்காப்பியம் சுட்டுகிறது. அக இலக்கியத்தில் பல ஆண்களின் காமப்பசி தீர்க்கும் பெண்களைப் பரத்தை என அழைத்தனர் அவர்களை, **இற்பரத்தை, காதற்பரத்தை, காமக்கிழத்தி, சேரிப்பரத்தை** என நான்கு வகையாகப் பிரித்தனர். பரத்தையர் பற்றி இளம்பூரணர் கற்பியல் உரையில் **பரத்தையவராவர் யாதெனில் அவர் ஆடலும் பாடலும் வல்லவராக அழகும் இனிமையும் இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார்** [75] என்று குறிப்பிடுகிறார்.

இற்பரத்தையாக விளங்குபவர் தலைவன் ஒருவனுக்கே அன்பு பூண்டு ஒழுகுபவளாகவும் அமைகிறாள்.

சேரிப்பரத்தையர் பலரிடம் அன்பு கொள்பவளாகவும் விளங்குகின்றனர். இதனையே நம்பியகப் பொருள்,

யாரையும் நயவா இயல்பிற் சிறந்த

சேரிப் பரத்தையர் மகளிராகிக் [76]

என்று சுட்டுகின்றது. இவர்கள் வறுமை நிலையில் இந்நிலைக்கு ஆளர்கின்றனர்.

இதனை,

உன்போன்றோர் தோன்ற
எது காரணம்
செல்வத்தின் எச்சமும்
வறுமையின் உச்சமும் [77]

என்ற வைரமுத்துவின் வரிகள் சேரிப்பரதத்தையரின் வறுமைநிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பரத்தை என்பது தவிர்க்கமுடியாத காரணங்களினால் உருவாக்கப்படுகிறது. **காதற்பரத்தை**யரர் சமுதாயத்தில் உயர்ந்த மதிப்போடு இருந்திருக்கிறார்கள் என்றும் சேரிப்பரத்தையர் அவ்வளவு மதிப்பிற்குரியராகக் கருதப்படவில்லை எனத் தெரிகிறது. இத்தகைய பரத்தையர் சங்க காலத்தில் மிகுந்தமைக்கான காரணத்தை ஒளவை துரைசாமிப்பிள்ளை **அந்நாளைய அரசிற் சூழ்நிலை அடிக்கடி நிகழும் போர், சமுதாய அமைப்பு ஆகியவற்றால் ஆடவர் தொகையினும் மகளிர் தொகை குன்றியமையின் மிகை மகளிர் என்று உளராயினர்.**[78] என்று கூறுகின்றார். சங்க இலக்கியப் பாடல்களில் மருதத்திணையில் தான் அதிகமாகப் பரத்தமை ஒழுக்கம் பேசப்படுகிறது. இப்பரத்தையர்கள் **வீதிவழியாகத் திரியும் கீழ்மக்கள் அல்லர். பரத்தைக் குலத்தவளேனும் இல்லறத்தின் பகைத்திலன், சிலப்பதிகாரத்தின் மாதவி போன்று ஆடலும் பாடலும் சான்றவள் கலை பயின்றவள் பெரும்பாலான குடும்பப் பண்பு உடையவர், வள்ளுவர் கடியக் கூறும் பொருட்பெண்டு அல்லள்**[79] எனச் சிறப்பிக்கிறார் வ.சுப.மாணிக்கம். இவர்கள் வாழ்க்கையில் பரத்தையராக இருப்பினும் பண்பால் மேன்மை வாய்ந்தவளாக இருப்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. தன்னுடைய தலைவனது சிறுவன் தெருவில் தேரோட்டி விளையாடும் காட்சியைக் கண்ட பரத்தை. அச்சிறுவனை அன்போடு அழைத்து அவனுக்கு ஆபரணங்கள் பூட்டி அழகு பார்த்து மகிழ்ந்ததை,

நீருள் அடைமறை ஆயிதழ்ப் போது போற்கொண்ட
இடைநிழல் தோன்றுநின் செம்மலைக் கானூஉ [80]

என்ற அடிகளில் காட்டுகின்றது. மேலும் மனைவியை விடுத்துப் பரத்தையர் பால்

சென்றான் தலைவன். அப்பரத்தையோ தலைவயின் இயல்பு கூறி மறுக்கும் உயர்ந்த மனப்பான்மையினை

என்னை நயந்தனன் என்று நின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே [81]

என்று சுட்டுகிறது. ஐங்குறுநூறு பரத்தையர் தலைமகனது பிள்ளையைக் கண்டபோது கொஞ்சும் இயல்பினையும் மேலும் தலைவனது முதன்மை நோக்கமாகக் கொள்ளாமல் அன்பு காட்டியே வாழ்ந்தனர். இக்காதற் பரத்தையரைத் தவிர இளம்பூரணர் குறிப்பிடுவது போன்று இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தாங்காத பரத்தையரும் வாழ்ந்தனர். இவர்களை விலைநலப் பெண்டிர் என்று புறநானூறும் பொதுமகளிர் என்று கலித்தொகையும் கூறுகிறது.

பரத்தையர் ஒழுக்கம்

பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனக் குணநலன் வகுத்த தொல்காப்பியர் அவர்கள் போர்க்களம் புகுந்தால் இக்குண நலன்கன் மீறப்படும் என்பதனால் குடும்பப் பெண்கள் செல்வத்தைத் தவிர்த்தார். ஆனால் பரத்தையர் போர்க்களம் செல்வது பிழையல்ல என்பதும் தலைவன் பரத்தையரைப் போர்க் காலங்களிலும் பயன்படுத்தியுள்ளான் என்பதும்,

புறத்தோ ராங்கன் புணர்வதாகும் [82]

எனக் கூறுகிறார் தொல்காப்பியர்.

வாயில்கள்

களவிலும், கற்பிலும் தலைவன் தலைவிக்குத் துணை நிற்பவர்கள் வாயில்கள் ஆவர். இவ்வாயில்கள் அகமாந்தர்களின் உணர்வு வெளியீட்டிற்கும், உறவு நிலைபேற்றுக்கும் வாயில் போன்று அமைந்து விளங்குபவர்கள். இவர்களைத் தொல்காப்பியர்,

தோழி, தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர் [83]

என்று வாயில்களாக இருப்பவர்களைத் தொகுத்து பன்னிருவர் என்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் இவ்வாயில்களின் நிரலில் புதல்வனைக் குறிப்பிடாது போயினும்,

இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும் [84]

எனத் தலைவியின் கூற்றிலும், தலைவியின் மாண்புகளைத் தலைவனுக்கு உரைத்தல், தலைவன் பிரிவிடத்துச் சென்று தலைவியின் நிலை உணர்தல், நல்லவை உரைத்தல், அல்லவை கடிதல் அறனெறி இதுவென எடுத்துரைத்தல், நிமித்தம் கூறல், ஊடல் தணிவித்தல், செலவழுங்குவித்தல் என்பன வாயில்களின் பணிகளுள் சிறந்தவை. வாயில்கள் அகக்காட்சிகளில் ஒரு மாந்தராக ஒன்றி நிற்பது மட்டுமன்றித் தம்மைக் காட்சிகளுள் உட்படுத்திக் கொள்ளாது விலகி நின்று, அக்காட்சிகளை உற்று நோக்கிக் கருத்துரை அளிப்பவர்களாகவும் விளங்குகின்றனர். தலைவனின் பிரிவில் தலைவியின் நிலைகூறல், தலைவன் வரவால் துன்பம் நீங்கும்நிலை கூறல் எனத் தகவல்களை அளிப்பவர்களாக விளங்குகின்றன. தொல்காப்பியர் குறிப்பிடும் இவ்வாயில்களுள் பாடினி, விருந்தினர், விறலியர், அறிவர், கூத்தர், இளையோர் ஆகியோரின் கூற்றுக்கள் இலக்கியங்களில் இடம்பெறவில்லை ஆனால், தோழி, தாய், பார்ப்பன், பாங்கன், பாணன், கண்டோர் போன்றோர் கூற்றுக்கள் இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. வரைவு கடாதல், வாயில் நேர்தல், செலவழுங்குவித்தல் ஆகிய துறைகளில் தலைவியின் மாண்புகளைத் தலைவனுக்கு உரைப்பது. களவில் அறநெறிப்படுத்துவது, அறத்தொடு நிற்பது, உடன் போக்கில் நல்லவை உரைத்தும், அல்லவை கடிந்தும் நெறிப்படுத்துவது கற்பில் ஊடலைத் தணிப்பது ஆகிய செயல்களால் அனைத்து வாயில்களுக்கும் கொடுக்கப்பட்ட பணிகளைத் தனதாக்கிக் கொள்வதால் இச்சூழல்களில் தோழி தவிர்த்த பிற வாயில்களின் கூற்றுகள் தோன்றாது போயிருக்கலாம்.

இவர்களுள் தோழி–தாய் ஆகியோர் ஏற்கனவே கூறப்பட்ட நிலையில், பார்ப்பான்–புறப்பொருள் பற்றிக் கூறுகிறது. வாயில்கள் நேர்ந்ததாக குறிப்பில்லை. பாங்கன், பாணன், கண்டோர் எனக் கூறும் நிலையில் கூற்றுக்கள் அமையப் பெறுகின்றன.

பாங்கன்

தலைவிக்குத் தோழி உற்றதுணையாக அமைவதுபோல தலைவனுக்கும் பாங்கன் தோழனாக அமைகிறான். அக இலக்கியங்களில் பாங்கனை இடிக்கும் கேளீர் எனவும், சிறாஅரமறு நண்பன் எனவும், தோழன் எனவும் அழைக்கப்படுகின்றான். தலைமை நிலையுடைய தலைவனும் இடித்துரைக்கும் பாங்கனை உடையவனென்னும் செய்தி நட்பின் உயர்வைச் சான்றோர் அறிந்திருந்ததைப் புலப்படுத்துகிறது.

தலைவனின் உடல், மனம் போன்றவற்றில் பல்வேறு மாற்றம் நிகழ்கிறது. இவ்வேறுபாட்டை அறிந்துகொண்ட பாங்கன் தலைவனிடம் வினவினான். அதற்குத் தலைமகன் ஒரு குறமகளின் மேல் யான் கொண்ட காமத்தால் இந்நிலையானேன் என்று கூறுகிறான்.

மால்வரை யழிதருந் தூவெள் ளருவி
கண்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரல்

என்கிறான். இதனைத் திருவள்ளுவரும்,

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு

என்கிறார். தலைவனின் காதல் உள்ளத்தை அறிந்துகொண்ட பாங்கன் உயிர்த் தோழனுக்குக் காதலின் பேதமையை உணர்த்த எண்ணினான். காதல் என்பது கண்மூடித்தனமாக இல்லாமல் பகுத்தறிவு நிரம்பியதாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறான் பாங்கன். தலைவியானவளைப் பாங்கன் நேர்நின்று காணுவதும் முன்னின்று மொழிதலும், தமிழ் அகத்திணைக்கு ஒவ்வா தமிழகம் பெற்ற மகளிர் நாணத்துக்கு தலைவி வந்து நிற்கின்றாளா? என்பதைப் பார்த்துச் சொல்லும் ஒரு அறிவிப்பாளனே பாங்கன் ஆவான்[85] என்கிறார் வ.சுப.மாணிக்கம்.

பாங்கனால் இடித்துரைக்கப்பட்ட தலைவனின் ஆற்றாமை மிகுதியையும் தலைவியது இன்றியாமையையும் தெரிவித்தபின் பாங்கன் உண்மை தெளிந்து

தலைவனது நிலைகுறித்து இரங்குகிறான். தலைவனது செயல்பாடுகளை உற்று நோக்கும் பாங்கன் அவனுக்கு அறிவிப்பாளனாகப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல் அறிவுறுத்துபவனாகவும் விளங்குகிறான். பாங்கனின் தன்மை குறித்து தொல்காப்பியர்,

மொழிஎதிர் மொழிதல் பாங்கற் குறித்தே [86]

என்கிறார். தலைவன் காமம் இயல்பாகவே ஒருவரிடம் உரிய காலத்தில் வெளிப்படும் என்று பாங்கனிடம் உரைத்தபோது அதற்குப் பாங்கன் பேரறிவுடைய நீ இக்காம நோயை அடைதல் நல்லதா என்று இடித்துரைக்கிறான். இதனை,

காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின் [87]

என்கிறது குறுந்தொகை. இதனையே,

இடிப்பாரை இல்லாத ஏமாரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும் [88]

என்று இடித்துரைக்கும் தன்மையையும், அதனால் விளையும் பயனையும் விளக்குகிறார்.

பாணன்

பண் இசைப்போன் பாணன் என்று அழைக்கப்பட்டான். இப்பாணன் கலைத் துறையைச் சார்ந்தவனாக இருப்பதால் இவனை குறுநில மன்னர்களும், வள்ளல்களும் ஆதரித்தனர். இவன் தம் கலைத்திறனால் பொன்னும், பொருளும் பெற்றாலும் அவற்றைத் தமக்கெனப் பாதுகாக்காது எல்லோருக்கும் வழங்கி வாழ்வித்தான். இப்பாணன் இல்லற வாழ்வில் இணையாதிருக்கும் தலைவன் தலைவிக்குத் தூதாகச் செல்கிறான். இவற்றில் தலைவியது ஆற்றாமைக் கண்டு தோழி தூதுவிடல் பருவவரவின்கண் தலைவனின் தூதாக வருதல். தலைவனின் வரவு உணர்த்துதல். தலைவிக்கு அருளுமாறு தலைவனைப் பாணன் வேண்டுதல். இவை பாணன் தலைவனுக்கு உணர்த்தும் வாயில்கள் இல்லற வாழ்க்கை இனிதே

நடைபெறத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்ப வராதபோது அவர்களிடம் தூது சென்று தலைவியின் ஆற்றாமையைப் பாணர் எடுத்துரைப்பதும் தலைவனை விரைந்து வினை முடித்து வரும்படி வற்புறுத்துவதும் பாணனின் பணியாகும். மேலும் பாசறையில் தங்கியிருக்கும் தலைவனிடம் சென்று அவனை விரைந்து வருமாறு சொல்வதும் பாணனின் கடமையாகும். இதனை,

நிலம் பெயர்ந் துரைத்தல் வரைநிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய [89]

என்கிறது தொல்காப்பியம். இவற்றையே,

நினைக்கு யாம் பாணரேம் அல்லேம்; எமக்கு
நீயும் குரிசிலை அல்லலை மாதோ [90]

என்று பாசறையில் இருக்கும் தலைவனிடம் தூதாகச் சென்றதை அறிய முடிகிறது. பாணனின் நிலை தலைவனுக்குப் பாணன் அறத்தை உணர்த்த வேண்டும் என்பது தோழியின் எதிர்ப்பார்ப்பு. பாணனை உறவு வளர்க்கும் இணைப்புப் பாலமாகத் தோழி மதித்தமை புலனாகிறது. பாணன் தலைவனுக்கு அறம் அறமின்மை எனப்பாகுபடுத்தி நோக்காது அனைத்து நிலைகளிலும் தலைவனின் உறவை அவன் விரும்பும் இடத்தில் இணைத்து நிற்கும் இணைப்புப் பாலமாக அக இலக்கியங்கள் காட்டுகின்றன.

கண்டோர்

களவுக் காலத்தில் பெற்றோர் தலைவியின் காதலை உணர்ந்து வேறு ஒருவனுக்கு நிச்சயம் செய்யும்போது தலைவி தலைவனுடன் சென்று அவன் மனையில் வரைந்து கொள்ளும் நோக்குடன் செல்லும் போது காட்டுவழியில் காண்போர் கண்டோர் எனப்படுவர். இவர்கள் தாயைக் காணும்போது கூற்று நிகழும். உடன்போகும் தலைவன் தலைவியரைக் கண்டு இரங்குவது. உடன்போய் இவர்களைப் பின் சென்று தேடும் தாயை ஆற்றுப்படுத்தாது அல்லது அமைதிப்படுத்தித் திரும்பச் செய்வது உடன்போகிய இவர்கள் திரும்பியதைத் தாய்க்கு உரைப்பது ஆகியவை கண்டோர் கூற்று நிகழும் இடங்கள் ஆகும்.

உடன்போகும் தலைவன் தலைவியரைக் கண்டு உடன் இணைத்து வைத்த விதியை வாழ்த்துவது, ஆறலைப்போர் நடமாடும் சுரத்தில் இரவில் செல்லற்க என நெறிப்படுத்துவது, சாந்தம், முத்து ஆகிய பொருள்கள் பிறந்த இடத்திற்குப் பயன்படாமல் துய்ப்பார்க்குத் துணை நிற்பதை எடுத்துரைத்து தலைவி தலைவனுக்குத் துணை நிற்பதே முறை என்பதைத் தாய்க்குக் கூறி அவளைத் தேற்றுவது, தலைவனைச் சிறந்தவனாகச் சுட்டி தலைவி உடன் சென்றது பற்றித் துயர் உறாமல் இருக்கச் செய்வது ஆகியன கண்டோர் ஆற்றும் பணிகள் ஆகும்.

தலைவி, காதலனுடன் சுரநெறியில் சென்றபொழுது இடைப்பட்டதோர் ஊரில் இளைப்பாறினர். அவர்கள் வரவு கண்ட ஊரில் ஆரவாரம் எழுந்தது. இக்காட்சியைக் கண்ட மக்கள், பெண்ணைப் பெற்ற தாயாரின் துன்பம் பெரிதாகவே இருக்கும் என வருந்தினர். மேலை நாட்டு இலக்கியங்களில் உள்ளது போல் தமிழ் இலக்கியத்தில் கையறுநிலை என்பது யாப்பால் பெற்ற பெயர்அன்று. பொருளால் பெற்ற பெயர் ஆகும்.

உயிரிரக்கப் பண்பு

உயிரிரக்கப் பண்பு மனித மாண்பைக் காட்டும் ஓர் உயரியநிலை. உலகில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. அனைத்து உயிர்களும் போற்றத்தக்கவையே புல்லாக இருந்தாலும் மாந்தராக இருந்தாலும் உயிர்ப் பண்பே அடையாளம் காட்டுவதாக உள்ளது. எனவே அனைத்து உயிர்களும் சமம். எல்லா உயிரிடமும் அன்பு செலுத்துவது, கருணை காட்டுவது, அருள் உணர்வுடன் நடந்து கொள்ளுதல், துன்பம், களைய முற்படுதல், உதவிபுரிதல், மோதலைத் தவிர்க்க முனைதல், பகிர்ந்துண்ணுதல், ஈர நெஞ்ச முடையவராய் நடந்து கொள்ளுதல் போன்றவை உயிரிரக்கப் பண்புடையாரின் இயல்பாகும். வள்ளுவரும்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

எனக் கூறியுள்ளார். உயிரிரக்கப் பண்பு மனித நாகரிகத்தின், மனிதமன வளர்ச்சியின் மேம்பாட்டினைக் காட்டும் அடையாளம். சங்க காலம் ஓர் உயரிய நாகரிகக் காலம். சங்க

காலத்தில் உயிரிரக்கப் பண்பு ஓங்கியிருந்தது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

> **சங்க இலக்கியம் முழுவதுமே மானுட நேயம் பரந்து கிடத்தலை அறிய முடிகின்றது. பொற்காலம் எனப் போற்றப்டும் சங்க காலத்தில் மானுடம் மகத்துவம் பெற்றதற்குப் பல சான்றுகளை ஆராயுமிடத்து, அவர்கள் பால் அன்பு, அருள், இரக்கம், பண்பு, பாசம் ஆகிய இணைக் குணங்கள் மேலோங்கியிருந்தன** [91]
>
> **உயிர் வாழ்க்கையின் பயன் அன்பு வளர்ச்சியாகும் என்பதனைப் பண்டைச் சான்றோர் தம் நுண்ணறிவாற் கண்டுணர்ந்தார்கள். அன்பென்னும் உயிர்ப்பண்பே உலக நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும்** [92]

என்னும் பத்துப்பாட்டு சொற்பொழிவுகளுள் குறிஞ்சிப்பாட்டு பற்றி க.வெள்ளை வாரணார் குறிப்பிடுவார்.

உயர் பண்பு எது

பண்புகளில் எல்லாம் உயர் பண்பு, உயிர்ப்பண்பு, உயரிரக்கப் பண்பாகும். எந்த நாட்டில் உயிர் இரக்கப் பண்பு மேலோங்கி உள்ளதோ அந்த நாடு உயரிய பண்பு மிக்க நாடாகப் போற்றப்படும். சங்க காலம் உயரிய பொற்காலமாகப் போற்றப் பெற்றதற்கு, அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் மாந்தர்கள் உயிர் இரக்கப் பண்பும் காரணமாகும் எனலாம்.

அன்பின் பிணைப்பால் நிகழ்ந்த அக வாழ்விலும் வீரம் செறிந்த புறவாழ்விலும், உயரிரக்கப் பண்பு ஓங்கியிருந்தது. தான் துயரத்தில், கவலையில் சிக்கித் தவிக்கும் போதும் பிறர் துன்புறக் கூடாது என்று நினைக்கும் உள்ளம் படைத்தவர்களாக அன்றைய தமிழர் விளங்கினர் என்பதில் ஐயமில்லை. காதலும் வீரமும் தன்னலப் பண்புகள் எனில், ஈரம் பிறர் நலம் பேணும் ஒப்பரிய உயிரிய பண்பாக மிளிர்ந்தது என்று கூறுவது மிகவும் பொருத்தமாக அமைவனவாகும்.

காதலும் ஈரமும்

பழந்தமிழர் காதல் வாழ்வு தூய்மையான அன்பின் அடிப்படையில் அமைந்தது. ஒருவர் அன்பு மற்றவர் இதயத்தில் மாறிப் புகுந்ததால் உண்டான காதல் சங்க காலக் காதல். முன்பின் அறியாத உற்றார் உறவினர் யார் என்பது தெரியாத இருவர் **செம்புலப் பெயல் நீர் போல** இரண்டறக் கலந்த அன்பினால் இணைவதே சங்க காலத்தில் பெருவழக்காக இருந்த பான்மையினைச் சங்க அகப்பாடல்கள் தெளிவுறுத்துகின்றன.

ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் அந்த அகவாழ்விலும் உயிரிரக்கப் பண்பின் அடையாளமான ஈரஉணர்வு மிளிர்வதைப் பல பாடல்களில் காணமுடிகின்றது. தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவனின் மனநிலையை உள்ளத்து ஈரத் தன்மையினைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அகநானூறு இல்லறம் இனிது நடைபெற வேண்டும் என்பதற்காகப் பொருளீட்டப் பிரிந்து சென்ற தலைவன் நாள் பல கடந்த பின்னர் மீண்டும் தலைவியை நாடித் தேரில் புறப்பட்டு வருகிறான். அவன் உள்ளம் தேரைவிட வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. பாகனைப் பார்த்து என் தலைவியை உடனே காண வேண்டும். தேரினை விரைந்து செல்லுமாறு ஒட்டு என்று வேகப்படுத்துகின்றான்.

தலைவனின் மனநிலையை நன்கு உணர்ந்தவன் தேர்ப்பாகன். எனவே தேரினை முன்னை விடவும் வெகுவேகமாக ஓட்ட முனைகின்றான். தேர் செல்லும் வழியோ பூத்துக் குலுங்கும் சோலைகள் நிறைந்த வழி. பல்வேறு மலர்களும் கொத்துக் கொத்தாகப் பூத்துப் பொலிவூட்டி நிற்கின்றன. அம்மலர்களிலெல்லாம் வண்டுகளும், தும்பிகளும், எறும்புகளும் மொய்த்துத் தேனையும் பூந்தாதினையும் திளைத்து உண்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றன. அப்பூப் பறவைகள் தனித்தனியாக மலர்களில் திளைக்கவில்லையாம். தம் தம் துணையோடு சேர்ந்து இணைந்து, பிணைந்து, இன்புற்று மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய சூழலில் தேர்ப்பாகன், தலைவனின் மனநிலைக்கு ஏற்ப தேரினை விரைவாக ஓட்ட முனைகின்றான். தேர்ப்பாகனின் வேகத்தையும் தாதுண் பறவைகளின்

களிப்பையும் ஒருங்கே கண்டான் தலைவன். தன் தலைவியைப் பிரிந்து பல நாள் கடந்து விட்டது என்ற மன உணர்வோடு, இன்று மாலை விரைவில் வருந்துவாள் என்ற அச்சமும் அவன் மனத்தில் நிறைந்திருந்தது. அப்படி இருந்தும் தேர்ப்பாகனைப் பார்த்து, அய்யா, காலம் கடந்தாலும் சரி தேரில் பூட்டியுள்ள குதிரைகளின் கழுத்தில் கட்டியுள்ள மணிகளின் நாக்கினை அவை அசையாமல் கட்டி விட்டு அதன் பிறகு தேரினைச் செலுத்து என்றான். ஏனெனில், வேகமாகச் செல்லும் போது குதிரைகளின் கழுத்தில் கட்டப் பெற்றுள்ள மணிகளின் ஓசை மிகப் பெரிதாக அமைகின்றது. பூம்புதர்களில் தேணுண்டு களிக்கும் இணைகள் அப்பேரோசை கேட்டு அஞ்சி, பிரிந்து பறக்க நேரிடுகின்றது. அவ்விணைகள் பிரிந்து துன்புற வேண்டாம் என்கிறான்.

தலைவியை உடனே காண வேண்டும் என்ற மிகுந்த ஏக்கத்திலும் கூட இணைந்து மகிழும் பூப் பறவைகளின் துன்பத்தை எண்ணிப்பார்த்தான் தலைவன்.

பூத்த பொங்கர்த் துணையோடு வதிந்த
தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி
மணி நா ஆர்த்த மாண் வினைத் தேரன் [93]

என்பதை அகநானூறு படம் பிடித்துக் காட்டியுள்ளன.

மனித ஆர்வத்திலேயே காதல் ஆர்வம் மிகவும் வேகமானது. காதலுக்குக் கண் இல்லை என்று பழமொழி உருவாகும் அளவுக்குக் காதலின் வேகம் அமைந்ததைக் காண முடிகிறது. காதல் வயப்பட்டோர் வேறு சிந்தனையில் ஈடுபடுவது கடினம். அதுவும் பிரிந்த காதலின் வேகமும் ஏக்கமும் இன்னும் மிகுதியாகும்.

நல்ல நீர் வளமும் விளைச்சலும் இருந்தால்தான் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ இயலும். எல்லா உயிரிகளும் இன்பமாக வாழ வேண்டும் என்பதே சங்க கால மாந்தரின் மனநிலையாக இருந்திருக்கிறது. மனிதநேயம் மிக்கவர்களாக வாழ்ந்தனர். என்பதைன அகப்பாடல்கள் சான்றுரைப்பது சிறப்பாகும்.

நெல் பல பொலிக பொன் பெரிது சிறக்க [94]
விளைக வயலே [95]

பால்பக ஊறுக பகடுபல சிறக்க [96]

என்று வேண்டும் நிலையையும்,

பசி இல்லாகுக பிணிசேண் நீங்குக [97]

மாரி வாய்க்க வளம் நனி சிறக்க [98]

எனப் பசியும் பிணியும் நீங்க வளம்பல நிறைய வேண்டும் என்று கூறும் நிலையையும்,

இல்லென இரந்தார்க்கு ஒன்றும் ஈயாமை இழிவு [99]

இடன் இன்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு [100]

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் [101]

என்று கலித்தொகையில் காண முடிகிறது.

வீரமும் ஈரமும்

காதலும் வீரமும் சங்ககால மாந்தரின் பண்பாட்டு மேன்மையினையும் நயத்தக்க நாகரிகத்தின் பான்மையினையும் காட்டுவன. உள்ளத்தின் நெகிழ்வினைக் காட்டுவது காதல் என்றால் உடல் உறுதியும் மன உறுதியும் ஒருங்கிணைந்தது வீரம். அன்பு வயப்பட்ட காதலில் ஈர உணர்வு கசிந்து நிற்பது இயல்பு. மறத்தன்மை வாய்ந்த வீரத்திலும் ஈரம் நிறைந்ததுதான் தமிழரின் தனி மாண்பினைக் காட்டுவது. போரில் புறமுதுகிடுவேரைத் தாக்காமையும், வலியிழந்தோரை வீழ்த்த முனையாமையும் வீரத்தின் தனிச்சிறப்பு. போர் முனையில் பகைவர் முன் நிலைதளரா உள்ள உறுதியோடு நிற்பதும், எதிரிகளின் களிறுகளை எதிர்த்து வீழ்த்துவதும், நெஞ்சு நோக்கி வரும் வேலினை வாங்கி, விட்டவர் மீதே வீசி வீழ்த்துவதும் தனி வீரம் என்று இறுமாப்பு கொள்வதும் சங்ககாலச் சமுதாயம் எனில் மிகையில்லை.

போரில் எவர் வரினும் புறங்கொடாது நின்று போரிடுவர் மார்பிலே புண்பட்டு இருப்பதும் சிறப்பு; இறப்பதும் சிறப்பு, பகைப் படைகளைப் புறங்காணச் செய்வதே நோக்கமாகக் கொண்டு போரிடுவர். அப்படிப் போரிட்ட மன்னர் பலரைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. அப்போர் மறவர் அரண்மனையில் இருக்கும்போது இரவலர் மகிழ கொடையளித்து மகிழும் பாங்கும் பல பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

ஊக்குமாறு மாக்கள் வெண்கோடு கழா அலின்

நீர்த்துறைபடியும் பெருங்களிறு போல

இனியை பெரும எமக்கே மற்றதன்

போர்த்திறம் நன்கறிந்த அதியமான் நெடுமான் அஞ்சி போர்க்களத்திலும் அவன் களிறுதான், அவைக்களத்திலும் அவன் களிறுதான். முதல் களிறு மதக்களிறு. எதிர் வருவனவற்றைத் தேய்ந்து அழிக்கும் திணவுமிக்க வயக்களிறு. பின்னது மக்களோடு மக்களாகப் பழகி, மக்களுக்கு மகிழ்வினைத் தரும் இனிய களிறு, கல் போல் உறுதி வாய்ந்த அந்த வீர மறவனின் நெஞ்சில் சுனை நீராய் நிறைந்திருப்பதை அவ்வையார்

துன்னருங் கடாஅம் போல

இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே [102]

என தெளிவாகக் காட்டியுள்ளார்.

சோழ வேந்தர் இருவர் தமக்குள் மாறுபட்டனர். போர் மூண்டது நெடுங்கிள்ளியின் கோட்டையை நலங்கிள்ளி முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி கதவடைத்து கோட்டையைக் காத்து நின்றான். நாள் பல கடந்தும் நெடுங்கிள்ளி கோட்டைக் கதவைத் திறந்து போருக்கு வரமால் இருந்தான். கோட்டையுள் இருந்தோர் வெளி உறவு இன்மையால் துயரடைய நேர்ந்தது. இதனை அறிந்தே கோவூர் கிழார்,

இரும்பிடி தொழுதியொடு பெருங்கயம் படியா

நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ [103]

என்று பாடி எடுத்துரைத்தார். இப்பாடல் இரக்க உணர்வு இல்லாமல் போரிடுவது தவறு என்பதை புலவர் புரிய வைத்ததாகும். இரு வேந்தர் போரிடுவது அவரவர் நாடு காக்கவும், வீரம் காட்டவும் என்றால், அப்போரால் வேறு யாரும் இன்னலுறக் கூடாது என்பதும் எண்ணிப் பார்க்கப்பட்டது. அத்தகைய நிலை உருவாகிறபோது அறிஞர் உலகம் அறிவுறுத்த தவறியதில்லை,

மீன்திகழ் விசும்பின் பாய்இருள் அகல

ஈண்டு செலல் மரபின் தன் இயல் வழாஅது [104]

என்பதை அறிய முடிகிறது.

கலிங்க வேந்தன் அசோகன் போர்க்களத்தின் கொடுமையைக் கண்டு, இனிபோரே செய்வதில்லை என்று முடிவெடுத்தான். கருணை மறவனாக மாறி, புத்தர் நெறி போற்றினான் என்று வாய் வலிக்க நாளும் பேசுவோர், அசோகன் காலத்திற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, போர்க்களத்தின் கொடுமை கண்டு உளம் இரங்கிய தமிழ் வேந்தன் இருந்தான் என்பதனை நிறைவிற் கொள்ள வேண்டும். சங்க கால வேந்தர்கள் நாடு காக்கவும், நல்லாட்சி நடத்தவும், நலிந்தோரைக் காக்கவும், அத்து மீறலை அடக்கவும், அறம் காக்கவும், பழித்தார்க்குப் பாடம் புகட்டவும் தான் போர் புரிந்தனர் என்பதைக் கல்லாடனார் பாடல் புலப்படுத்துகின்றது. தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் தன்மானங் காக்கவே போரிட்டான் என்பதை அவன் பாடிய வஞ்சினப் பாடலே நன்கு புலப்படுத்தும். அவன் செய்தது போர் வெறியால் அன்று. தன் மானம் காக்கவும் பகைவரின் இழிமொழிக்குப் பாடம் புகட்டவுமே ஆகும். வீரம் நிறைந்த பழந்தமிழ் ஈரம் நிறைந்த நெஞ்சினராகவும் விளங்கினர். மனிதநேயம் முழுமையாக அவர்களின் நெஞ்சிலே நின்றது என்பதைப் புலப்படுத்த கல்லாடனார் பாடல் பதச் சோறாக அமைகின்றது.

உயிர் காக்கும் மாண்பு

பிறர்க்குத் துன்பம் நேருவது கண்டு அது களைய முற்படுவது மனிதத்தின் மாண்பாகும். அதிலும் உயிருக்கு ஊறு நேரும் நிலை தவறான நெறியால் உருவானால் அதனைத் தடுத்து நிறுத்தல் வேண்டும். பிறர் உயிரை எடுக்க எவர் முனையினும்அஞ்சாது தடுத்தல் உயிரிரக்கப் பண்புகளுள் ஒன்று; அதுவும் மிக நன்று.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பகைமை காரணமாக மலையமான் திருமுடிக்காரியின் மக்களை யானைக்காலில் இட்டுக் கொலை செய்ய முனைந்தான். செய்தி தெரிந்த கோவூர்க்கிழார் உடனே அரசவை விரைந்தார். அடாத செயலில் ஈடுபட்டுள்ள அரசனுக்கு மலையமானின் பிள்ளைகளின் நிலையை உணர்த்தி அப்பிள்ளைகளைச் சாவில் இருந்து விடுவித்தார்.

இவரே, புலனுமுது உண்மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர் [105]

என்றுரைத்துச் சிறுவர்களை விடுவித்தார்.

சோழன் நெடுங்கிள்ளி என்பான் புலவர் ஒருவரை ஒற்றன் என்று பிழையாகக் கருதி கொலை செய்ய முனைந்த போதும் கோவூர்க்கிழார் விரைந்தார்.

வள்ளியோர் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம் பல கடந்து [106]

என்று எடுத்துரைத்து மன்னனுக்குத் தக்கவாறு விளக்கிப் புலவரை மீட்டார்.

சிறுவர்களைக் கொலை செய்ய முனைந்தவன் ஒரு மன்னன். புலவரை மாய்க்க எண்ணியவன் மன்னனே. அரசரையார் பகைக்க முடியும் என்றோ, அரசரின் பகை நமக்கு வேண்டாம் என்றோ கருதியிருந்தால் கோவூர்கிழார் அங்கு சென்றிருக்க மாட்டார். ஏற்காத நிலையில் கோவூர்கிழார் மீதே அம்மன்னர்கள் தம் சினத்தைச் செலுத்தவும் வாய்ப்பு உண்டு. புலவர் கோவூர்கிழார் எது பற்றியும் கவலை கொள்ளவில்லை. தவறான அணுகுமுறையால் தடுத்தே தீர வேண்டும் என்ற எண்ணத்தோடு மட்டும் செயல்பட்டார். புலவரின் உயிரிரக்கப் பண்பு, உயிர்காக்கும் உயரிய நோக்கம் மட்டுமே ஈண்டு புலப்படுகின்றது.

பகிர்ந்தளிக்கும் பண்பு

ஒருவர் தாம் பெற்றதைப் போற்றிக் காத்து, தாமே அனுபவிப்பது தன்னலம், தாம் பெற்றதை மற்றவர்க்குப் பகிர்ந்தளித்து வாழும் பண்பே மனிதப்பண்பு. அவ்வாழ்வே இனிய வாழ்வு உயரிய நோக்குடன் வாழ்ந்தவர் சங்க கால மாந்தர் என அறிய முடிகின்றது.

பண்டைத் தமிழர் பண்புகளில் உயர் பண்பாக விளங்கும் விருந்தோம்பல் இப்பகிர்ந்தளிக்கும் பண்புக்குச் சிறந்த சான்றாகும். விருந்தோம்பல் இல்லறத்தின் தலையாய ஒரு கடமையாகக் கருதப் பெற்றது.

விருந்து புறத்தகாத் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற் நன்று

என்பார் அய்யன் திருவள்ளுவர்.

தம் பரிசிலாகப் பெற்ற பொருளை இறுகச் சேர்த்து வைக்குமியல்பு அவர்கள் பால் இல்லை. வறுமையின் கொடுமையினை நன்குணர்ந்த அவர்கள், தம்மைப் போன்று பிறர்படுந் துயர்க்கிரங்கித் தம்பாலுள்ள பொருளை மனம் விரும்ப வழங்கும் இயல்புடையராயிருந்தனர். சங்க கால மக்கள்.

உண்பவை நாழி உடுப்பவை இரண்டே
என்றுணர்ந்து வாழ்ந்த உயரிய சமுதாயம் [107]
பண்டைத் தமிழ்ச் சமுதாயம்.

மனிதமும் மானமும்

மனம் படைத்தவன் மனிதன். மனம், உள்ளம், எண்ணம், சிந்தனை, அறிவு, பகுத்தறிவு, அத்தனையும் தன்னுள் கொண்டது. நல்ல உள்ளம், நல்ல சிந்தனை, நல்ல எண்ணம், தூய அறிவு, பகுத்தறிவு இவை யாவும் மனிதனின் மாண்பைக் காட்டுவன. இவற்றுக்கு மாறான போக்கு மனித மாண்பை இழக்கச் செய்யும். நாளும் நல்லனவே செய்யும் ஒருவரைப் பார்த்து அவர் ஒரு நல்ல மனிதர் என்று மற்றவர் சொல்லுவதும், அவ்வாறில்லாத ஒருவனைப் பார்த்து அவன் மனிதனே இல்லை என்று பழிப்பதும் நாளும் நடைமுறையாக உள்ளன.

சிறியன சிந்தியாமல் நல்லவனவற்றையே சிந்திக்கவும் செய்யவும் முனைந்தால் அவன் நலம் பெறுவதோடு அவனைச் சார்ந்தோரும் இன்பமாய் இருப்பர். பிறர் இன்புற வாழும் மனம் கொண்டோரே மனிதர். அன்பு, அருள், கருணை, இரக்கம், ஈகைக்குணம், பரிவு, பாசம் என்றெல்லாம் சொல்லப்படும் பண்புகள் அனைத்தும் மனிதப் பண்புகளாக மதிக்கப் பெறுபவை. அத்தகைய மாண்புகள் நிறைந்த மனமே மனிதம் எனப் போற்றப்படுகிறது. நிறைந்த மனமே மனிதம் எனப் போற்றப்படுகிறது. மனிதத்தன்மை என்பதன் இன்னொரு சொல் தான் மனிதம்.

மனிதத் தத்துவத்திற்கு நாம் பல வார்த்தைகள் வைத்துக் கொண்டிருக்கிறோம். மனிதாபிமானம் என்றும், மானுடம் என்னும் இப்போது மனிதம் என்றும் சொல்லி ஏதோ ஒன்றைச் சுட்டிக்காட்ட

விரும்புகிறோம். என்னைப் பொறுத்தவரை மனிதம் என்ற வார்த்தையே சிறப்பானதாகத் தோன்றுகிறது. [108]

என்பதும்;

உண்மையான மனிதாபிமானம் போர்க்குணம் மிக்கதாகும். அது தீமை கண்ட இடத்தில் கொதித்துக் குமுறும், அநியாயம் கண்ட இடத்தில் அதனை அழித்தொழிக்கக் கொடி தூக்கும். அத்தகைய போர்க்குணம் மிக்க மனிதாபிமானத்தையே நாம் மனிதாபிமானமாக மதிப்பிடுகிறோம் [109]

என்பார் கே.பாலதண்டாயுதம். இத்தகைய மனிதமாண்பு, மனிதம் நிறைந்த மனிதர்கள் சங்ககாலத்தில் மிக்கிருந்ததாலேயே, அது பொற்காலமாக, போற்றப்படுகின்றது.

செல்வம் செழித்திருந்த அக்காலத்திலும், இந்நாட்டிலே ஏழைகள் பலர் இருந்தனர். உணவு, உடை, வாழ்விடம் இல்லாமல் வருந்தித் திரிந்த அறிஞர்கள் பலர் இருந்தனர். உயர்ந்த மாட மாளிகைகளிலே உல்லாசமாகப் பொழுது போக்கும் நிலப் பிரபுக்களும் இருந்தனர். கற்றவர்கள் சிலர்; கல்லாதவர்கள் பலர். ஆனால் அனைவரிடமும் மனிதத் தன்மை குடிக்கொண்டிருந்தது. [110]

சங்க கால மாந்தர் காதலையும் வீரத்தையும் இரு கண்கள் எனப் போற்றி வாழ்ந்தனர். அவ்விரண்டிலுமே மனிதமும் மானமும் இணைந்திருந்தன. இழிந்த காதலும், இரக்கமற்ற வீரமும் மனித மாண்புக்கு இழுக்காகக் கருதப்பட்ட காலம் அது. மான உணர்வு அறுபடாத உயரிய வாழ்வினராகச் சங்க மாந்தர் விளக்கினர்.

சங்க காலத் தமிழர் காதல், மானம், வீரத்தில் சிறந்து இருந்தனர் என்பதை உணரலாம். [111]

என்னும் கூற்று எண்ணுதற்கு உரியது.

மனித மாண்பு

மனித மாண்பு என்பது யாது என்பதை,

செற்றோரை வழி தபுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்

வலியரென வழி மொழிலன்

மெலியரென மீக் கூறலன் [112]

என பேரெயின் முறுவலார் பாடியுள்ளார். இப்பாடலின் பகை தகர்க்கும் பான்மை உள்ளது; நட்பின் உயர்வு தெரிகிறது; வலிமைக்குப் பணியாமை புரிகிறது; மெலிமை இகழாமை விளங்குகிறது; ஈகைக்குணம் புலப்படுகின்றது; மானம் ஓங்கி நிற்கிறது; மயக்கும் மொழி பேசி மனிதனைத் திசை திருப்பாமல், பயன்மிகு செயல் செய்யும் சிறப்பு போன்றவற்றைப் பட்டியிலிடுகிறது.

இயற்கையும் மனிதமும்

சங்க கால மாந்தர் இயற்கை எழிலையும் வளத்தையும் தம்மோடு பிணைத்துக் கொண்டவர்கள். இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வையே அவர்கள் மேற்கொண்டனர். செயற்கை கலவாத செம்மை வாழ்வாக அவர்களின் வாழ்வு ஒளிர்ந்தது.

> **சங்க காலத் தமிழர்கள் – நம்முடைய முன்னோர்கள். இயற்கையோடு கலந்தே வாழ்ந்தார்கள் செயற்கை அந்த நாளில் அவர்கள் மனத்தை இந்நாள் போலக் கவியவில்லை. அதிலும் தமிழ்ப்பெரும் புலவர்களோ, இயற்கையின் ஒவ்வோர் அமைப்பிலும் அசைவிலும் அழகையும் இனிமையையும் கண்டு கண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் தம் மகிழ்ச்சியைப் பிறரும் பெற வேண்டும் என்று நினைத்துத் தம் பாடல்களிலேயும் அமைத்து வைத்தார்கள். அது நம் பெறும் பேறு** [113]

என்றும்,

> **உலக வரலாற்றிற்கு முந்திய காலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தவர்களே. இயற்கைக் காட்சிகள், இயற்கை நிகழ்ச்சிகள் ஆகியவை இவர்களது வாழ்வில் மிகுதியும் இடம்பெற்றன. இயற்கையின் மாற்றத்திற்கு போக்கிற்கும் ஏற்பத் தங்களது வாழ்வையும் அவர்கள் அமைத்துக் கொண்டனர். சங்க கால மக்களும் இதற்கு விதிவிலக்கல்ல.**[114]

மன்னரும் மனிதமும்

நாடாளும் மன்னர்களாக விளங்கியவர்களும் மனிதநேயம் மிக்கவர்களாகவே விளங்கினர். குடிகாக்கும் கடமையே தம் ஆட்சியில் பெரிதெனப் போற்றி ஆட்சி நடத்தியவர்கள் சங்க கால மன்னர்கள். தன்னாட்சியில் வாழும் மக்கள், ஆட்சியைப் பழிப்பதை விரும்பாத மானம்மிக்க மன்னர்களாக, மனித மாண்பு மிக்க மன்னர்களாக அவர்கள் விளங்கினர். மன்னன் தவறு செய்தால் அவனுக்கு அறிவுரை கூறியும், இடித்துரைக்கவும் மக்களுக்கு உரிமை இருந்தது. பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் அறிவுறுத்தியதை,

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே[115]

என்றும், வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவரின்,

குடிபழி தூற்றும் கோலோன் ஆகுக.[116]

என்பதும் புலனாகிறது.

சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் அனைவரும் ஈகைக் குணம் படைத்தவர்களாக விளங்கினர். இல்லையென வந்தவர்க்கு இல்லையென்று கூறாமல், அவர்களின் ஏழ்மை என்னும் இன்னல் இல்லாது போகும் அளவுக்குப் பெரும் பொருளைத் தந்து மகிழ்ந்தனர். பெருநில மன்னர்கள் மட்டுமல்லர்; குறுநில மன்னர்களாக விளங்கியவர்களும் வள்ளல்களாகவே விளங்கினர். பாரியும், பண்ணனும், பெருவேந்தரும் வியக்கதக்க வகையில் இரவலருக்கு ஈந்து மகிழ்ந்தனர். எனவே சங்க கால ஆட்சியாளர்களாக விளங்கிய மன்னர்கள் மனிதம் என்னும் உயரிய பண்பு உறையும் இதயம் கொண்டவர்கள் என்பது நன்கு புலனாகிறது.

நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் [117]

என மோசிகீரனாரும்,

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோல் அதூஉம் கோடா தெனின் [118]

என திருவள்ளுவரும்,

அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல் [119]

என முடத்தாமக் கண்ணியாரும் விளக்கம் கொடுத்துள்ளனர்.

சேர மன்னர்களின் வில்லாற்றாலும், பாண்டியர்களின் கல்வித் திறனும், சோழர்களின் உணவால் விளைந்த அறத்தின் வழிப்பட்ட பெருஞ் செல்வமும் ஒன்று சேர்ந்து துணை செய்தமையால், தமிழ் மக்களது அரசியல் வாழ்வு திறம்பெற மேம்படுவதாயிற்று. தமிழ் வேந்தர்கள் தமிழகமாகிய உடம்புக்கு உயிர் போன்று இன்றியமையாதவர்ளாய் வினையாற்றி விளங்கினார்கள். அதனால், தமிழகம் இம்மூவர்க்கும் ஒப்ப உரியதாயிற்று, 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்ப' என இத்தமிழகத்தை மூவேந்தர்க்கும் பொதுவாகத் தொல்காப்பியனார் உரிமை செய்து கூறுவர் [120]

என்பார் கூற்றும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

நட்பும் மனிதமும்

மனித மாண்புகளுள் நட்பிற்கு அன்பே அடிப்படை. உள்ளத்தின் ஆழத்தில் உறையும் இயல்பானது. எந்தச் சூழலிலும் மாற்றுக் குறையாத மாண்பினது. இனிய பொழுதினும் இன்னலின் போது வந்து உதவும் பாங்கினது நட்பு.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

என்பார் அய்யன் திருவள்ளுவர்.

பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் நட்பு அத்தகையதே. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதே இல்லை. உள்ளத்தால் பிணைக்கப் பெற்றவர்கள். கோபெருஞ்சோழன் மானம் கருதி வடக்கிருந்தான். அவனை அடக்கம் செய்யும் இடத்தில் பிசிராந்தையாருக்கும் ஓர் இடம் அமைக்குமாறு கேட்டுக் கொண்டான்

கோப்பெருஞ்சோழன். இதுகாறும் வாராத பிசிராந்தையார் இனிமேல் வருவது உறுதியில்லை என்று ஐய்யுற்றனர் அண்மையிலிருந்த சான்றோர். அவர்களை நோக்கி, கோப்பெருஞ்சோழன் மிக உறுதியோடு, நான் இன்புற்றிருந்த காலத்தில் வரவில்லை என்றாலும், என்னுடைய துன்பக் காலத்தில் என் நண்பர் பிசிராந்தையார் உறுதியாக வருவார் என்று கூறினார். அதனை ஒரு பாடலாகவே,

கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகின்போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ [121]

பாடி முடித்தான் கோப்பெருஞ்சோழன். நட்பை வகைப் பிரித்துக் காட்டி, எத்தகையவரோடு நட்புக் கொள்ள வேண்டும் என்பதையும் விவரிக்கின்றார். சோழன் நல்லுருத்திரன், நட்பின் வகையை அடையாளம் காட்டும் சோழன் எலியையும் புலியையும் கண்முன் கொண்டு வருகின்றார்.

எலி பிறர் உழைப்பில் விளைந்த கதிர்களைக் கவர்ந்து வந்து தன் வளைக்குள் மறைத்து வைக்கும். அவ்வாறு மறைத்து வைத்த அப்பொருளைத் தானே தனித்து உண்ணும் இத்தகைய பண்பு படைத்தவரோடு நட்பு பாராட்ட வேண்டாம் என்கிறார்.

புலி மிக்க பசியோடு வேட்டைக்குப் புறப்பட்டு, ஒரு காட்டுப் பன்றியை வீழ்த்தியதாம். இது இடப்பக்கமாக வீழ்ந்தது. அவ்வளவு பசி இருந்தும் இடமாக வீழ்ந்த பன்றியை உண்ணாமல், தன் இருப்பிடம் சென்று விட்டது. அடுத்த நாள் ஒரு பெரிய களிற்றினை வலப்பக்கமாக விழுமாறு வேட்டையாடி, அதனைத் தன் பசிக்கு உணவாக்கியது. அத்தகு கொள்ளையாளரோடு தான் நட்புக் கொள்ள வேண்டும் என்கிறார் நல்லுருத்திரன்.

எந்தக் கொள்கையும் இல்லாதவன், மனித நலம் இல்லாதவன், தன்னலம் கொண்டோன் பிறர் பயன்பட வாழும் பண்பில்லாதவன், பிறர்க்குப் பயன்படாமலும் கொள்கையே இல்லாமலும் வாழ்வது மனித வாழ்வாகாது. எனவே கொள்கைச் சான்றோரைச் சார்ந்து அவர்களின் அன்பைப் பெற்று, அதன் வழி அவர்களை

நண்பர்களாகக் கொள்வதே சிறந்தது. அவ்வாறு நட்புக் கொள்வதால் மனிதம் வளரும்.

நட்பு ஐய்யத்திற்கு அப்பாற்பட்டது. மாறுபட்ட கருத்துக்கு இடம் தராதது. வெறுப்புணர்ச்சி தோன்ற வாய்ப்பு இல்லை என்பதற்கு,

கண்ணோட்டமுடைய பேரன்பர்கள் தமது அன்பினர், நஞ்சைக் கொண்டு தரினும், மறுக்காது வாங்கியுண்ணும் பேருடையராய் விளங்கினர். இவரை 'நாகரிகர்' என்று குறிப்பிடுவர் [122]

என்பார் அறிஞர் மு.சண்முகம்பிள்ளை. இது,

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்

பயனும் நண்பும் நாணுநன்கு உடைமையும்,
பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும் [123]

என்னும் நற்றிணை அடிகளுக்கு விளக்கமாக அமைகின்றது. சால்பும் செம்மையும் உடைய நட்பே மிகச் சிறந்த நட்பாக அமைய முடியும். நட்பு மனிதநேயம் தழைக்க உதவும் மிகச்சிறந்த பண்பாகும். நட்பே மனிதர்களின் உறவின் பிரிவைப் பெரிதாக்கும் பண்பாகவும் அடையாளமாகவும் கூறலாம்.

விருந்தும் மனிதமும்

இல்லம் தேடி வரும் விருந்தினரை ஓம்புதல் மனித நேயத்தின் கூறாகும். விருந்தினர் என்பதற்கு இன்று உறவினர் என்ற பொருளைக் கொள்கின்றோம். விருந்தினரை உபசரித்தல் என்றால் உறவினரைப் போற்றுதல் என்றே இன்றைய மாந்தர் எண்ணுகின்றனர். சங்க காலத்து மாந்தர், இல்லத்திற்கு வரும் முன்பின் தெரியாத புதியவர்களையே விருந்தினர் என்று அழைத்தனர்; போற்றினர். விருந்து என்பதற்கு 'புதிய' என்று பொருள் சங்க காலத்தில் இருந்தது, என்பதை,

விருந்தேதானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே [124]

என தொல்காப்பிய நூற்பாவும் விருந்து என்பதற்குப் புதிது என்ற பொருளைத் தருவதைக் காணலாம்.

மலைவாழ் மக்களிடமும் புதியவர்களை உபசரிக்கும் உயரிய பண்பு இருந்தது என்பதை மலைபடுகடாம் சுட்டுகிறது என்னும் கருத்தினை,

தம்பால் வரும் விருந்தினரை உபசரிப்பதோடு மலையில்
யாரேனும் வழி தவறி திகைத்து நிற்பாராயின் அவர்களுக்கு
வழிகாட்டியும் இவர்கள் உதவுவர் [125]

என்னும் பகுதியில் தெரிவிக்கின்றார் அறிஞர் மு.சண்முகம்பிள்ளை.

தமிழர்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள் என்பது அனைவரும் அறிந்த செய்தி. அவர்கள் தம் வீடு தேடி வந்தோர் யாவராயினும் அவர்களை உபசரிக்காமல் விடமாட்டார்கள். தாம் உண்ணும் உணவு எதுவாயினும் அதை விருந்தினர்க்கும் கொடுத்துத் தாமும் உண்டு மகிழ்வர். தமிழ் நாட்டில் வாழ்ந்த எல்லா மக்களிடமும் இக்குணம் உண்டு [126]

என்று விருந்தோம்பும் பான்மையினைப் போற்றிக் கூறுவர்.

..... இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே [127]

எனவும்,

விருந்து புறத்தாத்தான் உண்டல் சாவா
மருந்து எனினும் வேண்டற்பாற்றன்று [128]

என்று வள்ளுவமும் சான்றுரைக்கின்றன.

நெடுந்தொலைவு நடந்து களைத்த வழிபோக்கர்கள் களைப்பும் பசியும் மீதூர இல்லம் இருக்கும் இடம் தேடி வருவர். களைப்பு நீக்க இடமும் உணவும் அளித்து அவர்களைக் காத்து அனுப்பினர் சங்கத்தமிழர். பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை பாடல்கள் அனைத்தும் இந்த அரிய செய்திகளை விரிவாகப் பேசுகின்றன. வள்ளல்கள் இரவலர்களைப் போற்றிய பாங்கும் சங்கப்பாடல்களின் வழி பலப்பட புலப்படுகின்றது.

எனவே சங்கத் தமிழர்களிடம் இயல்பாகவே இருந்தது. விருந்தோம்பல் இல்லறத்தின் இனிய கடமையாகக் கருதப் பெற்றது எனலாம்.

குலமும் மனிதமும்

ஒருவர் தாம் பிறந்த குலத்திற்கு ஏற்ற மனித இயல்போடு நடந்து கொள்ள வேண்டும். என்பது சங்க கால மாந்தர்களின் கொள்கையாகவே இருந்தது.

> **தாம் தாம் தோன்றிய குடிக்குரிய தகுதியில் ஒவ்வொருவரும்ஒழுகுதல் வேண்டும். பிறர்க்கு இடங்கொடாமலும் இருக்க வேண்டும். இவற்றிற்கு முன், பிற பொருள் முயற்சிகளும் பகையுணர்ச்சிகளும் கருதத்தக்கன அல்ல** [129]

என்பார் இளவழகனார்

ஒரு குடி பிறந்தோரில் ஒருவர் மனிததன்மையில்லாமல் ஒழுக முற்படு வாரேயானால், அவரைச் சார்ந்த பிறரும் அவ்வாறு ஒழுகத் தேவையில்லை. மற்றவர் மனிதம் காக்க வேண்டும் என்று இருந்தனர்.

கோப்பெருஞ்சோழனின் பிள்ளைகள் முரண்பட்ட கருத்துடையவராய், தம் தந்தையுடனேயே போருக்குப் புறப்பட்டனர். சோழனும் சினம் கொண்டு அவர்களைத் தாக்கி அழிக்க முற்பட்டான். இது மனித மாண்பாகாது என்று எடுத்துரைத்து அப்போரினைத் தடுத்து நிறுத்தினார் புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார்.

> **எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்**
> **நின்பெரும் செவ்ம் யாக்குஎச் சுவையே** [130]

தம்குடியின் சிறப்பையும் மாண்பையும் காக்காது போனால் பிறர் கூறும் பழியை ஏற்க நேரிடும். அதனால் பிறந்த குலத்திற்கு இழுக்கு வந்து சேரும். அத்தகைய நிலையை உருவாக்கக் கூடாது. அவ்வாறு ஒரு சூழ்நிலை உருவானால் யாராவது ஒருவர் அந்தத் தவறு நடக்காமல் இருக்க முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் குலத்தின் மாண்பு சிதையாமல் இருக்கும். குலப் பண்பு சிதையாமல் காத்தல் மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகும் என்பதை மனத்திருத்தி வாழ்ந்தனர் என்பது புலப்படுகிறது.

மானத்தின் மாண்பு

மனிதனுக்கு மானம் மிகவும் இன்றியமையாதது. மானம் உயிரினும் மேலானது. மானம் காக்க உயிரையும் கொடுப்பர் என்பார் அய்யன் திருவள்ளுவர்.

மயிர் நீப்பின் வாழக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்வரின்

எனவே, மானமா? உயிரா? என்னும் போது மானமே பெரிதென எண்ணினர் சங்கால மாந்தர்கள். தன்குல மானம் போய்விடும் என்பதை அறிஞர் எடுத்துரைத்தவுடன் வடக்கிருந்து மாண்டான் மன்னன் கோப்பெருஞ்சோழன்.

வீரத்திற்கும் பெருமைக்கும் இழுக்கு நேரும் போதெல்லாம் உண்ணா நோன்பிருந்து, உயிர்விடும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர் [131]

என்பார் சி.இலக்குவனார்.

கரிகால் பெருவளத்தானும் பெருஞ்சேரல் இரும்பொறையும் போரிட்டனர். போரில் கரிகாலன் எய்த வேலால் முதுகில் புண் உண்டாயிற்று. அது தன் மானத்திற்கு இழுக்கு என எண்ணிய சேரன் வடக்கிருந்து உயிர் விட்டான். அவன் தோற்றுப் போனதை விட, முதுகில் புண் ஏற்பட்டதை மிகப் பெரிய இழிவாகக் கருதினான். பெருஞ்சேரல் இரும்பொறையின் மான உணர்வை வெண்ணிக் குயத்தியார் என்னும் பெண்பாற்புலவர் கரிகால் பெருவளத்தானிடமே எடுத்தியம்புகின்றார்.

நளியிரு முந்நீர்நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களி இயல் யானைக் கரிகால் வளது [132]

என்பது பெருஞ்சேரலின் மானத்தின் மாண்பைக் குறித்ததாகும்.

பழி எனின் அஞ்ச வேண்டும்; புகழ் வரும் எனில் உயிரைக் கொடுத்தாவது அதனைப் பெறவேண்டும் என்கிறார் அவர். பழிக்கு அஞ்சுதல் மானத்தின் மாண்பு என்பதனை,

..... பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் [133]

என்னும் பகுதியால் புலப்படுத்தியுள்ளான். மன்னன் இளம்பெருவழுதி. மானம் இழந்து உலகையே ஆளவும் விரும்பாத உயர்நிலை மாந்தர் சங்க கால மாந்தர் என்பது புலனாகிறது.

புலவரும் மானமும்

சங்க கால அறிஞர் பெருமக்கள் செம்மைமிகு செருக்கோடு செம்மாந்து வாழ்ந்தனர். பொய்யுரைக்கும் புன்மை அவர்களிடம் இருந்ததில்லை. எவர் முன்னும் அஞ்சாது தம் எண்ணத்தை எடுத்துரைக்கும் துணிவு பெற்றிருந்தனர். தவறு என்று கருதினால் தார் வேந்தனையும் இடித்துத்திருத்தும் திறம் பெற்றவர்களாக விளங்கினர். அறம் காப்பதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். எப்படியாயினும் வாழ வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் சங்கச் சான்றோர் உள்ளத்தில் எழுந்ததில்லை. எந்த நிலையிலும் தன் நிலை தாழாது வாழ்ந்தனர்; நேர்மைத் திறமும் மான உணர்வும் சங்கச் சான்றோரின் சால்பு நிறை குணங்களாக விளங்கின. சிறுமைக்கு நாணுவதும் பெருமைக்கு மகிழ்வதும் தான் சங்க கால அறிஞர்களின் மாண்பாகும்.

> **எத்துணைத் துன்பமுற்றாலும் தங்களது பெருந்தன்மைக்குப் பொருந்தாத நிலையில் செல்வர் பாற் பணிந்தொழுதலைப் புலவர்கள் சிறிதும் விரும்ப மாட்டார்கள். தமக்குப் பிறர் தரும் பொருள் அளவாற் பெரியதாயினும், அன்பின்றியும் காலந்தாழ்த்தியும் வரிசையறியாதும் வழங்கப் பெற்றால், அதனை வெறுத்து விலக்குதலும், தினையளவிற்றாய் சிறு பொருளாயினும், தம் தம் புலமைத் திறமுணர்ந்து வரிசையறிந்து கொடுக்கப் பெற்றால் அப்பொருளை ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்ளுதலும் பெரும் புலவர்களின் இயல்பாகும்.** [134]

இங்ஙனம் சங்கப் புலவர்களின் மாண்பினை எடுத்துரைத்துள்ளார் க.வெள்ளைவாரணார்.

சங்க காலத்தில் புலவர்கள் தங்களை அரசருக்குச் சமமாக எண்ணி வாழ்ந்தார்கள். நெடுங்கிள்ளியிடம் கோவூர்கிழார் வரிசைக்கு வருந்துமிப்பரிசல் வாழ்க்கை மண்ணாள் செல்வமெய்திய நும்மோ ரன்ன செம்மலுமுடைத்தே என்றார்.[135]

இதனால் புலவர்கள் தாம் சிறப்புப் பெற வருந்துவதோடு அரசனைப் போலத் தலைமை பெறவும் விரும்புவார்கள் என்பது தெரியவரும். அரசர்கள் புலவர்களின் தகுதியை மதித்து நடந்தார்கள். கொண்கானங்கிழான் என்னும் குறுநில மன்னனைப் பாடும் மோசிகீரனாரின் கூற்று அவர்தம் மாண்பினை நன்கு புலப்படுத்துகின்றது. என்னிடம் வறுமை நிலைத்துள்ளதால் உன்னிடம் பொருள் வேண்டி வந்துள்ளேன். ஆனால் நான் என இரப்பவன் அல்லன். நீ பரிசில் தரினும் தராவிட்டாலும் உன்னுடைய கொண்கான நாட்டைப் பாடுவேன். அது எனக்கு மிக எளிய செயல் என்று இறுமாந்து கூறுகின்றார்.

திரைபொரு முந்நீர் கரைநணிச் செலலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும் [136]

கொண்பெருங்கானம் பாடல் எனக்கு எளிதே. இப்பாடலில் மோசிகீரனார் பொருள் பெறத்தான் வந்தார். ஆனால் அதனை இரப்பவர்க்கு தருவது போல தருதல் கூடாது. தம் மாண்பும் திறமும் உணர்ந்து நல்க வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பது தன் மானத்தை வெளிப்படுத்துவதே தோன்றுகிறது.

நல்லோர் குழீஇய நாநவில்அவையத்து
வல்லார் ஆயினும் அறம் மறைத்து சென்றோரைச்
சொல்லிக் காட்டி சோர்வு இன்றி விளக்கி
நல்லதின் இயக்கும் [137]

என்னும் பாடல் தெளிவாகக் காட்டகிறது. அக்கால புலவர் பெருமக்கள் ஓர் அரசனையோ வள்ளலையோ காணச் சென்றால், அவர் அரசரோ வள்ளலோ தம்மை நேரில் கண்டு போற்றிப் பரிசில் நல்கினால் மட்டுமே அப்பரிசிலைப் பெற்று மகிழ்வர். காணாது தந்தால் அது எவ்வளவு பெரும்பொருளாகயிருந்தாலும் ஏற்க மாட்டார். தம் வறுமையைப் போக்கும் என்று எண்ணி அதனை பெறும் நிலையில் அவர்கள் என்றும்

இருந்ததில்லை. தம் திறம் போற்றுவார் பொருளையே பெற்று உவந்தனர்.

காணாது ஈத்த இப்பொருட்கு யான் ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணி. [138]

என்பது பெருஞ்சித்திரனாரின் பெருமையினை உணர்த்துவதாகும்.

சங்கப்புலவர் பெருமக்கள்பெரியோரைக்கண்டு வியத்தலும் இலர்; சிறியோரை இகழ்தலும் இலர். அரசர்களின் பெரிய செல்வம் ஒருபோதும் அவர்களுக்கு மலைப்பைத் தந்ததில்லை. அரசர்களின் பெருஞ்செல்வத்தை அவர்கள் எளிதாகவே எண்ணினர். இதனை,

மண்கெழுதானை ஒன்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலே இலமே [139]

என்னும், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனாரின் கூற்றால் நன்கு உணரலாம் அவரே,

உணர்ச்சி இல்லோர் உடமை உள்ளோம். [140]

என்று கூறியுள்ளது நோக்குதற்கு உரியது. வந்திருப்பவர் யார், அவரின் தகுதி என்ன என்று உணர்ந்தும், மனமுவந்தும் வழங்கும் பரிசிலையே புலவர் பெறுவர். அங்ஙனமின்றி, ஏதே வந்துள்ளார். அவர்க்கு ஏதேனும் தந்து அனுப்பலாம் என்ற எண்ணத்தில் எளிதாக எண்ணிப் பரிசில் தந்தால் அப்பரிசிலைப் புலவர் பெருமக்கள், ஏற்க மாட்டார்கள் என்பதும் இதனால் பெறப்படுகிறது.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனாரின் கூற்றை உறுதிப் படுத்துவது போன்று அமைகின்ற பெருஞ்சித்தனார் பாடலையும் ஒப்பிட முடிகிறது.

எழு இனி நெஞ்சம் செல்கம் யாரோ
பருக அன்ன வேட்கை இல் அழி
அருகிற் கண்டும் அறியார் போல. [141]

எனவே உணர்ந்து தருவதையே பெறுவர் என்பதும் உணராதார் பொருளை ஒரு

போதும் விரும்பார் என்பதும் நன்கு புலனாகின்றன.

> **தம் வறுமையைப் போக்க வேண்டி, கொடையிற் சிறந்த பல புரவலரிடம் சென்று தம் வறுமை கூறி நிற்பர். அப்புரவலன் தக்க பரிசில் நல்காவிடினும், பரிசில் கொடுத்தற்குக் காலம் தாழ்த்தினும் தான் பரிசில் வேண்டிச் சென்றதையும் மறந்து, மானமேலீட்டால் திரும்பிவிடுவர்.** [142]

என்பார் டாக்டர் சி.பாலசுப்ரமணியன்.

பெருஞ்சித்திரனார் தம்மை இகழ்ந்த இளவெளிமானின் காவல் மரத்தில் தாம் பிறிதோர் அரசனிடம்பெற்ற களிற்றினைக் கட்டி, அவனை இழிவுபடுத்திய துணிவையும் காண முடிகின்றது. இது புலவரின் அறிவுச் செறுக்கினையம் அவர்களின் அறிவுக்கு அக்காலத்தில் இருந்த மதிப்பினையம் காட்டுவதாகும்.

> **இரவலர் புரவலை நீயும் அல்லை**
> **புரவலர் இரவலர்க்கு இல்லையம் அல்லர்** [143]

பண்டைக் காலத்தில் புலவர்கள் உலகுக்குப் பயன்பட வாழ்ந்து விளங்கினர். அவ்வாழ்க்கை கேற்றபடி அவர்கள் தம் சொற்களையும் செயல்களையும் பிறர் மதிக்கும்படி வைத்துக் கொண்டனர். உண்மையே பேசுதலும் உண்மையாய் ஒழுகுதலும் அவர்கள் கடைப்பிடித்தனர். தம்மைப் பொருள் செய்யாதவரைத் தாம் எக்காரணம் கொண்டும் பொருள் செய்யாதவராய் விளங்கவாயினர். எந்நிலையிலும் பிறர்க்கு நலமே எண்ணி உதவுதலும், பிறர் செய்த நலங்களை எஞ்ஞான்றும் அன்பின் நினைந்து நெக்குருகி நன்றி மறவாது நடத்தலும் அவர்கள் உயிரொழுக்கங்களாய் மிளிர்ந்தன. இதனால், அவர்கள் தம் காலத்தில் எங்கும் நன் மதிப்பும் செல்வாக்கும் உடையவர்களாய் மேலோங்கி நின்றனர் என்னும் கூற்று சங்கச் சான்றோர்க்குத் தரும் நன்மதிப்புச் சான்றாக விளங்குகின்றது.

தன்னை அறிதலும், தன் மதிப்பு காத்தலும் மிகமிக இன்றியமையதான. மனிதன் தன் நிலை தாழாது வாழ இது பெரிதும் உதவும் மானமிகு அறிவே உயர்ந்தது. எவ்வளவு பேரறிவு படைத்தவராயினும் தன் மானம் இல்லாமலோ. தன் நிலை தாழ்ந்தோ

வாழ்வராயின் பயன் இல்லை. தன் அறிவால் தான் மட்டும் வாழாமல் பிறர் வாழ்வதற்கும் பயன்பட வேண்டும். அறிவு மனித மேம்பாட்டின் அடையாளம். மேம்பட்ட அறிவு பெற்றவர் தாழ்ந்திடக் கூடாது. இதனை நன்கு உணர்ந்தோரே சங்க கால புலவர் பெருமக்கள். அவர்கள் மானம் மிக்க மனிதர்களாக அறிஞர்களாக விளங்கினர் என்பதில் ஐயமில்லை.

வீரமும் மானமும்

வீரத்தில் சிறந்த நாடு தமிழ்நாடு. ஆடவரும் மகளிரும் வீரம் செறிந்தவராகவே விளங்கினர். நேர்மைத்திறம் மிக்கவர்களாக இருந்ததனால் அவர்களிடம் வீரம் இயல்பாகவே மிக்கிருந்தது. அதனால்தான் சங்கப் பாடல்கள் வீரயுகப் பாடல்கள் என்று போற்றப் பெறுகின்றன. சங்கத்தமிழரின் வீரம் வீண்போருக்கோ, பொருளுக்கோ நடந்ததில்லை. ஒருவன் வீரம் காட்டுவது தன் நாட்டின் மானம் காக்கவும் நடந்த போர்களே மிகுதியாக இருந்தன எனலாம்.

போரிலே புறப்பின் ஏற்பட்டால் உயிர்வாழ விரும்பமாட்டார்கள். போரில் புறமுதுகு காட்டி ஓடமாட்டார்கள். அப்படி ஒருவன் போரில் புறமுதுகு காட்டுவானேயானால் அவனோடு போரிடமாட்டார்கள். புறமுதுகு காட்டுபவனோடு போரிடுவது இழுக்கு மட்டும் அன்று; மானக்கேடு என்று கருதினர்.

தமிழர்கள் வீரத்தை மதித்து போலவே மானத்தையும் போற்றினர். தன் நாட்டரசன் திருமாவளவன் – வெற்றி பெற்றான் என்றறிந்த நிலையில் பிறந்த இன்பம் ஒருவகை. செருக்களத்தில் தோற்று முடிவில் சேரலாதன் மான வீரனாய் வடக்கிருந்து மாண்டான் என்று கேள்வியுற்றபோது பெற்ற இன்பம் மற்றொரு வகை. வாகை சூடிய வளவனை நோக்கி அரசே, வெண்ணிப் போர்க்களத்தில் மாற்றார் மீது சாடினாய்; வெற்றிமாலை சூடினாய். வல்லவன் நீயே; ஆயினும் மானம் பொறாது உயிர் துறந்த சேரன் நின்னினும் நல்லவன் என்று பாடினார். எனவே வளவனது வீரத்தை வியந்து பாராட்டிய தமிழ் உலகம் சேரன் மானத்தையும் [144] மதித்துப் புகழ்ந்ததென்பது நன்கு விளங்கும் என்பார் டாக்டர் ரா.பி.சேதுபிள்ளை.

வீரத்தால் விளைந்த வெற்றியைப் போற்றிய அதே புலவர், வெற்றி கண்டவனிடம் தோற்றவன் மானம் மிக்கவன் என்பதால் அவனையும் பாராட்டுகின்றார். இதனால் வீரம் போற்றப் பெற்றது போலவே மானமும் பெரிதாகப் போற்றப் பெற்றதைக் காண முடிகின்றனது. அதுவும் ஒரு போரில் நிகழ்ந்த இரு நிகழ்வுகள். ஒன்று வெற்றி, இன்னொன்று தோல்வி, வெற்றி வீரத்திற்காகப் பாராட்டப் பெறுகின்றது. மானம் மேலோங்கி நின்றதைக் கண்டதால் அங்கே தோல்வி தெரியவில்லை. மானமே தெரிகிறது. அதனால்தான் வென்றவனைப் பாடும் புலவர் தோற்றவன் மானத்தையும் சேர்த்துப் பாடிப் போற்றியுள்ளார்.

இருபெரும் வேந்தர் பொருது போர் புரிந்தபோது, பகைவன் எய்த அம்பு மார்பின் வழியாகப் பாய்ந்து முதுகில் புண் ஏற்பட்டமையின் அதற்கு நாணி வடக்கிருந்து உயிர் துறந்தான் சேரமான் பெருஞ்சேரலாதன்.

தம்மோடு எதிர்நின்று பொரும்வேந்தன் அஞ்சியபோது அவனோடு பொருவது வீரமன்று; பகைவேந்தர் போந்து தம் அரணை முற்றுகையிட்டுக் காவல் மரத்தைத் தடியக் கண்டும் வேந்தர் மடிந்திருப்பரேல், அவரொடு பொருவது மானம் மிக்க தமிழ் வேந்தர்க்கு நானூடைச் செயலாகத் தோன்றுகிறது. கருவூரிடத்தே மடிந்திருந்த வேந்தனை விட்டொழியாது பொருதழிக்கலுற்ற சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர்கிழார்

தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கை கொல்லன் அறஞ்செய்ய அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து [145]

என்று புறநானூற்று முப்பத்தாறாம் பாடலில் விளக்கம் கூறுகின்றார்.

இப்பாடலில் புறமுதுகுகாட்டி ஓடும் எதிர் மன்னனைக் காட்டவில்லை. கோட்டையை அடைத்துக்கொண்டு உள்ளே இருக்கும் மன்னன் பற்றிக் குறிக்கப் பெறுவதைக் காண முடிகின்றது. போருக்கு மாற்றரசன் வந்துள்ளான் என்றால் போர்களத்திற்குத் தன் படையுடன் வந்து அவனைச் சந்திக்க வேண்டும். இப்பாடலில் இடம் பெறும் மன்னன் அவ்வாறு செய்யாமல் கோட்டைக் கதவடைத்து உள்ளே

உள்ளான். இச்செயல் அவன் அச்சத்தைக் காட்டுகின்றது. அஞ்சிக்கதவடைத்துள்ள ஒருவனை வீழ்த்த முனைவது வீரமாகாது என்பது புலவரின் கருத்து. அதனால்தான் அம் முற்றுகையினை 'நாணுத்தகவுடைத்து' என்று குறிப்பிடுகின்றார்.

மனைவியைப் பிரிவதும், அறம்தவறுவதும், அரிய நண்பரை இழப்பதும் இழிவு எனக் கருதிய காலம் சங்ககாலம். அவர்களோடு எல்லாம் சேர்ந்து வாழ்தலே மானம் மிக்க வாழ்வு எனக்கருதினர். புறநானூற்று வஞ்சினப்பாடல்கள் அனைத்தும் போர் வேகம் மிக்கவை. எனவே வீரத்தைப் போற்றிய சங்ககால வேந்தர்களும் மறவர்களும் 'மானம் காத்தல்' வீரத்தைப் போலவே ஓர் அரிய கடமையாக, தன்நிலை தாழாமை நிலைநிறுத்த வேண்டும் எனக் கருதப்பெற்றதை அறிய முடிகின்றது.

குலமும் மானமும்

தன்னால், தன் நடத்தையால் தன் குலத்திற்கு இழுக்கு நேருவதை விரும்பாதவர்கள் சங்க கால மாந்தர்கள். ஏதோ ஒரு வேகத்தில் ஒருவர் குலப்பெருமை கருதாது செயலில் ஈடுபட்டாலும் அதனை அறிஞர் பெருமக்கள் எடுத்துரைக்கும்போது உணர்ந்து கொள்வர். அத்தகைய நல்லுணர்வை இக்காலத்திலும் போற்றி வளர்க்க வேண்டும்.

சங்ககாலத் தமிழகத்தின் மாண்புகளும் மனித நேயமும்
நாம் தொடர்ந்து போற்றி வளர்க்கத்தக்கன [146]

என்பார் டாக்டர் பொற்கோ.

நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் சோழர் குலத்தினர். இருவரும் பகை கொண்டு போர்களம் கண்டனர். புலவர் கோவூர்கிழார் இதனை அறிந்தவுடன் போர்க்களம் நோக்கிச் சென்றார். ஒரு குலத்தில் தோன்றிய உங்கள் இருவரில் யார் தோற்றாலும் சோழர் குலம் தோற்றதாகவே பிறர் கூறி ஏளனம் பேசுவர். இருவரும் வெற்றி பெறுவது இயல்பன்று. எனவே உங்கள் குலத்தின் மாண்பைக் காக்க, மானத்தைக் காக்க போரினைக் கைவிடுங்கள் என்று வேண்டினார் போர் நின்றது.

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கடுஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன் [147]

குல மானம் கருதி, தங்களுக்குள்ளே இருந்த பகை உணர்ச்சியைத் தணித்துக் கொண்டனர் என்பது இப்பாடல் புலப்படுத்துகின்றது. சேரமான் கணைக்காலிரும் பொறை, சோழன் கோக்செங்கணானனான் எனும் வேந்தனால் பட்டுக்குடவாயில் என்னும் இடத்தில் அடைத்து வைக்கப்பெற்றான். அடுதலும் படுதலும் போரின் நிகழ்வுகள்தான். ஆனால் சிறையில், அதுவும் மாற்றான் சிறையில் அடைக்கப்பெற்றுள்ள போது, அங்குள்ள காவலர்கள் கூட தம்மை மதிக்காத போது, அத்தகைய ஒரு வாழ்வு என் குலத்திற்கே இழக்கு எனக் கருதினான் கணைக்காலிரும் பொறை. தன் வேண்டு கோளின்படி குடிக்கத் தண்ணீர் தருவதிலும் அலட்சியம் கண்ட மன்னன், இந்நீரைக் குடித்து உயிர் வாழ்ந்தால் பின்னாளில் வருவோர் தன்னை மட்டும் அன்று. தன் சேரர் குலத்தையே பழிப்பர் என எண்ணினான் என்பதை,

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆஅளன்று என்று வாளின் தப்பார்
தொடர்ப்படு ஏமலியின் இடர்படுத்து இரீஇய [148]

என்னும் இப்பாடலை எழுதி வைத்துவிட்டு உயிரை விட்டான். தன் உயிரினும் குலமானம் பெரிதென கருதினான் சேரமன்னன் என்பது புலனாகிறது.

புகழும் மானமும்

தோன்றிற் புகழோடு தோன்றுக என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, புகழோடு வாழ்தலையே சங்கமாந்தர்கள் விரும்பினர். புகழ்பட வாழ்தலே வாழ்வதன் பொருளாகக் கருதினர்.

எப்படியாவது புகழ் சேர்க்க வேண்டும் என்ற எண்ணமும் அவர்களிடம் இருந்ததில்லை. புகழீட்ட வேண்டும் என்பதற்காகப் பொல்லாங்கு புரியும் இழிமனம் ஒருபோதும் இருந்ததில்லை, என்றே கூறவேண்டும். பழிக்கு நாணுவது போலவே, தம்மைப் பிறர் புகழும் போதும் ஒருவகை நாணம் கொண்டனர் என அறிய முடிகின்றது

பிறர் தம்மைப் புகழ்ந்துரைக்கும்போது, அதனை உவகையோடு ஏற்று இன்புறுதல் நல்ல புகழாளர்களுக்கு உரிய இயல்பன்று. பிறர் புகழ்ந்துரைக்கும் போது ஒரு பணிவு தோன்றவேண்டும். அதுதான் உண்மையான புகழாளர்களின் இயல்பு. இக்கூற்றை மெய்பிக்கும் நோக்கில்,சான்றோர், பிறர்தம்மைப் புகழ்வதற்கு முன்னும் நாணுவார்கள். புகழ்ச்சியைத் தாங்க முடியாத அவர்கள் பழியை எவ்வாறு தாங்குவார்கள்,எனக் குறிப்பிடுவார். இதற்கு சான்றாகவே,

..... சான்றோர் புகழும் முன்னர் நாணுப
பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே [150]

என குறுந்தொகையும் விளக்கமளிக்கிறது.

சங்க மாந்தர் புகழ் எனின் தம் உயிரையும் கொடுப்பர். பழி என்றால் இந்த உலகமே கிடைப்பதாக இருந்தாலும் வேண்டார். மானத்திற்காக உயிரை வேண்டுமானால் விடுவர் என்பதை **உயிர்நீப்பர் மானம் வரின்** என வள்ளுவரும், தமிழர் சால்புக்கு சான்று காட்டியுள்ள திறம் மிகநன்று. இக் கூற்றையே;

புகழ் எனின் உயிரும் கொடுக்கவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் [151]

என புறநானூறும் எடுத்துக் காட்டுகிறது. எனவே,

புகழோடு வாழ்தல் தான் மானமிகு நல்வாழ்வு எனக் கருதினர் என்பது தெளிவாகிறது.

பொருளும் மானமும்

நேர்மையும் தன்மான உணர்வோடு பொருளீட்டும் செயலும் அமையின் ஒருவருக்கு புகழ் தானகாவே வந்து சேரும். பொருள்தான் வாழ்க்கையின் மேன்மைக்கும் இனிமைக்கும் அடிப்படை. நேரிய வழியிலேயே தம் பொருளைச் சேர்த்தனர். கொள்வதும் மிகை கொள்ளாது. கொடுப்பதும் குறையாகக் கொடுக்காமல் பொருள் ஈட்டினர் என்பதைச் சங்கப்பாடல்கள் பல நமக்கு உணர்த்துகின்றன.

பிறர் உழைப்பில் வந்த பொருளைக் கொண்டு பெருமையுடன் வாழ்தலையும் அவர்கள் விரும்பியதில்லை. பெற்றோர் சேர்த்து வைத்த பெரும் பொருளைத் தம் பொருளாகக் கொண்டு வாழ்வதையும் அவர்கள் விரும்பனாரில்லை. தாமே பொருளீட்டி, அப்பொருளின் பயனால் இல்லறத்தை நல்லமாக்க வேண்டும்; அதுவே தன் மானமிகு வாழ்க்கை என்று கருதினர்.

சங்க மாந்தரின் இப்பொருளியல் வாழ்க்கை மானமிகு வாழ்க்கையாக அமைந்திருந்தது என்பதை,

உழைத்துப் பொருள் ஈட்டி அதனைக் கொண்டு வாழாமல், தமக்குத் தானமாகக் கிட்டிய பொருளைச் செலவழித்து வாழ்வோர் செல்வமுடையோர் என்று அறிஞர்களால் பாராட்டப்படுவோரல்லர்; தம் முயற்சியால் சேர்க்கும் பொருளில்லாதோர் வாழும் வாழ்க்கை பிச்சையேற்று வாழும் வாழ்க்கையைக் காட்டிலும் இழிவானதாகும் என்னும் உயர்ந்த கொள்கையைப் போற்றி வாழ்ந்தனர்.[152] என்னும் கூற்றால் எடுத் துரைத்துள்ளார் முனைவர் தெ.ஞானசுந்தரம். சங்ககால அகவாழ்வில் பிரிவு வகைகளுள் ஒன்று பொருள் வயிற்பிரிவு. தலைவன் தலைவியை விட்டுப் பொருளீட்டப் பிரிவான். அதாவது அவளை மணம் செய்து கற்பு வாழ்வில் ஈடுபடும்போது, அவ்வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைத்தானே ஈட்டுதற் பொருட்டுப் பிரிந்து செல்வாள். எத்தகைய செல்வக் குடியில் பிறந்தவராக இருந்தாலும் தான் ஈட்டிய பொருளில் இல்லறம் நடத்துதலையே விரும்பினர் என்பது புலப்படுகின்றது. அது தான் மானமிகு வாழ்க்கை என்று உணர்ந்து வாழ்ந்தனர்.

அறமும் மானமும்

அறம் செய்து வாழ்வது நல்லோர் இயல்பு. அஃதோர் உயிரிரக்கப் பண்பு. இல்லாமையை அகற்றி நிறைவை உண்டாக்கும் பாங்கு, நேரிய வழியில் ஈட்டிய பொருளைக் கொண்டு, வேண்டுமென வந்தார்க்கு ஈந்து வாழ வேண்டும் என்ற உயரிய கொள்கையினர் சங்க கால மாந்தர். தம்மை நாடி வந்தோர்க்கு இல்லை என்று கூறாமல், இன்முகம் காட்டி அறம் செய்வதையே தம் நோக்கமாகக் கொண்டவர்கள்

என்பதற்குச் சான்று கூற பல பாடல்கள் உள்ளன. அறம் என்பது ஒரு வழிப்பாதை. கொடுப்பதுடன் சரி, அது மீண்டும் கொடுத்தவருக்குத் திரும்பவராது. வரும் என எதிர்பார்த்துக் கொடுப்பது அறம் ஆகாது. அது கடன் என்று வேண்டுமானால் கூறலாம். தன்னிடம் ஒன்று பெற்றுச் சென்றவன் பிறிதொரு நாள் அதனைத் தனக்குத் திருப்பித் தர வேண்டும் என்று எதிர்பார்த்தல் இல்லை. அவ்வாறு யாரேனும் எதிர்பார்த்தால், அதை விட இழிவு வேறில்லை.

இல்லை என்று துன்பத்தால் வருந்தி இரந்து கேட்ட ஒருவர்க்குக் கொடுத்த பொருளைத் திரும்பப் பெறக் கூடாது. திரும்பக் கொடுக்குமாறு கேட்கக் கூடாது. அவ்வாறு கேட்பதைவிட உயிரையே விட்டு விடலாம்[153] என்பார் அறிஞர் மு.வரதராசனார். இதற்கு இலக்கணமாக,

இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்தலை தா எனச் சொல்லினும்
இன்னதோநம் இன்னுயிர் இழந்தே [154]

என்னும் இப்பாடல் எடுத்துக் காட்டுகின்றன.

இல்லறமும் மானமும்

இல்லறத்தின் வளமைக்கும் செழுமைக்கும் தலைவன் ஈட்டும் பொருளே அடிப்படையாய் அமைந்தது. தலைவியும் தான் எத்தகைய செல்வன் மகளாக இருந்தாலும், தன் தலைவன் ஈட்டிய பொருளைக் கொண்டே இல்லறம் நடத்தினாள். பிறந்த வீட்டின் செல்வத்தைப் பெரிதெனப் போற்றும் இயல்பு சங்க கால மகளீர் பால் இல்லை. தன் கணவன் ஈட்டிய பொருளால் கிடைக்கும் கூழே, தன் பிறந்த வீட்டின் தேன் சோற்றினும் சிறந்தது எனக் கருதி வாழ்ந்தனர்.

அன்னாய் வழிவேண்டன்னை நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு [155]

என்று தம் இல்லம் போற்றி வாழ்ந்த மகளிரே அக்காலத்தில் இருந்தனர். இனிதே இல்லறம் நடத்தும் தலைவியை,

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்

விரிகதிர்ப் பொற்கலத்து ஒருவகை ஏந்திப் [156]

என நற்றிணைக் கூறுகிறது.

தான் பிறந்த இல்லம் செல்வம் கொழிக்கும் இல்லமாக இருந்தும் அதனைச் சிறிதும் எண்ணாமல், தன் இல்லத்து வறுமையையும் பொருட்படுத்தாது, கிட்டிய போது உண்டு மகிழ்கின்ற அத்தலைவி, இத்தகைய உயர்ந்த அறிவையும் ஒழுக்கத்தையும் அவள் யாண்டு பெற்றாள் என்று வியந்து போற்றுகின்றாள் செவிலி. தன் இல்லறம் தன் தலைவன் ஈட்டும் பொருளைத் தான் நடைபெற வேண்டும் என்ற கொள்கையோடு வாழ்ந்தனர் சங்க கால மகளிர். அதுவே இல்லற மானமாகக் கருதினர் அதனைக் காத்து வந்தனர் என்பதில் ஐயமில்லை.

தன்மானம்

மானமே உயிரினும் சிறந்ததென்பது தமிழ் நாட்டார் கொள்கை. மானங்கெடவரின் வாழாமை முன் இனிதே என்றார் ஒரு தமிழ்ப்புலவர். எனவே மானம் காத்த வீரனை மனமாரப் போற்றும் வழக்கம் தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் உண்டு. நாட்டின் மானத்தைக் காத்தருளிய வீரன் ஒருவனுக்கு மானங்காத்தான் என்ற பட்டம் சூட்டிய நாடு தமிழ்நாடு. அவன் பெயரைத்தாங்கிய ஊர்கள் இன்றும் பாண்டி நாட்டில் நின்று நிலவுகின்றன.[157] என்பார் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை.

சங்கப்பாடல்களில் அமையும் வஞ்சினப் பாடல்கள் அனைத்தும் தன் மானம் குறித்தனவாகும்.

இளையவன் இவன் என உளையக் கூறி [158]

அதனாலேயே,

பாண்டியன் நெடுஞ்செழியன் சேர, சோழரையும், குறுநில மன்னரையும் ஒருசேரத் தாக்கி வென்றான். தங்களிடம் பெரும்படை உள்ளது என்ற செருக்கால் போருக்கு வந்தோரை அடலேறு எனச் சினந்து வென்றான்

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்னும் செய்தியையும் அறிய முடிகின்றது [159]

.... இந்நிலத்து ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது என் [160]

என்று சினம் கொண்டான் சோழன் நலங்கிள்ளி. இத்தகு தன்மான உணர்வைக் காட்டும் பாடல்கள் பலவற்றைச் சங்க இலக்கியத்தில் காணமுடியும்.

இது காறும் கண்ட சங்க கால மாந்தரின் மனிதநேயம் நன்கு தெரிகின்றது. அவர்கள் எந்நிலையிலும் மனித மாண்புக்கு மாறாக நடக்க விரும்பவில்லை. அகத்திலும புறத்திலும் மனித மாண்பைக் காத்தனர். மானமே பெரிதென வாழ்ந்தனர். மானத்தை உயிரினும் பெரிதென்ப போற்றினர். இல்லறத்தையும் மனம் செறிந்ததாகப் போற்றிக்காத்தனர். அத்தகைய மனிதமும் மானமும் நிறைந்த வாழ்வை வாழ்ந்ததனால் தான் சங்க கால மாந்தர் வாழ்வு இன்றும் ஒளிவிடும் வாழ்வாகத் திகழ்கின்றது.

முடிவுரை

சங்க அக இலக்கியம் இனிமையானது. கற்போரைக் கற்பனையில் ஆழ்த்துவது விரிந்த இலக்கிய பரப்பில் குறுகிய அடிகளைக் கொண்டு மிக உயர்ந்த கோட்பாட்டை நயமாக விரித்துரைக்கிறது. மலைகளைத் தழுவிய மரநிழல்களிலும் மாற்றாரின் தொல்லையேதும் இல்லாத முல்லை நிலங்களிலும், சேற்று மணம் வீசுகின்ற ஆற்றங்கரை ஓரத்திலும் கடலோரக் கவிதையோடு அலைவீச நெளியும் மணல் வெளிகளிலும், காலையரும்பி மாலைவரை வெயில் நீளும் பாலைவனங்களிலும் நிகழ்ந்திருந்த காதல் சங்கக்காதல்.

அகத்திணை மாந்தர்களில் தோழி இல்லையேல் காதல் இல்லை அகப்பொளும் இல்லை என்று சுட்டும் அளவிற்கு சிறப்பு பெற்றவள் தோழி. தலைவிக்கு உற்ற துணையாக விளங்குபவள். அவள் கொண்ட காதலுக்கு உதவியாகக் களவு வாழ்வை நீட்டிக்க விரும்பும் தலைவனின் மனநிலையைத் தலைவிக்கு எடுத்துக்கூறித் தலைவனிடம் விரைவில் மணம் புரியுமாறு வரைவு கடாதல் செய்கிறாள். தலைவியின்

களவு வாழ்வைப் பெற்றோரிடம் கூறித் கற்பாக்க முற்படுகிறாள்.

களவு, கற்பு என இருநிலைகளிலும் தலைவியைத் தலைவன் பிரியாமல் இருக்க செலவமுங்குவிக்கிறாள். இவ்வாறு அனைத்திலும் முதன்மைப் பாத்திரமாக விளங்கும் தோழியின் அறிவாற்றல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அகத்திணை இலக்கியத்திற்கு மையப்புள்ளியாக விளங்கும் தலைவியின் களவு, கற்பு வாழ்க்கைப் பற்றியும், தலைவனைப் பிரியும் பிரிவித்துன்பம் தலைவனை உயிராகக் கருதும் தலைவியின் கற்பு வாழ்க்கை போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

தன்னிகரில்லாத தலைவனின் அகவாழ்வில் தலைவியின் மேல் கொண்ட காதல் அக்காதலின் காரணமாகத் தலைவன் மடலேறும்நிலை, வினை முடிந்துத் திரும்பி வரும்போது தலைவி மீது கொண்ட காதலால் விரைந்து வரும் மனநிலை ஆகியவற்றில் தலைவனின் பண்புகள் நிறைந்திருப்பது ஆராயப்பட்டுள்ளன.

அகத்திணை மாந்தர்களில் தலைவி மீது மாறாத அன்பு கொண்டவர்கள். நற்றாயும்–செவிலித்தாயும் தலைவி பிறந்தது முதல் வாழ்க்கை துணை அமையும் வரை உதவி செய்தவர்கள். கற்பு வாழ்வில் தலைவியை பிரிந்தபோதும் அவள் தலைவனுடன் இல்லறம் நடத்தும் நிலையைக் கண்டு மகிழ்ந்தவர்கள். அக இலக்கியத்தின் மையப்புள்ளி தலைவி என்றால் கரும்புள்ளி பரத்தை. இப்பரத்தையர் தோன்றுவதனால் தலைவியின் வாழ்வில் ஏற்படும் துன்பங்கள். இப்பரத்தையர் தோன்றக் காரணமாக அமைந்த சமுதாய நிலை ஆகியவற்றை பற்றியும் அகமாந்தர்களான தலைவனும், தலைவியும் களவு வாழ்விலிருந்து கற்பு நிலைக்கு வருவதற்கு வாயிலாக இருந்தவர்கள் பலர். அவர்களில் பாங்கன், பாணன், கண்டோர் ஆகியோரின் பண்புகள் விளக்கப்பட்டுள்ளன.

உயிரிரக்கப் பண்பு மனித மாண்பைக் காட்டும் ஓர் உயரிய நிலை. உலகில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. அனைத்து உயிர்களும் போற்றத்தக்கன. இவ்உயிரிரக்கப்பண்பு எவ்வாறு வீரத்தில், காதலில், பகிர்ந்தளிக்கும் விதத்தில் எங்ஙனம் அமைந்துள்ளது என்பதை இவ்வியலில் விவரிக்கப்பட்டுள்ளது.

அகத்திணையில் மற்றொரு சிறப்பாக கூறப்படுவது மானம், மனிதமும் இதன் சிறப்புகள் ஆகியயவற்றை இவ்வியல் விவரித்துள்ளது.

இயல் 3

அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள் – பா.எ.30
2. எஸ். இராமகிருஷ்ணன் இலியட் ப. 186
3. வ.சு.ப.மாணிக்கம் தமிழ்க்காதல்ப.221
4. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை பா.40
5. ஔவை துரைசாமி(உ.ஆ) , புறநானூறு – பா.எ.215
6. மேலது, புறநானூறு – பா.எ.394
7. மேலது பா. 337.
8. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,.குறுந்தொகை பா.137.
9. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் இளம்பூரணம் ப.2
10. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் ப.2
11. ந.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கை ப.18
12. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் அக. ப.1
13. வ.சு.ப.மாணிக்கம் தமிழ்க்காதல்ப.353.
14. ஈ.கோ.பாஸ்கரதாஸ் சங்க இலக்கியத்தில் அகம் ப.224.
15. வ.சு.ப.மாணிக்கம் தமிழ்க்காதல்ப.224.
16. மேலது பா. 267
17. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,. பட்டினப்பாலை 218
18. மு.சண்முகம் பிள்ளை, சங்கத் தமிழர் வாழ்வியல் ப.234.
19. .சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,அகநானூறு பா.305
20. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை பா.166.
21. மு.சண்முகம் பிள்ளை, சங்கத் தமிழர் வாழ்வியல் ப.231.
22. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,கலித்தொகை பா.18
23. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,அகநானூறு பா.339

24. மு.மு.இஸ்மாயில் (பாட்டுரை)

25. .சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,.. நற்றிணை பா.124.

26. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் ப.126

27. மேலது பா. 127

28. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் ப.55

29. தட்சிணாமூர்த்தி . திருமகள் கழுத்தில் வைரமாலை ப.36

30 .சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,கலித்தொகை பா.103

31. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,அகநானூறு பா.316

32. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு பா.200

33. மேலது பா. 7

34. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் ப.112

35. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,அகநானூறு பா.330

36 .சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை பா.245.

37. மு.இராகவையங்கார் தொல்காப்பியம் ப.71

38. மேலது பா. 7

39. இறையனார் அகப்பொருள் பா.14

40. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் ப.12

41. மேலது பா. 13

42. வ.சு.ப.மாணிக்கம் தமிழ்க்காதல்ப.79.

43. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பா.1045

44. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.196.

45. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், பொருள்.பா.1045

46. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், பொருள்.பா.150

47. சுதமதி கனகசபை,குறுந்தொகை காட்டும் வாழ்க்கை,ப.33.

48. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், பொருள்.பா.94.

49. கலித்தொகை

50. உ.வே.சா. குறுந்தொகை,ப.76.

51. மேலது, ப.135

52. மேலது, ப.615

53. மேலது, ப.116

54. மேலது, ப.120

55. மேலது, ப.1122

56. மேலது, ப.300

57. மேலது, ப.71

58. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், பொருள்.பா.981.

59. மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை,பா.எ.1137.

60. பாட்டும் தொகையும், அகம்.339.

61. ஆ.இராமகிருட்டிணன்,அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு.ப.179.

62. பாட்டும் தொகையும், நற்றிணை,பா.103.

63. பாட்டும் தொகையும், அகம், பா.169.

64. பாட்டும் தொகையும், நற்றிணை, பா.157.

65. பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு, பா.103.

66. பாட்டும் தொகையும்,நச்சினார்கினியர் ஐங்குறுநூறு, பா.37.

67. ந.சுப்புரெட்டியார், அகத்திணைக்கொள்கை,பக்.353,354.

68. பாட்டும் தொகையும், குறுந்தொகை,பா.167.

69. இ.சுந்தரமூர்த்தி,வாழ்வியல் களஞ்சியம், ப. 10

70. தமிழகராதி,ப.222,583,682.

71. சேந்தன், திவாகர நிகண்டு,ப.14.

72. பிங்கல நிகண்டு,ப.200.

73. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், பொருள்.பா.419.

74. மேலது.175.

75. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம்,கற்பியல் இளம்பூரணர் உரை.பா.29.5

76. கா.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம், நூ.114

77. வைரமுத்து, கவிதைத்தொகுதி,ப.770.

78. ஔவை துரைசாமி(உ.ஆ) , ஐங்குறுநூறு ஆராய்சி- ப.2.

79. வ.சு.ப. மாணிக்கம்,தமிழ்க்காதல்,ப.281.

80. பாட்டும் தொகையும், கலித்தொகை,பா.103.

81. பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு,பா.103.

82. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம்,பா.153.

83. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம்,கற்பியல் இளம்பூரணர் உரை.பா.53.

84. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம்,கற்பியல் இளம்பூரணர் உரை.பா.31.

85. வ.சு.ப. மாணிக்கம்,தமிழ்க்காதல்,ப.330.

86. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம்,பா.180.

87. பாட்டும் தொகையும், குறுந்தொகை,பா.209.

88. மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை,பா.எ.448.

89. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம்,பா.1115.

90. பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு,பா.480.

91. புலவர் ச.தமிழரசு (க.ஆ) சங்க இலக்கியம் பன்முக நோக்கு,ப.184.

92. க.வெள்ளைவாரணார், பத்துபாட்டு சொற்பொழிவுகள்,ப.232.

93. பாட்டும் தொகையும்,அகனாநூறு,பா.10-12.

94. பாட்டும் தொகையும்,ஐங்குநூறு,பா.1-2

95. மேலது. பா.2-2

96. மேலது. பா.3-2

97. மேலது. பா.5-2

98. பாட்டும் தொகையும்,ஐங்குநூறு,பா.1-2

99. மேலது. பா.10-2

100. பாட்டும் தொகையும், பாலைக்கலி,பா.1-2

101. கலித்தொகை.பாலைக்கலி.1.5

102. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.94.

103. மேலது,பா.14.

104. மேலது,பா.25.

105. மேலது,பா.46

106. மேலது,பா.47.

107. பாட்டும் தொகையும், அகநானூறு, பா.189.5

108. கே.பாலதண்டாயுதம்,இலக்கியத்தில் மனிதநேயம்,ப.1

109. மேலது,ப.122.

110. சாமி.சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும்,ப.15.

111. செ.பழனிவேல்,(க.ஆ) சங்க இலக்கியம் பன்முகப்பார்வை,ப.31.

112. பாட்டும் தொகையும்,அகநானூறு,பா.239..

113. இல.தாணம்மாள், சங்க இலக்கிய மலர்கள்,ப.111.

114. மேலது,ப.79.

115. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.184.

116. மேலது. பா.72.

117. மேலது. பா.186

118. மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை,பா.எ.546.

119. பாட்டும் தொகையும்,பொருநராற்றுப்படை,பா.230.

120. க.வெள்ளைவாரணார், சங்க இலக்கிய மலர்கள்,ப.10.

121. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.215.

122. மு.சண்முகம் பிள்ளை, சங்கத்தமிழர் வாழ்வியல்,ப.264.

123. பாட்டும் தொகையும்,நற்றிணை,பா.355.6-7.

124. மேலது. பா.160.

125. மு.சண்முகம் பிள்ளை, சங்கத்தமிழர் வாழ்வியல்,ப.45.

126. சாமி.சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும்,ப.186.

127. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.182.

128. மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை,பா.எ.82.

129. இளவழகனார், சங்க இலக்கிய இன்கவித்திரட்டு,ப.45.

130. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.213.

131. சி.இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் சங்க இலக்கியம்,ப.113.

132. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.182.

133. மேலது,பா.213.

134. க. வெள்ளைவாரணார்,சங்க காலத்தமிழ் நூல்கள்,ப.142.

135. க.சண்முகசுந்தரம், சங்ககால சோழவேந்தர்கள்,ப.88.

136. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.154.

137. பாட்டும் தொகையும்,மலைபடுகடாம்,பா.77-80.

138. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.208.6-8.

139. மேலது, பா.197.7-8

140. மேலது, பா.197-16.

141. மேலது, பா.207.

142. சி.பாலசுப்ரமணியன்,சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்,ப.306.

143. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.162.

144. ரா.பி.சேதுபிள்ளை,தமிழர் வீரம்,ப.23.

145. அவ்வை.துரைசாமி பிள்ளை, புறநானூறுச் சொற்பொழிவுகள்,பக். 216-217.

146. பொற்கோ.சிறப்புரை, சங்ககால வேந்தர்களின் சமுதாயப்பணி,52.

147. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.45.

148. மேலது, பா.74.

149. மு.வரதராசனார், குறுந்தொகைச்செல்வம்,பா.எ.123.

150. பாட்டும் தொகையும், குறுந்தொகை,பா.252.

151. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.182.

152. முனைவர் தெ.ஞானசுந்தரம், குறுந்தொகைத் தெளிவு,ப.111.

153. மு.வரதராசனார், குறுந்தொகைச்செல்வம்,பா.எ.171-172.

154. பாட்டும் தொகையும், குறுந்தொகைச்செல்வம்,பா.349.

155. பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு,பா.203.

156. பாட்டும் தொகையும்,நற்றிணை,பா.110

157. ரா.பி.சேதுபிள்ளை, தமிழர் வீரம்,ப.22.

158. பாட்டும் தொகையும்,புறநானூறு ,பா.72.2.

159. மேலது, பா.71.

160. மேலது, பா.73: 4-7.

இயல் நான்கு

புறத்திணை வாழ்வியல் கூறுகள்

புறத்திணை வாழ்வியல் கூறுகள்

முன்னுரை

அகவாழ்விலும், புறவாழ்விலும் நேர்மையும் சீர்மையும் மிளிர வாழ்ந்தவர்கள் சங்ககால மாந்தர். அன்பின் அடிப்படையில் அமைவது அகவாழ்வு. அங்கே ஒருவனும் ஒருத்தியும் ஒன்றுபட்டு உறவு மலர, உலகம் உய்ய வாழ்ந்தனர். அகத்திற்கு வெளியே அமைவது புறவாழ்வு. புறவாழ்வின் செம்மையும் செழுமையும் அகவாழ்வின் வளத்துக்கு வழி கண்டன. புறவாழ்வில் பல்வேறு செயல்கள் அமையும் என்றாலும் வீரமே பெரிதும் பேசப்படுவதைக் காணமுடிகிறது. பொருளீட்டல், தூது, கல்வி, காவல் போன்ற வெவ்வேறு செயல்களில் சங்க கால மாந்தர் திறம்பட போர் வாழ்வியலின் மேன்மையைக் காட்டுவதாக சங்கப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

புறத்திணை

'திணை' என்பதற்கு ஒழுக்கம் என்பதே பொருள். போர் பற்றிக் கூறும்போது புறத்திணை என்று குறிப்பிடுவது ஈண்டு சிந்தித்தற்கு உரியது. புறத்திணை என்று தொல்காப்பியர் குறிப்படுவதாலேயே போரில் கடைப்பிடித்த ஒழுங்கு நன்கு விளங்குகிறது.

அக ஒழுங்குகளை வகைப்படுத்திக் காட்டியுள்ளது போன்றே புற ஒழுங்குகளை வெட்சி, வஞ்சி, உழிஞை, நொச்சி, காஞ்சி, வாகை,பாடாண் என்று புறத்திணையை ஏழாகப் பிரித்து அவற்றின் பாங்கிணை தொல்காப்பியர் விவரித்துள்ளார். தொல்காப்பியரின் இப்பகுப்பும் விளக்கமும் அக்காலப் போர் முறையில் கையாளப்பெற்ற நெறிமுறைகள் அனைத்தும் மனித நேயத்துடன் அமைந்த பாங்கினைக் காட்டுவனவாக உள்ளன.

ஒருவர் வாழ்வில் மற்றவர் குறுக்கிட்டுப் பூசல் விளைவிக்கும் குழப்ப நிலையைத் தடுத்து, மக்களுள் ஒவ்வொருவரும் தாம் விரும்பிய குற்றமற்ற இன்பங்களை அடைதற்கு மேற்கொள்ளும் செயல் முறைகளே 'புறத்திணை' எனப் போற்றப் பெறுவனவாகும்.

சங்ககாலத் தமிழர் நாகரிக மேம்பாட்டில் தலைசிறந்து விளங்கினர் என்றாலும், வீரத்தைப் பெரிதென மதித்திருந்தனர் என்பதை மறுக்க இயலாது. வீரம் மேலோங்கி நிற்கும்போது, உண்டாகும் இடையூறுகளை விரைந்து களைய முற்படுவது இயல்பு. வீரத்திற்கு இழுக்கு நேருவதை மிகப்பெரிய மனக்குறையாக அக்கால மாந்தர் எண்ணினர் என்றே கூற வேண்டும். வீரம் செறிந்த வேகத்திலும் அறிஞர் போற்றும் ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர் என்பது சங்க கால வீரர்களின் மாண்பாக அமைகின்றது.

வீரம்

வீரத்தைப் பெரிதும் போற்றிய சங்ககால மாந்தர் தம் தோற்றத்தில் வீரம் வெளிப்படுமாறு வீறுடன் நடந்தனர். தன்னை ஒரு வீறுமிக்க மாவீரனாக வெளிப்படுத்திக் கொள்வதில் பெருமிதம் அடைந்தனர். மாற்றாரிடையே அவ்வாறு நடந்து கொள்வது மட்டுமன்று; தம்மைச் சார்ந்தோரிடையே அவ்வாறு, நடப்பது மட்டுமன்று; தன் குழந்தை பிறந்தது முதற்கொண்டு தன் தந்தையைக் காணும்போது, 'ஒரு மாவீரன்' 'தன் தந்தை' என்னும் உணர்வு அக்குழந்தைக்கு வரவேண்டும் என்னும் கொள்கை உடையவராக வாழந்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அதியமான் நெடுமான் அஞ்சி போர்களத்தில் இருந்தபோது அவனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்த செய்தி கிடைக்கப்பெறுகிறது. உடனே அவன் தன் குழந்தையினைக் காண வருகின்றான். அவன் எவ்வாறு வந்தான் என்பதை, ஔவையார்

கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
விட்கர் போகிய வளரிளம் போந்தை [1]

எனப் பாடியுள்ளார். தம்மைப் போலவே தன் புதல்வனும் மாவீரனாக விளங்க வேண்டுமாயின் அவன் தன் முதல் தோற்றத்திலேயே ஒரு பெருவீரனாக தன்னைக் காண வேண்டும் என்று எண்ணினர் என்பதைப் அறிய முடிகிறது.

தூய வீரம்

சங்ககால மாந்தர் வீரத்தைப் பெரிதெனப் போற்றிய அதே நேரத்தில் அவ்வீரத்தில் தூய்மையினை மேற்கொண்டனர் என்பதும் உண்மை. தனக்கு வீரமும் வலிமையும் இருக்கிறது என்று எவரையும், எங்கும், எப்போதும் தாக்கும் இயல்பு அவர்களிடம் ஒரு போதும் இருந்ததாகத் தெரியவில்லை. சங்ககால மாந்தர் போரில் நாட்டம் செலுத்தியதற்கு வீரம் அடிப்படையாக அமைந்தது. போரில்லாத காலங்களில் வீர விளையாட்டுகளில் ஈடுபடுவதும், வீர விளையாட்டுகளைக் கண்டு களிப்பதும் சங்க கால வீரர்களின் வழக்கமாக இருந்ததையும் அறிய முடிகின்றது.

வீரர்கள் போரில் கலந்து கொள்ளாத காலங்களில் வீர உணர்ச்சியை வளர்த்துக் கொள்ள பலவகையான போர்க்காட்சிகளைக் காண்பதில் விருப்பம் செலுத்தினர். ஏறுகள், ஆட்டுக் கடாக்கள், யானைகள் ஆகியவற்றைத் தமக்குள் போரிடும்படி செய்து கண்டு மகிழ்ந்தனர். யானைப்போரைப் பார்க்கச் செங்குன்றுகள் அமைத்தனர் என்றும் அவற்றின் மேல் பாதுகாப்பாக நின்று யானைப் போரைக் கண்டு இன்புற்றனர் என்றும் மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது. இக்கூற்று வீரர்களின் வாழ்வினைப் புலப் படுத்துகின்றன. பண்டைத் தமிழரின் தூய வீரத்தை மேலோட்டமாகப் பார்த்தால் உடல் வலிமையால் போர்புரிந்தது போல நினைக்க வாய்ப்பு உண்டாகும். ஆனால் உண்மையில் அவ்வாறில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

வீரமும் மானமும்

சங்ககாலத்துத் தலைவனும் தலைவியும் இயற்கையின் கூட்டுதலால் ஒருவரை ஒருவர் கண்டு கணவனும் மனைவியுமாக இணைந்து இல்லறம் பேணினர். பெற்றோர் முனைந்து முடிக்கும் திருமணமும் உறுதியாக இருந்திக்க வேண்டும். எத்தகைய திருமணமாக இருந்தாலும் மகளிர் வீரமிக்க ஆடவரை மணக்கவே விரும்பினர்.

கொல்லேறு சாட இருந்தார்க்கு எம் பல்லிருங்
கூந்தல் அணை கொடுப்பேம்யாம் [2]

என அறிய முடிகிறது.

தோழி தலைவியிடம் என் மகனைக் கொல்லும் இயல்புடைய காளையை அடக்குபவருக்குக் கொடுப்போம் என்று நம் உறவினர் எனக் கூறியவள் வீரம் செறிந்த ஆடவரை மணக்கவே அக்கால மகளிர் பெரிதும் விரும்பினர் என்பது புலனாகிறது.

கலித்தொகையின் முல்லைக் கலிப்பாடல்கள் அனைத்தும் மகளிர் வீரர்களையே மணக்க முன் வந்தனர் என்பதை விவரிக்கின்றன. 'முல்லை நிலத்தில் ஏறு தழுவுதல்' ஒரு சிறந்த வீரவிளையாட்டு, தலைவி வளர்க்கும் ஏற்றினைத் தலைவன் அடக்கிய பிறகே அவனைத் திருணம் செய்து கொள்ள முடியும். ஏறுகளை ஒரு குறிப்பிட்ட பரந்த வெளியில் அவிழ்த்துவிடுவர் அவ்விடத்திற்குத் 'தொழு' என்று பெயர், அவிழ்த்து விடப்பட்ட ஏறுகள் பாய்ந்துவரும், அவற்றில், தான் விரும்பிய தையலின் காளையினை அடக்கித் தன் வீரத்துக்குப் பரிசாகத்தலைவியைப் பெற்று, மணந்து மகிழ்வான்[3]

என்றும் இதனைத் தெளிவுபடுத்துவதாக அமைகின்றது.

நீயே அமர்காணின் அமர்கடந்து அவர்
படை விலக்கி எதிர் நிற்றலின் [4]

என்னும் புறப்பாடல் வீரமற்றவரின் பெயரைக் கேட்க செவிக்குக் கசப்பாக இருக்கும் என்ற செய்தியைத் தருவதைக் காண முடிகின்றது.

பெருங்கோழி நாய்கன் மகளாகிய நக்கண்ணையார் என்ற சங்காலத்துப் பெண் பாடியுள்ள,

என்னை புற்கையுண்டும் பெருந்தோளன்னே
யாமே புறஞ்சிறை இருந்தும் பொன் அன்னம்மே [5]

என்றும் புறப்பாடலும்,

என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்
என்னைக்கு நாடு இஃது அன்மையானும்
ஆடு ஆடு என்ப ஒருசா ரோரே [6]

என்னும் புறப்பாடலும் மகளிர் வீரமிக்க ஆடவரையே பெரிதும் விரும்பினர் என்பதைக் காட்டுகின்றன.

வீரமகளிர்

வீரரை மணந்த மகளிர் தாம் வீரக் குடியினராகவே இருக்க விரும்பினர் என்பதும் தெரிகின்றது. அவ்விரு மகளிர் 'மூதின் மகளிர்' என்று சங்ககாலத்தில் அழைக்கப் பெற்றனர். தன் தலைவன், தந்தை, தனையன், பிள்ளைகள் அனைவருமே வீரர்கள் என்று சொல்லிக் கொள்வது அக்கால மகளிரின் பெருமிதப் பண்பாக இருந்ததையும் காணமுடிகின்றன.

பண்டைத் தமிழ் நாட்டில்ஆடவரேயன்றி,
மகளிரும் வீரத்தில் சிறந்து விளங்கினர் [7]

என்பார் சங்க மாந்தரின் போரியல் வாழ்க்கையை ஆராய்ந்த முனைவர் கி.பாண்டுரங்கன் இக்கூற்றின் மெய்ப்பிக்கும் வகையில்,

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே [8]

எனப் பாடடியுள்ளார் பொன்முடியார்.

யானையை வீழ்த்தும் வீரம்

படைவீரன் எதிர்வரும் களிறுகளை வீழ்த்துவதைப் பெரும் வலிமையாகக் கருதினான். பல யானைகளைக் களத்திடை வீழ்த்துகிறவன் பெருவீரனாக மதிக்கப் பெற்றான். அத்தகைய வீரனைப் பாடுவதே பின்னாளில் பரணி இலக்கியம் எனப் போற்றப் பெற்றது.

..... கல்லென
வேந்து ஊர் யானைக்கு அல்லது
ஏந்துவன் போலான் தன் இலங்கு இலைவேலே [9]

என்னும் பாடற்பகுதியும்

களிறு எறிந்து பட்டனர் [10]

என்னும் பாடல் அடியும்,

வேந்து ஊர்யானை ஏந்து முகத்ததுவே

வேந்து உடன்று எறிந்த வேலே [11]

என்னும் பாடற்பகுதியும் யானையை வீழ்த்துவதைப் பெரும் வீரமாகக் காட்டுவதைக் காண முடிகின்றது.

சங்க காலத்து நால்வகைப் படைகளில் யானைப் படையே வலிமை வாய்ந்ததாகக் கருதப் பெற்றது. எதிரிகளின் தாக்குதலுக்கு அஞ்சாமல் எதிர்த்து முன்னேறும் மதம் பிடித்த களிறுகளைப் போரில் ஈடுபடுத்தினர். எனவே அத்தகைய வலிமையான யானையை வீழ்த்துவது மிகப் பெரிய வீரமாகக் கருதப்பெற்றது. அய்யன் திருவள்ளுவரும்,

கைவேல் கறிற்றொடு போக்கி வருபவன்

மெய்வேல் பறியா நகும் [12]

என்றும்,

கானமுயல் எய்த அம்பினில் யானை

பிழைத்த வேல் ஏந்தல் இனிது [13]

என்றும் கூறியிருப்பது ஈண்டு சிந்தித்தற்கு உரியதாகிறது. வலிமை கருதி சங்ககால வேந்தர்கள் தாங்கள் செல்லப் பட்டத்து யானையை வைத்திருந்தனர். எனவே யானையை வீழ்த்துவதே பெருவீரம். அதனால்தான் பொன்முடியார் நால்வகைப் படைகளையும் வெல்வது கடமை என்றாலும், யானைப் படையை வெற்றி கண்டு விட்டால், ஏனையவற்றை வெல்வது எளிது என்னும் பொருளில்

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே [14]

எனக் கூறியுள்ளார்.

வீரமும் வலிமையும்

சங்ககால மாந்தர் வீரமும் வலிமையும் ஒருசேர அமைந்தவர்களாக விளங்கினர். கரிகால் பெருவளத்தான் தன் தோள் வலிமையால் எறிந்த வேல் சேரமான்

பெருஞ்சேரலாதனின் மார்பைப் பிளந்து முதுகுபக்கம் ஊடுருவியது என்ற செய்தி எண்ணிப் பார்க்கத்தக்கது.

அவ்வையார் அதியமானின் வலிமையினைப் பற்றிப்பாடும்போது,

களம்புகல் ஒம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து
எம்முளும் உளன் ஒரு பொருநன் வைகல் [15]

என்று அதியனனின் வலிமையினைச் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வாறு சங்கப் பாடல்களில் பல இடங்களில் வீரத்துடனே வலிமையும் பேசப்படும் பாங்கினைக் காண முடிகின்றது.

போர்

உலக சமுதாயங்கள் அனைத்திலும் போரே தலைமையும் முதன்மையும் எய்தி இருந்தது. தொல்காப்பியர் காலச் சமுதாயம் அதற்கு விலக்கன்று. போர்வயிற் பிரிவும் மறக் காதலைத் தடுப்பது போல, இலக்கியச் சான்றோ இலக்கணக் குறிப்போ ஒன்று கூட இல்லாமை உணரத்தக்கது. தொல்காப்பியப் புறத்திணை, அகத்திணையினும் தலைமை உடையது. அகமா புறமா எனில், புறமே முதல் என்பது அற்றை நாட் கருத்து[16] எனப் போர்த் திணையாகிய புறத்திணையைப் பற்றிக் கருத்துரைக்கின்றார் க.ப.அறவாணன். சங்க காலத்தில் போர்ப்பண்பு மிக்கியிருந்ததைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. போரிடுவதற்கென்றே மறவர் குடிகள் இருந்தன. போரைத் தொழிலாகக் கொண்ட மறவர்கள் மட்டுமே போரில் ஈடுபட்டனர் மற்றத் தொழில்களில் இம் மறவர்கள் ஈடுபடவில்லை[17] என்பார் வி.ஏ.சுமித். சங்க காலத்தில் எண்ணற்ற போர்கள் நடைபெற்றுள்ளன. போர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருந்தது என்பர் வி.ஆர்இராமச்சந்திர தீட்சிதர்.[18] தீட்சதரின் கருத்தை முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. போரினால் நாடுகள் அழிந்ததையும், மக்கள் துன்பமுற்றதையும் புலவர்கள் பாடியுள்ளனர்.[19]

போரில் வீரர் நிலை

போர் வீரர் எரிகோலுக்கஞ்சாத அரவு போன்றவராக விளங்கினர். இவ்வீரர்களின்

தறுகண்மையும், மறமும் புலவர்களால் போற்றியுரைக்கப்பட்டுள்ளன. இவர் முன் வைத்த அடியினைப் பெயர்த்துப் பின் வாங்காத மறப்பண்புடையவர்[20] போரில் புண்பட்டு வீழ்ந்த பொழுதும், அப்புண்ணினை ஆற்றிக் கொண்டு உயிர்வாழ வேண்டும் என எண்ணாதவராய்ப் போரிலேயே புகழெய்த விரும்புவர். இவர் முருக்க மரத்தை இலக்காக நிறுத்தி[21] அதன் மேல் வேலெறிந்து பழகுவர்.[22] ஒள்ளிய பொறிகள் பொறித்துள்ள வீரகண்டையணிந்த கால்களையுடையவர்.[23] படம் என்னும் மேலாடையை அணிந்திருப்பர்.[24] வேந்தன் போரில் பகைவரால் துன்புற்றபோது, உடன் கொடியுயர்த்திப் படைத் தலைமையேற்று, நிறையடங்காது வரும் பகைவன் பெருந்தானையைத் தடுத்து நிறுத்தும் மறவனைப் புறநானூறு காட்டுகின்றது. போர் மறவரின் வீரத்தையும்[25] அவர்தம் போர்செயல்களையும் பின்வருமாறு கூறலாம்.

போர் மறவரின் வீரமும் செயலும்

களிற்று மறவர் களிற்றின் பிடரியில் அமர்ந்து, காலைப்பிடரிக் கயிற்றின் இடையில் செலுத்தித் தம் குறிப்பினை உணர்த்திக் களிற்றினைச் செலுத்துவர். குதிரைவீரர் தம் கால்களால் சேணத்தினை ஆட்டித் தம் குறிப்பினை உணர்த்திக் குதிரையினை இயக்குவர். பகைவரைத் தம் வேலால் கெடுப்பர். தோள் வலிமை பெறுவதற்காகக் கல்லொடு பொருது எஃகைப் போன்ற உறுதி வாய்ந்த தோள்களைப் பெற்றிருப்பர். வில்லேந்திப் பொருது வருத்துவர் என்பதனை,

களிறுகடை இயதாள்
மாவுடற்றிய வடிம்பு
சமைந்ததைந்த வேல்
கல்லலைத்த தோள்
வில்லலைத்த நல்வலத்து [26]

எனப் பதிற்றுப்பத்து குறிப்பிடும்.

வில்லை மார்பளவும் வளைத்தலால், அதன் நாண் உராய்தலால் விளக்கமுற்ற நீண்ட பெரிய கையினையும், திரண்ட வலிமைமிக்க தோளினையும் உடையவர் வீரர்.

இவர் விண்மீன்போல் விளங்குகின்ற மணிகள் வைத்துத் தைக்கப்பெற்ற பக்கரையும் அழகிய கவரி மயிராலாகிய தலையாட்டத்தையுமுடைய குதிரையில் பாய்ந்து செல்வர். காம்புடைய வேற்படையப் பற்றிப் பகைவர் மேல் எறிவர். பகைவர் எய்தும் துன்பத்தைக் கண்டு அதனையே மேன்மேலும் மிகுவிக்க விரும்பும் நீங்காத ஆண்மையினையும் நெஞ்சிலே நிலையாமை உணர்வினையும் உடையவர்.

படைமுகப்பில் நின்று தன் பக்கத்தினருக்கு வீரம் ஊட்டுகிறான் ஒருவன். அவன்மேல் பகைவர் வேலைச் செலுத்துகின்றனர். மடல்களையுடைய வலிய பனைபோன்ற அவனுடைய உடல் முழுவதும் வேல்கள் பாய அவன் வலியாமல் போரிடுகின்றான்.

மறவனொருவன் களத்திலே கொன்று குவித்த களிறுகள் வானத்து மீன்களிலும், கார்முகில் பொழியும் துளிகளினும் மிகுதி.[27] இக்கூற்று உண்மையில் மிகையான கற்பனையே. பல யானைகளைக் கொன்ற பெருவீரன் என்பதே உண்மை.

வீரனொருவன் வெறிகொண்டு கைவேலை ஆட்டிய படி பலரைக் கொன்று குவித்தான். கடலைப் பிளந்து கொண்டு செல்லும் படகுபோலப் பகைவரின் படையணிகளைப் பிளந்து கொண்டு சென்று, அப்பகைவரின் களிறுகளைக் கொன்றான்.[28]

நேற்று நடந்த போரில் தன் தமையனைக் கொன்றவனை, அவன் தன் தம்பியொடு சேர்த்துக் கொல்வதற்கு மறவனொருவன் முனைகிறான். அவன் போருக்கு வருவதைக் கேள்வியுற்ற பாசறையிலுள்ளோர் நடுங்குகின்றனர்.

புல்லும் நீரும் இன்றி, உப்பு வாணிகர் கைவிட்டுச் சென்ற, முடம்பட்ட எருமை தன் அருகே கிடைத்த அனைத்தையும் தீன்று தீர்ப்பதுபோல, மறவனொருவன் அசையாது நின்று தன்னை எதிர்த்து வரும் பகைவர் அனைவரையும் தீர்த்துக் கட்டுகிறான்.

மனத் தெளிவுபெற்ற சான்றோரின் முகத்தில் ஒளிதோன்றும் என்பது நம்பிக்கை. மன ஒருமைப்பாட்டோடு உள்ளியது முடிக்கும் உரனுடைய வேந்தரும், மறவரும் முகத்தில் ஒளி பெற்றிருந்ததாக அறிய முடிகின்றது. **சேரமான் கருவூரேறிய**

ஒள்விட்கோப் பெருஞ் சேரலிரும் பொறையைக் கண்ட ஞான்று நின் உடம்பு பெறுவாயாகென அவனைச் சென்று கண்டு தம்முடம்பு பெற்று நரிவெரூஉத் தலையார் பாடியது[29] என்றும் குறிப்பு புறநானூற்றுப் பாடலுக்குத் தரப்பெற்றுள்ளமை கருதற்குரியது. **ஒளியாவது அரசர்பாலுள்ள தெய்வத்தன்மை** என உரைப்பர் உ.வே.சாமிநாதையர். வேந்தர் பாலுள்ள இவ்வொளியினை[30]

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப்படும்[31]

என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. உலகைக் காக்கும் வேந்தரின் ஒளித் தன்மையினைப் பரிமேலழகரும் குறிப்பர்.[32] வேந்தரிடம் காணப்படும் இவ்வொளித் தன்மை மறவரிடமும் இருப்பதை அறிய முடிகின்றது. முகத்தில் தோன்றும் ஒளியையுடைய மறவனொருவன் போர் ஆற்றுவதற்காகப் பாசறையில் வந்து தங்கினான். நல்ல பாம்பு வாழும் புற்றைப் போலவும், கொல்லேறு திரிகின்ற மன்றம் போலவும் வலிமையுடைய பகைவரும், இம்மறவனின் வருகையறிந்து நடுங்குவதாகப் புறநானூறு[33] புகல்கின்றது.

போரில் ஈடுபட்டுள்ள வீரனொருவன் தான் பகைவரை எதிர்த்துச் செல்லும் முறை வரும்வரையும் காத்திராது வீரம் தோன்ற முன்னேறிச் சென்று, தனக்கு முன்னே வரும் பெரும்படையை எதிர்க்கின்றான்.

தன் நண்பனொருவன் பகைவரால் சூழப்பட்டிருப்பதை அறிந்த வீரனொருவன், நண்பனைக் காக்கும் பொருட்டு முன்னேறிச் செல்கின்றான். சங்கிலியால் பூட்டப்பெற்ற களிற்றின் கால்களைப் போல் இறந்த வீரர்களின் குடல்கள் முன்னேறும் வீரனின் கால்களைச் சுற்றிக் கொள்கின்றன. இதைப் பற்றியெல்லாம் கவலையுறாது கன்றை நோக்கி ஓடும் பசுவைப் போல தன் நண்பனைக் காக்கச் செல்லும் மறவரின் இயல்பை,

வடிமா ணெஃகங் கடிமுகத்தேந்தி
ஓம்புமி னோம்புமி னிவனென வோம்பாது
.....
முன்சமத் தெதிர்ந்ததன் றோழற்கு வருமே [34]

எனப் புறநானூறு புகழ்கிறது.

போரில் வேந்தன் நிலை

வேந்தர் போரை முன்னின்று நடத்துவர். இக்காரணம் பற்றியே வேந்தர் **சான்றோர் மெய்ம்மறை** எனப் புகழ்ப்பட்டனர். பதிற்றுப்பத்தில் ஒரு பாட்டிற்குத் தலைப்பே சான்றோர் மெய்ம்மறை என்பதாகும். ஈண்டுச்சான்றோரென்பது போரில் அமைதியுடைய வீரரை, மெய்ம்மறை மெய்புகு கருவி; மெய்ம்மறையென்றது அச்சான்றோர்க்கு மெய்புகு கருவி போலப் போரிற் புக்கால் வலியாய் முன்னிற்றலின், இச்சிறப்பு நோக்கி இதற்கு (இப்பாட்டிற்கு) **சான்றோர் மெய்ம்மறை** என்ற பெயராயிற்று எனப் பதிற்றுப்பத்தின் பழைய உரைகாரர்[35] குறிப்பிடுவது கருத்தத்தக்கது. வேந்தரைப் **படையேருழவர்** எனப் பதிற்றுப்பத்தும் **வில்லேருழவர்** எனத் திருக்குறளும்[36] குறிக்கின்றன. மலையின் கண்ணே உள்ள முறையிலிருந்து வெளிவரும் புலியைப் போல் வேந்தன் போருக்கு எழுந்ததை,

அணங்குடை நெடுங்கோட்டளைக முனைஇ

.....

தான் வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாங்கு[37]

எனப் புறநானூறு புகலும். போரின்போது வேந்தர் புலித்தோலாற் செய்யப்பட்ட கவசத்தினை அணிந்து களிற்றின் மீது ஊர்ந்து வருவர்.[38] களிற்றின் மீதிருந்தே போரிடுவர் வேந்தர் போருடற்றுவதைக் கடவுளர் போரிட்ட செயலோடு ஒப்புமைப்படுத்திப் புலவர் உரைத்துள்ளனர். முருகன் திருமால், முதலிய கடவுளரோடும் அக்குரன் முதலிய புராண நாயக்கர்களுடனும் வேந்தரின் போர்ச் செயல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. திருமால் போல் காக்கும் தொழிலை மேற்கொண்டதனால், அப்பொருளிலும் திருமாலுடன் ஒப்புமைப்படுத்திப் போற்றப்பட்டனர்.[39] வேந்தரின் வீரம் கூற்றுவனுக்கு உவமையாக உரைக்கப்பட்டுள்ளது.

கூற்று வெகுண்டுவரினு மாற்றுமாற் றலையே [40]

பகையெனிற் கூற்றம் வரினும் தொலையான் [41]

என வரும் இலக்கிய அடிகள் வேந்தரின் மறப்பண்பை உணர்த்துகின்றன. போர் வேட்கை கொண்ட வேந்தரின் சீற்றத்தை எண் வகையாயக் படுத்துக் கூறுவர். க.கைலாசபதி [42] வேந்தர் போரிடும் பொழுது, ஆரவாரம் செய்யாது, போரிடும் செயலிலேயே கருத்தூன்றி, எதிர்த்து வரும் மறவரை வெற்றி கொள்ளும் ஆற்றலுடையவர். இப்பண்புடன் போருடற்றிப் பகைவரை வெற்றி கொண்ட பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் போர்த்திறத்தை,

உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
.....
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினுமிலனே [43]

என இடைக்குன்றூர் கிழார் கூறுவர்.

வேந்தரின் போர்ச்செயலை மறவனொருவன் வியந்து போற்றுகின்றான். உண்டாட்டுக் காலத்தில் கலங்கற் கள்ளை எமக்குத் தந்து வெறி இல்லாத கள்ளைத் தான் உண்பான். போரில் மட்டும் எங்களை முன் விடாமல் தானே முன்சென்று போரிடுகின்றான். எனவே இவன் எங்கள்பால் அன்பில்லாதவன் என மறவன் உரைப்பதை,

எமக்கே கலங்க றருமே தானே
தேற ஒண்ணு மன்னே நன்றும்
.....
வாய்மடித் தூரறிநீ முந்தென்னானே [44]

எனப் புலவர் ஆலியார் குறிப்பது, பழந்தமிழ் வேந்தரின் மறப்பண்பையும், மறவரைப் போற்றும் அருட்பண்பையும் ஒருங்கே விளக்க வல்லதாகும்.

இருபெரு வேந்தரின் போர் வீரர்கள் போர்க்களத்தில் போருடற்றி மடிந்துவிடின், உயிரும் வாழும் இரு வேந்தரும் போர்க்களம் புகுந்து ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டு உயிர் துறப்பர். இச்செயலைத் தொல்காப்பியனார்.

..... வாள் வாய்த்து

இருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமும்

ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும் [45]

எனக் குறிப்பிடுவர். சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப் புறத்துப் பொருது வீழந்தனர். இவரை

அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர் [46]

எனப் புறநானூறு குறிப்பிடும். புறப்புண் பட்ட தமிழ் வேந்தர், வடக்கிருந்து உயிர்துறந்தனர். போரில் வேந்தர்க்குத் துணையாகக் குறுநில மன்னரும், குறுநிலத் தலைவரும் சென்று வெற்றி தேடித் தருவதுண்டு இவரை **உலந்துழி உவக்கும் நெஞ்சறிதுணைவர்**[47] எனப் புறநானூறு புகலும். வெற்றி பெற்ற வேந்தர், வென்ற நாட்டிலிருந்து சிறந்த பொருட்களைக் கவர்ந்து வருதல் இயல்பு. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேரரின் முகவரியை வென்று, அங்கிருந்த கடவுட் படிமத்தைக் கவர்ந்து வந்ததாக[48] எருக்காட்டூர் தாயங்கண்ணனார் கூறுவர்.

போரின் உச்ச நிலை

மூவேந்தர்களுக்கிடையே நடைபெற்ற போர்களில் தலையாலங்கானம், வெண்ணிப் பறந்தலை, தகடூர், கழுமலம், திருப்போர்ப்புறம் ஆகிய இடங்களில் நடந்த போர்கள் குறிப்பிடத்தக்கன. புலவர் பெருங்குன்றூர் கிழார் போரின் கடுமையைச் சிறக்கக் காட்டுகின்றனர். படைகளின் பகற்காலச் செயலினைக் குறிக்காமல், அவற்றுள் இரவுக்காலச் செயலினைக் குறித்து, அதன் வாயிலாகப் பகற்காலப் போரின் கடுமையை உய்த்துணர வைக்கின்றார்.

ஊர்ப்புறத்தே பகைவேந்தன் முற்றுகையிட்டுள்ளான்

அவனுடைய களிறுகள் பாசறை எல்லையினைப் பரந்து

இயங்குகின்றன. விரைந்து செல்லும்

..... குதிரைகள் வீர்களை

வீரவளை ஒலிக்கப் பாசறையில் சுழன்று திரிகின்றனர் [49]

பண்டைநாளில் இரவில் போர் நிகழ்தல் இல்லை. போர் நிகழாத இரவுப் பொழுதில் இருபடைகளும் போர்க்குறிப்புடன் நிற்கின்றன என்றார், பகலில் இவற்றின் நிலை என்ன? என்பதனைக் குறிப்பால் பெற வைக்கின்றார் புலவர். மூவேந்தரும் தலையானங்கானத்தில் போருடற்றிய நிலையினை,

தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானத்து [50]

எனக் குறிப்பர் குடபுலவியனார். தம்மவரென்றும் அயலவரென்றும் அறியாத அளவிற்குப் போர் மிகக்கடுமையாக நடைபெற்றதை,

தமர்பிற ரறியா வமர்மயங் [51]

எனப் புறநானூறு புகலும்.

பழந்தமிழ் வேந்தரிடையே நடைபெற்ற போர்கள் பல. அவற்றுள் சில குறிப்பிடத்தக்கன. சோழ நாட்டில் உள்ள திருப்போர்ப்புறம் எனும் இடத்தில் நடைபெற்ற போர், பழந்தமிழகத்தில் நடைபெற்ற போர்களிடையே குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்துள்ளது. இப்போரில் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும், சேரன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் பொருது மடிந்தனர். இப்போரில் பிழைத்தார் ஒருவருமிலர். இப்போரினை உடனிருந்து கண்ட பரணரும், கழாத்தலையாரும், இருபெரு வேந்தரின் அழிவுக்குகிரங்கிப் பாடியுள்ளனர். புலவர் இருவரும் இப்போரின் கடுமையினைப் பின்வருமாறு உரைப்பார்.

களம் புகுந்த களிறுகள் கணக்கிலாதன
அவை அத்தனையும் அம்பால் அடியுண்டு
அழிந்தன், வெற்றிப்புகழும், விரைந்த
செலவும் உடைய குதிரைகள் அனைத்தும்
..... பெருவளம் பெற்ற இவ்வேந்தருடைய
நாடுகள் இனி என்னாகும் [52]

தோற்ற வீரர் நிலை

தோல்வியுற்ற வீரர் தங்கள் வேல்களைக் களத்தில் போட்டுச் செல்வர். குடக்கோ

இளஞ்சேரலிரும் பொறையின் பகைவர் களத்தில் விட்டுச் சென்ற வேல்கள் கபிலர் பரிசாகப் பெற்ற ஊரினும் (நன்றா என்னும் குன்றேறி நின்று தம் கண்ணிற்கண்ட நாடனைத்தையும் பரிசாகப் பெற்றவர்) மிகுதியாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். பெருங்குன்றூர்கிழார்.[53] மேற்கடற் கண்ணே நடந்த போரில் தோற்றோடிய கொங்கர் வேல்களை விட்டுச் சென்றனர்.[54]

போரில் தோற்றுப் படைக்கலத்தோடு ஓடும் பகைவரை விட்டு விடுதல் இல்லை. ஏனெனில் அவர்கள் வலிமைபெற்று மீண்டும் தம்மை அழிக்க வரலாம். எனவே அவரூர் வரை அவர்களைத் தூரத்திச் சென்று, அவர்களின் மகளிர் நாண அங்கேயே அவர்களை அழித்து மீளுதல் வேந்தர் இயல்பு.

ஈண்டவர ரடுதலு மொல்லா னாண்டவர்
மாணிழை மகளிர் நாணினார் கழியத்
.... டெண்கிணை கறங்கச் சென்றாண்டட்டனனே [55]

எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் போர்ச் செயலை இடைக்குன்றூர்கிழார் குறித்துள்ளார்.

எரியூட்டுதல்

வெற்றி பெற்ற வேந்தர் தம் வெற்றிக்குப் பிறகு பகைவர் நாட்டைத் தீயிட்டுப் பாழாக்குவர். பகைவர் நாடுகளைத் தீயிட்டுக் கொளுத்திய செய்தியினை மிகுதியாகக் கூறுகிறது பதிற்றுப்பத்து[56] பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் காற்றென்னும்படிக் கடிதாகப் பறந்து சென்று, பகைவர் நாடு கெடும்படி நெருப்புப் பரப்பியதை,

காலென்ன கடிதுரா அய்
நாடுகெட வெரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி [57]

எனக் குறிக்கும் மதுரைக் காஞ்சி. நெடுஞ்செழியனைப் பகைத்தவர் நாடுகள் பாழாகும் நிலையினை மதுரைக்காஞ்சி[58] விரிவாகக் கூறுகிறது.

பாழாக்குதல்

போரில் தோல்வியுற்ற பகைவரின் அரண்களை அழித்து அவர் வாழு மிடங்களைக் கழுதை ஏரால் உழுது வெள்ளை வரகும் கொள்ளும் விதைக்கும் மரபினை,

வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெற்ளை வரகுங் கொள்ளும் வித்தும்[59]

எனக் குறிப்பர் ஔவையார். பகைவர் நாடுகள் பாழாக்கப்படுதலைப் பின்வருமாறு கூறலாம்.

பகைவர் படையால் பற்றப்பட்ட ஒரு பேரூரில் வாழ்வதற்கு அஞ்சிய மக்கள், மனக் கலக்கமுற்றுப் பிரிந்து போய் விடுகின்றனர். அதனால் அவர்கள் மனைகள் எல்லாம், மீர்க்கு முதலாம் கொடிகள் ஏறிப்படர்ந்து காணப்படும். இவ்வாறு பாழ்பட்ட மனை களையே கொண்ட அவ்வூர் மன்றத்தே மக்கள் காணப்பெறார். மரையார்கள் கூட்டமே மண்டிக்கிடக்கும். அவ்வூர் அம்பலத்தில் பகைவர் யானைகள், தம் உடற்றினவு போகப் பலகாலும் உராய்தலால் விட்டமும் தூணும் வீழ்ந்து பாழ்படும்[60] பகைவர் நாட்டு மக்கள் தம் நாடு அழிவுறுவது கண்டு, தம் நாட்டை விட்டு அகன்று போய்விடுவர். தம்மைப் புரப்பார் இன்மையின் ஆநிரைகளும் நாட்டை விட்டு அகன்றுபோய் விட்டன. உழுவார் இன்மையின் விளை நிலங்களும் பாழாயின[61] பெரிய தேர்கள் ஓடிய பகைவரின் பேரூர்த் தெருக்களை வெண்ணிற வாயையுடைய கழுதைகள் பூட்டிய ஏர்பல ஓட்டி உழுது பாழ் செய்வர். விளைந்து பயன் தரும் நன்செய் நிலங்களில் தம் குதிரைகளையும், தேர்களையும், நடத்திச் சென்று பாழ்செய்வர். தம்மால் முடிந்த மட்டும் எடுத்துக்கொண்டு, எஞ்சிய பொருள்களையும், விளை நிலங்களையும் அழித்து விடுவர். காவற்காடுகளை வெட்டி வீழ்த்துவர்.[62] கரிகாற் பெருவளத்தான் பகைவர் நாடுகளை எரியூட்டிப் பாழ்செய்த நிலையினை இருபத்தொன்பது அடிகளில் விளங்க

உரைக்கிறார் கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

கொள்ளை மாற்றுதல்

வெற்றி கொண்ட படை மறவர், தோற்ற பகைவர் நாட்டில் புகுந்து கொள்ளையிடுவர். இச்செயலைத் தடுத்து நிறுத்துவது வேந்தனின் முதல் கடமையாகின்றது. தம் வீரர்கள் கொள்ளையிடாமல் இருப்பதற்காகத் தோற்ற வேந்தனிடமிருந்து பெற்ற பொற்கலங்களை உருக்கி, பொற்கட்டிகளாகச் செய்து வீரரின் தகுதி அறிந்து பரிசளிக்கும் வேந்தனின் செயலை,

நாடடிப்படுத்தலிற் கொள்ளை மாற்று
அழல்வினை யமைந்த நிழல்விடு கட்டி
கட்டளை வலிப்ப நின்தானை யுதவி [63]

எனப் பதிற்றுப்பத்து கூறுகின்றது. ஆணமை தோன்றப் போரிட்ட வீரர்களுக்கு நல்ல மருத நிலத்து ஊர்களையே வழங்குதல் மரபு. பசிய பயிர்கள் விளையும் சீறூர்கள் வழங்கப்பட்டாலும் வீரர் அதனை ஏற்காது மருத நிலத்து ஊர்களையே விரும்பிப் பெறுவர்.

வெற்றி பெற்ற வேந்தன் நிலை

வெற்றி பெற்ற வேந்தன் தோற்ற வேந்தனின் முடிப் பொன்னை உருக்கித்தன் அடிகள் பொலிய வீரக்கழல் செய்து கொள்வது மரபு. இதனை,

முடிபுடினைந்த பசும் பொன்னின்
அடிபொலியக் கழறை இய[64]

எனப் புறநானூறு புகலும். வேந்தர் பகைவரின் முடிப்பொன்னால் ஆரம் செய்து கொள்ளுதலும் உண்டு. எழுவரது முடிப்பொன்னாற் செய்யப்பெற்ற ஆரமணிந்த திருமகள் விரும்பியறையும் பரந்த மார்பினையுடைய வேந்தரைப் பற்றிப் பதிற்றுப்பத்தும்[65] சிலம்பும்[66] செப்புகின்றன. ஆனால் தோல்வியுற்ற எழுவர் யார்? என்பதை இலக்கியங்கள் குறிப்படுவதில்லை.

பகைவரை வென்று அவர் முடிப்பொன்னால் ஆரமும், வீரண்டையும் பிறவும் செய்து கோடலும், காவல் மரத்தால் முரசு முதலியன செய்து கோடலும் கோடாலும், அவர் நாட்டிற் பெற்ற பெருவளத்தைப் பாணர் முதலிய இரவலர்க்கு வழங்கலும் பண்டை வேந்தர் மரபு[67]

என்பர் சு.துரைசாமிப்பிள்ளை.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் வெற்றிக்குக் காரணமான வீரர்க்கும், ஏனையோருக்கும் அவரவர் தகுதியறிந்து பரிசில் நல்கியதை மதுரைக்காஞ்சி[68] குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு வீரரின் சிறப்பினை எடுத்துச் சொல்லி, வருக, வருக என அழைத்துப் பரிசில் நல்கும் நெடுஞ்செழியனின் பண்புடைமை குறிப்பிடத்தக்கதாகும்.

முற்ற வளைந்த வில்லினின்றும் புறப்பட்டு விசை கொண்டு வரும் அம்பைத் தாக்கவல்ல அகன்ற மார்பினையை, குதிரைகளைக் காற்றெனக் வடிது செலுத்தவும், அவ்வாறு செல்லும் அவற்றை வேண்டும் போது வேண்டும் இடத்தே இழுத்து நிறுத்தவும் வல்ல பருத்த தோளினையும் உடைய வீரரே வருக

கல்லை இடித்து இயற்றிய இடங்களைக் கொண்ட பகைவர் தம் பேரெயில் மேல் நின்று ஆரமர் ஆற்றிய ஆற்றல் மறவர் வருக

செந்தீயெனச் சினந்து வரும் பகைவர் படை நடுவே, போர்ப்பறை முழங்கப் புகுந்து, அவர்தம் யானைப்படைகளை அழித்து, அரும்போர் ஆற்றிப் பெரும்புண் பெற்ற படைத்தலைவர் வருக

பகைவர் முற்றியிருக்க, அரணகத்தே ஆற்றல் அழித்து இருந்த நம் நண்பர்க்குத் துணை செய்தற்பொருட்டு நம்மால் ஏவப்பெற்று, பகைவர்தம் அம்பும் வேலும் அளவற்றன வந்து தைக்கப் பெற்றமையான், கவசமும் உடலும் ஒருங்கு அழிய, ஆரக்கால் தைக்கப்பெற்ற குடம்போலும் மார்பினராய மாவீரர் வருக

மாலைசூடிச் சந்தனம் பூசிப் போர்க்களம் புக்குப் பகைவர்தம் பெரிய யானைப் படையினைக் கைப்பற்றி மீண்ட பேராண்மை மிக்க பெரியோர் வருக

மற்றும் உள்ள மாவீரர் அனைவரும் வருக என அழைத்து மறவர்களுக்குப் பரிசு நல்கிய பின்னர்,

யாவரும் வருக ஏனோருந் தம்மென
வரையா வாயிற் செறாஅ திருந்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப புலவரோடு உயிரியர் வருக.[69]

என அழைத்து, வந்தார்க்கும், வந்தார்தம் சுற்றத்தார்க்கும் களிறும், தேரும் கொடுத்த நெடுஞ்செழியனின் கைவண்மை கருதற்குரியது. மறவரின் மாண்புரைத்து வரிசையறிந்து பரிசில் நல்கிய பாண்டியனின் மதிநலமே, மறவர் பலரைத் துணையாகப் பெற்றுப் பெரும்போர் பல உடற்றிப் பெரு வேந்தனாவதற்கு அடிப்படையாய் அமைந்தது எனலாம்.

நடுகல்

போர்க்களத்தில் விழுப்புண்பட்டு, வீர மரணமெய்திய வீரனின் நினைவாக அமைக்கப்பட்டதே நடுகல்லாகும். பின்னாளில் இது வழிபடும் தெய்வமாக உருப் பெற்றது. நடுகல்லில் வீரரின் பெயரும், பெருமையும், பெற்ற சிறப்புகளும் பொறிக்கப்பட்டன. நடுகல் அமையும் முறையே,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று இருமூன்று மரபிற் கல்லொடு.[70]

எனத் தொல்காப்பியனார் குறிப்பிடுகிறார்.

போர்க்களத்தில் பொருது வீழ்ந்தார்க்கு ஏற்ற கல்லை அளவும், அமைவும் நோக்கித் தேர்ந்தெடுப்பர். பின்னர் அக்கல்லில் வீரனின் உருவம் செதுக்குவர். தேர்ந்த கல்லைக் கொண்டு வருவர். கொண்டு வந்த கல்லை விழாவொடு நீராட்டுவர். நீராட்டிய கல்லை ஏற்ற இடத்தில் நடுவர். நடப்பட்ட கல்லுக்குப் பலியிட்டு விழா எடுத்து வீரனின் வெற்றிச் செயல்களைக் கல்லில் பொறிப்பர். பலி கொடுத்து, விழா எடுத்துக் கடவுள் தன்மை ஏற்றிய கல்லை வழிபடுவர்.

மேற்குறிப்பிட்ட ஆறுநிலைகளில் நடுகற்கள் அமைக்கப்பெற்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் நடுகற்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

நடுகல்லின் அருகில் ஈட்டிகளும், கேடயங்களும் அரண்போல ஊன்றப்பட்டிருக்கும்.

நடுகல்லில், மாய்ந்த வீரனின் பெயரும், பெருமையும் எழுதி, மராமரத்து அடியிலே நட்டுத் தெய்வமாக வழிபடுவர்.

போர்க்களத்தில்பொருதுபட்டு வீழ்ந்த வீரர்களின் பெயரும், பீடும் எழுதி மயிற்றோகை பூட்டி வழிபடுவர். இதனை,

நடுகற்களுக்கு மயிற்றோகை சூட்டி, துடியை அடித்து நெல்லால் ஆக்கிய கள்ளோடு செம்மறியாட்டுக் குட்டியைப் பலிகொடுப்பர்.

நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
.....
வேலுான்று பலகை.[71]
பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
.....
தனிநட் டனரே கல்லும்.[72]

என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இக்காலத்தில் வழக்கத்திலிருக்கும் மதுரை வீரன், குதிரை வீரன், முனியன், நொண்டி, இருளன், கருப்பன் முதலிய சிறு தெய்வங்கள் நடுகல்லின் உருமாறிய அல்லது வளர்ச்சி நிலைகள் எனக் கூறலாம் . ஊர் மன்றங்களில் உள்ள கற்களில் கடவுள் உரைவதாக நம்பினர். அக்கற்களுக்கு வழிபாடுகளும் நடைபெற்றன.

அரசியல்

பண்டைத் தமிழர்களின் சமுக வாழ்வினையும், சமூகஞ் சார்ந்த அரசியல் வாழ்வினையும் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இன்றைய நாகரிக

வளர்ச்சிக்கும், அரசியல் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பண்டைத்தமிழர்களின் அறநெறி சார்ந்த வாழ்க்கை முறையே காரணமாக அமைந்திருப்பதனை இலக்கியங்களின் வழி உணரமுடிகின்றது. பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய தமிழர்கள் தங்களுக்குள் 'அரசு' என்னும் அமைப்பினை ஏற்படுத்தி, அதன் தலைமையின்கீழ் வளமான வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என்பதைனைச் சங்க இலக்கியங்கள் புலப் படுத்துகின்றன. மன்னனுக்காக மக்களும், மக்களுக்காக மன்னனும் வாழ்ந்த நிலையினையும் பாடல்களின்வழி அறிய முடிகின்றது. சங்காலத்தில் ஏற்படுத்தப் பட்டிருந்த அரசியல் நிர்வாக முறைகள் குறித்தும், நிர்வாகச் செயல்பாடுகளுக்காக வேந்தர்கள் ஏற்படுத்திய குழுக்கள், அமைப்புகள் குறித்தும், இப்பகுதியில் காணலாம்.

அரசியலமைப்பு

அரசியலமைப்பு என்பது அரசாங்கத்தை நிறுவி அதைக் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களின் தொகுப்பாக அமைந்திருக்கின்றது. **எவ்வாறு மனித உடல் நலமாக இயங்குவதற்கு அதன் உறுப்புகள் முக்கியமோ, அதேபோல் அரசும் வளமாக இயங்குவதற்கு அதன் உறுப்புகளும், அவற்றின் அலுவல்களும் ஒழுங்காக அமைதல் வேண்டும். இந்த ஒழுங்கை வகுக்கும் அமைப்பே அரசலமைப்பு**[73] [Constitutuion] என்று கூறுவார் வள்ளுவன் கிளாரென்ஸ்.

அரசியலமைப்பின் அங்கங்கள்

அரசியல் அமைப்பானது பல்வேறு அங்கங்களைக் கொண்டு இயங்குகின்றது. அரசாங்கம் அல்லது அரசியலமைப்பு என்பதே அரசின் ஒரு அங்கம் என்று விளக்குவர். இதனை "அரசாங்கம் என்பது அரசின் ஒரு கருவி. அஃதின்று அரசு உயிர் வாழ இயலாது. அதன் வாயிலாக அரசின் வகுப்பாற்றல் வெளிபட்டுச் செயல் படுகின்றது. அரசாங்கம் இறைமை, அதிகாரங்களை செலுத்தும் உரிமை பெற்றுள்ள ஒரு நிறுவனம் பொதுவாகப் பேச்சுவழக்கில் நாம் ஒரு நாட்டின் அமைச்சரவையை அந்நாட்டு அரசாங்கம் என்று அழைக்கின்றோம். அரசாங்கம் என்பது அதன் விரிந்த பொருளில் பார்க்கும்போது, அமைச்சர் குழுவிலும் பெரியது.

அதன்படி நாட்டின் உள்ளும் புறமும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவது அரசாங்கத்தின் கடமையாகும். ஆகவே, அதற்கு முதலில் படைத்துறை ஆற்றல் தேவை. இரண்டாவது சட்ட ஆக்க அதிகாரம் அல்லது சட்டங்களை இயற்றும் ஆற்றல் வேண்டும். மூன்றாவாது அரசினைக் காத்து, அரசின் சார்பாகத் தாம் இயற்றும் சட்டங்களை நிறை வேற்றுவதற்குத் தேவையான பொருளைப் பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய ஆற்றல் வேண்டும். சுருங்கக் கூறினால் அரசாங்கத்தின் மூன்று துணைகளென நாம் செல்லும் சட்டமியற்றும் அதிகாரம், நிர்வாகத்துறை அதிகாரம், நீதித்துறை அதிகாரம் ஆகிய இம் மூன்றும் அரசாங்கத்திடம் இருக்க வேண்டும் எனலாம். இத்தகைய அரசாங்கம் இல்லையெனில் அரசு நிலைபெற இயலாது[74] என்று கூறுவார் மோ.வள்ளுவன் கிளாரன்ஸ். இம்மூன்று கூறுகளும் சங்க இலக்கியத்தில் காணப்பெறும் திறம் அறியத்தக்கதாகும்.

அரச நிருவாகம்

அரச நிருவாகம் என்பது ஒரு தலைமையின் கீழ் தங்கிய நிருவாகமாக விளங்கினாலும், அரசின் செயல்பாடுகளையும், சட்டதிட்டங்களையும் செயல் படுத்துவதற்குப் பல்வேறு அமைப்புகளும் குழுக்களும் இன்றியமையாத கூறுகளாக அமைந்துள்ளன.

இதனைச் செயல்படுத்துவதற்குத் தலைமைப் பண்புகள் நிறைந்த ஒரு தலைமை தேவைப்பட்டது. அத்தகு தலைமைப் பண்புகள் நிறைந்த தனிமனித அமைப்பே அரசர் என்பதாகும்.

> **தலைமை என்பது செல்வாக்கு மற்றும் மக்கள் குழு பற்றிய ஒரு செயல் முறைதான். தலைவரின் கருத்துகள், கொள்கைகள், நடத்தை முறை, ஆளுமைப்பண்புகள், நடை, உடை, பாவனை, பேச்சு, தோற்றம் அனைத்தும் மக்களிடம் குறிப்பிடத்தக்க செல்வாக்குச் செலுத்தி, அவரின்பால் ஒரு விருப்பத்தை ஏற்படுத்தி விசுவாசத்தை உறுதிப் படுத்துகின்றனது.**[75]

பண்புகள் குறித்துக் கூறுவார் மா.இராசமாணிக்கனார். இத்தகு தலைமைப் பண்புகள் நிறைந்த தலைவர்களே பெருஞ்சிறப்புப் பெற்றவர்களாக விளங்கினர் என்று அறிய முடிகின்றது.

அரசவை

சங்ககால அரச நிருவாகம் அரசனை மையமிட்டதாக அமைந்திருந்தது. அரசவை நிருவாகத்தின் தலைமைச் செயலகமாக விளங்கியது. அது இருக்கை, ஓலக்கம், வேந்தவை என்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. அரியணை, செங்கோல், வெண்கொற்றக் குடை ஆகியவை அரசனை அரசவையில் சிறப்பித்தன; மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டின. ஆடம்பர அணிகளுடன் அரசனும் அரசியும் தோன்றினர் என்று தெரிகின்றது.

அரசவையில் அரசனோடு அரசியும் உடன் இருந்திருக்க வேண்டும் என்னும் செய்தியினை **அரசனுடன் கோப்பெருந்தேவியும் உடனிருப்பது வழக்கமாக இருந்திருக்கலாம். மலைவளத்தைக் காணச்சென்ற சேரன் செங்குட்டுவனோடு அவன் பட்டத்தரசியும் உடனிருந்தனள்; அமைச்சரும் தானைத்தலைவரும்உடனிருந்தனர்; இளங்கோவடிகளும் சாத்தனாரும் உடனிருந்தனர்; கண்ணகியைக் கோயில் கட்டி வழிபடவும் என்று பட்டத்தரசி தான் சொன்னாள் என்பன போன்ற செய்திகளை நோக்கும் போது அத்தாணி மண்டபத்திலும் அரசியும் உடனிருந்திருக்கலாம் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்**[76] என்ற கூறுகின்றார். மா.இராசமாணிக்கனார்.

அரசவையில் பங்கேற்போர்

அரச அவையில் அரச குடும்பத்தாரும் உயர் அதிகாரிகளும் அறிஞர் புலவர் பெருமக்களும் தூதுவர்களும் பங்கேற்றனர். இவர்களுக்குத் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. புலவன், பெருங்கணி, அமைச்சர்கள், தானைத்தலைவர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அமருவர்.

அவையில் பங்கேற்கும் பெருமக்கள் வேந்தனுக்கு ஆலோசனைகள் கூறுவதுடன் மன்னன் இடும் கட்டளைகளை எதிர் நோக்கிக் காத்திருப்பர். மன்னனின்

கட்டளையே சட்டமாக மதிக்கப்பட்டது; என்றாலும், அரசவை சட்டமியற்றும் அரங்கமாக அமையவில்லை. வழக்காறுகளும் மரபுகளும் சட்டமாக விளங்கின. மன்னன் சட்டத்தின் காவலாக விளங்கினான். எனவே, அரசவை நிருவாகத்தலைமையமாக விளங்கியது. அரசவை இருக்கும் இடம் தலைநகரமாகக் கருதப்பட்டது. பொதுமக்களின் விண்ணப்பங்கள் இதில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதில் முறை வைத்துக் காரியங்கள் செய்திருக்க வேண்டும். புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் சென்று தங்கி நிருவாக ஒழுங்கு ஏற்படுத்தினர்.[77] என்று கூறுகின்றார் வே.தி.செல்வம்.

பல சிற்றரசுகளும் குறுநில அரசுகளும் நாட்டில் இருந்து இயங்கி வந்தாலும் அவ்வரசுகள் மாமன்னனது கட்டுப்பாட்டுக் கீழே இயங்கிவந்தன. மாமன்னது கட்டுப் பாட்டுக்குள் இருந்த அரசே நடுவண் அரசாக விளங்கியது. மன்னர்களே போர்த்தலைவர்களாகவும் நிர்வாகத் தலைவர்களாகவும், நீதித்துறைத் தலைவர்களாகவும் விளங்கியுள்ளனர். எனவே, அரசாங்கத்தை நிர்வகிக்கும் பொறுப்பு மன்னனிடமே இருந்தது என்பது புலனாகின்றது.

அரசனது பணி

அரசவையில் இருந்துகொண்டு ஆளும் மன்னர்கள் செய்ய வேண்டியிருந்த முக்கியப் பணிகளாக, **மிகப்பெரிய நிலப்பரப்பினைக் கொண்ட நாட்டினை அரசாளும் வேந்தர்கள், தாம் நிருவாகம் செய்தற்குத் தகுந்த முறையில் நாட்டைப் பல பிரிவுகளாகப் பகுத்து ஆட்சி செய்துள்ளனர். நிருவகிக்கும் பொறுப்பினைப் பெற்றுள்ள அரசன், அயல் நாட்டு உறவுகளை நிர்ணயித்தல், போர் நடத்துதல், நாட்டின் பாதுகாப்புக்கு வேண்டிய படைகளை வைத்திருத்தல், அரசாங்கத்தைப் பல துறைகளாகப் பிரித்தமைத்தல், ஒவ்வொரு துறையின் கொள்கைகளையும் வகுத்தல், அதை நிறைவேற்றுதல், சமூக பொருளாதார நலத்தைப் பெருக்குதல், சட்டங்களை எல்லாம் அமல் செய்தல், அரசாங்கம் செய்ய வேண்டும் என்று சட்டம் கூறும் செயல்களை எல்லாம் செய்தல்**[78] என்பனவற்றை கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

நாட்டுப்பிரிவுகள்

பேரரசுகளின் வல்லாண்மையின் கீழ் அடங்கிய நாடுகள் பரப்பளவிலும், மக்கள்

தொகையிலும் பெரிய, அகன்ற இடத்தைக் கொண்டதாக அமைந்திருந்தது. அதனால் மன்னனின் நேரடி மேற்பார்வையின் கீழ் அவை செயல்படுவதில் காலதாமதமும், இடைவெளியும் நிலவியிருத்தல் வேண்டும். அதனால், நாட்டு நிருவாகம் சீராகவும், தன் கட்டுப்பாட்டுக்குள்ளும் நடைபெறும் பொருட்டு, அரசன் தனது ஆட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளையும் சிறுசிறு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு நிருவாகம் செய்துள்ளான் என்று தெரிகின்றது.

> **நாடு முழுவதையும் மண்டலம் என்றனர். மண்டலங்கள் பரப்பால் பெரிதாகவும், சிறிதாகவும் இருந்தன. அவை நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. நாடுகளைக் கோட்டங்களாகப் பிரித்தனர். கோட்டம் என்பது ஓர் உட்பிரிவாக விளங்கியது. கோட்டங்கள் கூற்றங்களாகப் பிரிக்கப்பட்டன. நாட்பின் சிறி பிரிவுகள் பேரூர்களும் சிற்றூர்களுமாகும். கடற்கரையை அடுத்த கிராமங்கள் பட்டினங்கள் எனப்பட்டன. மாநிலங்கள், மாவட்டங்கள் என்ற பிரிவுகள் காணப்படவில்லை. நடுவண் நிருவாகம் நாட்டின் பெருநகரிலிருந்தவாறு நாட்டின் நிர்வாகத்தைக் கண்காணித்த போது பேரூர்களும் சிற்றூர்களும் தன்னாட்சி பெற்று விளங்கின.**[79]

என்று சங்ககாலத்தில் ஆட்சிமுறைக்காக வகுக்கப்பட்ட பிரிவுமுறைகள் குறித்து விளக்குவார் வே.தி.செல்வம்.

சங்ககால அரசுகளின் நாட்டுப்பிரிவு

தமிழகம் சங்ககாலத்தில் மூவேந்தர்களால் பிரித்து ஆளப்பட்டமை குறித்து முன் இயலில் கூறப்பட்டது.

> **காவேரி ஆறு பாயும் பகுதிகளில் இன்றுள்ள குளித்தலை வட்டமும், அதற்குக் கிழக்கிலுள்ள காவிரிப் பரப்பையும், இவற்றைச் சார்ந்துள்ள பகுதிகளும், சோழநாட்டைச் சேர்ந்தவை என்று கூறலாம். அதேபோல் வைகை ஆறு பாயும் பகுதியும், அதனைச் சார்ந்துள்ள பகுதிகளும் பாண்டியநாடு எனலாம். மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கிலுள்ள பகுதி**

சேரநாடு ஆகும். இப்பாகுபாட்டில் அடங்காத தமிழ் நாட்டிலுள்ள பிற பகுதிகள் சில சமயங்களில் தனி நாடுகளாக விளங்கியதும் உண்டு. சில சமயங்களில் செல்வாக்குக்கு ஏற்ப அடுத்துள்ள நாடுகளோடு இணைந்து விளங்கியதும் உண்டு.[80]

என்று சங்ககால நாட்டுப் பிரிவு முறை குறித்து விளக்குவர்.

சேரநாட்டுப்பிரிவு

சேரநாட்டு எல்லைகள் குறித்துப் பதிற்றுப்பத்து மிக விரிவாகக் கூறுகின்றது. பதிற்றுப்பத்தில் இடம் பெறும் பதிகங்கள் சேரநாட்டுப் பகுதிகளாக கடுங்கோ நாடு, குடநாடு, குட்டநாடு, பூழிநாடு, மாந்தரநாடு, சேரல்நாடு என்னும் பகுதிகளைக் குறிப்பிடுகின்றது.

சோழநாட்டுப்பிரிவு

சோழ மன்னர்கள் ஒன்பது ஊர்களில் இருந்து ஆட்சி செய்தனர் என்பதனைப் பதிற்றுப்பத்தி ஐந்தாம் பத்தின் பதிகப்பாடலடிகள்,

..... வெந்திறல்
ஆறாச் செருவின் சோழர் குடிக்கு உரியோர்
ஒன்பதின்மர் வீழ.....[81]

என்று குறிப்பிடுகின்றது. மேலும், சோழ நாட்டுப் பகுதிகளாக ஆமூர் என்னும் சோழநாட்டுப் பகுதியினை,

வெல்போர்ச் சோழர் ஆமூர்.[82]

என்று ஐங்குறுநூறும், ஆர்க்காடு என்ற பகுதியை,

அரியல் அம் கழனி ஆர்க்காடு அன்ன.[83]

என்றும்,

உறந்தை என்னும் பகுதியை,

மறம்கெழு சோழர் உறந்தை.[84]

என்றும், கழார் என்னும் பகுதியை,

வெல்போர்ச் சோழர் கழா அர்க் கொள்ளும்.[85]

என்னும் நற்றிணையின் பாடலடிகளும் புலப்படுத்துகின்றன.

மேலும், அகநானூற்றுப் பாடல்களில் குடந்தை, பருவூர், புகார், போர் வல்லம் போன்ற பகுதிகள் சோழ நாட்டுப் பகுதிகளாகச் சுட்டப்படுகின்றன.

பாண்டிய நாட்டுப் பிரிவு

பாண்டிய நாட்டுப் பிரிவுகள் குறித்துத் தெளிவான செய்திகள் சங்க இலக்கியங் களில் காணப்பெறவில்லை. பொதுவாகப் பாண்டிய நாடு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது என்று வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை,

> **பாண்டியர்கள், பஞ்சவர் எனப்பட்டனர். பொலம்பூண் ஐவர் என்று குறிப்பிடப் படுபவர்களும் இவர்களே என்று எண்ண வேண்டியுள்ளது. இவற்றால், பாண்டிய நாடு ஐந்து பிரிவுகளாக அமைந்திருந்தது என்று கொள்ள இடமுண்டு இந்த ஐந்து பிரிவுகள் எவை என்பது தெளிவாகத் தெரியவில்லை.**[86]

என்னும் பகுதிகொண்டு அறிய முடிகின்றது.

மேற்குறித்த செய்திகளால் சங்ககாலத்தில் ஒவ்வொரு வேந்தரும் தங்களுடைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளைப் பல்வேறு பகுதிகளாப் பகுத்துக் கொண்டு அரசாட்சி செய்துள்ளனர் என்று தெரிகின்றது. அரச நிர்வாகம் சிறப்புற நடைபெறுவதற்கு இப்பிரிவுகள் உதவிபுரிந்துள்ளன என்றும் கருத இடமுண்டு.

ஊர்நிர்வாகம்

ஊர் என்பதே பிற்காலத்தில் கிராமம் என்று அழைக்கப்பட்டது. ஊர்களில் மன்றம், பொதியில், அம்பலம், மாசனம் என்னும் நிறுவனங்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்தன.

மாசனம் என்பது குடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அல்லது பிரதிநிதிகளைக் கொண்டதாகும். குடிகளின் தேவைகளை மன்னரிடத்தில் எடுத்துக் கூறுவது மாசனத்தின் வேலையாகும். பொதியில், மன்றம் ஆகியவை ஊர்களில் அமைதி காக்கும் நிறுவனங்களாகவும் நீதி வழங்குமிடங்களாகவும் விளங்கின. ஊர்களில் ஏற்படும் வழக்குகளுக்கு இவை தீர்வு கண்டன.[87]

என்று கூறுவார் வே.தி.செல்லம்.

கிராம நிருவாகத்தில், அவ்வவ் கிராம மக்களே இடம்பெற்றிருந்தனர் என்று அறிய முடிகின்றது மேலும் அவர்கள் தங்களது குறைகளைத் தாங்கள் நியமித்திருந்த பிரிதிநிதிகள் மூலம் தீர்வுகண்டு கொண்டுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

தீர்க்க முடியாத மக்களது வழக்குகளை மன்னனிடம் கொண்டு செல்ல ஊர் மக்களுக்கும், மன்னர்களுக்கும் இடைப்பட்டவர்களாக 'மாசனம்' என்னும் நிர்வாகக் குழுவினர் செயல்பட்டுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

ஒவ்வொரு தனியூரிலும் அல்லது பற்றிலும் ஊரவை என்ற அடிப்படையாட்சிக் குழு இருந்தது. அது ஆண்டு தோறும் திருவுளச்சீட்டு மூலம் குடவேலையால் தேர்ந்தெடுக்கப்பட்டது. குற்றவாளிகளும் பொறுப்பற்றவர்களும் அதில் இடம் பெறவில்லை. ஊராட்சியின் ஒவ்வொரு துறையையும் கவனிக்கத் தனி வாரியம் என்னும் உட்குழு அமைக்கப்பட்டது. அவ்வாரியங்கள் ஏரிவாரியம், கலிங்குவாரியம், கழனிவாரியம், தோட்டவாரியம், குடும்பவாரியம், பொன்வாரியம், கணக்கு வாரியம், கோயில் வாரியம், தடிவழி வாரியம், பஞ்சவார வாரியம், ஆட்டை வாரியம் முதலியனவாகும். ஊரவை நடவடிக்கைகளையும் கணக்கையும் எழுதி வைக்க ஊர்க் கணக்கன் என்னும் அலுவலன் இருந்தான்[88]

இந்நிர்வாகம் அனைத்திற்கும் தலைமையானவன் அரசனாவான். அவ்வரசன் தலைநகரிலிருந்து ஆண்டு வந்தான். அவனுக்குக் காவல் தொழிலே சிறப்பானதாக அமைந்திருந்தது என்று தெரியவருகின்றது.

அரசுரிமைக்காலம்

அரசாட்சி இல்லாத நாடு இல்லை. தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அரசு தோன்றிவிட்டது. அரசுரிமை தந்தைக்குப் பிறகு மகன் என்ற நிலையில் பரம்பரை ஆட்சியுரிமை அமைந்திருந்தது. மகளிர் ஆட்சியுரிமை பெறுதல் இல்லை. ஆண்மக்களுள் மூத்தவனே ஆட்சியுரிமை பெற்றான். ஏனையோர் நாட்டின் பல்வேறு பிரிவுகளிலிருந்து ஆட்சிப் பொறுப்பைக் கவனித்து வந்தனர். இதனை,

> **மன்னர்கள் மரபுகளையும் வாக்காறுகளையும் மதித்தனர். முறை முதற் கட்டில் என்பது மரபு. தந்தை வழித்தனய முறையில் மூத்த மகனுக்கு அரசுரிமை கிட்டியது. இளம் வளதினரும் அரச பதவிக்கு வந்துள்ளனர் என்பதற்குக் கரிகாலனும், தலையாலங்கானத்து நெடுஞ்செழியனும் சான்றாவர். வாரிசு இல்லாதபோது நெருங்கிய உறவினர் பதவி ஏற்றனர். தேர்தல் முறையும் பெண்கள் அரியணை ஏறுவதும் வழக்காற்றில் இல்லை. மக்களின் தலைவர்களாக மன்னர்கள் விளங்கினர். அரசர்களை எதிர்த்துக் கிளர்ச்சிகள் எழவில்லை ஆனால், மன்னர்கள் தாமாக முடி துறந்தது உண்டு.**[89]

என்று சங்ககால அரசுரிமை குறித்துக் கூறுவர் வே.தி.செல்லம். அரசன், தான் வாழுங் காலத்திலேயே தன் மகனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி வைப்பான். இளவரசன் தந்தையின் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் வேறொரு பகுதியில் இருந்து கொண்டு தன்னுரிமையுடனும், தந்தையின் துணையுடனும் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு அரசாட்சியில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று வருவான். அக்காலை, அவன் தந்தையின் படைத்துணையைப் பெற்றோ, பெறாமலோ வேற்று நாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெறுவதும் உண்டு. அவன் பெற்ற வெற்றிகள் மகனது வெற்றியாகவும், தந்தையின் வெற்றியாகவும் புலவர்களால் பாராட்டப்பட்டுள்ளன. தந்தையின் காலத்துக்குப்பின் இளவரசன் தந்தையின் நாட்டையும் சேர்த்து ஆளும் அரசுரிமை பெறுவான் [90] என்று எடுத்துரைப்பர்,

சங்க கால அரசியலில் தந்தை ஆட்சி செய் காலத்திலேய அவனது வாரிசுகளும் வெவ்வேறு பகுதிகளைப் பகையில்லாமல் அமைதியாக ஆட்சி புரிந்துள்ளனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

பட்டம் பெற்றோர்

வேந்தன் தன் வெற்றிக்காகப் போரில் துணை நின்றவர்க்கும், ஆட்சிக்குத் துணை நின்றவர்க்கும் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்தல் வழக்கம். அரசனால் வழங்கப்பட்ட அவ்விருதுகள் 'மாராயம்' எனப்பட்டன தொல்காப்பியம்.

மாராயம் பெற்ற நெடு மொழி யானும் [91]

என மாராயத்தைக் குறிக்கின்றது. இம் மாராயம் எட்டி, காவிதி, ஏனாதி என மூவகைப் படும். முதல் இரு பட்டங்களும் எளிய வீரர்க்கும் மூன்றாவதாகிய ஏனாதி அரசனின் பெருந்தலைவர்க்கும் அளிக்கப்பட்டன. எட்டிப்பட்டம் பொற்பூவுடன் வழங்கப்பட்டது என மணிமேகலை குறிப்பிடுகின்றது.[92] சங்க இலக்கியங்களில் எட்டிப்பட்டம் பற்றிய செய்திகள் காணப்படவில்லை.

காவிதிப்பட்டம் குறித்து மதுரைக் காஞ்சி[93] குறிப்பிடுகின்றது. காவிதிப்பட்டம் பெற்றவர்கள் வரிச்சலுகை பெற்றவர்கள் என்பதை அடியார்க்கு நல்லாரின்[94] சிலப்பதிகார உரை அறிவிக்கும். சங்க இலக்கியத்தில் இத்தகு வரி நீக்கம் இருந்தமைக்கான சான்றுகள் இல்லை. பிற்கால நூலான பெருங்கதையில்[95] குறிப்பிடப்பட்டுள்ளது.

வேந்தன் வெற்றி பெற்றவர்களுக்கு கொடுத்த பட்டங்கள்

மாராயம் என்னும் பட்டப் பெயருள் எட்டி பட்டம் வணிகருக்கும், சிறந்த முறையில் வணிகர் பணியாற்றினால் எட்டிப்பூ என்னும் உயர்ந்த பட்டமும், காவிதி பட்டம் அமைச்சர் மற்றும் வணிகர்களுக்கு வழங்கி அவர்களின் சிறப்புத் தகுதிக்கு காவிதிப்பூ பட்டமும், ஏனாதி பட்டம் சேனைத் வழங்கி மோதிரமும் பரிசளிக்கப்படுகிறது. ஏனாதிப்பட்டம் வழங்கப்பட்டமை குறித்துக் கலித்தொகை[96] குறிப்பிடுகிறது. ஏனாதி ஒருவரால் அமைக்கப்பட்ட ஒரு குடியிருப்புப் பகுதி, ஏனாதிப் பாடி என்றழைக்கப்பட்டது.

நச்சினார்க்கினியர் ஏனாதிப் பட்டங் கட்டினானொருவன் ஏற்றிய பரத்தையர் சேரி என்று ஏனாதிப்பாடிக்கு விளக்கம் அளிக்கின்றார். புறநானூற்றில் சோழிய ஏனாதி திருக்குட்டுவன்[97] என்பவனைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடிய பாடல் இடம் பெற்றுள்ளது. மணிமேகலையும்[98] சோழிக ஏனாதி ஒருவனைப் பற்றிக் குறிப்பிடுவதால் அவர்கள் சோழரிடமிருந்து ஏனாதிப் பட்டம் பெற்றிருப்பர் எனக் கொள்ளலாம். ஏனாதி திருக்கிள்ளி என்பவனைப் பற்றிய பாடலும் புறநானூற்றில்[99] இடம் பெற்றுள்ளன.

சேனைத் தலைவர்க்கு ஏனாதி என்ற பட்டம் அளித்தல் போன்றே அமைச்சர் கணக்கர், வேளாளர் முதலாயினார்க்குக் காவிதி என்ற பட்டமும், வணிகர்க்கு எட்டி என்ற பட்டமும் அளித்து அதற்கு அடையாளமாகப் பொன்றாற் செய்யப்பட்ட பூவினை அளிப்பர். அவை எட்டிப்பூ, காவிதிப்பூ எனப்படும்.

எட்டிப், காவிதி, ஏனாதி ஆகிய பட்டங்களைப் பெற்றோர் அரசனுக்கு ஆட்சித் துறையில் உதவிபுரிந்தனர் எனலாம்.

நிர்வாக அமைப்புகள்

சங்க கால அரசுகளின் நிர்வாக அமைப்புகளைக் கண்காணிப்பதற்குக் கீழ்கண்ட அமைப்புகள் இயங்கின என்று அறியமுடிகின்றது. அவை; அரசவை, அமைச்சரவை, நாளவை, ஊரவை, ஐம்பெருங்குழு, எண்பேராயம், அறங்கூறவையம், தூது, ஒற்று என்னும் அரச உறுப்புகளை வேந்தர்கள் அரச நிர்வாகத்திற்கென அமைத்த அமைப்புகளாகக் கருத முடிகின்றது.

அரசவை நிர்வாகம்

சங்ககாலத்து அரசியலில் அலுவலக அமைப்புகள் குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றியுள்ளன. அரசனின் சிறந்த நிருவாகத்திற்கு இவை உறுதுணையாக நின்றுள்ளன என்பதை இலக்கியங்கள் வழி உணர முடிகின்றது.

அரசவையே ஆட்சி மன்றமாகச் செயல்பட்டுள்ளது. அரசவையில் அரச குடும்பத்தாரும் அதாவது அரசன், அரசி மற்றும் அவர்களது மக்கள் உள்ளிட்டோர்

வசித்து வந்துள்ளனர். உயர்ந்த பொறுப்புகளை ஏற்றுள்ள உயர் அதிகாரிகளும், ஆலோசனைகளை அவ்வப்போது எடுத்துத்தரும் புலவர் பெருமக்களும் தூதுவர்களும் அவர்களுக்கென்று தரப்பட்டுள்ள இருக்கைகளில்அமர்வர்.

காலங்களையும் காலங்களுக்கு ஏற்றவாறு செய்யும் செயல்களைச் செய்யவும் கணித்துக் கூறவும் நியமிக்கப்பட்டிருக்கும் கணியன் அவனுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருப்பான். அமைச்சனும் பல்வேறு படைத்தலைவர்களும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அமருவர். அவையில் பங்கேற்கும் இப்பெருமக்கள் மன்னனுக்குத் தகுந்த சமயங்களில் ஆலோசனைகளை வழங்குவர்.

> **அரசன் தனக்குரிய உறுதிச் சுற்றத்தோடும் மந்திரச் சுற்றத்தோடும் நாள்தோறும் அவைக்கண் இருந்து அரசு அலுவல்களை மேற்கொள்வது வழக்கமாகும்.**[100]

என்பார் கு.வே.பாலசுப்பிரமணியன்.

அமைச்சர்

அமைதியும் அறமும் நிலவும் அரசு அமைய அரசனுக்கு உறுதுணையாக நின்ற சிறப்பு அமைச்சர்களுக்கு இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் அமைச்சர் என்ற சொல் ஆளப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், சங்க காலத்தை ஒட்டி எழுந்த சிலப்பதிகாரத்திலும், திருக்குறளிலும் அமைச்சர் என்ற சொல்லையும், அமைச்சு என்ற அமைப்பைப் பற்றியும் குறித்து விளக்கமாகப் பேசப்பட்டுள்ளன.

> **திருக்குளில் வள்ளுவர் அமைச்சு என்று ஓர் அதிகாரமே அமைத்துள்ளார். அமைச்சரை 'வள்ளுவர் உழை இருந்தான்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். அவ்வதிகாரத்தில் அமைச்சருக்கு இருக்க வேண்டிய தகுதி, திறமை, பண்பு ஆகியவற்றை விளக்குகின்றார். திருவள்ளுவர் அரசியல், அமைச்சியல் முதலானவை குறித்து விரிந்து அளவில் எழுதியுள்ளார். இவ்வாறு அரசியல் கருத்துக்களை வள்ளுவர் கூறுவதற்கு**

அவருக்கு முற்பட்ட காலப்பகுதியில் நிலவிய அரசாட்சி முறையும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். அத்துடன் வள்ளுவர் குறிப்பிடும் உழை இருந்தான் என்னும் சொல்லும் சங்க இலக்கியம் குறிப்பிடும் சுற்றம் என்ற சொல்லும் ஒரு பொருள் குறிக்கின்றமையைக் காணலாம், இந்த கருத்தை நோக்கும்போது சங்க காலத்தில் அமைச்சர் இருந்திருப்பர் என்று கருத இடமுண்டு.[101]

என்று கூறுகின்றார் அரங்க. இராமலிங்கம்.

வள்ளுவர் அமைச்சர்க்குத் தேவையானவையாக நற்செயல்திறம், மனத்தூய்மை, வினைத்தூய்மை, வினை செயல் வகை, வினைத்திட்பம் போன்ற பண்புகளைக் குறிப்பிடுகின்றார். மனஉறுதி, நற்குடிப்பிறப்பு, மக்களைப் பாதுகாக்கும் திறன், படிப்பறிவு, விடாமுயற்சி ஆகிய ஐந்தும் முழுமையாக உடையவனே சிறந்த அமைச்சன் ஆவான் என்பன போன்ற பல தகுதிகளை அமைச்சனுக்குரிய பண்புகளாகக் குறிப்பிடுவதை;

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

என்னும் குறள் அமைச்சனுக்குரிய செயல் வன்மைகளைப் பற்றிப் பேசுகின்றன.

நாடு காவல் தொழில் அரசனுக்குத் துணையாக மந்திரிச் சுற்றம் இருந்தமையினை,

பா அல் புளிப்பினும் பகலி ருளினும்
நா அல் வேத நெறிதி ரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண்விளங்கி.[102]

என்னும் புறநானூற்றுப் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. இதில் வேந்தனுக்கு உறுதி பயக்கும் சுற்றமாய் அமைச்சர் இருந்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

மன்னர்க்கும் மக்களுக்கும் நேரக்கூடிய தீமைகளை முன்கூட்டியே அறியும் தொலைநோக்கு அறிவும், நன்மைகளைப் பெருக்கும் செயல்திறன் ஆகியனவும்

அமைச்சரிடமிருந்து அக்கால மன்னர்கள் எதிர்பார்த்திருந்த நற்பண்புகளாகும்.

அமைச்சரவை

அமைச்சர் தலைமையில் அமைந்த அரசியல் குழு அமைச்சரவை என்று அழைக்கப்படுகின்றது. அரச உறுப்புகளுள் அமைச்சர் குழு இன்றியமையாத ஒன்றாக விளங்குவதைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியத்தில் அமைச்சர் குழு என்ற ஓர் உறுப்பைப் பற்றிய செய்திகள் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை என்றாலும், மன்னர்களில் பலர் அமைச்சர்களைக் கொண்டு செயல்பட்டுள்ளனர் என்பது அவ்விலக்கியங்கள் வழி தெளிவாகின்றது. சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டத்தில்,

மன்னவர்க்கு ஏற்பன செய்க நீ என்
வில்லவன் கோதையை விருப்புடன் ஏவி
சிறையோர் கோட்டம் சீமின் யாங்கனும்
.....
முழங்கு நீர்வேலி மூதூர் ஏவி.[103]

என்ற பாடல் அடிகளில் வில்லவன் கோதை என்ற அமைச்சரைப் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. மேலும் அழும்பில்வேள் என்னும் அமைச்சர் சேரன் செங்குட்டுவன் அரசவையில் நிதித்துறையைக் கவனித்து வந்த செய்தி அறியப்படுகின்றது. இதனால், சேரன் செங்குட்டுவன் பல அமைச்சர்களைக் கொண்ட அமைச்சர் குழுவைப் பெற்றிருந்தான் என்ற செய்தி புலனாகின்றது.

திருத்தக்க தேவர் சீவகசிந்தாமணியில் சச்சந்தனின் அமைச்சரவையைக் கூட்டுகின்றார். சச்சந்தன் அமைச்சரவையில், நிமித்தகன். உருத்திரதத்தன், கட்டியங்காரன் ஆகிய அமைச்சர்கள் அடங்கிய அவையில் தனது கருத்தை ஏற்குமாறு அவர்களை வற்புறுத்துகின்றான். நிமித்தகன் என்னும் அமைச்சன் சச்சந்தனுக்குப் பல்வேறு நீதிகளை எடுத்துரைக்கின்றான். இதன் மூலம் அமைச்சர் சொல் கேட்பவர்க்கு நன்மையே வரும்; தீமை வராது என்று எடுத்துரைப்பதனைக் காண முடிகின்றது.

நாவலர் சொல் கொண்டார்க்கு நன்கலால் தீங்குவாரா[104]

என்னும் தொடர் மேற்குறித்த செய்தியைப் புலப்படுத்துகின்றது.

சிந்தாமணிக் காப்பியத்தில் அமைச்சரைவையைக் குறித்த செய்திகளையும், அவ்வகையில் அமைச்சர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துரைக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

> **அமைச்சர்கள், ஆலோகர்கள் என்றும் காவிதி மாக்கள் என்றும் அழைக்கப்பட்டனர். அருந்திறல் அமைச்சர்கள் முதலாகிய பலர் இருந்தனர். மன்னருக்கு உதவிக்காக அமைச்சர்கள் இருந்தனர். திறன் உடையவர்களும், பேராற்றல் உடையவர்களும், நூலறிவு அடைபவர்களும் அறவழி நடப்பவர்களுமே அமைச்சராவதற்குத் தகுதியுடையோராகக் கருதப்பட்டனர்** [105]

என்று கூறுவார் அரங்க. இராமலிங்கம்.

சங்க இலக்கியங்களில் காவிதி மாக்கள் என்று குறிக்கப்படும் அரசியல் வினைஞர் காவிதி பட்டம் தரப்பட்ட அமைச்சர்கள் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

சங்ககாலத்தில் அரச நிர்வாகத்தை இயக்கிய அதிகாரிகள் அனைவரும் அரசனின் ஆணைவழி நடப்பவராக இருந்துள்ளனர் என்று அறிய முடிகின்றது நிர்வாகம் சிறப்புற அமைவதற்கு அமைச்சர் சுற்றத்தினர் வல்லாண்மை மிக்கவராக இருத்தல் வேண்டும் என்பது அறியத்தக்கதாகும்.

தூதர்

அரச உறுப்புகளில் தூது என்னும் அமைப்பு மிக முக்கிய உறுப்பாக விளங்குகின்றது. ஒரு மன்னன், பிற மன்னர்களோடு நல்ல உறவு நிலையைக் கடைபிடிக்கவும் முரண்பாடுகள் ஏற்படும்போது அதனை முறையாக எடுத்துரைக்கவும் தூதுவர்கள், இவ்வருவரிடையே நல்ல பாலமாக இருந்து செயல்பட்டுள்ளனர். இதனால், தூதுவர் அரச உறுப்புகளில் முக்கியப் பணியாளர்களில் ஒருவராகத் திகழ்கின்றனர்

என்பது பெறப்படுகின்றது.

ஒரு வேந்தனின் சார்பாளராக அரசவையில் செயல்பட்டவர் தூதர் எனப்பட்டார். தூது அனுப்புதல் சங்க காலத்தில் வழக்கில் இருந்தது. தொல்காப்பியத்தில் பிரிவு பற்றிய செய்திகளைப் பேசும் இடத்தில் தூதின் பொருட்டுப் பிரியும் பிரிவினையும் ஒன்றாகக் கூறியுள்ளமை அறியத்தக்கதாகும். இச்செய்தியை,

ஓதல் பகையே தூதிவை பிரிவே [106]

என்னும் தொல்காப்பிய நூற்பா கொண்டு அறியலாம். இதற்குத் **தூதிற்குப் பிரிதலாவது இருபெரு வேந்தரைச் சந்து செய்தற் பொருட்டு பிரிதல்**[107] என்று உரை தருவார் உரையாசிரியர் இளம்பூரணர்.

மேலும் தூது என்னும் செயலினைச் செய்வது உயர்ந்தோர்க்குரியதாகக் கூறுகின்றார் தொல்காப்பியர்.

வேந்தனைத் தவிர ஏனைய மூவரும் தூது செல்வதற்கு உரியர் என்பதனால் அந்தணர்களும் புலவர்களும் தூதுவர்களாகச் சென்றிருத்தல் வேண்டும் என்று அறியலாம். புலவர்களும் அந்தணர்களும் தூதாகச் சென்ற திறத்தினைச் சங்கப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. மேலும், தூது செல்வதற்கென்று தனியாக அலுவலர்கள் இருந்தார்களா என்ற குறிப்பு காணப்படவில்லை. பெரும்பான்மையாக அந்தணர்களும், புலவர்களும் சிறுபான்மை மன்னர்களும் தூது சென்றர் என்பதனை அறிய முடிகின்றது.

வயலைக் கொடிபோல் வாடிய இடையினையும் வருத்தந்தோய்ந்த நடையினையுடைய இளம் பார்ப்பான் இரவின்கண் வந்து உள்ளே சென்று சில சொற்கள் சொன்னான்; உடனே மதில் கோடற்சென்று வைத்திருந்த ஏணியையும், வாயில் கதவுக்கு வேலியாக உள்வாயிற் படியிலே நிலைத்த மரமான சீப்பையும் களைந்து விட்டனர். அது போன்றே வேந்தன் ஊர்ந்து செல்லும் யானையின் மணியும் களையப்பட்டது என்னும் கருத்தினை,

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்

உயவலூர்த்திப் பயலைப் பார்ப்பான்

.....

மாண்வினை யானையு மணிகளைந்தனவே [108]

என்னும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. இதனால் பார்ப்பான் தூதாகச் சென்றதும், அதன் காரணமாகப் போர் நிறைவுக்கு வந்ததுமாகிய செய்தி அறியப்படும். பார்ப்பான் தூது சென்றதற்குச் சான்றாக இப்பாடலை இளம்பூரணார் காட்டியுள்ளார்.

தூதர்க்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்லுகின்ற சொல்வன்மை ஆகிய மூன்றும் இருத்தல் வேண்டும் என்பதனை,

அன்பறிவு, ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப் பார்க்கு

இன்றியமையாத மூன்று

என்னும் குறட்பா மூலம் எடுத்துரைக்கின்றார் திருவள்ளுவர்.

ஒற்றர்

ஆட்சி முறையின் சிறந்த உறுப்பாகவும், படை அமைப்பின் முக்கிய உறுப் பாகவும் ஒன்று எண்ணப்பட்டது. ஒற்றுத்துறை என்பது அரசாங்க அலுவல் துறைகளில் ஒன்றாகும். **ஒற்றறிதல்** என்னும் செயல் அரசனின் அரசியல் பணிகளுள் முக்கிய மானதாகத் திகழ்கின்றது. மன்னன் விழிப்புடண் இருக்க வேண்டும். திடீர்த் தாக்கு தல்களை அவனால் எதிர் கொள்ளுதல் என்பது கடினமான செயலாகும். இந்நிலையில் ஒற்று என்னும் அரச உறுப்பினைக் கொண்டு மன்னன், தனது அண்டை நாடுகளின் நடடிக்கைகளை அறிந்து எச்சரிக்கையுடன் செயல்பட்டான் என்று அறிய முடிகின்றது.

சிலப்பதிகாரம் சேரநாட்டின் தலைநகரமான வஞ்சி மாநகரில் ஒற்றர்கள் பலரும் வாழ்ந்து வந்தனர் என்பதனை,

நாவலம் தண்பொழில் நண்ணார் ஒற்றுநம்

காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா

.....

தம்செவிப் படுக்கும் தகைமைய அன்றோ? [109]

என்னும் வரிகள் மூலம் எடுத்துரைக்கின்றது.

பகைநாட்டு மன்னனின் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளவும், உள்நாட்டுச் சூழ்நிலைகளைத் தெரிந்து கொள்ளவும் ஒற்றர்கள் அக்காலத்தில் மன்னனால் நியமிக்கப்பட்டனர். ஒற்றறிதல் என்னும் வழக்கம் மன்னனால் எல்லாக் காலங்களிலும் நிகழ்த்தப்பட்டுள்ளது. அதாவது போர் முதலான நெருக்கடியான காலங்களில் மட்டுமல்லாமல் சாதாரண நாட்களிலும் ஒற்றர்கள் தங்கள் ஒற்றறியும் வேலையினைச் செய்துள்ளனர்.

ஒற்று, அரசனின் அலுவல் பிரிவுகளில் முக்கியமானதாகத் திகழ்ந்து உள்ளமையினைச் சங்கப்பாடல்கள் கொண்டு அறியமுடிகின்றது. இன்றும் உலக அரசியலில் ஒற்றறியும் பணி முக்கிய இடத்தை வகிப்பதனைக் காணலாம். ஒற்றறின் காரணமாகச் செல்லும் நபர், ஒடுங்கிய குரலில் வேற்றார்க்குக் கேட்கா வண்ணம் பேசுவார்கள் என்பதனைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ.

ஒற்றுச்செல் மாக்கனின் ஒடுங்கிய குரல
இல்வழிப் படுஉங்[110]

என்று அகநானூற்றுப் பாடலடிகளில் குறிப்பிடுகின்றனர்.

பரிசில் வேண்டி வந்த இளந்தத்தன் என்னும் புலவனை, ஒற்றறிய வந்தவன் எனத் தவறாக உணர்ந்து சோழன் நெடுங்கிள்ளி கொல்லப்புகுந்ததையும், அச்செயலைக் கோவூர்கிழார் தடுத்து நிறுத்திப் புலவரைக் காப்பாற்றியதையும் புறநானூற்றில்,

பிறர்க்குத் தீங்கு அறிந்தன்றோ இன்றே திறப்பட
நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி
ஆங்கு இனிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்[111]

என்னும் பாடல்மூலம் அறிய முடிகின்றது. இச்செய்திகளால் புலவர்களே தூதுவர்களாகவும் ஒற்றர்களாகவும் இருந்திருக்கக் கூடும் என்று கருதலாம். மேலும், ஒற்றன் அகப்பாடல் அவனைக் கொன்றுவிடும் மரபு இருந்ததையும் அறிய முடிகிறது.

ஆலோசனைக் குழுக்கள்

அமைச்சர், புலவர், தூதர், ஒற்றர் போன்ற அலுவலர்கள் மட்டுமல்லாது அரசனது அரசியல் செயல்பாடுகளைத் திட்டமிட்டு நடத்துவதற்குத் தக்க ஆலோசனைக் குழுக்களும் இருந்துள்ளன.

சங்ககால அரசர்கள் தங்களிடம் கலந்தாலோசிக்கவெனக் குழுக்கள் வைத்திருந்தனர். அவை, எண் பேராயம், ஐம்பெருங்குழு என்று அழைக்கப்பட்டன என்பதனைச் சிலப்பதிகாரம்,

ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
வெம்பரி யானை வேந்தர்க் கோங்கிய
கரும வினைஒருங் கணக்கியல் வினைஞரும்
தரும வினைஞருந் தந்திர வினைஞரும்[112]

என்று கூறுகின்றது.

ஐம்பெருங்குழு, எண்பேராயம்

சிலம்பு, மேகலை ஆகியவற்றின் உரைகளில் இருந்து ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இரு அமைப்புகளின் உறுப்பினர்கள் குறித்து அறிய முடிகின்றது.

ஐம்பெருங்குழுவில்

1. அமைச்சர், 2. புரோகிதர், 3. சேனாதிபதியார், 4. தூதுவர், 5. சாரணர், ஆகியோர் உள்ளனர்.

எண் பேராயத்தில்

1. கரணத்தியலவர் (அரசின் பெருங்கணக்கர்), 2. கருமவிதிகள், 3. கடைக்காப்பாளர்

பொருட்காப்பு அதிகாரி), 4. கடைக்காப்பாளர் (நாடு காவலர்), 5. நகர மாந்தர், 6.படைத்தலைவர், 7. யானைவீரர், 8. இவுளி மறவோர் (குதிரைப் படைத்தலைவர்) ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர் என்று அறியப்படுகின்றது.[113] என்றுரைப்பார் வே.தி.செல்வம்.

இவை அரசனோடு தொடர்புடைய குழுக்களாகும். கல்வியறிவுடையோர்களும், தூய உள்ளம் கொண்டோர்களும், ஒழுக்கம், உண்மை, உடைமையாகிய சிறப்பு அணிகளைப் பெற்றவர்களும் இக்குழுவில் உறுப்பினராகும் தகுதியினைப் பெற்றிருந்தனர். இவர்கள் நாட்டின் பெருஞ்செயல்களிலும் விழாக்களிலும் முக்கியப் பங்காற்றியுள்ளனர் என்று தெரிகின்றது.

"தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்திலோ, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலான நூல்களிலோ இவ்விரு குழுக்களைப் பற்றிய செய்திகள் இல்லை. அமைச்சு அதிகாரம் வகுத்து, அரசியல் நெறியை ஓதிய வள்ளுவரும் இவற்றைச் சுட்டவில்லை. பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சி, நாற்பெருங்குழு என்ற ஒன்றைச் சுட்டுகின்றது. அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் ஐம்பெருங்குழுவில் ஒருவரான அமைச்சரை மதுரைக்காஞ்சி 499 ஆம் அடியில் குறிப்பிடுகின்றது என்னும் கருத்தினை மனதிற்கொண்டு ஐம்பெருங்குழுவில் அமைச்சரைப் பிரிந்து முற்கூறினமையன் ஈண்டு ஏனைய நாறபெருங்குழுவையும் கூறினார். ஐம்பெருங்குழுவான அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தூதர், ஒற்றர் என மொழி (நச்சர். உரை) என்று கூறுகின்றார். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் ஐம்பெருங்குழுவைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

மாசனம் பார்ப்பார் மருத்தர் வாழ்நிமித்த ரோடமைச்சர்
ஆகியவைக் கலித்தா ரைந்து[114]

என்று மக்கள், பார்ப்பனர், மருத்தர், நிமித்தர், அமைச்சர் ஆகிய ஐவரை ஐம்பெருங் குழுவின் உறுப்பினராகக் கூறுகின்றார் என்றுரைப்பர்.

சங்க இலக்கியங்களில் இவர்களைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை என்றாலும் இவற்றின் துணையுடன் வேந்தர் அரசாட்சி நடத்தியிருப்பர்

என்று எண்ணுவதற்கு இடமுண்டு. சங்ககால ஆட்சியில், அரசனது அதிகாரம் ஐந்து, பெருங்குழுவினால் கட்டுப்படுத்தப்பட்டது[115]

என்பர் வி.கனகசபை

ஐம்பருங்குழு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பு என்று கூறும் எஸ்.இராம எஸ்.இராமகிருஷ்ண ஐயங்கார் இவ்வமைப்பின் ஆலோசனைகளை சில சமங்களில் அரசன் ஏற்கக் கடமைப் பட்டவனாயிருந்தான் என்று கூறுகின்றார். ஐம்பெருங்குழு பற்றி செய்திகளைச் சங்க இலக்கியம் குறிப்பிடவில்லை. ஆயினும், அரசர் பலருக்கு அறங்கூறியதையும் ஆற்றுப்படுத்தியதையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுவதால் அச்செயல்கள் ஐம்பெருங்குழுவால் செய்யப்பட்டன என்று கொள்வது பொருத்தமானதாகும். ஆயின், ஐம்பெருங்குழு அரச உறுப்புகளில் ஒன்றாக விளங்கயதென்றும், அது அரசர்களுக்கு ஆலோசனை வழங்கி நெறிப்படுத்தியது என்றும் கருதலாம்.[116]

என்று கூறுகின்றார் அரங்க இராமலிங்கம்.

சங்க இலக்கியத்தில் அறங்கூறம் அவையங்கள்

சங்க காலத்தில் அறங்கூறும் மன்றங்கள் இருந்ததனைப் புறநானூறு

அறமறக் கண்ட நெறிமாண் அவையம்[117]

என்று குறிப்பிடுகின்றது.

அறிவுநிறைந்த சான்றோர்கள் குழுமியிருந்த அவை என்னும் பொருளில்

சான்றோர் இருந்த அவையத்து[118]

எனப் பெருங்குன்றூர்க்கிழார் சுட்டியுள்ளார்.

பண்டைத் தமிழகத்தில் முடியுடைய மூவேந்தர்களுடைய உரையூர், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களில் அறம்கூறும் அவையங்கள் சிறப்புற்று விளங்கின. சோழப் பேரரசுகளின் தலைநகராக நெடுங்காலம் மாண்புடன் விளங்கிய உரையூரில் புகழ்மிக்க அறம்கூறும் அவையம் இருந்ததைச் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

அறம் நின்று நிலையிற் றாகலின்
மறம் கெழு சோழர் உறந்தை[119]

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்கெட அறியாதெங்கு[120]

அறம்கெழு நல்லவை உறந்தை[121]

என்ற சங்க இலக்கிய அடிகளால் அவையம் என்னும் அமைப்பு இருந்த செய்தி புலனாகின்றது. இப்பாடல் அடிகளில் வீரம் மிக்க சோழர்களின் ஆட்சிக்குட்பட்ட உரையூரில் உள்ள அறம் கூறும் அவையத்தில் என்றும் அறம் நிலைபெற்று விளங்கும்; அங்கு என்றுமே அநீதி விளைவிக்கப்பட்டதே இல்லை; நீதி நிலை நாட்டப்பட்டது என்னும் கருத்துக்கள் குறிக்கப்படுவதனைக் காணலாம். மதுரை மாநகரிலும் இத்தகைய அறம் கூறும் மன்றங்கள் இருந்ததை,

செற்றமும் உவகையும் செய்யாது காத்து
.....
சிறந்த கொள்கை அறம்கூற வையம்[122]

என்று மதுரைக்காஞ்சி எடுத்தியம்புகிறது. இதனையே இளங்கோவடிகளும்,

அரைசுகோல் கோடினும் அறங்கூறவையத்து
உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்[123]

என்று சிலம்பில் பாராட்டியுள்ளதும் கருதத்தக்கதாகும்.

தொல்காப்பியத்தில் அறங்கூறும் அவையம்

தொல்காப்பியத்தில் இடம்பெறும் **எட்டுவகை நுதலிய அவையத்தானும்** என்றும் நூற்பாத்தொடர் அறங்கூறும் அவையத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதற்கு இளம்பூரணார் ஏனைய அவையின் இவ்வவை மிகுதி உடைத்தென்றவாறு, குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை அவாவின்மை என்பன[124] என்று உரைவிளக்கம் தந்துள்ளார்.

நச்சினார்க்கினியர் இத்தொடருக்கு,

> **எண்வகை குணத்தனைக் கருதிய அவையத்தாரது நிலையாமையானும் என்று பொருள் கூறி, அவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை என வினையுடையவராய் அவைக்கண் குடியிருப்போர் முந்தியிருப்போர் வெற்றியைக் கூறுதல்**[125]

என்று குறிப்பிடுவார். இதற்கு சான்றாக,

> **குடிப்பிறப்பு புடுத்துப் பனுவல் கூடி**
>
> .....
>
> **இருபெரு நிதியமும் ஒருதா மீட்டு நீ**
>
> **தோலா நாவின் மேலோர் வேரவை** [126]

என்னும் ஆசிரியமாலைச் செய்யுளை எடுத்துக் காட்டியுள்ளார். இச்செய்யுள் அறங்கூறும் அவையத்து உறுப்பினர்களுடைய சீரிய பண்புகளை எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது.

மன்னனும் அறங்கூறும் அவையமும்

குடிமக்களின் நலன் கருதி, நாடாளும் மன்னன் மக்களிடையே ஏற்படும் வழக்குகளைத் தானே நேரில் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவான். அந்நிலையில் அவனுடைய அரசவையே அறங்கூறும் அவையமாகத் திகழ்ந்தது. மன்னனின் மனச்சான்றே அறத்தின் ஊற்றாகும், வழக்காற்று ஒழுக்கநெறியே சட்டத் தொகுப் பாகவும் அக்காலத்தில் இருந்தது.

கிள்ளிவளவனை, வெள்ளைக்குடி நாகனார் பாராட்டிப் பாடியுள்ள புறப்பாடலில்,

> **அறம்புரிந்தன்னை செங்கோனாட்டத்து**
>
> **முறைவேண்டு பொழுதிற் பதன் எளியோர் ஈண்டு** [127]

என அரசன் தலைமை நீதிபதியாக நின்று நீதி வழங்கியதைக் குறிப்பிடுகின்றார்.

இதிலிருந்து அறம்கூறம் அவையத்தின் தலைவனாகவும், தலைமை நீதிபதியாகவும் மன்னனே செயல்பட்டான் என்ற செய்தி பெறப்படுகின்றது.

அறங்கூறவை உறுப்பினர்கள் நியமனம்

அறங்கூறவையின் உறுப்பினர்களை மன்னனே அமர்த்தினான் என்பதற்குப் புறநானூற்றுப் பாடல் சான்றாக அமைகிறது. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் சினமுற்று வஞ்சினம் கூறும்போது அப்பாடலில் அவன் பகையரசர்களைப் புறங்காண்பேன் என்றும், அவ்வாறு புறங்கானேனாயின் அறத்தின் திறப்பாட்டை அறியா ஒருவனை அறங்கூறு அவையத்தில் வைத்து முறை செய்வதில் இருந்து திரிந்து மெகோல் செய்தவன் ஆவேன் என்றும் உரைக்கின்றான்.

அறநிலை திரியா அன்பின் அவையத்து
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக. [128]

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகளிலிருந்து அறங்கூறவையத்து உறுப்பினர்களை அமர்த்தும் பொறுப்பு அரசனிடம் இருந்து என்பதும் அறங்கூறவைத்தில் அறநெறி அறிந்த நடுவரை அமர்த்துவதே வழிவழி வந்த மரபு என்பதும், அறத்தின் அறியா ஒருவனை அமர்த்துவது மன்னனின் மாண்பிற்கு இழிவு என்பதையும் அறிய முடிகின்றது.

நாளவை

குடிகளின் குறையைக் கேட்பதற்கும், கேட்டுமுறை செய்வதற்கும் தன்னை நாடிவரும் புலவர்க்கும், வறியவர்க்கும் பரிசில் நல்குவதற்கும் வேந்தன் வீற்றிருக்கும் அவையை **நாள் மகிழிருக்கை** எனவும், **நாளவை** எனவும் வழங்குவர்.

மதுரைக்காஞ்சி இவ்வவையை

பொற்பு விலங்கு புகழவை [129]

என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், இவற்றை,

பாண்முற்று கநின் நாள்மகிழ் இருக்கை [130]

செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல் [131]

என்று முறையே புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன.

சேரமான் குட்டுவன் கோதையின் நாளவையில் உரிமையோடு செம்மாந்து புகுதல் இரவலர்க்கு மிக எளிமையானது என்னும் செய்தியினை,

செம்ம னாளவை யண்ணாந்து புகுதல்

எம்மன வாழ்க்கை யிரவலர்க்கெளிதே [132]

என்னும் அடிகள் சுட்டுகின்றன.

நாளவை என இலக்கியங்கள் குறிப்பிடுவதை **நாளோலக்கம்** என உ.வே.சாமிநாதையரும், ஔவை, சு.துரைசாமிப்பிள்ளையும் குறிப்பிடுகின்றனர்.[133] இந்நாளவையில் மன்னர்கள் காலை வேளையில் மதுவை உண்டு மகிழ்ச்சியோடு வீற்றிருப்பர் என்பதனை,

நாள் கள் உண்டு நாள்மிகழ் மகிழின்

யார்க்கும் எளிதே [134]

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகளால் அறியமுடிகின்றது.

இதனால், சங்ககாலத்தில் நாட்டின் அரசியல் நிலையைப் பற்றி நாளும் அரசவை கூடிக் கலந்துரையாடுதல் என்பது மரபாக இருந்துள்ளது என்பது புலனாகின்றது. இவ்வகைக் குழுவில் அமைச்சர் குழுவும், ஆலோசனைக் குழுவும் இடம் பெற்றிருந்திருக்கலாம் என்று இடம் உள்ளது.

மேலும், நாளவையில் அரண்மனையில் கூடம் புலவர் முதலானோர்க்குப் பரிசில் அளித்தலும், குறைகளை நீக்குதலும் இதன் பணிகளாக இருந்ததனை அறிய முடிகின்றது.

ஊர் அவை

நீதி வழங்கும் அறங்கூறவை, வேந்தனது நாளவை ஆகியவையன்றி வேறுசில அமைப்புகளும் அக்காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. அவையாவது மன்றம், அம்பலம், பொதியில் என்று கூறப்பட்டன. இம்மன்றம் வேறுவேறானவை அல்ல. இவை ஊர் அவை என்று அழைக்கப்பட்டன. இதனை,

அவையிருந்த பெரும் பொதியில் [135]

என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. ஊர் அவைகளுள் சில ஊரின் முற்பகுதியில் இருந்ததாக அறியமுடிகின்றது.

முன்னூர் பொதியில் சேர்ந்த மென்டை [136]

என்னும் புறப்பாடல் அடி இதனைப் புலப்படுத்துகின்றது.

இவ்வவையின் உறுப்பினர் குடவோலை முறையால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இவ்வாறு கருத இலக்கியங்கள் இடம் தருகின்றன.

மன்றம் என்னும் சொல்லும் ஊர் அவையைக் குறிப்பதாகக் கருதமுடியும் மன்று என்ற சொல்லும் இம்மன்றத்தோடு தொடர்புடையதாகும். இம்மன்றங்கள் குடிமக்கள் ஒன்றாகக்கூடி மகிழ்வதற்கும், ஊர்ப்பொது நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கும் பயன்பட்டதாகக் தெரிகின்றது. இம்மன்றங்களுக்கும் அறங்கூற அவையங்களுக்கு இருந்த தொடர்பினை அறிய இயலவில்லை. ஊரவைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலிருந்து இதன் இன்றியமையாமையினை உணர முடிகின்றது. உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையை அகநானூறு விரிவாகப் பேசுகின்றது.

கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின் [137]

என்னும் அகநானூற்றின் பாடலடிகளில் தேர்தல் நடைபெற்ற முறை குறித்துத் தெரிந்து கொள்ளலாம்.

பனைஓலை, வாக்குச்சீட்டாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வாக்குச் சீட்டுகளைப் போட்டுவைக்கப் பானை பயன்பட்டுள்ளது. அப்பானையைக் கயிற்றினால் கட்டி வாக்குச் சீட்டுகள் போட்டபின் பாதுகாப்பான முறையில் நேர்மையான தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

> **பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் ஊரவைப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கும் குடவோலை முறை இதனோடு ஒப்பிடத் தக்கது** [138]

என்று கூறுகின்றார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார். இதிலிருந்து ஊரவை குறிப்பினர் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை அறிய முடிகின்றது. இந்த ஊரவையின் நோக்கம், செயற்பாடுகள் குறித்த செய்திகள் சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை.

> **இந்த ஊரவை அரசாட்சி நடைபெறுவதற்கு எந்த வகையில் உதவிபுரிந்தது என்றும் தெளிவாக அறிய முடியவில்லை** [139]

என்று கூறுகின்றார் அரங்க. இராமலிங்கம்.

புறநானூற்றில் கையறுநிலை

இறந்த வேந்தனின் புகழையும், பண்பையும் காதலித்து உரைக்கும் இயல்பு பல கையறுநிலைப் பாடல்களில் காணப்படுகின்றது.

கருங்குழலாதனார் தம் கையறுநிலைப் பாடலில் கரிகாலன் அமர் கடந்த பெருவீரம், அருளுடன் பரிசிலர்க்கு அளித்தகொடை அமர் கடந்த பெருவீரம், அருளுடன் பரிசிலர்க்கு அளித்த கொடை நலம், வேத வேள்வி முடிந்த வியத்தகுநிலை ஆகியவற்றை பாடுகின்றார்.

> **இறந்தோன் தானே அளித்த இவ் வுலகம்** [140]

என்று இரங்குகின்றார்.

கையறுநிலையில் மன்னன் மாண்பு

நம்பி நெடுஞ்செழியனைப் பேரெயின் முறுவலார் பாடும் கையறுநிலைப் பாடல்

அம் மன்னனது அரும் பண்புகளை எல்லாம் பட்டியல் போல் தருகின்றது.

சென்றோரை வழிதபுத்தனை
நட்டோரை உயர்புகூறினன்
.....
செய்ய எல்லாம் செய்தனை [141]

அதியமான் இறந்த பின் ஔவையார் பாடிய கையறுநிலைப் பாடல்கள் நான்கு அப்பாடல்களின் உருக்கம் படிப்போர் நெஞ்சுருகிக் கண் கலங்குமாறு செய்கின்றது. அதியமானது மார்பின் தைத்தவேல் பாணரின் உண் கலங்களைத் துளையிட்டு இரப்பவர் கையுறும் தைத்துத் தன்னால் புரக்கப்படும் சுற்றத்தாரது புல்லிய கண்ணில் பாவை ஒளி மழுங்க அழகிய சொல்லை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியை உடைய புலவர் நாவின் கண்ணே போய் வீழ்ந்ததாம்! அதியமானின் மார்பில் தைத்த வேல் ஒரே காலத்தில் பாணர் முதலிய எல்லோருடைய மார்பிலும் தைத்ததாம்.

அருந்தலை இரும்பாணர் அகன் மண்டைத் துளையுரீகி
இரப்போர் கையுளும் போகிச்
செற்றன்று ஆயினும் செயிர்த்தனிறு ஆயினும்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே

அறிய பண்புகளை உடையவன் என்று சிறிதும் கருதாது கோப்பெருஞ்சோழனின் இனிய உயிரைக் கூற்றம் கவர்ந்து விட்டதே. வாய்மை உடைய புலவர்களே எல்லோரும் சுற்றமுடன் சேர்ந்து அக்கூற்றினை இகழ்வோம் வாரீர் [142]

கோப்பெருஞ் சோழனுடன் வழுவின்றிப் பழகிய கிழமை கொண்ட சிறந்த காதற்கிழமை யூண்ட புலவர் பொத்தியார் பாடிய இக்கையறு நிலைப்பாடல் ஆழ்ந்த அவல உணர்ச்சி உடையதாகும்.

பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே
ஆடு நர்க்கு ஈத்த போன் பினனே

.....

வைகம் வம்மோ வாய்மொழிப் புலவர் [143]

தலைவன் இறவா முன் வடக்கிருக்கும் நிலையில் அவலம் கொண்டு ஆற்றாது அழுது புலம்பும் பாடல்களும் உள. (புறம்.65,218) கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கப் பிசிராந்தையாரும், பொத்தியாரும் ஏனைய புலவரும் பாடிய பாடல்கள் கையறு நிலைத்துறையாகவே கருதப்படுகின்றன. (புறம்.217,218,219,220) அப்பாடல்களின் தலைவனை இழந்த துயர் இல்லாவிடினும், துயர் மிகு சூழலில் அவை எழுந்தமையால் கையறுநிலை எனப்படுகின்றன.

கையறுநிலைப் பாடல்கள் அனைத்தும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவே அமையும். ஆயின், வீரன் ஒருவன் களத்தல் மாய்ந்து பட அவன் தாயிடம் கண்டோர் கூறுவதாக நாடக முறையில் அமைத்துப் பாடும் பாடல் ஒன்றே ஒன்று புறநானூற்றில் உள்ளது (புறம்.270)

கையறுநிலைப் பாடல்களுக்கென்று தனித்த நிலையில் சில பொதுத்தன்மைகள் காணப்படுகின்றன. அவை

1. இறந்த வீரன் அல்லது மன்னனை எண்ணி வருந்துவது.
2. மன்னனின் வெற்றிச் சிறப்பைக் கூறுவது.
3. நாட்டு வளங்களைப் போற்றுவது
4. இறப்பினால் நாட்டுக்கும் வீட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படும் அவலம் பற்றி செய்திகள்.
5. கொடைச்சிறப்பை அறிந்து வந்த இரவலர்கள் மன்னர்கள் இல்லாமையால் வறிதே திரும்பிய நிலை பற்றிய செய்திகள்.
6. முன்னோர் பெருமை பேசுவது.
7. வீரர்களை தெய்வமாக்கிய நடுகல் பற்றியது என்பனவாகும்.

மேற்கூறிய அனைத்துக் கூறுகளும் புறநானூற்றின் கையறுநிலைப் பாடல்களில் காணக்கிடைக்கின்றன. சங்ககாலத்தில் ஆண்பாற், பொண்பாற் புலவர்கள்

மற்றும் புரவலர்கள் கையறுநிலைப் பாடல்களை பாடியுள்ளனர். அவை பின்வரும்அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளது.

கையறு நிலைப் பாடல்களைப் பாடிய புலவர்கள்

ஆண்பாற் புலவர்கள்	பெண்பாற் புலவர்கள்	ஆண்பாற் புரவலர்கள்
1.கழாத்தலையார்	1. மாறோக்கத்து நப்பசைலையார்	1.சேரமான் நெடுஞ்செழியன்
2. கபிலர்	2.பாரிமகளிர்	2. பாரி
3. பொத்தியார்	3.ஔவையார்	3. பிசிராந்தையார்
4. கண்ணாகனார்		4. கோப்பெருஞ்சோழன்
5. பெருஞ்சதுக்கத்துப்பூதனார்		5. கரிகால் பெருவளத்தான்
6. கருங்குழலாதனார்		6. சோழன் நலங்கிள்ளி
7. ஆலந்தூர்கிழார்		7. கிள்ளிவளவன்
8. ஆடுதுறை மாசாத்தனார்		8. நெடுமானஞ்சி
9. வெள்ளெருக்கிடையார்		9. வேள்எவ்வி
10. பெருஞ்சித்திரனார்		10.வெளிமான்
11. பேரெயன் முறுவலார்		11.நெடுஞ்செழியன்
12. குட்டுவன் கீரனார்		12. மூலாங்கிழார்
13. ஏணிச்சேரி முடமோசியார்		13 சிறுகதும்பியார்
14. குடவாயில் கீரத்தனார்		
15. தொடித்தலை விழுத்தண்டியார்		
16. கோட்டம் பலத்து துஞ்சிய மாக்கோதை		
17. இளம்பெண் வணிகனார்.		

இப்புலவர்கள் கையறுநிலைத் தன்மையோடு இயற்கைவளம், உவமை கற்பனை, வீரச்சிறப்பு இவைகள் குறித்த பாடல்களைப் பாடிய பெருமைக்குரியவராவர்.

முடிவுரை

சங்ககால மாந்தரின் புறவாழ்வு மேன்மை மிக்கதாக விளங்கி பான்மையினை நன்கு உணர முடிகின்றது. சங்க கால மாந்தர் வீரம் செறிந்தவராக விளங்கினார். அவர்களின் வீரம் மானம் மிக்க மாண்புடையதாக அமைந்திருந்தது. அவர்களின் போர் அறம் பிறழாததாக அமைந்திருந்தது. அவர்கள் போரை ஒரு கலையாக மதித்துப் போற்றினர். அவர்களின் வீரம் தூயதாக இருந்தது. பாதுகாப்பு கருதியே படை வைத்திருந்தனர். வீரத்திற்கு இழுக்கு நேரின் உயிர்வாழ விரும்பாதவர்களாக விளங்கினர். அத்தகைய வீரம் செறிந்த மறவர்களை பற்றி விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் மறமே மிகுந்திருந்ததனால் எண்ணற்ற போர்கள் நடந்தன. போரில் வீரர்நிலை செயல், வேந்தன்நிலை போரின் உச்சநிலை, தோற்ற வீரர் நிலை, எரியூட்டுதல், நடுகல் ஆகியவற்றை பற்றி சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பண்டைத் தமிழ் வேந்தர்களின் அரசு முடியரசாக விளங்கியது. ஒரு ஆட்சி சிறப்புற இயங்குவதற்குப் பல்வேறு அமைப்புகளும், குழுக்களும் கடமையாற்ற வேண்டிய தேவை உள்ளது. அரசியலமைப்பின் அங்கங்கள், அரசநிருவாகம், பணி, நாட்டுப்பிரிவு, ஆகியவை இவ்வியலில் விரித்து கூறுப்படுகிறது.

சங்க காலத்தில் சிறப்பான முறையில் ஆட்சி செய்த அரசவை, அமைச்சரவை, நாளவை, ஊரவை ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம் போன்ற நிர்வாகம் சார்ந்த அமைப்பாக விளங்கிய கூறுகள் சிறப்பாக இவ்வியலில் எடுத்துக் கூறப்படுகிறது.

தலைவனை இழந்த தலைவி, நட்பின் பிரிவாற்றமையால் ஏற்படும் கையறுநிலையின் பல்வேறு கூறுகள் இவ்வியலில் எடுத்தியம்பப்படுகிறது. அது மட்டுமல்லாது புறநானூற்றில் கையறுநிலைப்பாடிய புலவர்கள் பற்றிய செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ.100
2. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும். கலித்தொகைப. 186
3. இல.தாணம்மாள், சங்க இலக்கியத்தில் மலர்கள். ப. 95.
4. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ.167.
5. மேலது. பா.84.
6. மேலது. பா.84.
7. சி.பாண்டுரங்கன் பண்டைத்தமிழர் போரியல் வாழ்க்கையும் தற்கால போரியல் நடவடிக்கையும்.ப.145.
8. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ.312. 5-6.
9. மேலது. பா.301 :14-16.
10. மேலது. பா.227 :3.
11. மேலது. பா.308 :5-6.
12. மு.வரதராசனார் (உ.ஆ) திருக்குறள் பா.எ.774.
13. மேலது. பா.772
14. கி.ஆ.பெ.விசுவநாதன் (க.ஆ) தமிழர் வாழ்வியல்.ப.16
15. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ.87.
16. க.ப.அறவாணன்,அற்றை நாள் காதலும் வீரமும்,ப.375.
17. V.A. Smith Early History of India London, 1947,P.442
18. V.R.Ramachandra Rao,Dikshitar war in Anciant India,P.72
19. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகம் பா.எ373.
20. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.19:3.
21. N.Subramaniyan Sangam Poetry ப.136.
22. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ.169. 10-12.

23. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.34.2.

24. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பெரும்பாண்.பா.எ.69.

25. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ.314.5-6

26. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.70.1-5.

27. மேலது. பா.எ.90: 32-39.

28. மேலது. பா.எ297.8-10

29. மேலது. பா.எ302 : 9-11.

30. மேலது. பா.எ.303.

31. மேலது. பா.எ.304

32. மேலது. பா.எ.90 : 32-39.

33. மேலது. பா.எ.5.

34. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு மூலமும் பழைய உரையும்,ப.124.

35. மேலது.

36. புலியூர் கேசிகன் (ப.ஆ) ,திருக்குறள் பரிமேலழகர் உரை.26.

37. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு முலமும் பழையஉரையும்,ப.309.

38. மேலது. 292: 6-2

39. மேலது. 275: 5-9

40. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும். ப.16

41. மேலது. 14:17.

42. மேலது.

43. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு மூலமும் பழைய உரையும்,ப.52:1-4.

44. மேலது. 13:1-4.

45. மேலது. 14:17.

46. மேலது.

47. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு மூலமும் பழைய உரையும், ப.52:1-4.

48. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு மூலமும் பழைய உரையும், ப.13 :1-4.

49. மேலது. 14:11.

50. மேலது. 14:10

51. மேலது.

52. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு மூலமும் பழைய உரையும், பா.77:9-13.

53. மேலது. பா.324:14

54. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகம் பா.எ149:8-13.

55. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.81:6-14.

56. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகம் பா.எ19:2.

57. மேலது. பா.294:4

58. மேலது. பா.63

59. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.85.4-13.

60. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு மூலமும் பழையஉரையும்,பா.130:67.

61. மேலது. பா.78:9-12.

62. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.15:02.

63. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரை. பா.எ.125:128.

64. மேலது. பா.145-176.

65. மேலது. பா.392-9.

66. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு. பா.எ.373:1-4.

67. ஔவை சு.துரைசாமி, பதிற்றுப்பத்து, ப.26

68. மேலது.

69. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பட்டினப்பாலை பா.எ.240-268.

70. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.81.15-17

71. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), புறநானூறு மூலமும் பழைய உரையும்,பா.287:3-10.

72. மேலது. பா.40.3-4.

73. மோ.வள்ளுவன் கிளாரன்ஸ், அரசியல் அமைப்புகள், ப.8

74. மேலது.

75. மா.இராசமாணிக்கனார்,தமிழக ஆட்சி,ப.11

76. மேலது.

77. வே.தி.செல்லம்,தமிழக வராறும் பண்பாடும்,ப.75.

78. மேலது.

79. மேலது.

80. மேலது.

81. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம்.பா.எ.67:8-11.

82. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். பா.எ.264:1-4.

83. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம்.பா.எ.35:8-9

84. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். பா.எ.52:12-13.

85. மேலது, அகம்.

86. மோ.வள்ளுவன் கிளாரன்ஸ், அரசியல் அமைப்புகள், ப.8

87. மா.இராசமாணிக்கனார்,தமிழக ஆட்சி,ப.11

88. மேலது.ப.29.

89. வே.தி.செல்லம், தமிழக வராறும் பண்பாடும், ப.73.

90. மேலது.

91. வே.தி.செல்லம்,தமிழக வராறும் பண்பாடும்,ப.75.

92. தமிழ்நாடு அரசு, சங்ககாலம், ப.75.

93. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ.5:3-5

94. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு.பா.எ.56.2.

95. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை. பா.எ.190:6

96. மேலது. ப.400.7

97. மேலது. ப.281: 3

98. தமிழ்நாடு அரசு, சங்ககாலம், ப.527.

99. வே.தி.செல்லம், தமிழக வராறும் பண்பாடும், ப.75.

100. தேவநேயன், தமிழர் நாகரிகமும் பண்பாடும்.ப.134.

101. அரங்க.இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.302.

102. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,மதுரைக்காஞ்சி. பா.எ.499.

103. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), சிலப்பதிகாரம், ப.489.

104. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), சீவகசிந்தாமணி, பா.2:6.

105. அரங்க.இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.222.

106. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள். பா.எ.27 .

107. மேலது.

108. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,புறம். ப.59.

109. உ.வே.சாமிநாதையர்(உ.ஆ),சிலப்பதிகாரம்,ப.131.

110. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். ப.305.

111. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,அகம்.ப.312:15-16.

112. உ.வே.சாமிநாதையர்(உ.ஆ),சிலப்பதிகாரம்,ப.131.

113. வே.தி.செல்லம்,தமிழக வராறும் பண்பாடும்,ப.75.

114. உ.வே.சாமிநாதையர்(உ.ஆ),சிலப்பதிகாரம்,ப.219.

115. வி.கனகபை, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்.ப.114.

116. அரங்க.இராமலிங்கம்,சங்க இலக்கியத்தில் வேந்தர்,ா302.

117. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். பா.எ.71:7.

118. மேலது. பா.157-4

119. மேலது. பா.166-13-14.

120. மேலது.170-9-10.

121. மேலது. பா.34-7

122. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி. பா.எ.129:7.31

123. உ.வே.சாமிநாதையர்(உ.ஆ),சிலப்பதிகாரம்,ப.110.

124. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள். பா.எ .1017.

125. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள். பா.எ .213.

126. ஆசிரிய மாலை, ப.67.

127. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். பா.எ.14:15.

128. மேலது. பா.27.

129. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி. பா.எ.778.

130. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். பா.எ.167:6.

131. மேலது. பா.129:5.

132. மேலது. பா.234:4-5.

133. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். பா.எ.87.

134. மேலது. பா.123-1

135. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி. பா.எ.274.

136. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறம். பா.எ.82.13

137. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகம். பா.எ.77

138. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியர், தென்னிந்தியா பற்றிய வெளிநாட்டார் குறிப்புகள்.ப.22.

139. அரங்க.இராமலிங்கம்,சங்க இலக்கியத்தில் வேந்தர்கள்,ப.219.

140. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,புறம். பா.எ.224.

141. மேலது. பா.239.

142. மேலது. பா.226.

143. மேலது. பா.221.

இயல் ஐந்து

எட்டுத்தொகையில் பல்துறை வாழ்வியல் கூறுகள்

எட்டுத்தொகையில் பல்துறை வாழ்வியல் கூறுகள்

முன்னுரை

சங்க இலக்கியம் தோன்றிய காலத்தில்வாழ்ந்த பழந்தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். வாழ்வில் இடம்பெற்ற இயற்கையை இலக்கியத்திலும் அமைத்தனர். இயற்கை அழகு சங்க இலக்கியங்களில் கண்ணுக்கினிய காட்சியாகத் தீட்டப் பெற்றிருக்கின்றன. இயற்கையோடு இணைந்த தம் அனுபவ உணர்ச்சியை இலக்கியமாகப் படைத்துக் காட்டியிருப்பதால் சங்க இலக்கியங்கள் உயிரோட்டம் பெறுகின்றன. அவை வாழ்க்கையோடு தொடர்பு பெறுகின்றன. இயற்கையோடு ஒன்றாத வாழ்க்கை அழகற்றது, உணர்வற்றது என்ற உண்மையை உணர்த்து கின்றன. மொழியை ஊடகமாகக் கொண்டு வெளிவரும் வாழ்க்கை ஆய்வே இலக்கியம் என்றும், மனிதனை மனிதநேயப் பண்புடன் நேசிக்க வழிமுறைகளை வகுத்துத் தருவது வாழ்வியல் ஆகும். இலக்கியம் மனித வாழ்வின் இலக்குகளை மனிதமனம் ஏற்றுக் கொள்ளும்படி அழகாகச் சொல்லும்போது இலக்கியம் வெற்றிபெறுகிறது.

ஐவகை நிலங்கள்

இயற்கையமைப்புக்கு ஏற்ப மக்கள் வாழ்க்கை நிலப்பிரிவு அவர்களுடைய வாழ்க்கையும் ஐந்து வகையாக இருந்தது. இவற்றில் மக்களின் உணவு, தொழில் வாழ்விடம் வெவ்வேறாக இருந்தன. அவற்றை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

நிலம்

உலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களால் ஆனது. நிலம் என்பது மக்கள் வாழும் இயற்கைச் சூழலுடன் சார்ந்த பகுதி,

> **நிலம் என்பதற்குத் தரை, மண், பூமி, இடம், வயல், பதவி நிலத்திலுள்ளார், எழுத்து, அமைச்சர்களாகிய இசைப்பாட்டின் தானம், வியம், மேன்மாடம், கள்ளிவகை என்று தமிழ் அகராதி பொருள் கூறுகிறது** [1]

நிலமும், பொழுதும் [Space and Time] மக்களின் வாழ்வோடு தொடர்புடையது. இவற்றின் முதன்மை கருதி தொல்காப்பியர் இவை இரண்டையும் முதற்பொருளாகக் குறிப்பிட்டுள்ளார்.

முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழிய இயல்பு உணர்ந்தோரே [2]

என்கிறது. நிலம் பல அணுக்களால் ஆனது நிலத்திலிருந்து ஆகாயம் உயர்ந்துள்ளது. காற்று ஆகாயத்தைச் சார்ந்துள்ளது. காற்றிலிருந்து தீ பிறக்கிறது. தீயோடு மாறுபட்டு நீர் விளங்குகிறது. இதனை,

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புவதை வளியும் [3]

என்கிறது. மேலும் ஐம்பெரும் பூதங்களும் தனித்த நிலையில் இல்லாமல் ஒன்றையொன்றைச் சார்ந்துள்ளதை அறிய முடிகிறது. ஐம்பெரும் பூதங்கள் பற்றிய செய்திகளைப் பதிற்றுப்பத்து, பரிபாடல் போன்ற நூல்களில் காணமுடிகிறது. இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்பதை,

நிலம் தீ நீர் வளி விசும் பொடைந்தும்
கலந்த மயக்கம் உலகம் [4]

என்கிறது தொல்காப்பியம். [Space] என்ற ஆங்கிலச் சொல் தமிழ் மொழியில் இடம், வெளி போன்றவற்றைக் குறிப்பிடுகிறது. இதைப்போன்றே [Time] என்ற சொல்லும் தமிழில், காலம், நேரம், பொழுது [Space and Time] ஆகிய இரண்டையும் முறையே நிலம், இடம், திணை என்றும், காலம், பொழுது என்றும் சுட்டுகின்றார். நிலத்தையும், பொழுதையும் அடிப்படையாகக் கொண்டே ஏனைய பொருள்கள் தோன்றுகின்றன.

திணை

திணை என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. முல்லை, குறிஞ்சி, மருதம்,

நெய்தல், பாலை என்ற இவ்வைந்து நிலங்களின் பாகுபாடு திணை என்று கூறுப்படுகிறது. திணை என்னும் சொல் குடி, நிலம், இல், திண்ணை, குடிப்பிறப்பு, குலம். சொல், பகுப்பு, மண்ணுலகு, ஒழுக்கம், இடம், பூமி, ஒழுகலாறு, நிகழ்ந்த இடம் என்னும் பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. ஆரம்பக் காலத்தில் குடும்பமும், குழுவும் சேர்ந்திருந்த குடியிருப்பைக் குறிப்பிடுகின்றது. கால வளர்ச்சியில் சொற்பொருள் மாறுதலடைந்து மக்களின் ஒழுக்கத்தைச் சுட்டுகின்றது. 'ஒழுக்கத்திணை' என்று கொண்டு அதன் அடிப்படையில் பாகுபாடு செய்தால் திணை ஏழு வகைப்படும் என்று கூறுவர் தொல்காப்பியார். இதனை,

கைக்கிளை முதலாப் பெருந்தினை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப [5]

என்று பாகுபடுத்தியுள்ளார். மேலும் திணை என்பதற்குக் கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டையும் சேர்த்து ஒழுக்கம் என்றே பொருள் கொண்டுள்ளார். நச்சினார்க்கினியர் பொருளதிகாரத்தில் திணை என்பது மக்களின் ஒழுகலாற்றையும் அவ்வொழுகலாற்றிற்குரிய பண்பும் தொழிலுமாகிய செயல்களையும் அவற்றிற்கு அடிப்படையான துணைப்பொருள்களையும் ஒருங்கு சுட்டும் இலக்கண குறியீடாகும். அது இலக்கண முறைமையில் கூறுமிடத்து முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றற்கும் உரிமையுடையதொரு தொகுதிப் பெயராக அமைவதாயிற்று என்கிறார். ச.பாலசுந்தரம் **மக்கள் ஒழுகலாறு அதற்கு அடிப்படையான முதல், கரு, உரி இவற்றின் ஒட்டு மொத்தமே அவற்றின் குறியீடே திணை**[6] திணை என்பதை,

மண் திணிந்த நிலனும் [7]

திணி மணல் அடைகரை [8]

வான் திணைப் புரையோர் [9]

போன்ற தொடர்களால் திண், திணி, திணை உன உருவாகும் சொல் வடிவை அறியலாம். திண்ணிதான நிலத்தையே முதலில் திணை என்னும் சொல் குறித்தது

என்பது இதனால் புலனாகிறது. இத்திணைப் பிறத்தல், இக்குடியில் பிறத்தல் (குறுந்.45) விழுதிணை சிறந்தகுடி (புறம்.27) என்னும் மூத்த விழுதிணை, வசையில் விழுதிணை என்னும் அடைமொழிகளும் இவ்வுண்மையைக் காட்டும். பின் மக்களின் ஒழுக் கத்தையும் இச்சொல் குறித்தது. மலைபடுகடாத்தில் **தொல்திணை மூதூர் என வரும் இடத்தில் பழையதாகிய உயர்ந்த ஒழுக்கத்திணை உடைய பழைய ஊர்கள் என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார். மேலும் திணையை எண்ணெய் விளக்காகிய சுடர் இருந்த இடமும் விளக்கு எனப்பட்டது போல இனி ஒரு சாரார் ஒழுக்கத்தையும் திணை என்ப ஐந்திணையையும் திணை என்ப**[10] இறையனார் களவியல் கூற்றிலிருந்து அறியலாம்.

தொல்காப்பியத்தில் திணை என்பது இலக்கணச் கலைச் சொல்லாகவும், இலக்கியச் கலைச் சொல்லாகவும், பயன்படுகிறது. அறிவு ஒழுக்கங்களால் சிறந்த மக்களைச் சுட்டும் சொற்கள் அஃறிணை என்றும் பாகுப்படுத்தப்படுகிறது. திணை என்பது இலக்கணக் கலைச் சொல்லாகிறது. ஆயினும் பொருளாதிகாரத்தில் அது பெரிதும் இலக்கியக் கலைச் சொல்லாகவே ஆளப்படுகிறது.

திணை – பாகுபாடு

திணை என்பது அகம், புறம் என இருவகைப்பட்டது. **அகப்பொருளாவது போக நுகர்ச்சி ஆகலான் அதனால் ஆயப்பயன்தானே அறிதலின் அகம் என்றார். புறப் பொருளாவது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆயபயன் பிறருக்குப்புலனாதலின் புறம் என்றார்**[11] இளம்பூரணர் இக்கருத்தைப் பின்பற்றி நச்சினார்க்கினியர் சிறிது விரிவான விளக்கம் தருகிறார். ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூறுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறுப் படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வை நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளதலின் அதனை அகம் என்றார். எனவே அகத்தை நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்கிறது ஓர் ஆகுபெயராம் இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையோர் தாமேயன்றி எல்லோர்க்கும் துய்த்து உணரப்படுதலின் இவை இவ்வாறிருந்தெனப் பிறருக்கும் கூறப் படுதலின்

அவை புறமெனப்படும் என்கிறார் நச்சினார்கினியர்[12]

அகத்திணை மருங்கின் அரிதல்ப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பன் [13]

என்று அகத்திணை ஒரு வகை என்பதும் அவ்வகை பற்றிக் குற்றமறத் தெரிந்து கொண்டவர்களுக்கும் புறத்திணை என்ற வகையின் இலக்கணம் எளிதில் புணலாகும் என்பதும் உணர்த்தப்படுகின்றன. அகத்திணையின் உள்வகைகள் ஏழும் திணையென்றே பாகுபாடு செய்யப்படுகின்றன. இதனை,

நடுவண் ஐந்திணை நடுவனது ஒழிய[14]

என்று அகத்திணை ஏழனுள் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இடைப்பட்ட அன்பின் ஐந்திணைகளுடன் நடுவனதாகிய பாலைத்திணை தவிர்த்து ஏனைய நான்கு திணைகளும் தனக்கென தனிநிலம் பெறும் என்பது குறிப்பிடப்படுகின்றது. இதனால் அவ்வந்நிலத்தின் பெயரால் தான் வகைப்படுத்தப்பட்டுள்ளன. என்பது புலனாகின்றன. எனினும் அவை இங்கு இலக்கிய வகைகள் ஆன பிறகு அவற்றைக் கொண்டு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாகப் பிரித்தல் உள்ள நுட்பமும் விதியும் நுணுகி ஆராயத்தக்கன இதனை மேலும்.

புணர்தல், பிரிதல், இருத்தல். இரங்கல்
ஊடல், இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே [15]

என்கிறார் தொல்காப்பியர். இவற்றில் முதல், கரு, உரி என்ற மூன்றும் ஒத்த மதிப்புடையன போல மேற்போக்காகக் காண்போர்க்குத் தோன்றும். நிலமோ பொழுதோ இல்லாமல் வாழ்வில்லை. தெய்வத்தின் திருவருள் உணவு முதலியன இல்லாமலும் வாழ்வில்லை இவை இல்லாமல் உரிப்பொருள் என்னும் ஒழுக்க நெறிக்கு இடமேயில்லை ஆதலால் மூன்றாவதாகச் சொல்லியுள்ள உரிப்பொருள் தரத்தலால் சிறப்புபெற்றுளது என்பதை,

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே

நவலுங் காலை முறை சிறந்தனவே [16]

என்கிறார் தொல்காப்பியர், முதற்பொருளும், கருப்பொருளும் கலந்து உரிப் பொருளைச் சிறப்பிக்கலாம். அவற்றுள் ஏதேனும் ஒன்று மட்டும் வந்து உரிப் பொருளைச் சிறப்பிக்கலாம். அல்லது முதலும் கருவும் வராமலேயே உரிப்பொருளை மட்டும் அமைத்துச் சிறப்பிக்கலாம். முதலோ கருவோ இல்லா விட்டாலும் உரிப்பொருள் கட்டாயம் வேண்டும். முதலும் கருவும் வந்தாலும், வராவிட்டாலும் **ஒழுக்கத்தைச் சுட்டும்** உரிப்பொருளுக்கே தலைமையும் சிறப்பும் தரப்படும். முதற்பொருள் என்னும் பிரிவில் நிலமும் பொழுதும் அடங்கும் கருப்பொருள் என்னும் பிரிவில் தெய்வம். உணவு முதலான வாழ்க்கைத் துணைப்பொருள்கள் அடங்கும். உரிப்பொருள் என்னும் பிரிவில் அந்தந்த ஒழுகலாறு அடங்குவதால் சிறப்பைப் பெற்றுள்ளது. உரிப்பொருள் இல்லையேல் பொருட்பயன் இல்லை என்கிறார் நச்சினார்க்கினியர்.

அகத்திணை

இவ்வுலகத்தில் மக்களின் ஆறாவது அறிவிற்கும் காரணமாகிய மனம், புத்தி, சித்தம், முனைப்பு என்னும் கூறுகளைக் கொண்டு விளங்கியதால் மக்களைக் தமிழ் நூலோர் உயர்திணை என வகுத்தனர். அகவாழ்விற்குரிய பல்வேறு பொருட்களின் தேவைகளை நோக்கிய மக்கட் கூட்டமே சமுதாயம் ஆகும். அச்சமுதாய மக்களின் மேன்மை பொருந்திய வாழ்க்கை முறைகளைக் காட்டும் கண்ணாடிகளாக இலக்கியங்கள் திகழ்கின்றன.

அகத்திணை – கைக்கிளை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை பெருந்திணை என ஏழு வகைகளை உடையதாகும்.

புறத்திணை விளக்கம்

புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் முன்னைய நான்கும் போர் வகைகள் பற்றியன. வெட்சி என்பது ஆநிரை கவர்தலும், மீட்டலும் பற்றிய போராகும் பிற்காலத்தில் இதனை இரண்டு வகைகளாக்கி வெட்சி, கரந்தை எனப்பிரித்தனர்.

வஞ்சி என்பது நிலத்தைக் கவர்தலும், காத்தலும் பற்றிய போராகும். இதனையும் பிற்காலத்தவர் இரு பிரிவுகளாக்கிவிட்டர். நிலத்தைக் கவரும் போர் வஞ்சி எனவும் அதைத் தடுத்து நிறுத்தும் போர் காஞ்சி எனவும் வகுக்கப்பட்டன.

உழிஞை என்பது பெரிய கோட்டை கொத்தளங்களுள்ள தலை நகரங்களில் நடக்கும் மதில்போர் ஆகும். இதனையும் பிற்காலத்தில் இரண்டு பிரிவுகள் ஆக்கிவிட்டனர். மதிலைத் தாக்கும் போர் உழிஞை எனவும் அதைத் தடுத்துக் காக்கும் போர் நொச்சி எனவும் பிரிக்கப்பட்டன.

தொல்காப்பியர் கரந்தை, நொச்சி என்பனவற்றை உள்துறைகளாகவே சுட்டினார். அவை பின்பு தனித் திணைகளாக்கப்பட்டன. தும்பை என்பது மன்னர்கள் தத்தம் வலிமையை நிலைநாட்டுதல் பொருட்டு நேருக்கு நேர் நின்று போர் புரிவதாகும்.

தொல்காப்பியர் கருத்துப்படி வாகை என்பது போரில் ஏற்படும் வெற்றியையும் வாழ்க்கையில் பிறரினும் மேம்படும் வெற்றிகளையும் குறிக்கும் காஞ்சி போரினால் ஏற்படும் இடர்களையும் மற்றும் பொதுவான அவலம் பற்றிய இரங்கலையும் பாடுவதாகும்.

பாடாண் என்பது கொடை, அளி, செங்கோல், வீரம் முதலிய சிறப்புகளைப் புனைவதாகும். தொல்காப்பியரை அடுத்து வந்தவர்கள், பன்னிரெண்டு என அதிகப்படுத்தினர். வெட்சி, கரந்தை, பொதுவியல், கைக்கிளை பெருந்திணை என்பன அவை,

அகமும் புறமுமாய் அமைந்த பழந்தமிழ் பாடல்களைச் சங்க இலக்கியம் எனக் குறிப்பது காலப் பின்னணியையும் சமுதாயச் சூழ்நிலையையும் பற்றிய பெயரே ஆகும். திணை இலக்கியம் என்பதே வகைமை பற்றிய பொருத்தமான பெயராகும்.

முதற்பொருள்

முதற்பொருளை நிலம், பொழுது என்று இரு வகையாகப் பிரிக்கலாம். பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டு மணி முதல் ஆறு மணி வரை வைகறை

என்றும், பகற்பொழுதின் முதல் பாதி ஆறு மணி முதல் பத்து மணி வரை காலைப்பொழுது என்றும் அழைக்கப்படுகிறது. **நிலமும் பொழுதும் இரண்டறக் கலந்து நிற்பதே இயற்கை எனலாம். நிலத்தைப் புனையும் பொழுது பருவமும் உடனியைந்து நிற்கும் ஒன்றைவிட்டு ஒன்றைத் தனியே புனைவதென்பது இயலாது இதனை நன்குணர்ந்து தமிழ்ச்சான்றோர் நிலத்தையும், பொழுதையும் இணைத்து முதற்பொருள் என்றனர்**[17] என்கிறார், தமிழண்ணல், இதனை;

பொழுது

பெரும்பொழுது **சிறுபொழுது**

பெரும்பொழுது

வ.எண்.	**பொழுது**	**மாதம்**
1.	இளவேனில்	சித்திரை, வைகாசி
2.	முதுவேனில்	ஆனி, ஆடி
3.	கார்	ஆவணி, புரட்டாசி
4.	குளிர்	ஐப்பசி, கார்த்திகை
5.	முன்பனி	மார்கழி, தை
6.	பின்பனி	மாசி, பங்குனி

சிறு பொழுது

வ.எண்.	**பொழுது**	**மாதம்**
1.	காலை	காலை 6 மணி முதல் 10 மணி வரையுள்ள நேரம்
2.	நண்பகல்	காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை
3.	ஏற்பாடு	பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை சூரியன் மறையும் வரை
4.	மாலை	மாலை 6 மணி முதல் முன் இரவு 10 மணிவரை – முன் இரவு
5.	யாமம்	இரவு 10 மணி முதல் பின் இரவு 2 மணி வரை – நள்ளிரவு
6.	வைகறை	விடியற்காலம் 2 மணி முதல் 6 மணி வரை – பின் இரவு.

இவ்வாறு அறிய முடிகிறது.

கருப்பொருள்

ஒவ்வொரு திணையின் இயல்புக்கு ஏற்ப அந்தந்த நிலத்தில் வாழும் மக்களையும் பொருள்கையையும் கருப்பொருள் பொழுதினும் முதல் பொருளாகிய நிலத்தினும் பொழுதினும் தோன்றும் பொருள்கள் கருப்பொருள் ஆகும். இவை அந்தந்த நிலத்திற்குரிய மக்கள் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து காணப்படும். எனவே ஒவ்வொரு திணைக்குரிய நிலத்தில் வாழும் மக்கள் அவர்களின் உணவு ஊர் மற்றும் பயன்படுத்திய பொருள்கள் இவற்றுடன் விலங்கு, பறவை, செடி, கொடி முதலியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டனர். **நிலம் பொழுதுகளின் இணைவால் உருவாகும் விளைப்பொருள்கள் மரஞ்செடி, கொடிகள், விலங்குகள், பறவைகள் போலவனவும் அவ்வந்நிலத்திற்குரிய மக்களின் தொழில்கள் யாழ் முதலிய இசைக் கருவிகள் வழிவடு தெய்வங்கள் போல்வனவும் அவ்வற்றுக்குரிய நிலத்திற்குரியப் பாடல்களில் தான் இடம்பெறும் இங்ஙனம் இயற்கைப் புனைவாகவும் இடம் பின்னணியாகவும் அமைய ஏதுவனவற்றைக் கருப்பொருள் என்றனர்.**[18] என்று தமிழண்ணல் கூறுகிறார்.

அந்தந்த நிலத்திற்கேற்ற கருப்பொருளைத் தெய்வம் மக்கள், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்ற அடிப்படையில் வைத்துப் பிரிப்பர். இதனை,

தெய்வம் உணாவே மாமரம் புன்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகைப் பிறவும் கருவென மொழிப [19]

என்கிறார் தொல்காப்பியர்.

உரிப்பொருள்

காதல் வாழ்வில் தலைவன் தலைவியிடையே காணப்படும் உணர்ச்சிகள் ஒவ்வொரு திணைக்கும் பிரிக்கப்பட்டன. அவை அந்தந்த திணக்குரிய உரிப்பொருள் ஆகும். இதனை,

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலை திணைக்குரிப் பொருளே [20]

என்கிறது தொல்காப்பியம்.

வ.எண்.	நிலம்	ஒழுக்கம்
1.	குறிஞ்சி	புணர்தலும், புணர்தல் நிமித்தமும்
2.	முல்லை	இருத்தலும், இருத்தல் நிமித்தமும்
3.	மருதம்	ஊடலும், ஊடல் நிமித்தமும்
4.	நெய்தல்	இரங்கலும் இரங்கல், நிமித்தமும்
5.	பாலை	பிரிதலும், பிரிதல் நிமித்தமும்

குறிஞ்சித்திணை

குறிஞ்சி நிலத்தில் அதிகம் பூக்கும் மலர் குறிஞ்சி என்பதால் இப்பெயர் பெற்றது. இம்மலர், மிகுதியான தேனை உடையது. இதன் 'தேனைப் பெருந்தேன் என்று தேவகுலத்தார் என்பது புலவர் பலர் கூறுகின்றனர். அதன் தோல்கள் கடுமையாக இருக்கும். மலையிலும் மலை சார்ந்த இடங்களிலும் இக்குறிஞ்சி வளரும். மலைப் பின்னணியில் தலைவன் தலைவியின் காதல் ஒழுகலாறுகளைப் பாடும் பாடல்கள் திணையைச் சார்ந்தவையாகும். களவு என்னும் கைக்கோளில் அமைந்த பாடல்கள் அனைத்தும் குறிஞ்சி என்று கொள்ளப்படும்.'

சங்க இலக்கியங்களை எட்டுத்தொகையில் 489 பாடல்களும் பத்துப்பாட்டில் குறிஞ்சிப் பாட்டு ஒன்று சேர்ந்து மொத்தம் 490 பாடல்களும் குறிஞ்சித்திணையைப் பற்றிப் பாடுகின்றன என்று [21]

தெய்வம் – முருகன்

குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருள்களில் முதலாவதாகத் தெய்வம் இடம் பெறுகின்றது. இத்திணைக்குரிய தெய்வம் முருகன் ஆவான். சங்க இலக்கியங்களில் முருகப்பெருமான் பற்றி வழிபாடுதான் அதிகமாகக் காணப்படுகிறது. முருகப்

பெருமானுடைய மேனியழகும் அவனுடைய சாதனைத் திறமும், திருவடியின் பெருமையும் இந்த உலகத்தைக் காப்பதில் அவனுக்கு இருக்கும் பொறுப்புணர்ச்சியும் குறுந்தொகையில் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் வாழ்த்திப் பாடப்பட்டுள்ளன. கடவுள் நம்பிக்கை என்பது அச்சத்தால் உருவாகியிருக்க வேண்டும் என்று சொல்லு கிறவர்களுக்குச் **சேவலங்கொடியோன் காக்கிறான்** என்ற அடி கடவுள் இந்த உலகத்தைக் காப்பதால் அவனை வழிபட வேண்டிய கடமை என்ற கருத்தை வலியுறுத்துகிறது. முருகன் போரில் சிறந்தவன் என்பதை,

வெல்போர் சே எய்
செருமிரு சே எய்
சேருவஞ் சே எய் [22]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

முருகனைப் போல வேடம் பூண்ட கையில் வேலேந்தி ஆடும் மலைநாட்டுப் பூசாரி வேலன் எனப்பட்டான். அவன் குறமகனது நோய் முருகனால் வந்ததென்று ஐயுறின் அக்கடவுளை அமைதி செய்ய ஒருகளத்தை அமைத்துப் பூசையிட்டு ஆடிப்பாடி வழிபடுவது வழக்கம். இதனை,

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் [23]
வெறியாட்டு அயர்ந்த காந்தளம் [24]

என்கிறது தொல்காப்பியம். குறிஞ்சி நிலத்து மக்கள் வெறியாடுவதற்கு முன்னர் வெறியாடு களத்தை தூய்மை செய்தனர். வேலுக்கு மாலை சூட்டினர். பின் ஆரவாரத்துடன் முருகனைப் புகழ்ந்து பாடி ஆட்டைப்புலி கொடுத்து அதன் இரத்தத்தைத் தினையுடன் கலந்து முருகன் மீது தூவி வழிபட்டனர் என்பதை,

களம் நன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப்பாடிப், பலி கொடுத் [25]

என்று அகநானூறும்,

சிறுதிணை மலரோடு விரைஇ மறியறுத்து

வாரணக் கொடியொரு வயிற்பட நறீஇ

யூடுர்ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழுவனும் [26]

என்று திருமுருகாற்றுப்படையும் குறவர்களின் வழிபாட்டு முறையை விரிவாகக் கூறுகின்றன. வேலன் ஆட அவனோரு 'கானவரும்' ஆடுவர். சாதிக்காய், தக்கோலக்காய், காட்டு மல்லிகை வெண்டாளி மலர் என்பவை தம்முள் விரவக் கட்டின கண்ணியோடு சிவந்த ஆடையையும் அணிந்தான். வெட்சி மாலையைச் சூடினான். வேலன் மலியேறிச் சேவற்கொடியை உயர்த்திக் கொடியைத் தோளில் அணிந்து குரவையாடிக் கொண்டிருந்த குறமகளிரோடு கைகோத்து குரவை ஆடியதை,

கொடுந்தொழில் வல்வறி கொலைஇய கானவர்

நீடமை விளைந்த தேக்கட் டேறந் [27]

என்கிறது. முருகனை நினைத்து பலி அரசியாகிய சிறிய தினையரிசியைப் பூக்களோடு கலந்தும், ஆட்டை அறுத்தும், கோழிக் கொடியோடு ஓரிடத்தில் நிலைநாட்டி விழா எடுத்தால் தலைவயின் காதல் நோய் தீரும் என்று நற்றாய் நம்பினாள் என்பதை,

வெறி என உணர்ந்த உள்ளமொடுமறி அறுத்து

அன்னை அயரும் முருகு [28]

என்கிறது. முருகன் தமிழகத்து மரபுகளுக்கேற்ப உருவான கடவுள் என்பதை இவ்வழிப்பாட்டின் மூலம் நன்கு அறிய முடிகிறது. குறவர்களால் செய்யப்படும் வழிபாட்டு முறையில் ஆகமங்களோ பார்ப்பனர்களோ இடம் பெறவில்லை. இம்மக்கள் வழிவழியாக நடத்திய வழிபாட்டு முறையையே பின்பற்றி இருக்கினறனர். இத்தகைய வழிபாட்டின் மூலமாகவே தங்கள் கடவுள் வெளிப்படுவான் என்று நம்பினர். குறிஞ்சி மக்களிடையே வணங்கப்பட்ட முருகன் புறநானூற்றில் ஞாலங்காக்கும் நால்வருள் ஒருவனாக உயர்கிறான். பரிபாடலில் இவனுக்கெனப் பல பாடல்கள் அமைந்திருப்பதும் இவனது செல்வாக்கின் வளர்ச்சியைக் காட்டுகிறது. திருமுருகாற்றுப்படையிலே இந்திரன் முதலிய தேவர்களும் வழிபடுவதற்குரிய கடவுளாக உள்ளதை உணர முடிகிறது.

குடில்கள்

குறிஞ்சி நிலத்து மக்களாகிய குறவர்கள் தினைத்தாளால் வேயப்பட்ட சிறு குடில்களிலும், புல்லால் வேயப்பட்ட குடில்களிலும், வரகால் வேய்ந்த குடில்களிலும் வாழ்ந்தனர் என்பதை,

இருவி வேய்ந்த குறுகாற் குரம்பை [29]

என்ற பாடலடிகளால் அறிய முடிகிறது. மலையில் விலங்கினங்கள் உள்ளே நுழையாத அளவிற்குக் கோழிக்கூடு போன்ற குடில்கள் வாழ்ந்தனர். மலைவாழ் மக்களாகிய குறவர்கள் எளிமையான குடிசையில் வாழ்ந்தனர். மலைச்சரிவுகளிலும் மேடு பள்ளங்களாகிய நில அமைப்பு அறிந்து தங்களிடம் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டே தங்கள் குடில்களை அமைத்துக் கொண்டனர். குறிஞ்சி மலைசார்ந்த நிலமாக இருப்பதால் இந்நிலம் சிறுசிறு மணல் கலந்த பகுதியாகக் காணப்படும். இக்குறிஞ்சி நிலமக்கள் வேட்டையாடுதலையும் இயற்கையாகக் கிடைக்கும் காய்கனி, கிழங்கு, கொடை, தேன் போன்ற உணவுப் பொருள்களைச் சேகரிப்பதையும், பயிரிடு தலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். என்பதை,

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வருங்கையும் வருமே [30]

காடு தேர் வேட்டத்து விளிவு இடம் பெறா அது வரி அதன் படுத்த சேர்கை[31]

ஒட்டு இயல் பிழையா வயநாய் பிற்பட வேட்டம் போகிய குறவன் காட்ட [32]

என்ற பாடல் அடிகளால் அறிய முடிகின்றது. குறிஞ்சி நிலத்தில் வேட்டையாடுதல் நிகழ்ந்ததையும் அப்போது யானை, பறவை, முள்ளம்பன்றி, புலி போன்றவை வேட்டையாடப்பட்டதையும் வேட்டைக்கு நாய்கள் துணையாகப் பயன்பட்டதையும் அறிய முடிகிறது. குறிஞ்சிப் பூக்களைக் கொண்டு மலைப்பகுதியில் கரிய மரக்கிளைகளில் பெரிய தேனை வண்டுகள் சேகரித்து வைத்திருக்கும் என்பதை,

கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் [33]

என்கிறது குறுந்தொகை.

குறிஞ்சிப் பாட்டில் வாழ்வியல் செய்திகளும் நிறைந்துள்ளன. குறிஞ்சிப்பாட்டில் தலைவியின் காதலைத் தோழி செவிலிக்குக் கூறச் செவிலி நாற்றாயிடம் கூறுவாள். தலைவனுக்குத் தலைவியை மணம் செய்வதே அறநெறியாகும். அப்படி இல்லை என்றால் தலைவியின் உயிருக்குத் தீமை ஏற்படும் என அறிவிக்கின்றாள். இதை உணர்ந்த பெற்றோரும் அவள் நினைத்தவனையே மணம் செய்து கொடுத்ததை,

இருவர்கட் குற்றமும் இல்லையேல் என்று தெருமந்து சாய்ந்தார் தலை

என்கிறது குறிஞ்சிப்பாட்டு. மேலும் குறிஞ்சிப் பாட்டின் அமைப்பும் அழகும் பற்றிக் கூறும்போது,

நின்குற்றம் இல்லை நிரை தொடியும் பண்புடையவள்
என் குற்றம் யானும் உணர்கலேன் பொன்குற்று

என்று தினைப்புனத்தைக் காக்கத் தலைவியை அனுப்பிய தாயும் தவறு செய்யவில்லை தலைவியும், தலைவனும் குற்றம் செய்யவில்லை என்கிறாள் தோழி. தலைவன், தலைவி காதல் தோழியின் உதவியால் மணம்புரிந்து வாழும் வாழ்வியல் நிகழ்ச்சிகள் பலவற்றைக் கூறுகின்றது குறிஞ்சிப்பாட்டு.

இந்நிலத்திற்குரிய பெரும்பொழுது கூதிர்காலம், சிறுபொழுது, யாமம், முன்பனிக் காலமாகிய மார்கழித்திங்களும், தைத்திங்களும் குறிஞ்சித்திணைக்குரியதாகச் சுட்டப்படுகிறது. இந்நிலம் மலைப்பகுதியாக இருப்பதால் குளிர் நிறைந்து காணப்படும். இந்தச் சூழல் உயிரினங்கள் புணர்வதற்கு ஏதுவாக அமைகிறது. இந்நிலத் தெய்வமாகிய முருகன் பற்றிய குறிப்புகளும் வழிபாடுகளுள் ஒன்றாகிய வெறியாட்டு செய்திகளும் குறிஞ்சிப்பாட்டில் இடம் பெறுகின்றன. இவற்றினைப் பின்வரும் அட்டவணை உணர்த்துகிறது.

1. நிலம்	மலையும் மலை சார்ந்த இடமும்	
2. பொழுது	பெரும்பொழுது	குளிர்காலமும், முன்பனிக் காலமும்
	சிறுபொழுது	யாமம்

கருப்பொருள்

வ.எண்.	கருப்பொருள்	குறிஞ்சி நிலம்
1.	தெய்வம்	முருகன்
2.	உயர்ந்தோர்	பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி
3.	தாழ்ந்தோர்	குறவர், கானவர், குறத்தியர்
4.	உணவு	மலைநெல், தினை, மூங்கில் அரசி
5.	புள்	கிளி, மயில்
6.	விலங்கு	யானை, புலி, கரடி, சிங்கம்
7.	ஊர்	சிறுகுடி
8.	நீர்	அருவிநீர், சுனை நீர்
9.	பூ	குறிஞ்சிப்பூ, காந்தள்பூ, வேங்கைப்பூ
10.	மரம்	சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்
11.	பறை	தொண்டகப்பறை
12.	யாழ்	குறிஞ்சியாழ்
13.	பண்	குறிஞ்சிப்பண்
14.	தொழில்	வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், அருவிநீராடல், சுனைநீராடல்

உரிப்பொருள்

1.	உரிப்பொருள்	புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

முல்லைத்திணை

காட்டுப்பகுதிகளில் அதிகம் பூப்பது முல்லை மலர் என்பதால், இப்பெயர் வந்தது. மேலும் **முல்லை** என்ற சொல்லுக்கு **இருத்தல்** என்ற பொருளும் உண்டு. ஐந்து திணைகளில் முல்லையை முதலில் வைத்ததற்குக் காரணம் கூறும் நச்சினார்க்கினியர், **இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கமாதலின் கற்பொடு பொருந்திக்**

கணவன் சொல் பிழையாது. இல்லிருந்து நல்லறம் செய்தல் மகளிரது இயற்கை பண்பானதால் முல்லையானது முதலில் கூறப்பட்டது. எனவே முல்லையென்ற சொல்லுக்குப் பொருள் இருத்தலாயிற்று[34] என்று விளக்குவர்.

சங்க இலக்கியத்தில் 234 பாடல்கள், முல்லைத் திணைக்குரிய பாடல்கள் ஐங்குறு நூற்றில் ஐந்தாவதாக முல்லைத் திணைப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களைப் பாடியவர் பேயனார் ஆவார். முல்லைக்குரிய பாடுபொருள்கள் அனைத்தும் ஐங்குறு நூற்றில் முழுமையாக இடம் பெற்றுள்ளன. குறுந்தொகையில் 45 பாடல்கள் முல்லை திணைப்பாடல்கள் இதில் பெரும்பாலும் தலைவியின் கூற்றுக்களே இடம் பெறுகின்றன. நற்றிணையால் 30 பாடல்கள் முல்லைத்திணைப் பாடல்கள் அகநானூற்றில் 4, 14 எனத் தொடங்கும் எண்களில் அமைந்த பாடல்கள் 40 முல்லைக்குரியவை. தலைவனது பாசறையிருப்பும், பாசறைத்தொழில் முடித்துத் திரும்பும் நிலையுமாகத் தலைவன் கூற்றுகளும், கானம், கார், மாலை, ஆகியவற்றின் வருணனைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. கலித்தொகையில் 17 பாடல்கள் முல்லைக்குரியனவாக உள்ளன. மற்றத்தொகை நூல்களில் உள்ள முல்லைப் பாடல்களுக்கும் கலித்தொகையில் வரும். முல்லைப்பாடல்களுக்கும் வேற்றுமை உள்ளன. முதல் 7 பாடல்களில் ஏறுதழுவல், குரவைக்கூத்தாடுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

தெய்வம் திருமால்

முல்லைத்திணைக்குரிய கருப்பொருள்களில் முதலாவதாகத் தெய்வம் இடம்பெறுகின்றது. இத்திணைக்குரிய தெய்வம் திருமால். முல்லை நிலத்து மக்களாகிய ஆயர்களால் வணங்கப்பட்ட தெய்வம் மாயோன். இக்கடவுள் மால் என்றும் மாயோன் என்றும் குறிக்கப்பட்டுள்ளார். **மால்** என்றால் **கரியவன்** என்ற பொருளும் உண்டு. இதனை,

நனந்தலை யுலகம் வளைஇ நேமியோடு
நலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை [35]

என்றும்,

கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்

மாயோன் மேய வோண நன்னாள் [36]

என்றும்,

மண்ணுறு திருமணி புரையு மேனி

விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோன் [37]

என்றும், பாடியத்திலிருந்து அறியமுடிகிறது. மாயோன் என்ற சொல்லை ஆராயும் பாவாணர் இந்தச் சொல் எப்படி உருவானது என்பதை **மாயோன்** மால், விண்டு ஆகிய சொற்கள் ஒரே பொருளைத் தருகின்றன என்கிறார். விண்டு எனும் சொல்லுக்கு மேகம், வானம், திருமால் என்னும் பொருள்களும் கிடைக்கின்றன. திருமால் என்னும் பொருள்களும் கிடைக்கின்றன. திருமால் நன்றாகக் கழுவப்பட்ட நீலமணி போன்ற மேனியை உடையவன் விண்ணுயர் பொற்கொடி ஏந்தியவன் என்பதை,

மண்ணுறு திருமணி புடைரயு மேனி

விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோன் [38]

என்று புறம் சுட்டிக்காட்டுகிறது. ஆலிலையின் மேல் எழுந்தருளிய திருமால் என்ற பொருளைத் தருகிற விதத்தில்,

ஆலமர் கடவுள் [39]

என்றும் ஆழியை ஏந்திருப்பவன் என்பதை,

நீனிற வுருவி னேமியோன் [40]

என்றும் கூறுகின்றன. அவனது நிறம் மலையைப் போன்று இருப்பதை,

மாயோன் ன்ன மால்வரை கவாஅன் [41]

என்ற நற்றிணைப் பாடல் அடியும் அவனது வாமன அவதாரத்தைப் பற்றி,

நீர்செல நிமிர்ந்த மா அல் [42]

என்ற முல்லைப்பாட்டு அடியும் கூறுகின்றன. இறைவனுக்கு உரிய விழாவினை

முல்லை நிலத்து மக்கள் எவ்வாறு எடுத்தனர் என்பதைச் சில சான்றுகளைக் கொண்டு அறிய முடிகிறது. மின்னல் வீசக்கூடிய அணிகலன்களை அணிந்து கொண்டிருக்கும் அழகிய பெண்கள் துணைவரோடும் அழகான தாமரையைப் போன்ற முகங்களை உடைய குழந்தைகளோடும் கூறுகின்ற காவல் தொழிலைச் செய்யும் கடவுளாகிய திருமாலைப் பூக்களையும் புகையையும் கொண்டு வணங்கினர் என்பதை,

திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பிணர்த் தழிஇத் தாம் புணர்ந்து முயங்கித் [43]

என்கிறது மதுரைக்காஞ்சி. திருமாலுக்குரிய ஓணவிழா நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

கணங்கொள் அவணர்க கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள் [44]

என்ற பாடலால் அறியலாம். பல்வேறு விதத்தில் திருமாலின் இயல்புகள் சொல்லப்பட்ட போதும் பண்டைய இலக்கியங்களில் திருமால் ஒரு பெருந் தெய்வமாகக் காட்டப் படவில்லை. என்று சிலர் கூறுவர். வேத நூல்களும் திருமாலை ஒரு சிறு தெய்வமாகக் குறித்துள்ளதை அறநூல்களில் உள்ள சில வழிபாட்டுப் பகுதிகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இதே கருத்தை வித்தியானந்தன் தமிழர் சால்பு எனும் நூலில் இதிகாசங்களில் கண்ணன் விஷ்ணுவின் ஒரு அவதாரமாகவும், ஒரு போர் வீரனாகவும் காட்சியளிக்கிறான். அவனை ஒரு பெருந்தெய்வமாக அக்காலத்தில் மக்கள் கருதவில்லை. ஆரியர் திராவிடரிடமிருந்தே கண்ணன் வழிபாட்டைப் பெற்றிருத்தல் வேண்டும். கண்ணன் உண்மையில் ஓரிடத்தில் நிலையாக இருந்து வாழ்ந்த இடையர் குலத்தெய்வமே. வேதங்களில் சிறு தெய்வமாகத் திருமால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பின்னர் ஒரு பெருந்தெய்வமாக உருவாவதற்குத் தேவையான வழிபாட்டு முறைகளைத் தந்த பெருமை சங்ககால முல்லைநிலத்து மக்களுக்கே உரியது என்பதைக் காணமுடிகிறது. திருமால் முல்லைநிலத்தெய்வமாக வழிபட்டாலும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே முத்தொழில்களுள் காக்கும் கடவுளாக உயர்த்தப்பட்டிருக்கிறான் என்பதை,

மாயோன் மேய மன்பெருஞ்சிறப்பின்

தாவா விழுப்புகழ் பூவை நிலையும் [45]

என்னும் அடிகளால் அறியலாம். திருவுடை மன்னரைக் காணும் போதெல்லாம் திருமாலின் நினைவே மக்கள் மனத்தில் பசுமையாகப் பதிந்திருக்கிறது. திருமாலை முழுமுதற் கடவுள் நிலைக்கு உயர்த்தும் நிலைமையைப் பரிபாடல் காணமுடிகிறது.

குடில்கள்

முல்லை நிலத்து ஆயர் குடில், வரகுக்கற்றையால் வேயப்பட்டது. ஆடுகள் தின்னக்கூடிய அளவிற்குத் தலைகளால் செய்த குறுகிய கால்களைக் கொண்டது. அதன் வெளிப்புறம் திடாத்தோலைத் பாயாகக் கொண்டு அதில் துஞ்சும் காவலை உடையதாக இருப்பதை,

குளகு அரை யாத்த குறுங்கால் குரம்பசைச்

செற்றை வாயில் செறிகெழிக் கதவின் [46]

என்று பெரும் பாணாற்றுப்படை கூறுகின்றது. இரவு நேரங்களில் கொடிய விலங்குகள் குடிலை அணுகாமல் இருப்பதற்காகக் குடிலின் முன்னர் நெருப்பை எரித்தனர் இதனை,

மெய்யுரித் தியற்றிய மதியட் பள்ளித்

தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின் [47]

என்கிறது. இவற்றின் மூலம் முல்லை நிலத்து மக்கள் எளிமையாகக் குடிசைகளை அமைத்து வாழ்ந்ததை அறிய முடிகிறது.

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. முல்லை நில மக்கள் கால் நடைகளை வளர்ப்பதை முக்கிய தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர்.

ஆடு தலைத் துருவன் தோடுதலைப் பெயர்க்கும்

வன் கை இடையன் [48]

என்ற பாடல் அடிகள் ஆடு, மாட்டை முல்லை நிலமக்கள் மேய்த்ததை உணர்த்து

கின்றன. மேலும் ஆடு மேய்ப்பரை இடையன். இடைமகன் என்றும் மாடு மேய்ப்பவரைக் கோவலர் என்றும் அழைத்ததை அறிய முடிகிறது. மேலும் அவர்களது முக்கிய உணவுப் பொருளாகப் பால் இருந்ததையும் சிறுவர்கள் கன்றுகளை மேய்க்கச் சென்றதையும்,

மன்ற எருமை மலர்தலைக் காரான்
இன்தீம் பாற்கயம் கொன்மார் கன்றுவிட்டு [49]

என்கிறது மேலும் இடையர் இரவில் நரி போன்ற விலங்கினங்களிடமிருந்து ஆடுகளைக் காக்க ஒலி எழுப்பிக் கொண்டு இருந்தனர். இதன் மூலம் விலங்குகள் இருந்ததையும் ஆடுகள் வளர்த்ததையும் அதற்குக் காவலர் இருந்ததையும் அறியமுடிகிறது.

முல்லை நிலப்பகுதியில் செம்மண் அதிகமாகக் காணப்படுவதால் செம்புலம் என்றனர். இந்நிலம் நீர் வசதியற்ற பகுதியாகக் காணப்படுகிறது. மரஞ்செடி, கொடிகள் அடர்ந்து நீர் தங்காது வழிந்தோடும் உயரமான மலைகளையும் குன்றுகளையும் கரடுமுரடான மேட்டுநிலங்களையும் உடையதாக இருப்பதால் வன்புலம் என்று சுட்டப்படுகிறது.

பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி முட்டை கொண்டு
வன்புலம் சேரும் சிறு நுண் எறும்பு [50]

என்ற பாடலடிகளால் அறியலாம்.

பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை ஆகியவை முல்லைக்குரியவை. முல்லைப் பாட்டில் முதலில் உவமையோடு மழை வருணனையும், மாலை வருணனையும் கோவலர் வாழ்க்கை நிலையும் இடம் பெறுகின்றன. தலைவனின் பாசறையிருப்பு தலைவாயின் துயர்நிலை, தலைவன் மீளல், கார்கால வர்ணனை ஆகியவை இடம் பெறுகின்றன. இப்படி சங்க இலக்கியங்களில் உள்ள முல்லைப் பாடல்களின் மூலம் முல்லை நில மக்களின் வாழ்க்கை அறியமுடிகின்றது.

இந்நிலம் கோடையில் வறட்சியாகக் காணப்படுவதால் அங்குள்ள மரஞ்செடி கொடிகள் அழகிழந்து காணப்படும். கார்காலத்தின் தொடக்கத்தில் காடுகள் செழிப்பாக

உள்ளதால் முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது கார்காலமாகும். இந்நிலத்திற்குரிய முல்லைப்பூ மலரும் காலமாதலாலும் பசுக்கள் வரும் காலமாதாலும் 'மாலை' சிறுபொழுதாகக் கூறப்படுகிறது. தலைவனைப் பிரிந்த தலைவி தலைவனின் வருகைக்காகக் காத்திருப்பதால் 'இருத்தல்' உரிப்பொருளாகச் சுட்டப்படுகிறது. மேலும் இவற்றைக் கீழ்வரும் அட்டவணையில் அறியலாம்.

கருப்பொருள்

1.	நிலம்	காடும் காடு சார்ந்த இடமும்	
2.	பொழுது	பெரும்பொழுது	கார்காலம்
		சிறுபொழுது	மாலை

கருப்பொருள்

வ.எண்.	**கருப்பொருள்**	**முல்லை நிலம்**
1.	தெய்வம்	திருமால்
2.	உயர்ந்தோர்	நாடன், தோன்றல். மனைவி, கிழத்தி
3.	தாழ்ந்தோர்	இடையர், இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்
4.	உணவு	வரகு, சாமை, முதிரை
5.	புள்	காட்டுக்கோழி
6.	விலங்கு	மான், முயல்
7.	ஊர்	பாடி, சேரி, அனை, கான்
8.	நீர்	குறுஞ்சுணைநீர், காண்யாற்றுநீர்
9.	பூ	முல்லைப்பூ, குல்லைபூ, தோன்றிப்பூ, பிடவம்பு
10.	மரம்	கொன்றை, காயா, குந்தம்
11.	பறை	எறங்கோட்பறை
12.	யாழ்	முல்லையாழ்
13.	பண்	சாதாரி

14.	தொழில்	சாமை, விதைத்தல், வரகு விதைத்தல், களைகட்டல், அரிதல் கடாவிடுதல், கொன்றைக் குழலூதல், கால் நடைகளை மேய்த்தல், கொல்லேறு தழுவல், குரவைக்கூத்து.

உரிப்பொருள்

1.	உரிப்பொருள்	இருத்தலும், இருத்தல் நிமித்தமும்

மருத்திணை

மருதம் என்பது அகப்பொருள் நெறியில் கூறப்படும் ஐவகை திணைகளுள் ஒன்றாகும். மருதமரங்கள் செழித்து வளர்ந்துள்ள பகுதி மருதம் எனப்படும். மருதம் என்பது நீர் நிறைந்த வயல் பகுதியைக் குறிக்கும் மருதநிலம் பார்ப்பதற்குப் பசுமையாக இருக்கும். இங்கு வாழும் மக்களின் தொழில் உழவுத்தொழிலாகும். இம்மக்கள் கொண்டாடும் விழாக்களில் சிறந்ததாகக் கருதப்படுவது. இந்திரனுக்கு எடுக்கும் இந்திர விழாவாகும். **மூவேந்தர்களது அரசவை உள்ள நகர்புறங்களில் தான் மருதப் பாடல்கள் தோன்றியிருக்க வேண்டும்**[51] என்று நா.செயராமன் கூறுகின்றார். இவற்றை பின்வருமாறு;

வ.எண்.	**நூல்**	**மருதத்திணை**
1.	அகநானூறு	40
2.	கலித்தொகை	35
3.	ஐங்குறுநூறு	100
4.	நற்றிணை	32
5.	குறுந்தொகை	48

எனப் பகுத்துள்ளனர்.

மருதத்திணையின் மொத்தப் பாடல்கள் 255 இத்திணையைச் சிறப்புறப் பாடியவர் இளங்கடுங்கோ ஆவார். ஆதலால் மருதம் பாடிய இளங்கடுங்கோ என்று அவர் சிறப்புறக் குறிக்கப் பெற்றார். பரிபாடலில் வையை பாடல்களில் பரத்தமை பற்றிய

செய்திகள் இடம்பெறுகின்றன. தலைவன் பரத்தமையிடம் சென்று மீளல், தலைவி, தோழி, ஆகியோர் அவனது ஒழுக்கத்தைக் கண்டித்தல் ஆகியவை இத்திணையில் பாடப்படும் பாடு பொருள் ஆகும்.

தெய்வம் – இந்திரன்

மருதநில மக்களின் மனதில் நிற்கும் தெய்வம் இந்திரனாவன். அதனால் அவனுக்குக் கோவில் இருந்ததை,

அண்டிரன் வருஉ மென்ன வெண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியேன் கோயிலும் [52]

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. மேலும் திருமுருகாற்றுப்படையில் இந்திரன் தந்தங்கள் பெருமித்த யானையின் பிடரி மீதமர்ந்து வருவான் என்றும் அவன் பகைவரை வெற்றி கொண்டவன் என்றும் குறிக்கப்படுகின்றது. இதனை,

வேள்வி முற்றிய வென்றரு கொற்றத்து
ஈரிரன் வேடந்திய மருப்பின் எழினடைத் [53]

என்ற பாடலடிகளால் அறிய முடிகிறது. இந்திரன் பற்றிய செய்திகள் மிக அரிதாகவே சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கின்றன. காலத்தால் பிந்தியது என்று கருதப்படும் திருமுருகாற்றுப்படையில் ஒரு குறிப்பு இருக்கிறது. ஆயிரம் கண்களை உடையவனும் நூறு வேள்விகளை நடத்தியவனும் திருக்களர் செல்வனுமாகிய இந்திரன்தன் பகைவரை வெற்றிக் கொண்டான் என்பதை,

நூற்றுபத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றம் [54]

என்கிறது. பின்னனியை இலக்கியங்களில் மருத நிலக் கடவுளான இந்திரன் தீயவனாகவும் ஒழுக்கக் கேடாகவும் சித்தரிக்கப்படுகின்றான். அகலிகை முதலான கதைகளால் இந்திரன் தவறுகளைச் செய்தவன் என்பது உணரமுடிகிறது. இவ்வாறு தவறுகள் செய்தவனாகச் சித்தரிக்கப்படுவதற்கு ஓர் நியாயமான காரணம் இருந்திருக்கக்கூடும். மருத நிலத்தினுடைய செல்வ வளத்தின் காரணமாக அங்கு

பரத்தையர் ஒழுக்கம் மிகுதியாக இருந்திருக்கிறது என்பதைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்திரனுக்கு வழிபாடு என்பது சிலப்பதிகாரக் காலத்தில் தான் இறந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் இந்திர விழாவெடுத்த காதையில் மருத்திணை மக்கள் இந்திரனை நீராட்டியும் இந்திரனுக்கு பல விழாக்கள் எடுத்தும் தங்களது இறைவனை வழிபடுகின்றனர். மேலும்,

மலைச்சிறகு அரிந்த வச்சி வேந்தனுக்குக்
கலிகெழு கூடல் செவ்வணி காட்டக் [55]

என்ற பாடலடிகளால் மலைகளின் சிறகினை அரிந்த வச்சிரப் படையையுடைய இந்திரனுக்கு ஆரவாரம் மிக்கக் கடலின் செவ்வணியைக் காட்டுமாறு கார்காலம் வாடையோடு வருவது குறிக்கப்படுகிறது.

இல்லங்கள்

மருத நிலத்தின் இல்லங்கள் வயல்வெளித் தோப்புகளுக்கு இடையே அமைந்து சிற்றூர் போல விளங்கின. அவ்வீடுகள் யாவும் தென்னங்கீற்றால் வேயப்பட்டன. மஞ்சள் முற்றத்தில் பயிராயிருந்தது. மணங்கமழ் பூந்தோட்டங்களைக் கொண்டு தன்னந்தனியாக அமைந்திருந்தனர். மருதநில மஞ்சள் பயிர்களைக் காக்க வயல் வரப்புகளிலேயே புதிய வைக்கோலால் வேய்ந்த இல்லத்தை அமைத்து வாழ்ந்தனர் என்பதை,

பழஞ்சோற்று அமலை முனைஇ, வரம்பில்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில் [56]

என்கிறது. மேலும் வளமுடைய ஊர்களில் உழவர் வீடுகளின் முற்றத்தில் கன்றுகளைக் கட்ட நெடிய தாம்புகளைக் கொண்ட முளைகள் நடப்பட்டிருந்தன. நீண்ட ஏணிக்கு எட்டாத நெடிய வடிவினையுடைய கதிர்கள் இருந்தன. சிறுவர்கள் அந்த முற்றத்தில் சிறுதேர் உருட்டி விளையாடினர் என்பதை,

பகட்டா வீன்ற கொடுநடைக் குழுவின்
கவைத் தாம்பு தொடுத்த மூன் றல்கு [57]

என்றும் பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் சான்று காட்டுகின்றன.

மருதநிலம் நீர் வசதியுள்ள வளமானப் பகுதியாகக் கூறப்படுகிறது. காட்டு நிலங்களுக்கும் கடலோர நிலங்களுக்கும் இடையே உள்ள செழிப்பான பகுதியாகும். இந்நிலத்தை மென்புலம் என்றும் அழைத்தனர். வயலும் வயல் சார்ந்த பகுதியாக இருப்பதால் உப்புத்தன்மையோ இல்லாத நன்னீரே மருதநிலத்தில் காணப்படுகின்றது. நல்ல தண்ணீர் இருக்கும் இடத்தில்தான் தாவரங்கள் செழிப்பாக வளரும் இந்நிலத்திற்குரிய கருப்பொருட்களில் ஒன்றான மருதமரம் நன்னீர் உள்ள நிலத்தில் தான் வளரக் கூடியதாகும். இக்காலத்தில் வயல் நிலங்களை அடுத்த மருதமரங்கள் இருப்பதைக் காண முடிகிறது.

ஆறலவிர் வார் மணல் அகரலியாற்றடைகரைத்
துறையணி மருது தெகல் கொள வோங்கி [58]

உருபுனல் வையை மருதோங்கி முன்நிறை [59]

என்ற பாடலடிகள் மருதமரம் ஆற்றையும் பொய்கையையும் வயலையும் அடுத்திருந்தாகக் கூறுகின்றன. மற்ற நிலங்களைக் காட்டிலும் நீர்வளமும் விளை பொருட்களின் வளமும் அதிகமாக மருத நிலத்தில் இருந்தன. மேலும் மருத நிலத்தில் வற்றாத நீர்நிலைகள் இருந்ததையும் அவற்றில் வெண் தாமரை மலர்கள் மலர்ந்து குளிர்ந்த வயல்கள் நிறைந்து இருந்தன என்பதையும் அறியலாம். மேலும் சான்றோர்களையும் அகன்ற வீடுகளையும், அகழியையும் உடையதாய் மருதநிலம் விளங்கியது. உழவர்கள் ஏரினையும், எருதினையும் உடையவராய் விளங்கினர் என்பதை,

நறும்பூங்கோதை தொடுத்த காட்சினைக்
குறுங்காற் காஞ்சி கொம்பர் ஏறி
நிலை அருள் குட்டம் நோக்கி நெடிது இருந்தது [60]

என்கிறது சிறுபாணாற்றுப்படை. இந்நிலத்தில் வாழ்பவர் பலாப்பழம், இளநீர், வாழைப் பழம், நுங்கு, வள்ளிக்கிழங்கு போன்றவற்றோடு அரிசிச் சோற்றையும் உணவாக உட்

கொண்டனர். மேலும் கரும்புச்சாறும் கரும்புச்சாற்றுடன் நெல்லில் இருந்த எடுக்கப்பட்ட அவலையும் சேர்த்து உணவு தயாரித்தனர். இவ்வுணவு இந்நிலத்தில் சிறந்த உணவாகக் கருதப்படுகிறது.

வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் விட்டொடும் பெருகுவீர் [61]

இருங்கதிர் அலமரும் கழனிக் கரும்பின்
.....
புலை பொருபுதவின் உறத்தை [62]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இத்தகைய வளமிக்க மருதநிலம் நல்ல விளைவைக் கொடுத்தால் அந்நிலமக்கள் கவலையின்றி வாழ்ந்ததோடு நுண்கலைகளும் பிறகலைகளும் உலகில் செம்மையாக வளர்ச்சியடையக் காரணமாக விளங்கினர். எனவே நாகரிக வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் அடிப்படையாய் விளங்கியது மருத நிலம் **நகரங்கள் முதன் முதலில் தோன்றியது உழவுத் தொழிற்குச் சிறந்த மருதநிலத்திலேய உழவுத் தொழிலும் நிலையான குடியிருப்பும் ஊர்ப்பெருக்கம் நாகரிகம் தோன்றுவதற்குப் பெரிதும் துணை செய்தன. உழவுத் தொழிலால் வேளாண்மையும் பதினெண்பக்கத் தொழில்களும், பிற தொழில் செய்வோர்க்கும் போதிய உணவும், வாணிகமும் ஏற்பட்டது**[63] இவ்வாறு செல்வச் சிறப்புடன் இருந்த மருத நிலத்தில் பரத்தையர் மிகுந்திருந்தனர்.

சங்க இலக்கியத்தில் மருதம் பரத்தையர் வாழ்வைப் பாடுவதாக அமைந்திருக்கிறது. வள்ளுவர் இக்களங்கத்தைப் போக்கி அன்பில் பிணைப்பு கொண்டு அறநெறியில் வாழ்கின்ற ஈருயிர்கள் படிப்படியாய் இணைகின்ற ஊடாட்டமே மருதம் அல்லது ஊடல் என்ற மரபில் மாற்றம் செய்தார். வள்ளுவரின் வழியைப் பின்பற்றிக் கம்பனும் மருதம் அரசு வீற்றிருக்கின்றக் காட்சியை உழவரது உழைப்பின் உயர்வாகக் காட்டுகிறார்.

தண்டலை மயில்களாடத் தாமரை, விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழுவின் ஏங்கக் குவணக்கண் விழித்து நோக்கத் [64]

என்னும் பாடலால் இச்செய்தியை அறிய முடிகிறது. கணவன் மனைவிக்கு இடையே ஏற்படும் சிறு ஊடல்களே மருதத்திணையின் பாடு பொருளாகின்றன. மருத நிலத்திற்குப் பெரும்பொழுது தொல்காப்பியரால் சுட்டப்படவில்லை. ஆறு பெரும்பொழுது வரும் என்பதை இளம்பூரணர் உரையால் அறியமுடிகிறது. மருதநிலம் கடின உழைப்பின்றியே பயன்தரக்கூடியது. வளமிக்க நிலமாக உள்ளதால் உற்பத்தி, சேமிப்பு போன்றவற்றிற்குக் காரணமாக உள்ளது. இதனால் செல்வ வளமும் ஓய்வு நேரமும் மிகுதியாக இருப்பதால் பரத்தமை தோன்றக் காரணமாக அமைகிறது. தலைவன் பரத்தமை நாடிச் செல்வதால் தலைவனிடம் தலைவிக்குத் தோன்றும் ஊடல் இந்நிலத்திற்குரிய உரிப்பொருளாகச் சுட்டப்படுகிறது.

முதற்பொருள்

1.	நிலம்	வயலும் வயல் சார்ந்த இடமும்	
2.	பொழுது	பெரும்பொழுது	ஆறு பெரும்பொழுது
		சிறுபொழுது	வைகறை, காலை

கருப்பொருள்

வ.எண்.	**கருப்பொருள்கள்**	**மருத நிலம்**
1.	தெய்வம்	இந்திரன்
2.	உயர்ந்தோர்	ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி
3.	தாழ்ந்தோர்	உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்
4.	உணவு	செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி
5.	புள்	வண்டாளம், மகன்றல் நாரை
6.	விலங்கு	எருமை, நீர்நாய்
7.	ஊர்	பேரூர், மூதூர்
8.	நீர்	ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர்
9.	பூ	தாமரைப்பூ, குவளைப்பூ, கழநீர்ப்பூ
10.	மரம்	காஞ்சி, வஞ்சி, மருதம்

11.	பறை	நெல்லறி இணை, மண முழவு
12.	யாழ்	மருதயாழ்
13.	பண்	மருதப்பண்
14.	தொழில்	விழாச்செய்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், கடாவிடுதல், குளங்குடைதல், புது நீராடல்

உரிப்பொருள்

1.	உரிப்பொருள்	ஊடலும் ஊடல் நிமித்தமும்

நெய்தல் திணை

ஐந்திணைகளுள் நெய்தல் திணை நான்காவதாக உள்ளது. இத்திணையில் நெய்தல் என்பதற்கு வெள்ளாம்பல். கருங்குவளை எனப் தமிழ்பேரகராதி பொருள் தருகிறது. நெய்தல் என்பது பின்னுதல் என்ற பொருளைத் தருகிறது. பரதவன் பின்னிய வலை மணற் பரப்பெங்கும் காயவைக்கப்பட்டிருந்தால் அந்நிலம் நெய்தல் நிலம் எனப்பட்டது. இந்நிலத்தில் மிகுந்திருந்த மலர் நெய்தல் மலர். மேலும் **நெய்தல்** என்ற சொல்,

நிணறு நெய்தல் [65]

கணைக்கால் நெய்தல் [66]

கழி நெய்தல் [67]

கண்போல் பூத்தமை கண்டு நுண்பது

சிறுபா சடைய நெய்தல் [68]

என்று இலக்கியங்களில் சுட்டப்படுகின்றன. நெய்தல் நிலத்தில் வளரும் நீர்க் கொடியின் தலைவியைக் காணவரும் தலைவனது தேர்ச்சக்கரத்தால் அடிக்கடி துண்டிக்கப்படும் நெய்தல் பூவை நாரை விரும்பியுண்ணும் இம்மலரின் காம்பு நீண்டிருப்பதால் அதனைக் **கணைக்கானெய்தல்** என்பர். நறுமணமும் அவைமிகுந்த தேனும் உள்ள இம்மலரைச் சுற்றி அரும்புகள் மொய்த்த வண்ணமிருக்கும்.

சங்க இலக்கியங்களில் நெய்தல் திணை பற்றி அதிகமான பாடல்களைப் பாடிச் சிறப்பிடம் பெற்றவர் அம்மூவனார் ஆவார். நெய்தல் திணைக்குரிய பாடல்களை இரங்கல் உரிப்பொருளாகிய தலைவியின் பெருந்துயரைப் பாடுவது என்றும்

கடற்கரைப் பின்னணியோடு களவுச் செய்திகளைப் பாடுபவை என்றும் இரண்டாகப் பிரிப்பர். நெய்தல் திணை கடற்கரைப் பின்னணியோடு காதல் நிகழ்ச்சிகளையும் பாடுகின்றன. இத்திணையைப் பற்றி மொத்தம் 346 பாடல்கள் உள்ளன. அவை,

வ.எண்.	**நூல்**	**நெய்தல்திணை**
1.	அகநானூறு	40
2.	நற்றிணை	102
3.	குறுந்தொகை	71
4.	ஐங்குறுநூறு	100
5.	கலித்தொகை	33
	மொத்தம்	346

நெய்தலுக்குரிய பாடல்களில் 41 பாடல்கள் களவுக்குரிய பாடல்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று தவிர மற்றவை கற்புக்குரியவையாகக் கூறப்படுகின்றன. ஆயினும், அவையும் களவுக்குரியவையாகவே கருதப்படுகின்றன. எனவே, **நெய்தல் திணைக் களவுச் செய்தியையே பாடும்**[69] என்று தமிழண்ணல் குறிப்பிடுகிறார்.

தெய்வம் வருணன்

கருப்பொருள்களில் முதலாவதாகத் தெய்வம் கூறப்படுகிறது. நெய்தல் திணைக்குரிய தெய்வம் வருணன் ஆவான். கடல் தெய்வம் என்றும் வருணன் அழைக்கப்படுகிறான். நெய்தல் நில மக்கள் முழு நிலா நாளில் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்று கடல் தெய்வத்தை வழிபட்டனர் என்ற செய்தியை,

அந்நில்
அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி [70]
பழையர் மகளிர் பனித்துறைப் பரவள் [71]

என்னும் பாடலடிகளால் அறியலாம். சங்க இலக்கியங்களில் வருணன் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படவில்லை. வருணனைப் பற்றிய குறிப்புகள்

காணப்படவில்லை என்றாலும் வழிபாடு பண்டைக்காலத்தில் சூசா.சார்டிஸ், டெமாஸ்கஸ், பாபிலோன் போன்ற நாடுகளில் பரவியிருந்தது என்பதை இராதா கிருட்டிணன் வலியுறுத்துகிறார். கடலில் மீன்பிடிக்கச் செல்லும் கணவனுக்குப் பாதுகாப்பு வேண்டித் தெய்வத்தை வேண்டி நிற்கக்கூடிய அவசியம் நெய்தல் நிலப் பெண்களுக்குத்தான் அதிகம் இருந்திருக்கிறது இருப்பினும் அவர்கள் எவ்வாறு வழிபட்டு வருணனைப் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள் என்று சங்க இலக்கியம் எவையும் குறிப்பிடவில்லை பத்து பாட்டினுள் ஒன்றான பட்டினப்பாலை மட்டுமே,

சினைச் சுறவின் கோடு குட்டு
மனைச் சேர்த்திய வல்லணங்கினான்
.....
புன்றலை யிரும்ப பரதவர் [72]

எனக் குறிப்பிடுகிறது இங்குச் சினைச் சுறவின் கோட்டை நட்டு வழிபட்டார்கள் என்று கூறுகின்றதே தவிர வருணனை வழிப்பட்டார்கள் என்று வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால் **வருணன் மேய பெருமணல் உலகம்** எனும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை கூறும் நச்சினார்க்கினியர்,

நெய்தல் நிலத்தில் நுணையர்க்கு வலைநனர்
தப்பின் அம்மகளிர்
.....
கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படு மென்றார் [73]

என்கிறார். வருணன் என்ற சொல் சமஸ்கிருதச் சொல். அதனால் கடலோன் என்று இருந்திருக்க வேண்டும் என்று பி.டி.சீனிவாச அய்யங்கார் கூறுகிறார். நெய்தல் நிலத்து மக்களாகிய பரதவர்கள் தெய்வ நம்பிக்கை மிகுந்தவர்கள். இவர்கள் தம் இடத்திலுள்ள பனை, புன்னை மரத்தில் தொன்முது தெய்வத்தை ஏற்றி வழிபட்டதை,

தொன்முது கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை [74]

கடவுள் மரத்த முள்மிடை குடம்பை [75]

பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறையணங்கு [76]

என்பவை கடற் தெய்வத்தைக் குறிப்பிடுகிறதே தவிர வருணனைச் சுட்டுவதாக இல்லை.

இல்லங்கள்

நெய்தல் நிலத்து மக்கள் மணல் பரந்த மேட்டு நிலங்களில் வாழ்ந்து வந்தனர். இம்மக்கள் கடற்கரையோரத்தில் கடற்காற்று பாதிக்கா வண்ணம் குறுகலான நுழைவு வாயில் உடைய குடிசையில் வசித்தனர் என்பதை,

புலாலஞ் சேரிப் புல்வேய் இரம்பை

.....

முண்டகம் வேய்ந்த குறியிரைக் குரம்பை [77]

என்கிறது. இம்மக்கள் தழையால் வேயப்பட்டு உப்பங்கழிகள் சூழ்ந்த நிலப்பகுதியில் வாழ்ந்தனர். அவர்கள் வாழந்த இப்பகுதியைப் 'படப்பை' என்றும் கூறுவர். இப்பரதவர்கள் வாழும் குடியிருப்பின் முன் அவர்களது தொழிலுக்குரிய நெடிய கோல் சாத்தப்பட்டிருந்தது. அகன்ற வெண்மணற் பரப்பில் மீன்வலை உலருவதற்காகக் காயவைக்கப்பட்டிருந்தன. அவர்களது யதார்த்த வாழ்க்கையின் அமைப்பினைப் பட்டினப்பாலை சுட்டுகிறது. இம்மக்களின் வீடுகள் புல்லாலும் வைக்கோலாலும் வரகு, கரும்படை, கூவையிலை இவற்றாலும் வேயப்பட்ட சிறுசிறு குடில்களாக அமைந்திருந்தன என்பதை,

சிறுகுடி பரதவர் [78]

கான எண்ணிய சிறுகுடி [79]

பெருமீன் கொள்ளும் சிறுகுடி பரதவர் [80]

என்ற பாடலடிகளால் அறிய முடிகிறது.

நெய்தல் என்பது கடல்சார்ந்த நிலப்பகுதியைக் குறிக்கும் அங்கு மக்கள் அதிகம் வாழவில்லை. மிகக்குறைந்த மக்களே குடியிருந்தனர். இந்நில மக்கள் கடலில் உள்ள மீனைப் பிடிப்பதையும், உப்பு விளைப்பதையும் முக்கிய தொழிலாகக்

கொண்டிருந்தனர். எனினும் வேளாண்மையும் இந்நிலத்தில் நடைபெற்றது என்பதை,

கடல் இறவின் கூடு தின்றும்
வயல் ஆமைப் புழுக்கு உண்டும் [81]

என்ற பாடல் வரிகளால் நெய்தல் நிலமக்கள் கடல் இறால் மீன்களையும் வயல் ஆமையையும் உண்பர் என்பதனால் நெல் வேளாண்மை செய்ததை அறிய முடிகிறது. மேலும் இந்நிலத்தில் மழை பெய்தால் நெல்விளையும், மழை பொய்ப்பின் உப்பு விளையும் இந்நிலம் மென்புலம் என்று சுட்டப்படுகிறது.

பெயினே, விடுமான், உழையினம், வெறிப்பத் தோன்றி
இருங்கழிச் செறுவின்வெள்ளுப்பு விளையும் [82]

என்கிறது நற்றிணை. நெய்தல் நில மக்கள் தங்கள் உணவுத் தேவையை ஈடுசெய்ய மீனை உவாக உட்கொண்டனர். அதனால் கடற்கரை நோக்கிச் சென்றனர். கடற்கரையில் உணவைப் பெற்ற பரதவர் கடற்கரையின் மணல் மேடுகளால் குடில்கள் கட்டி வாழ்ந்து வந்தனர். நெய்தனிலத்து ஊர்கள் சிறுநல்லூர் என்றும் சிறுகுடி என்றும் வழங்கப்பட்டன என்பதை,

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழா அது செய்தி
வெண்கல் உப்பின் [83]

என்கிறது அகம். நெய்தல் நிலத்துக் கடற்கரை சோலைகளாகவும், மலர்விரிந்த மணல் பரப்பாகவும் இருந்ததால் தலைவனும், தலைவியும் கடற்காற்றை சுவாசித்து இன்புற்று தங்கள் காதலைப் பரிமாறிக் கொள்ள நல்லிடமாய் அமைந்திருந்தது.

நெய்தல் திணைக்குப் பெரும்பொழுது ஆறும் சுட்டப்படுவதோடு, சிறுபொழுதாக தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ஆற்றாமை காரணமாகத் தலைவனை எதிர்பார்த்து இருப்பதால் **இரங்கல்** நெய்தலின் உரிப்பொருளாகச் சுட்டப்படுகிறது. கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற தலைவன் வருகைக்காகத் தலைவி எதுவும் செய்வதறியாது எதிர்பார்த்துக் காத்திருப்பதே இரங்கல் என்பதாகும். இவ்வாறு வாழ்வில் தேவைப்படும்

உணவு, இருப்பிடம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது. ஏனையவற்றைக் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

முதற்பொருள்

1.	நிலம்	கடலும் கடல் சார்ந்த இடமும்	
2.	பொழுது	பெரும்பொழுது	ஆறு பெரும்பொழுது
		சிறுபொழுது	ஏற்பாடு

வ.எண்.	கருப்பொருள்கள்	நெய்தல் நிலம்
1.	தெய்வம்	வருணன்
2.	உயர்ந்தோர்	சேர்ப்பன், துறைவன், புரலம்பன், பரத்தி, நுளைச்சி
3.	தாழ்ந்தோர்	நுளைவர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்
4.	உணவு	மீன்,மீனையும் உப்பையும் மாற்றுதலால் வரும்பொருள்
5.	புள்	கடற்காகம்
6.	விலங்கு	சுறாமீன், முதலை
7.	ஊர்	பாக்கம், பட்டினம்
8.	நீர்	உவர்நீர்க்கேணி, கவர்நீர்
9.	பூ	நெய்தல்பூ, புன்னைப்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பூ
10.	மரம்	கண்டலி, புன்னை, ஞாழல்
11.	யாழ்	விளரியாழ்
12.	பண்	செவ்வழிப்பண்
13.	தொழில்	மீன்பிடித்தல், உப்பு உண்டாக்கல் அவற்றை விற்றல், மீன் உணக்கல் அவற்றை உண்ண வரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல்

உரிப்பொருள்

உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

பாலைத்திணை

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பல தொல்காப்பியரின் நிலப் பகுப்பியலாகும். இப்பகுப்பில் பாலைக்கு நில வரையறை சுட்டப் பெறவில்லையே தவிர அந்நிலத்திற்குரிய பொழுதும் அந்நிலத்திற்கரிய உரிப்பொருளும் தொல்காப்பியரால் கூறப்பட்டுள்ளன. அதனால் பிற்காலத்தவர் பாலைக்கு நிலம் உண்டு என்று வலியுறுத் தினர். தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் கடந்து இளங்கோவடிகள் கூற்று;

முல்லையுங் குறிஞ்சி முறைமையிற் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய நறுத்துப்
பாலை பென்பதோர் படிவங்கொள்ளும் [84]

தெய்வம் கொற்றவை

பாலைத்திணையின் தெய்வம் கொற்றவை, சங்ககால மக்களின் வெற்றித் தெய்வமாகப் போற்றப்படும் கொற்றவை முருகனுடைய தாயாகத் திருமுருகாற்றுப் படையில் குறிப்பிடப்படுகிறான் இதனை,

வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ [85]

என்கிறது. மேலும் மக்கள் கொற்றவைக்கும் பலியிட்டு வழிபாடு நடத்தினர் என்பதை,

விடர் முறை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூனாம் [86]

என்கிறது குறுந்தொகை. மேலும் கலித்தொகை கொற்றவையைப் பற்றிக் கூறம் பொழுது; எல்லாம் உணர்ந்தவள். பெரிய காட்டிடை வாழ்பவர் பேய்கணங்களை உடையவள் என்று சிறப்பிக்கின்றது. சிலப்பதிகாரத்தில் இத்தெய்வத்தைக் கொற்றவை, ஐயை, அமரி, குமரி, களரி, சமரி, ஆலி, நீலி, மாலின் தங்கை, செய்பவள் முதலான பெயர்களால் குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள் இதனை,

அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, மால்வதற்கு
இளங்கிளை ஐயை செய்வன் [87]

என்கிறார். கொற்றவைக்கும் **பழையோள்** (திருமுரு:259) என்ற பெயரும் உண்டு. போரிலே வெற்றி பெற்றப்பின் போர் வீரர்கள் கொற்றவைக்கு உயிர்ப்பலியிட்டு வணங்குவார்கள். கொற்றவையின் அருளால் வெற்றியடைந்ததற்காகப் பலி கொடுக்கப்படும் செய்தி உள்ளது. இதையே,

மறம் கடை கூட்டிய துடிநிலை, சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே [88]

என்கிறது தொல்காப்பியம். வீரத்தினால் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதைத் **துடிநிலை** என்றும் அந்த வெற்றிக்குத்துணை செய்தது கொற்றவையே என்றும் இவளைக் **காடுகெழு செல்வி** என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

குடில்கள்

எயினர் வீடு அம்புகள் தூங்கும் கால்களையுடைய பந்தலினையும் சங்கிலியால் நாய்கள் கட்டப்பட்ட காவலினையும் முன்னையுடைய பாழ்வேலியினையும் அதனைச் சூழ்ந்த காவற் காட்டினையுடைய பக்கத்தினையும் கனைய மரத்தினையுடைய உட்கதவினையும் வாயினையும் உடையதாகும். இவர்களது குடில்கள் ஈந்திலையால் வேயப்பட்டவை என்பதை,

இவை வேய் குரம்பை யுழையதட்பள்ளி
யுவலைக் கண்ணி வன்சொ விளைஞர் [89]

என்று மதுரைக்காஞ்சி,

ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை (பெரும்.88) என்று பெரும்பாணாற்றுப் படையும் குறிப்பிடுகின்றன. பாலைத்திணை என்பது முல்லைத்திணையும், குறிஞ்சித்திணையும் திரிந்து வந்த நிலம் ஆகும். இந்நிலத்தை கடந்து செல்வது மிகவும் அரிதாக இருந்தது. இந்நிலப்பகுதியில் எட்டிய தூரம் வரை நீரின்றி காணல் காட்சிதரும். இங்குள்ள மரங்கள் வெயிலின் மிகுதியால் காய்ந்து எவரும் ஒதுங்குவதற்கு

நிழலின்றிக் காணப்படும். இப்படி வறண்ட நிலமாக பாலை நிலம் காணப்படுகிறது. இதனை நச்சினார்க்கினியர்,

பாலை தன்மையாவது காலையும் மாலையும்

என்று பாலையின் தன்மையைக் குறிப்பிடுகிறார். மேலும் பாலை நிலம் குறிஞ்சி நில வறட்சியையும் முல்லை நில வறட்சியையும் தழுவியே தோன்றுகிறது. நீரும், நிழலும், இல்லாமல் வெம்மையாகவும் தனிமையாகவும் காணப்படுவதால் **இன்னா வைப்பு** என்று கூறப்படுகிறது. பாலை நில வழியின் கொடுமையை **அருஞ்சுரம்** எனக்கூறுவர். இந்நிலம் ஊழியிழந்து காணப்படுவதால் **புன்புலர்** என்றனர் இதனை,

வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர் [90]

புன்புலம் தழிஇய புற அணி வைப்பு [91]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. பாலை நிலத்தில் வெப்பம் மிகுதியாக இருப்பதால் மரஞ்செடி கொடிகள் காய்ந்து விலங்குகளுக்குத் தேவையான நீர் இல்லாமல் வலிமையிழந்து காணப்படும். பாலை நிலத்தில் உண்டாகும் கானல் நீரை உண்மையான நீரென்று எண்ணி விலங்குகள் ஏமாற்றமடைவதைச் சங்க இலக்கிய வருணனையால் அறிய முடிகின்றது. பாலையில் தோன்றும் கானல்நீர் **உருஇல் பேய், ஊர்த்தேர், இலங்குதேர், பேய்த்தேர்** என்று சுட்டப்படுகிறது. இக்கானல் நீர் பார்வைக்கு நீர் போன்று மாயத்தோற்றம் தருகிறது.

சங்க இலக்கியத்தில் பிற திணைப் பாடல்களைக் காட்டிலும் பாலைத்திணைப் பாடல்கள் மிகுதியாக உள்ளன. இத்திணைப் பாடல்கள் மொத்தம் 527 அவை,

வ.எண்.	நூல்	பாடல் எண்ணிக்கை
1	அகநானூறு	200
2.	நற்றினை	102
3.	குறுந்தொகை	90
4.	ஐங்குறுநூறு	100

5.	கலித்தொகை (பாலைக்கலி)	35
	மொத்தம்	527

பாலை நிலத்தின் வெம்மையைப் பெரும்பாலான பாடல்கள் விலங்குகளையும், பறவைகளையும் சுட்டிக்காட்டியும் இயற்கைச் சீரழிவைச் சுட்டிக்காட்டியும் விளக்கியுள்ளன. இந்நிலத்தில் வேட்டுவர், எயினர், மறவர் போன்ற இனமக்கள் வாழ்ந்தனர். பெண்களை எயிற்றியர், மறத்தியர் என்று அழைத்தனர். இவர்கள் வாழ்ந்த ஊர் குறும்பு, பறந்தலை என அழைக்கப்பட்டது. இந்நிலத் தெய்வமாக ஐயை, கொற்றவை போன்ற பெண் தெய்வங்களை வணங்கினர் என்பதை அறிய முடிகிறது.

முதற்பொருள்

1.	நிலம்	மணலும் மணல் சார்ந்த இடமும்	
2.	பொழுது	பெரும்பொழுது	இளவேனில் முது வேனில் பின்பனி
		சிறுபொழுது	நண்பகல்.

கருப்பொருள்

வ.எண்.	கருப்பொருள்	பாலை நிலம்
1	தெய்வம்	துர்க்கை
2.	உயர்ந்தோர்	விடலை, இகுளை மீளி, எயிற்று
3.	தாழ்ந்தோர்	மறவர், எயினர், எயிற்றியர், மறத்தியர்
4.	உணவு	வழி பறித்தவை, கொள்ளையடித்தவை
5.	புள்	புறா, பருந்து, எருவை, கழுகு
6.	விலங்கு	செந்நாய்
7.	ஊர்	குறும்பு
8.	நீர்	நீரில்லாக்குழி, நீரில்லாக் கிணறு
9.	பூ	மரா அப்பூ, குராஅப்பூ
10.	மரம்	உழிஞை, பாலை, லுமை, இருப்பை
11.	பறை	துடி

12.	யாழ்	பாலையாழ்
13.	பண்	பஞ்சரம்
14.	தொழில்	போர் செய்தல், பகற் சூறையாடுதல்

உரிப்பொருள்

உரிப்பொருள்	பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

அகத்திணை மாந்தர்

அகத்திணையுலகில் தலைமை மாந்தர்களாக விளங்குபவர்கள் தலைவனும் தலைவியும் இவர்தம்காதல் தழைத்து வளர்ந்து கணவன்-மனைவியாக ஆவதில் பல நிலைகள் உள்ளன. இவர்களைப் பெயர் சுட்டிக் கூறும் வழக்கம் இல்லை. அக இலக்கியத்தில் இவர்தம் காதல் நிகழ்ச்சிகளாக வருவன சமுதாயத்தினின்றும் நல்லனவாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவையாகும். அகத்திணையில் காணப்பெறும் தலைவனிடம் ஒரு சில குறைகள் காணப்பெற்றாலும் தலைவி ஒரு குறிக்கோள் மகளாகவே காட்டப்படுகின்றாள். இல்லத்தில் கொல்லுரிமை உடையவள் இவள் என்பதை தொல்காப்பியர் **அஞ்சா வந்த உரிமை** என்று சிறப்பிப்பர். இல்லற வாழ்க்கையில் தலைவியும் தலைவனும் ஓருயிரும் ஈருடலும் போன்றிருப்பர். இவர்தம் தொடர்பு பிறவி தோறும் தொடர்ந்து வருவதாகக் கூறுகின்றன.

தலைவியின் நற்றாய், தலைவியின் தந்தை, செவிலி, பாங்கன், தோழி, பரத்தையர் ஆகிய அறுவர் ஏதோ ஒரு முறையில் தலைமக்களுடன் உறவுடையோராகக் கொள்ளைப் பெறுவர். இவர்களுள் செவிலியும் தோழியும் தலைவியின் களவு நெறியிலும் கற்பு நெறியிலும் பெரும்பங்கு வகித்தனர் என்று பொதுவானதாகும். இலக்கியச் சான்றுகளும், இலக்கண விதிகளும் ஈண்டு வியந்து பேசப்படுகிறது.

புறத்திணை மாந்தர்கள்

புறப்பொருள் என்பது வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுவனாவாகும். அகப்பொருள் வாழ்வியில் எனில் புறப்பொருள் உலகியல் ஆகும். புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது

புறத்திணை ஆகும். புறத்திணைகள் வெட்சி முதல் பாடாண் வரை பன்னிரண்டு வகைப்படும்.

தொழில்கள்

கல்தோன்றி மண்தோன்றிய காலத்தில் தோன்றிய மக்கள் இயற்கையில் கிடைத்த உணவுகளான காய்கள், பழங்கள், கிழங்குகள் போன்றவற்றை உண்டு வாழ்ந்து வந்தனர். அவர்கள் தன்வாழ்விடமாக மரப்பொந்துகளையம், மரக்கிளைகளையும் விலங்குள் தங்கும் குகைகளையும் அமைத்துக் கொண்டான். அதன் பின்னர் உணவின் பொருட்டு வேட்டைத் தொழிலை மேற்கொண்டான். அத்தொழில் வாழும் நிலத்திற்கு ஏற்ப அமைந்தது. அவற்றில் குறிஞ்சி நிலப்பகுதி மலைப் பகுதியானதால் வேட்டைத் தொழிலையும், முல்லை நிலப்பகுதி காடுகளானதால் உழவுத்தொழிலையும் நெய்தல் நிலப்பகுதி கடல் பகுதியானதால் மீன் பிடித்தொழிலையும் செய்தனர். இத்தொழில் தேவைக்கு அதிகமான பொருட்கள் கிடைத்ததால் அவற்றை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல வசதியாக நெய்தல் நிலமும் பாலையும் அமைந்தன. இந்நிலத்தின் வழியாக வணிகத்தை மேற்கொண்டனர். அதன்பின்னர் சமூகத்தில் தொழில் அடிப்படையில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என நான்கு பிரிவினர் உருவாயினர். இவர்களைத் தவிரச் சமூகத்தின் நல்வாழ்வுக்கு உதவும் தொழில்களைச் செய்த பல்வேறு தொழில் பிரிவினரும் இருந்துள்ளனர். எத்தொழிலுக்கும் தூண்டு கோளாய் அமையும் அறிவும் ஒழுக்கமும் இன்றியமையாச் சிறப்புடையன. தனிமனிதனின் வளர்ச்சி சமுதாக வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

உழவுத்தொழில்

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு, உணவு இல்லை என்றால் பண்பாடும் பழம்பெருமையும் சிதைந்து விடும். ஆதலின் உணவுப் பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றைப் பெருக்குவதற்கு உழவுத் தொழில் உயிர் தொழிலாகப் போற்றப்பட்டது. உழவு என்னும் பெயர் உழத்தல் காரணமாகத் தோன்றியது. உழத்தல் என்பது இடைவிடாது முயலும் முயற்சியைக் குறிக்கிறது. மழை, பனி, வெயில் என்னும் கால வேறுபாட்டால் உடம்பில் உருவாகும் தொல்லைகளைச்

சிறிதும் பொருட்படுத்தாது நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த இடைவிடாது உழைக்கும் முயற்சி இத்தொழிலுக்கு வேண்டப்படுதலின் இத்தொழில் 'உழவு' என்று அழைக்கப்படுகிறது. உழவுத்தொழில் செழித்து உணவுப்பண்டங்கள் குறைவின்றிக் கிடைத்து வந்தன. நிலவளமும், நீர்வளமும் உணவைத் தடையின்றி உருவாக்கித் தந்து மனிதகுலத்தின் பசியைப்போக்கி உயிர்வாழ்வை உறுதிபடச் செய்தமையை

உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே [92]

என்கிறது புறம். பண்டைத் தமிழ் மக்கள் இயற்கை அமைப்பிற்கு ஏற்ப வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டனர்.

> **குடியிருக்கும் மக்கள் வாழ் பகுதிகளின் எல்லைப்புறங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கு ஆதரவு இருக்குமாயின் மக்கள் தொகை நெருக்க முடையதாகவும் செல்வச் செழிப்புடைய தாகவும் மாற இயலும்**[93]

என்பதற்கேற்பப் பழந்தமிழ் மக்கள் உணவு திரட்டி உண்ணும் நிலையிலிருந்து உணவை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாறிப் பல பண்டங்களை உற்பத்தி செய்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர்.

உழவுத்தொழிலில் உழுதல், விதைத்தல், நடுதல், நீர்ப்பாய்ச்சுதல், எருவிடுதல், களையெடுத்தல், அறுவடை எனப் பல நிலைகளை கொண்டு சிறந்து விளங்குகிறது இப்வுழவுத்தொழில்.

நெசவுத்தொழில்

மனிதனுக்கு உணவினை அடுத்து இன்றியமையாத சிறப்புப்பெற்று விளங்குவது ஆடை, விலங்குகளைப் போலன்றி உடலை மறைத்தற்குரிய உடையினை அணிந்து மானத்துடன் வாழும் முறை மக்கள் வாழக்கையின் சிறப்பியல்பு. நாகரிகம் வளராத மிகப் பழங்காலத்தில் மக்கள் இலைதழையின் ஆடைகளை மரப்பட்டைகளையும் மான், புலி முதலியவற்றின் தோலினையும் உடுத்தி வாழ்ந்தனர். நாளடைவில்

அந்நிலை மாறியதும் மக்கள் அறிவின் திறத்தால் பருத்தியின் பஞ்சியினை நூலாக நூற்று ஆடையாக அணியத் தொடங்கினர். அம் முயற்சியின் விளைவால் தொடங்கிய தொழில்தான் நெசவு. இத்தொழில் செய்வோரைக் 'கம்மியர்' என்றழைத்தனர். நெசவுத் தொழிலுக்குப் பருத்தி மிகவும் இன்றியமையாத மூலப்பொருளாக விளங்கியது. இப்பருத்தி அன்றி இலவமரம், கோங்குமரம் முதலிய மரங்களிலிருந்து வேண்டிய பஞ்சைச் சேகரித்தனர். சேகரிக்கப்பட்ட பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித்தெடுப்பதற்கு வில்லினைப் பயன்படுத்தினர். பருத்தியிலிருந்து கொட்டையை நீக்கித் தூய்மை செய்யும்போது பஞ்சின் புறத்தோலினையும் கொட்டையையும் தூசி நீக்குவதற்கு நன்றாகப் புடைத்தெடுப்பர். தூய்மை செய்யப்பட்ட பஞ்சினை நுண்ணிய நூலாக நூற்பதில் கைத்திறம் பெற்று விளங்கினர் பெண்கள். இவர்கள் **பருத்திப் பெண்டிர்** (புறம் 326:4-5) என்றழைக்கப்பட்டனர்.

ஆளில் பெண்டிர் தாளில் செய்த
நுணங்கு நுண்பவைல் [94]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும் இயற்கையில் அமைந்த மரப்பட்டையில் உள்ள நாரினை எடுத்துப் பின்னி மலைவாழ் குறவர் ஆடையாகப் பயன்படுத்தினர் என்பதை,

மரனாருடுக்கை மலையுறை குறவர் [95]

என்ற பாடலடியால் அறியலாம்.

தையல்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் என்பதற்கு ஏற்ப நெசவைக் கைத் தொழிலாகக் கற்றுக் கொண்ட மக்கள். தையல் தொழிலையும் கற்றிருந்தனர் என்பதன் மூலம் பூவேலைப்பாடுகள் செய்யப்பட்ட ஆடைகளைத் தைப்பதற்குத் தையல்காரர்கள் இருந்தனர் எனலாம். அவர்கள் அரசியல் அலுவலருக்கும் உயர்குடிப் பெண்களுக்கும் சட்டையும் கச்சும் தைத்துக் கொடுத்தனர். அவற்றை அவர்கள் அணிந்திருந்தனர் என்பதை,

..... படம்புக்குப்

பொருகனை தொலைச்சிய புண்தீர் மார்பன்

விரவுவரிக் கச்சின் [96]

என்கிறது பெரும்பாணாற்றுப்படை. அக்காலத்தில் ஆடைகள் தைத்ததோடு உயர்குடி மக்கள் படுப்பதற்கு மெத்தைகள் தைத்தும் கொடுத்தனர் என்பதை,

மெல்லிதன் விரிந்த சேர்க்கை மேம்படத்

.....

இணையிணை மேம்படப் பாயினையிட்டு [97]

என்று அக்காலத்தில் மெத்தைகளும் தலையனைகளும் தைக்கும் தையல் தொழில் உயர் நிலையில் இருந்ததைப் புலப்படுத்துகிறது.

தச்சுத்தொழில்

இயற்கை தந்த செல்வம் மரங்கள் அவற்றில் தகுதியுள்ள மரங்களை அறுத்து வீடமைப்பதற்கும், வண்டி, தேர் செய்வதற்கும் பயன்படுத்திய பெருமை **தச்சர்** என்னும் தொழிலாளர்களுக்கே உரியது. மக்கள் சுமந்து சென்ற சுமையை எளிதில் வண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கும் விரைந்து செல்ல ஊர்திகளை மரத்தினால் உண்டாக்கினர். இத்தச்சுத் தொழில் செய்வோர் **தச்சர் கம்மாளர்** என்று அழைக்கப்பட்டனர். மரத்தொழில் செய்து வாழ்ந்த தச்சன் சங்ககாலத்து இலக்கிய வழக்கில் **மரங்கொல் தச்சன்** என அழைக்கப்பட்டான். மரங்கொல் என்பது மரத்தை வெட்டுதல் எனப் பொருளாகும். இவர்கள் தச்சுத் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டனர். இத்தச்சர்கள் தம் மக்களை இளம் வயதிலேயே தொழிலில் நன்கு பழக்கி வைத்தனர். பொம்மைத்தேர் செய்து விளையாடியவர்கள் பின்னர் பெருந்தச்சர்களாகினர் என்பதை,

மரங்கொல் தச்சர் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத்து [98]

என்கிறது புறம். தச்சர்கள், மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைச் செய்து கொடுத்தனர். இத்தச்சர்கள் தொழில் சிறக்கத் திருமுளைச் சார்த்துதல், ஐயவி தூவுதல்

போன்ற சடங்கு முறைகளைச் செய்தனர். சிற்பநூல் அறிந்த தச்சர்களால் செய்யப்பட்ட நிலைகளில் தெய்வம் உறையும் என்ற நம்பிக்கையுடன் அந்நிலைகளுக்கு நெய்யும் ஐயவியும் பூசினர் என்பதை,

தொல்வலி நிலைஇய அனங்குடை நெடுநிலை

.....

மழையாடு மாடம் [99]

என்கிறது மதுரைக்காஞ்சி. இவ்வாறு தச்சுத்தொழில் திறமையோடு கலைநுணுக்கம் தெரிந்தவர்களாகவும் அக்கால மக்கள் வாழந்தனர். தச்சர் மரங்கொல் தச்சர், இணைமாண்டு தச்சர், வாணிபத்தச்சர் என பல வகைகளாகப் பிரிக்கப்பட்டனர்.

ஓவியத்தொழில்

ஓவியம் என்பது சுவர், மரம், துணி, உலோகம், தோல் போன்ற ஏதாவது ஒன்றின் மேல் கோடுகளால் நிறத்தால் உருவங்களை எழுதும் தொழிலாகும். அதனைப் பழந்தமிழர் அனுபவித்த இயற்கை இன்பத்தை ஓவியமாகத் தீட்டி மகிழ்ந்தனர். ஒன்றினைப் போலச்செய்தல் என்ற எண்ணம் இவர்களைத் தம் உள்ளங்கவர்ந்த ஓவியங்களை வரையத் தூண்டின. வண்ணமலர்கள், மரஞ்செடி கொடிகள், பறவைகள், விலங்குகள் போன்றவற்றின் உருவங்களை வரைந்தனர். மொழியினை அறியாத மக்கள் தங்கள் கருத்துக்களை ஓவியத்தின் வாயிலாகவே பகிர்ந்து கொண்டனர். எண்ணங்களை எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணைகொண்டு துகிலிகையால் படைக்கப்பட்ட கண்கவர் ஓவியம், ஓவம், சித்திரம், படம், வட்டிகை எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. ஓவியம் என்பதற்கு ஓவி, ஓவம் எனப்பல சொற்கள் காணப்படுகின்றன. இதனை,

ஓவுக் கண்டன்ன

ஓவச் செய்தியின்

ஓவியம் கருப்ப [100]

என்ற பாடலடிகளால் உணர்த்தப்படுகின்றன. ஓவியத்தை வரைவோர் வித்தகர்,

கண்ணுள் வினைஞர், ஓவியப்புலவன், ஓவாக்கள் எனப்படுவர். இவர்கள் வரைந்த ஓவியம் சிறப்பாக அமைய ஓவியனுக்கென்று சில தகுதிகள் இருக்க வேண்டும். அவை,

> **உலகப் பொருள்களைக் கூர்ந்து நோக்கும் திறன், கற்பனை உள்ளம், அளவுகள் பற்றிய அறிவு உள்ளமும் கையும், ஒன்றிச் செல்லும் பயிற்சி வண்ணக்கலவையிலும், தூரிகை அமைப்பிலும் தேர்ந்த தெளிவு, நல்லொழுக்கம் நூற்புலமையுடன் அமைந்த கலையீடுபாடு, மெய்ப்பாட்டுணர்வு, முதலியன ஓவியப்புலனுக்கு அமைந்துவிடின் தெய்வீக ஓவியங்களை உருவாக்கி விவோன்** [101]

என்பதற்கு ஏற்ப மதுரைக்காஞ்சியில் கண்ணுள் வினைஞர் நுண்மையான அறிவுடையவராக இருந்தனர்.

> **புலனுடை மாந்தர்**
> **தாவுயிர் செய்த பாவை போல** [102]

என்கிறது கலித்தொகை. பண்டைத்தமிழர் கண்டு மகிழ்ந்த காட்சிகளைச் அவர்களிலும் கிழிகளிலும், தோலிலும், ஓவியங்களாகத் தீட்டினர். ஓவியக் கலையால் சிறப்புற்றிருந்த பெண்கள் சந்தனம் போன்ற நறுமணக் கலவையால் மகளிரின் நெற்றியில், தோள்களில், மார்பின் இலை, கொடி, மலர் போன்ற ஓவியங்களை அழகுற வரைவர். இக்கலை 'தொய்யில் எழுதுதல்' என்று சொல்லப்படுகிறது. இதனை,

> **பெருந்தோள் தொய்யில் விரித்தும்** [103]

என்கிறது அகம். ஓவியம் வரையப்பட்ட இடம் எழுத்துக்கலை மண்டபம், எழுதொழில், அம்பலம், சித்திரமாடம் எனப்படுகிறது.

சிற்பத்தொழில்

உயிரோட்டமுள்ள சிற்பம் வடிப்பதில் தமிழர் தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்கள் உயிரில்லாப் பொருளுக்கு உருவம் கொடுத்துக் காண்பவர் கண்களுக்கு மகிழ்ச்சியைத் தருபவர்கள் சிற்பி செதுக்கும் சித்திரம் கல், மரம், உலோகம் போன்ற பொருள்களின்

மீது உருவங்களைப் பதிக்கிறது. உலோகத்தில் செதுக்குவராயன் சித்திரத்தைக் 'குடைவாக்கிச்' செதுக்கி அதைச் சுற்றியுள்ள பகுதி குடைவாகச் செதுக்கப்படும். செதுக்கப்படும் சிற்பத் தொழிலின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாய் அமைவது நடுகற்கள், நடுகல் என்பது போரிலே உயிர்கொடுத்துப் புகழ்கொண்ட, மறவரின் பீடும் பெயரும் உலகத்தாற் அறியும் பொருட்டுக் கல்லிலே எழுதி நடுவர் இதனை,

அணிமயிற் பீலிசூட்டிப் பெயர்பொறித்
தினி நட்டனரே கல்லும் [104]

என்கிறது புறம். அக்காலத்தில் சிற்பநூல் இருந்ததாகச் சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக் காதையில், உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறுகிறார். சிற்பநூல் அறிந்த தச்சர், நுட்பமாக நூலைப் படித்துத் திசைகளைக் குறித்துக்கொண்டு மதில் வாயிற் கதவுகளையும் நிலைகளையும் அமைத்தார்கள். கதவு நிலைக்கு மேல் குவளை மலர்களையும் பென்யானைகளையும், திருமகளையும் சிற்ப வடிவில் அழகுற அமைத்தார்கள்.

கட்டிடத்தொழில்

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையாகக் கருதப்படுபவை உணவு, உடை, இருப்பிடம் என்பவை மனிதன் பாதுகாப்புடன் வாழத் தனக்கொரு இருப்பிடம் அமைக்க எண்ணிய எண்ணம் கட்டடக் கலையின் தோற்றத்திற்கு வித்திட்டது. பண்டைநாளில் ஆற்றங்கரையோரத்தில் வாழ்ந்த மனிதன் தனக்கென வீடு அமைத்து வாழத்தொடங்கினான். இவ்வீடுகளின் அமைப்பு அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ற வகையில் அமைந்தன. தலைவர்களும் அரசர்களும் மாட மாளிகைகளிலும், அரண்மனைகளிலும் வாழ்ந்தனர். இவர்கள் வாழ்வதற்கு ஏற்ற அரண்மனைகள், மாளிகைகள், மாடங்கள் மன்றங்கள் கோவில்கள் கட்டடத் தொழிலாளியின் கைத்திறனால் உருவாக்கப்பட்டன. அக்காலத்தில் செங்கல் கட்டிடங்கள் சிறந்து விளங்கின. செங்கல்லால் கட்டிய கோயிலை சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம் எனக் குறிப்பிடுகிறது. முல்லைநில ஆயர்கள் வாழ்ந்த இருப்பிடம் கழிகளால் கட்டப்பட்ட

சிற குடிலாக இருந்தது. அவை ஆடுகள் தங்கும் பொருட்டுத் தழைகளைக் கட்டிய குறிய கால்களையுடைய குடில்களாக இருந்தன. அவற்றை வரகு வைக்கோல் கற்றையால் வேய்ந்திருப்பர். இதனை,

முரண்தலை கழிந்த பினறை மறிய

.....

இடுமுள் வேலி எருப்படு வரைப்பின் [105]

என்கிறது பெரும்பாணாற்றுப்படை. மேலும் மலையை ஒத்த பெரிய இல்லங்கள் கட்டித் தமிழ் மக்கள் வாழந்தனர் என்பதை,

குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன

பருத்திருந்து உகக்கும் பன்மாண் நல்லல் [106]

என்று குறிப்பிடுகிறது. இதன் மூலம் பண்டைத்தமிழர் எளிய அமைப்பினை உடைய குடில்கள் மூலமாகக் கலைத்திறனோடு விளங்கும் வானளாவிய எழுநிலை மாடம் ஈறாகப் பல்வேறு அமைப்புகளைக் கொண்ட கட்டடங்கள் கட்டுவதில் கைதேர்ந் திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

மட்கலத்தொழில்

சங்ககாலத்தில் உணவுப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்கு மண்பாண்டங்களைச் செய்தனர். இவர்களுக்கு முன் வாழ்ந்த மக்கள் விலங்குகளின் தோலினாலாகிய பைகள், தாவரங்களின் ஓடுகள் போன்றவற்றைப் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும் சாப்பிடவும் உதவின. இவை மரம் தோல் முதலிய பொருள்களால் செய்த பண்டங்களைவிடத் தூய்மையாகவும், நெருப்பில் அழியாமலும் தண்ணீரில் கரையாமலும் இருந்ததனால் மக்கள் அதிகமாகப் பயன்படுத்தினர். மட்பாண்டங்கள் முதலில் **அரை ஓடுகள்** கூடைகள் முதலியவற்றைப் பார்த்துச் செய்யப்பட்டன. பல ஆதிவாசிகள் மட்பாண்டங்கள் செய்வதற்குக் கூடைகளை அச்சாகப் பயன்படுத்தினர் பல பழைய மட்பாண்டங்களில் கூடைகளின் அடையாளங்கள் காணப்படுகின்றன. மட்காலத் தொழில் செய்வோர் 'கலஞ்செய்கோ' எனப்பட்டனர். இதனை,

நளந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே [114]

என்கிறது புறம். மேலும் இவர்கள் **வேட்கோ** எனவும் **வேட்கோச்சிறார்** எனவும் அழைக்கப்பட்டனர். அதிக அளவில் மண்பாத்திரங்கள் செய்ய சக்கரங்கள் பயன் படுத்தப்பட்டன. குயவனுடைய வனையும் மட்கலத்தின் சக்கரம் போல மதகுகள் வழியாகக் கமிழ்த்துச் சுழன்று வரைந்த செலவினையுடையதாகச் சேயாறு ஒழிவின்றி ஓடிவரும் என்பது குயவன் மட்கலஞ் செய்யும் உருளையின் சுழற்சிக்கு உவமையாகக் கூறப்படுகிறது. பல்வேறு விதமான மண்பானைகள் மக்களது விருப்பத்திற்கு ஏற்றவாறு செந்நிறமாகவும், கருநிறமாகவும் செய்யப்பட்டன என்பதை,

செந்தாழிக் குவிபுறத் திருந்த [108]
பெருங்கட் குறுமுயல் கருங்கலன் [109]

என்ற புறநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன.

தசும்பு

முல்லைநில மக்கள் பால், தயிர் வைக்க மண்ணால் ஆன பானைகளைப் அதிகமாகப் பயன்படுத்தினர். தசும்பு எனப்பட்ட மட்கலம் பால், தயிர் வைப்பதற்கன்றிக் கள் நிறைத்து வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. கள் நிறைத்து வைக்கும் தசும்புகளை மலர்மாலையாலும் இஞ்சி மாலையாலும் அலங்கரித்து மண்மேல் வைப்பர். இப்பானைகளின் மேற்புறத்தைச் சந்தனத்தால் பூசி வைத்ததை,

இஞ்சீவி விராய பைந்தார் பூட்டிச்
சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங்கு இருங்கை [117]

என்கிறது பதிற்றுப்பத்து.

கொல்லுத்தொழில்

தமிழர் உலோகத் தொழிலில் மேம்பட்டிருந்தனர். மேலும் கொல்லுத் தொழிலை ஒருவகையில் தச்சுத்தொழிலின் ஒரு பகுதியாகக் கருதலாம். சங்ககாலப் பொருளியல் வாழ்வில் கொல்லரும் தச்சரும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். மேலும்

பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கருவிகளைச் செய்தனர். ஓர் அரசனுக்குத் துணையாய் அமைபவர் படைவீரர்கள், அவர்கள் ஆற்றலை வெளிப்படுத்தத் துணைபுரிவன போர்க்கருவிகள், இக்கருவிகளை வடித்துத் தருபவர், கொல்லர்கள் ஆவர். இவர்கள் 'இரும்பு செய் கொல்லர்கள்' எனச் சிறப்பிக்கப்படுகின்றனர். போருக்குரிய கருவிகளை வடித்துத் தருவதும் களிறுகளின் கொம்புகளுக்குப் 'பூண்' அமைப்பதும் யானைகளைக் கட்டுவதற்குரிய சங்கிலிகளைச் செய்வதும் இவர்களுடைய பணியாகும். கொல்லன் தொழில் புரிந்த இடத்தைப் புறப்பாடல் 'கொற்றளர்' எனக் குறிக்கிறது. அதற்கு உ.வே.சாமிநாதையர் அவர்கள் உரை எழுதும்பொழுது 'பனிக்களரி' ஆகிய 'குறியகொட்டில்'என்று குறிப்பிடுகிறார். ஒடிந்தது, மழுங்கியது ஆகிய போர்க்கருவிகளைச் செப்பனிட்டதோடு புதிய கருவிகளும் இங்கு செய்யப்பட்டன. ஏழு ஊர்களில் உள்ள மக்கட்குச் செய்ய வேண்டிய பொதுவான கொல்லுத் தொழிலுக்கு 'ஓர்கொட்டில்' இருந்த நிலையைக் குறுந்தொகை,

ஏழூர்ப் பொதுவினைக் கோரூர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் [111]

எனக் குறிப்பிட்டுள்ளது. கொல்லர்கள் ஊர்தோறும் உழவர் முதலியோர்க்கு வேண்டிய கருவிகளை அவ்வப்போது செய்து கொடுத்து ஆண்டு முடிவில் ஊதியம் பெற்றனர். ஏழூர்க்குத் கருவிகள் பொதுவியல் செய்யவேண்டிய கொள்ளுலையில் துருத்தி இடையறாது இரவு பகல் இயங்கியது. கொல்லர்கள் தோலிலான துருத்தியைக் காலால் மிதித்துத் தீயுண்டாக்கினர். அவர்கள் கருங்கல் அல்லுவதற்குப் 'குறட்டினைப்' பயன்படுத்தினர் இக்கொல்லர்கள் இரும்பைக் காய்ச்சிச் சம்மட்டியால் அடித்தனர். குயம் (அரிவாள்) இரும்புத் தகடு, கவை முட்கருவி, மத்திகை (சமட்டி) நில அகழும் உளி, வளைவுக்கத்தி, தொடலைவாள், ஊசிகள், படைக்கல் கருவிகள் போன்ற பல்வேறு வகையான இரும்பாலான பொருட்கள் அக்காலத்து நிலவிய கொல்லர் தொழிலை நன்கு விளக்குகின்றன.

அணிகலத் தொழில்

அழகுக்கு அழகு செய்வன அணிகலன்கள். சங்க இலக்கியத்தின் தொடக்க

காலத்தில் இயற்கையோடு இலை, தழைகளை ஆடையாக அணிந்த மக்கள் வண்ண மலர்கள் கொடி, இலை ஆகியவற்றை அணிகளாக அணிந்து தம்மை அழகுபடுத்தினர் என்பதை,

ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர் [112]

என்கிறது. நெய்தல் நிலக்கரைகளில் கிடைத்த கிளிஞ்சல்கள், கடலில் கிடைத்த முத்து, பவளம், சங்கு முதலியன அணிகளாகப் பயன்படுத்தப்பட்டன. அதற்கு அடுத்த நிலையில் வெள்ளி, பொன் முதலிய உலோகத்தால் ஆன அணிகளை அணிந்தனர். கல் இழைத்த பொன் அணிகளைச் செய்யத் தொடங்கினர். படிப்படியாக அணிகலத் தொழில் வளர்ந்து தமிழரின் கைத்திறன்களை கவரும் வகையில் சிறப்புற்றது. மக்கள் வாழும் நிலை, சூழல் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு அணிகள் செய்யப்பட்டன. மலர் அணியும் வழக்கம், குறிஞ்சி நிலத்திலும், முத்து பவளம் அணியும் வழக்கம், நெய்தல் நிலத்திலும் இருந்தது. மேலும் மிளகுமாலை மண்ணால் செய்த உருண்டை மணிமாலை போன்றவைகளும் பாசிங்கு போன்ற பல வண்ணக்கற்கள் கோத்த மாலைகளும் காப்புடை தாலி போன்ற அணிகள் அணியும் வழக்கம் மருதநிலத்தில் இருந்தது. பழங்காலச் சமுதாயத்தில் பொதுமக்கள் அணிந்து அணிகளிலும் அரசாண்ட மன்னனது முடி மிகநுண்ணிய வேலைப்பாடுடன் செய்யப்பட்டிருந்தது. அரசமாதேவியின் அணிந்த அணிகலன்களும் சிறந்த வேலைப்பாடுடன் செய்யப்பட்டிருந்தன. வாணிகப் பெருமக்கள் வீடுகளிலும் சிறந்த விலையுர்ந்த அணிகலன்கள் பயன்படுத்தப்பட்டன. 'பொற்கொல்லர்' அணிகள் செய்ய 'அரம்' என்ற கருவியை பயன்படுத்தினர் என்பதை,

அரம் போழ்ந் தறுந்த இலக்குவளை [113]

என்கிறது மதுரைக்காஞ்சி. அணிகலன் உடைந்துவிட்டால் அதனைப் பொற் கொல்லனிடம் கொடுத்துப் புதுப்பிக்கும் முறையும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது. அதோடு ஒருபொருளை அழித்து மற்றொரு அணிகலன் செய்யும் வழக்கமும் இருந்தது. போரில் வெற்றி பெற்ற மன்னன் தன்பகை மன்னர்களின் மணிமுடியை அழித்து அப்பொன்னைக் கொண்டு அணிகலன் செய்தான். மேலும்

பகை மன்னர்களது ஏழு முடிகளை அழித்துச் சேரமன்னன் பொன்னலாகிய மாலை செய்து கொண்டான் என்பதை,

ஏழுமுடி கெழுஇய திருஞெம ரகலத்து [114]

என்கிறது பதிற்றுப்பத்து. பண்டைத் தமிழர் முடி முதல் அடிவரை எல்லா உறுப்புகளிலும் அணிகள் பல அணிந்தனர். அவர்கள் தாம் தேடிக்குவித்த பொன்னையும் பொருளையும் பல்வகை அணிகலன்களைச் செய்து அணிந்தனர். ஆண்களும், பெண்களைப் போலவே அணிகள் பல அணிந்திருந்தனர். தலையணி, கழுத்தணி, கையணி, விரலணி, இடையணி, காலணிகள் என பல அணிகலன்களை செய்யும் திறமையை பெற்றிருந்தனர்.

தோல் தொழில்

சங்ககால மக்களிடையே தோலால் செருப்புத் தைக்கும் பழக்கம் இருந்தது. நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பதை உணர்ந்த அக்கால மக்கள் செருப்பைத் தோலால் தைத்துக்காலில் அணிந்தனர். செருப்பு என்ற காலணி தொடுதோல், அடிபுதை, அரணம், அடையல் என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கால மக்கள் செருப்புத் தைக்கும் முறையை வகைப்படுத்தினர். அவற்றில் முதல் நிலையாகத் தைப்பதற்கென அமைந்த தோலை மென்மைத்தன்மையோடு செந்நிறமாக மாறும்வரை 'துவர்' நீர்த்துறையில் முழுவதும் மறையும்படி அழுத்திப் பதப்படுத்தினர். பின்னர் பதப்படுத்தப்பட்ட தோல் பல்வேறு வண்ணத்தாலும் வடிவத்தாலும் அளவால் பொருந்தக் கூடிய வகையில் வடிவமைத்தனர். அதன் மேற்புறத்தில் மயிற்பீலின் பிளவினை வைத்துத்துதைத்து அழகுப்படுத்தினர். இவ்வாறு செருப்புத் தைக்கும் தொழில் முறைப்படுத்தப்பட்டது. என்பதை,

தைப்பமை சருமத்தில் தாளியை தாமரை

.....

புரிமென் பூலிம் போழ்புனை அடையல் [115]

என்கிறது பரிபாடல்.

கால்நடையைப் பாதுகாத்தல்

முல்லை நில மக்கள் நீர்வளமும், நிலவளமும் குறைந்த புன்செய் நிலப்பகுதியில் மக்கள் ஆடு, மாடு வளர்ப்பதைப் பெருந்தொழிலாகக் கொண்டிருந்தனர். அந்நாளில் பசுக்கள் வளர்ப்பது பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டது. பசுமாடு இருந்தால் 'பசியாமல் சாப்பிடலாம்' என்ற பழமொழி அதன் அடிப்படையிலேயே தோன்றியது. மக்கள் பயிர்கள் விளைவிப்பது மட்டுமின்றி கால்நடைகளைப் பேணிக்காப்பதிலும் கவனம் செலுத்தினர். நிரைகளை மேய்ப்பதற்கு அதிகாலையில் கன்றுகளைத் தொழுவத்தில் நிறுத்திவிட்டு நிரைகளை ஓட்டிக்கொண்டுச் செல்வர். ஆடு மாடுகள் மேய்த்தலைத் தொழிலாகக் கொண்ட மக்கள் ஆயர் **கோவலர்** இடையர் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இவர்கள் இத்தொழில் அல்லாமல் வேறு தொழில் அறியாதவர்கள் அதனால் 'கல்லாக் கோவலர்' எனப்பட்டனர்.

இக்கோவலர் கால்நடைகளை மேய்க்கச் செல்லும்போது **உறியுடன் தீக்கடைக்கோல்** முதலிய கருவிகளை இட்டு வைத்த தோற்பையை ஒருசேரக் சுருக்கிட்டுப் பனையோலைப் பாயோடு முதுகில் கட்டி எடுத்துச் செல்வர் பின் நிரைகளைப் புல் மிகுதியாக உள்ள பரந்த நிலத்தில் மேயவிடுவர். நிரைகள் வேறிடம் செல்லாமல் அவ்விடத்திலேயே தங்குவதற்கு **விளை** எனப்படுகிற வாயைக் குவித்தூதும் குறிப்பொலியை எழுப்புவர். இதனை இக்காலத்தில் **விசில்** என்பர். இவ்வாறு மேய்க்கப்பட்ட ஆநிரைகளை மாலைநேரம் வரும்பொழுது வீடு நோக்கிச் செலுத்துவர் இக்காட்சி,

தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல் காற்பிரி பயிற்றிப்
.....
மனைமனை படரும் நனைதகு மாலை [116]

எனச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

வேட்டையாடுதல்

தொடக்கக்காலத்தில் மனிதன் விலங்கொடு விலங்காக வாழ்ந்த காலத்தில் விலங்கை வேட்டையாடி வாழ முற்பட்டான். அந்நிலையில் வேட்டைத்தொழில் தோன்றி இருத்தல் வேண்டும். வேட்டைக்குச் செல்வோர் தனித்துச் செல்லாது பலர் சேர்ந்து வேட்டை நாயுடன் செல்வதே வழக்கம். அவ்வாறு சென்று வேட்டையாடும் பொழுது அவர்கள் பிரிந்து சென்று வேட்டையாடுதலுண்டு. பிரிந்து சென்றவர் ஒன்று சேரும் போது வேட்டை நாயை அழைப்பதற்கு **ஊதுகொம்பினை** ஊதுதல் வழக்கம் இதனை,

ஊதல் வேண்டுமாற் சிறிதே வேட்டோடு
வேய்பலில் அழுவத்துப் பிரிந்தநின்
நாய்பயிர் குறிநினை கொண்ட கோடே [117]

என்னும் அகநானுற்றுப் பாடலடிகளால் அறிய முடிகிறது. விலங்குகளின் உயர்நிலை அறிந்து அதன் மேல் அம்பெய்து கொல்லுதல் வேடர் இயல்பு. வேட்டையாடுவதற்கு தேவையான கருவிகளுடன் செல்லுதல், காட்டில் எல்லாத் திசைகளிலும் அலைந்து வேட்டையாடுவதற்குரிய விலங்குகள் உள்ள இடத்தை அறிதல், சரியான இடமறிந்து வலை விரித்தல், பதுங்கிய இடத்திலிருந்து விலங்கை வெளிப்படச் செய்தல் வலையில் சிக்கியவுடன் அஞ்சாது பாய்ந்து தாக்குதல் போன்றவை வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்தாலும் வாழ்வின் தேவையானகவும் கருதினர்.

மீன்வேட்டம்

நெய்தல் நிலப் பரதவ மக்கள் கடலில் மீன் பிடித்தலைத் தலையாய தொழிலாகக் கொண்டிருந்தனர். எனினும் முத்துச் சிற்ப்பிகள் நிறைந்த கடற்பகுதிகளையொட்டி வாழ்ந்தவர்கள் முத்துக்குளிக்கும் தொழிலிலும் சங்கெடுக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். இப்பரதவர்கள் மீன்வேட்டையாடுவதாலும் உப்பு விளைப்பதாலும் வரும் பொருளைக் கொண்டே வாழ்க்கை நடத்தினர். பரதவர் தூண்டிலில் சிறிய மீன்களை இயையாகக் குத்திக் **கடலிலும் கழியிலும்** எறிந்து மீன்பிடித்தனர். கடலில் சென்று மீன் பிடிக்கத் திமில், அம்பி, தோனி ஆகியவற்றைப் பயன்படுத்தினர். கொடுஞ்சுறா மீன்களை வேட்டையாடிப் பிடிப்பதில் அஞ்சா நெஞ்சமும் ஆர்வமும்

கொண்ட பரதவர்களின் வலையை முதல் நாள் அறுத்ததால் மீன்வேட்டம் நடைபெறாது. அதனால் மறுநாள் கூரிய முனையுள்ள **அறியுளி** என்னும் கருவியைப் பயன்படுத்தி சுறாமீன்கள் மேல் குறிவைத்து வீசி எறிந்து பிடித்து வருவர் இதனை,

கொடுமுடி அவ்வலைப் பரியப் போகிய
கோட்சுறாக் குறித்த முன்போடு
வேட்டம் வாயாது எமர்வா ரலரே [118]

என்கிறது. இதனின்று பரதவர் தம் தொழிலில் விடாமுயற்சியை உடையவர் என்பதைப் அறிய முடிகிறது. விடா முயற்சியுடன் பிடித்த மீன்களை நெற்களத்தில் அறுவடை செய்த உழவர்களைப் போன்று வேண்டுவோர்க்கெல்லாம் தேவைக்கும் மிகுதியாகக் கொடுத்து பின்னர் எஞ்சியவற்றைத் தங்களுக்குள் பங்கிட்டு விலைகூறி விற்று வாழ்ந்தனர்.

உப்பு விளை வித்தல்

நெய்தல் நிலமக்கள் கடற்கரையில் உள்ள உவர்நிலத்தில் ஒழுங்காகப் பிரிக்கப்பட்ட நிலத்தில் சிறுசிறு பாத்திகள் அமைத்து அவற்றில் கடல் நீரினைப் பாய்ச்சுவர். பின்னர் சூரியனது வெம்மையால் நீர்வற்று உப்பு விளையும். இவ்வாறு விளையும் உப்பை விற்று வாழ்ந்தவர்கள் **உமணர்** என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் மழையினை எதிர்ப்பார்க்காமல் ஏர்பூட்டி உழாமல் உப்பு விளைவித்தலைத் தொழிலாகக் கொண்டு சிறுகுடிகளில் வாழ்ந்தனர் என்பதை,

நேர்கட் சிறுதடி நீரின் மாற்று
வானம் வேண்டா உழவின்எம்
காலைஞ் சிறுகுடி [119]

என்கிறது நற்றிணை. உமணர்கள் தாம் விளைவித்த உப்பினைப் பக்கத்திலுள்ள ஊர்களுக்கும் வெளியூர்களுக்கும் சென்று விற்பனை செய்தனர். அவ்வாறு விற்பனை செய்வதற்கு வண்டிகளில் எருதுகளைப் பூட்டி அதன் மீது உப்பினை ஏற்றித்தானும் ஏறிச்சென்றனர். வண்டி செல்வதற்குத் தாற்றுக்கோலினைப் பயன்படுத்தினர் என்பதை **இதழ்கோல் உமணர்** என்கிறது அகப்பாடல்,

முத்துக்குளித்தல்

தமிழகத்து முத்துக்களில் பாண்டிய நாட்டு முத்து உலகப் புகழ்பெற்றதாகும். கடற்துறைகளில் முத்து மூழ்கி எடுக்கப்படுகின்றது. முத்து என்பதை வடமொழியில் மௌதிக், மோத்தி என்று அழைத்தனர். பாண்டியனின் துறைமுகமான கொற்கையின் முத்து வெண்மை நிறமும் மன்னார் வளைகுடாவின் முத்து சிவப்பு நிறமும் உடையது என்பர்.

முத்துபடு பரப்பிற் கொற்கை முன்றுறை [120]

கொற்கை முத்துக்கள் மிகுந்த ஒளியுடையனவென்றும் அவற்றின் ஒளியானது சிறந்த நகைப்பொலிவிற்கு ஈடானது என்றும் மதுரை கணக்காயர் கூறுவார். நெய்தல் நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மீன்பிடித்தலோடு முத்துக்குளிக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். முத்தெடுப்போர் ஆழ்கடலில் முழ்கி முத்தெடுக்கும் போது தமக்குப் பாதிப்பு ஏற்படா வண்ணம் கொல்லும் தன்மையுள்ள சுறாக்களை விலக்கிச் செல்வர். கடலில் விளையும் முத்துக்கள், சங்குகள் , மீன்கள் எனக்கடல் வளம் மனித வாழ்வின் மேம்பாட்டிற்குப் பயன்பட்டது.

சங்கெடுத்தல்

சங்கின் தமிழ்ப்பெயர் வளை என்பதாகும். தமிழகத்தின் முன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருப்பதால், சங்கு அதிகமாகக் கிடைக்கிறது. சங்குகளில் இடம்புரி சங்கு வலம்புரி சங்கு என இருவகைகள் உண்டு. அவற்றில் வலம்புரி சங்கு கிடைப்பது மிகவும் அரிதாகும். அதினால் வலம்புரி சங்கின் விலை மிக அதிகமாகவிருந்தது. மேலும் சங்குகளை அறுத்து வளையல் செய்தனர். அக்காலத்துப்பெண்கள் எல்லோரும் சங்குவளையல்களை அணிந்திருந்தனர். கண்ணாடி வளையல்கள் அணிந்திருந்தமைக்கான குறிப்புகள் இல்லை. சங்கு வளையல் அணிவது மங்களமாகக் கருதப்பட்டது. அன்று அரண்மனையில் வாழ்ந்த அரசகுமாரிகள் முதல் ஏழைப்பெண்கள் வரை சங்கு வளையல்களை அணிந்கதிருந்தனர். ஆகவே, சங்குகளை வளையல்களாக அறுக்கும் தொழில் அக்காலத்தில் சிறப்பாக நடைபெற்றது. சங்குகளை சிறுவாளினால் அறுத்து அரத்தினால் அராவி அழகான வளையல்களைச் செய்தனர் என்று நற்றிணை கூறுகிறது.

வல்லோன் வாளரம் பொருத கோள்நேர் எல்வளை [121]

சங்கு வளையல்களில் கொடிகள் ,பூக்கள் வரிக்கோடுகள் முதலியவை அமைத்து அழகாகச் செய்தனர்.வளையல் அறுக்கும் தொழில் ஆங்காங்காங்கே சிறப்பாக நடைபெற்றது என்பதை சங்கப்பாடல்கள் கூறுகின்றன.

அறம்போழ் அல்வளை [122]
கடற்கோடு அறுத்த அரம்போல்
அலைவளை ஐங்கோடீர் எல்வளை [123]

சங்க காலத்துப்பெண்கள் சங்கு வளையல்கள் அணிவதை நாகரிகமாகக் கருதினர்.

ஓலைத்தொழில்

பண்டைத்தமிழர் பனை, தென்னை மர ஓலைகளைக் கொண்டு அன்றாடத் தேவைக்குரிய பலவிதமான பொருட்களைச் செய்தனர். அவற்றில் ஓரிடத்திலிருந்து மற்றோரித்திற்குப் பொருட்களை கொண்டு செல்லப் பயன்படும் கூடைவகைகள் மற்றும் உறங்குவதற்குரியப் பாய்கள், மற்றும் வெய்யில் மழை பாதுகாத்து தரும் வகையில் குடைகள் போன்றவற்றையும் ஓலையில் செய்தனர். மேலும் வட்டில் **புட்டில்** குடை என்னப்பட்டன. ஓலைகளைக் கொண்டு செய்யப்பட்ட இக்கூடைகள் கலைத்திறனோடு அழகுபடுத்தப்பட்டன. கூடை என்பதற்குக் கொட்டம் என்று பெயர். கொட்டம் என்பதற்கு ஈந்து என்பதும் பெயர். இது ஈந்து ஓலை முதலியவற்றால் பின்னப்பட்ட சிறு பெட்டியைக் குறிக்கும். செல்வர் மனைகளிலும் அரண்மனைகளிலும் பஞ்சனைகள் பயன்பட்டதாகக் கூறினாலும், எளிய மக்கள் ஓலையால் பின்னப்பட்ட பாயையே பயன்படுத்தினர். ஆயர் குலத்தவர் ஓலைப்பாயை அதிகமாகப் பயன்படுத்தினர் என்பதனை,

பறிப்புற இடையன [124]

என்ற பாடலடி இடையர் பயன்படுத்திய பறிப்பாயைக் குறிக்கிறது. மழை, வெயில் இவற்றினின்றும் பாதுகாப்பு தரவும் படுத்துறங்கவும் பாய் பயன்ட்டது. இவற்றால் ஓலைத்தொழில் எளிய மக்களுக்கப் பயன்பட்டதை அறியமுடிகிறது.

கயிறுதிரித்தல்

பழந்தமிழர் பொருட்களைக் கட்டுவதற்குக் கயிற்றினைப் பயன்படுத்தினர்.முல்லை நிலமக்கள் தயிரைக் கடைவதற்கு கயிற்றினைப் பயன்படுத்தினர். ஆயர் குலத்தவர் பால்,தயிர் நிரம்பிய மட்குடங்களை வைப்பதற்கு கயிற்றினை வலைபோல் பின்னி வீட்டுக் கூறையில் தொங்கவிடுவர். இது **உறி** என்று அழைக்கப்பட்டது. கழைக்கூத்தாடிகள் முங்கிலின் மேல் கட்டிய கயிற்றின் மேல் நின்றாடியதை

யார்கொல் அளியர் தாமே ஆரியர்
கயிறொடு பறையிற் கால்பொறக் கலங்கி [125]

என்கிறது குறுந்தொகை. இதனின்று கயிற்றால் நின்றாடக் கூடிய அளவிற்கு திண்மையும் உறுதியும் வாய்ந்த கயிறு திரிப்பதில் வல்லவராய் விளங்கினர். கடலில் மீன்களைப் பிடிப்பதற்கு வலைகளும் மற்றும் விலங்கு பறவைகளைப் பிடிப்பதற்கு ஏற்ற வலைகளும் பயன்படுத்தப்பட்டன. அவற்றைப் பின்னுவதற்கேற்ற கயிறுகளையும் திரித்தனர்.

சலவைத் தொழில்

கூழானாலும் குளித்துக் குடி கந்தையானாலும் கசக்கி கட்டு என்னும் பழமொழிக்கு ஏற்ப சங்ககால மக்கள் வெளுத்த தூய்மையான ஆடையை அணிந்தனர். அந்த ஆடையை வெளுப்பதற்குத் தணியான மக்கள் கூட்டமிருந்தது. அவர்கள் **காழியர்** என்னப்பட்டனர். இத்தொழிலில் ஆண்களுக்கு உதவியாகப் பெண்களும் ஈடுபட்டனர். அவர்கள் புலத்தியர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் ஆடையை ஒருவகையான மணலைப் பயன்படுத்தி வெளுத்துள்ளனர். அம்மண் உவர்மண் எனப்பட்டது.

காழியர் கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிய
களரி பரந்த கல்லொடு மருங்கின் [126]

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. களர்நிலத்தில் ஊருகின்ற உவர்நீர் அழுக்குகளைப் போக்கும் இயல்புடைது. அதனால் புலத்தியர் அன்றாடம் உவர்நீர் கிடைக்கும் இடத்திலிருந்து நீரெடுத்து ஆடைகளைத் தோய்த்தனர். பகல் பொழுதில் ஆடையை உலர்த்தினால் சூரிய ஒளிபட்டு ஆடையின் பொலிவு குன்றிவிடும் என்பதை அறிந்து , இரவில் உணரவிட்டனர். இவ்வாறு வெளுத்து காயவைத்து மடித்துவரும் ஆடைகளுக்கு நறும்புகையூட்டினர்.இதனை

மென்னூற் கலிங்கம் நறும்புகை மடுப்ப [127]

எனக் குறிக்கப்படுகிறது.

அட்டில் தொழில்

தமிழரின் சிறந்த பண்பு விருந்தோம்பல். அவ்வாறு வாழ்ந்து முடித்தவர்களின் வாழ்க்கை தற்போது வாழ்பவர்களுக்கு இலக்கணமாகும். உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத உணவு சமைக்கும் தொழில் அட்டில் தொழில் என்றழைக்கப்பட்டது. ஏழை எளிய மக்கள் தங்களுக்கு ஏற்றவாறு செல்வர்,வள்ளல்,மன்னர என அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு உணவு வழங்கினர் என்பதை,

அமிழ்த்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்
வருநருக்கு வரையா வரிசில் வாழ்க்கை [128]

என்கிறது. மன்னர்கள் இம்மையும் மறுமையும் புகழ்பெற அட்டில் சாலைகளை அமைத்தனர்.அவற்றின் முலமாக மக்களுக்கு உணவை வழங்கினர். இடைவிடாமல் சோறுவடிக்கும் கஞ்சிநீர் பாய்வதால், தெருவில் ஆறுபோல நீர்பெருக்கு காணப்பட்டது. அத்தகைய நீரைப்பருக ஓடிவரும் எருதுகள் தம்முள் பொருதுவதால், அக்கஞ்சி சேறாக மாறும். அவ்வழியே பல தேர்கள் செல்வதால், அக்கஞ்சியின் சேறு துகளாக மாறியது என்கிறது பட்டினப்பாலை.

கூவலர்

பண்டையத் தமிழர் சிற்பக் கலை,கட்டிடக் கலை என்று அனைத்துக் கலைகளிளும் தேர்ச்சி கொண்டது போல பயிர்களுக்கு வேண்டிய நீர்பாசனத்திற்காகவும் மக்களுக்கு வேண்டிய குடிநீருக்காகவும் கிணறு வெட்டுவோர் இருந்தனர்.அவர்கள் கூவலர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் திண்மையான நிலத்தில் இரும்பினால் செய்த கோடாரியால், கற்களை உடைத்து மேலே அகழ்வது கூவல் என்றும் அதனுள் குறுகிய வாயுடையதாய் ஆழமாய்த் தோண்டப்படுவதைப் பத்தல் என்றும் அழைத்தனர். அக்காலத்தில் நீர் நிலைகள் அமைத்தல் மன்னனது கடமைகளுள் ஒன்றாய் அமைந்தது. இதனை **குளந்தொட்டு வளம்பெருக்கி** என்ற பட்டினப்பாலையின் பாடலடிகளால் அறிய முடிகிறது. கூவல் என்பது, கிணறு என்னும் பொருளிலும் இடம்பெறுகிறது.

கூவலன்ன விடறகம் புகுமின் [129]

பழந்தமிழர் வழிப்போக்கர்களுக்கும் கால்நடைகளுக்கம் உதவும் பொருட்டு, ஆங்காங்கே கூவல் தோண்டினர். ஆநிரைகள் நீர் உண்ண ஆயர்கள் பயிர்செய்யாது விடப்படும் தரிசு நிலத்தில் கற்களை உடைத்துத் தோண்டி நீர் ஊருகின்ற ஊற்றுக்கண்களை உடைய கிணற்றினை அமைப்பர். இதனை,

விடுநிலம் உடைத்த கலுழ்கட் கூவல் [130]

என்று அகநானுறு குறிப்பிடுகிறது.

அந்தணர் தொழில்

வேதங்களையும் அவற்றின் பொருள்களையும் அனைவருக்கும் புரியும்படி ஓதி, அவைகூறிய ஒழுக்கங்களை மேற்கொண்டு இந்நிலவுலகத்தில் இன்பம் கைவரப்பெற்றவராய் அறத்தினின்றும் தவறாது,எல்லா உயிர்களிடத்தும், அருள்நிரம்பியவர் அந்தணர். இவர்கள் இயல்பிலேயே மன அமைதி பெற்றவராயும், தன்னலம் துறந்தவர்களாயும் மன்னர் முதல் மக்கள் வரை எல்லோராலும் மதிக்கப்படும்படி இருப்பர். இவர்களை அறவோர், அருளாளர், ஆன்றோர், சான்றோர், மறையோர் என்று பலரும் புகழ்ந்துள்ளனர். இவர்கள் ஓதல், வேட்டல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழில்களையும் செய்துள்ளனர். அந்தணருக்குரிய ஆறு தொழிலிலும் சிறந்தது ஓதல் என்பதால், இவர்கள் ஓதல் அந்தணர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வைகறைப்பொழுதில் வேதம் ஓதுவர். இவர்கள் ஆறுதொழிலையும் சிறப்பாகச் செய்தனர் என்பதை,

ஓதல் வேட்டல் அவைபிறர் செய்தல்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்தொழுக [131]

என்கிறது பதிற்றுப்பத்து. இவர்கள் ஓரிடத்தில் தங்கியிராமல், புலவர்கள் போன்று ஊர்தோறும் சென்று, நாட்டு மக்களுக்கு நல்லறத்தைப் புகட்டினர். இவ்வாறு ஊர்தோறும் செல்வதற்கு ஊன்று கோல்,தண்ணீர்,கமண்டலம், ஆசனம் போன்றவற்றை உடன் எடுத்துச்சென்றனர். அந்தணர் நாட்டு நலன் கருதி மக்கள் நலங்கருதி வேதங்களை ஓதியும்,வேதநூல் படி வேள்விகளையும் செய்தனர். இதனை,

கேள்வி முற்றிய வேள்வி அந்தணர் [132]

என்கிறது புறநானூறு.

அரசர்

அரசனது தொழில் உலகிற்கு அளிசெய்தலாகும். அதற்கு மன்னன் மயக்கம் அற்ற அறிவை உடையவனாக இருத்தல் வேண்டும். முறை வேண்டுபவர்களுக்கும் குறைவேண்டுபவர்களுக்கும் எளிதாகவும் இனிதாகவும் நீதிவழங்கும் பண்பும் உதவும் உள்ளமும் கொண்டிருக்க வேண்டும். மாற்றாரை தன் வீரத்தால் அஞ்சச் செய்தல் வேண்டும். மன்னனது வெற்றிக்குக் காரணம் அவனது அறமுடைமையே.மன்னனது தொழில் வீரமும் மென்மையும் கொடையும் உரிய இடங்களில் பயன்படுத்தி நாடுவளம்பெறப் பாடுபடுவது என்பதை,

அறநெறி முதற்றே அரசின் கொற்றம் அதனால்
நமரெனக் கோடல் கோடாது
பிறரெனக் குணங்கொல்லால...
.....
உடையராகி இல்லார் கையற [133]

என்கிறது. மேலும், அரசன் குடிமக்களுக்கு வளம் உண்டாக்கிக் கொடுத்து அதன் முலம் அரசன் அன்புடன் திரைபெறுதல் வேண்டும்.மேலும், மக்கள் தமது திரைப்பொருளை தாமே அன்புடன் செலுத்தும்படி இடங்கொடுக்க வேண்டும் என்ற உறுதி கொண்டவனாக அரசன் சங்க காலத்திலே திகழ்ந்தான்.

அமைச்சர்

அரசனுக்கு நேர்மையான வழியைக் காட்டுபவர் அமைச்சர். நாட்டில் மன்னன் புகழுற வேண்டுமானால், நல்ல அமைச்சர் தேவை. இச்சொல் அமாத்திய என்னும் வடசொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இம்மண்ணுலம் பிறருக்கும் பொதுவானது என்று சொல்லாதபடி மண்ணுலகம் முழுதும் ஆளும் பேரரசர்களுக்கு அறிவாகிய சொல்லலைச் சொல்லுதலை இயல்பாக உடையோர் அமைச்சர்கள் என்பதை

பொதுமொழி பிறர்க்கு முழுதாளும் செல்பவர்க்கு
மதிமொழி இடல்மாலை வினைவர் போல் வல்லவர். [134]

எனக்கூறுகிறது கலித்தொகை. இயற்கையாகப்பெற்ற நுண்ணறிவோடும் நூலறிவோடும் அமையப்பெற்று நல்ல அறிவொழுக்கம் உடையராகவும் அமைச்சர் இருக்க வேண்டும். அக்காலத்தில் இன்னது செய்தல் நலம் பயக்கும் ஆராய்ந்து அரசனிடம் சொல்லிக்கொள்வதே அமைச்சரின் தலையாயக் கடமை.இவர்கள் அரசனிடம் உள்ள நல்ல குணங்களையும் ஆராய்ந்து அவனை நன்னெறியில் நடக்கச்செய்வர். இத்தகைய சிறப்புடைய அமைச்சர்கள் காவிதி என்னும் பட்டத்தைப் பெற்றனர். இதனை

நன்றும் தீய்தும் கண்டாய்த்து தடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்து
.....
செம்மை சான்ற காவிதி மாக்களும் [135]

என்கியது மதுரைக்காஞ்சி.அக்காலத்தில் காவிதிப்பட்டம் பெற்றமைக்கு அறிகுறியாக காவிதிப்பூ என்னும் பொற்பூ வழங்குதல் மரபாக இருந்தது.

ஒற்றர்

பிறர் ஐயுறா வண்ணம் அஞ்சாத தன்மையுடன் எது நடந்தாலும் தன் கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தாத இயல்புடையவர். இவர் வேடர், சாரணர் என்றும் அழைக்கப் பட்டனர். அரசர்களுக்கு மக்களின் கருத்துக்களை அறிவதற்கும் பகைவரின் படைவலிகளை அறிவதற்கும் ஒற்றர்கள் பயன்படுத்தப் பெற்றனர். ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் ஒற்றர்கள் பயன்படுததப் பெற்றனர். ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் ஒற்றர்களாகச் செயற்பட்டுள்ளனர். அரசர்கள் வேவுபார்ப் போரைப் பெரிய எண்ணிக்கையில் ஏவல் கொண்டனர். அவர்கள் தொழில் 'ஒற்று' அல்லது 'வேய்' எனப்பட்டது. வேய் என்பது ஒற்றர் பகைவருடைய இடத்திற்குச் சென்று ஆநிரை நின்ற இடத்தில் ஒற்றறிவது இதனை,

பற்றார் தம்முனைப் படுமணி யாயத்
தொற்றா ராய்ந்த வகையுடிரத் தன்று [136]

என்கிறது புறப்பொருள். ஒற்றர்கள் முன்பே தங்களுக்குள் பேசிக்கொண்டபடி ஒலியால் செய்தியனுப்புவர். மேலும் மற்றவர்களுக்குக் கேட்கா வண்ணம் ஒடுங்கிய குரலிலும் பேசுவர்.

ஒற்றுச் சொல் மாக்களின் ஒடுங்கிய குரல் [137]

என்கிறது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒற்றர்கள் இருந்தனர். அரசன் தன் நாட்டு நிலையை அமைச்சர் வாயிலாகவும் பிறநாட்டு நிலையைத் தூதர் வாயிலாகவும் இவ்விரு நாடுகளின் நிலையை ஒற்றர்கள் வாயிலாகவும் அறிந்து கொள்கின்றான்.

தூதுவர்

தூது என்பது ஒருவர்தம் கருத்தைப் பிறர்க்கு அறிவிப்பதற்காகத் தோன்றியது இத்தூது என்னுந் தொழில் மிகவும் நல்லியல்புடைய தொழிலாகும். ஒரு வேந்தனின் சார்பாளராக மற்றொரு வேந்தனின் அரசவையில் செயல்பட்டவர் தூதர் எனப்பட்டார். தொல்காப்பியம் இத்தூதினை மூவகைப் பிரிவினுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. இதனை,

ஓதல் பகையே தூதிவை பிரிவே [138]

என்கிறது. பண்டைய முடிமன்னர்களின் அரசவை வளர்த்த செய்தொழில்களுள் ஒன்று தூது. இத்தூது செல்பவர்கள் சிறந்த தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை,

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு [139]

தூதனாக இருப்பவன் அரசனிடமும் மற்றவரிடமும் அன்பு கொண்டு அரசனுக்கு நன்மையானவற்றை ஆராய்ந்து அறியும் அறிவினையும், வேற்று அரசரிடம் சென்று தூது சொல்லும் காலத்தில் ஆராய்ந்து முறைப்படி சொல்லும் சொல்வன்மையினையும் பெற்றிருத்தல் வேண்டும். தூதாகச் சொல்லுந் தொழில் விழுந்தொழில் என்று குறிப்பிடப் பட்டது. விழுந்தொழில் என்பது தூது போதலைக் குறிக்கிறது. மேலும் இத்தொழிலின் சிறப்புக்கருதி,

ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன [140]

என்கிறார் தொல்காப்பியர். அரசன் மேற்கொண்ட போர்தொழில் நிகழாவண்ணம் மழை பெய்யத் தொடங்கியது இதனால் வேந்துவிடு விழுத்தொழிலாகிய தூது செல்லுதல் கைவிடப்பட்டது.

வந்துவிடு விழுத் தொால் ஒழிய

யான் தொடங்கினால் நிற் புறத்தரவே [141]

என்கிறது.

காவலர்

காக்கும் தொழிலைச் செய்பவர் காவலர் எனப்பட்டனர். காத்தல் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அரசனுக்குக் காவலன் என்ற பெயரும் வழங்கப்பட்டது. கொலை, களவு முதலியவற்றிலிருந்து மக்களைக் காத்தல், ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அரசனின் கடமையாகும். அரசன் மக்களை இவற்றிலிருந்து காப்பாற்றா விட்டால் நாட்டின் செல்வமாகக் கருதப்பட்ட பசுக்களின் பால் குறையும் அறிஞர்கள் தங்கள் கடமைகளை மறப்பர் என்பதை,

ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூல் மறப்பர்

காவலன் காவலன் எனின் [142]

என்று அரசனின் கடமையைச் சுட்டுகிறது. நாடு, ஊர், நகர் மக்கள் இவற்றைக் காக்கும் பொறுப்பு அரசனது கடமையாக இருந்தது. அவற்றைக் காக்கத் தவறினால் நாட்டில் கல்வி கற்றல், பொதுநல வேள்வி செய்தல், கொடுப்பது, வாங்குவது ஆகிய ஆறு தொழில்களும் இல்லாது போகும் என்பதை,

காவலர்ப் பழிக்குமிக் கண்ணகல் ஞாலம் [143]

காவலர் வழிமொழிந்து ஒழுக [144]

என்றும் பாடலடிகள் அரசனது காக்கும் பொறுப்பைச் சுட்டுகின்றன.

நகரக் காவலர்

நகரைக் காவல் செய்வதும் ஒற்றறிந்து உரைப்பதும் நகரக்காவலரின் தொழிலாகும். இவர்கள் தூக்கம் என்பதை அறியாதவர்கள். இவர்கள் நள்ளிரவில் கரிய துடியின் தோலைப் போன்று கருநிறத்து கல்லையும், மரத்தையும் அறுக்கும் கூர்மையான உளியும் நுலேணியும் வைத்திருப்பர். இடையில் வாள்தொங்கும் நுண்ணிய வேலைப்பாடுமிக்க ஆடை அணிந்திருப்பர். இரவில் கள்வரைப்

பிடிப்பதற்குக் காவலர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் துயில் கொள்ளாத கண்களை உடையவராக இருந்தனர். மேலும் சிறந்த விற்பயிற்சி உடையவர் காவலர். இப்படிப்பட்ட காவலர் தேரோடும் நகரவீதிகளில் மழைபெய்து ஓய்ந்துபோன நள்ளிரவிலும் உறங்காது கடமையாற்றும் திறத்தை,

கண்மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்று

.....

துஞ்சாக் கண்ணீர் அஞ்சாக் கொள்ளையர் [145]

என்கிறது. நகரக்காவலர் களிறு பார்க்கும் புலிபோல ஒற்று அறியச் செல்வர். இவர்கள் துஞ்சாமை அஞ்சாமை அறிந்தோர் புகழும் ஆண்மையைப் பெற்றவர் என்பதை,

நிலம் அகழ் உளியின் நீலத் தானையன்
கலன் நசைஇ வேட்கையின் கடும்புலி போன்று [146]

என்று காவலரின் வீரத்தைச் சிறப்பிக்கிறது.

ஊர்க்காவலர்

பழந்தமிழர் இரவுப் பொழுதில் தூங்காமல் ஊரைச் சுற்றிக் காவல்புரிந்தனர். இவர்கள் நள்ளிரவில் சூலம் ஏந்திய கையுடன் திரிவர் என்பதை,

யாமங் கொள்பவர் அழர்நிழல்

என்கிறது புறம். இக்காவலர்கள் ஊரைச்சுற்று வரும்போது மக்களை எச்சரிக்கும் பொருட்டு மணிகளை ஒலிக்கச் செய்வர். ஊர்க்காவலர் சிறிதும் சோர்வில்லாதவர் இரவில் உறங்காமல் காவல் காப்பர்.

மெய்க்காப்பாளர்

காவலர் நகரையும், ஊரையும் காவல் செய்ததோடு நாடுகாக்கும் மன்னனுக்கு எந்த நேரத்திலும் எந்தவிதமான தீங்கும் நேரிடாதவாறு உறுதுணையாய் உடனிருந்து காக்கும் பொறுப்பையும் மேற்கொண்டனர். இவர்கள் மெய்க்காப்பாளர் என்றழைக்கப் பட்டனர். மன்னனுக்கு மெய்க்காப்பாளராக இருப்பவர்கள் அவன் நம்பிக்கைக்கு

உரியவராய் நல்லொழுக்கம் உடையவராய் விளங்க வேண்டும். எனவே நீண்ட நாள் தம்மிடம் பணியாற்றியவரையே மெய்க் காப்பாளராக அரசர் நியமிப்பார். அதனால் மெய்க்காப்பாளர் முதிர்ந்த வயதை உடையவராய் இருந்தனர்.

நெடுநா ஒள்மணி நிழத்திய நடுநாள்

.....

பெருமூ தாளர் ஏமம் சூழ [147]

என்கிறது முல்லைப்பாட்டு

அறங்கூறவைத்தார்

மக்களின் வாழ்க்கை நலனைக் கருத்தில் கொண்டு நடுவுநிலை பிறழாமல் நன்கு ஆராய்ந்து உண்மைத் தெரிந்து தீர்ப்புக்கூறும் இடம் இருந்தது. இது அறங்கூறவையம் என்றழைக்கப்பட்டது. இதனை,

சிறந்த கொள்கை அறங்கூறவையம் [148]

என்கிறது. இந்த அவையத்தில் இருந்தோர் கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்த அறவோராகவும் நடுவுநிலைமை கொண்டவராகவும் இருந்தனர் என்பதை,

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல அமைந்ததொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி [149]

என்னும் வள்ளுவரின் கூற்றிற்குத் திகழ்ந்தவர் அறங்கூறவையத்தார். பயத்தையும் துன்பத்தையும் ஆசையையும் விட்டவர்கள். ஒரு பக்கத்தாரிடம் கோபத்தையும், மற்றொரு பக்கத்தாரிடமும் மகிழ்ச்சியையும் காட்டாமல் தம் உள்ளத்தை நடுவு நிலையிலே நிறுத்திக் கொண்டு துலாக்கோலைப் போல் நடுநிலையில் நிற்பார்கள்.

அறிவர்

அறிவர் என்பவரைக் கணிவன் எனவும் அழைப்பர். இவர் இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவிக்குள் ஊடல் முதலியவற்றை நிகழ்ந்தால் அவர்களுக்கு அறிவுரை கூறி இல்லறநெறியில் நிறுத்துவார். இவர் திருமணம் நடத்தக்கூடிய நாளைக் கணித்துக் கூறுவார்.

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவினை முந்துற்குத் [150]

என்கிறது. இவரைக் குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினால் அறிபவர்.

ஆசிரியர்

கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்பர். அத்தகைய சிறப்பான கல்வியாளரை உருவாக்குவது ஆசிரியரின் தொழிலாகும். நல்ல நூல்களையும் நல்ல மாணவர்களையும் உருவாக்குபவர் சிறந்த ஆசிரியர் ஆவார். அவர்தாம் கற்றதனால் பெற்ற இன்பத்தை எல்லோர்க்கும் அறிவிப்பதற்காகக் கல்வியைக் கற்பிக்கிறார். இதனை;

தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின் [151]

என்கிறது மதுரைக்காஞ்சி. கல்லாதவர்க்குத் தம் கைப்பொருளைக் கைமாறாகக் கொடுத்து நூலைக் கற்பித்தனர். **கற்பித்தான் நெஞ்சமுங்கப் பகிர்ந்துண்ணும் விம்சைக் கண்** என்கிறது கலித்தொகை. அக்காலத்திலேயே கற்றோர்க்கிடையே விவாதமும் பட்டிமன்றமும் நடந்துள்ளது. அவ்வாறு வாதிட்டோர் கல்வி கேள்விகளில் சிறந்த விளங்கினர் என்பது புலனாகிறது.

கணியன்

கணியன் என்றால் நாள்கோள் நிலையைக் கண்டு வருங்கால நன்மை தீமைகளைக் கணிப்பவன் என்பது பொருள். சோதிடத்தைப் பண்டைத்தமிழர் கணியம், என்றும் அத்தொழில் புரிந்தாரைக் கணியர் என்றும் அழைத்தனர். சோதிடம் என்பது நாள்கோள் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றால் ஏற்படக்கூடிய இன்ப, துன்பங்களை முற்படக் கணித்துக் கூறுவதாகும்.

கணியன் பூங்குன்றனார் என்பவர் சங்ககாலத்து வாழந்த சிறந்த புலவர். இவர் தம் வானநூற் புலமையினைக் கொண்டு செய்து வந்த தொழில் கணிதத் தொழிலாகும்.

கணிதத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தாலும் கவியும் புனைந்து இருவகைக் கலைகளையும் இனிது பேணினார். சோதிடரைக் கணி என்றும் தலைமைச் சோதிடரைப் பெருங்கணி என்றும் கூறுவர். அரச காரியங்களைச் செய்தவற்குப் பொருத்தமான காலத்தைக் கணித்துக் கூறுவது இவர்களது பணி. ஒருநாளில் அமையும் பொழுதைக் கணக்கிட்டுக் கூறுபவர் நாழிகைக் கணக்கர் எனப்பட்டனர். இவர்களை

பொழுது அளந்தறியும் பொய்யா மாக்கள்

என்கிறது முல்லைபாட்டு. இருள் நிறைந்த இரவுப் பொழுதிலும் பொழுதை நன்கு அறிவர்.

புலவர்

மக்களையும் மன்னனையும் நல்வழிப்படுத்துதல் புலவர்களது தொழில். இவர்கள் கல்வி, கேள்வி ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். கொடை வள்ளல்களுள் அரசர்களும் புலவர்கள் கூறும் அறிவுரைக் வேந்தனைப் பாடிப் பரிசில் பெறுவதைத் தொழிலாகக் கொள்ளாமல் அவர்கள் தவறு செய்த விடத்து அஞ்சாது அவர்களைக் கண்டித்து அறநெறியில் வழி நடத்தும் இயல்புடையவராக விளங்கினர். அக்காலத்தில் புலவர்கள் அரசியலில் தலையிட்டு மன்னனுக்கு அறிவுரை கூறியும் அரசரின் போக்கைத் திருத்தும் உரிமையும் பெற்றிருந்தனர். அரசர் குறுநில மன்னர் ஆகியோரின் குடும்ப வாழ்விலும் புலவர் தலையிட்டு அறிவுரை கூறும் ஆர்வம் கொண்டிருந்தனர் என்கிறார் மு.வரதராசனார்.

சங்ககால வாழ்வியல் முறை

சங்ககால மக்கள் தங்களுக்குப் பிடித்தமான நிலத்தைத் தேர்ந்தெடுத்து வாழத் தலைப்பட்டனர். வாழிடம் காடாக, மலையாக, கடற்கரையாக வயல் சூழ்பகுதியாக இருந்தது. அவற்றை நாகரிகத்திற்கு ஏற்றாற்போல் மாற்றி அமைத்தனர். ஆனால் இயற்கையை அழிக்கவில்லை. புவி என்பது நிலம், நீர், தீ, காற்று, வானம் என்பதை அக்கால மக்கள் உணர்ந்திருந்தனர்.

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
தீ முரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரு பூதத்து இயற்கைபோல [152]

என்று கூறுவதன் மூலம் அவர்களின் உலகம் பற்றிய பரந்த அறிவு புலனாகிறது. அக்கால மக்கள் தொழில் நுட்பத்தோடும், அழகியல் உணர்வோடும் வாழ்ந்தனர். அவர்களின் வாழ்வியில் முறை இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. நிலம் பொழுது தட்ப வெப்பத்திற்கு ஏற்றவாறு வாழ்வியல் முறையை அமைத்துக் கொண்டனர். அத்தகைய மக்களின் உணவு, உடை, கல்வி, நட்பு, ஈகை, நம்பிக்கை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை வாழ்வியல் கூறுகள் எனக் கொள்ளலாம்.

வைகறையில் துயில் எழுதல்

பண்டைத் தமிழக மக்கள் கதிரவன் உதயமாவதற்கு முன்பு துயிலெழுந்தனர். அதிகாலைப் பொழுதை அறிவிப்பதற்குச் சேவலின் கூவலும் பிற பறவைகளின் ஒலியும் துணை செய்தன என்பதை,

ஓன்பொறாச் சேவல் எழுப்ப ஏற்றெழுந்து

என்கிறது. அந்தணர் மந்திரம் ஓதும் ஒலியும் யாழோர் எழுப்பும் இசையொலியும் மன்னனுடைய அரண்மனையில் ஒலிக்கும் காலை முரசும், அரசனை எழுப்புவோரின் பாடல்களும் மக்களைத் தூக்கத்தில் இருந்து எழுப்புகின்றன என்பதை,

நான்மறைக் கேள்வி நவில் குரல் எழுப்ப
ஏம இன் தூயில் எழுதல் அல்லதை
கோழியின் ஏழாது எம்பேர் ஊர் துயிலே [163]

என்கிறது பரிபாடல். பொய்கை மலரின் இன்னொலி செய்யும் வண்டைப்போல அந்தணர் வேதம் பாடத் தொடங்குகின்றனர். ஏனைய இடங்களில் கோழி போன்ற

பறவைகளின் ஒலியும் மக்களைத் துயில் எழுப்புகின்றன. ஆனால் மதுரை மாநகரில் மறை ஒலியால் மக்கள் துயில் எழுகின்றனர் என்பதைப் பரிபாடல் உணர்த்துகிறது.

நீராடுதல்

மனதிற்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைத் தருவது நீராடல். உடலைச் சுத்தம் செய்வதற்குக் குளத்திலும், ஆற்றிலும் நீராடினர். மனதைச் சுத்தம் செய்வதற்கு வழிபாட்டை மேற்கொண்டனர். நீராடுதல் தமிழரிடம் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் பழக்கம் நீராடல் இன்று வரையிலும் முக்கியத்துவம் பொருந்திய ஒன்றாகக் கருதப்படுகிறது. நீராடுதல் குறித்து பழந்தமிழரிடம் பல சொற்கள் காணப்படுகின்றன. அவை அருவியாடுதல், சுனையாடுதல், புனலாடுதல், துறையாடுதல், புதுநீர் ஆடுதல், புதுப்புனலாடுதல், இலவந்திகை, கடல் விளையாட்டு குளநீராடுதல் எனப் பலவகைப்படும். இவை தமிழர் நீராடிய நீர்நிலைகளைக் காட்டுவன. அக்கால மக்கள் நீராடுவதற்கென்று தனியான ஆடை, அணிகலன்களை அணிந்தனர். அவற்றில் நீரணி என்று சொல் நீராடுதலுக்குப் பொருத்தமான அணிகலன்களைக் குறித்தது. பெண்கள் அலங்காரமான ஆடை, அணிகலன்களை அணிந்து நீராடினர். சிலர் பொன்னால் செய்த பூக்களை அணிந்தனர். சிலர் முன்னர் அணிந்திருந்த சந்தனச் சாந்தினை மாற்றிவிட்டு அகில் புகையினலாகிய சாந்தினை தம் உடம்பில் மிகுதியாகப் பூசிப் புடவை அணிந்து நீராடினர் என்பதை,

மின் அவிர் ஒளி இழை வேயுமோரும்

.....

புட்டகம் பொருந்துவம் புனைகுவோரும் [154]

என்கிறது பரிபாடல். மேலும் நீராடலைத் தீர்த்தமாடுதல் எனவும் குறிப்பர். நீராடல் என்பது உடலைச் சுத்தப்படுவதற்கு மட்டுமல்லாமல் வழிபாட்டினால் மனதை சுத்தப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்டது என்பதை,

புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை

வாய்மையான் காணப் படும்

என்கிறார் திருவள்ளுவர்.

உணவு

மக்களின் பண்பாட்டை உணர அவர்தம் உணவுப்பழக்க வழக்கங்கள் காரணமாக அமைகின்றன. அவர்களின் உணவு என்பது மக்களின் பருவச்சூழ்நிலை, வாழும் நிலத்தின் தன்மை, விளையும் பொருள்கள், சமூகப்படிநிலைகள், உற்பத்திமுறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. இதனை உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே என்கிறது புறம். சங்ககால மக்கள் இயற்கையாகக் கிடைத்த தாவரங்களையும், உயிரினங்களையும் உணவாகப் பயன்படுத்தினர். அவர்களின் உணவு வகைகள் உடல் நலத்திற்கு ஏற்றவையாக இருந்தன. மா, பலா, வாழை, அவரை, தேன், திணைமாவு என்று இயற்கை உணவை உண்டனர். மேலும் உணவினைச் சுவையுறச் சமைப்பதிலும், உண்பதிலும் அம்மக்கள் சிறந்து விளங்கினர். சமைத்தல் என்பது பக்குவப்படுத்துதல் என்று பொருள்படுகிறது. சமைப்பது அடுதல் எனப்படும் சமையல் செய்யப்படும் இடம் அட்டில் அல்லது அடுக்களை என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் அக்காலத்தில் உணவினை நீரிட்டு அவித்தில், வறுத்தல், சுடுதல், வற்றலாக்குதல், எண்ணெயிலிட்டுப் பொரித்தல், ஊறவைத்தல் போன்ற முறைகளைப் பின்பற்றினர். மேலும் அவர்கள் வாழும் நிலத்தின் தன்மையைப் பொறுத்து உணவு முறைகள் மாறுபட்டன.

ஆடை

ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்ற பழமொழிக்கு ஏற்ப மனிதனுக்கு ஆடைகள் மிகவும் இன்றியமையாதது. மனிதனின் தரத்தையும், சிறப்பையும், காட்டுவனவாக ஆடைகளும், அணிகலன்களும் உள்ளன. இலக்கியங்களில் ஆடை என்பது அறுவை கலிங்கம், உடுக்கை, இழை, நூல், கழகம், சிதாஅர், கந்தல் ஆடை, படம், புடவை, மடி என்றும் இடையில் கட்டும் ஆடை, பா, கச்சை, கம்பலம், கிழி, ஈரணி, பீதாம்பரம், சிதவல், பருஉத்திரி, துகில் நூலாக்கலிங்கம், வம்பு அகமடிவை என்றும் பல பெயர்களால் வழங்கப்படுகின்றன. மேலும் நாகரிகம் வளராத பழங்காலத்தில் மனிதன் தாவரங்களின் மரத்தின் பட்டைகள், நார், விலங்குகளின் தோல் போன்றவற்றை ஆடையாகப் பயன்படுத்தினான் என்பதை மரல் நார் உடுக்கை மலை

உறை குறவர் என்கிறது நற்றிணை. பின்னர் ஆடை தயாரிப்பதற்காகப் பருத்தி விதைக்கப்பட்டது. அது விளைந்து முற்றியபின் பஞ்சு எடுக்கப்பட்டு பஞ்சிலிருந்து நூல் நூற்றுப் பின்னர் நெசவின் மூலம் ஆடையாக நெய்தனர். பண்டைக்காலத்தில் பயிரிடப் பட்டது. என்பதை,

கல்சேர்பு இரந்த கதுவாய் குரம்பைத்
தாழி முதல் கலித்த கோழிலைப்படுத்தி [155]
காஞ்சியின் அகத்துக் கரும்பருத்தியாக்கும்
தீம்புனல் ஊரன் [156]

என்னும் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றனது.

அக்காலத்துத் தமிழர்கள் சட்டை அணியவில்லை. அரையில் ஓர் ஆடையும், தோளின் மேல் ஓர் ஆடையும், ஆக இரண்டு துணிகளை மட்டும் அணிந்தனர் என்று நற்றிணையில் மருதன் இளநாகனார் கூறுகின்றார்.

விரைப்பரி வருந்திய வீங்கு செலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்பு அழித்து அசைக [157]

என்று பாடியுள்ளார்.

கச்சை என்பது வீரர்கள் இடையில் அணியும் ஆடையைக் குறிக்கின்றது. இக்காலத்தில் உடுப்பதுபோல் அதிகமாக ஆடைகளை அணியவில்லை.

கல்வி

உலகத்தில் உள்ள உயிரனங்களில் மனித இனம் தலைசிறந்தது. ஏனெனில் மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஆய்ந்தறியும் பகுத்தறிவு மனித இனத்திற்கு மட்டும் உண்டு. அத்தகைய அறிவின் வளர்ச்சிக்கு அடிப்படையானது கல்வி. கல்வி என்பது பன்பற்ற மனிதனைப் பண்படுத்துவது, அறிவு நல்லொழுக்கம், நன்னடத்தை முதலிய நன்னெறிகளையும் புகட்டி மனிதனை உயர்த்துவது தனிமனிதனைச் சிந்திக்கவும் சகமனிதரோடு பழகவும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பயனுடையவனாகத் திகழவும்

வழிகாட்டுவது. மேலும் கல்வி என்பதைக் கல் என்றால் தோன்றுதல் என்று பொருள்படுவது. கல்வி படிப்பவர்க்குச் சிந்தனையைத் தூண்ட வேண்டும். படிப்போருக்குத் தன்னம்பிக்கை, ஆளுமை, சேவை, மனிதநேயம் போன்றவற்றைத் தரவேண்டும். அத்தகைய கல்வியைக் கசடறக் கற்க வேண்டும் என்பதை,

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக

என்கிறார் திருவள்ளுவர்.

கல்வியைப் பற்றி நாலடியார்,

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள்
அழகும் அழகல்ல – நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடு
நிலைமையால் கல்வி அழவே அழகு [158]

என்கிறது. இப்பாடல் ஆண்களும் பெண்களும் தன்னைப் பெரிதும் அழகுப்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர். இயற்கை அழகு இயற்கையாக அமையாவிட்டாலும் கூட விலை உயர்ந்த ஆடை அணிகலன் வாசனைத்திரவியம், அலங்காரம் போன்ற இன்ன பிறவற்றைக் கொண்டு ஒப்பனை செய்து அழகினை வெளிப்படுத்த முயல்கின்றனர். ஆனால் உண்மையான நிலைத்த புகழுடைய அழகு கல்வி என்பதை நாலடியார் உணர்த்துகின்றது.

விருந்தோம்பல்

விருந்து பேணுதல் தமிழரின் தலையாய பண்பாடு. சுற்றத்தார்க்கு மட்டுமின்றி முன்பின் தெரியாத அயலவருக்கும் தம்மிடம் உள்ள சிறந்த உணவை விருந்தாக அளித்து மகிழ்ந்தனர். தமிழர்களின் இல்லற வாழ்வின் இயல்பினை அளக்க உதவும் அளவுகோலாக விருந்தோம்பல் திகழ்கின்றது. உண்ணும் உணவு எதுவாயினும் அதனை விருந்தினர்க்கும் கொடுத்து தாமும் உண்டு மகிழ்ந்தனர் என்பதை,

மருந்தே ஆயினும் விந்தொடு உண்

என்கிறது. ஔவையின் அமுத மொழி. இல்லற மகளரின் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். அதனால் பெண்ணின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர் இல்லறத் தலைவியின் கடமைகளைக் கூறும்போது விருந்தோம்பல் பண்பாட்டையும் இணைத்து விருந்து புறந்தருதலும் சுற்றமோம்பலும் என்று சுட்டுகிறார்.

விருந்து பெருகு நன்போலும் திருந்திழை

.....

மெல்லயியல் குறுமகள் [159]

என்ற பாடலடிகள் விருந்தோம்பும் பண்பாட்டை வலியுறுத்துகின்றன. மேலும் பண்டங்கள் குறைவாக இருந்தாலும் கவலை கொள்ளாமலும், மனங்கோணாமலும் இல்லத்தலைவி விருந்தோம்பல் செய்தாள் என்பதை,

தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள் நின்னொடும்
பந்தர் ஊன்முறை ஊட்டும் இற்வொலி மகுடுஉப் போல [160]

என்கிறது புறம். விருந்தினரை **மெல்லியர்** என இலக்கியங்கள் சுட்டுகின்றன. விருந்தின் செயல் மென்மையான செயல். இதனால் விருந்தினர் மெல்லியர் எனவும் அனிச்ச மலருக்கு ஒத்தவர் எனவும் கூறப்படுகிறது. அனிச்சமலரானது மெல்லியதாக இருப்பதால் நுகர்ந்த அளவில் வாடிவிடும். அதைபோல விருந்தினரை முகமலரச்சியோடு வரவேற்க வேண்டும். சிறிது முகம் மாறினாலும் அனிச்சப்பூபோல் விருந்தினர் உள்ள வாடிவிடும் என்பதை திருவள்ளுவர்,

மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்க குழையும் விருந்து

என்று விருந்தளிப்போரின் பண்பைச் சுட்டுகின்றார்.

ஈகை

செல்வம் உடையவர் இல்லாதவர்க்கு ஈகை. உலகத்தார் போற்றும் அறங்களுள் காலத்தால்அழியாதது கருத்தால மாறாதது ஈகை அது அறநெறியில் சிறந்தது. ஈகைப்பண்பு மனிதநேயத்தின் அடிப்படையான தன்மையினை உணர்த்துகிறது.

பிறர்க்குக் கொடுத்துத் தானும் உண்டு புகழொடு வாழ்வதே சிறந்த வாழ்க்கை. அத்தகைய சிறந்த மனித வாழ்வில் மனித நேயத்தை வெளிப்படுத்துகிறது ஈகை. ஈகை என்னும் பண்பு தனிமனிதச் சிந்தனையில் உருவாகிச் சமுதாயப் பயனுடையதாக அமைகின்றது. வறுமையில் வாடும் மக்களுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்கின்ற பொழுது அச்செயல் உயர்ந்ததாகப் பலராலும் போற்றப்படுகிறது. கொடுப்பவர் எதையும் எதிர்பாராமல் கொடுக்கிறார். பெறுபவர் உள்ளம் மகிழந்துப் பெற்றுக் கொண்டு வாழ்த்துகிறார். இதனால் ஈந்து உவக்கும் இன்பம் பிறக்கிறது. இந்த உயர்ந்த சிந்தனையை,

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே துப்புந பலவே [161]
எத்துணை ஆயினும் ஈதல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர் வறுமை நோக்கின்று [162]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. ஒன்றும் இல்லாத ஏழை, எளியோர்கள் கேட்பதைக் கொடுக்க வேண்டும். பொருள் இல்லாத ஒருவன் வந்து உதவி கேட்டால் அவனுக்கு இல்லையென்று மறுக்காமல் உதவ வேண்டும். ஈகின்ற தன்மைக்கு வரையாது பொழிகின்ற மழையை ஒப்பிடுவது பண்டைத் தமிழர் மரபு. மழை வரையாது மிகுதியாகப் பொழிந்து நாட்டைச் செழிக்கச் செய்கிறது. வளர்நிலம், உவர் நிலம் என்று பாராது எங்கும் நிரந்து பொழிகிறது. அதுபோல் வள்ளல்கள் புலவர்களின் வறுமையை ஒழிப்பதோடு புலமைமிக்கார் இல்லார் என்று பாராது அனைவருக்கும் கொடுத்து வறுமையை ஒழித்திருக்கின்றன.

நட்பு

ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி நெருங்கிப் பழகி உறவினர் அல்லாதவருடன் பற்றும் பாசமும் கொண்டு வாழ்வது நட்பு. இவ்வுலகத்து உயிரினங்ள் அனைத்தும் தனிமையை நாடுவதில்லை. தனித்து வாழ்வதைவிட ஒருவரோடோருவர் நட்புக் கொண்டு கூட்டாக வாழ்வதையே விரும்புவர். நட்பு என்பதற்கு சிநேகம், உறவு, சுற்றம்,

நண்பன், யாழின், காதல், அரசாங்கம், கையூட்டு, மாற்றரசரோடு நட்பு செய்தல் எனப் பொருள் தருகிறது. மெய்யப்பன் அகராதி. நட்பு என்னும் சொல்லுக்கு

ஒத்து கருத்து நலன், அக்கறை, முதலியவற்றின் அடிப்படையில்
பொதுவாக உறவினர் அல்லாதவருடன் கொள்ளும் உறவு [163]

என்கிறது. க்ரியாவின் தமிழ் அகராதி. அத்தகைய நட்பு என்பது உள்ளத்தைத் திறந்து காட்டுவதாக இருக்க வேண்டும். இதனை உலகிலேயே மிகவும் உன்னதமானது நட்பு.

ஒருவன் தன்னுடைய உள்ளத்தைத் தன்னுடைய நண்பனுக்குத்
திறந்து காட்டினால் இருவேறுபட்ட நன்மைகள் ஏற்படுகின்றன. அது
மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகின்றது. [164]

என்கிறார் பிரான்சிஸ் பேகன். இராமன் மேல் கொண்ட நட்பின் திறத்தால் தன் இதயத்தை திறந்து காட்டினான் அனுமன். இதனை,

எந்தை! வாழி அதனுங்க என்
நெஞ்சம் திறப்போர் நிற்கான் குவரே [165]

என்கிறார் ஆத்திரையனார் என்னும் புலவர். ஆதனுங்கன் என்னும் வள்ளலிடம் தான் கொண்ட நட்பின் மிகுதியை வெளிப்படுத்துகிறார். மேலும் பாரியின் இறப்புக்குப் பிறகு அதை ஏற்க முடியாது தவிக்கும் கபிலர் உம்மொடு எக்காலமும் சேர்ந்திருக்கும் தகுதி தன் நட்பிற்கு இல்லையே என்று புலம்புகிறார் இதனை,

மேயினன் அண்மையானே ஆயினும்
.....
உடன் உறைவு ஆக்குக உயர்ந்த பாலே [166]

என்ற பாடல் இம்மைக் காலத்தைப் போலவே மறுமைக் காலத்திலும் நட்பானது தொடர என் நல்வினையானது எனக்குத் துணை செய்யுமாறு என்று இரப்போர் போல புலம்பும் கபிலரின் நட்பு ஆழம் அளவிட முடியாததாக இருந்ததை உணர்த்துகிறது.

காதல்

காதல் இன்பம் எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. இருமனங்களின் இணைவு காதல் எனப்படுகிறது. எல்லா உயிர்களிடத்தும் தோன்று அன்புணர்வே காதல் எனக் கொண்டாலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் அன்புணர்வே காதல் என்ற பெயரால் சுட்டப்படுகின்றது. காதல் என்றால் **அன்பு, வேட்கை** என்ற பொருளைத் தருகிறது என்கிறது தமிழ்பேரகராதி.

காதல் என்ற மையப்புள்ளியை பற்றிக் கொண்டே இவ்வுலகம் இயங்குகிறது. காதல் இன்பத்திலும், துன்பத்திலும் நிலைக்கும் தன்மை உடையது. சாதி, மதம், நிறம், இனம், மொழி ஆகியவற்றைக் கடந்தது. காதல் என்பது மனித வாழ்வில் பல பரிமாணங்களில் சங்கமித்துச் செல்கின்றது. இது கண்களில் அரும்பி இதயத்தில் மலரும், அவ்வாறு மலர்ந்த காதலின் வாசம் மேனியெங்கும் தோற்றுவிக்கும் தலைவனொடு செய்துகொண்ட காதலின் தன்மையைக் குறுந்தொகை,

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவு இன்றேசாரல் [167]

என்கிறது. காதலின் அன்பின் அகலத்தையும், ஆழத்தையும் தெரிவிக்கின்றது.

திருமணம்

திருமணம் என்பது ஒரு இன்றியமையாத நிகழ்ச்சி. தனிமனிதனைச் சமுதாய உறுப்பினராகவும் குடும்பத்தைச் சமுதாயத்தின் அடிப்படை அலகாகவும் ஏற்றுக் கொள்வதற்குத் திருமண உறவுமுறை இன்றியமையதாகக் கருதப்படுகிறது. காதலில் ஈடுபட்டவர்கள் அதனை இல்லையென்று மறுத்த நிலையில் காரணம் தோன்றியது இதனை,

பொய்யும் வழுவுந்தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப [168]

என்கிறார் தொல்காப்பியர். களவு நெறியில் ஒழுகியவன் தனக்கும் அவளுக்கும் தொடர்பில்லை என்று கூறிவிட்டால் கற்பும் இல்லை, காரணமும் இல்லை. ஆகவே

களவு முறையில் தோன்றும் பொய்யையும் வழுவையும் கரணம் தடுக்கும். அதனை தடுப்பதற்காகவே கரணத்தை அமைத்தனர் சான்றோர். களவு நெறிப்பட்ட காதலர்கள் ஊரில் இருப்பினும் அல்லது உடன்போக்கு முறையில் ஊரை விட்டுச் சென்றாலும் 'வரைவு' என்ற நிலைக்கு உட்பட்டு கணவன் மனைவி என்று பலர் வெளிப்படையாகச் சொல்லும் நிலையை திருமண ஒழுக்கமாகக் கொண்டனர்.

விழாக்கள்

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும், மறுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும் ஊட்டுவன விழாக்கள் மனித இனத்தை ஒன்றுபடுத்தி மகிழ்ச்சியில் திளைக்க வைப்பதே விழாக்களின் நோக்கமாகும். மக்களின் துன்பத்தை மறக்கச் செய்து அவர்களை இன்பமடையச் செய்வது விழாக்கள். இவ்விழாக்கள் மனித மனங்களுக்கும், புத்துணர்ச்சியைத் தருவனவாகவும் அத்துடன் ஒரு சமுதாயம் மலர்ச்சி அடைய அடிப்படைக் காரணமாகவும் விளங்குகின்றன. இதனை வரலாற்று ஆசிரியர்கள் மக்களிடையே நின்று நிலவிய விழாக்களைக் கொண்டே ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினை அடையாளம் காணமுடியும் என்கிறன்றனர். இது பற்றிக் கலைக்களஞ்சியம் விழாக்கள் அறிவூட்டுவதாயும் சமுதாயம் மற்றும் சமயம் சார்ந்த தன்மைகளை உள்ளடக்கியதாகவும் கருதப்படுகின்றன என்று கூறுகிறது. உள்ளத்துக்கு மகிழ்ச்சியினையும் செயலாற்றுவதற்குரிய நம்பிக்கையினையும் மனிதனுக்கு விழாக்கள் அளிக்கின்றன. இவை நம்பிக்கையின் அடிப்படையிலேயே கொண்டாடப்பட்டு வருகின்றன. மக்கள் விரும்பி ஏற்றுக் கொண்டாடும் நிகழ்ச்சியாதலின் அது விழா எனப் போற்றப்பெறுகின்றது. பண்டைய இலக்கியங்கள் விழாவினை, **விழவு, விழா, சாறு** என்ற சொற்களால் சுட்டுகின்றன. இதனை,

அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்ப்
பழியில ராயினும் பலர்புறங் கூறம் [169]
ஆலமர் செல்வன் அணிசால் மகன்விழாக்
கால்கோகலின் றுக்கிக் கதுமென நோக்கி [170]

என்ற பாடலடிகளால் அறிய முடிகிறது. பழந்தமிழர் விழாவினைச் சிற்றூர்களிலும்,

பேரூர்களிலும் கொண்டாடினர். விழவாவுக்குரிய காலமாக வேனிற்காலத்தைக் குறிப்பிட்டனர். விழாக்களின் இயல்புக்கு ஏற்ப காலையிலும் மாலையிலும் கொண்டாடப்பட்டன. அவற்றில் புனலாடலாகிய நீர் விழாக் காலையிலும், கார்த்திகை விழா மலையிலும் கொண்டாடப்பட்டன. கொண்டாடப்பட்ட விழாக்கள் பல நாட்கள் தொடர்ந்து நடைப்பெற்றன. அவற்றில் இந்திரவிழா இருபத்தெட்டு நாட்கள் நடை பெற்றதை மணிமேகலை சுட்டுகிறது.

நீதி

நீதி வழங்குதல் முறை செய்தல் எனப்பட்டது. அறநெறி தவறாமைக்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டது. அக்கால மக்கள் எவ்வித வேறுபாடும் இல்லாமல் தப்புச் செய்தவர்க்குத் தண்டனை வழங்கினார்கள். நீதி வழங்கும் இடம் மன்றம் எனப்பட்டது. நீதிமன்றத்தில் காவித்திப்பட்டம் பெற்ற அமைச்சர்கள் இருந்தனர். அவர்கள் நடுநிலையில் நின்று நீதி வழங்கினர். நீதி வழங்கும் இடம் அறங்கூரவையம் அல்லது நீதி மன்றம் எனப்பட்டது.

அறம் அடிக் கண்ட நெறி மாண் அவையத்து [171]

என்கிறது புறம். அக்காலத்தில் பொய்யான சாட்சி கூறுதல் தவறு. அன்றியும் தேவையான சாட்சியைத் தெரிந்தும் கூறாமல் இருத்தலும் தவறு என்று சுட்டுகிறது நற்றிணை.

மன்னனால் நாட்டு வழக்குகள் அனைத்தையும் கேட்டு நீதி வழங்க இயலாத நிலையில் அரசன் நீதிமன்றத்தை அமைத்து அந்நீதிமன்றங்களில் அறிவார்ந்த சான்றோர்களை நடுவராக அமைத மக்களுக்கு முறையான நீதி கிடைக்க வழிவகுத்தான். மன்னன் நீதிபதிகளைக் தேர்ந்தெடுத்ததை,

அறம்நிலம் திரியா அன்பின் அவைத்துத் திறனில்
ஒருவனை நாட்டி மெலிதோல் செய்தேனாகுக [172]

எனக் குறிப்பிடுகிறது புறம்.

அரசு குடவோலை முறை அமைத்தல்

பழந்தமிழகத்தில் மன்னராட்சி முறை நிலவியது. அக்கால அரசர்களில் தலை சிறந்தவராகிய சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் மன்னர்களாகவும் மற்றச் சிறு ஊர்களில் வாழ்வோர் சிற்றரசர்கள் எனவும் குறிப்பிடப்பட்டனர். அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆட்சி மன்றங்கள் இருந்தன. அம்மன்ற உறுப்பினர்கள் ஊர்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் குடவோலை முறை பயன்பட்டது என்பதை,

கயிறு பிணிக் குழிசி ஓலை கொன்மார்
பொறி கண்டு அழிக்கும் ஆவண மாக்கள் [173]

இப்பாடலில் ஊரின் ஒவ்வொரு பகுதியினரும் தங்கள் பகுதிக்குரிய ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்காளர்கள் ஓலைகளைக் குடத்தினுள் இடுவர். பின்னர் அக்குடத்தின்மேல் அரசாங்க முத்திரை வைக்கப்படும். பின்னர் அவை ஓரிடத்தில் கொண்டு சேர்க்கப்பட்டு தலைவரால் குடத்தின் சீல் ஆராயப்படும். பின்னர் அவ்வோலை குடத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு எண்ணி வெற்றி தோல்விகளை அறிவித்ததைக் குறிப்பிடுகிறது. இன்றைய சூழ்நிலையில் நடைபெறும் தேர்தல் முறை வாக்காளர்கள் பற்றிய விவரம் தொகுதி தேர்ந்தெடுக்கப்படும் முறை போன்றவை சங்க கால மக்களிடம் இருந்து தோன்றியவை என்பது புலப்படுகிறது.

வாணிபம்

ஒரு பொருளை உற்பத்தி செய்து தேவையானவற்றை வைத்துக் கொண்டு உபரியாக உள்ள பொருள்களை விற்பனை செய்வது வாணிபம் இதனை வியாபாரம் என்றும் அழைப்பர்.

வாணிகம் செய்வோர்க்கு வாணிகம் பேணிக்
பிறவும் தமீபோற் செயின் [174]

என்று வள்ளுவரும் கூறியுள்ளது பொருத்தமுறுகின்றது. பண்டைக் காலம் முதல் தமிழ் நாடு வாணிபத்தில் சிறந்து விளங்கியது. தம்மிடம் உள்ள பொருளை அல்லது

நாணயத்தை கொடுத்து தம்மிடம் இல்லாத பொருளைப் பெறுவது வாணிபம் எனப்படும். ஒவ்வொரு நிலத்திற்கேற்பத் தொழில்கள் வேறுபடும், தொழில் வேறுபாடுகளுக்கு ஏற்ப வாணிபமும் வேறுபடும். தம் நிலத்தில் கிடைத்த பொருளை வேற்று நிலத்திற்குக் கொண்டு சென்று விற்று மற்றொரு பொருளைப் பெற்றுள்ளனர். எனவே வாணிபத்தின் பொருட்டு ஒரு நிலத்து மக்கள் இன்னொரு நிலத்திற்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

ஒரு நாட்டின் பொருளியல் நிலையை மதிப்பிட உதவும் ஒரு சிறந்த அளவு கோலாக வாணிபத்தைக் கருதலாம். அதே போன்று வணிகரும் வணிகத்தில் நடுவு நிலைமை தவறாதவர்கள். அறநெறியில் வாழ்பவர்கள், நன்னெறியில் நடப்பவர்கள். வாங்குவதை அதிகமாக வாங்கிக் கொண்டு கொடுப்பதைக் குறைவாகக் கொடுக்க மாட்டார்கள். வணிகம் செய்வதன் மூலம் அறத்தையே ஊதியமாக ஈட்டும் அறநெஞ்சினை உடையவர்களாக திகழ்ந்தனர்.

அறம்

மனிதன் வரைறுத்துக் கொண்ட ஓழுக்க நெறிமுறைகளின் தொகுதியை அறம் எனப்படுகிறது. அறக்கருத்துக்கள் மனிதனின் மனதைச் செம்மையுறச் செய்கிறது. அறம் என்பது நீதியை உணர்த்துவதோடு பழந்தமிழர் பண்பாட்டையும், உயர்ந்த நெறியும் வாழ்வியல் தத்துவத்தையும் உணர்த்துகிறது. இவ்வுலகத்திற்கு நல்வழி காட்டியாக உலக மக்களால் பெரிதும் போற்றப் பெறுவதாகிய இறையாற்றாலையும் உணர்த்துகிறது. அறம் செய்ய விரும்பு என்கிறார். ஔவையார் அறம் என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் ஒழுக்கம், நீதி, புண்ணியம், ஈகை அறக்கடவுள், சமயம் என்னும் பல பொருளில் வழங்கப்படுகின்றன. இந்தியப் பண்பாட்டுத் தளத்தில் அடிப்படையாகத் தர்மம் என்ற சொல் வழங்கப்படுகிறது. நிலை நிறுத்தப்பட்ட மனித கடமைகளை வலியுறுத்துவது அறம். மேலும் மதம், மரபு, பாரம்பரியம் பழக்கவழக்கங்கள் வாழ்க்கை முறை நடைமுறைச் செயற்பாடுகள், நீதிநெறிமுறை, குணச்சிறப்புகள், குணத்தன்மைகள், சமுதாய ஒழுக்க நெறிமுறைகள் இன்னும் பல்வேறுபட்ட கடமைகள் முதலிய பலவும் அறம் என்ற சொல்லில் அடங்கும்.

அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் [175]

என்று அறத்திற்கு சிறந்தோர் உதாரணம் காட்டுகிறது மணிமேகலை. தனக்கும் உலகிற்கும் நன்மை தரும் பொருட்டு தீமை தராத வழியில் சென்ற பொருள் ஈட்டி இன்பம் அனுபவிப்பதும் கிடைக்கக் கூடிய அடிப்படை விதிகளைப் பெற்று வாழ்வதும் அறமாகும்.

நடுகல்

சமுதாயச் சிறப்புமிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களின் இறப்பிற்கு பின் அவர்களது நினைவாக நடப்பட்ட கல்லே நடுகல் ஆகும். நடுகல் என்றால் நடப்பட்ட கல் எனப் பொருள்படும் இதனை அகநானூறு 'நட்ட போலும் நடாஅ நெடுங்கல்' எனக் குறித்துள்ளது. வீரத்தினைப் போற்றும் பண்பின் அடிப்படையில் தோன்றிய நம்பிக்கையின் பாற்பட்ட நிலையில் நடுகல் வழிபாடாக உருப்பெற்றது. வீரயுகத்தில் நினைவுச் சின்னமாகக் கருதப்பட்ட ஒன்று காலப்போக்கில் வழிபாடாக மாற்றம் பெற்றதனையே இது காட்டுகிறது. நடு கல்லுக்குரியோராகப் போரில் மாய்ந்தோர், கறவியினை மீட்டோர், வடக்கிருந்தோர், பத்தினிப் பெண்டிர் ஆகியோர் அமைகின்றனர். உயர்நீத்த பின்னரே நடுகல் எடுக்கும் வழக்கம் நிலவியதனை மேற்காட்டிய சான்றுகள் தெரிவிக்கின்றன. வடக்கிருந்து உயிர்துறந்தார்க்கு நடுகல் எடுத்தல் தன் நிலைமையில் தாழ்வு, மானம், நட்பு ஆகிய நிலைகளில் அமையக் காண்கிறோம். தொல்காப்பியர் புறத்திணையியலுள் வெட்சித்திணையின் மறுதலையாகிய நிரைமீட்டலாகிய கரந்தைத் திணைத் துறைகளுள் நடுகல் எடுக்கும் வழக்கத்தினை,

காட்சி கால்கோல் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடுபுணர [176]

எனக் குறித்துள்ளார். வீரத்தினையே உயர்வாகக் கருதிய வீரயுகத்தில் தோன்றிய நடுகல் எடுக்கும் வழக்கம். காலப்போக்கில் வேறு சில சமுதாய மதிப்புப்பெற்ற மனிதப்

பண்புகளுக்கும் சிறப்பளித்ததை நடபு, மானம், புகழ் ஆகியவற்றிற்காக உயிர்நீத்து நடுகல்லான மாந்தரின் வாழ்வியல் நிகழ்ச்சியை உணர்த்துகின்றன. ஒரு சமுதாயத்தினுடைய மரபு அச்சமுதாயத்தில் வாழும் மக்களின் நிலையைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. தமிழ் இலக்கிய மரபில் சங்ககாலப் பொதுமக்களிடத்தில் வீரம் முக்கியமான ஒன்றாகப் போதிக்கப்பட்டிருக்கிறது. என்பதை,

குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளின் றென்று வாளிற் றப்பார் [177]

என்கிறது புறம். மேலும் இறப்புப் பற்றிக் குறிப்பிடும் போது குழந்தை இறந்த நிலையிலோ அல்லது தசைப்பிண்டமாகவோ பிறந்தாலும் அப்படியே எடுத்துப் புதைத்து விடாமல் உடம்பில் கத்தியால் கீறி ஒரு வீரத் தழும்பை உண்டாக்கி விட்டே புதைக்க வேண்டும் என்ற மரபு சங்க காலத்தில் இருந்திருக்கிறது.

நடுகற் பீலி சூட்டித் துடிப் படுத்துத்
.....
போக்கருங் கவலை [178]

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் நடுகல் கடவுளை வழிபடுவதற்கு அக்கல்லில் மயில் தோகைகளை அணிவித்துத் துடியை அடித்து நெல்லாகிய கள்ளோடு செம்மறி ஆட்டின் குட்டியையும் பலி கொடுத்துக் கொண்டாடியிருக்கிறார்கள் என்பதை கூறுகிறது. இன்றும் தமிழகத்தில் கிராமப்புறங்களில் காக்கும் கடவுளாக விளங்கும் மதுரை வீரன், இருளன், கருப்பன் முதலியவர்களின் வணக்கம் நடுகல் வழி பாட்டிலிருந்து உருவான எச்சங்களாக இருக்கலாம். இவ்வாறு நடுகல்லைத் தெய்வங்களாக வழிபடும் உயர்ந்த மரபைச் சங்க கால மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பதற்குரிய அளவு கோலாகக் கொள்ளலாம்.

பண்பாடு

மனிதனை விலங்கினின்று வேறுபடுத்துவது பண்பாடு. இப்பண்பாடு காலத்திற்குக் காலம் நாட்டிற்கு நாடு இனத்திற்கு இனம் வேறுபடுகிறது. மனிதன்

எத்தகைய கூரிய அறிவு பெற்றிருப்பினும் பட்டங்களையும் பல்வேறு சிறப்புகளையும் பெற்று உயர்ந்திருப்பினும் செல்வத்தால் செழித்திருந்தாலும் பண்பாடு என்றஒன்று அவ்வினத்திற்கு இல்லையெனில் எந்த ஒரு பயனும் இல்லை என்று கருதப்பெறும் பண்பாடு என்னும் செல்வம்.மனிதனை உயர்த்தி நிலைக்கச் செய்கிறது.

ஆங்கிலத்தில் உள்ள கல்சர் என்னும் சொல்லிற்கு இணையாகத் தமிழில் பண்பாடு என்னும் சொல் ஆளப்பட்டது. பண்பாடு என்பதனை,

மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினை என்னும் நிலைமையில்
அறிவு நம்பிக்கை அறவாழ்கை சட்ட வழங்கங்கள் முதலிய பற்றிய
ஒரு வகை வாழ்க்கை முறையாகும் [179]

என்பர். டெய்லர் என்னும் அறிஞர், பண்பாடு என்றதும் உயர்ந்த பண்புடைமை எனப் பொதுவாகப் பலரும் கருதுவர். ஆனால் பண்பாடு என்பது மனித சமுதாயத்தின் வாழ்வியல் ஒழுங்கைக் குறிக்கிறது. ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் தம் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு ஆகும் என மானுடவியல் இலக்கணம் கூறுகின்றது. பண்பாடு என்னும் சொல் சங்க இலக்கியங்களிலோ அவற்றிற்குப் பிற்பட்ட இலக்கியங்களிலோ இடம் பெற்றுள்ளது.

இசையினும் குறிப்பினும் பண்பினுந்தோன்றி [180]
பாடறிந்து ஒழுகும் பண்பினரே [181]
பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல் [182]
ஒத்த பண்பிரொண்டவது மன்னர் [183]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. சங்கத் தமிழரின் பண்பாடு உலக அரங்கில் தனிப்பெரும் சிறப்புக்கு உரியது. பண்பாடு என்பது காலம்காலமாக ஒரு தலைமுறை மக்களிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு உரிமையாக்கப்பட்டு வருவது. பண்பாடு என்ற சொல் மனிதனோடு மட்டும் தொடர்புடையது. மனிதனைப் பிற உயிரினங்களிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது.

நாகரிகம்

தமிழர் நாகரிகம் மிகப் பழமையானது. இன்றைய உலக நாகரிகங் களுக்கெல்லாம் அடிப்படையானது. மக்கள் ஒன்று கூடி வாழ்வதற்கான பழக்க வழக்கங்களை அறிவின் துணைக் கொண்டு உருவாக்கிக் கொள்வது நாகரிகம். நாகரிகம் நகர மக்களின் திருந்திய வாழ்க்கையைக் குறிக்கிறது. உலகப்பெரு நாகரிகங்கள் அனைத்தும் பேராற்றங்கரையிலேயே உருவாயின் என்கிறார். அ.தட்சிணாமூர்த்தி. பழமையான நாகரிகம் நாடு நகரங்களுக்கு உருவாயின என்பதை,

பாழியன்ன கடியுடைவியகனர் [184]

என்கிறது அகம். பண்டைய இலக்கியங்களிலே நாகரிகம் கண்ணோட்டம் என்ற பொருளில் வழங்கி வந்திருக்கின்றது. நாகரிகம் என்பது கண்ணோட்டம், இரக்கமுடமை, அன்பின் மிகுதியால் தோன்றும் இரக்கம், தாட்சண்யம் என்ற பொருளில் வழங்கப் படுகிறது. இலக்கியங்களில் நாகரிகம் என்ற சொல் பயன்பட்டதை,

நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் [185]

பெயக்கண்டும் நஞ்சுண்ட டமைவர் நயக்கத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் [186]

என்ற பாடலடிகளால் அறிய முடிகிறது. நாகரிகம் என்ற சொல்லைக் 'கண்ணோட்ட முடையார்' என்று பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் 'கண்ணோட்டத்தினை வேண்டுபவர்' என்று பரிமேலழகரும் விளக்கம் தருகின்றனர். உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களில் ஒன்று தமிழ் நாகரிகம். மேலும் பண்டைய தமிகழகத்தில் இயற்கையை எதிர்த்து வாழத்தொடங்கிய மனிதனின் வாழ்வில் ஒரு சிறந்த நாகரிகம் தோன்ற பல நூற்றாண்டுகள் தேவைப்பட்டன. மனிதன் கடந்து வந்த நாகரிகத்தின் படிக்கட்டுகள் வேட்டையாடல், நாடோடி வாழ்க்கை, கால்நடை மேய்த்தல், இவை கலந்து இருக்கும் நிலத்தைச் சார்ந்த இயற்கை வளங்களின் இயல்புகளின் நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த வாழ்வியல் கூறாகும்.

முடிவுரை

பண்டைய தமிழர்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பகுத்தனர். இந்நிலங்களின் பாகுபாடு நிலத்தின் இயல்புக்கேற்பப் பகுக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. ஐவகை நிலப்பாகுபாடு ஒவ்வொரு நிலத்தின் முதற்பொருள். கருப்பொருள் உரிப்பொருள் ஆகியவை நிலத்தின் தன்மையும், பருவநிலையயும், மக்கள் பண்பையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ள பாங்கு விளக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு திணையும் திணைக்குரிய பாடல்களும் திணையின் அமைப்பும் மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளும் ஆராயப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன. அக, மற்றும் புற மாந்தர்களின் தன்மைகள் மன உணர்வுகள். இன்பதுன்ப மன நிலைக்கு ஏற்பவும் கேட்போரின் மன நிலைக்கு ஏற்பும் விளக்கப்பட்டுள்ளது.

தனிமனிதத் தேவை அவன் வாழும் சமுதாயத் தேவையாகின்றது. இந்த அடிப்படையில் அரும்பி மலர்ந்து பயன்தருவது தொழில். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்றார் வள்ளுவர். உணவினை நிறைய விளைவிக்கும் ஆற்றல் பெற்ற உழவர்கள் உழுதல், விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல் அறுவடை செய்தல் போன்ற தொழில்களைச் செய்து உலகைக் காத்தனர்.

அக்காலத்தில் கைத்தொழில் வல்லவர் மூலதனத்தைக் கொண்ட எளிய கருவிகளையும் திறனையும் பயன்படுத்தித் தத்தம் இருப்பிடத்திலேயே தொழில் செய்தனர். காலப்போக்கில் மனிதனின் தேவைகள் அதகிமானதால் பொருட்களை உற்பத்தி செய்து வாழ்ந்தனர். அவற்றிற்காக கால்நடைப் பேணல், உப்பு விளைவித்தல், மீன்வேட்டை, முத்தெடுத்தம், சங்கெடுத்தல் போன்ற தொழில்களில் ஆர்வமுடன் ஈடுபட்டனர். அதன் வளர்ச்சிப் பாதையில் அந்தணர், அரசர், அமைச்சர், ஒற்றர், தூதுவர், காவலர் போன்றோரின் தொழில்கள் அமைந்துள்ளன.

அறிவுத் துறையால் ஈடுபட்டு உழைப்பவர் அறிவர், ஆசிரியர், கணியர், புலவர் போன்றோர். இவர்கள் கற்றுவல்ல கலைத்திறத்தால் மக்களுடைய மனப்பண்புகளை வளர்ப்பதைத் தம்முடைய நோக்கமாகக் கொண்ட பல்வேறு தொழில்களில் சிறப்புப் பெற்றுச் செய்யும் தொழிலே தெய்வம் என வாழ்ந்த நிலையைக் காட்டுகிறது.

அறிவின் வளர்ச்சிக்கு அடிப்படையான கல்வி, விருந்தோம்பல், நட்பு, திருமணம், நீதி, வாணிபம் ஆகியவை கூறப்படுகிறது. இறந்தவரின் உடலைப் புதைத்தனர். வீரத்தினை உயர்வாகப் போற்றியது நடுகல். நடுகல் பற்றியும் வழிபாடுபற்றியும் கூறப்படுகிறது. மனிதனை பிற உயிர்களிடம் இருந்து பிரித்து காட்டும் பண்பாடு, நாகரிகம் ஆகியவை வளர வழிவகுத்தது சங்க இலக்கியம் என்பது புலனாகிறது.

அடிக்குறிப்புகள்

1. க.நெடுஞ்செழியன், உலகத்தோற்றமும் தமிழர் கோட்பாடும், ப.13.
2. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள், பா.எ950.
3. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு.பா.எ.2:1-6.
4. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் மரபியல், பா.எ950.
5. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் மரபியல், பா.எ.950.
6. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.22
7. உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), சிலப்பதிகாரம், ப11:62-66.
8. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள், பா.எ.1
9. பெ.மாதையன், அகத்திணைக்கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.42.
10. சைவசித்தாந்தக் கழகம், (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ.2.
11. சைவசித்தாந்தக் கழகம், (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை, பா.எ.165.
12. சைவசித்தாந்தக் கழகம், (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறிஞ்சிபாட்டு, பா.எ.205.
13. சைவசித்தாந்தக் கழகம், (ப.ஆ.குழு) இறையனார் அகப்பொருள், நூ.1.
14. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, பா.எ.1.
15. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் நச்சினார்கினியர் உரை, பா.எ.5
16. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள், பா.எ.59.
17. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீட்டுக் கொள்கைகள், ப.238.
18. மேலது.ப.எ.238.
19. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள், பா.எ.20
20. மேலது, பா.எ.16.
21. செயராமன்,முல்லைப்பாடல்கள்,ப.29.
22. சைவசித்தாந்தக் கழகம், (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மலைபடுகடாம், பா.எ.493.
23. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறப்பொருள், பா.எ.14:19.
24. மேலது, பா.120:21
25. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம் பொருள், பா.எ.62
26. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும்,அகநானூறு, பா.எ.8-11
27. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், திருமுருகாற்றுப்படை.பா.எ. 218:22
28. மேலது, பா.எ. 194:201
29. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு, பா.எ. 24:3
30. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறிஞ்சிப்பாட்டு, பா.எ. 154
31. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 214: 4-5

32. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.எ. 58: 3-4

33. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.எ. 182 : 5-6

34. செயராமன், முல்லைப்பாடல்கள், ப.எ. 29

35. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி பா.எ. 590-591

36. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ. 56 : 5-6

37. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ. 56 : 5-6

38. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ. 198 : 9

39. மேலது, பா.எ. 58 : 15

40. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை பா.எ. 32

41. செயராமன், முல்லைப்பாடல்கள், ப.எ. 13

42. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி பா.எ. 461-66

43. மேலது, பா.எ. 590-591

44. மேலது,

45.சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பெரும்பாணாற்றுப்படை பா.எ. 148-153

46. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மலைபடுகடாம் பா.எ. 419-420

47. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை பா.எ. 266 : 1

48. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை பா.எ. 169 : 6-7

49. மேலது, பா.எ. 80 : 1-3

50. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ. 173 : 6-8

51. செயராமன், நெய்தல் பாடல்கள் ப.எ. 2

52. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ. 24

53. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், திருமுருகாற்றுப்படை, பா.எ. 159

54. மேலது, பா.எ. 155-156

55. உ.வே.சா, (ப.ஆ) சிலப்பதிகாரம், பா.எ. 14 : 94-97

56. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பெரும்பாணாற்றுப்படை, பா.எ. 224-225

57. மேலது, பா.எ. 243-249

58. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.எ. 97

59. மேலது.

60. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், சிறுபாணாற்றுப்படை பா.எ. 178-190

61. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பெரும்பாணாற்றுப்படை பா.எ. 255-256

62. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு பா.எ. 237 : 11-14

63. தேவநேயப்பாவாணர், பண்டைய நாகரீகமும் பண்பாடும், ப.எ. - 1

64. அ.ச. ஞானசம்பந்தம் (ப.ஆ), கம்பராமாயணம் நாட்டுப்படலம், ப.எ. - 2

65. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறிஞ்சிபாட்டு, பா.எ. 79

66. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பெரும்பாணாற்றுப்படை, பா.எ. 213

67. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை, பா.எ. 336 : 5

68. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 8 : 8

69. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கிய கொள்கைகள், ப.எ. 32

70. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 240

71. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 201

72. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பட்டினப்பாலை பா.எ. 36 : 90

73. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் உரை, பா.எ.5

74. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 303 : 3-4

75. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 270 : 12

76. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 155 : 6

77. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 200 : 2

78. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 330 : 15

79. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், குறுந்தொகை, பா.எ. 228 : 3

80. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 219 : 6

81. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பட்டினப்பாலை, பா.எ. 63 : 64

82. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 311 : 1-4

83. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 140 : 1-3

84. உ.வே.சா, (ப.ஆ) சிலப்பதிகாரம், பா.எ. 11 : 64-66

85. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், திருமுருகாற்றுப்படை, பா.எ. 5

86. உ.வே.சா. (ப.ஆ.) குறுந்தொகை, பா.எ. 218

87. உ.வே.சா, (ப.ஆ) சிலப்பதிகாரம், பா.எ. 12 : 67-70

88. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் உரை, பா.எ.461

89. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி பா.எ. 310-311

90. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 265 : 22

91. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து, பா.எ. 30 : 25

92. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து பா.எ. 18 : 21

93. அ. கோகிலா தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை தொழில்நுட்ப சார் கருத்தரங்கம், ப.எ. 3

94. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 353 : 1-2

95. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 64 : 4

96. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், பெரும்பாணாற்றுப்படை பா.எ.5

97. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், நெடுநல்வாடை, பா.எ. 131 : 133

98. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், புறநானூறு பா.எ. 206 : 11-12

99. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி, பா.எ. 353-355

100. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி, பா.எ. 365

101. செ. வைத்தியலிங்கம், அழகுக்கலைத்திறன் ப.எ. 70-71

102. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், அகநானூறு பா.எ.5:20

103. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், நெடுநல்வாடை பா.எ.147

104. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 204 : 3-4

105. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், பெரும்பாணாற்றுப்படை பா.எ. 147 : 154

106. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி பா.எ. 501 - 502

107. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 228 : 2-4

108. மேலது, பா.எ. 238 : 1

109. மேலது, பா.எ. 322 : 5

110. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து, பா.எ. 42 : 10-12

111. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், குறுந்தொகை, பா.எ. 172 : 5-6

112. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், கலித்தொகை, பா.எ. 67

113. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி, பா.எ. 316

114. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து, பா.எ. 16-17

115. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், பரிபாடல், பா.எ. 21 :2-7

116. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 54 : 7-12

117. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 318 : 13-15

118. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், நற்றிணை பா.எ. 215 : 10-12

119. மேலது, பா.எ. 254 : 10-12

120. மேலது, பா.எ. 23 : 6

121. மேலது, பா.எ. 77 : 8-9

122. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு, பா.எ. 106.

123. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், நற்றிணை, பா.எ. 79 : 9

124. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், அகநானூறு ,பா.எ. 94 : 4

125. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், குறுந்தொகை, பா.எ. 7 : 3-4

126. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், அகநானூறு பா.எ. 89 : 7-9

127. சைவசித்தாந்தக் கழகம். ப.ஆ.குழு பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி பா.எ. 223

128. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 10 : 7-9

129. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மலைபடுகடாம், பா.எ. 366

130. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 321 : 8

131. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பதிற்றுப்பத்து, பா.எ. 24 : 6-8

132. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 361 : 4

133. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 35

134. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், கலித்தொகை, பா.எ. 68 : 1-2

135. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி, பா.எ. 496-499

136. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 5

137. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 313- 15

138. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், பொருள், பா.எ.941

139. மு. வரதராசன் (ப.ஆ) திருக்குறள், கு.எ. 681

140. கணேசையர் (ப.ஆ) தொல்காப்பியம், பா.எ.972

141. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், ஐங்குறுநூறு, பா.எ. 428

142. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 35-29

143. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 8- 1

144. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி, பா.எ. 642-644

145. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 20- 3-4

146. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், புறநானூறு, பா.எ. 37- 9

147. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், முல்லைப்பாட்டு, பா.எ. 50-54

148. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி, பா.எ. 489

149. மு. வரதராசன் (ப.ஆ) திருக்குறள், கு.எ. 118

150. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், கலித்தொகை பா.எ. 39

151. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், மதுரைக்காஞ்சி பா.எ. 761-762

152. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், முல்லைப்பாட்டு பா.எ. 55

153. மேலது.

154. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், பரிபாடல் பா.எ. 8

155. மேலது.

156. மேலது.

157. மேலது.

158. நாலடியார்.

159. சைவசித்தாந்தக் கழகம். (ப.ஆ.குழு) பாட்டும் தொகையும், அகநானூறு, பா.எ. 129 : 6-8

160. மேலது, புறநானூறு.

161. மேலது, புறநானூறு.

162. மேலது, புறநானூறு.

163. க்ரியா தமிழகராதி

164. கதிர்மகாதேவன், தமிழர் பண்பாடு, பா.137

165. புறநானூறு

166. மேலது.

167. குறுந்தொகை, பா.3.

168. தொல்காப்பியம், பொருள்.143

169. அகநானூறு, பா.115

170. கலித்தொகை, பா.83:14-15

171. புறநானூறு, 224

172. மேலது.

173. அகநானூறு, 77:7-8

174 மு. வரதராசன், (ப.ஆ) திருக்குறள், கு.எ. 120.

175. மணிமேகலை, பா.25

176. தொல்காப்பியம், பொருள், 76

177. புறநானூறு, பா.74

178. அகநானூறு, பா.35

179. செ.பழனிச்சாமி, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, ப.12

180. தொல்காப்பியம், சொல், 76-4

181. அகநானூறு, பா.15

182. நற்றிணை, பா.355

183. திருக்குறள், கு.எ. 580.

184. அகநானூறு, பா.38

185. மேலது.

186. திருக்குறள், கு.எ. 582.

ஆய்வு முடிவுரை

ஆய்வு முடிவுரை

எட்டுத்தொகையில் வாழ்வியல் கூறுகள் என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு ஆராய்ந்த போது, கீழ்க்காணும் ஆய்வியல் மெய்மைகளை அறிய முடிந்தது.

தமிழ்மொழி, செந்தமிழ், வன்தமிழ், நற்றமிழ், கன்னித்தமிழ் என்றெல்லாம் சான்றோர்களால் போற்றப்பட்ட சிறப்பிற்குரியது. பழந்தமிழ் மக்களின் எண்ண ஓட்டங்களையும் பண்பாட்டுச் சிறப்புகளையும், உலகம் கண்டுகொள்ள உதவும் ஒப்பற்ற கருவூலமாக சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. இவ்விலக்கியங்கள் தமிழ்மொழியின் பழமைக்கும் வளமைக்கும் சான்றுகளாக உள்ளன. வாழ்வியலுக்குரிய அகம், புறம் ஆகிய நெறிமுறைகளை வகுத்துக் கூறுகின்றன.

தமிழ்மொழி பழமையானது. அப்பழமையான மொழிபேசிய மக்களின் வாழ்க்கை மரபுகள்,உணர்வுகள் போன்றவற்றை இலக்கியமாகப் பதிவு செய்வதற்கு, ஒரு இலக்கண வரைமுறையை வகுத்துக்கொடுப்பது சங்க இலக்கியத்தில் உள்ள எட்டுத்தொகை நூல்கள்.இது பழமையான நூல் மட்டும் அல்லாமல், பழங்காலத்தமிழ் மக்களின் வாழ்வியலைக் குறிப்பிட்டுக் காட்டும் காலக்கண்ணாடி. நிலத்தைக் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர். இந்நிலங்களுக்குரிய உரிப் பொருளாகப், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்து ஒழுக்கங்களாகக் கூறுகின்றனர்.

மனிதன் நாகரிகம் அடையாமல்,காட்டில் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்தபோது, அவர்களின் உறைவிடம் மலைக்குகை மற்றும் அடர்ந்த பெரிய மரத்தடிகளாகும்.அவர்கள் தேடிப்பெற்ற காய்கனிகையும், கிழங்குகளையும் வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியும் அவர்களது உணவானது. விலங்குகளின் தோல், மரப்பட்டைகள், இலைகள், போன்ற வற்றை அவர்கள் ஆடைகளாக அணிந்தனர். மனிதன் நிலையான வாழ்க்கை வாழ ஆரம்பித்த போது, முல்லை நில மக்களின் ஒருபகுதியினர் ஆற்றங்கரையிலே குடியேறி விவசாயம் செய்யக் கற்றுக்கொண்டனர். பின்பு குளங்கள் தோண்டப்பட்டன. ஆறுகளின் குறுக்கே

அணைகள் கட்டப்பட்டன. அகன்ற நிலப்பரப்புகள் விளை நிலங்களாக மாறின. இப்புதிய வாழ்க்கையின் ஆரம்பக்காலத்தில் சிறிதளவு உணவிற்குப் போக, தானியம் மிஞ்சியது. நீண்ட வாய்க்கால்களாகத் தோண்டியும், மடைகளை அமைத்தும் விளைச் சலைப் பெருக்கினர். மேலும், உழவிற்கு வேண்டிய கருவிகள் செய்யும்படியாக மனிதனின் தரம் உயர்ந்தது.

தமிழர் தம் அக வாழ்க்கையும் புறவாழ்க்கையும் அறிந்து கொள்வதற்கு,பெரும் துணையாகவிருப்பது சங்க இலக்கியங்களே. சங்க இலக்கியத்தில் காணப்படும் எட்டுத் தொகை நூல்கள் வரலாறே தெரியாமல் மறைந்திருக்கும். ஆனால், அரிய பல புலவர்களாலும் மன்னர்களாலும் ஆராய்ந்து தொகுக்கப்பட்டு வகைமை செய்த பாங்கு இவ்வியலில் பரக்கக் கூறப்படுகிறது.

அன்பொடு புணர்ந்த ஐந்திணையில் தலைவன், தலைவியை விட உயர்ந்தவனாக இருப்பது வரவேற்கப்பட்டது. களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் தலைவனையும் தலைவியையும் இணைத்து வைக்கும் பாலமாகத் திகழ்பவர் தோழி என்பதை அறியமுடிகிறது.

பிரிந்து சென்ற தலைவன் தலைவியின் நினைவின்றி, வினையால் ஆழ்ந்திருப்பவனாகக் காட்டப்பெறுகிறான். தலைவி பிரிவுத்துயரைத் தாங்காது, வருந்து பவளாகக் காட்டப்பெறுகிறாள். தலைவி பிற நினைப்பின்றி தலைவனை எண்ணி வாடும் வேதனையை அறிந்து தோழி, நற்றாய், செவிலி, பாங்கன், பாணன் ஆகியோர் கூற்று நிகழ்த்தும் இடங்களாக அவர்கள் இடம்பெறுகின்றர். அகத்திணைக் கூறுகளில், தலைவன் தலைவனின் உள்ளத்து உணர்வுகளை விளக்கப்பட்டதைப் போன்று, புறத் திணையில், போர், வீரம், புலவர்கள் மன்னர்களைப் போற்றிய திறம் ஆண்பால் மற்றம் பெண்பால் புலவர்கள் மன்னர்களின் மத்தியில் சிறப்பான நிலையை எய்திய திறம் ஆகியவை விவரித்துக் தொகுக்கப்பட்டுள்ளன.

புலவர்கள் மன்னர்கள் மத்தியில் தனித்திறமையுடனும், பணிவன்புடனும் மதிக்கப்பட்டனர். வீரம், மானம், வலிமை ஆகியவை போர்க்குரிய அணிகலனாகவும்,

அரசனின் அரசாட்சி சிறப்பு அரசுரிமைக்காலம், நிர்வாகத்திறம் ஆகியவை இவ்வியலில் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது.

தனிமனிதத் தேவை அவன்வாழும் சமுதாயத் தேவையாகிறது. அதன் அடிப்படையில், அரும்பி மலர்ந்து பயன்தருவது, பல்துறை தொழில் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு, உழவுத்தொழில் அமைத்து அக்காலத்தில் கைத்தொழில் வல்லார் குறைந்த மூலதனத்தைக் கொண்டு எளிய கருவிகளையும், திறனையும் பயன்படுத்தி, தம் இருப் பிடத்திலேயே தொழில் செய்தனர். தொழிலில் ஏற்படும் உயர்விற்கும் தாழ்விற்கும் தொழிலாளியே பொறுப்பாவான். அதை உணர்ந்து, உலோகத்தொழில் அணிகலத் தொழில் என உயர்வாகப் போற்றப்பெற்றத் தொழிலில் ஈடுபட்டதோடு, காலணி தைக்கும் தொழிலிலும் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு தொழில் செய்யவும் தனித்தனிப் பிரிவினர் தோன்றினர். அச்சமூக அமைப்பில், மனிதன் வளமாக வாழ்ந்த காரணத்தாலும், மிகுந்த ஓய்வு கிடைத்தக் காரணத்தாலும், கலைகள் வளர்ந்தன. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட் களைச் செய்து கொடுக்க, தொழிலாளிகள் செய்யும் தொழிலே தெய்வம் என்று தாம் செய்த தொழிலை மதித்து வாழ்ந்தனர்.

பண்டைத் தமிழர் இளவேனில் காலத்தில் காலை நேரத்தில் திருமணம் நிகழ்த்துதல் , திருமண வீட்டின் முன் மணற்பரப்புதல், புள்நிமித்தம் பார்த்து, மணவினை நிகழ்த்துதல், போன்றவற்றை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நம்பிக்கைகள் பெரிதும் மனிதனின் அச்ச உணர்வை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகக் காட்சி அளிக்கின்றன. நம்பிக்கைகள் உள்ளத்தின் உருவாக்கமாகவே அமைகின்றன. சங்க இலக்கியத்தில் நம்பு என்ற சொல் நம்பிக்கை என்ற பொருளில் ஆளப்பட்டிருப்பது, தமிழின் தொன்மையை வலியுறுத்துகிறது.

முதல்நிலையில் நினைவுச்சின்னமாயிருந்த நடுகல், காலப்போக்கில், வழிபாட்டு நிலைக்கு உயர்ந்தமையும் பின்பு முன்னோர் வழிபாடு, நடுகல் வழிபாடு வேறுபட்டமையும் நடுகல் நடுதல் ஆண்களுக்கு உரியது என்பதும் கூறப்பட்டுள்ளது.

மக்களின் அகப்புற நிலைகளை வெளிக்காட்டும் பண்பினதாக அமையும். பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் வாழ்வியலோடு ஆராய்வதோடு, தமிழரின் வாழ்வியல் மரபுகள், விழாக்கள் ஆகியன ஆராயத்தக்கன. பின்னர் அவற்றை மொழி இனப் பண்பாட்டு உறவு நிலைகளில், ஒப்பிட்டு ஆராய்வது பண்பாட்டு நாகரிக வளர்ச்சியினை இனங்காண்பதற்கு வழிகாட்டுகின்றது.

மேலாய்வுக் களங்களாகக் கீழ்வரும் தலைப்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. சங்ககால மக்களின் அன்றாட பழக்கங்கள்
2. சங்ககாலத் தமிழரின் ஆடைகள்
3. சங்ககாலத் தமிழர் கையாண்ட பொருட்கள்
4. சங்ககாலத் தமிழரின் வாழ்வியல் பார்வை [Out Look]

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1. அண்ணாமலை மீனவன்.நா சுப.(உ.ஆ) சங்க இலக்கியம் அகநானூறு மணிமிடைபவளம் கோவிலூர் மடலாயம், கோவிலூர் பதிப்பு – 2004

2. இளம்பூரணர் (உ.ஆ) தொல்காப்பியம் (பொருளதிகாரம்) சாரதா பதிப்பகம், சென்னை பதிப்பு – 2005

3. இராகவயைங்கார்.மு குறுந்தொகை விளக்கம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பதிப்பு – 1993

4. இராமசுப்பிரமணியன்.வ.த (உ.ஆ) புறநானூறு திருமகள் நிலையம், சென்னை பதிப்பு – 2000

5. சண்முகம்பிள்ளை (ப.ஆ) தொல்காப்பியம் (பொருளதிகாரம்) இளம்பூரணர் உரை பாரி நிலையம், சென்னை

6. சதாசிவ ஐயர்.தி ஐங்குறுநூறு (மூலமும் உரையும்) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை பதிப்பு – 1999

7. சாமிநாத ஐயர்.உ.வே. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும் உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை பதிப்பு – 1918

8. சிவலிங்கனார்.ஆ. (தொ.ஆ)
தொல்காப்பியம் உரைவளம்
பொருளதிகாரம் களவியல்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 1994

9. சிவ சுப்பிரமணியன்.வே
அகநானூறு மூலமும் உரையும்
உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம்,
சென்னை
பதிப்பு – 1990

10. நாராயண வேலுப்பிள்ளை.எம்
சங்க இலக்கியம் வழங்கும் பரிபாடல்
நற்கவி பிரசுரம்,
பதிப்பு – 1918

11. நாராயண வேலுப்பிள்ளை.எம்
சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு
நர்மதா பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2008

12. பதிப்பாசிரியர்கள்
பாட்டும், தொகையும்
திருநெல்வேலி,
தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
சென்னை
பதிப்பு – 2009

13. பரிமளம்.அ.மா.
சங்க இலக்கியம்,
பதிற்றுப்பத்து கோவிலூர் மடாலயம்,
கோவிலூர்
பதிப்பு – 2003

14. பார்த்தசாரதி.நா
கலித்தொகை,
பரிபாடல் காட்சிகள்
கலைஞன் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2000

15. பாலசுப்பிரமணியன்.சி
பாட்டும் தொகையும் ஓர் அறிமுகம்
பாரி நிலையம்,
சென்னை
பதிப்பு – 1998

16. பிரபாகரபிரபு (உ.ஆ)
குறுந்தொகை
தமிழ்க்கவி பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2003

17. புலியூர் கேசிகன் (உ.ஆ)
புறநானூறு
பாரி நிலையம்,
சென்னை
பதிப்பு – 1958

18. வெங்கட்ராமன்.ப (ப.ஆ)
நற்றிணை மூலமும், உரையும்
உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்,
சென்னை
பதிப்பு - 1989

19. விஸ்நாதன்.ஆ. (உ.ஆ)
கலித்தொகை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,
சென்னை
பதிப்பு – 2004

துணைமை ஆதாரங்கள்

1. அடைக்கலசாமி, எம்மார்
தமிழ் இலக்கிய வரலாறு
ராசி பதிப்பகம்,
பதிப்பு – 1993

2. அழகம்மை.கே.பி
சமூக நோக்கில் சங்க மகளிர்
மாணிக்கவாசகர் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு

3. அறவாணன்.க.ப
தமிழ்மக்கள் வரலாறு
தமிழ்க்கோட்டம்,
சென்னை
பதிப்பு – 2006

4. அன்புச்செல்வி.மு
சங்க இலக்கிய பெண்களின் மனிதநேயம்
அய்யா நிலையம்,
தஞ்சாவூர்

5. அன்னிதாமசு
தமிழர் சமூகவியல்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 2000

6. அகத்தியலிங்கம்.ச.முனைவர்
சாகாவரம் பெற்ற சங்கப் பாடல்கள்
மெய்யப்பன் தமிழாய்வகம்,
சிதம்பரம்
பதிப்பு – 2002

7. அண்ணாமலை.சுப.டாக்டர்
திருக்குறள் சிந்தனை
வானதி பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1987

8. அப்பாதுரையார்.க
சங்க இலக்கிய மாண்பும்
சங்கப்புலவர்களும்
வசந்தா பதிப்பகம்,
சென்னை

9. இளங்குமரன்.இரா.புலவர்
மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்
விஜயா பிரிண்டர்ஸ்,
மதுரை
பதிப்பு – 1987

10. இராமலிங்கம்.அரங்க.டாக்டர்
சங்க இலக்கியத்தில் வேந்தர்
ஐந்திணைப் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1987

11. இராமகிருஷ்ணன்.அ — அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு
சர்வதேச இலக்கியப் பண்ணை
மதுரை

12. இராசரெத்தினம்.கு — சங்க இலக்கியத்தில் பொதுமக்கள்
குகன் பதிப்பகம்,
வடுவூர்
பதிப்பு – 2004

13. இராசா.கி — தமிழ் இலக்கிய வரலாறு
அன்னை நிலையம்,
திருச்சி
பதிப்பு – 2001

14. ஈசுவரப்பிள்ளை.தா. — பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கிய போக்குகளும்

15. இளங்குமரனார்.இரா.புலவர் — தமிழர் வாழ்வியல் இலக்கணம்
அமிழ்தம் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2004

16. கடிகாசலம்.ந. — சங்கச் சமூகம்
பாலாஜி.பு. (ப.ஆ) அமுதம் நிலையம்,
சென்னை
பதிப்பு – 1995

17. கணபதி.அ — தமிழக வரலாறு
மல்லிகை பதிப்பகம்,
மதுரை
பதிப்பு – 1977

18. காந்தி.க.டாக்டர் — தமிழர் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை பதிப்பு – 1980

19. குருசாமி.ம.ரா.போ
சங்ககாலம்
மல்லி வெளியீடு,
கோவை
பதிப்பு – 1967

20. கோவிந்தன்.கா.புலவர்
தமிழர் பண்பாடு
தென்னிந்திய சைவ சித்தாந்த நூல்
பதிப்புக்கழகம் லிமிடெட்,
சென்னை

21. குழந்தை.புலவர்
அருந்தமிழ் அமிழ்து
சாரதா பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2006

22. கருணாநிதி.மு
சங்கத்தமிழ்
ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ் ,
சென்னை
பதிப்பு – 1987

23. சசிவல்லி.வி.சி
பண்டைத்தமிழர் தொழில்கள்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 1989

24. சண்முகம்பிள்ளை.மு
சங்கத்தமிழர் வாழ்வியல்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை

25. சண்முகம்பிள்ளை.மு
சங்கத்தமிழர் வழிபாடும் சடங்குகளும்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 1996

26. சாம்பசிவன்
தமிழ் இலக்கியத்தில் நெய்தல் திணை
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை
பதிப்பு – 1964

27. சாரங்கபாணி.இரா
சங்கச்சான்றோர்கள்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1993

28. சாலினி இளந்திரையன்.முனைவர்
சங்கத்தமிழரின் மனிதநேய
மணிநெறிகள்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 1995

29. சிதம்பரனார்.சாமி
தொல்காப்பியத் தமிழர்
மணிவாசகர் பதிப்பகம்,
பதிப்பு – 2000

30. சிதம்பரனார்.சாமி
பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும்
அறிவுப் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2003

31. சிதம்பரனார்.சாமி
எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்
அறிவுப் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2003

32. சுப்பிரமணியன்.ந
சங்ககால வாழ்வியல்
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சென்னை
பதிப்பு – 1986

33. சுப்புரெட்டியா.ந
அகத்திணைக் கொள்கைகள்
பாரி நிலையம்,
சென்னை
பதிப்பு – 1981

34. சுமதி கனகசபை
குறுந்தொகை காட்டும் காதல் வாழ்க்கை
செங்காமிர்தம் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1996

35. செயராமன்.நா
சங்கத்தமிழ் செய்யுள் கோவை
முத்துப்பதிப்பகம்,
மதுரை
பதிப்பு – 1977

36. செயராமன்.நா
முல்லைப்பாடல்கள்
பப்ளிஷிங் ஹவுஸ்,
மதுரை
பதிப்பு – 1976

37. செயராமன்.நா
நெய்தல் பாடல்கள்
குமரன் பதிப்பகம்,
மதுரை
பதிப்பு – 1978

38. செல்லம்.வே.தி.
தமிழக வரலாறும் பண்பாடும்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1995

39. சேதுப்பிள்ளை.ரா.பி.
தமிழகம் ஊரும் பேரும்
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை
பதிப்பு – 1946

40. நக்கீரன்.அ
பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1966

41. சோமசுந்தரனார்.பொ.வே.
புறப்பொருள் வெண்பாமாலை
(விளக்கவுரை)
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்பு கழகம் லிமிடெட்,
சென்னை
பதிப்பு – 2002

42. செல்லப்பன்.சு
நாலடியார் மூலமும் உரையும்
பாரதி பதிப்பகம்,
சென்னை-
பதிப்பு – 2000

43. நடராசன்.அ.லெதமிழர்
சமுதாய நெறிகள்
திருமகள் நிலையம்,
சென்னை

44. நாராயண வேலுப்பிள்ளை
உரைநடைத் தமிழச் சங்க இலக்கியம்
(எட்டுத்தொகை)
நர்மதா பதிப்பகம்,
சென்னை

45. தட்சிணாமூர்த்தி.அ
தமிழர் நாகரிகமும் பண்பாடும்
யாழ் வெளியீடு,
சென்னை
பதிப்பு – 1994

46. நாராயண வேலுப்பிள்ளை.எம்
சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு
நர்மதா பதிப்பகம்,
சென்னை

47. தமிழண்ணல்
புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை

48. தமிழண்ணல்.முனைவர்
உலகத்தமிழிலக்கிய வரலாறு
(தொன்மை முதல் கி.பி 500 வரை)
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 2004

49. திலகவதி.க
சங்ககால மகளிர் வாழ்வியல்
இறையருள் பதிப்பகம்,
திருச்சி
பதிப்பு – 2001

50. தேவநேயபாவாணர்
பழந்தமிழர் அரசியல் கோட்பாடுகள்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1999

51. பழனிச்சாமி.செ
புறநானூற்றில் தமிழர் பண்பாடு
வாணி பதிப்பகம்,
கோவை
பதிப்பு – 1989

52. பகவதி.கு
தமிழர் ஆடைகள்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 2003

53. பாலசுப்பிரமணியன்.கு.வெ
சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்
மதராஸ் ரிப்பன் பிரஸ்,
புதுக்கோட்டை
பதிப்பு – 1994

54. பாலசுப்பிரமணியன்.கு.வெ
சங்க இலக்கியத்தில் கலையும்
கலைக் கோட்பாடும்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 1998

55. பாலசுப்பிரமணியன்.கு.வெ
சங்க இலக்கியத்தில் புறப்பொருள்
மெய்யப்பன் பதிப்பகம்,
சிதம்பரம்
பதிப்பு – 2000

56. பாரதிதாசன்
பாரதிதாசன் கவிதைகள்
ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்,
சென்னை

57. பாஸ்கரதாஸ்.ஈகோ.
மானிட மதிப்புகள்
தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி
பதிப்பு – 1997

58. பெருமாள்.தெ.பெ.
இலக்கியத்தில் இன்பச்சுவை
நிலா நூலகம்,
சென்னை
பதிப்பு – 1989

59. பிள்ளை.கே.கே
தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை
பதிப்பு – 2004

60. பொற்கோ.டாக்டர்
பண்பாட்டுக் கருத்தோட்டம்
பூம்பொழில் வெளியீடு,
சென்னை
பதிப்பு – 2001

61. மணிசங்கர்.வெ
சிலப்பதிகாரம்
மகாலட்சுமி பதிப்பகம்,
வேலூர்

62. மணி.பெ.சு
சங்ககால ஔவையாரும் உலகப்
பெண்பாற் புலவர்களும்,
மெய்யப்பன் தமிழாய்வகம்,
சிதம்பரம்

63. மணி.பெ.சு
சங்கத்தமிழியல்
மாதவி பதிப்பகம்,
சிதம்பரம்

64. மாணிக்கம்.வ.சுப
சங்கநெறி
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம்
பதிப்பு – 1987

65. மாணிக்கம்.வ.சுப
தமிழ்க்காதல்
மெய்யப்பன் பதிப்பகம்,
சிதம்பரம்
பதிப்பு – 2002

66. மாணிக்கனார்.அ.புலவர்
தமிழ்விடு தூது
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1987

67. மாணிக்கனார்.அ.புலவர்
அறநெறிச்சாரம்
வர்த்தமானன் பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1991

68. மாணிக்கம.வீ.டாக்டர்
தமிழர் வாழ்வியல் கி.பி. 300 வரை
Clio Publications
மதுரை
பதிப்பு – 2010

69. மாதையன்.பெ
அகத்திணைக்கோட்பாடும்,
சங்கஅகக்கவிதை மரபும்
பாவை பப்ளிகேஷன்ஸ்,
சென்னை
பதிப்பு – 2009

70. மாதையன்.பெ
தமிழச் செவ்வியல் படைப்புகள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சென்னை
பதிப்பு – 2009

71. வரதராசன்.மு
தமிழ் இலக்கிய வரலாறு
சாகித்ய அகாதெமி,
புதுதில்லி
பதிப்பு – 1972

72. வரதராசன்.மு
குறுந்தொகைச் செல்வம்
பாரி நிலையம்,
சென்னை
பதிப்பு – 1958

73. வாசுதேவன்.க
பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு
தேவன் பதிப்பகம்,
திருச்சி
பதிப்பு – 2000

74. வேங்கடசாமி.மயிலை, சீனி
பழங்காலத் தமிழர் வாணிகம்
திருநெல்வேலி, தென்னிந்திய சைவ
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,
சென்னை
பதிப்பு – 2001

75. வேங்கடசாமி நாட்டார்.ந.மு
நல்வழி நறுந்தொகை
சாரதா பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2005

76. ரவிசந்திரன்.எம்.எஸ்
சங்க இலக்கியம்
(ஓர் அறிமுகம்)
பிரபாத் புக் ஹவுஸ்
சென்னை
பதிப்பு – 2002

77. வாணி அறிவாளன்.முனைவர்
சங்க இலக்கியத் தேடல்
சபாநாயகம் பிரிண்டர்ஸ்,
சென்னை
பதிப்பு – 2009

78. ருக்மணி.இரா
நற்றிணை காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்
ஜோதி பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2006

79. ராமலிங்கம்.கே.கே. டாக்டர் நாலடியார் கூறும் நன்னெறிகள்
ஜெனரல் பப்ளிஷர்ஸ்,
சென்னை

80. ராஜகோபாலன்.சரளா. டாக்டர் சங்க இலக்கியத்தில் தோழி
ஒளிப்பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 1986

81. நமசிவாயம்.சே தமிழர் உணவு
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
பதிப்பு – 2003

களஞ்சியங்கள்

1. அருணாசலம்.ப. (ப.ஆ) சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
தொகுதி-1-4
தமிழ்ப் பல்கலைக்கழகம்,

2. பாலுசாமி.நா (மு.ப.ஆ) வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-1,2,10
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

அகராதிகள்

1. கதிர்வேல்பிள்ளை சூடாமணி நிகண்டு மூலமும் உரையும்
வித்தியாகரநாக அச்சுக் கூடம்,
சென்னை
முதற்பதிப்பு – 1914

2. குமாரசுவாமிப் பிள்ளை இலக்கியச் சொல்லகராதி
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்,
சென்னை
முதற்பதிப்பு – 1980

3. சிங்காரவேலு முதலியார்.ஆ அபிதான சிந்தாமணி
சாரதா பதிப்பகம்,
சென்னை
பதிப்பு – 2001

4. சுப்பிரமணியக் கவிராயர்.கே.நா தமிழ்ச்சொல் அகராதி
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை
முதற்பதிப்பு – 1923

5. திவாகர முனிவர் சேந்தன் திவாகரம்
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற் பதிப்புக்கழகம் லிமிடெட்.,
சென்னை
முதற்பதிப்பு – 1958

ஆங்கில நூல்கள்

1. Subramanian. A.V Sips from the Sangam Cup
The South India Saiva Siddanda Works
Publishing Society,
Thirunelveli
1968

2. Puranalingam Pillai. M.S Tamil India
The South India Saiva Siddanda Works
Publishing Society,
Chennai
1963







SCAN
எட்டுத்தொகை

ISBN 978-93-95054-0-3-4